DIGITIZE
JL
Y592m211N14
N15
185035

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

இரண்டாவது சம்புடம்

(1914ஞ அக்டோபர்மீ முதல்—1915ஞ செப்டம்பர்மீ வரையில்)

17 FEB 1915
MADRAS

## உள்ளுறை

பக்கம்.

1. அசதிக்கோவை ... 8
   கா. திருவேங்கட ஆச்சாரியார்
2. அஸ்வினிதேவர் ... 39
3. அதிமதுரம் 72,91,156,172
4. அப்பர் தேவாரத்தாற் கொள்ளக் கிடக்கும் இரனூர் யார்? ... 178
   செந்தமிழ்
5. அம்மைகுத்துதலும் சுகாதாரமும் ... 182
   வைத்தியகலாநிதி. ...
6. ஆண்மை-தர்மகுணம் ... 161
   T. தங்கவேல் ஆச்சாரியார்
7. ஆரம்ப உபந்நியாசம் ... 121
   மானும்பதி அப்பாகண்ணு ஆச்சாரியார்
8. ஆரோக்கியத்திற்கு ஆதாரமான இந்தியமலைப் பிரதேசங்கள் ... 218
   வைத்தியகலாநிதி
9. ஆரோக்யபோதம் 20,69,111,166,195,210
10. இடைப்பெண் ... 178
    ஹிதகாரிணி
11. ஹிதோபதேசபோதினி ... 89
    வைத்யநாத ஸ்தபதி ஜோதிஷர்
12. இந்திய கைத்தொழில் ... 29
    சத்தியவசனன்
13. இந்தியப் பழங்குடிகள் ... 59
    கா. திருவேங்கட ஆச்சாரியார்
14. இந்து மகா சத்தியவேத விருத்தாந்தம் ... 11
    ஸ்ரீ V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்
15. இயமன் ... 83
16. உபகடன நிர்ப்பந்தம் ... 7
    கா. அப்பாதுரை ஆச்சாரியார்

பக்கம்.

17. உலகத்தின் மார்க்கமென்ன? ... 165
18. ஏன் மாம்ஸம் சாப்பிடுதல் கூடாது? 143
    லோகோபகாரி
19. ஒளிவளர்விளக்கு 1, 25, 49, 73, 97, 117, 137, 157, 173, 189, 201, 213
20. கம்பர்கண்டசுத்தி ... 105
    கா. திருவேங்கட ஆச்சாரியார்
21. கலிங்கநாடு ... 145
22. குடித்தனச்செட்டு ... 33
    வேகம்பூர்-குமாரசிவன்
23. கும்பகோணம் விஸ்வகர்ம ஜாதியகான்பரஸ் 61, 106, 146
24. கைத்தொழில் ... 35
25. கோட்டாற்று விசேஷங்கள் ... 221
    சென்றதிசைவென்றபெருமாள்பிள்ளை
26. சகோதர விண்ணப்பம் ... 83
    தொழிலாளி
27. சண்டையைச் சார்ந்தவை 20, 43, 71, 92, 114, 136, 170, 185, 210
28. சமயாலோசனை 78, 102
    அத்தியாபக-லிங்காச்சாரியார்
29. ஜால வித்தைகள் ... 212
30. சிற்ப சாஸ்திரப் பயிற்சி ... 57
    தொழிலாளி
31. சிற்பிகள் கை அற்புதங்கள் 60, 206
32. சிற்றுளி செதுக்குவேலை 174, 202
    சத்தியவசனன்
33. ஸ்ரீராமருக்கு 129 தேவியார் ... 205
    விவேக திவாகரன்
34. சுரங்கத் தொழில்கள் 138, 160, 190
    சத்திய வசனன்
35. சுவாஸாப்பியாஸம் ... 176
36. ஜெர்மன் தேசாபிமானக் கட்டளைகள். 39

185035
சென்னை-600 008




பக்கம்.

37. செவ்வாயைப்பற்றிய சில விவரங்கள். 16
லோகோபகாரி
38. சென்னையில் விஸ்வகர்மத் தொழிற் சாலை ... ... 4
வேலூர்-முத்துசாமி ஆச்சாரியார்
39. ஸ்திரீகளுக்கு உபதேசம் ... 85
40. தந்தவேலை ... 77, 100, 127
சத்திய வசனன்
41. துவஷ்டாபுரம் .... 82
42. தொழிற் கல்வி ... 9
சத்தியவசனன்
43. தொழிற் கல்வி உண்டாவதெப்படி? 31
தொழிலாளி
44. தொழிற்சாலை-நெல்குத்துஞ்சாலை ... 55
ஆர். சு. கதிரேசன் ஆச்சாரியார்
45. தொழிற்முறைகள் 112, 153, 184, 223
46. நமது படங்கள் ... 53
47. நமது மூதலாண்டு ... 3
48 நமது வாசகர்கள் 16,41,68,86,109,168
49. நமது விவாகங்கள் ... 80
50. நம்பூத்ரி பிராம்மணர்களின் உற்பத்தி 194
51. நவராத்திரி ... 11;
K. S. கன்னியப்ப ஆச்சாரி
52. பகவத்பக்தி-தேஜஸ் 107, 132
A. நஞ்சுண்டப்பா பி-ஏ-பி-எல்
53. பண்டித-மார்க்கசகாய ஆச்சாரியார்... 158
அத்தியாபக-லிங்காச்சாரியார்.
54. பத்திரிகை என்ற கற்பக விருக்ஷம்... 140
சாலிவாடி புராதீனம் தர்மபதி
55. பத்திரிகையின் பயனும் அதைப் பேணுவோர் கடமையும் ...
ஜி. சுவாமிநாதன் ஆச்சாரியார்
56. பண்டைத்தமிழரும் மரக்கலப் பயிற்சியும் ... 192
57. பாகசாஸ்திரம் 19, 70, 90, 113, 154, 169, 209
58. பாய்களை நெய்தல் ... 63
59 பால்-நெய் ... 37
60. பெண் கல்வி ... 179
61. பெல்ஜியம் தேசவாழ்த்து ... 155
C. சுப்ரமண்ய பாரதி

பக்கம்.

62. பொருள் நிலை ... 216
T. தங்கவேல் ஆச்சாரியார்
63. போகமுனிவர் ... 131
64. போதலூர்-வீரப்பிரம்ம மடம் ... 119
65. மகாதல மஞ்சரி ... 135
66. மக்கட்பிறப்பினர் கைக்கொளுதியம் 103
R உலகநாத ஆச்சாரியார்
67. மங்கள கௌரி ... 64
68. மடாதிபதிகளின் கடமைகள் ... 142
T. தங்கவேல் ஆச்சாரியார்
69. மணிலாக்கொட்டை ... 36
70. மதிப்புரை ... 67
71. மலையாளத் தொழிலாளிகள் ... 181
72. மறுபிறப்பு ... .63
A. M. சபாபதி முதலியார்
73. மனதின் உறுப்புகள் ... 207
74. மூன்று மணிகள் ... 128
சாலிவாடி புராதீனம் தர்மபதி
75. யஜுர் வேதிகளின் உபாகர்மானுஷ்டானகால சித்தாந்தம் ... 182
76. யுத்தப்பதிகம் ... 95
N. சிவக்கொழுந்து
77. விசேஷ வர்த்தமானம் 23,47,72,96, 116,136,171,186,196,224
78. விஸ்வகர்மத் தொழிற்சாலை ... 104
தொழிலாளி
79. விஸ்வகர்மகுல வித்தியார்த்திகள் 15, 58
G. T. வேங்கடாச்சாரியார்
80. விஸ்வகர்ம வித்தியாசாலைகள் ... 12
அத்தியாபக-லிங்காச்சாரியார்
81. விஸ்வப்பிராம்மணர் ஒழுக்கம் ... 181
விச்சுவகர்மன், யாழ்ப்பாணம்
82. வித்தியாபட்டதாரிகள் ... 99
வேகம்பூர்-குமாரசிவன்
83. வித்வான் சரவணப்பெருமாள் ... 134
கா. திருவேங்கட ஆச்சாரியார்
84. வியவகாரப்போக்கு ... 207
85. வியாசகாசி ... 34
86. விவசாயவிளக்கம் ... 154
87. விவாக வழக்கங்கள் ... 191
T. தங்கவேலு ஆச்சாரியார்


JL 3
4592 M21,M14 1915

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்


1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 3] 1915ளு அக்டோபர்மீ [சஞ்சிகை 1


## ஒளிவளர் விளக்கு

1915ளு செப்டம்பர் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய மொத்த எண்ணிக்கை?.

*
* *

நமது பத்திரிகையின் மூன்றுவதாண்டு இம் மாதம் ஆரம்பமாயிற்று. இவ்வருஷத்தில் நமது சந்தாதாரர்களுடைய தொகை முன்னினுமதிகரிக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஒவ்வொரு சந்தாதாரரும் இவ்விஷயத்தில் சற்றே கவனங் காட்டினுல் நமது கோரிக்கை வெகுசுலபமாய் ஈடேறிவிடுமென்பதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை. விஷயதான கர்த்தர்களும் கருணை பாலிக்க வேண்டுகிறோம்.

*
* *

வழக்கப்படி, இம்மாதம் 8ட வெள்ளிக்கிழமை முதல் 16ட சனிக்கிழமை வரையிலும் நவராத்திரிபூஜா சம்பந்தமாய் நமது சபாமண்டபத்தில் தினமும் மாலை 6-மணிக்குமேல் கலசபூஜை, தேவதாராதனை, பிரசங்கங்கள் முதலியவை நடைபெற்றன. ஏராளமான ஜனங்கள் தினமும் திரண்டுவந்து தரிசன சிரவணனந்தமெய்தினர். ஒன்பது நாட்களும் முறையே கீழ்க்கண்ட விஷயங்கள் நடைபெற்றன. ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ முருகப்ப ஆச்சாரியார்-பிரபுலிங்கலீலை; கோயம்புத்தூர்-ஸ்ரீ குப்புசாமி ஆச்சாரியார்-புல்லாங்குழல் கச்சேரி; கோமள்புரம் ஸ்ரீ M. நடேச ஆச்சாரியார்-மகாராஜாதுறவு; புதுவை-ஸ்ரீ சாமிநாத ஆச்சாரியார்-சுந்தரமூர்த்தி நாயனுர் சரித்திரம்; மதுரகவி புதுவை ஸ்ரீ நடராஜ ஆச்சாரியார்-வல்லாளமகாராஜா சரித்திரக் காலக்ஷேபம்; உழலூர்-ஸ்ரீ பரசுராம ஆச்சாரியார்-திருவிளையாடற்புராணம்; செருகூர்-ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார்-சீதாகல்யாணக் காலக்ஷேபம்; காயிரம்பேடு-ஸ்ரீ திருவேங்கட ஆச்சாரியார்-சிற்பிகள் கை அற்புதங்கள்; அகூிந்தல-ஸ்ரீ வெங்கடநாசிம்மம் பந்துலு-மூலஸ்தம்பம். இக்கனவான்களுக்கெல்லாம் சபையாருடைய வந்தனங்கள் அளிக்கப்படுகின்றன.

## நமது இரண்டாவதாண்டு.

சென்ற மாதத்துடன் நமது பத்திரிகையின் இரண்டாவதாண்டு பூர்த்தியாயிற்று. அவ் வருஷத்தில் தொழில் சம்பந்தமான வியாசங்கள் பல நமது பத்திரிகையிற் பிரசுரமாயினவென்பது சந்தாதாரர்கள் பலருக்குந் திருப்திதரக்கூடிய விஷயமாகும். கைத்தொழில், சிற்றுளிசெதுக்குவேலை, சுரங்கத் தொழில்கள், சென்னையில் விஸ்வகர்மத்தொழிற்சாலை, தந்தவேலை, தொழிற்கல்வி, தொழிற்கல்வி உண்டாவதெப்படி, தொழிற்சாலை—நெல்குத்துஞ்சாலை, விஸ்வகர்மத் தொழிற்சாலை என்னும் வியாசங்கள் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கவைகளாம். இவற்றை வாசிக்கும் பாக்கியம்பெற்ற குலாபிமானிகள் தொழின்முயற்சிகளில் மெதுவாகவேனும் தமது நோக்கஞ் செலுத்தப்படுவார்கள்.

சிற்பசாஸ்திரப் பயிற்சி, சிற்பிகள்கை அற்புதங்கள், விஸ்வகர்மகுல வித்தியார்த்திகள், விஸ்வகர்ம வித்தியாசாலைகள் என்னும் வியாசங்களால் சிற்பசாஸ்திராதி வித்யாசம்பந்தமான உண்மைகள் பல வெளியாயின. அஸ்வினிதேவர், இயமன், செவ்வாய், போகமுனிவர் இவர்களுடைய சரித்திர வரலாற்று விசேஷங்கள் தெரிவிக்கப்பட்டன. நமது மடாதீனங்களின் உபயோகத்திற் கநுகூலமான அபிப்பிராயங்களடங்கிய வியாசங்கள் வெளியாயின. வைத்தியம், வியவசாயம், சுகாதாரம், வியவகாரம், பாகமிவைகளின் லக்ஷணங்களும், அதிமதுரவசனங்களும், நீதிக்கதைகளும் பிரசுரித்தோம். பூர்வசரித்திரங்கள் சில ஆராய்ச்சி செய்யப்பட்டன. புலான்மறுத்தல் போதிக்கப்பட்டது.

நமது வாசகர்களுடைய கவனத்திற்குரியனவாகிய வியாசங்கள் பிறபத்திரிகைகளினின்றும் பெயர்த் தச்சிடப்பட்டன. சண்டையைச்சார்ந்த விசேஷங்கள்பலவும், போர்க்கருவிகளின் கூறுபாடுகளும் விளக்கப்பட்டன. சுஜாதி சீர்திருத்தத்திற் கின்றியமையாத உபநயனநிர்ப்பந்தம், விவாகநியமங்கள், சம்ஸ்கிருதவித்தியாப்பியாஸம், கான்பரன்ஸ் முறைமைகள், பிறஜாதிதூஷண நீக்கம், ஜாதீயக்கொண்டாட்டங்கள், சிறுதெய்வப் பெயரொழிவு, பௌரோகிதப்பெருக்கம், சமபந்திபோஜனம், ஜாதிப்பட்டம், அந்தியச்சடங்கு, குலபண்டிதர்கள் முதலிய அநேகவிஷயங்களைப்பற்றிய விசாரணை நமது வாசகர்களால் நடத்தப்பட்டது. விசேஷ வர்த்தமானங்கள் பலவற்றையும் வேறனந்த விஷயங்களையும் வெளியிட்டிருக்கிறோம். நிகழு மாண்டில் மற்றும் பல விஷயங்கள் கவனிக்கப்படும்.

நமக்கு விஷயதானஞ் செய்த வித்தியார்வந்தர்களெல்லோருக்கும் வந்தனஞ்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இவர்களில், சென்ற வருஷத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றவர் "சத்தியவசனன்" என்னும் நண்பராவர். இவர் சிற்பத்தையும் தொழில்களையுமே தழுவி வியாசங்களெழுதி வந்தனர். இவருடைய வியாசங்கள் பல அரியபெரிய விஷயங்கள் அடங்கியவாய் மிகுந்த அறிவாற்றலாராய்ச்சிகளை விளக்கி நிற்கின்றன. இவ்வியாசங்களால் நம் பத்திரிகையின் சிறப்பு மிக்கோங்கிய தென்பது நிச்சயம். "தொழிலாளி" என்பாருடைய வியாசங்களும் சிலாகிக்கத் தக்கவை யென்றே செப்பவேண்டும். இவர் லௌகிக ஞானம் மிகவுங் காட்டி யெழுதுகிறார். ஸ்ரீ தா. சு. கதிரேசன் ஆச்சாரியாரவர்களுடைய தொழில் ஞானம் மிகப்பாராட்டத் தக்கது. சாலிவாடி புராதீன தர்மபதி யவர்களுடைய வியாசங்கள் நமது பத்திரிகைக் கணிசெய்யுந்தகைமையன. வித்வான் ஸ்ரீ ஜி. சுவாமிநாதன் ஆச்சாரியார், ஸ்ரீ R. உலகநாத ஆச்சாரியார், ஸ்ரீ சென்றதிசை வென்ற பெருமாள் பிள்ளை இவர்கள் முதன் முறையாக இவ் வருஷத்திலேதான் விஷயதானஞ் செய்யத் தலைப்பட்டார்கள்.

இவர்களுக்கும், ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தியாச்சாரியார், ஸ்ரீ அத்தியாபக-லிங்காச்சாரியார், ஸ்ரீ வைத்திநாத ஸ்தபதி ஜோதிஷர், ஸ்ரீ N. சிவக்கொழுந்து ஆச்சாரியார், ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார், ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார் முதலிய விஷயதான கர்த்தர்களுக்கும் எமது அன்பார்ந்த வந்தனங்கள் அளிக்கிறோம். இவர்களும் மற்றவர்களும் நமது குல ஈடேற்றத்திற்குச் சாதகஞ் செய்யத்தக்க விதமாய் வியாசங்களெழுதிவர வேண்டுகிறோம். மாற்றுப் பத்திரிகைகள் அனுப்பிவரும் பத்திரிகாதிபதிகளுக்கும், நமது பார்வைக்குப் பல நூல்கள் அனுப்பிய பண்டிதர்களுக்கும், நமது வாசகர்களுக்கும் எமது வந்தனங்களைச் செலுத்துகிறோம்.



### 1915ளு அக்டோபர்மீ 24உ கூடிய நமது சபையின்(ஜெனரல் பாடி)பொதுஜனக்கூட்ட நடவடிக்கைகள்

1. 1914-வது வருஷத்திய நிர்வாகசபை ரிபோர்ட் காரியதரிசியால் வாசிக்கப்பட்டதின்மேல், அது பொதுஜனக் கூட்டத்தாரால் அங்கீகரிக்கப்பட்டதாகத் தீர்மானிக்கவேண்டுமென்று, ஸ்ரீ P. சொக்கலிங்க ஆச்சாரியார் பிரேரேபிக்க, ஸ்ரீ C. வீரய்ய ஆச்சாரியார் ஆமோதிக்க ஸ்ரீ E. T. சங்கராசாரியார் ஆதரிக்க, சபையார் அங்கீகரித்துத் தீர்மானித்தனர்.

2. கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் 1915-வருஷத்திற்கு நியமிக்கப்பட்டனர்.

1. சபைத்தலைவர்—

ஸ்ரீ சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியார்

பிரேரேபகர்—ஸ்ரீ S. ஆண்டிசுந்தராச்சாரியார் பி.ஏ., பி.எல்.

ஆமோதகர்— ,, பி. கல்யாண சுந்தராச்சாரியார்

ஆதரித்தவர்— ,, P. சொக்கலிங்காச்சாரியார்

,, ,, E. K. அரங்கநாதாச்சாரியார்.

2. காரியதரிசியார்—

(1) ஸ்ரீ P. சொக்கலிங்காச்சாரியார்

பிரேரேபகர்—ஸ்ரீ A. ஜெகந்நாதாச்சாரியார்

ஆமோதகர்— ,, E. K. அரங்கநாதாச்சாரியார்

(2) ஸ்ரீ N. முத்யாலய்யாச்சாரியார்

பிரேரேபகர்—ஸ்ரீ பி. கல்யாண சுந்தராச்சாரியார்

ஆமோதகர்— ,, E. T. சங்கராச்சாரியார்

ஓட் எடுத்ததில் (1) க்கு 6 ஓட்களும் (2) க்கு 5 ஓட்களும் கிடைத்தமையால், ஸ்ரீ P. சொக்கலிங்க ஆச்சாரியார் காரியதரிசியாராய் நியமிக்கப்பட்டனர்.

3. பொக்கிஷதாரர்—

ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார்

பிரேரேபகர்— ,, P. சொக்கலிங்க ஆச்சாரியார்

ஆமோதகர்— ,, E. K. அரங்கநாத ஆச்சாரியர்

ஆதரித்தவர்— ,, E. T. சங்கராச்சாரியார்

3. 13-4-15உயில் கூடிய நிர்வாகசபை மீடிங்கில் "சபைச் சட்டங்களின B. 4லிலிருக்கும் 'நான்கு' என்னும் பதத்திற்குபதிலாக 'பத்து' என்னும் பதத்தைச் சேர்க்கவேண்டுமென்றும் 26 வதிலிருக்கும் மானேஜிங்கமிட்டி கோரத்தொகையில் 'ஐந்து' என்பதற்குப் பதிலாக 'ஆறு' என்று சேர்க்கவேண்டுமென்றும், இந்த மாறுதல்களை யநுசரித்து மற்ற சட்டங்களில் செய்யப்பட வேண்டியனவாகலாம் மாறுதல்களைத் தக்கவாறு செய்துகொள்ள வேண்டுமென்றும்" தீர்மானிக்கப்பட்ட 5-வது ரிஸலூஷன் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டதின்மேல், அந்த ரிஸலூஷன் அப்படியே அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்பட்டது.

பிரேரேபகர்—ஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியார்

ஆமோதகர்— ,, C. வீரய்ய ஆச்சாரியார்

கூட்டத்தாரெல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த விஷயம் மீடிங் நோட்டீஸில் குறிப்பிடப்படாததாயிருந்தும், ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாமென்று சபைத்தலைவரும் கூட்டத்தாரும் இசைந்ததின்மேல் கவனிக்கப்பட்டது.

4. கீழ்க் கண்ட கனவான்கள் நிர்வாகசபை மெம்பர்களா யிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1. ஸ்ரீ S. ஆண்டி சுந்தராச்சாரியார்
2. ,, E. K. அரங்கநாத ஆச்சாரியார்
3. ,, பி. கல்யாணசுந்தர ஆச்சாரியார்
4. ,, T. பாக்ஷா ஆச்சாரியார்
5. ,, N. முத்தியாலய்ய ஆச்சாரியார்
6. ,, ம. ஆறுமுக ஆச்சாரியார்
7. ,, C. வீரய்ய ஆச்சாரியார்

பிரேரேபகர்—ஸ்ரீ S. ஆண்டி சுந்தர ஆச்சாரியார்

,, ,, E. K. அரங்கநாத ஆச்சாரியார்

எல்லோரும் அங்கீகரித்தனர்.

5. ஸ்ரீ கொளத்தூர் - கன்னியப்ப ஆச்சாரியாரிடமிருந்து சபைக்குச் சேரவேண்டிய தொகையை ஷியாரிடமிருந்து வசூல் செய்வதற்கேற்ற விஷயங்களைப் பற்றி ரிபோர்ட் செய்ய கீழ்க் கண்ட கனவான்கள் கொண்ட கமிட்டி எற்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(1) ஸ்ரீ சோ. கந்தசாமி ஆச்சாரியார்
(2) ,, பி. கல்யாணசுந்தர ஆச்சாரியார்
(3) ,, கா. திருவேங்கட ஆச்சாரியார்
(4) ,, P. சொக்கலிங்க ஆச்சாரியார்
(5) ,, S. ஆண்டி சுந்தர ஆச்சாரியார்
(6) ,, T. பாக்ஷா ஆச்சாரியார்.

பிரேரேபகர்—ஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியார்

ஆமோதகர்— ,, E. T. சங்கராச்சாரியார்.

சபைத்தலைவருக்கு வந்தனத்துடன் கூட்டங் கலைந்தது.

பி. கல்யாண சுந்தரன், காரியதரிசி. சோ. கந்தசாமி ஆச்சாரி, சபைத்தலைவர்.

## சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின்

# 1914-வது வருஷத்திய ரிபோர்ட்

1. 1910ஞு அக்டோபர்மீ 21உ சுக்கிரவாரத்தன்று சென்னை சித்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரி வீதி, 5|10-வது எண்ணுள்ள கிருகத்தில் ஸ்தாபிக்கப் பட்டதாகிய இச்சபையானது, 1912ஞு நவம்பர்மீ 10உ யன்று கூடிய மஹாஜனக்கூட்டத்தின் தீர்மானத்தின்படி, இடசௌகரியமாதி காரணம்பற்றி, சென்னை தங்கசாலை வீதி 462-வது எண்ணுள்ள மாடியில் 1913-வதுஞு எப்ரல்மீ 7உ யன்று அமைக்கப்பட்டது முதலாக அவ்விடமே தன் ஸ்தானமாகக்கொண்டு நடைபெற்று வருகின்றது.

### ரிஜிஸ்ட்ரேஷன்

2. பொது ஜனமதிப்புக்கும், சுஜாதியாதரவுக்கும் அதிகமாய்ப் பாத்திரமாகும் பொருட்டாக, நமது சபை 1914ஞு ஜுலைமீ 18உ யன்று 1860ஞு 21-வது ஆக்டின் கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

### மெம்பர்கள்

3. 1914-வது வருஷாரம்பத்தில் நமது சபையின் மெம்பர்களாக 189-பேரிருந்தனர்; ஷை வருஷ முடிவிலிருந்தவர்கள் 112-பேர். நமது சபையின் மாதாந்தரப் பத்திரிகையாகிய 'விஸ்வகர்ம'னுடைய வருஷ சந்தா, மெம்பர்கள் சந்தாவினும் ரூபா ஒன்று குறைவாயிருக்கிறபடியால், நமது குல ஜனங்கள் விசேஷமாய் ஷை பத்திரிகைச் சந்தாதாரர்களா யிருக்கவே விரும்புகிறார்கள். இக்காரணம்பற்றியே சபைமெம்பர்கள் தொகை குறையலாயிற்று.

### பொக்கிஷம்

4. ரிபோர்ட் வருஷத்தில் சபைக்குக் கிடைத்த வருமானம் ரூ. 1070-0-8; நேர்ந்த செலவு ரூபா 1080-5-6; வரவுக்குமேல் செலவான ரூபா 10-4-10. ஆதலினால், இருப்புத் தொகை சென்ற வருஷத்தில் ரூ. 786-2-10 இருந்தது ரிபோர்ட் வருஷத்தில் ரூ. 775-14-0 க்குக் குறைந்து போயிற்று. இந்தத் தொகையில் ரூ. 348-6-8 ஸ்ரீகொளத்தூர் கன்னியப்ப ஆச்சாரியாரிடமிருக்கிறது; மதராஸ் விடி கொவாபரேடிவ் பாங்கியில் பிக்ஸட் டிபாஸிட்டாக உள்ள ரூ. 400-0; பொக்கிஷதாரரிடமிருந்த ரூ. 27-7-4. மேற்சொன்னபடி ரொக்க ரூ 348-6-8 டோடு 'இராமானந்த சர்மா சரித்திரம்' என்னுமொரு நூலின் பிரதிகள் 631-ன் கிரய ரூபா 236-10-0ம் ஷை ஸ்ரீ கொளத்தூர் கன்னியப்ப ஆச்சாரியாரிடமிருந்து நமது சபைக்கு வரவேண்டியதாயிருக்கிறது. இவற்றைப் பற்றிய முழுவிவரங்கள் சென்ற ரிபோர்ட்டில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றைச் சபையினிடம் சேர்ப்பிக்கும்படி கடிதமூலமாய்க் கேட்டும் ஷை ஸ்ரீ கொளத்தூர் கன்னியப்ப ஆச்சாரியார் இன்னும் அவ்வாறு செய்யாது தாமதப்படுத்திவருகின்றனர். இவற்றை வசூல் செய்வதற்கேற்ற உபாயத்தை சபையார் தீர்மானித் துரைப்பார்களென்று வேண்டிக்கொள்ளப்படுகிறது.

### சபையின் இயக்கங்கள்

5. (1) **நமது பத்திரிகை(விஸ்வகர்மன்)** பொதுவிஷயங்களையும் குலசம்பந்தமான விஷயங்களையும், சாஸ்திர சம்பிரதாயமாதியவற்றையும், தொழிலபிவிருத்தி சாதனங்களையும் மற்றும் பலவற்றையும் நமதுகுலத்தார்க்குப் போதிப்பதற்காக, சென்ற 1913ஞு அக்டோபர்மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகிய மாதாந்தப் பத்திரிகை நாளுக்கு நாள் விருத்திபெற்று பலருக்கும் பயனளித்து வருதல் காணச் சபையார் சந்தோஷ முறுகின்றனர். தமிழ் ஜில்லாக்களிலுள்ள விஸ்வகர்ம குடும்பத்தினரொவ்வொருவரும் இப்பத்திரிகையைப் பெற்று வாசித்துவருவார்களானால், நமது குல சீர்திருத்தம் சீக்கிரம் கைகூடுமாதலால் இவ்வம்சத்தினர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகைக்குத் தாம் சந்தாதாரராவதுடன் மற்றோரும் சந்தாதாரராகச் செய்து எல்லோரும் இதைத் தவறாமல் வாசித்து பலபிரயோஜனங்களடைவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. **நமது வாசகசாலை.**—1913-ஞு எப்ரல்மீ 7-உ முதல் நமது சபாமண்டபத்தில் நடைபெற்று வரும் வாசகசாலைக்கு 2-தினசரிப் பத்திரிகைகளும், 4-வாரப்பத்திரிகைகளும், 1-பக்ஷபத்திரிகையும், 20-மாதாந்தரப் பத்திரிகைகளுமாக மொத்தத்தில் 27-பத்திரிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள், இங்கிலீஷ் பத்திரிகை 1, இங்கிலீஷ்-தமிழ் 1, தமிழ்ப் பத்திரிகைகள் 21, ஆந்திரப்பத்திரிகை 1, மஹாராஷ்டிரப் பத்திரிகைகள் 2, கன்னடப் பத்திரிகை 1. ரிபோர்ட் வருஷத்தில் இவ்வாசகசாலையை உபயோகித்தவர்களின் தொகை கணக்கிடப் பட்டவரையில் 6,826. சராசரியில்



நாளொன்றுக்குச் சுமார் 19-பேர் நமது வாசகசாலையின் பிரயோஜனத்தை அடைந்தார்களென்பது சபையார்க்கு மிகவும் அகமகிழ்ச்சி யுண்டாக்குகின்றது.

3. **நமது புத்தகாலயம்.**—இதில் இப்போதுள்ள புத்தகங்கள் 200. சென்ற ரிப்போர்ட்டில் தெரிவித்தபடி, பொருட் குறைவினால் இப் புத்தகாலயத்தைத் தக்கவாறு விருத்திசெய்தற் கியலாதிருக்கின்றது. ஆயினும், ஸ்ரீ செஞ்சி ஆண்டி சுந்தர ஆச்சாரியார், பி. ஏ. பி. எல். அவர்கள், ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார் பி.ஏ. அவர்கள், ஸ்ரீ மௌனகுரு-ருத்திர மூர்த்தி ஆச்சாரியாரவர்கள், மதுரை ஸ்ரீ A. N. இராமசாமி ஆச்சாரியாரவர்கள் முதலானோர் சிற்சில புத்தகங்களுதவியருளினர். இவர்களைப் போல் மற்றும் பல வித்தியா பிரசாரகரும் நமது புத்தகாலயத்திற்குப் பல நூல்கள் அளித்து ஆதரிப்பார்களென்று வேண்டிக் கொள்ளப்படுகிறது.

4. **வாரப் பிரசங்கங்கள்.**—ஞாயிற்றுக் கிழமை தோறும் நமது சபாமண்டபத்தில் சுஜாதிப் பண்டிதர்களாலாவது சுஜாதிசம்பந்தமான விஷயங்களைப்பற்றியாவது பிரசங்கங்களும் உபந்நியாசங்களும் நடத்தப்பட்டுவந்தன. சுஜாதியினர் விசேஷமாய் வந்து கேட்கத் தூண்டுதற் பொருட்டாக Magic Lantern என்னும் விளக்கொளிச் சித்திரக் காக்ஷியோடு உபந்நியாசங்கள் நடத்துவதற்கான யோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

4. **கிரந்த சேகரமும் பிரசுரமும்.**—சென்ற ரிபோர்ட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட இரதகாராதி கரண விசாரத் தமிழ் மொழி பெயர்ப்பு, சில பண்டிதோத்தமர்களுடைய அபிப்பிராயத்திற்கிணங்க, கைவிடப் படவேண்டியதாயிற்று. விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியாரென்று நிரூபிப்பான், மீனாக்ஷிபுரம் ஜோசியர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்களெழுதிச் சபைக்களித்த நூல் அச்சிடப்பட்டு வருகின்றது. கிரந்த சேகரஞ் செய்வதிலும், கிரந்த பிரகடனத்திலும், சுஜாதிப் பண்டித சிரேஷ்டர்கள் சபையார்க்குதவி புரிவார்களென்று வேண்டிக் கொள்ளப்படுகிறது.

6. **விஸ்வகர்ம சிறுவர்கள் வித்யாநிதி.**—ஆங்கில பாஷா பாடசாலைகளில் உயர்தரக் கல்வி கற்கும் விஸ்வகர்ம குல வித்யார்த்திகளில், ஏழைகளாகவும் விவேகிகளாகவு முள்ளவர்களுக்கு திரவிய சகாயஞ் செய்யும்பொருட்டு, விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதியென்பதொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்நிதிக்கு நன்கொடையாக ரூ. 266-பல கனவான்களால் கை யொப்பஞ் செய்யப்பட்டிருக்கிறது. உள்ளூர் வெளியூரிலிருக்கும் குலஜனங்கள் பலரும், இந்நிதிக்கு நன்கொடையாகப் பெருந்தொகையாவது, மாதச்சந்தாவாக சிறு தொகையாவது கொடுத்துதவ முன் வருவார்களென்று வேண்டிக் கொள்ளப்படுகிறது. சென்னை பச்சையப்பன் காலேஜில், பீ. ஏ ஜூனியர் வகுப்பில் வாசிக்கும் ஸ்ரீ K. S. முத்துக்குமாராச்சாரிக்கு ஷை நிதியிலிருந்து, நிகழுமாண்டில் ரூபா 35 ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது. நாளது 1915ஞு ஜுலைமாதத்திலிருந்து ஆரம்பமாகும் புது வித்யா வருஷமுதல் விஸ்வகர்ம வித்யார்த்திகளுக்கு கூடுமான வரையிலும் திரவிய சகாயம் செய்யவேண்டுமென்னும் விருப்பம் சபையார்க்குப் பெரிதுமுண்டு. இவ்விருப்பம் நிறைவேறுமாறு கனதனவான்கள் பொருளுதவி செய்வார்களாக.

7. **சமஸ்கிருத வித்யாசகாயம்.**—வைதீக சாஸ்திராராய்ச்சிக்கும் சிற்பநூற் பயிற்சிக்கும் சமஸ்கிருதக் கல்வி இன்றியமையாததா யிருக்கின்றபடியால், அப்பாஷாப்பியாசத்தை விஸ்வகர்மகுலத்தார் கைக்கொண்டு தேர்ச்சிபெறச் செய்யவேண்டி சமஸ்கிருத வித்யார்த்திகளுக்கு சபையார் உபகாரச் சம்பளங் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் சமஸ்கிருத கலாசாலைகளிலோ, அன்றி பண்டித சிரேஷ்டர்களையடுத்தோ சிற்ப, வேத, புராண, ஹிதிகாச, தர்க்க, வியாகரண, மீமாம்ஸாதிகளைக் கற்றுக்கொள்ள விரும்பும் விஸ்வகர்மகுல வித்யார்த்திகளுக்கு அவஸ்யமாயிருக்கக்கூடிய உதவி சபையாரால் செய்யப்படுமென்று ஏற்கனவே அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இத்தகைய மாணவரைப்பற்றித் தெரிவிக்கும்படி சென்னை, திருவாதி, மைசூர், விஜயநகரம் முதலிய இடங்களிலுள்ள சமஸ்கிருத கலாசாலை யதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

8. **ஆச்சாரிப் பட்டம்.**—சபையார் சென்ற வருஷம் பிப்ரவரிமாதத்தில் இப் பட்ட சம்பந்தமாக ஓர் மஹாஜனசபை கூட்டி அரசாங்கத்தார்க்கு விண்ணப்பமனுப்பினார்கள். இதன் திரிபுபற்றிய பிரஸ்தாபம், விஸ்வகர்மன் பத்திரிகை வாயிலாகவும் மற்ற விதங்

களாலும் சபையாரால் செய்யப்பட்டதின் பலனாக சில வூர்களிலிருந்து இதுபற்றிய முறையீடுகளனுப்பப்பட்டன. இவற்றின் பலனாக, சீக்கிரமே நமது ஜாதிப் பட்டத்திற்கேற்பட்டுள்ள ஆபத்து நீங்கிவிடுமென்று சபையார் நம்புகிறார்கள்.

9. வித்யாபூஜிதம்.—சென்னை யூனியர்ஸிடி யென்னும் சர்வகலாசங்கத்து 1914ஞ பீ. ஏ. பரிக்ஷையில் தேரி டிகிரி பட்டம்பெற்ற ஸ்ரீ M. கிருஷ்ணசாமி பத்தரவர்களுக்கும், ஸ்ரீ பொல்லோஜி-வீரபத்திராச்சாரியார் அவர்களுக்கும் 1914ஞ நவம்பர்மீ 20உ யன்று நமது சபாமண்டபத்தில் கூடிய கூட்டத்தில் வந்தனோபசாரங்கள் செய்யப்பட்டன. இவ்விதம் பிரதிவருஷமும் செய்ய நேரிடும்படி நமது வித்யார்த்திகள் உயர்தரப் பட்டங்கள் பெற்றிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. சுற்றுப் பிரயாணம்.—நமது சபைத்தலைவர் ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியாரவர்களும், அரக்கோணம் ஸ்ரீ குருசாமி ஆச்சாரியாரவர்களும் 1914ஞ மே, ஜூன் மாதங்களில் இராமேச்சுரம், மதுரை, பழநி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம் முதலிய பலவூர்களுக்குச் சென்று விஸ்வகர்மகுல ஜனங்களைக் கண்டு சம்பாஷித்து அவர்களுக்கு குலாபிமானமூட்டிச் சுஜாதி யீடேற்றத்திற்கு அவர்கள் துணைநிற்கத் தூண்டிவந்தனர். டிஸம்பர் மாதத்தில் ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியார் அவர்கள் கூடலூர் திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம், திருவிடைமருதூர், திருவாரூர், பண்ணுருட்டி முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு நமது சபையைப்பற்றிய உண்மைகளை யெடுத்துரைத்து வந்தனர். கைம்மாறு கருதாதுழைக்கும் இவர்போல் நமது குலத்தார்க்கு உபதேசஞ்செய்து குலப்பற்றுண்டாக்க மற்றும் பலகுலாபிமானிகள் சீக்கிரம் முன்வருதல் அவஸ்யமாயிருக்கிறது.

11. நவராத்திரி பூஜா வைபவங்கள்.—நவராத்திரி பூஜாசம்பந்தமாக நமது சபாமண்டபத்தில் கலசஸ்தாபனஞ் செய்வித்து 1914ஞ செப்டம்பர்மீ 19உ முதல் 28உ வரையிலுங்கூடிய பத்து தினங்களில் தினமும் தேவதாராதனை, கச்சேரி, காலக்ஷேபமாகியவை வெகு விமரிசையாய் நடத்துவிக்கப்பட்டன. ஓராயிரம் ஜனங்களுக்கதிகமாக நமது குலாபிமானிகளும் மற்றையரும் விஜயஞ்செய்து தரிசன சிரவணானந்தமெய்தினர். நமது ஜாதியினராயுள்ள சங்கீதவல்லபர்கள் சாஸ்திரவல்லபர்களாதியருடைய பெருமை பிரகாசிக்கச் செய்வதில் இந்நவராத்திரிக் கொண்டாட்டங்கள் பெரிதும் பயன்படுதல் சபையார்க்கு மிகுந்த திருப்தியை யுண்டாக்குகிறது.

12. தீபாவளித் தண்டல்.—ரிபோர்ட் வருஷத்தில் தீபாவளித் தண்டலினால் கிடைத்த ரூ 47-5-9. மிகச் சில இடங்களில் மட்டுமே இத்தண்டல் நடைபெற்றபடியால் வசூல் தொகை சிறிதாயிருக்கலாயிற்று. இனி, வருஷந்தோறும் தீபாவளித்தண்டல் முன்னினுமதிகமாக வசூலாகுமாறு ஒவ்வொருவரும் முன்னின்று துணை புரிவார்களென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வசூல் பணம் குலானுகூலமான காரியங்களுக்காக உபயோகிக்கப் படுமென்பது நமது ஜனங்களால் முக்கியமாய்க் கவனித்தற்பாற்று.

13. இராஜபக்தி.—கனம் ஜார்ஜ் மன்னர், வைஸிராய் லார்ட் ஹார்டிஞ்ச் இவர்களுடைய ஜனனநாளுற்சவங்கள் கொண்டாடப்பட்டு வாழ்த்துத் தந்திகள் சபையினின்று மனுப்பப்பட்டன. லேடி ஹார்டிஞ்ச் தேகவியோகத்தை யநுசரித்து துக்காநுதாபத்தந்தி வைஸிராயவர்களுக் கனுப்பப்பட்டது. இவற்றிற்குத் தக்க விடைகள் கிடைத்தன.

## உபகாரிகள்

6. நமது சபை நாளுக்குநாள் விருத்தியுற்றிருக்கச் செய்வதில் நமது குலோபகாரிகள் காட்டிவரும் ஊக்கம் மிகவுங் கொண்டாடத்தக்கதாயிருக்கிறது. சபைத்தலைவர் ஸ்ரீ. சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் சென்றவருஷத்தில் கடனளித்த ரூ. 50 நன்கொடையாக்கி யருளியதுடன், பிரஸ்தாப வருஷத்தில் ரூ 100 சபைக்கு அன்போடு மளிக்க முன்வந்தனர். ஸ்ரீ. T. பாட்சா ஆச்சாரியாரவர்கள் நமது வாசகசாலைக்கு இரண்டு சாய்பெஞ்சுகள் அளித்தருளினார்கள். விஸ்வகர்மச்சிறுவர் நிதிக்கும், நவராத்திரி உற்சவங்களுக்கும் நன்கொடையளித்த கனவான்களுக்கும், நவராத்திரி பூஜாகாலத்து இலவசமாய்க் கச்சேரிகள் நடத்திய புண்ணியருக்கும், சபைக்கும் குலத்திற்கும் இடைவிடா துபகாரஞ் செய்துவரும் அரக்கோணம் ஸ்ரீ. தி. குருசாமி ஆச்சாரியாரவர்களுக்கும், தீபாவளித் தண்டலுக்குத் துணைபுரியுங் குணவான்களுக்கும், விஸ்வகர்மன் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்த வித்யாநிதிகளுக்கும், சபைப் புத்தகாலயத்திற்கு நூல்களளித்த கனவான்களுக்கும், வாரப் பிரசங்கங்கட்குதவும் ஸ்ரீ செருகூர்-கிருஷ்ணமாச்சாரியர், ஸ்ரீ M. நடேச ஆச்சாரியார் முதலானோர்க்கும், பலகாலுதவிபுரிந்த ஸ்ரீ மதுரகவி - பு. நடராஜ ஆச்சாரியார், ஸ்ரீ அக்ஷிந்தல-நரஸிம்மம் பந்துலு முதலோர்க்கும், நமது சபைக் குதவியா யிருந்துவரும் திருச்சி விஸ்வபிரம்ம மகாஜன சென்ட்ரல் சபையார், அரக்கோணம் விஸ்வப் பிராம்மண சபையாராதியோர்க்கும் சபையாருடைய வந்தனங்கள் அளிக்கப்படுகின்றன. சபைக் கணக்குகளை அன்போடு பரிசோதித்தருளிய ஸ்ரீ C. M. சிவப்பிரகாச முதலியாரவர்களுக்கு சபையார் மிகவும் நன்றியறிதலுடன் தமது வந்தனங்களைத் தந்திடுகின்றனர்.

சோ. கந்தசாமி ஆச்சாரி.
சபைத்தலைவர்.

பி. கல்யாணசுந்தரன்
காரியதரிசி

கா. திருவேங்கட ஆச்சாரி
பொக்கிஷதாரர்

S. ஆண்டிசுந்தர ஆச்சாரி.
E. K. அரங்கநாத ஆச்சாரி.
T. பாக்ஷா ஆச்சாரி.
கு. சு. பாலசுந்தர ஆச்சாரி.
அந்நியக்ஷர்கள்.

---

அவல்வடாம்.—ஒரு படி வெண்மையான அவலை மூன்றுபடி சுத்தஜலங் கொண்டதோர் பாத்திரத்திற் கொட்டி நன்றாய் ஊறினபிறகு ஜலத்தை வடித்து, உரலில் போட்டு அரைத்தாவது நன்றாய்ப் பிசைந்தாவது வைத்துக்கொள்ள வேண்டும். பொடியாய் நறுக்கின பச்சை மிளகாய் 4-பலம்; பொடியாய் நறுக்கின கொத்துமல்லி 4-பலம்; தோல் போக்கிய எள் 6-பலம்; காரப்பொடி 3-பலம்-இந்த நான்கு வஸ்துக்களையும் அவலுடன் கலந்து நன்றாகப் பிசைந்து சுண்டைக்காய்ப் பிரமாணம் வடாம் வைத்து உலர்த்தியெடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வடாம் நாள்பட இருக்கவேண்டுமானால், எள்ளை விலக்கவேண்டும். காரப்பொடி செய்யும் விபரம் முன்னமே எழுதப்பட்டிருக்கிறது.



## சற்போதனை

ஸ்ரீ தா. குருநாத ஆச்சாரி

சௌராஷ்டிர விப்ரசபை யென்பதொரு சபையைப் பற்றி சென்ற பத்திரிகையில் எழுதியிருந்தது காணுமிடத்து சபையின்பெயர் தீவிரமாய்க் கவனத்தைக் கவர்ந்தது. இதைப்பற்றி என்னுடைய ஆப்த நண்பராகிய ஒருமுதலியாரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் சில அபிப்பிராயங்களை வெளியிட்டார். அந்த கருத்துகளை என் ஜாதியார் அறியவேண்டுமென்னும் கருத்தினால் இக்கடிதம் எழுதலாயிற்று.

சௌராஷ்டிரவிப்ரசப்தம் எனக்கு ஒருவித அசூயையை உண்டாக்கியதென்பதை அவர் என்வார்த்தைகளால் தெரிந்துகொண்டார்போ லிருக்கிறது. அதன் மேல், "ஆச்சாரியாரே! ஆத்திரத்தை தூரவிலக்கிவிட்டு சாவதானமாய் வார்த்தையாடுங்கள். இதில் முழுகிப் போகிறகாரியம் ஒன்றுமில்லை. என் பதட்டமாய்ப் பேசவேண்டும்? உங்கள் விஸ்வப்பிராம்மண சபைகளைப்பற்றிக் கேள்விப்பட்ட மற்ற ஜாதி நண்பர்கள் இதேவிதமாய் ஆத்திரத்தோடு பேசிய சந்தர்ப்பங்களை நான் அறிவேன். அப்போது அவர்களுக்கும் இதேமாதிரியாகத்தான் நிதான 'தைப் போதிக்க வேண்டியதாயிற்று.

"இக்காலத்தில் எல்லாம் புதுமை புதுமையாகத்தான் காணப்படுகிறது. எதற்குக் கட்டுகாயிதா இருக்கிறது சொல்லுங்கள். யாரியார் எப்படி பெருமையடையலாமென்று நினைக்கிறார்களோ அப்படியெல்லாம் நடந்துகொள்ள பிரிட்டிஷ் துரைத்தனத்தில் சுதந்திரமிருக்கிறது. இது நல்லமார்க்கத்திற்குச் சகாயஞ்செய்கிறதேயல்லாமல் வேறொன்றுமில்லை. ஆனால், பெருமை என்பது எந்த சொரூபமானது என்றும், அதை அடைவது எப்படியென்றும், அதில் எத்தனை விதங்கள் உண்டென்றும், எந்தவிதம் சிலாக்கியமானதென்றும் ஜனங்கள் யோசித்துப்பார்க்கிறதில்லை. பொறாமை உலகத்தில் அதிகமாய்க்கொண்டுவருகிறது. எல்லா ஜாதியாரும் உயர்ந்துயர்ந்து மேலேறவேண்டுமென்று பார்க்கிறார்கள்.

"மேலேறுவதென்றால், வர்ணாச்சிரம தருமத்தில் சூத்திரனென்று சொல்லப்படுவோர் வைசியனென்றோ க்ஷத்திரியனென்றோ பிராம்மணனென்றோ

சொல்லப்படவேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். பிறர்சொல்லாவிட்டாலும் தாமாகவாவது சொல்லிக்கொண்டு திருப்தியடைகிறார்கள். இந்தப் பித்தம் பலஜாதிகளிடத்தில் காணப்படுகிறது. உம்முடைய ஜாதியாரிடத்திலும் அதிகமாய்க் காணப்படுகிறதல்லவா?" என்று கேட்டார். ஆமாமென்று ஒப்புக்கொண்டேன். மேல், பின்வருமாறு பிரசங்கஞ் செய்தார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரியென்றே உங்கள் ஜாதியார் வாதிக்கிறார்களல்லவா? அப்படியே தான் ஒவ்வொரு ஜாதியாரும் வாதிக்கிறார்கள். நாம் அறிந்து புதிது புதிதாய் எத்தனைபேர் பூணூல் போட்டுக்கொண்டார்கள். மற்ற ஜாதிகளுக்குப் போவானேன்? வள்ளுவனைப் பாருங்கள், சக்கிலியைப் பாருங்கள். இவர்களெல்லாம் துவிஜர்கள் அதாவது இருபிறப்பாளர் என்று எவன்தான் வாய்கூசாது சொல்லுவான்? எந்தக் கண்மூடிக்குத்தான் இவர்கள் நிலைமை தெரியாதிருக்கிறது? தினமும் கூடவே பழகி இவர்களுடைய வழக்கங்களையும் ஒழுக்கத்தையும் பார்த்துக்கொண்டேயிருப்பவனுக்கு இவர்களுடைய பூணூலில் என்ன மதிப்பு உண்டாகும்? நன்றாய் யோசித்துச் சொல்லுங்கள். இந்தப் பூணூலுக்கு உண்டாகும் அலட்சியமே மெதுவாக மற்றப் பூணூல்களுக்குஞ் செல்லுகிறது. கள்ளுக்கடைகளிலும் சாராயக்கடைகளிலும் பூணூல் புரண்டுருண்டு புலம்பி வருகிறதென்றால் அதற்கு என்ன மதிப்பு கிடைக்குமென்று நிதானியுங்கள்.

"முன்னாளில் மீசையில்லா முகங்களைப்பார்ப்பது மிகவும் துல்லபமாயிருந்துவந்தது. இந்நாளிலோ மீசையுள்ள முகத்தைப் பார்ப்பது துல்லபமாய்விட்டது. வைதிகக்குறியென்று முன்னாளில் மீசையில்லாமை கொண்டாடப்பட்டது போய் இப்போது அதுவே அவைதிகக் குறியாய்விட்டது. அதனாலே தான் பல பிராம்மணர்கள் வரவர மீசைவைத்துக் கொள்ளலானார்களென்று நினைக்கிறேன். அவைதிக ஒழுக்கமுடையவர்கள் அந்த ஒழுக்கத்தை வெளிப்படாமல் மறைப்பதற்கு மீசை யெடுத்துவிடுதல் சகஜமாய்விட்டது. மீசை சிரைத்த முகங்களை எந்த இடத்திலும் காண்கிறோம். இந்த முகங்களை நான் முன்சொன்ன இடங்களில் அதிகமாகவும் அடிக்கடியும் காணப்படுகின்றன. அப்படியிருக்க, மீசை நீக்குவதே ஓர்வைதிகக் குறியென்று லௌகிக அநுபவம் உடையவர்கள் சொல்லத் துணிவார்களா?" என்று கேட்டார்,

நான் பேசாமல் உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவர் "நான் சொல்வதில் ஏதாவது பிசகிருந்தால் சொல்லுங்கள் ஒப்புக் கொள்ளுகிறேன்" என்றார். "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" யென்று பதில் சொல்லவந்ததே யல்லாமல் வேறு பதில் சொல்ல எனக்கு வாய் வரவில்லை. ஆயினும், சற்றுநேரம் சும்மாவிருந்தபிறகு "நாம் ஏதோ பேச ஆரம்பித்து எங்கேயோ வந்துசேர்ந்தோம்" என்றேன். "இல்லையில்லை. அந்த இடத்திற்கே வருவோம். எதற்காக இவ்வளவும் சொல்லவந்தேனென்றால் ஒருவரைப்பார்த்து ஒருவர் அசூயை கொள்வதில் பிரயோசனமில்லையென்றும், ஒருவரைப்போல் மற்றவர் நடிப்பதிலும் வெளிவேஷம் போடுவதிலும் யாதொரு குணமில்லையென்றும், அந்த விதத்தால் பெருமையுண்டாகமாட்டாதென்றும் சொல்லவந்தேன்.

"விப்ரசப்தமோ அல்லது பிராம்மண சப்தமோ சேர்ந்துவிட்டதினால் மாத்திரமே ஒரு ஜாதிக்குப் பெருமையுண்டாகாதென்பதைத் தாங்கள் கவனிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தவும், கல்வியும் ஒழுக்கமுமே சிறந்தவையாகுமல்லது பட்டப்பெயர் சிறந்ததாகாதென்பதை வற்புறுத்தவும் எண்ணிப் பேசினேன். நாமெல்லாம் பிராம்மணர்களுடைய சற்குணங்களைப் பார்த்துப் பழகவேண்டும். அவர்களுடைய விடாமுயற்சியும், கல்வியில் ஊக்கமும், ஒற்றுமையும், சுற்றந்தழுவுங்குணமும், இன்சொல்லும், காரியசாதக நோக்கமும், சாத்துவிக போசனமும், பிராதக்காலஸ்நானமும் ஆகிய இத்தியாதி குணங்களை நாம் பழகிக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். அவர்களைப்போல் மீசையடித்துக் கொள்வதினாலும், அவர்களைப்போல் பூணூல் போட்டுக்கொள்வதினாலும், அவர்களைப்போல் குச்சம்வைத்து வேஷ்டி கட்டிக்கொள்வதினாலும், அவர்கள் பெண்களைப்போல் நமது பெண்களை மடிகட்டிக்கொள்ளச்செய்வதினாலும் இத்தியாதி மற்ற வெளிவேஷங்களினாலும் நாம் அவர்களாகவோ அவர்களுக்குச் சமானமாகவோ அவர்களுக்கு மேலாகவோ ஆய்விட முடியாது.

"அவர்களைப்போல் கல்வி கற்கவேண்டும், உயர்தரப் பட்டங்கள் பெறவேண்டும், பெரிய உத்யோகங்களில் அமரவேண்டும், ஒற்றுமைகொண் டிருக்கவேண்டும், சுற்றந்தழுவவேண்டும், காரியசாதகத்தில் நோக்கம் வைத்து நடக்கவேண்டும், சாத்துவிகபோஜனங்கொள்ளவேண்டும், பிராதக்கால ஸ்நானஞ்செய்யவேண்டும், செட்டாய்க் குடித்தனம் பண்ணவேண்டும், வீண் விரயங்களை விலக்கவேண்டும். இம்மூ [illegible] பரிபாலிக்கவேண்டும். இவற்றில் கவனம் வையுங்கள், அப்போது செல்வமுண்டாகும் சிறப்புண்டாகும். அதைவிட்டு வெளிவேஷத்திலும் பட்டத்திலும் ஆசையும் அசூயையும் எதுக்கு? வேண்டாம், வேண்டாம்" என்றார்.

எனக்கு ஒன்றுஞ் சொல்லத்தோன்றவில்லை. அவர் சொல்வதெல்லாம் நிஜமென்றே தோன்றிற்று. ஆதலால் பதில் சொல்லத் தோன்றவில்லை. ஆமாமென்று சொல்லவும் வெட்கமாயிருந்தது. ஏனென்றால், நம்முடைய நிலைமையையும், நம்மவர்களுடைய நோக்கங்களையும், நமது ஜாதிப்பிரமுகர்களுடைய போதனைகளையும் எண்ணிப் பார்த்தவிடத்து எனக்கு வெட்கந்தவிர வேறொரு உணர்ச்சியும் உண்டாகவில்லை. பிறஜாதியாரோடு கலந்துபேசினால்தான் எல்லா விஷயங்களும் பளிச்சென்று விளங்கும் என்னும் வெளிச்சம் எனக்கு இப்போதுதான் உண்டாயிற்று.

அதுமுதல் பலவிஷயங்களைப்பற்றி அந்த முதலியாரிடத்தில் நான் பேசுவதுண்டு. என்னுடைய மனப்பாங்கு மிகவும் விசாலமடைந்து வருகிறதென்று நினைக்கிறேன். இந்த உபதேசம் வீண்போகக்கூடாதென்று மிகவும் கஷ்டப்பட்டு இதை எழுதினேன். வேறு உபதேசங்களும் சில இருக்கின்றன. அவற்றைமெதுமெதுவாய் எழுதி மெல்ல அனுப்புவேன். அன்பர்கள் வாசித்துப் பார்த்து நீதிகைக்கொள்ள வேண்டுமென்பதே என் வேண்டுகோள். பிழைகளிருந்தால் தெரிந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

---

## விஸ்வகர்மன் வாழ்த்து

தர்மநெறி யானநிலை தான்காட்ட வந்தவிஸ்வ
கர்மனெனு ஞானக் கதிரவனே—நிர்ணயமாய்க்
கைப்போதுற் றேநமது கண்ணாளர் தம்மிடமே
எப்போதும் வாழ்க விருந்து. (1)

காசினியோங் கும்விஸ்வ கர்மன்நல் பத்திரிகை
ஆசிரியர் வாழ்கமிக வன்புடனே—நேசிக்குஞ்
சந்தாதா ரர்வாழ்க தக்கசெல்வ பாக்யகுண
சந்தான முற்றுவாழ்க தான். (2)

மதுரகவி புதுவை-நடராஜ ஆச்சாரியார்.





## விவாக சம்ஸ்காரமும் மந்திரங்களும்

(காலஞ் சென்ற திவான்பகதூர் R. ரகுநாதராயர் ஆங்கிலத்தி லெழுதியதை அனுசரித்து மிஸ்டர் A. மாதவய்யாவால் தமிழில் எழுதப்பட்டது.)

விவாக சம்ஸ்காரத்தின் மேன்மையையும், ஜன்ம பலனை அடைவதற்கு அதைச் செவ்வையாய் நடத்தவேண்டியதின் முக்கியத்தையும், நமது முன்னோர்கள் தெளிவாய் அறிந்திருந்தார்கள் என்பதை, நாம் இன்றைக்கும் விவாக காலத்தில் கூறும் வேதமந்திரங்களே உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகின்றன. இந்த நாளிலே பண வரும்படியையும் ஆடம்பரத்தையுமே முக்கியமாகக் கருதி, உச்சரிக்கும் மந்திரங்களின் அர்த்தத்தை முற்றும் மறந்து, சீர், நலுங்கு, ஊர்கோலம், பந்தல், பல்லக்கு மேளம், நாட்டியம், பாட்டு, விருந்துச் சாப்பாடு இவற்றின் சிறப்பையும் பெருமையையுமே மனமகிழ்ந்து பாராட்டி, நாலிரண்டும் அறியாத சிறு பெண்களைக் கைப்பிடித்து, பழைய வேதமந்திரங்களையுமே உச்சரித்து நாம் நடத்தும் பொம்மைக் கலியாணங்களே, இந்த விஷயத்தில் நமது மூடத்தனத்தை நன்றாய் ருசுப் படுத்துகின்றன.

இந்த விஷயத்தில் ஏழைகளைப் போலவே தனவான்களும், மூடர்களைப்போலவே கற்றுத் தேர்ந்த பெரியோர்களும், கீழ்சாதியாரென்று தாம் இகழுவோரினும் அதிகமாக மேல் சாதியாரும் கண்மூடித்தனமாய் நடப்பது, "பணமென்றால் பிணமும் கண்ணை விழிக்கும்" என்னும் பழமொழியின் உண்மைக்கும் நம்மவர் டம்பப் பிரியத்துக்கும் ருசுவாகின்றது. விவாக விஷயத்திலே, கீழ்ச்சாதியார் (Depressed Classes) பள்ளர் பறையரல்ல; பிராமணர்களே. மனிதர் கூட்டுறவுக்கு இன்றியமையாத ஆசாரங்களில் முக்கிய மானதும், நாகரீகச் சிறப்புக்கு மூலாதாரமானதுமான விவாக ஸம்ஸ்கார விஷயத்திலே, அறியாதாருக்கும் கீழோருக்கும் தாமே முன் மாதிரியாக நடந்து வழிகாட்ட வேண்டிய மேல்சாதியோரே, இவ்வளவு கண்மூடித்தனமாய் பல தலைமுறைகளாக நடந்துகொண்டு வந்திருக்கும்பொழுது, நமது தாய் நாட்டின் தாழ்ந்த நிலைமைக்கு வேறு காரணமும் தேடவேண்டுமோ? நமது முன்னோர்களின் கொள்கைப்படி,

விவாக ஸம்ஸ்காரத்தின் சிறப்பை, நாம் இப்பொழுதும் உச்சரிக்கும் மந்திரங்களைக்கொண்டே சிறிது [illegible]

விவாக மந்திரங்களெல்லாம், நமது பிராசீன வழக்கப்படி, வேதாத்தியயனம் செய்து, வர்ணாச்சிரம தர்மத்தை ஒன்றின்பின் ஒன்றாக அநுஷ்டிக்க முயலும் வேதவித்துக்களுக்கு ஏற்பட்டனவேயன்றி, நமது தற்காலப் படிப்புக்கும் விருத்திகளுக்கும் ஏற்பட்டனவல்ல. பின்வரும் விசாரணையில் இதை மறக்கக் கூடாது.

ஸ்நாதக விரதம்—உபநயநமானது முதல் ப்ரும்மசரிய விரதத்தை அநுஷ்டித்து, வேதாத்தியயனம் செய்து முடித்த ஒருவன், கிருகஸ்தாச்சிரமத்திலோ ஸந்யாச ஆச்சிரமத்திலோ பிரவேசிக்கு முன்பு, பெரியோர் அநுமதியைப் பெற்று, ஸ்நாதக விரதத்தைக் கைக்கொள்கிறான். அந்த ஸ்நாதகன், தன் வித்தியாப்பியாசத்தைப் பூர்த்திசெய்து கொள்ள நினைத்து, காசி யாத்திரை புறப்படுகிறான். அப்பொழுது அவனுக்கு 20-25 வயதிருக்கலாம். அவன் வழியிலே சில பிராமணோத்தமர்களைச் சந்தித்துத் தன் உத்தேசத்தைக்கூற, அவர்களில் ஒரு பிராமணன், "எனக்கு ஒரு அழகான கன்னிகை இருக்கிறாள்; அவளை உனக்கு விவாகஞ் செய்து கொடுக்கிறேன். நீ அவளுடன் சேர்ந்து கிரகஸ்தாச்சிரமத்திலிரு. என் வீட்டுக்குவா" என்று சொல்கிறான். ஸ்நாதகனுடைய யௌவன வயதையும், கன்னிகை ரூபவதியென்றும் அவனுடன் சேர்ந்து அக்நிஹோத்திரம் முதலிய கிருககிருத்தியங்களை நடத்தத்தக்கவளென்றும் கூறுவதையும் கவனித்தால், கந்நிகை பக்குவ வயதாகித் தக்க வயதையடைந்தவள் என்பது நிச்சயமாகிறது.

தன் படிப்பை ஸம்பூர்ணஞ் செய்ய நினைத்து காசிக்குச்செல்லும் 25-வயதுள்ள காளை யொருவனை வழிமறித்து, ஒன்றும் அறியாத ஒரு சிறு பெண்ணை அவனுக்குக் கொடுத்து, அது முதல் அந்தப் பெண்ணைப் பேணிவளர்ப்பதையே அவன் வேலையாக யாராவது செய்வார்களா? அவன் தான் ஒப்புக்கொள்வானா? இவ்வாறு நடந்த வாய்ப்பேச்சு, பின்பு பெண் வீட்டில் நிச்சயமாகித் தாம்பூலமும் வழங்கப்படுகிறது. உடனே விவாக ஸம்ஸ்காரம் தொடர்ந்து மேல் நடத்தப்படுகிறது. தன் மாமனாரால் உபசரிக்கப்பட்ட மாப்பிள்ளை, தன் விவாகத்தை நிறைவேற்ற நினைத்து, அதைப்பற்றி ஸங்கல்பம் செய்து கொள்ளுகிறான். இந்த ஸங்கல்பததாலே, அவன், "தர்ம ஸம்பத்தையும், பிரஜாஸம்பத்தையும் அடையும்பொருட்டு, இந்த ஸ்திரீயை நான் இப்பொழுது கலியாணம் செய்துகொள்வேன்" என்று சொல்கிறான்.

ஆகவே, விவாகத்தின்கருத்து, தர்மத்தை ஸம்பாதிப்பதும், பிள்ளைப் பேற்றை அடைவதுமே என்பது நமது முன்னோர் கொள்கை. மணமகன் இவ்வாறு நிச்சயிக்கவே, பெண்ணின் தகப்பனும் ஸங்கல்பம் செய்துகொண்டு தன் மகளையும் அவள் கணவனாகப் போகிறவனையும், லக்ஷ்மியும் நாராயணனுமாக மதித்து, மணமகனைப் பலவிதமாக உபசரித்து, நற்குணமும் கிரகஸ்தாசிரமத்தை வகிக்கும் சக்தியுமுள்ள "ஸாத்வி" யாகிய தன் மகளை, சுசீலனும் சுத்தி மானுமாகிய அந்த மணமகனுக்குக் கந்நியாதானம் செய்து கொடுக்கும்பொழுது, "விவாகமாகாதவளும், யௌவன ரூபலாவண்யங்களால் பிரகாசிப்பவளும், பதிவிரதா தர்மத்துக்கேற்றவளுமான இந்த என்மகளை நற்குணமும் நல்லறிவுமுள்ள உனக்கு தர்மார்த்த காமங்களை, நீ அடையும் பொருட்டு, பரிசுத்த ஆத்மாவாகிய நான் கொடுக்கிறேன்" என்று சொல்கிறான்.

தக்கவயதும், அறிவும், யூகமும் உள்ள பெரிய பெண்ணையன்றி, ஒரு சிறு பெண்ணை 'ஸாத்வி' என்று கூறி, இவ்வாறு அறம் பொருள் இன்பங்களை அடைதற்கு ஏற்றகருவியாக யாராவது கொடுப்பார்களா? பின்பு, பெண்ணைப்பெற்று வளர்த்த பிதா, தன் மாப்பிள்ளையிடத்தில் மூன்று முறை, ஒருவாக்குக் கேட்கிறான். அதாவது, "தர்மார்த்த காமங்களை நீ தேடுவதில், இவளுக்குப் புறம்பாக இவளை மீறி நீ நடக்கக்கூடாது," என்பதே. "நான் இவளுக்குப் புறம்பாக நடக்கமாட்டேன்," என்று மணமகனும் மூக்காலும் மூன்றுதரம் வாக்குக் கொடுக்கிறான். மணமகனும் மணமகளுஞ் சேர்ந்து, "நாம் இருவருமாக யஞ்ஞங்களைச் செய்து ஸந்ததியையும் பெறுவோம்," என்று ஸங்கல்பம் செய்து கொண்டபிறகு, ரக்ஷாபந்தனம் கட்டப்பட்டிருக்கிறது. அது முதல் ஸமாவேசனம் (அதாவது, தம்பதிகள் சரீர சம்பந்தம்) நிறைவேறும் வரை, அவர்களை அசுத்தி தீட்டு ஒன்றும் பாதிக்காது. மணமகன், கீழே வரும் மந்திரங்களைப் பின்பு நடக்கும் கிரியைகளின் இடையிடையே, அந்த மணப்பெண்ணைப் பார்த்துக் கூறுகிறான்:—



"அதற்குப் பிறகு, நீ உன் சரீரத்தை உன் நாதனாகிய என் சரீரத்துடன், சேர்க்கவேண்டும்."

"நீ, என் வீட்டுக்கு வா; அதற்கு யஜமானியாயிரு; அங்கிருப்பவர்களை அடக்கி ஆள்வாயாக; யஞ்ஞாதி கிரியைகளுக்கு வேண்டியபடி கட்டளையிடுவாயாக."

"நீ, முதலில் ஸோமனுக்குள்ளாக இருந்தாய்; பின்பு, கந்தர்வனுக்குள்ளாக இருந்தாய்; பின்பு, அக்நிக்குள்ளாக இருந்தாய்; மனுஷஜன்மமாகிய நான் உனக்கு நான்காவது நாதன். ஸோமன் உன்னை கந்தர்வனுக்குக் கொடுத்தான்; கந்தர்வன் அக்நிக்குக் கொடுத்தான். அக்நியோ, நான் ஸம்பத்தையும் ஸந்ததியையும் அடையும்படி எனக்கு உன்னைக் கொடுத்திருக்கிறான்."*

ஸப்தபதி மிதிக்கும்பொழுது, மணமகன், அவள் கையைப் பிடித்துக்கொண்டு:—"நல்ல புத்திரப்பேற்றை யடைவதற்காக, நான் உன் கையைப் பிடிக்கிறேன்; உன் ரக்ஷகனாகிய என்னுடன், நீ, வயது முதிர்ந்து பலவீனமாகும் வரையும் வாழ்வாயாக," என்கிறான். "ஏழடியும் மிதித்தாய் விட்டது; நீ என்னைச் சேர்வாயாக; ஆம்! ஏழடிகளையும் சேர்ந்து மிதித்து, நாமிருவரும் பங்காளிகளாகிவிட்டோம்; உன் சேர்க்கையை நான் பெற்றுவிட்டேன்; உன்னைப்பிரிந்து, இனி என்னால் வாழமுடியாது; என்னைப்பிரிந்து நீயும் வாழாதே; நாமிருவரும் சேர்ந்து வாழ்ந்து, ஒரே மனதோடும், பரஸ்பர காதலோடும் வாழ்வோம்; ஒருவருக்கொருவர் ஆநந்தத்துக்கு ஆஸ்பதமா யிருப்போம்; அந்நியோந்யத்தோடு, ஆகாராதி போக யோக்கியங்களைப் பகிர்ந்தநுபவித்துக்கொண்டு கூடி வாழ்வோம்; உன் மனதையும், செயல்களையும், இந்திரியங்களையும், என்னுடைய மனது செயல் இந்திரியங்களுடன் ஒன்றுசேர்த்துவிடு." "நீ, ரிக்; நான் ஸாமம்; நீ, ரிக்; நான் ரேதஸ், நீ க்ஷேத்திரம்; நான் மனசு, நீ, வாக்கு; நான் ஸாமம்; நீ, ரிக்; நீ, இப்படியிருக்க, மதுரமானவளே; பரிசுத்தமானவளே!"

"புத்திரர்களையும், செல்வத்தையும் ஸந்ததியையும் பெறும்படி என்னை வந்து சேர்வாயாக?"

இவ்வாறு, ஸப்தபதி நிறைவேறிய பின்பு, மணமகன் ப்ரதானஹோமத்தைச் செய்கிறான். முதலில், தனக்கு அந்தப் பெண்ணை வளரச்செய்து, அழகாக்கி, பக்குவப்படுத்தி அளித்த ஸோமன், கந்தர்வன், அக்னி, ஆகிய மூன்று தேவர்களுக்கும், தன் நன்றியறிவைக்காட்டி ஆகுதிசெய்கிறான். பின்பு தன்னுடன் ஸப்தபதி மிதித்து, மனதினால் தன்னுடன் கலந்து, கந்நிப்பருவத்தை இழந்து விட்டவளாகிய அந்தப் பெண்ணை, 'தன்வீட்டில் ஸ்திரமா யிருத்தும்பொருட்டும், அவளுக்கு ஐசுவரியத்தையும், பத்துப் புத்திரர்களையும் கொடுக்கும்படிக்கும், அவள் மடியில் குழந்தைகள் விளையாடும் ஆநந்தத்தை அவள் அடையும்படிக்கும், அவள் சரீரமும் அவயவங்களும் புஷ்டியையும் அழகையும் பெறும்படிக்கும், அவள் துக்கங்களை ஒரு பொழுதுமே தெரியாமல் வாழும்படிக்கும் செய்ய சூரியன், இந்திரன், அக்நி, முதலிய தேவர்களைப் பிரார்த்திக்கிறான்.'

பின்பு, இருவரும், அவள் பிதா கொடுத்த ஸ்திரீதனங்களை யெடுத்துக்கொண்டு, தங்கள்வீடு, அதாவது புருஷன் வீட்டுக்குப் புறப்படுகிறார்கள். மணமகன் வீட்டை யடைந்தவுடன், கிருகப்பிரவேச ஹோமம் அங்கே நடத்தப்படுகிறது. அப்பொழுது, "தந்தைகொடுத்த பசுக்கள் குதிரைகளுடன், நம்முடைய வீட்டுக்கு வந்திருக்கிற என் பிரியமுள்ள மனைவியாகிய இவள், என்னுடன் தீர்க்காயுசாய் வாழட்டும்; அநேகம் குழந்தைகளைப் பெறட்டும்; நூறுண்டளவு கிரகாக்கினியைப் பேணிக்கொண் டிருக்கட்டும்."

"......மண மகளே! பிரகஸ்பதி உன்னை எனக்குக் கொடுத்திருக்கிறார். நான் உன்னைக் காப்பாற்றுவேன்; நீ எப்பொழுதும் என்னையே நினைந்து கொண்டிரு; என்னுடன்சேர்; பிள்ளைகளைப் பெறு; தீர்க்காயுசாயிரு... ......உன் தேகத்தை, உன் நாயகனாகிய என் தேகத்துடன்சேர்"......என்று சொல்கிறான்.

பிரவேச ஹோமத்துக்குப்பின், தம்பதிகள் இருவரும்

* இதன் கருத்து.—ஸஸ்யாதிபதியாகிய ஸோமன் உன்னைக் குழந்தைப் பருவத்திலே வளரச்செய்தான்; பின்பு, கந்தர்வன் உனக்கு ஸ்வர ஸம்பத்தைக் கொடுத்து, உன் தேகத்தை அழகுபெறச் செய்தான்; பின்பு, அக்நி, உன்னை ருதுவாகும்படி செய்தான்; அப்புறம், அவன், நீ ஸந்ததியைப்பெறும்படி, உன்னை எனக்குக் கொடுத்து விட்டான்; என்பதே.

குறைந்தது மூன்றிலோ, அல்லது தங்கள் சக்திக்கும் சற்புத்திரனைப் பெறும் அபிலாஷைக்கும் ஏற்றபடி ஒரு வருஷம்வரையுமோ, சரீரப்புணர்ச்சியில்லாமல் ப்ரும்மசரிய விரதத்தை அநுஷ்டிக்கவேண்டும். அந்தத்திரிராத்திரவிரத காலத்தில், இருவரும் ஒரு படுக்கையிலேயே சயனித்துக்கொள்ள வேண்டும்; அவர்களுக்கிடையே, கந்தர்வன் படுத்திருப்பதாக ஐதீகம். மூன்றிரவு கழிந்ததும், மணமகன், நடுவே கிடந்த கந்தர்வனைப் பார்த்து:—

"ஏ விஸ்வவாஸு! நீ, எங்கள் படுக்கையை விட்டெழு. உன் உதவியை வேண்டும் ஒரு சிறு பெண்ணைத் தேடிப்போ. என் மனைவியாகிய இந்த மணப்பெண்ணை எனக்கு விட்டுவிடு; அவள் என்னுடன் சேரட்டும். தன் தந்தை வீட்டிலேயே இருக்கும் பக்குவமாகாத ஒரு பெண்ணை நீ தேடிக்கொள்: அப்படிப்பட்ட பெண்தான் உனக்குரியவள்..." என்று பிரார்த்திக்கிறான். [அப்புறம், ஸ்திரீ புருஷ ஸம்ஸர்க்கத்துக்கு முன்பு, ஸேஷஹோமம் நடக்கிறது. தேவர்களெல்லாம் ஆகுதிகளால் திருப்திசெய்யப்படுகிறார்கள். அப்பொழுது, அந்த மணமகள் தன் கணவனைப் பார்த்து.-

"தபசிற் பிறந்து தபோநிதியை உடையவரே! உமது மனதில் இப்பொழுதுள்ள எண்ணத்தை நான் அறிவேன்; என் மனதையும் நீர் அறிவீர். இங்கே, என் வீட்டிலே எனக்குப் புத்திர சம்பத்தையும், ஐசுவரியத்தையும் அருள் செய்யும்; புத்திரர்களை விரும்பும் நீர், உம்முடைய புத்திரனில் திரும்பியும் பிறவும்" என்கிறாள். அதற்கு மணமகன்:—"உன் மனதிலுள்ளதை நான் அறிவேன்; ருது பருவத்திற் கருத்தரிக்க நீ விரும்புவதையும் நீ என்னையே நினைத்துக் கொண்டிருப்பதையும், நான் அறிந்து ஸந்தோஷப்படுகிறேன். நீயோ பால்ய ஸ்திரீ; யுவதி; புத்திரனைப் பெறவிரும்பும் நீ,......என்னை அநுபவிப்பாயாக." என்று சொல்லி, அவள் வலது தோளின் மேல் தன் வலதுகையைபபோட்டு, அவளை அணைத்துக்கொண்டு, காணும் தன் மனைவியும் ஸந்தோஷமாய்க் கூடி, ஸத்புத்திரனைப் பெற்று, ஸர்வ சௌபாக்கியங்களுடனும் வாழும்படி தேவர்களைப் பிரார்த்திக்கிறான். பின்புள்ள மந்திரங்களும் கர்ப்பாதான மந்திரங்களும், ஸ்திரீ புருஷ ஸம்ஸர்க்கத்தையும், கருத்தரிக்கும் விதத்தையும்ஸ்பஷ்டமாய்விவரிப்பனவாயிருக்கின்றன

இதுவரையும் மொழிபெயர்க்கப்பட்ட மந்திரங்களே தக்க வயது வந்து யுவதிகளாயில்லாத பெண்களுக்கு விவாக ஸம்ஸ்காரம் பொருந்தமாட்டாதென்பதையும், ப்ரௌடா விவாகமே நமது முன்னோர்கள் அனுஷ்டித்ததும் இம்மந்திரங்களின் கருத்தும் என்பதையும் நன்றாய் விளக்கும். ஆகவே, பச்சை பச்சையாகக் கூறும் மந்திரங்களை மொழி பெயர்த்து, இப்பொழுது நடக்கும் விவாகங்கள் வேதோக்தமானவையல்ல, அர்த்தமில்லாத பொம்மைக் கலியாணங்களே என்பதை இன்னும் ருசுப்படுத்துவது அவசியமில்லையென்று நினைக்கிறேன். பதினைந்து பதினாறு வயதுக் குட்பட்ட எந்தச் சிறு பெண்ணுக்காவது, இந்த மந்திரங்களின் சாராம்சமும், விவாக ஸம்ஸ்காரத்தின் கருத்தும் மகிமையும் அர்த்தமாகுமா என்று யாவரும் ஆலோசிக்க வேண்டும்.

நாம் இப்பொழுது நடத்தும் பால்யவிவாகம் முற்றிலும் தப்பென்றும் நம் முன்னோர்கள் ப்ரௌடா விவாகமே செய்து வந்தார்களென்றும், இந்த மந்திரங்கள் நன்றாய் விளக்குவதுமன்றி, வேத சாஸ்திர புராணங்களில் அங்கங்கே கூறப்படும் விருத்தாந்தங்களினாலும் வெளியாகும். மகமதியர் போன்ற பிற நாட்டார், நம்மேல் படையெடுத்து வந்து, யுத்த காலங்களில் பெண்களை யழித்துக்கெடுத்ததை ஒருவாறு தடுக்கும்பொருட்டே, சிசு விவாகம் ஏற்படுத்தப்பட்டது என்பது கற்றோர் சிலர் அபிப்பிராயம். மகமதியர் வேதமாகிய குரான் ஆக்ஞைபபடி, விவாகமாகி ஒருவனுக்கு மனைவியாயிருக்கும் பெண்ணை மற்றொருவன இச்சிக்கக்கூடாதாம்; அப்படிக்கின்றி, விவாகமாகாமலிருக்கும் பெண்களை இச்சிக்கலாமாம்; இந்த விதிவிலக்கை நம்மவர்கள் அறிந்தவுடன், அதுபால்யத்திலேயே பெண்களுக்கு ஒரு தாலியைக் கட்டிவிடுவதே உத்தமமென்று நினைத்து, இந்த வழக்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள் போலும். இபபொழுது, ஆங்கிலேயர் ஆட்சியிலோ, அவ்வித அக்கிரமம் எவராலும் செய்யமுடியாது; அப்படிப்பட்ட கஷ்டகாலம் இனி நமக்கு நேரிடவும் செய்யாது. பால்யவிவாகத்தால் நேர்ந்துவிட்ட கஷ்ட நிஷ்டூரங்களுக்கோ கங்குகரையில்லை. சீக்கிரம் இந்தத் தீயவழக்கத்தை நிறுத்தி, நம் முன்னோரது பழைய நல்வழக்கமாகிய ப்ரௌடா விவாகத்தை யாவரும் அநுஷ்டிப்பதே, இனி நாம் கடைத்தேறிப் பிழைக்கும் வழியாகத் தோன்றுகிறது. புத்திமான்களும், தேசாபிமானிகளும், இதைப்பற்றி ஆலோசித்து, தக்க ஏற்பாடுகள் செயவாராக.

ஈ-மி.



## பொன் விளைவு

உலகில் பொன் விளைந்த வரவுசெலவுக் கணக்கை நியூயார்க் இஞ்சினீயரிங் மைனிங் ஜெர்னல் வெளிப்படுத்தியிருக்கிறது. விசேஷமாய்ப் பொன்விளையும் டிரான்ஸ்வால், ரொடேஷியா முதலாக ஆஸ்ட்ரலேஷியா ஈறாகவுள்ள தேசங்களில் 1911-ம் வருஷம் மொத்தம் 91,875,461-பவுனும் 1912-ல் மொத்தம் 94,866,653 பவுனும் மதிப்புள்ள பொன் விளைந்திருக்கிறது. 1913-ல் உலகத்தில் பொன் எடுக்கப்பட்ட பிரதேசங்களும் மதிப்பும் பின்வருமாறு:—

டிரான்வாலில் 36,470,200 பவுன், ரொடேஷியாவில் 2,835,920 பவுன், மேற்கு ஆபிரிக்காவில், 1,657, 720 பவுன், மடகாஸ்கரில் 603,000 பவுன், யுனைடெட்ஸ்டேட்ஸில் 17,660,204 பவுன், மெக்ஸிகோவில் 3,500,000 பவுன், கானடாவில் 3,060,000 பவுன், மத்திய அமெரிக்காவில் 789,000 பவுன், சைபீரியா உட்பட ஐரோப்பாவில் 7,108,000, பவுன், பிரிடிஷ் இந்தியாவிலும் ஈஸ்ட் இண்டீஸிலுமாக 3,400,000, பவுன், ஜப்பான் சைனாவில் 2,200,000 பவுன், தென் அமெரிக்காவில் 2,595,000 பவுன், ஆஸ்டிரேலியாவில் 10,783,490 பவுன்.

1913-ம் வருஷத்தில் கிடைத்த பொன்னானது 100-க்கு 23-குறைவாக இருக்கிறது. டிரான்ஸ்வாலில் இப்பொழுதுதான் முதல்தடவை பொன்விளைவு குறைந்திருக்கிறது. ஏனெனில், கோடைகாலத்தில் வெள்ளையர்களாகிய பொன் சுரங்கக்காரர்கள் வேலை நிறுத்தஞ் செய்ததே காரணம். ரொடேஷியாவிலும் மேற்கு ஆப்பிரிக்காவிலும் கிடைத்த பொன் தொகை சற்று அதிகரித்திருக்கிறது. யுனைடெட் ஸ்டேட்ஸில் 1911-ம் வருஷத்தைக்காட்டிலும் 1913ல் குறைவு. மெக்ஸிகோ தேசத்தில் ராஜாங்க மாறுதல்களினாலுண்டாகிய தொந்தரவுகளினால் 1911-ம் வருஷத்தைப்[illegible] டிலும் 15-லட்சம் மதிபபுள்ள பொன் குறைவாய் விட்டது. 1913-வது வருஷத்தோடு முடியும் 3-வருஷங்களில் கிடைத்த பொன்னின் மதிப்பின் விபரம்:— 1911-ம் வருஷம் 91,875,461. 1912-ம் வருஷம் 94,866,653. 1913-ம் வருஷம் 92 662,534.

---

## மொஹரம் பண்டிகை

மகமது என்பவர் மகமதியமத தீர்க்கதரிசிகளில் தேவ அம்சம் பொருந்தியவர். இவரை இரட்சகராகப்பாவித்து மகமதியர்கள் தொழுதுகொண்டு வருகிறார்கள். இவருக்கு பீபீபத்திமா என்கிற ஒரு புத்திரியும் இமாம் அசேன் இமாம் உசேன் என்கிற இரண்டு பேரப் பிள்ளைகளும் இருந்தார்கள். இவருடைய மருமகன் பெயர் அகஜரத் ஆலி. இவர் மகா வல்லமை சாலியும் தெய்வபக்தியு முள்ளவர். மகமது, பீபீபத்திமா, அகஜரத் ஆலி, அசேன், உசேன் என்கிற ஐவரும் தேவ அம்சம் பொருந்தியவர்களாகையால், இவர்கள் ஐவரையும் ஐந்து விரலாகச் செய்து அல்லாவென்று பெயரிட்டு மொஹரம் பண்டிகை கொண்டாடுகிறார்கள். மகமது அரேபியா தேசத்திலுள்ள கெர்பாலா என்னும் ஊரில் வசித்து வந்தார். இவர் இறந்து 30-வருஷகாலமாக அஜரத் அபூபேக்கர், அஜரத் ஊமர், அஜரத் உஸ்மான், அஜரத் ஆலி என்னும் [illegible] வொருவராக ஆண்டு வந்தார்கள். அஜரத் ஆலி ஆண்ட காலத்தில் மகமதுவின் சிஷியர்களில் ஒருவராகிய மவுலியா சாகிப், கெர்பாலா என்னும் ஊரின் பேரில் படை எடுத்து வந்த அஜரத்து ஆலியையும் இமாம் அசேனையும் கொலை செய்துவிட்டு தான் அரசாண்டு வந்தார். அப்போது இமாம் உசேன் மெக்காவில் வசித்துவந்தார். மவுலியாசாகிப்பு இறந்துவிடவே அஜரத் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் இமாம் உசேனுடைய தாயாதியும் தெய்வபக்தியு முள்ள அஜரத் மஸ்லீமும் இவருடைய இரண்டு சிறு பிள்ளைகளும் கொல்லப்பட்டார்கள். இந்தக் கொலை நடந்தது மொஹரம் பண்டிகை 7-வது தினம். இந்த தினத்தில் காண் மார் [illegible] கொள்ளுவது. பிறகு, இமாம் உசேனுக்கும் அஜரத்துக்கும் யுத்தம் நேரிட்டு இமாம் உசேனுடைய தலை [illegible]மாக்கப்பட்டது. இந்த தினம் மொஹரம் பண்டிகை 10-வது நாள். [illegible]ாக இரத்தமழை பெய்தது. தேவ லோகத்திலும் பூ[illegible] வாழ குரல் சப்தமாகவே இருந்தது. கும்மட்டம் என்பது சவப் பெட்டி. இந்த சவப்பெட்டியில் தான் இமாம் உசேனுடைய சவம் வைக்கப்பட்டு கல்லறைக்குக் கொண்டு போகப்பட்டது. இந்த தினத்தில் தான் அல்லாசாமி தண்ணீரில் விழுகின்றது என்று சொல்லுவது.

## பாக சாஸ்திரம்

**கலவை வடாம்.**—நெற்பொறி ½-படி; அவல் ½-படி; முட்டைபபொரி ½-படி-இம்மூன்றையும் கொஞ்சநேரம் ஜலத்தில் ஊறவைத்து ஜலத்தை வடித்து எடுத்துக்கொண்டு ஈயப்பூச்சுள்ள பாத்திரத்திற் போட்டு, அவற்றோடு நறுக்கின பச்சைமிளகாய் 1-பலம்; நறுக்கின கொத்துமல்லி 1-பலம்; அரிசி போல் நறுக்கின வாழைத்தண்டு 2-பலம; பூசணிக் காய்த் துருவல் 3 பலம; தோலெடுத்த எள் 6-பலம்; காரப்பொடி 2-பலம்-இவற்றை யெல்லாம் சேர்த்து கொஞ்சம் சுத்த ஜலத்தை விட்டுப் பிசைந்து மேற் சொல்லியபடி வடாமிட்டு உலர்த்தி உபயோகிக்க வேண்டியது.

**பூசணிக்காய் கருவடாம்.**—கால்படி வெண்மையான உளுத்தம்பருப்பை ஒருராவிரவு ஜலத்தில் ஊற வைக்கவேண்டியது. அப்பொழுதே, பெரும் பூசணிக் காய்த் துருவலில் 10-பலம் எடுத்து ஓர் துணியில் முடிப்புக்கட்டி ஒரு பலகையின்மேல் வைத்து மேலே ஒரு பலகையை வைத்து அதன்மேல் பளுவுபோட்டு வைக்கவேண்டியது. மறுநாள் விடிய, டை பருப்பை வெண்ணெய்போல் அரைத்து, அதனோடு பூசணிக் காய்த் துருவலைச் சேர்த்து கலந்துகொள்ளவேண்டும். ஒரு பலம் மிளகாய், அரையரைக்கால் பலம் காயம், ஒன்றரைப்பலம் உப்பு இம்மூன்று வஸ்துக்களையும் இடித்து, அரைக்கால் பலம் சீரகத்தையும், பொடியாய் நறுக்கிய அரைபலம் பச்சை மிளகாயையும் சேர்த்து எல்லாவற்றையும் மேற்படி பூசணிக்காய்த் துருவல்கலந்த மாவில் போட்டு செம்மையாய் அரைத்து முன் கூறியுள்ளபடி வடாமிட்டு உபயோகிக்க வேண்டியது. இந்த வடாத்தைப் பொரித்து கூட்டு குழம்புகளிலும் உபயோகிப்பதுணடு.

**வெந்தய மாங்காய்**—நன்றாய்த் தேறிய புளிப்புள்ள பெரிய 100-மாங்காய்களை யெடுத்து, அவற்றில் ஒவ்வொன்றையும் எட்டு[illegible]களாக கொட்டை [illegible]யெடுட்டி, கொஞ்சம் சுத்த ஜலத்திற் போட்டு நன்றாகக் கழுவி எடுத்து ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு வீசை மிளகாய், 7½-பலம் மஞ்சள், இரண்டரைபடி உப்பு இம்மூன்றையும் நன்றாக உலர்த்தி வெவ்வேறாக குங்குமம்போல் பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பலம் நல்லெண்ணெயில் 8-பலம் வெந்தயத்தைச் சிவக்க வறுத்துக்கொண்டு அதனோடு 2-பலம் காயத்தைப் போட்டு இடித்து பொடியாக்கி மேலே சொல்லிய மூன்றுவிதப் பொடிகளுடன் சேர்த்து ஈயப்பூச்சுள்ள தாம்பாளத்தில் போட்டு, அதில் அரைவீசை நல்ல எள்ளெண்ணெயை ஊற்றி நன்றாகக்கலந்து வைத்துக்கொண்டு, மாங்காய்த் துண்டுகளைச் சிற்சிலவாக எடுத்து காரத்தை நன்றாகக் கலந்து கற்சட்டியிலோ ஜாடியிலோ போட்டு அதின் வாயை துணியினால் மூடி, மேலே பளுவானதோர் பலகையையாவது பாத்திரத்தையாவது வைக்கவேண்டும. மூன்றுநாள்களுக்கப்பால் கிளறிக்கொடுத்து குலுக்கி வைத்து பத்து நாள்களுக்கப்பால் உபயோகிக்கலாம்.

**கடுகு மாங்காய்.**—அரைபடி கடுகுப்பொடி, ஒருபடி மிளகாய்ப்பொடி, கால்படி மஞ்சள்பொடி, இரண்டுபடி உப்புப்பொடி இவற்றை நன்றாக உலர்த்தி எடுத்துக்கொண்டு இரண்டுபலம் காயத்தை நன்றாய் நசுக்கித் தூளாக்கிபபோட்டு இவற்றோடு அரைவீசை நல்லெண்ணெயைக்கலந்து, முன் சொன்ன மாதிரியாக வெட்டி வைத்துக்கொள்ளப்பட்ட மாங்காய்த் துண்டுகளோடு தனித்தனியாக நன்றாய்ச் சேரும்படி கூட்டி ஜாடியில் வைக்கவேண்டியது. அப்படி வைக்கும்போது, கால்படி வெந்தயம் (பச்சை), கால்படி கடலை (பச்சை) இவற்றைக் கலந்து, ஜாடியிலிருக்கும் மாங்காயில் இடையிடையே தூவவேண்டியது. இப்படித் தூவித் தூவி காரஞ்சேர்ந்த மாங்காயை ஜாடியில் அடுக்கிய பிறகு, ஒருவீசை நல்லெண்ணெயை ஜாடியிலுள்ள ஊறுகாயின்மீதெலாம் நன்றாய்ப் படியும்படியாக மெதுவாய் ஊற்றி, ஜாடியின் வாயைக்கட்டி, முன் சொன்ன மாதிரியாகவே பத்திரமாய் மூடிவைத்துக் குலுக்கிக் கொண்டுவரவேண்டும். ஒரு மாதத்திற்கப்பால் உபயோகிப்பதே நல்லது. இவ்வித மாங்காய் ஊறுகாய் முதன்முதல் ஆந்தரதேசத்திற் போடப்பட்டதென்று சொல்லப்பட்டபோதிலும், இப்போது தென்னாடு முழுவதும் சாதாரணமாய்ப் போடப்பட்டுவருகிறது. இது மிகவும் ருசியாயிருப்பதுடன் தேகாரோக்கியத்துக்கு ஒத்ததாயிருக்கிறபடியால் அதிகமாய்ச் செலாகிக்கப்பட வேண்டிய குணங்கள் பொருந்தியிருக்கின்றது இவ் ஊறுகாயுள்ள குடும்பங்களில் பதார்த்தக் கறிகளைப் பற்றிய கவலை அதிகமா யுண்டாவதில்லை.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1915ஆு நவம்பர்மீ [சஞ்சிகை 2

## ஒளிவளர் விளக்கு.

1915ஆு அக்டோபர் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை 416.

***

பம்பாய் நகரின் ஒரு பாகமாகிய பைகல்லாவிலுள்ள இத்தொழிற் சாலையில் 209 சிறந்த இந்தியத் தொழிலாளிகள் சேர்ந்து வேலைசெய்து வருகிறார்கள். பலவிதமான ரணவைத்திய சிகிச்சைக் கருவிகள் அவர்களால் செய்யப்படுகின்றன. உலகத்திலுள்ள சிறந்த சாலைகளில் இதுவும் ஒன்றென்று சொல்லப்படுகிறது.

***

கோலார் டிப்டி கமிஷனராய் நெடுநாளாக இருந்து காலஞ்சென்ற மிஸ்டர் சுப்பாராவ், சமஸ்கிருதப் படிப்பில் ஏற்கெனவே தேர்ச்சியடைந்த வித்வான்கள் இங்கிலீஷையும் படிக்க ஆவலை யுண்டாக்குவதற்காக ஸ்காலர்ஷிப் கொடுத்துவரும்படி 10,000 ரூபாய் நன்கொடை செய்தார், இப்பொழுது மைசூர் சமஸ்தானத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருக்கும் அவருடைய குமாரர் திவான்பகதூர் C. ஸ்ரீ கண்டேஸ்வர அய்யர் B. A, B. L., மேற்கண்ட நன்கொடையுடன் இன்னொரு பதினாயிரம் ரூபாய் சேர்த்து இருபதாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.

***

இவ்வருஷத்தில் பி. ஏ. பட்டப்பரீக்ஷையில் தேறி சென்னைச் சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற விஸ்வகர்மகுல ஸ்ரீ N. தாமோதரம் அவர்களுக்கு, இம்மாதம் 26உ யன்று நமது சபா மண்டபத்தில் வந்தனோபசாரமளிக்கப் பட்டது. அப்போது, ப்ரொபஸர் அங்கப்பாச்சாரியாரால் ஜாலவித்தைகளும், பச்சையப்பன் காலேஜில் பி. ஏ. ஜூனியர் வகுப்பில் வாசிக்கும் ஸ்ரீ முத்துக்குமாராச்சாரியாரால் சங்கீதக் கச்சேரியும் நடத்தப்பட்டன.

அக்காலத்தில் உபந்நியாசம்புரிந்த ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார் பி.ஏ. அவர்கள், நமது ஜாதிச்சிறுவர்கள் இங்கிலீஷ் படித்து உயர்தரப் பரீக்ஷைகளில் தேறி பெரிய உத்தியோக பதவிகளையடைந்தாலல்லாமல் நமது ஜாதிக்கு கண்ணியம் உண்டாக மாட்டாதாதலால், வருஷந்தவறாமல் பல பேர் பட்டப் பரீக்ஷைகளில் தேறும்படி சுய ஜாதியார் வேண்டிய பொருட்சகாயம் செய்ய வேண்டியது மிக அவசியமென்றும், இதுவொன்றே குலாபிவிருத்தி சாதனமாகுமாதலால் இதில் குலாபிமானிகளெல்லோரும் கவனம் வைக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினார். அன்றைய கூட்டத்தில், கோதாவரி ஜில்லா லான்ட் ரிகாட்ஸ் தாஸில்தார் (Land Records Tahsildar) ஆகிய ஸ்ரீ கந்துகூரி-மல்லிகார்ச்சுன ஆச்சாரியார் பி. ஏ. அக்கிராசனபதியாயிருந்து கல்வியின் அவஸியத்தைப்பற்றியும், பல ஜாதிகளிலும் மேம்பட்ட ஜாதியாரென்று சொல்லிக்கொள்ளும் விஶ்வகர்மஜாதியினர் மற்றெல்லா ஜாதிகளிலும் கல்வியிற் கீழ்மைப்பட்டிருப்பது மிகவும் கேவலமென்பதைப்பற்றியும், நமது ஜாதியார் தங்கள்ஜாதி அகம்பாவத்தை விட்டொழிக்குமட்டும் விருத்தி பெற இயலாதென்பதைப் பற்றியும் பேசினார்.

*
* *

சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்ட பிறகு கூட்டங்கலைந்தது, ஸ்ரீ N. தாமோதரம் என்பவர் விசாகப்பட்டணத்திலுள்ள விஜயநகரம் மகாராஜா காலேஜில் (Science Demonstrator) உபாத்தியாயராயிருக்கிறார்.

*
* *

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.—நாலடி.

## பிழைக்கும் வழி

உலகத்தில் யாருக்கு மரியாதை கிடைக்கிறதென்று பார்த்தால், பொருள் உள்ளவர்களுக்கும் கல்வியுள்ளவர்களுக்கும் மரியாதை கிடைக்கிறதென்று தெரியவருகிறது. பொருளுள்ளவர்களிலும் கல்வியுள்ளவர்களுக்கு அதிக மரியாதை கிடைப்பது எப்படி யென்றால், கல்வியானது உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுக்கிறது. அவ்வுத்தியோக பலத்தினால் கல்வியானது சர்வ ஜனங்களுடைய மரியாதையைப் பெறுகிறது. நமது தேசத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் மரியாதை மற்றவர்களுக்கு இல்லை. அற்பமாகிய போலீஸ்காரனுக்கும் கனமான வியாபாரி மரியாதை செய்கிறான். ஆயிரம் ஐந்நூறு சம்பாதிக்கும் வர்த்தகர்களும் ஐம்பது சம்பாதிக்கும் தாலுக்கா குமாஸ்தாவுக்கு வந்தனஞ் செய்கிறார்கள்.

சப்மாஜிஸ்ட்ரேட், தாசில்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பவர்களுடைய ஆரவாரங்களையும் அட்டகாசங்களையும் நாம் அடிக்கடி காண்கின்றோமல்லவா? இவர்களுடைய ஹோதாவின்முன் ஊர் ஜனங்களுடைய ஹோதா செல்லுகின்றதா? இல்லவே யில்லை. இந்தப்பெரிய ஹோதாவுக்கும் மரியாதைக்கும் ஆசைப்பட்டுத்தான் ஜனங்கள் அரசாங்கஉத்தியோகங்களைத் தேடுகிறார்கள். அரசாங்க உத்தியோகங்களோ நன்றாய்க்கற்றறிந்து உயர்தரப் பட்டப்பரீட்சைகளில் பாஸ் செய்தவர்களுக்குமட்டுமே கிடைக்கக்கூடியனவா யிருக்கின்றன. அப்படி எந்த ஜாதியாராயினும் பாஸ் செய்திருப்பார்களானால், அவர்களுக்கு அரசாங்கப் பெரிய உத்தியோகங்கள் கிடைப்பதும், அதனால் மரியாதையும் அந்தஸ்தும் ஏற்படுவதும் சகஜமாயிருக்கிறது. எந்த ஜாதியார்கள் அதிகமாய்ப் படித்து பாஸ் செய்கிறார்களோ அந்த ஜாதியார்களுக்கு அதிகமாய் உத்தியோக பதவிகள் கிடைக்கின்றன. அவற்றிற்குத் தக்கபடி அந்த ஜாதிக்குப்பெருமையுண்டாகின்றது.

இப்போது சில ஜாதியார் தேசத்தில் அதிக செல்வாக்கு பெற்றும், சில ஜாதியார் சாதாரண செல்வாக்கு பெற்றும், சில ஜாதியார் குறைந்த செல்வாக்கு பெற்றும், சில ஜாதியார் செல்வாக்கே யில்லாமலும் காணப்படுகின்றார்களாயின், இந்த நிலைமைக்குக் காரணம் ஆலோசித்துப் பார்க்குமிடத்து சில ஜாதியார் அதிகக் கல்வி கற்றும், சில ஜாதியார் சாதாரணமாய்க்



கல்வி கற்றும், சில ஜாதியார் கல்விக் குறைவடைந்தும், சில ஜாதியார் கல்வியே கற்காமலும் இருப்பதேயன்றி வேறல்ல வென்று சொல்லலாம். இந்த நியாயப்படி பார்க்குமிடத்து, நமது ஜாதியார் செல்வாக்கென்பதே யில்லாமல் குறைவுபட்டுக் கிடப்பது ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் நமது ஜாதியார்களாய்க் கற்றவர்கள் பலர் தோன்றி அவர்கள் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்திருப்பார்களானால், ஜாதிமுழுவதுக்குமே மரியாதையுண்டாக மாட்டாதா?

சாதாரணமாய்க் கவனிக்கும்போது, அபூர்வமாய் அங்குமிங்கும் ஒருவராய் சிற்சில உத்தியோகஸ்தர்கள் நமது ஜாதியில் தோன்றியிருக்கும் இக்காலத்திலேயே, அவர்கள் உத்தியோகஸ்திதிக்குத் தக்கபடி அந்தந்த இடத்திலேயோ, அல்லது அந்தந்த வீதியிலேயோ, அந்தந்த கிராமத்திலேயோ நகரத்திலேயோ ஆபீஸிலேயோ நம்மவர்களுக்கு ஒருவித மரியாதையும் குறைகூற நடத்தையும் வழங்கப்பட்டு வருவதைக் கண்டிருக்கின்றோமல்லவா? ஆதலால், நமது ஜாதியில் ஏற்படக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்குத் தக்கபடி நமது ஜாதிக்கு அங்கங்கு பொதுஜன மரியாதை கிடைக்குமென்று ஏற்படுகின்றது. அப்படி உத்தியோக பதவிகள் பெறுவதற்காக நம்மவர்கள் கல்வி கற்று உயர்தரப் பட்டங்கள் பெறவேண்டும். பி.ஏ.பி.ஏ., பி.எல்., பி. ஸி. இ., எம்.பி.ஸி.யும் முதலிய பரீட்சைகளில் தேர்ச்சியடையவேண்டும். கல்வி கற்பித்தால் இவ்வித உயர்ந்த பரீட்சைகளில் நல்ல கியாதியோடு பாஸ்செய்யக் கூடியவர்கள் நமது ஜாதியில் காணப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நமது ஜாதிப்பிள்ளைகளுடைய புத்திகூர்மையைக் குறைகூறமுடியாது. ஆனால், அந்த புத்திகூர்மை தக்க வழிகளில் செலுத்தப்படாமல் தகாத வழிகளில் பிரவர்த்தித்துக் கொண்டிருப்பதினாலேதான், நமது ஜாதிக்கு தற்காலத்தில் பெருமை ஏற்படாமல் சிறுமையே எதிர்நின்று வருகின்றது. எனவே, இந்த புத்திகூர்மையைக் கல்வியில் பிரயோகிக்கும்படிசெய்து, லாயர் பரீட்சையிலும் இஞ்சினீயர் பரீட்சையிலும் டாக்டர் பரீட்சையிலும் நமது சிறுவர்கள் தேர்ச்சியடையச் செய்துவிட்டால், நமது குறைகளெல்லாம் நிறைவாய் விடுமல்லவா?

செஞ்சி சுப்பராய ஆச்சாரியார் போன்ற இஞ்சினீயரும், டாக்டர் சுந்தரம் போன்ற மெடிகல் ஆபீசரும் ஒவ்வொருவரா யிராமல் பற்பல பேர்களேற்படுவார்களானாலன்றோ நமக்கு கௌரவம் அதிகப்படும்? நமது ஜனத்தொகைக்கு 300-வக்கீல்களும், 300-டாக்டர்களும், 300-இஞ்சினீர்களும், 1000-பி.ஏ க்களும் இருந்தாலும் அதிகமாகாதே! அப்படியிருக்க, இரண்டு டஜனுக்கும் வழியில்லாமலிருக்கிறோமென்றால், நமது ஜாதி செல்வாக்கில்லாமல் சிறுமை பெற்றிருப்பது அதிசயமாகுமா? சகோதரர்களே! நன்றாய் யோசித்துப் பாருங்கள். நமக்குள் கல்வி அதிகப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்கள் குடும்பத்தில் உயர்தரக் கல்வி பெற்றவர்களாய் ஒருவரேனு மிருக்கிறார்களென்று கௌரவம் பாராட்டக்கூடியபடி தமது குடும்பப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்துக் கொடுக்க வேண்டும். அப்படி செய்வதற்கு திரவிய பலம் இல்லாதவர்களுக்கு அந்த சகாயஞ் செய்வதற்கு மற்றவர்கள் முன் வரவேண்டும்.

நம்மவர்களால் துவேஷிக்கப்பட்டு நல்ல பதவி யடைந்து வாழ்ந்து வரும் பிராம்மணர்கள் இப்படித்தான் பெருமை யடைந்தார்கள். அவர்களுடைய பெருமைக்கும், செல்வத்திற்கும், ஹோதாவுக்கும் இந்த ரகசியமே காரணமல்லாமல் வேறு காரணங் கிடையாது. அவர்களைப் போல் நாமும் பதவி பெற வேண்டுமானால் அந்த மாதிரியே செய்ய வேண்டும். இது தான் பிழைக்கும் வழி. இதை விட நல்ல வழி வேறு கிடையாது. இந்த வழியில் நூறு வருஷங்களுக்கு முன்னமே நாம் பிரவர்த்தித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருப்போமானால், மேலே காட்டிய மாதிரி அத்தனைப் பட்டதாரிகளும் உத்தியோகஸ்தர்களும் நமது ஜாதியில் ஏற்பட்டிருப்பார்கள். ஏற்பட்டிருந்தால், நமது நிலைமை எவ்வளவோ உயர்ந்திருக்கும். நமது ஜாதியைப் பற்றிக் கேவலமாய்ப் பேச எவரும் துணிய மாட்டார்கள் நமது பட்டம் தடுமாறிப் போயிராது. நமது ஜாதிப் பெயர் மாறியிருக்கமாட்டாது. நமது கைச்சோற்றை நாலு ஜாதியாரும் விரும்பியுண்டு வருவார்கள். நாட்டிலுள்ள நமது சகோதரர்கள் ஜோடு போடக் கூடாதென்றும் குடை பிடிக்கலாகாதென்றும் பிற ஜாதியார் தடுக்க நினையார். ஊர்க்கோலம் வரக்கூடாதென்று மார்க்கோலம் காட்டார்கள். இவை போன்ற உபத்திரவங்கள் ஒழிந்தே போயிருக்கும்.

அப்படிப்பட்ட நிலைமையை நாம் இனிமேல் தேடிக்

## விவாக சௌகரியங்கள்

ஸ்ரீ க. சுந்தரேசன்

விஸ்வகர்ம ஜாதியார் என்று சொல்லிக் கொள்பவர்களுக்குள் ஒருவர் உயர்வு ஒருவர் தாழ்வு என்றபேதஞ் சொல்லிக் கொள்வது மிகவும் அருவெறுப்பாயிருக்கிறது. ஒரே ஜாதிக்குள் ஏற்றத்தாழ்வு எங்கிருந்து வரும்? ஏற்றத்தாழ்வு இருந்தால் ஒரேஜாதி எப்படியாகும்? ஆதலால், ஏற்றத்தாழ்வு சொல்லுவதை விட, என் ஜாதியல்லவென்று ஒரே அடியாய்ச் சொல்லிவிடலாம். அப்படிச்சொல்லித்தான் பதினாறுஞ் சாதிகள் நமது பாரத பூமியில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஏற்றத்தாழ்வு சொல்ல ஆரம்பித்தால் முடிவே இருக்காது. ஆனால், ஒன்று சொல்லலாம். விவாகவழி, வைப்புவழி யென்னும் இரண்டு பிரிவுகளை ஒப்புக் கொள்ளவேண்டும். இவை யிரண்டையும் ஒன்றாகக் கொள்ளுவது கூடாது. ஆனால், முதலில் இவையிரண்டும் பிரிந்திருந்தபோதிலும், நாளாவட்டத்தில் ஒன்றாய்ச் சேர்ந்து விடுகின்றன. தெரிந்தோ தெரியாமலோ அந்தவழிக்காரரும் இந்த வழிக் காரரும் ஒருவரோடொருவர் சம்பந்தஞ் செய்து கொள்ளுகிறார்கள். பிறகு, இந்த வழியென்றும் அந்த வழியென்றும் கோடிழுத்துக்காட்டுவது முடியுமா? அப்போது எல்லாம் ஏகவழிதான்.

தாங்கள் விவாகவழியே தவிர வேறு வழி கலக்கவில்லை யென்று பலவகுப்பார் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்படியல்லாமல், நாங்கள் வைப்புவழி யென்றாவது, நாங்கள் சுயமாகத்தானிருந்தோம் இடையில் கலந்து கொண்டோமென்றாவது எவரும் சொல்லிக்கொள்ளவே மாட்டார்கள். என்றாலும், இந்திந்தவகுப்புகள் சுத்தமானவை, இவை ஒரு மாதிரியானவையென்று பலர் சொல்ல நமது காதிற் படுவதுண்டு. இப்படி சுத்த வகுப்புகள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் வகுப்புகளுக்குள் ஏன் விவாக சம்பந்தங்கள் நடக்கக் கூடாது? சுத்தவகுப்புகளெல்லாம் ஒரே கூட்டமாக ஏன் சேர்ந்துகொள்ளக்கூடாது? சுத்தத்திலும் பிரிவுகள் அசுத்தத்திலும் பிரிவுகளென்றால் நன்றாயிருக்கிறதா? இதை நமது ஜனங்கள் யோசிக்கவேண்டும். பிரிவுபிரிவு என்பதை முழுவதுமே ஒழிக்கக்கூடாமற் போனாலும் கூடியவரையிலுமாவது ஒழித்துவிடுவது தான் மேன்மை. அதுவே அழகு, புத்திசாலித்தனம், மேன்மையடையும் வழி. அதைவிட்டு இல்லாத பிரிவுகளை ஏற்படுத்திக்கொள்வது எவ்வளவு மதியீனம்!

கடவுள் சிருஷ்டியில் மனிதனுக்கு மனிதன் பேதம் பாராட்டுவதே அடாது. அது ஈஸ்வர விரோதமென்றுஞ் சொல்லலாம். அதனாலே தான் ஜாதிவித்தியாசங் கூடாதென்று அறிவாளிகள் வற்புறுத்திப் பேசுகிறார்கள். ஜாதிபேதத்தையே வேரறுத்து ஒழிக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாயிருக்க, ஒரு ஜாதிக்குள் ஓராயிரம் பிரிவுகள் வைத்திருப்பது எவ்வளவு பேதமையென்னலாம்! இந்தப் பேதமையையும் பிரிவுகளையும் ஒழிக்கவேண்டும். ஒரு ஜாதியாரெல்லோரும் ஒரே வகுப்பென்று சொல்லிக் கொண்டு ஒரு கூட்டமாகக் கொடுத்தல் வாங்கலுடனிருக்கவேண்டும். இதனால், பல சௌகரியங்களுண்டாகும். இப்போது நமது ஜாதியின் பெருக்கத்திற்குத் தடையாயிருக்கும் பல துன்பங்கள் ஒழிந்துபோகும்.

---

கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். இதற்காக இப்போது முதல் விடாமுயற்சியோடு உழைத்தாலும், எப்படியும் ஐம்பது வருஷங்களுக்குமுன் பலனைக் கண்படக் காண முடியாது. அவ்வித உழைப்பை இன்னும் ஆரம்பிக்காமலிருப்போமானாலும் அசிரத்தையாய் நடத்துவோமானாலும், எத்தனை நூறு வருஷங்களுக்குப் பிறகு பலப்பிராப்தி கிடைக்குமென்று சொல்லவே முடியாது. ஆரம்பஞ் செய்வதிலேதான் அதிக கஷ்டங் காணப்படும். ஆரம்பித்து சரியானபடி அஸ்திவாரம் போட்டு நடத்தினால் காலக்ரமத்தில் அவ்வேலை யாதொரு கஷ்டமுமில்லாமல் தன்கடையாய் நிறைவேறும். இந்த உணர்ச்சி ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்பட வேண்டும். ஒரு சமயத்தில் தோன்றி மறு சமயத்தில் மறைந்து போனால் பிரயோசனமில்லை. சதா துளக்கங் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தாரும் தமது பிள்ளைகள் இஞ்சினீயர் சுப்பராயாச்சாரி போலவும், டாக்டர் சுந்தரம் போலவும் விளங்கச் செய்ய வேண்டுமென்றும் கவலை கொண்டவர்களாய் அக்கவலை நிறைவேறும் விதமாக இராப்பகலாக உழைக்க வேண்டுமென்றும், இதற்கு ஈசன்கருணை துணைநிற்க வேண்டுமென்றும் கோருவோமாக.—நிருபன்



மிகக் குறுகிய பந்துக் கட்டுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் விவாகஞ் செய்துகொள்வதினால், அந்த பந்துக்கட்டைச் சேர்ந்த குடும்பங்கள் சிறுகச் சிறுக சிறுத்துப் போவதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம். புத்தி க்ஷீணமடைகிறது, தேகங் குறுகுகின்றது, செல்வங் குறைகிறது. இப்படிப் பல குறைபாடுகள் நேரிடுகின்றன. இந்த நியமமில்லாமல், எங்கேயானாலுங் கொள்ளலாம் எங்கேயானாலுங் கொடுக்கலாமென்று நடந்து வரும் குடும்பங்களில் சந்துஷ்டியும் ஆரோக்கியமும் உற்சாகமும் அதிகமாவதுடன், தேக வளர்ச்சி, புத்திகூர்மை, செல்வப்பெருக்கு, தேஜஸ் மிகுதி முதலிய சிலாக்யமான லக்ஷணங்கள் காணப்படுகின்றனவல்லவா? இந்த உண்மைகள் நாளுக்குநாள் அதிகமாக ஒவ்வொருவருக்கும் புலப்பட்டுவருகின்றன. இந்தத் தெளிவு தேச க்ஷேமத்திற்கு அநுகூலஞ் செய்யுமென்பதில் சற்றேனுஞ் சந்தேகமில்லை. ஆனது பற்றியே, ஒவ்வொரு ஜாதியாராக, இந்த நல்லவழியிற் செல்லத் தலைப்பட்டுவருகின்றனர். நாமும் இந்த நல்ல வழியிற் செல்லவேண்டியது அவஸ்யமாயிருக்கிறது.

பழிப்புக்கிடமில்லாத சுயஜாதிக் குடும்பங்கள் ஒன்றோடொன்று ஆட்சேபமின்றி விவாக சம்பந்தஞ் செய்து கொள்ளவேண்டும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம் என்ற பாஷா பேதங்களும் வைத்துக்கொள்ளக் கூடாது. இந்த பேதங்களை யொழித்து பல விவாகங்கள் தினமும் நடந்து வருகின்றன. ஆனதால், நான் சொல்வதில் நூதனமாவது அதிசயமாவது யாதொன்றுமில்லை. எங்கும் நடந்து வருவதைத் தான் இங்கெடுத்துக்காட்டுகிறேன். மகாராஷ்டிரராகிய நமது புனா பண்டிதர் தமது பெண்ணை ஆந்திர விஸ்வகர்மரொருவருக்குக் கொடுக்கத் துணிந்திருந்தாரென்றும், இவ்வித பாஷா பேதவிலக்கு விவாகங்கள் நடைபெறச் செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம் அவருக்கு மிகவு மிருக்கிறதென்றும் அறிந்தார் உரைக்கக் கேட்டிருக்கிறேன். ஆதலால், இது சாஸ்திர சம்மதமான திருத்தமென்பதில் சந்தேகமில்லை. சிருங்கேரி ஜகத்குரு ஸ்வாமிகளும் இதே அபிப்பிராயந் தெரிவித்திருக்கிறார்களென்பதை 174-பக்கத்தில் காணலாம்.

---

கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்—குறள்.

## வருண பேதம்

மனுவினால் வருண பேதங்கள் உண்டானதாகத் தெரியவருகின்றது. ஆனால், மநுகுலத்தாரால் இவ்வளவு தரும மெதுவென்று அங்கீகரிக்கப்படுகின்றதோ அதுவே நீதிநூலாகும். அது உலகமுழுமையிலும் அங்கீகரிக்கப்பட்டதா யிருக்கவேண்டும். அப்படிக்கன்றி, ஓர் தேசத்தில் மாத்திரம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்று நான்கு வகுப்புகள் பிரிக்கப்படவேண்டியதென்ன? இவ்வித ஏற்பாடு செய்யுங்காலத்தில் ஏதோ ஓர் நல்ல கருத்தைக்கொண்டே நிர்ணயித்திருக்கலாம். ஆனால், நாளுக்குநாள் பேதாபேதங்களுண்டாகி கட்சிகள் மேலிட்டன. அதை நம்பும்படியாகச் சிலர் பிரம்மா முகத்திலிருந்து பிராமணனும், புஜத்திலிருந்து க்ஷத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், பாதத்திலிருந்து சூத்திரனும் பிறந்ததாகக் கற்பனைசெய்து விட்டார்கள். இதைப் பூர்வத்திலிருந்த சிலர் நம்பியும், சிலர் நம்பாமலே யிருந்தார்கள். அது நாளுக்குநாள் வேரூன்றிவிட்டது.

இதனால் வருணபேதத்தின் முக்கிய கருத்தை விசாரியாமல் என் தகப்பன் பிராமணனாதலால் நானும் பிராமணனென்றும், ஜென்மத்தினாலன்றி பிராமணிகத்துவம் கருமத்தாலல்லவென்றும் வழக்க வார்த்தையாக வற்புறுத்திவருகின்றார்கள். இது இம்மட்டில் நின்றதோவெனில் இல்லை; இன்னும் விபரீதமாய் நான்கு வருண பேதங்களின்மேல் நாற்பதினாயிர வருணபேதங்களாய் அவரவர்களுக்குத் தக்கபடி புஸ்தக ஆதாரங்களை யேற்பாடுசெய்துகொண்டிருக்கிறார்கள். இவ்விபரீதத்தைப்பற்றி ஆழ்ந்தாலோசிக்கில் வருணபேதம் வழங்கவேண்டுமென்பது பிறவிக்குணமானால், தேசத்தில் வருணபேதத்தைப்பற்றி யாதொரு அறிகுறியும் வெளிப்படாதிருப்பதுமன்றி நம்பத்தகுந்த சாட்சியுமில்லை.

ஒருவேளை அதற்கு ஆதாரஞ் சொல்லக்கூடுமெனில், பிரம்மாவின் தேகத்தின் நான்கிடங்களில் நான்கு வகுப்பினர் பிறந்தாரென்று சொல்லுபவர் இதர பேதாபேத வருணங்களெல்லாம் பிரம்மாவின் எலும்பொன்றுக்கும், நரம்பொன்றுக்கும், மயிரொன்றுக்கும் உண்டாயினவென்று சொல்லப் பின்னிடைவார்களோ? பின்னிடையார்கள். ஆகையால், இவ்விதக் கற்பனையானது ஆகாயத்திலே கோட்டை

கட்டின கதைபோலிருக்கிறது. இவ்வித வருணபேதமென்பது முற்றும் பொய்யே. இதை நிஜமாகக் கற்பனைசெய்து மேற்குலத்தோரென்று சொல்லும் பிராமணர் தங்களுக்குச் செல்வத்தையும், புகழ்ச்சியையும், ஜீவனோபாயத்தையும் விர்த்திசெய்துகொள்வதற்கு ஏற்படுத்திக்கொண்ட பேதாபேத வருணங்களேயன்றி மற்றெவருக்கும் நஷ்டமென்பதில் சந்தேகமில்லை.

இதையறியாமல் வீணாக வருணபேதமென்னும் வலையிலகப்பட்டு ஆந்தையைப்போல் விழிப்பானேன். வருணபேதத்தை நம்புமவர்கள் மற்றுமதை யனுசரிப்பது ஓர்வகைநியாயமாகலாம். அதற்கு விரோதமாய், தாழ்ந்த குலத்தான் சகல சம்பத்துள்ளவனாகில், அவனால் ஜீவன லாபத்தையோ அல்லது வேறே யாதாமொரு லாபத்தையோ பெறக்கருதி கீழ்க்குலத்தானுடன் கொள்வன கொடுப்பன உண்பன முதலியவைகளில் கலந்துகொள்ளுகிறான். இலாபமில்லாவிடில் அவன் தாழ்மைக்குலத்தோன், நான் மேற்குலத்தோனென வீரியம் பேசுகிறான். கீழ்க்குலத்தோனுக்கு மேற்குலத்தோனால் மேன்மையுண்டானால் அப்போதவன் அகம்பாவம் மேலிட்டு என்னைவிட மேற்குலத்தோனில்லையெனப் பெருமை பாராட்டிக்கொண்டு ஜாதியைப்பற்றிச் சிரேஷ்டமாய்ப் பேசிவருகின்றான். உண்மையை யநுசரிப்போர் பொருளுக்காவது, உபசாரவாஞ்சைக்காவது இடங்கொடுப்பரோ?

இக்காரணத்திற்காகவே வருணபேத இலக்ஷணத்தைத் தீரவிசாரித்திருப்பின், அதின் சுவரூப லக்ஷணம் ஏறவும் குறையவுமாட்டாது. அதைப்பற்றி இங்கு சற்று விசாரிபபோம்:—பூமியினிடத்திலிருந்து சகல பதார்த்தங்களும் உற்பத்தியாகின்றமையால், அதற்குப் பூர்வக்கியானிகள் பிரம்மாவென்று பெயரிட்டு அதற்கு அநேக மகிமைகள் வரித்தார்கள். அவ்வித பிரம்மாவாகிய பூமியினிடத்தில் தோன்றிய மனுவென்று சொல்லப்படாநின்ற மானிடன் தன் செய்கைகள் பலவாறிருப்பினும், அவைகளையெல்லாம் சுருக்கி, புத்திக்குறியாகிய முகத்துக்கு பிராமண இலக்ஷணத்தையும், பலத்துக்கிருப்பிடமாகிய புஜத்துக்கு க்ஷத்திரிய இலக்ஷணத்தையும், சஞ்சாரத்துக்குச் சாதனமான தொடைகளுக்கு வைசிய இலக்ஷணத்தையும், அடிமையைவிளக்கும் பாதத்துக்கு சூத்திர இலக்ஷணத்தையும் வெளிப்படுத்தினான்.

மற்றபடி, இந்த நான்குவித இலக்ஷணங்கள் ஒரு மனிதனிடமில்லை யென்பதல்ல. இந்நான்கில் ஒரு லக்ஷணம் ஓர் காலத்தில் ஓர் மானிடஸ்வரூபத்தில் பிரகாசித்து மற்றவைகள் மறைந்திருந்தபோதிலும், அந்த நான்கு லக்ஷணங்கள் மனிதனிடமில்லையென்று சொல்ல யாரால் கூடும்? ஆனபடியால், பிராம்மணன் சூத்திரனாகலாம், சூத்திரன் பிராம்மணனாகலாம். இதற்கு யாதொருமோசமில்லை. இவைகளெல்லாம் அவரவர் செய்கைகளுக்குத் தக்கவாறுயிருக்கின்றதே யொழிய என் தகப்பன் க்ஷத்திரியன் நானும் க்ஷத்திரியன் என்பது பொருந்தாது.

“மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்”

என்று திருவள்ளுவநாயனார் வெளியிட்டிருக்கின்றார். உலகில் இந்தியாவில் வருண பேதங்கள் ஒருவரையும் காக்கமாட்டாதென்றும், யாவரும் ஒரு வருணத்தாரென்பது நல்ல வழியளிக்குமென்றும் சற்று யோசிப்பவர்களுக்கு எளிதாய் விளங்கும்.

**தத்துவ விவேசினி.**

## ஜெர்மன் சக்கரவர்த்தி காலநேமிக்குச் சமானம்

காலநேமி என்பவன் லங்கேசனான ராவணனுக்குச் சிற்றப்பன். ஸ்ரீராமர் ராவணனுடைய ராஜ்யத்தின் மேல் படையெடுத்தது மன்றி ராவணனுடைய குமாரர்கள் அனைவரையும் சிறந்த தளகர்த்தர்களையும் கொன்று விட்டார். அச்சண்டையில் ராவணன் ஸ்ரீராமருடைய தம்பியான லட்சுமணனைக் காயப்படுத்தி அவனுடைய பிராணனுக்கே அபாயத்தை உண்டுபண்ணி விட்டான். கந்தமாதன பர்வதத்திலுள்ள சஞ்சீவி யென்ற மூலிகைப் பிரயோகத்தினாலன்றி லட்சுமணனுடைய தேகத்தில் உண்டாயிருந்த பலத்த காயம் சௌக்கியம் ஆகாது, அவன் உயிரும் நிற்காது; ஆகையினால் ஸ்ரீராமருடைய தளகர்த்தனான ஹனுமார் மேற்கண்ட சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வரும்படியாய் அந்த மலைக்கு அனுப்பப்பட்டார்.

இதைக்கேட்டவுடனே ராவணன் தன்சிற்றப்பனான காலநேமியைப் பார்த்து, ஹனுமானுடைய காரியம் சித்திக்காமல் செய்துவிடுவீரேயாகில் லட்சுமணன் இறந்துபோய்விடுவான். சகோதரசோகத்தால் ஸ்ரீராமர் யுத்தத்தைநிறுத்திவிட்டு, இலங்கையைவிட்டுப் போய்விடுவார். அப்பொழுது என் மனோபீஷ்டம் பூர்த்தியாகும். ஆகையால் நீர் கந்தமாதன பர்வதத்திற்குச் சென்று அனு



மாருடைய காரியத்துக்கு ஹானி யுண்டாகும்படி செய்து வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அதற்கு காலநேமி ராவணனை நோக்கி நான் செய்யும் இந்த மகா உபகாரத்திற்கு நீர் எனக்குச் செய்ய வேண்டிய பிரதியுபகாரம் என்னவென்றால், தங்களுடைய ராஜ்ஜியத்தில் பாதியையும் இதர சொத்துக்களையும் கொடுத்து விட வேண்டுமென்றான் இந்த யோசனைக்கு ராவணன் சம்மதித்தான்.

உடனே காலநேமி சாதுவைப்போல வேடம் பூண்டு கந்தமாதன பர்வதத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அனுமார் அந்தப் பர்வதத்தில் அந்த சாதுவைக் கண்டவுடனே அவனை நிஜமான சன்னியாசி யென்று நினைத்து அவருக்கு தண்டஞ் சமர்ப்பித்து சஞ்சீவி மூலிகை அகப்படும் இடத்தைத் தயவு செய்து தெரிவிக்கும்படியாய் அவரைக் கேட்டுக் கொண்டார். அவரை நோக்கி காலநேமி இதோ பக்கத்திலிருக்கும் ஒரு குளத்திற்குச் சென்று நீராடி பரிசுத்தனாக வந்த பிறகு தான் நான் உனக்கு அது கிடைக்கு மிடத்தைப் பற்றிச் சொல்லுவேன் என்று கூறவே ஹனுமார் அப்படியே பக்கத்துக் குளத்திற்குச் சென்றார்.

அக்குளத்தில் பலமான முதலை ஒன்று வாசஞ்செய்து வந்தது. ஹனுமார் அதை யறியாமல் நீராடி வருவதற்காக அக்குளத்தில் இறங்கினார். இறங்கினதைப் பார்த்துக் கொண்டிருந்த காலநேமி தனக்குள் பின்வருமாறு நினைக்கலானான். ஹனுமான் அக்குளத்தில் இறங்கி விட்டான். இனி அவன் அம்முதலையால் கொல்லப்படுவது நிச்சயம் என்னுடைய காரியம் கைகூடி விட்டது. எனக்கு இலங்கையில் பாதி ராஜ்ஜியம் கிடைத்து விட்டது. என் பாகத்திற்கு இலங்கையின் எந்தப் பாகம் கிடைக்கப் போகிறதோ தெரியவில்லையே என்று இவ்விதமாக ஆலோசனை செய்து கொண்டிருந்தான்.

குளத்திற்கு ஸ்நானஞ் செய்யப்போன ஹனுமானை அதிலிருந்த முதலை விழுங்கிவிடப் பார்த்தது. ஹனுமார் அதனுடன் கோரமான யுத்தஞ் செய்து அதைக் கொன்று விட்டு, கபட சன்னியாசி யிருந்த இடத்திற்கு ஓடி வந்து, அவனைப்பிடித்து கரகர வென்று சுழற்றி அங்கிருந்த ஒரு கல்லின்பேரில் மோதி அவனைக் கொன்றுவிட்டார். பாதி ராஜ்ஜியத்தைப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்றிருந்த காலநேமியின் எண்ணத்திற்குச் சமானமாக ஜெர்மனியும் இப்பொழுது ஐரோப்பா கண்டத்தில் தனக்கு இந்த பாகம், ஆஸ்ட்ரியாவுக்கு இந்த பாகம் வரும் என்று வீண் யோசனை செய்து கொண்டிருக்கிறது. ஹனுமாரைப்போன்ற ஒரு வல்லரசு தோன்றி ஜெர்மனியின் வீண் யோசனையை ஒன்று மில்லாமல் செய்து விடுமென்று அதற்குத் தெரியாமற் போனது விசனிக்கத் தக்கதாகும்—என்று அமிர்த பஜார் பத்திரிகை கூறுகிறது.

## நமது வாசகர்கள்

### நமது ஜாதிப்பிள்ளைகள்

நமது ஜாதிப்பிள்ளைகள் குலத்தினர்க்கு யாதொருவுதவியையுஞ் செய்யக் காண்கிலன். பிரதிவருடம் ஒவ்வொரு பட்டணங்களிலும், கிராமங்களிலும், அவரவருக்கேற்றபடி வசூல் செய்துகொண்டு தமது தேசங்களுக்குச் சென்றுவிடுகின்றனர். நமது குடும்பங்களில் நடைபெறும் சுபாசுப விசேட காலங்களில் பலருக்குந் தெரிவிக்க நமது குலத்தினர்கள் வீடுமுதலியவை தெரியவில்லை. ஜாதிப் பிள்ளைகளோ சென்னைபோல் கேட்டுள்ளும் வெளியூரிலுள்ள விஸ்வப்பிராமணர்களுடைய கிருஹங்களையும் தொழில் செய்யும் இடங்களையும் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஸ்ரீ காளி காம்பாள் கமடேஸ்வர தேவஸ்தானத்திற்கு உண்டி தண்டல்காரர்கள் இருவரை நேமித்திருக்கின்றனர். அவர்களுக்குச் சில விடங்கள் தெரிந்தும் தெரியாமலும் இருப்பதால் கூட்டங்களுக்கு சொல்லத் தடையாயிருக்கின்றது. ஆலயத்திற்கு வருமானம் குறைந்துவிடுகிறது. இன்னும் பல குறைபாடுகளை நீக்கவும் நமது ஜாதிப்பிள்ளைகளைக் கொண்டு இவ்வித தண்டல்காரர்களாகவும் நமது குலத்திலுள்ள செல்வவந்தர்கள் வீடுகளுக்கு காவலராகவும் சாமக்கிரியைகள் சேகரித்தல் முதலிய பலவுதவிக்கும், அவர்களுக்கு ஜீவனாதாரமாகவும் இருக்கும். அன்பர்கள் இதைப்பற்றி யாலோசித்து முடிவு செய்வார்களாக.

**மதுரகவி. புதுவை-நடராஜாச்சாரி.**

### ஆச்சாரி—ஆஸாரி.

நமது பட்டப்பெயர் விஷயமான ஞாபகம் கொண்டவர்களாய் நம்முள் எத்தனை பேர்கள் இருக்கிறார்களென்று சொல்லமுடியாது. மிகக்குறைவான தொகையே இருக்கவேண்டும். அதிகமான ஜனங்கள் பட்ட விஷயத்தில் கவனம் வைத்திருக்கும்பட்சத்தில் இதுவரையில் விமோசனம் உண்டாயிருக்கும். சுமார் ஒரு வருஷத்திற்குமுன் ஒரு பத்து இடங்களிலிருந்து தந்திகள் அனுப்பினார்கள். கும்பகோணம் கான்பரன்ஸில் இந்த விஷயத்தைப்பற்றி ஒரு ரிஸலூஷன்போட்டார்கள். இதற்கு அதிகமாக என்ன நடந்ததென்று தெரியவில்லை. இவ்வளவு சுலபமாய் நமது குறையைத் தீர்த்துக்கொள்ளுதல் ஆகுமா? இடைவிடாமல் அழுது

கொண்டிருந்தாலல்லவா கவனிப்பார்கள்? எல்லோரும் ஒன்றாய் அழுதால்தானே கூக்குரல் கிளம்பும்? ஒய்ந்தோய்ந்து ஒரு குரலெடுத்தழுதால் யாருக்குக் கேட்கப்போகிறது? இது உதவாது. இன்னும் பல நூறு தந்திகள் போகவேண்டும். ஆயிரந்தந்திகள் அனுப்பினாலும் போதாது. அனேக கான்பரன்ஸ்கள் சேர்ந்து சேர்ந்து முறையிடவேண்டும். ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பதுபோல் இப்போதைக்கே ஆஸாரிப் பட்டம் வந்து நெடுங்காலமாய்விட்டது. இதுவரையிலுமே நாம் அதை மாற்றியிருக்கவேண்டும். என்னமோ தூங்கிவிட்டோம். போனது போகட்டும். இனிமேலாவது விழித்துக்கொள்ளுவோம், கூக்குரலிடுவோம், கெஞ்சுவோம், கேட்போம், நறைதீர்வோம், தீருமட்டும் விடாமுயற்சிகொள்வோம். அழுதபிள்ளை பால் குடிப்பது நிச்சயந்தானே! அப்படியானால், நமது குறைதீராமல் நிற்காது. இதை மனதில் எண்ணி முயற்சி செய்வோமாக, காருண்ய கவர்ன்மென்டார் கருணை பெறுவோமாக.

பட்டப்பித்தன்.

## ஐய வினா

நமது பத்திரிகையின் 168-169 பக்கங்களில் வெளியான நாகப்பட்டணம் ஸ்ரீ தெ. விஸ்வலிங்கப் பத்தருடைய கடிதத்தின் அபிப்பிராயம் என்னவென்று வெளிப்படையாகத் தோன்றவில்லை. இந்த கனவான் நமது இராஜதானியில் வெளிவரும் பத்திரிகைக்கு தமது கடிதத்தை அனுப்பாமல், நமது தேசத்திற்கு அப்பாலுள்ளதோர் ஊரில் நடக்கும் பத்திரிகைக்கு எழுதியது ஒரு வியப்பே. சென்னைக் கம்மாளர்களைப் பற்றி எழுதும்போது சென்னைப் பத்திரிகையில் எழுதுவது சிலாக்ய மாகுமென்றும், சென்னைக் கம்மாளர்கள் படித்துத் தெரிந்துகொள்வதற்கு இயலுமென்றும், அதனால் அவர் கொண்டிருக்கக்கூடிய கருத்துகளும் நிறைவேறலாகுமென்றும் தெரிவிக்க வந்தேனேயல்லாமல், விகல்பமாக நான் ஒன்றுங் கூறவரவில்லை. ஆனதுபற்றி அவர் என்மீது கோபங்கொள்ளாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். நிற்க, இவர் குறிப்பிட்ட விஷயம் கும்பகோணக் கான்பரன்ஸில் பேசப்படவில்லை யாதலால், அதைப்பற்றி பத்திரிகையில் விபரமாய்ப் பிரஸ்தாபிக்குமிடத்து பலரும் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு சமயம் வாய்க்கும். அந்த மாதிரி சமயம் வாய்த்தால் விஷயம் நன்றாகக் கவனிக்கப்படும் வேண்டிய சீர்திருத்தம் செய்யவும் முடியும். ஆதலால், எதனைச் சீர்திருத்தி நல்லவழிக்குக் கொண்டுவர நாமெல்லாம் முயற்சிப்போமென்று நம்புகிறாரோ அதைப்பற்றி விளக்கமாக நமது பத்திரிகையிலெழுதுவாரென்று நான் நம்புகிறேன். அப்படி அவர் விளக்காத பட்சத்தில், அவர் சீர்திருத்த விரும்பும் விஷயம் சீர் திருந்தாமற் போமேயென்று பயப்படுகிறேன். இதனாலேதான் இக்கடித மெழுதலாயிற்று.

சென்னைவாசி.

## ஒரு மரம் தோப்பாகாது

கும்பகோணத்தில் ஒரு கான்பரன்ஸ் நடந்ததால் நாம் இனி கான்பரன்ஸ் ஞாபகத்தை விட்டிருக்கலாமென்று சிலர் எண்ணுவதாய்த் தெரிகிறது: இதிலும் பிசகான அபிப்பிராயம் வேறிருக்குமா? ஒரு கான்பரன்ஸ் நடந்தால் ஒன்றுமே குணமுண்டாகாது. அது போல் ஒன்பதினாயிரம் கான்பரன்ஸ்கள் நடக்கவேண்டும். முதலில் நடத்துவதுதான் கஷ்டம். இனி சுலபமாய் நடத்தலாம். ஜில்லாவுக்கு ஜில்லா கான்பரன்ஸ் முயற்சி உண்டாகவேண்டும். வருஷமுழுவதும் மாதமொரு ஜில்லாவாக கான்பரன்ஸ் நடத்திவர வேண்டும். அப்போதுதான் ஜாதியார்க்குள் கிளர்ச்சியுண்டாகும். அந்தக் கிளர்ச்சியினால் உண்டாகக்கூடிய சுய ஜாதி அபிமானம் சகலவித சற்காரியங்களுக்கும் பிரயோசனப்படும். அவ்வித அபிமானம் நமது ஜாதியார்களுக்குள் இயற்கையாய் நின்று வேரூன்று மட்டும் கான்பரன்ஸ்கள் இடைவிடாது நடக்கவேண்டும். இந்தக் கான்பரன்ஸ்களுக்கு அந்தந்த ஜில்லாக்காரர்கள் திரண்டு திரண்டு போகவேண்டும். விஷயாலோசனையிலும் கம்பீரத்திலும் ஜில்லாவுக்கு ஜில்லா போட்டி போடவேண்டும். கும்பகோணத்தின் மாதிரியை எந்த ஊர் பின்பற்றப் போகிறதென்பதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மா-கனகசபாபதி.

## கிரிஸ்த்மஸில் நடக்காதா?

நாளது டிஸம்பர் மாதத்தில், பிரபலமாகிய இந்தியன் நாஷனல் காங்கிரஸ், இந்திய கைத்தொழில் கான்பரன்ஸ், இந்திய ஆசாரச்சீர்திருத்த கான்பரன்ஸ், ஆஸ்திக கான்பரன்ஸ், மதுவிலக்கு கான்பரன்ஸ் முதலிய



பொது கான்பரன்ஸ்களும், பஞ்சாயக் கான்பரன்ஸ்களும் மதக் கான்பரன்ஸ்களும் வழக்கப்படி நடைபெறுமல்லவா? அவைகளைப்போல் நமது ஜாதிக்கான்பரன்ஸ் ஒன்றும் நடக்குமா என்ற கேள்வி பலரால் கேட்கப்பட்டு வருகிறது. நமது பத்திரிகை பல மாதங்களாகத் தூண்டிய முயற்சியின் பலனாக இது வரையிலும் ஒரு கான்பரன்ஸ் நடந்தது. அது நடை பெற்ற பிறகும் ஷை தூண்டுதல் குறையவில்லை பல நிருபர்கள் கான்பரன்ஸ் விஷயமாக அப்போதைக் கப்போது எழுதி வருவதே இவ்விஷயத்தில் கவனம் செலுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகின்றது. என்றாலும், கிறிஸ்த்மஸ் விடுமுறை காலத்தில் ஒரு கான்பரன்ஸ் நடத்துவதற்காக எவரும் பிரயத்தனஞ் செய்வதாக இன்னும் தெரியவில்லையே? ஏனோ நமது சகோதரர்கள் இப்படி ஊக்கமில்லாமல் காலங்கழிக்கிறார்கள்? திருச்சிராப்பள்ளிக்காரர் திமிறி முயங்கலாகாதா? மதுரைக்காரர் மனங்கொள்ளலாகாதா? திருநெல்வேலியார் தீர்க்க யோசனை செய்து கொண்டிருக்கிறார்களோ? தூத்துக்குடியார் தூக்கங் கொண்டனரோ! கோயமுத்தூரார்க்குக் குதூகல முண்டாக வில்லையோ? சேலத்தார் ஏன் சிந்தை கொள்ளலாகாது? கூடலூரார்கள் நாட மாட்டார்களோ! வேலூரார்க்கு விருப்பம் வாராதோ? செங்கல் பட்டார்க்கு எங்குளதோ கருத்து? ஐயோ! இப்படி எல்லாருமா இளைப்பாறிக் காலங்கழிக்க வேண்டும். இதுவும் சாபக்கட்டா? அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்பார்கள். அப்படி இடைவிடாமல் நடத்தினாலல்லவா நமது குறைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். இவ்வருஷம் சும்மாவிருந்தால், மறு கிறிஸ்த்மசுக்கு ஒரு வருஷமல்லவா காத்திருக்க வேண்டும்! இதற்குள் எவ்வளவு உற்சாகங் குறைந்து விடும்! உற்சாகங் குறைந்து விட்டால் காரிய சாதகஞ் செய்வது கஷ்டமாயிற்றே! அந்தக் கஷ்டத்திற்கு இடங் கொடுக்கலாமா? பௌரு ஷேய மகா ஜனங்களே! விஸ்வப்பிராம்மண குல சிரேஷ்டர்களே! ஜாதி யபிமானங் கொண்ட ஜனங்களே! கவனித்து நடவுங்கள். கால ஹரணம் கஷ்டங்களை அதிகப்படுத்து மாதலால், கால ஹரணஞ் செய்யாமல் காரியத்தை நடத்திக்கொண்டு வர வேண்டும்.

தென்னேரி-முருகப்பாச்சாரி.

## யமதரிசனம்

### விவேகசிந்தாமணி

...ாயநம:

"யமாய தர்மராஜாய ம்ருத்யுவே சாந்தகாய ச-
வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாயச-ஔதும்ப
ராய தத்நாய நீலாய பரமேஷ்டிநெ வ்ருகோதராய
சித்ராய சித்ரகுப்தாயவைநம:-
சித்திரகுப்தாயவை நமோம் நம இதி||."

ஸந்தியாவந்தன மந்திரத்தின் வேதோக்தமான ஜபம் துதி இவைகள் முடிந்தபின் வேண்டியழைத்த காயத்ரி தேவியை யதாஸ்தானம் போகும்படி விடைகொடுத்தனுப்பிவிட்டபிறகு, உபஸ்தான (துதி) மந்தாத்துக்குப் பின், லோகயாத்ரை நிர்விக்நமாய் நடக்கும்பொருட்டு, திசைகளுக்கு நமஸ்காரம் செய்து 'திக்குப்பாலகர்களான' தேவதைகளுக்கும் நமஸ்காரம் சொல்வது சம்பிரதாயமா யேற்பட்டது. இதில் தெற்குத்திசைக் குரியவரான யமனுக்கு நமஸ்காரம் சொல்லும் மந்திரத்தை மேலே யெடுத்தெழுதி யிருக்கிறேன். அதன் பொருள் சுலபம். யமனுக்கு நமஸ்காரம். யமன், தர்மராஜா, மிருத்யு, அந்தகன், வைவஸ்வதன், காலன், ஸர்வபூதக்ஷயன், ஔதும்பரன், தத்நன், நீலன், பர

(ஞாயந்தானோ நீர் சொல்லும் என்ற
கீர்த்தனை வர்ணமெட்டு)

பல்லவி

என்ன செய்வோம் விஸ்வேசா குலம்
ஈடேறவே பொருள் கூடவே வந்தருள்

சரணங்கள்

ஆங்கில பாஷையைப் பழிப்போம் ராஜர்
அவரிடம் பேசவே விழிப்போம் புவி
ஓங்கும் பொருளை வீணி லழிப்போம் நல்ல
உத்தமர் நேசத்தை யொழிப்போம் (என்)

ஜாதி யொற்றுமையைப் பாரோம் மிகத்
தக்கோர்கள் சபையினிற் சேரோம் என்றுந்
நீதில் விரதமதைக் கோரோம் ஞான
சீரான வழிதனிற் சாரோம் (என்)

ஆசார நெறியைக் கை விட்டோம் எங்கும்
அவமானப் பேருக்குட் பட்டோம் தவ
நேசானு பூதியை எட்டோம் தெரி
நிமலர்க ளுடனே கிட்டோம் (என்)

மதுரகவி புதுவை-நடராஜ ஆச்சாரி.

மேஷ்டி, விருகோதரன், சித்திரன், சித்திரகுப்தன் என்று பேர்கள் பெற்ற யமனுக்கு நமஸ்காரம். நிஜமாக அந்த சித்திரகுப்த னீருகவுள்ள நாமங்கள் தரித்த யமனுக்கே நமஸ்காரம், நமஸ்காரம். அதாவது பன்முறையும் அந்த யமனையே நமஸ்காரம் செய்து துதிக்கிறேன் என்பது பொருள். யமனை யறியாமல் அவனுக்கு நமஸ்காரம் எப்படிச் செய்வது? அவனை யறிந்ததற் கடையாளமாக அவனது நாமங்களைச் சொல்லி அவனுக்கே நமஸ்காரம் செய்கிறேன் என்று உறுதிகூறுகிறான். யமனுடைய பேர்கள் ஒவ்வொன்றும் அவன் தொழில்களைக் குறிக்கும்.

1. யமன்—(விதிநிஷேதாத் மகனாயிருந்து) அடக்கியாள்வோன்.

2. தர்மராஜா—(தர்மம் தலைகாக்கச் செய்வோன்) தர்மத்தினால் உலகத்தை ரஞ்சிப்பவன்.

3. மிருத்யு—மரணத்தை யுண்டு பண்ணுகிறவன்: மரண ஸ்வரூபி.

4. அந்தகன்—முடிவை யுண்டு பண்ணுபவன்; முடிவாயிருப்பவன். அப்படி யென்றால், 'லோகயாத்திரைக்கு முடிவு' என்று பொருள்.

5. வைவஸ்வதன்—(விவஸ்வான்—சூரியன்) சூரிய புத்திரன்.

6. காலன்.—காலத்துக்கு அதிகாரியா யிருப்பவன்.

7. ஸர்வபூதக்ஷயன்—எல்லா பூதங்களையும் நசிப்பிக்கப்பட்டவன்: பூதஸம்ஹாரன்.

8. ஔதும்பரன்—(உதும்பரம்—அத்தி; அத்திமரத்தில் வஸிப்பவன்.

9. தத்தினன்—உலகத்தைத் தரிப்பவன்.

10. நீலன்—நீலவர்ண மேனியன்: இருள் வடிவினன்.

11. பரமேஷ்டி—மேலான பதத்திலிருப்பவன்.

12. விருகோதரன்—(விருகம்—செந்நாய்) செந்நாயின் வயிறு பெற்றவன். †

13. சித்திரன்—ஆச்சரிய மகிமை யுடையவன்.

14. சித்திரகுப்தன்—ஆச்சரியத்தை ஆவரணமாகவுடையவன் (மாயா விசித்திரன்—என்றபடி.)

இப்படியாகப் பதினன்கு நாமங்களால் ஈரேழுலகையும் ஆண்டுவரும் யமனைத் தரிசிக்க வேண்டில் அது சுலபத்தில் கிடைக்குமா? தபோதனர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு தர்சன மளியான்: திரிசியமுமாகான். ஸாவித்திரி யமனைப் பார்த்தாள்: பார்த்ததுமன்றி அவனது தர்மோப தேசத்தாலேயே அவனை வென்றாள். எல்லாத் தர்மங்களும் அன்பு ஒன்றில் அடங்கும். அந்த அன்பே சிவன். அச் சிவமே காலகாலன். அந்தச் சிவத்தைப் பூஜித்து மார்க்கண்டேயன் யமனை வென்றான். ஸாவித்திரி மார்க்கண்டேயர் இவர்களிருவரும் யமனை வென்ற சிரேஷ்டர்கள். இவர்களைத் தவிர (அதாவது, இவர்கள் சென்ற மார்க்கத்தைத் தவிர வேறு விதமாய்) யமனை வென்றவர்கள் யாருமில்லை. அதாவது, மிருத்யுவை (மரணத்தை) வெல்ல இரண்டே மார்க்கமுளவா மென்பது கருத்து. ஒன்று ஸாவித்திரி மார்க்கம்: மற்றொன்று மார்க்கண்டேய மார்க்கம். முன்னது கால வந்தனம் எனப்படும். பின்னது கால வஞ்சனம் என்று யோக தர்சனங்களில் சொல்லப்படும். காலத்துக்குட் பட்டுக் காலனை வெல்வது கால வந்தனம். காலத்தைக் கடந்து கடவுளை வழிபட்டுக் காலனை வெல்வது கால வஞ்சனமாம். ஸத்தியவான், மார்க்கண்டேயர் இருவர் விஷயத்திலும் யமதர்ம ராஜா தன் விதிக்கு (கால தர்மத்துக்கு) விலக்காக நடந்து கொண்டான். ஸத்யவான் விஷயத்தில் ஸாவித்ரியின் அளவு கடந்த அன்பில் ஈடு பட்டவனாய் அவளுக்குக்கொடுத்த தன் அனுக்ரக வாக்கைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு—அதாவது, அன்பி லீடு பட்டவனாய் ஸத்யத்தைக் காக்க வேண்டி—தன் கால சக்ரத்தை நிறுத்தி காலாதீதமான நிலையை யுணரும்படியான பாக்கிய மளித்தான். இது கால வந்தனத்துக் குகந் தளித்த வரன்.

மார்க்கண்டேயனே காலனைச் சிந்தியாமல் சிவத்தையே சிந்தித்து வந்தவன். கால நியமப்படி அவன் முடிவுகாலம் வந்தபொழுது காலாந்தகன் தன் கடமையைச் செலுத்த வந்தான். ஆனல் மார்க்கண்டேயன் ஆதியந்த மில்லா சுயம்பிரகாச வெளியில் சிவதரிசனம் கண்டு காலத்தைக் கடந்த காலாதீதனாய் விளங்கினான். யமன் காலத்துக்கு மட்டும் அதிகாரியாதலால், காலவரையறைப்படி நடந்து கொள்வானானன், ஆனல், காலனறியாமல் தானே காலத்தின் கோட்டை (வரையறை)யைக் கடந்துவிட்டான் மார்க்கண்டேயன். இதைக் காலன் உணர்ந்திலன். ஒரு ராஜாங்கத்திலிருந்து அங்கு இராஜத்துரோக குற்றம் செய்தவன் அந்த ராஜாங்க எல்லை கடந்துபோய்விட்டால், மற்றொரு ராஜ்யத்தின் எல்லையை மிதித்த அவனை இவ்விராஜாங்கத்தார் பிடிக்கவோ, விசாரிக்கவோ, தண்டிக்கவோ யாதும் செய்யச் சக்தியற்றவர்களாகிறார்கள். அப்படியத்துமீறி நடந்துகொண்டால் இரண்டு ராஜாங்கங்களுக்கு மட்டுமல்ல, எல்லா ராஜாங்கங்களும் சம்பந்தப்படும்படியான சண்டை யுண்டாகும். அதுபோலக் காலன் ராஜ்யத்தைக் கடந்தவர்களை (காலாதீதமானவர்களை)ப் பிடிக்க காலனுக்கு அதிகாரமில்லை. அவன் அத்துமீறி நடந்துகொண்டதால், காலாதீத ராஜ்யத்துக்கு அதிபதியான அனந்தப்ரஹ்மமாகிய கடவுள் அந்தக் காலனைக் காலாலுதைத்துக் கண்டித்தார் காலம் சக்கரம்போல் சுழலும் ஸ்வபாவமுள்ளது. அதற்குள்ள சுழலும் சக்தி வாயு (கால்) அம்சமாதலால், காரியத்தைக் காரணத்தால் தடுத்துக் கண்டித்தனர். மஹா தீரர்களான யோகிகளே காலவஞ்சனம் செய்ய யோக்கியராவர், மற்றவர்களெல்லாம் ஸாவித்திரியைப்போல் காலவந்தனத்தினாலேயே கடைத்தேறவேண்டும்.



இங்கே மிருத்யுவை வெல்லுதல் என்றால் என்னவென்று சற்று விசாரிப்பது ஒக்கும். பூதசரீரம் விழுந்துபோவதையே உலகத்தார் மரணம் என்கிறார்கள். ஸர்வபூத க்ஷயனான யமன் பூதமயமான தேஹத்தை நாசஞ்செய்து அங்குஷ்டப் பிரமாணமான ஜீவனைக் கொண்டுபோகிறானென்பது வாஸ்தவம். ஆனல், ஜீவனுக்கு நாசம் ஒன்றும் வருகிறதில்லை. ஜீவோபாதியான அவித்தை அந்த ஜீவனோடு கூடவே தானிருக்கிறது. அவித்யா நாசத்தாலன்றி ஜீவனுக்கு (பிறப்பிறப்பினின்றும்) விடுதலை யில்லை. ஆதலால் பூததேஹத்தை யொழிப்பதொன்றே ஜீவநாசமாகாது. ஜீவன் உண்மையில் சின்மயனாயிருந்து அவித்தையில் பிரதிபிம்பித்ததால் சிதாபாஸன் என்று பேர்பெற்றவன். ஜீவநாசம் என்றால் ஜீவனுடைய உபாதிக்கு நாசமுண்டென்பதைக் குறிக்குமேயன்றி சுத்தாத்மனான நிருபாதிக கூடஸ்தருக்கு நாசம் என்பது ஒருகாலத்திலு மில்லை. ஆகையால் "மிருத்யுஜயம்" என்று காலசக்ரத்தை நிறுத்தும் வல்லமைக்கே சொல்லத்தகும். காலதேச பரிச்சேதங்களுக்குள் காலசக்கரத்துக்கு உண்மையான அதிகாரி யமதர்மராஜாவாதலால், அவனதிகாரத்தை அவனருளால் வெல்லலாமேயன்றி வேறுவிதமாக வெல்லமுடியாது. இப்படி யமனருளால் காலசக்கரத்தை வென்றவன் நசிகேதஸ் (நசிகேதன்.)

இவன் தர்மலோபம் செய்த தன்பிதாவுக்கு தர்மலோபஞ் செய்வதால்வருங் கேட்டையெடுத்துரைக்க, அவர் கோபங்கொண்டு, "ஆனல் உன்னை யான் யமனுக்குத் தத்தம்செய்து கொடுத்துவிட்டேன் போ!" என்று சொல்ல, பிதுர்வாக்கிய பரிபாலனார்த்தம், நசிகேதஸ் "அப்படியே ஆகுக!" வென்று யமபுரம் சென்று (காலத்தின் வரையறைக் கோட்டையுணர்ந்து) அந்த ஸ்தானத்துக்கு அதிஷ்டான தேவதையான யமதர்ம ராஜாவின் தரிசனத்துக்குக் காத்துக்கொண்டிருந்தான். மார்க்கண்டேயன் விஷயத்தில் உதைபட்டுணர்ந்த யமன் பிரஹ்மத்தியானியாகிய பிராஹ்மணன் ஒருவன் தன் வீட்டு வாசலில் (அதிஷ்டான பூமியின் ஆந்தர வெளியில்) காத்திருக்கக்கண்டு அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச்செய்து யமதரிசனம் பெற்றவர்கள் வெறுங்கையாகத் திரும்பலாகாதாகையால் அவனைத் தனக்கிஷ்டமான மூன்று வரன்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்படி உத்தரவு கொடுத்தான்.

இப்படி யவனுடைய அனுக்கிரகம் பெற்ற நசிகேதஸ், ஹிருதயசுத்திபெற்ற விவேக புருஷனாதலால், தனது நித்யாநித்ய வஸ்து விவேக பூரணத்தால், அநித்தியப் பொருள்களையெல்லாம் விடுத்து, மரணம் என்ற காலமுடிவுக் கப்பாலுள்ள ஆத்மரகஸியத்தைத் தனக்கு விளங்க வுபதேசிக்கும்படி முதல்வரன் கேட்டுக்கொண்டான். யமதர்மராஜாவும் ஹிருதய பரிசோதனைசெய்து அவனுக்கு அந்த ரஹஸ்யத்தை யுபதேசித்து, மற்ற வரன்களையுங் கொடுத்து, அவனுடைய யோக தீர பராக்கிரமத்துக்கு வியந்து, அப்பா இதுமுதல் உன்னைப்போல் வாசிவசம் செய்து என்னுடைய தரிசனம் காணத்துணியும் தீரர்கள் உபாசிக்கும் அக்கினிக்கு நாசிகேதாக்கினி யென்று பேர் வழங்கட்டுமென்று அவன் தன்னிடம் வந்து தனது தரிசனம் காணக்கிடைத்த இரகஸியத்தை ஸத்துக்களான யோகிகள் மர்மமுணர்ந்து அனுஷ்டிக்குமாறு "நாசிகேதாக்கினி யுபாஸனையை" யேற்படுத்தினார்.

† அதாவது, எவ்வளவு புசித்தாலும் திருப்தியில்லாதவன்—என்றபடி.

இந்த நாஸிக்கேதாக்னி யுபாசனையானது மிகவும் பரம ரகஸியமானது. வஸ்துக்களும் ஸத்துக்களும் ஸாதுக்களுமான யோகதீரர்களே அந்த உபாஸனை செய்ய அதிகாரிகளாவர். மற்றவர்களுக்கு அதிகாரமில்லை. அதிகாரமற்றவன் குப்தவித்தையில் பிரவேசித்து யத்தனித்தாலும், அவனுக்கு யோக்கியதையுண்டாவென்பதை விசாரிக்காமல் அவனுக்கு குப்த வித்தையின் இரகஸியங்களை யொருவர் உபதேசித்தாலும், உலகுக்குச் சொல்லிமுடியாத அநர்த்தம் விளையுமாதலால், இவ்விருவர் முயற்சிக்கும் பங்கம் விளைக்கவென்றே குப்த யோகினிகளும், குப்ததர யோகினிகளும், சதா குப்த வித்யேசுவரியைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆவரண சக்திகள் தங்களுடைய இந்திரஜால மஹேந்திரஜால முதலான மாயாஜால வித்தைகளால் அநருகர்களான முரட்டுத் துணிச்சற்காரர்களைத் தங்கள் மோகவலையில் சிக்கவைத்து அவர்களுக்கு காம்யசித்தி முதலான இஷ்டசித்திகளைக் கொடுத்து குப்த வித்யையின் மானத்தை (ரகஸியத்தைக்) காப்பாற்றி வருகிறார்கள்.

நாசிகேதாக்னி யுபாஸனையினால் யமபுரம் சென்று யமதரிசனங் கண்ட நான், யமனை தர்மராஜாவாகவே பார்த்து மிக மகிழ்ந்ததுண்டு. அவனுடைய இருள் வடிவம் அவனுக்கு ஸ்வபாவமாயுள்ளதல்ல மோகாந்தகாரத்தினால் சூழ்ந்தவர்களுக்கு அவன் இருள்வடிவாய் பயங்கரமாய்த் தோற்றுகிறானேயன்றி நசிகேதஸைப் போன்ற யோகதீரர்களுக்கு அவன் தர்மஸ்வரூபியாக விளங்குகிறான். அவனுடைய நீலமேனி சுத்தஹிருதயமுள்ள தர்மிஷ்டர்களுக்கு ஆகாச வடிவினதாகத் தோற்றும். யமபுரம் என்று சொல்லும் காலாந்த (காலத்தின் எல்லை) பூமிகையாகிய அந்த நீலாகாசத்தில் நான் ஆகாசகமனஞ் செய்தகாலத்தில் அலையோய்ந்த சமுத்திரத்தில் மிதக்கும் மரக்கலம்போல் நிச்சலதேஹத்தோடு (சித்தவிருத்தி நிரோதன சக்தியால் இது பெறப்படும்) மிதந்துகொண்டு ஸம்ஸாரம் என்கிற ஸாஹரத்தின் கரையைக்கண்டு களித்ததுண்டு.

ஆனால் நாசிகேதாக்னி யுபாஸனைக்கு ஆவரணபூஜை அவசியமில்லையாதலால், அந்த அக்கினி மத்தியில் வசிக்கும் குப்தவித்யேசுவரியைச்சூழ்ந்துள்ள யோகினி கணங்களை யான் வந்தனை வழிபாடுகளால் அனுகூலப் படுத்திக்கொண்டதில்லை. பெரிய இடத்து வேலைக்காரர்களைப் பராமரிப்பாய் விடுவது எப்பொழுதும் அநர்த்த ஹேதுவுக் கிடமாமென்பது என் விஷயத்தில் உண்மையாயிற்று.

வைகாசிமாசம் நாலாந்தேதி ஜகத்துக்கெல்லாம் ஒரு கண்போல விளங்கும் ஸவிதா தேவதையான சூரியபகவான் அக்னி நக்ஷத்திரத்தில் (கிருத்திகையில்) பிரவேசித்து உச்சியில்வரவும், மனதுக்கதிஷ்டமான சந்திரன் மூன்றுங்கலை யிழந்த சமயம் பார்த்து ராகுத் தோஷம் பற்றச் செய்தது. அப்பொழுதுண்டான அனுராகத்தில் மஹமாரிகண்ட ஒரு குழந்தையின் மீது அனுதாபத்தால் மனம் பதிந்து யோகஸம்யமத்தில் ஐக்கியம் ஸம்பவிக்க, தேஹம் காய்ந்த மரத்தில் காட்டுத்தீ பற்றிக்கொண்டதுபோல் தாபாக்கினியால் எரியலாயிற்று! "மஹாமாரி" என நன்றாகப் பேரிட்டார்கள்: அப்பேருக் கேற்கவே தேஹ ரக்தத்திலுள்ள ஜீவாணுக்களை நன்றாக மாரகஞ் செய்தாள். ஜீவாணுக்கள் ரக்தத்தில் உஷ்ணாதிக்கத்தினால் மரிக்கவும், ரக்தத்தில் கொதிப்பும் நொதிப்பு முண்டாயிற்று. கொதிப்பு நொதிப்புண்டானால் ஜ்வரமும் தானே வரும்! இது தேஹ தர்மம். அஹம் சீறியே குளிர்ந்த பின் தேஹம் சுட்ட சாம்பலாய் நீற்றுப்போகும். இந்த அவஸ்தையில் குப்தயோகினிகளின் கிருத்திரமத்தால், ரஸபாஷாணமும் ரக்தத்தில் சேரத்தக்க வைத்திய சிகிச்சை கிடைத்தது. ஆடியோய்ந்த பாம்பைப் பாடியெழுப் பாது குச்சியெடுத்துக் குத்தி வதைக்கும் குதர்க்கச் சிறுவர் செய்கைபோல், ரஸபாஷாணம் ரக்தத்தில் சுவரவும், நாடி நரம்புகளெல்லாம் நாக ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு கிளம்பின! எழுபத்தியீராயிரம் பாம்புகள் ஏககாலத்தில் சீறிச் சினந்து ஒருவனை யுள்ளிருந்து பிடுங்கினவென்றால், அவன் எவ்வளவு சுகமனுபவிப்பானோ அவ்வளவு சுகமும் அநிச்சாப்பிராரப்த வசத்தால் அனுபவிக்கலானேன். ஆகாச ரூபியாய் தர்மஸ்வரூபியாய்த் தரிசனங்கொடுத்த யமன், காலாந்தகனாய், ஸர்வபூதக்ஷயனாக வந்து தேஹத்தின் நாடி நரம்புகளில் புகுந்து இந்த ஒன்பது வாசற் கோட்டையை நிர்த்தூளி செய்யக் கண்டேன். அந்தர் முகத்தில் ஆனந்த சுந்தரியாய் அனுகூல தேவதையாயிருந்த குப்தவித்யேசுவரி, மனம் பஹிர்முகப்பட்டபொழுது அவித்யா ஸ்வரூபியாய் அநர்த்தம் விளைப்பவளாய்த் தோன்றினாள்.



இந்திரியங்களெல்லாம் எரிந்து போயின: உட்கருவிகளெல்லாம் உலர்ந்து போயின: ஆலகாலவிஷம் தீண்டியதுபோல் தேஹமெல்லாம் தீப்பற்றி யெறிந்தது. எரிச்சல் பொறுக்கமாட்டாமல் தண்ணீர்த் தொட்டியில் அமிழ்ந்து கிடந்தேன். தாபஸாக்னியோடு, தாபாக்னியும் மருந்தின் வேகாக்னியும்சேரவே, அக்னி தாபம் பொறுத்த லரிதாய்விட்டது. கோரரூபமான யமன் பஹிர்முகப்பட்ட மனதுக்குப் பார்க்க பயங்கரமாயிருந்தான். நான் எப்பவும் சாவுக்கு பயப்பட்டவனல்ல! ஆனால் இப்படிப்பட்ட சாவை நான் ஸ்வப்னத்திலும் விரும்பினவனல்ல. ஸ்வ ஸங்கல்பமின்றி யொன்றும் தானாய் வந்து சேராது என்கிற தைரியத்தினால் தேஹத்துக்கு வேண்டிய உபசாந்திகளைச் செய்துகொண்டு கட்டுக் கடந்தோடிய மனசை முன்னால் வசப்படுத்திக் கொண்டேன். மனசு வசப்படவும் தேஹத்தின் தாபாக்னி சாந்தப்படலாயிற்று. சாந்தப்படவும், சாந்தகுண சம்பந்தனான ஒரு யுவனோடு மனங் கலக்கக் கண்டு அவனை யழைத்துவந்து உண்மையைச் சொன்னேன். அவன் "அஷ்டாங்க ஹிருதயத்"திலிருந்து ஒரு ரகஸியத்தை யெடுத்துச்சொல்ல, அது எனது ஆந்தரபாவனைக்கு மொத்திருக்க, "கிருதகிருத்திய பூசனையால் திருவருட்பாலுண்டேனே" யென்ற திருமந்திர உடம்பச்சத்துக்கு நூதனமாக ஒரு அருத்தம் உதித்தது. "கிருத கிருத்தியம்" என்பதற்குப் பதார்த்தம் செய்தால் (கிருதம்=நெய்; கிருத்தியம்=யஞ்ஞம்) "நெய்யினால் ஹோமம் செய்வதாட் யஞ்ஞம்" என்றும் பொருள் தரும். அந்த யஜ்ஞத்தை தேஹத்திலுள்ள வக்நிகலைகளைத் தியானித்து, சுத்த நெய்யைக்கொண்டு ஜாடராக்னியில் ஹோமஞ்செய்து பூஜித்தேன். அக்னியின் தாபமும் குறைந்தது. உட்கருவிகளெல்லாம் வெந்து நீறானவை வேக்காடு தணிந்து, பட்டமரம் துளிர்த்தாபோல் துளிர்விடலாயிற்று. இன்றைக்குச் சரியாக ஒரு மாசமாயிற்று: எல்லாம் வெந்து நீறாகச் சாம்பலாய்த் தஹித்த ஜாடராக்னி, சாந்தியடைந்து, செந்தழல்விட்டு ஜ்வலிக்கத் துவக்கியது. நாடி நரம்புகளிலெல்லாம் உயிர்பற்றி ஊனை வளர்க்கலாயிற்று. மனமோ புடம்போட்ட தங்கம்போல் அழுக்கு நீங்கிப் பிரகாசிக்கலாயிற்று. இப்படி அதிசயமாயுள்ள யமதர்சனம் கண்டகாட்சியையும் அனுபவத்தையும் உள்ளதுள்ளபடி வஞ்சனையின்றி வரைந்தேன். கண்டவர் கேட்டவர் காணுதலைக் கண்டவர் அவரவர் உள்ளம்போல் உண்மையை ஓர்ந்துணர்வாராக. ஜீரணமான தேஹத்தை ஜீர்ணோத்தாரணம் செய்யும் வழியைப் பற்றி யிங்கு சொல்வதற்கு இடமில்லை.

K. S. S. A.

## கல் தச்சன்

ஜப்பான் தேசத்திலே ஒரு காலத்தில் மிகவும் ஏழையான ஒரு கல் தச்சன் இருந்தான். அவன் ஒரு சாதாரண வேலைக்காரன். மிகவும் கடினமான தொழில்; அற்பமான கூலி இக்காரணங்கள் பற்றி அவனுக்குத் தன் தொழிலில் திருப்தி இல்லாமல் உழைத்துக் கொண்டிருந்தான்.

"நல்ல பட்டாடைகளோடு, மிகவும் மிருதுவான இலவம் பஞ்சு மெத்தைகள் மீது என்றைக்காகிலும் சயனிக்கும் அவ்வளவு பெரும் பாக்கியம் எனக்குங் கிடைக்கப்போகிறதா" என்று இங்ஙனம் அடிக்கடி அவன் வானை நோக்கி முறையிடுவது வழக்கம். ஒரு நாள் ஆகாயவாணி அதனைக்கேட்டு "உன் இஷ்டம் போல் ஆகுக" என்றாள்.

கல் தச்சன் தனிகனாய் விட்டான்; மிகவும் சேர்த்தியான பட்டாடைகளோடு இலவம்பஞ்சு மெத்தையின் மேல் சயனித்துக் கொண்டிருக்கிறான்.

ஜப்பான் சக்ரவர்த்தி தன் பரிவாரங்களுடன் ஆடம்பரமாக வீதியில் சென்றுகொண்டிருக்கிறார்; முன்னே காலாட்களும் குதிரை ஆட்களும் ஓடுகின்றார்கள்; பின்னே ஒரு குதிரைப்படை; சக்ரவர்த்தியைச் சூழ்ந்துகொண்டிருந்தவர்களுள் சிலர் சாமரை வீசுகிறார்கள்; வேறு சிலர் பொன்மயமான ஒரு பெரிய குடையைத் தாங்கிக்கொண் டிருக்கின்றார்கள். இந்த ஆடம்பரத்தைக் கல்தச்சன் கண்டுவிட்டான்.

"அளவிறந்த பரிவாரங்களோடும், பொன்மயமான குடையோடும், நான் வெளியே உலாவும்படியான அதிகாரம் எனக்கில்லாதவரையில் இப்போதுள்ள பெரும் பாக்கியத்தால் என்ன பயன்? நான் ஏன் சக்ரவர்த்தியாக இல்லை?" என்று முறையிட்டான்.

"அங்ஙனமே ஆகுக" என்றாள் ஆகாயவாணி. கல் தச்சன் உடனே சக்ரவர்த்தி ஆகிவிட்டான்; அவனுக்கு முன்னும் பின்னும் குதிரைப்படை; அவனைப் புடை சூழ்ந்துகொண்டு அநேகர் அவனுடைய தலைக்குமேல் ரத்ன கசிதமான ஒரு பெரும் பொன் குடையைப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

சூரிய தாபம் பொறுக்கக் கூடியதாயில்லை; சூரியன் தன் கொடிய கிரணங்களால் பூமியை வறட்டுகிறான்; புழுதி நிறைந்த பாதைகள் அக்கிரணங்களைப் பிரதி

பலிக்கச் செய்கின்றன ; எங்கும் அனல், திமயம். கண் திறந்து பார்க்க முடியவில்லை.

"சூரியனுக்கு முன் செங்கோலா?" என்றான் கல் தச்சன். "நான் சக்ரவர்த்தியாக இருப்பதில் என்ன பயன்? சூரிய வெப்பத்தைச் சகிக்க முடியவில்லையே! சூரியன் ஆணை பெரிதாக இருக்கின்றது. ஆஹா! நான் சூரியனானல்........"

"சரி, உன்னைப்பார், திருப்திதானா" என்றாள் ஆகாயவாணி. உடனே கல் தச்சனாகிய சக்ரவர்த்தி சூரியனாகி விட்டான்; அவன் தன் கிரணங்களைக் கொண்டு மேலும், கீழும், வலப்பக்கமும், இடப்பக்கமும், எங்கும் கொளுத்த ஆரம்பித்து விட்டான். பூமியிலுள்ள புற்களையும், சக்ரவர்த்திகளின் முகங்களையும் கொடூரமாக எரிக்கின்றான்.

ஓஹோ திடீரென்று சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் ஓர்மேகம் வந்துவிட்டது; அது சூரியனுடையகதிர்களைப் பூமிக்குச் செல்ல வொட்டாமல் தடுத்துவிட்டது.

"ஆஹா" என்றான் சூரியன்; "என்னமமதை! என் ஆணையை ஒரு மேகம் அதிக்கிரமிக்கின்றதா? ஆகையால் மேகம் பலவான் : நான் என் மேகமாயில்லை?"

"ஓ! உன் எண்ணம் நிறைவேறிவிட்டது பார்" என்றாள் ஆகாயவாணி.

மாறுதல் நடந்தாயிற்று; புதியமேகம், அதிக கர்வத்தோடு, சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் அநேக மைல்கள் தூரம் பரவியிருந்தது; அது எவ்வளவு பலமாகச் சூரிய கிரணங்களைத் தடுத்ததென்றால் அதனால் நிழலை அடைந்த பூமியின் பாகங்களெல்லாம் பசுமையாகிவிட்டன. பிறகு நல்ல மழை; எங்கும் பெருவெள்ளம்; நதிகளும், ஏரிகளும் கரை புரண்டன. வயல்களில் ஜலப்பிரளயம்; வெள்ளத்துக்கு எதிர்த்த வஸ்து ஒன்றுமில்லை; மரங்கள், மிருகங்கள், வீடுகள், காடுகள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டன. ஆனால் ஓரிடத்தில் மாத்திரம்; ஒரு பெரும் பாறை, ஒரே ஒருகல், ஆடாமல், அசையாமல், வெள்ளத்தை எதிர்த்து நின்றுகொண்டிருக்கிறது. உரத்த இரைச்சலோடு வரும் வெள்ளம் மிகவும் வலுவாக அதனைத் தாக்குகின்றது. பாறை அசையவில்லை ; ஜலமானது நுரையை கக்கிக்கொண்டு அதனுடைய காலில் வந்து மாய்கின்றது.

"ஒரு கற்பாறை என்னை எதிர்க்கின்றதா? சரி, நான் கற்பாறையாக ஆசிக்கின்றேன்" என்றது மேகம்.

"ததாஸ்து" ஒன்றாள் ஆகாயவாணி

புதிய கருங்கல், மிகவும் கர்வமாகத் தலையைத் தூக்கிக்கொண்டு, சூரிய கிரணங்களால் சரிக்காமலும், வெள்ளங்களைப் பற்றிக் கவலையில்லாமலும் குழப்பமான அலைகளின் மோதல்களால் அசையாமலும் நின்றுகொண்டிருக்கிறது.

ஆயினும் அப்பாறையின் அடிப்பக்கத்தில், ஓர் எளிய மனிதன் நின்றுகொண்டிருக்கின்றான் ; அவன் கந்தையாகிய உடையும் கைகளில் உளியும் சம்மட்டியும் தரித்திருக்கின்றான் ; அவ்வாயுதங்களைக்கொண்டு அப்பாறையைச் செதுக்கித் தள்ளுகின்றான்.

"என்ன" என்றது பாறை. "ஒரு மனிதனுக்கு இவ்வளவு சக்தியா? எதற்கும் அசையாத என்னை, இவன் இச்சிற்றுளிகொண்டு கொஞ்சங் கொஞ்சமாக வெட்டுகின்றானே! ஆகையால் நான் அவசியம் மனிதனாவேன்."

"உன் எண்ணம் போல் ஆகுக" என்றாள் ஆகாயவாணி.

பாறை கல் தச்சனாகி விட்டது. பழைய கல் தச்சன் ; ஓர் எளிய கல் தச்சன் ; சாதாரண வேலைக்காரன் ; மிகவும் கடினமான தொழில். அற்பமான கூலி. ஆனால் தன் தொழிலை மிகவும் திருப்தியோடும் உற்சாகத்தோடும் செய்து கொண்டு வந்தான்.

புரொபெசர். N. சுப்பிரமணிய ஐயர்.
சக்ரவர்த்தினி,

## ஓர் பிரார்த்தனை

பூர்வீகமுத விதுவரை வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பிரசித்திபெற்றுள்ள அடியிற்கண்டபடி அம்ஸம்பொருந்திய நங்குலோத்தமர்களின் திவ்விய நாமதேயங்களையும் அவர்களது வாசஸ்தலங்களையும் தெரிந்துகொண்டிருக்கிற ஒவ்வொரு கனவான்களும் கூடிய சீக்கிரத்தில் சவிஸ்தாரமாக வெழுதியனுப்புவீர்களென் றெதிர்பார்க்கிறேன்.

1. சித்புருடர்களும் அவர்களாற் செய்த நூல்களும்.

2. சமஸ்கிருத, ஆந்திர, திராவிட வித்துவான்களும் அவர்களாற் செய்துள்ள நூல்களும்.

3. யாகாதி கிருதுக்களை நடத்திய தலைவர்களும், அவைகளைக்கூட இருந்துநடத்தியபௌரோஹிதர்களும்.

4. அக்கிஹோத்திரம் செய்தவர்கள், செய்பவர்கள்.

5. பஞ்சப்ரம்ஹயாகம் செய்தவர்கள், செய்பவர்கள்.

6. சிற்பசாஸ்திர நிபுணர்களும், அவர்களாற் செய்யப்பட்டிருக்கின்ற தேவாலயங்கள், விக்கிரகங்கள், கோபுரங்கள், இரதங்களும், அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்ற சுதந்திரங்களான தவமகிமைகளும்.



7. எஜமானஸ்தானங்கள்.

8. சுயார்ச்சிதமாகவாவது, யாசகார்த்த மெடுத்தாவது, காமாக்ஷியம்மன் தேவாலயம், இதர தேவாலயம், தருமச்சத்திரம், தண்ணீர்ப்பந்தல், மடம் முதலியவை உண்டுசெய்தவர்கள்.

9. மேற்கண்ட தருமங்களுக்காக தமது சொத்துகளை தான்மாக எழுதிவைத்திருக்கிற புண்யவான்கள் புண்யவதிகள்.

10. காருண்ய கவர்ன்மெண்டாரவர்களிடம் கௌரவப்பட்டம் பெற்றிருக்கிறவர்கள்.

11. கவர்ன்மெண்ட் ஆபீசுகளிலாவது இந்து அரசர்கள் சமஸ்தானங்களிலாவது ஜமீன்தாரிகளிடத்திலாவது சிறந்த உத்தியோகத்திலிருந்தவர்கள், இருப்பவர்கள்.

12. B. A. முதல் உயர்தரக்கல்வியிற் பட்டம்பெற்றவர்கள்.

13. பிரபுத்துவ முடையவர்களா யிருந்தவர்கள். இருப்பவர்கள்.

14. டிஸ்டிரிக்டு போர்டு, தாலூகா போர்டு, முனிஸிபல் கௌன்ஸில், யூனியன், பெஞ்சு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு, கிராம பெஞ்சு கோர்ட்டுகளில் மெம்பர்களாயிருந்தவர்கள், இருப்பவர்கள்.

15. செஷன் கோர்ட்டுகளில் ஜூரி அல்லது அஸெஸர்களாயிருந்தவர்கள் இருப்பவர்கள்.

16. தேவாலயங்களில் கமிட்டிகள், டிரஸ்டிகள், தர்மகர்த்தாக்களாயிருந்தவர்கள், இருப்பவர்கள்.

17. வலங்கை, இடங்கைச் சண்டைகளை நடத்தினவர்கள்.

18. மெக்கானிக்கல் ஒர்க்ஷாப்பும், தொழிற்சாலையும் வைத்திருந்தவர்கள், வைத்திருப்பவர்கள்.

19. நகாஸ்வேலை, கட்டடவேலை, குந்தனவேலை, சிலாவிக்கிரகவேலை, தாம்பிர விக்ரகவேலை, தந்தவேலை, சித்திரவேலை தனித்தனி செய்திருப்பவர்களும் செய்பவர்களும்.

20. சிவராஜயோகிகளாயிருந்தவர்கள் இருப்பவர்கள்.

21. வாக்கு வித்துவான்கள்.

22 குலோத்தாரண விஷயத்திற்காகப் பாடுபட்டிருப்பவர்கள், பாடுபடுகிறவர்கள்.

23. வேதபாடசாலை ஏற்படுத்தியிருக்கிறவர்கள்.

24. அச்சுக்கூடம் வைத்துக்கொண் டிருக்கிறவர்கள்.

25. தமிழ்ப் பத்திரிகை பிரசுரஞ்செய்கிறவர்கள்.

26. தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வியாச தானமளிப்பவர்கள்.

27. பொது ஜன சபைகளில் பிரசிடெண்டு, வைஸ் பிரசிடெண்டு அல்லது மெம்பர் ஸ்தானம்பெற்றவர்கள்.

28. இராஜபக்தி விஷயமாகவும், பொது ஜன நன்மைக்காகவும் தலையிட்டுக்கொண்டு வேலை செய்தவர்கள், செய்பவர்கள்.

29. ஜோதிட சாஸ்திரிகள்.

30. குலதர்ம நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியவர்கள்.

31. ஷை நூல்களை இயற்றி அச்சிடப்பட்டவர்கள்.

32. சத்தியாராதனைக் காரர்கள்.

33. சுப்பிரமண்ய உபாசனைக்காரர்கள்.

34. அஷ்டாவதானிகள்.

35. விகடப் பிரசங்கிகள்.

36. சங்கீத வித்து வான்கள்.

37. பகவத் காலக்ஷேபஞ் செய்த பரம பாகவதர்கள்.

38. நாடகத்தில் பிரசித்தி பெற்றவர்கள்.

39. பகவத் பணிவிடைசெய் புண்யவான்கள் புண்யவதிகள்.

40. வைதீக கர்மானுஷ்டானங்கள் வழுவாது வேதோக்தப்படி சுபாசுபகிரியைகளை நடத்தியவர்களும் நடப்பிவைப்பவர்களுமான பௌரோஹிதர்கள்.

41. நமது சபைகளும், அதிகாரிகளும், அவைகளேற்படுத்தப்பட்ட காலங்களும்.

42. வேதப்பிரசங்க வித்துவான்கள்.

43. புராணப்பிரசங்க வித்துவான்கள்.

44. மைசூர் சந்தைப்பேட்டை, பிரம்ஹஸ்ரீ சுப்பராய ஆச்சாரியார் அவர்களால் அச்சிடப்பட்டிருக்கின்ற நங்குல சம்பந்தமான தீர்மானங்களின் பெயரும் அவைகளிலடங்கியிருக்கின்ற சங்கியைகளின் சுருக்கமும்.

V. மௌனாதுரு ருத்திர மூர்த்தி ஆச்சாரியார்.
திருச்சி விஸ்வப்பிரம்ஹ மஹாஜன சென்ட்ரல் சபை வைஸ்பிரசிடெண்ட் & Ex. முனிஸிபல் கௌன்சிலர்
பழனி ஸ்தலம்.

## துலிங்கபக்ஷி

ஜந்து வர்த்தமான சாரத்தில் மாயூரம் முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. ......ய ஐயர், பின்வருமாறு எழுதுகிறார்:—

ஸம்ஸ்க்ருத நூலாசிரியர்கள் துலிங்கபக்ஷி அல்லது துளிங்கபக்ஷி என்றதொரு பறவை இருக்கிறதென்று கூறுவர். இப்பறவை ஸாஹஸமான கார்யத்தில் முனைந்து செய்து ஜயம் பெறுமாம். ஆனல் அப்பக்ஷி, தன்னுடைய செய்கைகளைக்கொண்டு, பிறரை அப்படியான கார்யம் செய்யாதே என்று வற்புறுத்திச் சொல்லுகிறதாம். பிறருக்குமட்டும் உபாத்தியாயராயிருந்து, தன்னுடைய கார்யத்தில் பிறர் குற்றம் எடுத்துச் சொல்லும்படியாக வைத்துக்கொண்டிருப்பவர்க்கு இப்பக்ஷியை உவமித்துக் கூறலாம். தாம் செய்யும் கார்யம் உபத்ரவம் விளைக்கும் என்று தெரிந்தும், அக்கார்யத்தில் பிடிவாதமாய் ப்ரவேசித்தலில் முனைந்து நிற்கு மொருவரையும் இப்பக்ஷிக்கு ஒப்பிடலாம். ஆனல், இப்பறவை பிறரைத் தன்னுடைய செய்கையினல், அம்மாதிரியான பிடிவாதமான கார்யத்தைச் செய்யாதிருக்குமாறு அறிவிக்கிறது.

துலிங்கம், துளிங்கம் என்று ஸம்ஸ்க்ருத நூலாசிரியர்கள் தமது க்ரந்தங்களில் எடுத்தாண்டிருக்கும் பறவை, காடுகளில் ஸிம்மங்கள் வஸிக்கும் குகைத் வாரங்களுக்கு அருகிலுள்ள மரங்களில் வஸிக்கின்றன. இவைகள் மிகவும் கொழுத்த மாம்ஸங்களைப் பக்ஷிப்பதில் ப்ரியமுள்ளவை. இப்பக்ஷிகள், மரங்கொத்தி, மீன்கொத்தி முதலிய பறவைகளைப் போன்று, கூரிய மூக்குடையன எனத் தெரிகின்றது. இவை ஸிம்மங்கள் தம்மிரையை உட்கொண்டு ஆயாஸத்துடன் படுத்து நித்திரை செய்யுமிடங்களில் ஸதா வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. அச்சிங்கங்கள் மூச்சு விடுவதற்கு வாய்திறக்கும் ஸந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டே யிருந்து, ஸமயம் பார்த்து, இப்பறவை, அதன் வாயில் தன் கூரிய மூக்கை விட்டு, அச்சிம்மங்களின் பல்லிடுக்குகளில் மாட்டிக்கொண்டிருக்கும் மாம்ஸத்துண்டங்களைச் சிரமமில்லாமல் கொத்தியெடுத்து உண்டு ஜீவித்து வருகின்றது.

அச்சிங்கத்தின் வாயில் அகப்பட்டு உயிர்மாளக் கூடிய ஸந்தர்ப்பமாயினும், அதற்கும் துணிந்து, இம்மாதிரியான ஸாஹஸச் செயலை இப்பட்சி செய்வது மிகவும் ஆச்சர்யமன்றோ? இம்மாதிரியான ஸாஹஸமுள்ள கார்யத்திலேயே எவரும் தலையிடக்கூடாதென்று இப்பட்சி தன்செயலினல் வற்புறுத்துகிறது. ஆகவே, இவ்வுபயோகமுள்ள பட்சியை யடித்து அதை ஆஹாரமாகத் தம் குட்சிபாதைக்கென்று உபயோகப்படுத்த எவருக்கு மனம் வரும்! ‘கொல்லாமை முன்னினிது’ என்ற கபிலதேவர் வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது.

## அதிமதுரம்

காளமேகர் ஒரு காலத்தில் மதுரைமாநகரத்தின் கடைவீதி வழியாகச் செல்கையில் தமக்குப் பசியாக விருந்ததனிமித்தம் காத்தான் என்னும் ஒரு பிரபுவைக் கண்டுதெரிவிக்க, அவர் ஒரு பணம் கொடுத்து விடுதியிற்போய்ச் சாப்பிடும்படி சொல்ல, அது கண்ட அவர் தம்பியும் இவர் கல்வித்திறமையும் வாக்கையும் கேட்டு தாமும் இரண்டு பணம் கொடுத்து போஜனம் செய்து விட்டுவரும்படி சொல்ல, இவர் அந்த மூன்று பணத்தையும் ஓர் அக்கிராரத்திற் கொண்டுபோய்க் கொடுத்துத் தமக்குச் சாதங்கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அவ்வீட்டுக்காரப் பார்ப்பான் பணத்தை எப்படியாவது அபகரித்து விடவேண்டுமென்று எண்ணி, காளமேகத்தை யாரோ ஒரு பைத்தியக்காரன் என்று உட்காட்டுக்கு அழைத்துப்போய் அன்னம் இல்லாததால் தன் கூடையில் அடுக்கிவைத்திருந்த முறுக்குகளை எடுத்து வளையல்மாதிரியாக இரண்டு கைகிறையப் பூட்டி வெளியில் போகும்படி சொல்ல, இவர் அந்த முறுக்குகளை கையில் கோத்தபடியே கொண்டுவந்து அந்த வீட்டுக்கு முன்பாகத் தெருவில் நின்றுகொண்டு,

கப்பணந்தந்தான் மதுரைக்காத்தான் அவன்றம்பி
உப்பணந்தந்தான் தமிழையோ திரேனம்-முப்பணமும்
கப்பணமாய்மாற்றிக் கடையில் வளையலிட்டார்
அப்படியே போவார் அவர்.

என்று ஒரு கையை எடுத்து மற்றக்கையின்மேல் மோதிமோதிச் சுக்கல் சுக்கலாக உடைத்தனராம். இதுகண்டவர்கள் அஞ்சிக் காளமேகம் என்று தெரிந்து அவரை வரவழைத்துக்கொண்டுபோய் தக்கபடி உபசரித்தனராம்.

[க பணம்-ஒரு பணம்; உ பணம்-இரண்டு பணம்; அரர் என்றது-வளையல் இட்டவரை என்பதாம்.]

கா. திருவேங்கட ஆச்சாரி.

---

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிராணடி பேணுர்
பெறுதற்கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந்தாரே,

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1915ஞு டிசம்பர்மீ [சஞ்சிகை 3

## ஒளிவளர் விளக்கு

1915ஞு நவம்பர் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை 325.

* * *

நமது சபையின் நிர்வாகக்கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப் பட்டவர்களில், ஸ்ரீ N. முத்தியாலைய ஆச்சாரியாரவர்கள் அந்த ஸ்தானத்தை அங்கீகரிக்காமையினல், அவருக்குப் பதிலாக ஸ்ரீ கு. சு. பாலசுந்தர ஆச்சாரியார் யார் அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

* * *

இம்மாகாண கவர்ன்மெண்டார் பம்பாய் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் இம்மாகாணச் சிறுவர்கள் வாசிப்பது சாத்தியமாகும்படி மாதம் 30 ரூபாயில் 6-ஸ்காலர் ஷிப்புகளுக்கு மேற்படாமல் கொடுப்பதாய்ச் சொல்லுகிறார்கள். அவைகள் 4-வருஷங்களுக்குக் கொடுக்கப்படும். 1916-ம் வருஷம் ஜூன்மாதத்தில் அந்த இன்ஸ்டிட்யூட்டில் போய்ச் சேரவேண்டியதாயிருக்கும். அந்த ஸ்காலர்ஷிப்புகளுக்கு விண்ணப்பம் போட விருப்பமுடையவர்கள் சென்னை தொழில் டைரெக்டருக்கு அடுத்த பிப்ரவரி மாதம் 1-ந் தேதிக்குள்ளாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி விடவேண்டும். விண்ணப்பதார்கள் சென்னை யூனிவர்ஸிடி பட்டதாரிகளாகவாவது, இல்லாவிட்டால் இண்டர்மீடியேட் பரீட்சை பாஸ் செய்தவர்களாகவாவது இருத்தல் வேண்டும். அந்த காலேஜ் டிப்ளோமாவைப் பெறத் தவறிப்போகிறவர்கள் தாங்கள் வாங்கிய ஸ்காலர்ஷிப் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடும்படியாகும். மற்றவிவரங்களுக்கு போர்ட் ஸெயிண்டு ஜார்ஜ் கெஜட்டைப் பார்த்துக்கொள்ளலாம்.

* * *

ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜப்பான் ஜனங்கள் எழுதப் படிக்கக்கூட அறிந்தவர்களல்லர். ஜப்பானைத் தவிர வேறு தேசங்களுண்டென்பதுகூட அவர்களுக்குத் தெரியாது. அன்னிய தேசங்களுக்கும் ஜப்பானுக்கும் போக்குவரத்தே இருந்ததில்லை. சில டச்சுக்கப்பல்கள் மாத்திரம்போய் பட்டுசாமான்களை ஏற்றிக்கொண்டு போகும்; அவைகளைத்தவிர வேறு கப்பல்கள் அங்கு போகக்கூடாது. பூமிதிருத்திப் பாடுபடு வதையும் பட்டுவளர்ப்பதையும் தவிர வேறு எவ்விதத் தொழிலையும் ஜப்பானியர் அறிந்ததில்லை. உழைத்து சம்பாதித்த ஊதியத்தை நிலக்காரனுக்குக் கொடுத்துவிட்டு, கஞ்சியையோ கூழையோ குடித்து வயிறு வளர்ப்பதைவிட பெரிய போகங்களுண்டென்பதை அத்தேச ஜனங்கள் அறியார். அவ்வித நிலைமையிலிருந்த ஜப்பான் இன்று எப்படி இருக்கிறது! ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகள் எல்லாம் ஜப்பானுடைய ஸ்நேகத்திற்குப் போட்டி போடுகின்றன. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படும் பண்டங்களெல்லாம் ஜப்பானில் அதிமேன்மையாகச் செய்யப்படுகின்றன.

## பண்டித கான்பரன்ஸ்

பண்டிதரொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

மிஸ்டர் C. R. சுப்பராய ஆச்சாரியார் பண்டித கான்பரன்ஸைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் கருத்துப் போல், பண்டிதர்களையெல்லாம் ஓரிடத்தில் திரட்டி ஒரு கான்பரன்ஸ் நடத்துவதின் உசிதத்தை நமது ஜாதிப் பிரமுகர்கள் கவனிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அரசாங்க சம்பந்தமாய் நமக்கு நடக்கவேண்டிய அநுகூலங்களைப் பெறுவதற்காக கான்பரன்ஸ் நடத்துவதற்கு பண்டித பாமரர்கள் முதலாகச் சகலமான பேர்களும் வேண்டும். அப்படியல்லாமல், ஜாதியின் ஆசாரங்களைப்பற்றியும், அவற்றில் செய்து கொள்ளவேண்டிய சீர் திருத்தங்கள் முதலியவற்றைப் பற்றியும் பேசித்தீர்மானிக்க பண்டித சபை போதும். பண்டித சபையைச் சேர்ப்பதற்கு அதிகச் செலவும் பிடிக்காது. மொத்தத்தில், எவ்வளவு அதிகமாய்க் கணக்கிட்டாலும், நூறு பேர்களுக்கு அதிகமாகச் சேர மாட்டார்கள். இவர்கள் மூன்று நாள் அல்லது இரண்டு நாள் கூட்டம் நடத்தினால் போதும். பொருட் செலவை ரூபா நூறு அல்லது இருநூறில் முடித்துவிடலாம்.

ஜாதி சம்பந்தமாய் 100-பண்டிதர்கள் சேர்ந்து விவாதித்து ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி ஒரு முடிவு செய்துவிடும் பக்ஷத்தில், உபந்நியாச மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும், புத்தகங்களினாலும் ஷை முடிவை வற்புறுத்திக்காட்டி, அதின் பிரகாரம் ஜாதியாரெல்லோரும் நடந்துகொள்ளும்படி வற்புறுத்தலாம். ஆனால், இதற்கு மடாதிபதிகளும், நாட்டாண்மைக்காரர்களும், காரியஸ்தர்களும் சகாயஞ்செய்யவேண்டும். இவர்களெல்லோருஞ் சேர்ந்துதான் நூறு பேராகலாமென்று கணக்குச் செய்தேன். இவர்கள் சகாயமில்லாவிட்டால், பண்டிதகான்பரன்ஸ் தீர்மானங்களை பொதுஜனங்கள் அங்கீகரித்து பின்பற்றும்படி செய்யமுடியாது.

பொதுக் கான்பரன்ஸ்களில் குலச் சீர்திருத்த சம்பந்தமாய்ச் செய்யப்படவேண்டிய தீர்மானங்கள் யாவை என்பதும் ஷை பண்டித கான்பரன்ஸிலேயே நிச்சயிக்கப்படும். இந்தப் பண்டித கான்பரன்ஸைச் சேர்ந்தவர்களே பொதுக் கான்பரன்ஸ்களில் பற்பல தீர்மானங்களைப் பிரேரேபிக்கவும், ஆமோதிக்கவும், ஆதரிக்கவும் ஏற்படுகிறவர்களாவர். ஆதலால், பண்டித கான்பரன்ஸ் என்பது யாரார் சேர்ந்து நடத்தத் தக்கது என்பது பலருக்கும் விளக்கமாகும். நமது ஜாதிக் கான்பரன்ஸ்களில் தலைமை வகிக்கவும், விஷயாலோசனைக் கமிட்டி மெம்பர்களா யிருக்கவும், ரிசலூஷன்களைப் பற்றி யெடுத்துப்பேசவும் யாரார் சக்தியுள்ளவர்களாக நமது ஜாதிக்குள் காணப்படுகிறார்களோ, அவர்களையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து நடத்துவதே பண்டித கான்பரன்ஸாகும்.

நமது ஜாதியினுடைய புத்தி யவ்வளவும் அங்கே திரண்டு நிற்கும். ஜாதிக்கு வழி காட்டியாக பண்டித கான்பரன்ஸ் கொள்ளப்படும். ஆனால், அந்தக் கான்பரன்ஸில் அபிப்பிராயபேதத்திற் கிடங்கொடுக்கும் விஷயங்கள் பொதுக்கான்பரன்ஸில் விவகரிக்கப்பட்டு தீர்மானமடையும். இன்னோரன்ன சட்டங்கள் ஷை பண்டித கான்பரன்ஸிலேயே முதன் முதல் ஏற்படுத்திக்கொள்ளப்படவேண்டும்.

கனம் C. R. சுப்பராய ஆச்சாரியாரவர்கள் பண்டித கான்பரன்ஸைப்பற்றி முழுவிபரங்களையும் நமது பத்திரிகைமூலமாக வெளியாக்கி, அது நடைபெறுவதற் கேற்றமுயற்சிகள் செய்ய முன்வருவாரென்று எதிர்பார்க்கிறேன். அவர் வெளியிட்ட இந்த அபிப்பிராயமானது மிகவும் சிலாக்கியமானதென்பதை யாரும் மறுக்கமுடியாது. இதைப்பற்றி அவர் பலகாலமாய் யோசித்திருக்கவேண்டுமென்றும், இதன் நடவடிக்கைகளைப் பற்றிய நுட்பங்கள் பல அவருள்ளத்திற் பதிந்திருக்குமென்றும் நான் நிச்சயமாய்ச்சொல்லுவேன். அவரோ நமது ஜாதியின் மேம்பாட்டைக்குறித்து சுமார் 25 வருஷங்களாக கவலை கொண்டிருப்பவர். அவர்போல் குலாபிமானம் பழுத்தவர்கள் நமது ஜாதியிற் பலரில்லை. அவருடைய கல்வி வல்லபமும் சாவகாசமுங் கொண்டவர்கள் மிகச்சிலரே. ஆதலால், அவர் தமது அபிப்பிராயத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தியதுடன் நிறுத்தாமல், மேல் இப்பண்டித கான்பரன்ஸ் நடத்துவதற்கான முயற்சிகளெல்லாம் செய்து அது நடைபெறும்படி முடித்துவைப்பாரென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

பண்டித கான்பரன்ஸ் நடைபெறுவதற்கு முன்னமே அதில் ஆலோசிக்கப்படவேண்டிய விஷயங்கள் யாவையென்று நமது பத்திரிகைமூலமாய் வெளிவந்தால், கான்பரன்சுக்கு வரும் பண்டிதர்கள் அவ்விஷயங்களைப்பற்றி நன்றாக ஆலோசித்துக்கொண்டு தமது அபிப்பிராயங்களை வெளியிடச் சித்தமாய் வருவார்கள். முக்கியமாய் அழைக்கப்படவேண்டிய பண்டிதர்கள் பெயர்களும் பகிரங்கமாய் வெளியிடப்பட்டால் எவரும் விடுபட்டுப் போகாதபடி காத்துக்கொள்ள முடியும். அவசரமில்லாமல் நிதானமாக இக்காரியத்தை ஆரம்பஞ்செய்து நடத்துவோமானால் மேலான லாபங்கள் சித்திக்கலாம்.

திருநெல்வேலி மடாதிபதி, சிதம்பரமடாதிபதி, ஜோஸ்யர் ஸ்ரீ முத்து ஆச்சாரியார், பண்டிதர் ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், ஸ்ரீ அத்தியாபக லிங்காச்சாரியர், ஸ்ரீ T. கேசவாச்சாரியார், ஸ்ரீ M. வேலாயுத ஆச்சாரியார், ஸ்ரீ S. கந்தசாமி ஆச்சாரியார், ஸ்ரீ S. ஆண்டிசுந்தர ஆச்சாரியார், திருச்சிராபள்ளி ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார், ஈரோடு ஸ்ரீ E. S. அர்த்தநாரி ஆச்சாரியார், கடவுள் சம்மதம் ஸ்ரீ மாணிக்க ஆச்சாரியார் முதலியவர்களுடைய சகாயம் இன்றியமையாததென்பதை நான் எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

---

அத்தேசக் கப்பல்கள் கூட்டங் கூட்டமாகக் கடல்களில் சஞ்சரித்து ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களுக்கு முக்கிய சாதனங்களா யிருக்கின்றன. ஜெர்மன் சரக்குகள் இந்தியாவில் இறங்கக்கூடாத காலம் வந்துவிடவே, அவைகளை ஜப்பான் கொண்டுவந்து குவிக்கிறது. உலகிலுள்ள எந்தப் பெரிய பட்டணத்திலும் ஜப்பானியர் இருக்கின்றனர். அமெரிக்காவில் நுழைந்து குடியேறுகின்றனர். ஜப்பானுடைய யுத்த முறைகளை யறிந்து வர, வல்லரசுகளின் ராணுவ நிபுணர்கள் அதனுடைய சேனைகளுடன் செல்கின்றனர். இவ்வளவு சிறப்பும் 150 வருஷ காலத்தில் அத்தேச கவர்ன்மெண்டின் அரசாக்ஷிச் சிறப்பாலும் கல்வி முறையாலுமே உண்டாயிருக்கிறது.



## நமக்குள் திருத்தங்கள்

### க. இராமசுவாமி ஆச்சாரி.

'திராவிடாபிமானி' யென்னும் பெயர்கொண்டதொரு பத்திரிகையிலிருந்து சென்ற ஜூலைமாதச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட வாக்கியங்கள் நம்மவர்களால் முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. இம்மாதிரியாக பல பத்திரிகைக்காரர்கள் எழுதிவருகிறார்கள். தனித்தனி பலஜனங்கள் சொல்லிவருகிறார்கள். "மற்ற அபிவிருத்திகளிலும், யதார்த்தம், ஐக்கியம், வியாபாரத்தில் நாணயம் தவறாமை முதலியவற்றிலும் அவர்களுக்குள் திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்று விரும்புகிறோம்"—என்று ஷை பத்திரிகை எழுதியிருக்கிறது.

"மற்ற அபிவிருத்திகள்" என்பது எவற்றைக் குறிக்கின்றதென்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. அந்தப் பதங்கள் எல்லாவற்றையும் குறிக்கலாம். யதார்த்தம், ஐக்கியம், வியாபாரத்தில் நாணயம் தவறாமை என்பன தெளிவாயிருக்கின்றன. இந்தக் குணங்கள் நமக்குள் குறைவா யிருக்கின்றனவென்பது திராவிடாபிமானியின் அபிப்பிராயமா யிருக்கவேண்டும். பொதுவாய் ஜனசமூகத்தினிடம் இக்குறைவு காணப்படுகிறதென்பதில் சந்தேகமில்லை. என்றாலும், மற்றெல்லா ஜாதியாரையும்விட்டு நமது ஜாதியைச் சுட்டி யெழுதுவது வழக்கமாய்விட்டது.

வியாபார முறைகளில் பல ஜாதியார்களும் யதார்த்தக் குறைவை எவ்வளவோ அதிகமாய்க் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், இதைப்பாராட்டி உலகத்தார் பேசுவது காணோம். ஐக்கியக்குறைவு இந்திய ஜனங்களிடத்தில் பொதுப்பட ஏற்பட்டிருக்கும் ஓர் பெருங்குறை யாதலால், அக்குறை நம்மிடமும் காணப்படுவது ஆச்சரியமல்ல. நம்மிலும் அதிக கல்வி கற்றவர்களாகவும் அதிகத் தெளிவுடையவர்களாகவுமிருக்கிற பலஜாதியார்களிடத்தில், நமக்குள் ஏற்பட்டிருக்கும் ஐக்கியக்குறைவிலும் விசேஷமான ஐக்கியக் குறைவு காணப்படுகின்றது. இக்காரணத்தினால் நாம் ஐக்கியக்குறைவா யிருக்கவேண்டுமென்று நான் சொல்லவரவில்லை. உள்ள நிலைமை இப்படி இருக்கிறதென்று காட்டவந்தேன். வியாபாரத்தில் நாணயந் தவறாமையும் பொதுவாய்ச் சொல்லப்படும் பழியே யென்னலாம்.

மற்றவர்கள் இப்பழிகளை எவ்வாறு ஏற்றுக்கொண்டபோதிலும், நாம் இவ்வித பழிகளுக்கு இடமுண்டாகாதபடி கூடியவரையிலும் காப்பாற்றிக் கொள்வதற்கே முயற்சி செய்யவேண்டும். ஏனென்றால், நாம் பிராம்மண ஜாதியார், மற்றெல்லாரிலும் பிறப்பினால் சிறந்தவர்கள். ஆதலினால், மற்றெல்லா ஜாதிகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாகவே யிருக்கவேண்டும். அப்போதுதான் மற்ற ஜாதியார்களுக்கு நாம் பிராம்மண ஜாதியாரென்ற மதிப்பும் மரியாதையும் தோன்றும். தாழ்வான ஜாதியார்கள் எவ்வளவு கேவலமான நடவடிக்கைகளுடையவர்களாயிருந்தபோதிலும், அதை உலகத்தார் ஒருபொருட்டாக எண்ணிக் குறிப்பிட்டுக் காட்டார்கள். உயர்வான நம்மைப்போன்ற ஜாதியார் மிகச் சிறிய பிழைசெய்தாலும் அதையே பிரமாதமா யெடுத்துக்காட்டுவார்கள்.

இந்தக்காரணத்தினாலேதான், பலஜாதியார்களிடத்திலும் பல குற்றங்கள் காணப்பட்டபோதிலும் அந்த குற்றங்களைப் பாராட்டிப் பேசாமல், நமது ஜாதியாரிடத்தில் காணப்படுங் குறைகளை மட்டுமே யாவரும் விஸ்தரித்துப் பேசக் கேட்டுவருகிறோம். அப்படிப் பேசுகிறவர்களைப் பழிப்பதில் பயனில்லை. அவர்களுடைய பழிச்சொல்லுக்குப் பாத்திரமாயிருக்கும் நமது சமூகத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும். இந்தத் திருத்தம் நாளுக்கு நாள் பரவிவந்தால் அந்தப் பழிச்சொற்கள் அகன்றகன்று பெருகிவிடும். ஆதலினால், நமது ஜாதியார்கள் இந்தத் திருத்தத்தில் கவனம் செலுத்தவேண்டும். கவனஞ் செலுத்தாமல் காலங்கழித்துக் கொண்டேயிருந்தால், பழிச்சொற்கள் இன்னுமின்னும் அதிகமாகும். அதிகமானால் அவற்றைக் காதுகொடுத்துக்

கேட்க நமக்குச் சகிக்காது. சகிக்காதபோது கோபமும் ஆவேஸமும் அதிகமாய்வரும்; மற்ற ஜாதியார்களோடு சண்டையிடச்செய்யும்; அவர்கள் விரோதம் ஏற்படும்; உலகவாழ்க்கை வெறுப்புக்கிடமாய்விடும். அவ்வளவு சங்கடங்களை நாம் வருவித்துக்கொள்ளலாகாது. வெள்ளம் வருவதற்குமுன் அணைபோடுவதே புத்திசாலித்தனம். ஆதலால், திருத்தங்கள் வேண்டியபடி செய்து கொள்ளவேண்டும்.

யார்செய்வது என்றகேள்வி பிறக்கலாம். யார் நமக்குள் பெரியவர்களென்று பார்த்தால் நமது மதாசாரியர்கள், நம்முடைய நாட்டாண்மைக்காரர்கள் முதலியவர்களென்றுதெரியவரும். அவர்கள்தான் அவசியமான திருத்தங்களைச் செய்யவேண்டும். இதற்கான மார்க்கங்கள் பல உண்டு. நமதுபத்திரிகைமூலமாக திருத்த போதனை செய்யலாம். புத்தகங்களெழுதிப் பிரசுரிக்கலாம். துண்டுப் பத்திரிகைகள் வெளிப்படுத்தலாம். பிரசங்கங்கள், காலக்ஷேபங்கள், நாடகங்கள் முதலியவற்றுல் போதனை செய்யலாம். உபந்நியாசகர்களை ஏற்படுத்தி ஊருக்கு ஊர் அனுப்பி அங்கங்கு உபந்நியாசஞ் செய்விக்கலாம். காண்பரன்ஸ்களை நடத்தி பலரைக் கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்து அநுஷ்டான முறைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்து அந்தத் தீர்மானங்களின் படி விஸ்வகர்ம சமூகத்தார் நடந்து சீர்திருந்தும்படி செய்விக்கலாம். இப்படிப் பல உபாயங்களும் சாதனங்களும் கையாளப் படவேண்டும்.

ஆனால், போதனையின்படி செய்யத் தவறுகிறவர்களுக்கு ஏதோ ஒருசிட்சைவிதிக்கும் ஏற்பாடு இருக்கவேண்டும். அப்படியில்லாதபக்ஷத்தில், நம்மவர்கள் அசட்டையாகவே இருந்துவிடுவார்கள். திருத்தங்களை நிர்ப்பந்தித்துச் செய்யமுடியாமற் போய்விடும். நாம் இதே நிலைமையிலிருக்கநேரிடும். ஆனபடியால், சிட்சை யேற்பாடு கட்டாயமாயிருக்கவேண்டும். சிட்சை விதிக்கும் அதிகாரத்தை மதாசாரியர்களும் எஜமானஸ்தானங்களும் கையாளவேண்டும். இதற்காக நமது ஜாதிக்குள் அதிகமான கட்டுப்பாடு வேண்டும். பல குடும்பத்தார்கள் இப்போது எஜமான ஸ்தானமில்லாமலே காலங்கழித்து வருகிறார்கள். இவர்களுக்கு யார் சிக்ஷைவிதிப்பது? இவர்கள் யாருக்கு அடங்குவார்கள்? இவர்களை ஒரு எஜமான ஸ்தானத்திற்கு உட்படுத்தவேண்டும். இப்படி அங்கங்கு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தி தக்ககட்டுப்பாட்டுச் சட்டங்களெழுதி அவற்றை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் நம்முடைய பஞ்சாயத்துகளை பலப்படுத்த வேண்டும். இதுதான் நாம் முதன்முதல் செய்யவேண்டியவேலை. இந்தவேலையைச் செய்துமுடித்தால், எல்லாதிருத்தங்களும் இலேசாய்க்கைகூடும். இல்லாவிட்டால் ஒருதிருத்தமும் நாம் செய்யமுடியாது. வீணாய்க்காலஹரண முண்டாகும். நான் சொல்வது மெய்யென்று இப்போது ஒத்துக்கொள்ளாதவர்கள் நாளாவட்டத்தில் ஒத்துக்கொள்வார்களென்பது நிச்சயம், நிச்சயம், முக்காலும் நிச்சயம்.

## பசுந்தாள் உரம்

(விவசாய காலண்டர்)

பின் வெள்ளாமை செய்யும் நெல் சாகுபடிக்கு உரமாமடித்து உழக்கூடிய பசுந்தாள் உரப்பயிர் செய்யும் பழக்கம் சென்ற சில வருஷகாலமாய் விசேஷமாய் வியாபித்து இருக்கிறதாகக் காணப்படுகிறது. அவ்வாறு வியாபித்து இருப்பதால் இந்த டிபார்ட்மெண்டார் பசுந்தாள் உரப்பயிர் எவ்விதமாய் நன்றாய் சாகுபடி செய்யக்கூடுமென்பதிலும் பின்வரும் நெல் வெள்ளாமையை அது எவ்வாறு உரப்படுத்தக்கூடும் என்பதிலும், நன்றாய் அனுபவப் பட்டிருக்கிறார்கள்.

2. பசுந்தாள் உரப்பயிர்களால் உண்டாகும் உரங்கள் பலவாறு. அந்த உரத்தின் அனுகூலம் முக்கியமாய் நிலத்தின் தன்மையைச் சீர்திருத்துகிறது. அநேக நஞ்சை நிலங்களில் இயற்கையிலேயே பயிருணவு விசேஷித்து வருந்தும் நிலத்தின் கெடுதலான மண்வயணத்தினால் முன் நெல் பயிர் பயிருணவை கிரகிக்க சக்தி இல்லாமையிலிருந்து, அதில் பசுந்தாள் உரப்பயிர் செய்து மடக்கி உழுததினால் நிலத்தின் தன்மையும் அதனால் வடிகாலும் சீராய், நெல்பயிர்க்கு உரத்தை உபயோகித்துக்கொள்ள சக்தி உண்டாகிறது. இவ்வாறு உண்டாகும் அனுகூலம் களர் நிலங்களில் விசேஷமாய்க் காணப்படுகிறது. அவ்விதமான நிலங்கள் அநேகமாய் உரக்காலானது. ஆனால் அதற்கு வடிகால் இல்லாமையினாலும், நெல்பயிரின் வளர்ச்சியை தடுக்கக் கூடிய உப்புகள் இருப்பதினாலும், நெல்பயிர் அதிலுள்ள பயிருணவை உபயோகிக்க சக்தியற்று இருக்கிறது. அவ்விதமான நிலங்களில் மடக்கி உழப்படும் பசுந்தாள் உரமானது மண்ணின வயணத்தையும் வடிகாலையும் சீர்திருத்துகிறது. ஜலத்தில் கரையக் கூடியவைகளான யாவத்து விஷ உப்புகளும் கரைந்து ஓடுகின்றன. அதனால் நெல்பயிர் நிலத்திலுள்ள பயிருணவைக் கிரகித்துக்கொள்ள சக்தி பெறுகிறது. இவ்வருஷம் சோளவந்தானுக்கு அருகில் களர் நிலத்தில் டையின்சா (தக்கைப்பூண்டு) பசுந்தாள் உரத்திற்காக சாகுபடி செய்யப்பட்டு மடித்து உழுததினால் நிலத்தில் கைப்பு உண்டாகி ஏக்ரா 1-க்கு 850-பட்டணம் படி நெல் கிடைத்தது. இந்த வயலில் இதற்கு முந்தி ஏகரா 1-க்கு 175-பட்டணம் படிக்குமேல் கிடைத்ததே இல்லை. முன்னால் கிடைத்த வெள்ளாமையைவிட ஐந்துபங்கு வெள்ளாமை ஜாஸ்தியாக கிடைத்து இருக்கிறது. ஆகிலும் களர் இல்லாத சாதாரண நிலங்களில் டையின்சா உபயோகப் படுத்தினதினால் சாதாரணமாய் உரம்போடுவதைக்காட்டிலும் விசேஷ வெள்ளாமையைத் தரவில்லை. இதற்குக் காரணம் என்ன? களர் இல்லாத நிலம் சாதாரணமாய் நல்ல வடிகால் அமைந்துள்ளது. அதனால் நெல்பயிர் எவ்வளவு பயிர் உணவை பூமியிலிருந்து கிரகிக்கக் கூடுமோ அவ்வளவு ஏற்கெனவே எடுத்துக் கொண்டு இருக்கிறது. அதாவது களர் இல்லாத நிலங்கள் வடிகால் அமையாத நிலங்களை விட வாஸ்தவத்தில்



இளைத்து இருக்கின்றன. அவைகள் பூரா உரத்திற்கு அதிக மாகுலைக் கொடுக்கின்றன. நன்றாய் விவசாயம் செய்யச் செய்ய பூரா பலனை கொடுத்துக்கொண்டே இருக்கிறது. பசுந்தாள் உரப்பயிர் தானே பூரா உரமல்ல. விவசாய டிபார்ட்மெண்டாரால் சிபார்சு செய்யப்படும் பசுந்தாள் உரப் பயிர்கள் காற்றிலுள்ள நைட்ரோஜனை (உப்பு வாயுவை) கிரகித்துக்கொள்ளும் சக்தியுள்ளவை. அவ்வாறு கிரகித்துக்கொள்ளப்பட்ட நைட்ரோஜன் நிரம்பவும் சிலாக்கியமான உரம். மற்ற எல்லா உரங்களைவிட நைட்ரோஜன் உரம் அதிக விலையுள்ளது. இது தவிர வயலில் ஏற்கெனவே இல்லாத வேறே எவ்விதமான பயிருணவையும் பசுந்தாள் உரப் பயிர்கள் தரக்கூடியவையல்ல. வருஷா வருஷம் அதே நிலத்தில் நெல் வெள்ளாமை செய்வதினால் வயலிலுள்ள *பிரகாசதம் உரம் அதிகமாய் எடுபட்டு விடுகிறது. நெல் வெள்ளாமை எவ்வளவுக்கு எவ்வளவு ஜாஸ்தியாய் உண்டாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஜாஸ்தியாய் பிரகாசதம் உரம் பயிரினால் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆதலால் நல்ல வடிகால் அமைந்திருக்கும் எல்லா மாமூல் நன்செய் நிலங்களிலும் சாதாரணமாய்ப் பிரகாசதம் உரம் குறைந்து இருக்கும். அவைகளில் பசுந்தாள் உரத்தோடு பிரகாசதம் உரம் சேர்த்தால் விசேஷ வெள்ளாமை கிடைக்கலாம்.

3. பிரகாசதம் உரம் நெல்லுக்கு முக்கியமாய் வேண்டியது என்று விவசாய டிபார்ட்மெண்டு பஞ்சாங்கங்களிலும் துண்டுப் பத்திரிகைகளிலும் ஏற்கெனவே பல முறை கூறப்பட்டிருக்கிறது; இதானது—சூபர்பாஸ்பேட், நயம் சூபர்பாஸ்பேட், பேசிக் சூபர்பாஸ்பேட், எலும்புத்தூள், திருச்சினாப்பள்ளி பிரகாசித மிலத்தூள் எனப் பலவிதமாக உரம் தயார் செய்யும் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. முதல்கூறிய மூன்று தினுசுகள் ஜலத்தில் எளிதில் கரையக்கூடியவைகள். அதாவது நெல்பயிர்கள் இவைகளை உடனே ஆகாரமாய் உட்கொள்ளக்கூடியவை. இவைகள் எல்லாம் சுருக்கமான உரமானதால் கொஞ்சமாக 100-முதல் 200-ராத்தல் (பவுண்டு) வரையில் ஏக்ரா 1-க்கு உபயோகப் படுத்தலாம்.

4. நன்றாய் பசுந்தாள் உரப்பயிர் செய்யும் மாதிரி நிலம் புலங்களுக்கு ஏற்றபடி மாறுபாடாயிருக்கிறது. ஒரு காலத்தில் விவசாய டிபார்ட்மெண்டார் நிலத்தை மழை நீரைக்கொண்டோ இறவை ஜலத்தைக் கொண்டோ உழுது விதைக்க வேண்டுமென்று போதித்து வந்தார்கள். ஆனால் மழை ஈரமாவது இறவை ஜலமாவது எப்போதும் கிடைப்பதில்லை. நெல் வெள்ளாமையில் அறுவடைக்கு முந்தி நிலம் ஈரமாயிருக்கும்போதே விதைப்பதினால் நல்ல பலனைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. இம்மாதிரி விதைப்பதினால் நெல் மறைவில் விதை முளைத்து நிலம் காய்ந்து போவதற்கு முன்னிட்டு முளைத்து இருக்கும் இளஞ்செடிகள் தங்கள் வேர்களை அடியில் இருக்கும் ஈரத்திற்கு செலுத்துகின்றன. நெல் அறுவடையாகும் வரையில் தாமதித்து விதைப்பதினால் வெளியாயிருக்கும் பூமியின் மேல்பாகம் சீக்கிரம் காய்ந்து விடுகிறது. இளஞ்செடிகள் விருத்தியாவதற்கு முகாந்திரம் இல்லாமல் போய்விடுகிறது.

5. கிணற்றிறவை ஆதாரமுள்ள மற்றுஞ் சில இடங்களில் நன்செய் நிலங்களில் நெல் அறுவடையான பிறகு புன்செய் தானியம் பயிரிடும்போது பசுந்தாள் உரப்பயிர் விதைகளை கலந்து விதைப்பதினால் மிகவும் சிலாக்கியமான வெள்ளாமை கிடைத்திருக்கிறது. இவ்வாறு பயிர் செய்வதினால் புன்செய் தானியப் பயிர் வெள்ளாமை குறைகிறது. ஆகிலும் அதற்கு பாய்ச்சப்படும் ஜலத்தினால் பசுந்தாள் உரப் பயிர்கள் செழுமையாய் வளர்ந்து அதனுடைய உரத்தின் கிரயம் தானியத்தில் நஷ்ட மடைந்ததைவிட எத்தனையோ பங்கு அதிக லாபத்தைத் தருகிறது.

6. எந்தப் பசுந்தாள் உரப்பயிர் நல்லதென்பது விசேஷமாய் நிலப் புலத்தைப் பொருந்தி இருக்கிறது. ஒரு போக நன்செயில் நெல் அறுவடைக்கு முந்தி விதைக்கும் பசுந்தாள் உரப்பயிர் ஆறுமாதகாலம்வரை வளர்ந்துகொண்டே இருக்கப்பட்டதாய் இருக்கவேண்டும். வடிகால் அமைந்து நிலம் வெடிக்காமல் மணல்சாரியான நிலங்களிலும் இருமண்பாடான நிலங்களிலும் கொளுஞ்சி நல்லபலனைத் தரக்கூடும். நிலம் களராயும் களிப்பாயு மிருந்தால் நாட்டுத் தக்கைப்பூண்டு சிலாக்கியமாயிருக்கலாம். அவுரியும் களிப்பு நிலங்களில் நல்ல பலனைத் தருகிறது. அநேகமாய் அதில் ஒரு அறுப்பு அறுத்து முதல்போகம் நாற்றங்காலுக்கு உபயோகப் படுத்தி அறுபட்ட தாருகளை வளரவிட்டு மடித்து உழுதுவிடுவார்கள். அவுரி விதை எப்போதும் புதியதாய் கிடைப்பதரிது. இருபோக நிலங்களில் அறுவடைக்கு முந்தி பசுந்தாள் உரப்பயிர் விதைக்கப்படுமானால் வங்காளத்து அல்லது ஆசாமடையின்கால் நல்ல பலனைக் கொடுக்கலாம். விதைத்தநாள் முதல்கொண்டு $2\frac{1}{2}$, 3-மாதங்களில் இதை மடக்கி உழத் தயாராயிருக்கும். 2, $2\frac{1}{2}$-மாதங்கள் வரை தரிசாய் இருக்கும். இருபோக நன்செய் நிலங்களில் சணம்பு உற்பத்தி செய்யலாம். ஆனால் இது வேண்டுமானால் நீர் பாய்ச்சிக்கொள்ள வசதியும் நல்லவடிகால் அமைந்த நிலங்களிலும்தான் உண்டாகும். இதை உழுது விதைப்பது சிலாக்கியம். இதனால் தண்ணீர் கட்டுக்கடையாய் இருந்தால் தாங்கமுடியாது.

7. ஆழமாய் வெடிக்க கூடிய கழிமுகத் தெ ர் நிலங்களில் பசுந்தாள் உரப்பயிர்கள் உண்டாகு மானால் நிரம்பவும் அனுகூலம் என்று நிரூபிக்கக் கூடுமாயினும் அவ்விடங்களில் பசுந்தாள் உரபயிர்களை உண்டு பண்ண விவசாய டிபார்ட்மெண்டாருடைய முயற்சி இன்னும் சித்தி பெற வில்லை.

8. பசுந்தாள் உரப்பயிர்கள் பூமியில் மடக்கி உழப்படும்போது அவைகள் பூமியில் மக்குவதற்கு வேண்டிய காலம் இருக்கவேண்டும். குடியானவர்களுக்கு

* பிரகாசதம் என்பது எலும்பின் முக்கியசத்து.

## பாரத யுத்த காலம்

### (செந்தமிழ்)

பூர்வீக ஸம்ஸ்கிருத புஸ்தகங்களிற் சொல்லப்பட்டிருக்கிற சில முக்கியமான விஷயங்களின் கால வரையறைகளை உத்தேசமாகக்கூடச் சொல்லக் கூடாதபடி அவ்வளவு அந்தகாரத்திற் பூர்வீக இந்திய சரித்திரமானது மறைவுபட்டிருக்கிறது. வித்வான்கள் சிறிது நிச்சயத்துடன் முடிவுக்குக்கொண்டு வந்திருக்கிற கால வரை யறைகளுக்குள் மிகவும் முந்தியது புத்த நிர்யாண காலமாகிய கி-மு, 480-இதற்கு முந்தின சங்கதிகளின் காலவரை யறைகள் பல விதமான பின்ன அபிப்பிராயங்களுக்கு உட்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளுள், பாரத யுத்த காலமுமொன்று. வைதிகர்களின் கொள்கை இந்த யுத்தம் 5017-வருஷங்களின் முன் நடந்த தென்பது. இந்த யுத்த காலத்திலிருந்து தான் கலியுகம் ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. மஹா பாரத புத்தகத்திற் சொல்லப்பட்டிருப்பவை கர்ண பரம்பரை ஐதீகங்களைப் பொறுத்தவைகளா யிருப்பதால் அவற்றை நம்பிக் கால வரையறை செய்யப் புகுவது மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவது போலாகுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

இந்திய சரித்திர விஷயங்களுக்குள், இந்த யுத்தமானது, வாஸ்தவமாய் நடந்த முதற் சரித்திரக் குறிப்பென்று பூர்விக இந்திய (காவ்ய) நூல்களைச் சரித்திர நோக்கமா வறியும் மேற்றிசைப் பண்டிதர்கள் கூட நம்புவதால் நாம் சந்தேகங்களுக்கு இடங் கொடுக்க வேண்டியது அநாவசியம். இந்த யுத்த காலத்தைப் பற்றி முடிவுக்கு வந்தவர் அநேகர்களுள், சிலரது அபிப்பிராயங்களை மாத்திரம் பூர்வபட்சமாகக் கூறிச் சித்தாந்தமாக ஸ்ரீமான்-ஸி. வி. வைத்தியர் அவர்களின் சிறந்த அபிப்பிராயத்தை யெடுத்துக் காட்டுகிறேன்.

### இந்திய வித்வான்கள்

1. ப்ரொபஸர் M. ரங்காசார்ய ஸ்வாமிகளின் அபிப்பிராயம்:—கலியுக ஆரம்பம் 5000-வருஷத்துக்கு முன் என்பது கொஞ்சம் மிகைபடக் கூறலாகும். கணித சாஸ்திரியாகிய ஆர்யபட்டர், சுத்த ஊக அநுமானத்தின் பேரில் முந்திய காலவரை யறையை வற்படுத்தி விட்டார் என்பது. (Christian College Magazine : Yugas)

2. ராமேச சந்த்ர தத்தர் அபிப்ராயம்.—இந்தக் காலாவதியிலாண்ட அரசர்களின் வம்சபரம்பரை புராணங்களுட் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஜநமேஜய பரீக்ஷித்தின் ஜநந காலத்துக்கும் நந்தன் அரசாட்சிக் காலத்துக்கும் மத்தியில் 1015ஆ சென்றதென்று பாகவத புராணம் கூறுகிறது. குருக்ஷேத்ர யுத்தம் நடந்து 3-மாதத்துக்குப் பின் பரீக்ஷித்து பிறந்தாரென்று மஹா பாரதமும் புராணங்களும் கூறுகின்றன. நந்தன் சந்த்ர குப்தனுக்கு நூறுவருஷங்களுக்கு முந்தினவனென்றும், சந்த்ரகுப்தன் கி. மு. 312-லிருந்தானென்றும் நமக்குத் தெளிவாய்த் தெரிந்த விஷயம். ஆகையினால் 312 + 100 + 1015 = 1427 கி. மு. வில் பாரதயுத்தம் நடந்திருக்கவேண்டும் (Civilisation in Ancient India ii) என்பது

3. சித்தார் V. கோபாலையரவர்கள் அபிப்ராயம்.—கி. மு. 1194 வருஷம் அக்டோபர் மாதம் 14-ந்தேதி மகாபாரதயுத்தம் ஆரம்பித்து 31-ந்தேதி இரவுடன் முடிந்ததென்பது. இந்த அபிப்பிராயத்துக்கு இவர் எடுத்துக்காட்டியிருக்குங் காரணங்களின் சுருக்கங்களாவன:—

(1) வேதாங்க ஜ்யோதிஷ கிரந்தத்தை உற்று ஆராய்ந்தாற் கலி ஆரம்பம் 1173 கி. மு. என்று ஏற்படுதல்.

(2) கர்க்கருடையவும் அவர் பிரஸ்தாபிக்கிற யவனப் படையெடுப்பினுடையவும் காலத்தை ஆராய்ந்ததும், இந்துஸ்தானத்திலிருந்து கிரேக்கர்கள் திரும்புவது யுகத்தின் முடிவில் என்று அவர் குறித்துளதை எடுத்துக் காட்டினதும், (இந்த அவர் வாக்குமூலத்திலிருந்து) 165 கி. மு. வுக்குக் கொஞ்சம் முன்பு முடிந்ததென்ற யுகமானது, 1165 கி. மு. வுக்குச் சில வருஷங்களுக்கு முன் ஆரம்பித்திருக்கவேண்டுமென்று ஊகித்ததும்.

3. பழைய சரித்திரக்காரராற் குறிக்கப்பட்ட காலங்களை விளக்குவதிலிருந்து ஏற்பட்ட கலியுகம் 1177-6 கி.மு. வில் ஆரம்பித்திருக்க வேண்டும் என்ற முடிப்பு.

4 1176-கி. மு. வில் கலி ஆரம்பித்ததென்று நிறுத்துவதற்கு வேறொரு ஆதாரமாயிருந்தது கொல்லம் ஆண்டு என்பது.

5. 1176-கி. மு. வுக்கு முன் வந்த ஒரு குறிப்பிட்ட காலத்திற் கலி ஆரம்பித்திருந்தால் மகா பாரதத்திலுள்ள சில குறிப்புக்களால் 1194-கி. மு வில் யுத்தம் நடந்ததாக ஏற்படுமென்பது.

6. 'ராஜ தரங்கிணீ' யிற் குறித்திருக்கும் ஐதீக கர்ண பரம்பரை செய்த யுத்த காலத்தை 1190-கி. மு வில் நிறுத்து மென்பது.

7. 1192-கி. மு. வில் சப்தரிஷிமண்டலம் மக நக்ஷத்திரத்திலிருந்த தென்று ஆர்யபட்டர் குறித்திருப்பது யுத்தம் 1193-கி. மு. வில் நடந்திருக்கு மென்ற அநுமானத்துக்கு இடங் கொடுத்த தென்பது.

8. இவ்வுலகிற் பிரசித்திபெற்ற ஐந்து ராஜாங்கங்களிலாண்ட அரசர்களின் சராசரி ஆளுகைக் காலம்

---

அநுபவத்தில் தழை வயலில் மக்கின பிறகுதான் நெல் நடவேண்டுமென்பது தெரிந்த விஷயம். பசுந்தாள் உரப்பயிர் பூமியில் உழும்போது காயாமலும் சதசதப்பாயும் இருப்பதினால் இது மக்கவேண்டியது நிரம்பவும் முக்கியம் மணல் சரியான நிலங்களிலும் இருமண்பாடான நிலங்களிலும் ஒருவாரம் முதல் 10-நாள் வரையிலும், களிப்பான நிலங்களில் குறைந்தது இரண்டு முதல் மூன்று வாரங்கள் பரியந்தம் பசுந்தாள் உரப் பயிர்களை மக்கவிடவேண்டும்.

எச். ஸி. ஸாம்ப்ஸன்,
தென் இலாகா டிப்டி டைரெக்டர். ஆவ் அக்ரிகல்சர்.



1193-கி. மு. வாக்கில் யுத்தம் நடந்த தென்று நிறுத்த உபயோகமாயிருந்த தென்பது.

9. ப்ருஹத் ஸம்ஹிதையில் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கும் விருத்தகர்க்கரின் ஒரு சுலோகம் 1194—3-கி. மு வில் யுத்தம் நடந்ததென்று அநுமானிக்க இடங் கொடுத்த தென்பது.

10. கர்க்கராற் கொடுக்கப்பட்ட யுத்த காலமும் (அதாவது கி. மு 1194--93) ப்ருஹஸ்பதி 60-வருஷத்தின் முதல் வருஷமும் ஒத்து வருவது.

11. யுத்தகாலத்துக்குப் பின்வந்த ஒரு குறிப்பிட்ட தினத்தைக் குறிக்கும் ஒரு மகா பாரத சுலோகத்துக்கு வேதாங்க ஜ்யோதிஷத்திற்கு கூறப்படும் சில விஷயங்களை ஒதிட்டுப்பார்த்து 1194 கி. மு. வின் பின்பாகத்தில் யுத்தம் நடந்திருக்கவேண்டுமென்று முடிவுக்கு வந்தது. (The Chronology of Ancient India) என்பனவாம்.

### மேற்றிசை வித்வான்கள்

ப்ரொபஸர் மக்டானல் (Sanskrit Literature) இவர் நம் வேத நூலாராய்ச்சியுள்ளவர். ஸம்ஸ்க்ருதகாவ்ய சம்பந்தமான ஒரு சிறந்த கிரந்தம் எழுதியிருக்கிறார். இவர் அபிப்பிராயம்:—ஒருவர்க்கொருவர் பக்கத்தில் வாழ்ந்துவந்த குருஜாதியாருக்கும் பாஞ்சால ஜாதியாருக்கும் ஏற்கெனவே நடந்திருந்த பூர்வீகச்சண்டையாகிய உண்மைச்சரிதம் இவ்விதிகாசத்துட் பொதிந்துள்ளது. யஜுர்வேதத்தில் இவர்கள் ஒரே ஜாதியாராகக் கூறப்படுவதால் இவ்வேதகாலத்துக்கு முன்பே இவர்கள் ஒன்றுபட்டிருக்கவேண்டும். யஜுர்வேத கடாசத்தில் த்ருதராஷ்ட்ரன் பிரசித்த புருஷனாகக் கூறப்பட்டிருக்கிறான். சதாபத ப்ராம்ஹணத்தில் (ஜநமேஜய) பரீக்ஷித்தின் பெயர் அடிக்கடி வருகிறது. இதனால் யஜுர்வேத காலத்துக்கு நூறு வருஷத்திற்கு முன்பாவது பாரதயுத்தம் நடந்திருக்கவேண்டும். 1000 கி. மு. வில் யஜுர்வேத மெழுதப்பட்டிருக்கவேண்டும். பாரத யுத்தம் ஆயிரத்துநூறு கி. மு. வில் நடந்திருக்கவேண்டும் என்பதாம்.

4. கல்கட்டா ஹைகோர்ட் மிஸ்டர் பார்ஜீட்டரின் அபிப்பிராயம்.—(London Asiatic Society's Journal of April 1914) இருக்குவேத மந்த்ர பாகத்துக்கும் பாரத யுத்தத்துக்கும் காலத்தாற் சம்பந்த மிருக்கிறது. தேவாபி என்ற ஒருவன் இருக்குவேத மந்த்ரத்ரஷ்டாவாகக் கூறப்படுகிறான். இவன் சந்தனுவுக்குத் தமையனாகவும், அவன் இராஜ்பாதிகாரத்தை யடையும் பொருட்டுத் தான் சிம்மாசனத்திலிருந்து விலகினவனாகவும், மகாபாரதத்திற் கூறப்படுகிறான். இருக்குவேத ப்ரகத்தேவதையிலும் இப்படியே இவனைப்பற்றிக் கூறியிருக்கிறது. இதனால், பாரதயுத்தத்திற்குக் கொஞ்சம் முன்பு இருக்குவேத மெழுதப்பட்டதென்று தெரிகிறது. இதற்குப் பின் வரும் வேறொரு திருஷ்டாந்தமும் காணலாம். பாஞ்சாலர்கள் சோமகர்களென்று அடிக்கடி கூறப்படுவதையும், துருபதன் சில இடங்களிற் சோமகினென்று கூறப்படுதலையும் மகாபாரதத்திற் காணலாம். சோமகன் என்றொருவன் இந்த வம்சத்திலிருந்தனன். இவன் த்ருபதனுக்கு ப்ரபிதாமகன். (பாட்டனின் தகப்பன்) இருக்குவேதத்தில் இவன் தகப்பன் பெயர் சகதேவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐதரேய ப்ராமஹணத்தில் இவன் இராஜசூயம் வேட்டுச் சோமபானம் பண்ணிக் கீர்த்தி பெற்றானென்றிருக்கிறது. பாஞ்சாலர்கள் சோமகர்களென்று கூறப்படுவதற்கு இவனது யாகமே காரணம்போலும். மேற்சொன்ன தேவாபியும் சோமகனும் பாரதயுத்தத்துக்கு முன்னிருந்தவர்கள். இவர்கள் இருக்குவேதத்திற் பிரஸ்தாபிக்கப்படுவதுகொண்டு இருக்குவேதம் பாரதப் புஸ்தகத்துக்குக் கொஞ்சம் முன்புதான் எழுதப்பெற்றதென்று தெரிகிறது.

கலியுகத்துக்கு முந்திய காலத்ததாகக் கூறப்படுகிற வம்சாவளிகளைப் புராணங்களிற் பார்த்தால், இருக்கு வேதத்தின் ஒரு மந்த்ரத்ரஷ்டாவும், பீஷ்ம பிதா சந்தனுவின் சகோதரனுமான தேவாபி என்பவனுக்கும் விஸ்வாமித்ரன் என்பவனுக்கும் மத்தியில் 30-தலைமுறை யிருந்ததாகக் காணலாம். தலைமுறை யொன்றுக்கு 20-வருஷம் வீதம் வைத்துக்கொண்டால் 600 வருஷம் ஆகின்றன. பாரதயுத்தம் 1000-கி. மு-வில் நடந்ததென்று வைத்துக்கொண்டால் வேதமெழுதிய காலம் கி. மு. 1600-ஆகும். வேதகாலம் கி. மு. 1700 முதல் 1000-வரையென் றெழுதினவர்களின் கொள்கையையும் இது அநுசரிக்கிறதென்பதாம்.

மிஸ்டர் C. V. வைத்தியரின் சித்தாந்தம். இவர் இதிஹாசங்களின் ஆராய்ச்சியில் மிக வல்லவர். இவர் அபிப்பிராயம் வருமாறு.—

(மேற்சொன்னபடி) பாரத யஜுர்வேத இருக்கு வேத காலங்கள் ஒன்றை யொன்று ஒட்டி இருக்கின்றன வென்பதற்குப் போதுமான அத்தாட்சி ஏற்பட்டிருக்கிறது. பாரத யுத்தம் யஜுர்வேதகாலத்துக்கு முன்னும் இருக்குவேத காலத்துக்குப்பின்னும் நடந்ததென்பது வாஸ்தவந்தான். ஆகையால் இருக்குவேதமாவது, உள்ளாதாரத்தால் அதற்குப் பிந்தியதென்று தெரிகிற சதாபத ப்ராம்ஹணமாவது, இன்ன காலத்திற் செய்யப்பெற்றதென்று ஒருவாறு நிச்சயிக்கப்படுமானால், பாரதகாலமும் இன்னதென்று நிச்சயிக்கப் பெற்றதாய் விடுகிறது. வேத வித்வான்களால் இருக்கு வேதமானது கி. மு. 1500-க்கும் 1000-த்துக்கும் மத்தியிற் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும், சதா பத ப்ராம்ஹணம் கி. மு 800-க்கும் 500-க்கும் மத்தியிற் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும் எழுதப்பட்டிருப்பது சரியல்ல.

இவை இன்னும் அநேக காலத்துக்கு முந்தியே செய்யப்பெற்றிருக்க வேண்டும். அதற்குரிய ஆதாரங்கள் வருமாறு:—

### I. வான சாஸ்திர ஆதாரங்கள்

1. ப்ரொபஸர் ஜாகோபி என்பவர் சமீபமாய்ச் செய்திருக்கும் ஜ்யோதிஷ ஆதாரப் பரிசோதனைகளிலி

ருந்து வேதகாலம் கி. மு 4000-த்துக்கும் மேற் போகிறதென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

2. ஸ்ரீமாந்-சங்கர பாலகிருஷ்ண தீக்ஷிதர் தாம் எழுதிய பாரதீய ஜ்யோதிஷ சரித்திரம் என்னும் சிறந்த வியாசத்தில் ஜ்யோதிஷ ஆதாரத்தின் மேல் ஒரு கால வரையறை குறித்திருக்கிறார். அது சதா பத ப்ராம்ஹண காலவரையறையைக் குறிப்பிப்பதால், பிரஸ்தாப விஷயத்தை விளக்க முக்கிய பிரயோஜன முள்ளதாயிருக்கிறது. அக்கிரந்தத்தின் ஓரிடத்திற் கிருத்திகா நக்ஷத்ரக் கூட்டமானது (Pleiades) அக்காலத்தில் நேர் கிழக்கில் உதயமானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அவைகள் நிரக்ஷரேகையின் மேற் சாயாமலிருந்தன வென்பதே. இப்போது அவை நிரக்ஷரேகைக்கு வடக்கே யிருக்கின்றன. அவை வருஷத்துக்கு 50-விகலை வீதம் முன் போக்கடைகின்றன. அந்த நக்ஷத்ரக் கூட்டத்துள் அதிகப் பிரகாசமுள்ள நக்ஷத்ரமானது கி. மு. 2990-அல்லது கி. மு. 3000-வாக்கில் நிரக்ஷரேகையின் மேலிருந்ததென்று தீக்ஷிதர் கண்டு பிடித்திருக்கிறார். அது எழுதப்பட்ட சமகாலத்தில் நடந்ததாக, அந்த ப்ராஹ்மண பாகம் இவ்விஷயத்தைக் குறிப்பதால் அந்நால் கி. மு. 300-த்திற் செய்யப்பட்டதாகக் கொள்வது தவறாகாது. (Indian Antiquary Vol. 24 pp 245.)

சூரிய மார்க்கத்துக்கும் அதன் வடக்கே யிருக்கிற கிருத்திகைகளுக்கும் மத்தியில் 68-டிக்ரி இருக்கின்றனவென்றும், ஒவ்வொரு பாகையின் முன்போக்கும் 72-வருஷங்களுக்குச் சரியானபடியால் 68-72-4896 வருஷங்களாகின்றனவென்றும் கணக்கிடப்படுகிறது. இதிலிருந்து 1900-வருஷத்தைக் கழிக்க 2996-அல்லது ஏறக்குறைய 3000-கி. மு-வில் சதாபதப்ராம்ஹணம் எழுதப்பெற்றிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. இதிற் பாரத புருஷர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால், பாரதயுத்தம் சுமார் கி. மு. 3100-ல் அதாவது 5000-வருஷங்களுக்கு முன் நடந்ததென்று நிச்சயிக்கலாம். பாரத புருஷர்களுக்கு முந்தின தலைமுறையினர் இருக்கு வேதத்திற் பிரஸ்தாபிக்கப்படுவதால் இன்னுஞ் சில நூற்றாண்டுகளைச் சேர்த்தால் இருக்குவேத மெழுதியகால மேற்படுகிறது. இதனுல் வேதகாலம் கி. மு. 4000—3300 என்ற ஜாகோபியாரின் கொள்கை வலியுறுத்தப் பெறுதல் காண்க.

மேற்கூறிய தீக்ஷிதருடைய கணனம் ஆக்ஷேபிக்கத்தகாதபடி வலுவுற்றதாயினும் அக்கொள்கை தாக்கப்படாமலிருக்கவில்லை. 'பூர்வ சங்கதிகளை ஞாபகத்திற் கொண்டிருக்குங் கோட்பாடு' (Theory of Reminiscence) என்று சொல்லப் படுவதனடியான சில ஆக்ஷேபங்கள் சிலரால் செய்யப்பட்டன. அதாவது "கார்த்திகைகள் உதய மாகின்றனவென்று நிகழ் காலத்தாற் சதாபதங் கூறுவதொனறைக்கொண்டு, அந்தக் கிரந்தம் எழுதப்பெற்ற காலத்தில் நக்ஷத்திர நிலை அப்படியிருந்த தென்று கொள்ளவேண்டு மென்பது அவசியமில்லை, ஏனென்றால் சில காலத்துக்கு முன்னிருந்த நக்ஷத்திரத்தின் நிலை கிரந்த மெழுதப்பட்ட காலம் வரை ஜனங்களின் ஞாபகத்திற்றங்கியிருந்து, எழுதும்போது அவ்விஷயம் அப்போது நடப்பது போலக் குறிக்கப்பட்ட தொன்றாயிருந்தாலு மிருக்கலாம்" என்பதாம். இன்னும் இவர்கள் தங்களுக் காதாரமாக வெடுத்துக்காட்டும் திருஷ்டாந்தம் யாதெனில், இப்போது வாஸ்தவமாய் வசந்தருது வல்லாத சித்திரை வைகாசி மாதங்களை வசந்தகால மென்றே பழங்கொள்கை பற்றி வழங்கிவருவது போல அதுவும் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பதாம்.

ஒரு சங்கதி உலகத்தில் வாஸ்தவமாய் நடந்தாலொழிய நடக்காததை நடந்ததுபோல எழுதிவைக்க மாட்டார்கள். மேலும், இக்கோட்பாடுடையார் கி. மு. 3000-த்திற் கிருத்திகைகள் நேர் கிழக்கிலுதிக்கவாரம்பித்தன வென்பதை மறுக்கவில்லை. ஆயினும், எழுதினவர்கள் முன் நடந்த ஐதீக நிலையை ஞாபகத்திற் கொண்டு தங்கள் காலத்தில் நடந்தது போலச் சதாபத ப்ராம்ஹணத்தில் எழுதிவைத்த காலம் கி. மு. 800 ஆயிருக்க வேண்டுமென்று ஹபவாதம் பண்ணுகிறார்கள். கிருத்திகைகள் நேர்கிழக்கி லுதிப்பதிலிருந்து விலகிய காலம் கி. மு. 2000 ஆயிருக்கவேண்டும். (இவர்கள் அது எழுதப்பெற்ற காலம் கி. மு. 800-ஆயிருக்கவேண்டு மென்பதால்) 1800-ஆண்டுக்கு முன் நடந்த ஒரு சமாசாரம் கொஞ்சகாலத்துக்குமுன் நடந்ததைப்போல் ஞாபகத்திலிருந்து வந்து எழுதுபவர்களுக்குத் தங்கள் காலத்து நடந்ததுபோல எழுத இடங்கொடுத்திருக்குமென்பது மிகவும் அசம்பாவிதமானதாம்.

3. தீக்ஷிதர் கணித்திருக்கிற இன்னொரு கால வரையறை வேதாங்க ஜ்யோதிஷகிரந்தம் கி மு. 1400-ம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது. மாக்ஸ்முல்லர் இதன்காலம் கி. மு. 1180 என்று வேறு ஆதாரவு கொண்டு கண்டுபிடித்திருக்கிறார். இருவருக்குமுள்ள 220-வருஷத்து வித்தியாசம் ஒரு பெரிய வித்தியாசமல்ல. பின்னவர் சொல்லுகிறபடி வேதாங்கஜ்யோதிஷகாலம் கி. மு. 1200 வைத்துக்கொண்டால் அதற்கு மூலமாகிய சதாபதப்ராம்ஹணத்தின் காலம் இன்னும் மனமற்றதா யிருக்கவேண்டும்.

4. மகாபாரதத்திலிருந்து ஆதாரமான சில விஷயங் விஷயங்களைக் கவனிப்போம். பாண்டவர்கள் செய்வதாக ஒப்புக்கொண்ட 12-வருஷம் வனவாசகாலமும் ஒரு வருஷ அஞ்ஞாதவாச காலமும் சாந்த்ராயண ரீதியாய்க் கணிக்கப்பெற்றதென்று தெரிகிறது. ஆனல் வேதாங்க ஜ்யோதிஷ காலத்திலோ சாந்த்ராயண வருடகணனரீதி பழங்காலத்துச் சமாச்சாரமாய்விட்டது. இச்சோதிட கிரந்தம் எழுதப்பெற்ற காலம் கி.மு.1409 என்று வைத்துக்கொண்டால், பாரதயுத்தகாலம் இதற்குமுந்தின காலத்ததா யிருக்கவேண்டும்.

5. பிராம்ஹணத்திலும் பாரதத்திலும் நாபலியைப் பற்றிய விஷயங்கள், தெளிவாய் அப்போது நடந்து வந்த விஷயங்களைக் கூலங்கஷமாய்க் குறிக்கப்பெற்றிருப்பதால் அது வழங்கிவந்த தொன்மையுற்ற காலத்திலவை எழுதப்பெற்றிருக்க வேண்டும்.



பாரதயுத்தம் கி.மு 1400-முதல் 1000-வரை என்ற கொள்கையுடையார்க்கு கி மு 3000-த்தில் யுத்தம் நடந்ததென்ற விவரமானது புத்தருக்கும் மத்தியில 2500-வருஷம் நடந்தது என்றதை ஞாபகப்படுத்தி அது அசம்பாவிதம் என்பதைத் தோற்றுவிக்குமாயினும், அவ்வளவுகால மிடையீடுற்றதென்ப தூண்மைக்குமாறாகாது. மேற்கூறியபடி பாரதயுத்தம் 5000-வருஷத்துக்கு முன்பே நடந்ததுதா னென்பதைப் பின் வரும் ஆதாரத்தாலுங் காணலாம்.

## II. தேசாந்தரிகளின் சரித்ர ஆதாரம்

1. சந்திரகுப்தன்-சபையிலிருந்த ஒரு கிரேக்க ஸ்தானதிபதியாகிய மெகஸ்தனீஸ் என்பவன் இந்தியா விஷயமாய் எழுதிவைத்த கிரந்தத்தைப் பார்ப்போம். அவன் எழுதிய கிரந்தத்திற் பெரும்பான்மை நஷ்டமாய்ப் போனபோதிலும் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற சிலபாகங்களிலிருந்து சில விஷயங்கள் இது விஷயமாய்த் தெரிந்துகொள்ளக் கூடியனவாயிருக்கின்றன. சௌரசேனி ஜனங்களால் வணங்கப்படுபவனென்று அதிற் கூறப்பட்டிருக்கிற 'இந்தியன் ஹெர்குலஸ்' என்பவனை ஸ்ரீகிருஷ்ணனென்று நாம் ஒற்றுமைப் படுத்திக்கொண்டால் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் சந்த்ரகுப்தனுக்கும் மத்தியில் 138-தலைமுறை கடந்ததாக காண்போம். ஒரு தலைமுறைக்கு 20-வருஷம் வீதம் வைத்துப்பார்த்தால் மொத்தம் 2760-வருஷம் ஆம். சந்திரகுப்தன் இற்றைக்கு 2212-வருஷத்துக்கு முன் இருந்தவனென்று நமக்கு நன்றாய்த்தெரியும். இவற்றால், பாரதயுத்தம் 5000-வருஷத்துக்கு முன் நடந்ததென்ற வைதிக சம்ப்ரதாயப் பழங்கொள்கை வலியுறுகிறது என்பதாம். (Bombay Chronicle)

ஐரோப்பிய பண்டிதர்கள் இந்திய பூர்விக நாகரிக காலங்களைக் கூடியவரை குறுக்கிக் கூறுவதிற் பேரவாவுடையவர்கள். பழைய இந்திய நாகரிகத்துக்கு மேற்குத் திக்கே காரணமென்ற கொள்கை யுடையாரதலாற் கிரேக்க தேசத்தின் அதியுந்நத நாகரிக காலமாகிய கி மு. 1000-500-க்குப் பின்பே இந்திய பூர்விகத்தை நிறுத்தப் பிரியப்படுவர். அவர்களுக்குப் பாரதயுத்த காலத்தை கி. மு. 3000-த்துக்குக் கொண்டுபோக மனமிராது. ஆனல் இந்த அபிப்பிராயம் இப்போது மாறிக் கொண்டு வருகிறது. கி. மு. 4000-த்திற்றான் மனிதன் பூவுலகில் முதன்முதற்சிருட்டிக்கப்பட்டானென்ற கிறிஸ்தவர்கள் யூதர்களின் கொள்கையானது, சாசனங்களாலும் பூமியில் வெட்டி யெடுக்கப்படும் பொருள்களாலும், எகிப்தும் பாபிலோனியாவும் கி.மு. 4000-த்துக்கு முன்பே நாகரிகம் பெற்றதென்றும், கடவுளால் வெளியிடப்பெற்ற தென்று பைபிளிற் கூறப்படும் "பத்துக்கற்பனை" ஏற்கெனவே மிகவு முந்தியகாலத்தில் ஓர் அரசனாற் சட்டமாக்கப் பெற்றிருந்தனவென்றும் வெளியிட்டிருக்கிற புராதன பரிசோதகர்களின் ஆராய்ச்சியாலும் தளர்ந்துகொண்டு வருகிறது. ஆகையால் புதுக்கொள்கைகளைத் திடீரென நாம் நம்பிவிடக்கூடாது.

A. M. சடகோபராமாநுஜாசார்யர்.

# இந்துமதச் சீர்திருத்தம்

(Commonweal) பத்திரிகையில் வெளியிட்ட அபிப்பிராயங்களின் சுருக்கம்:—

பெண்கள் ருதுவான பின்பு விவாகஞ் செய்யலாம் என்று கொண்டு வரப்பட்டிருக்கும் உத்தேசச்சட்டம் நிறைவேறி விட்டால், தங்கள் மதத்துக்கும் ஜாதிக்கும் பெருங் கேடு விளைந்து விடுமென்று ஒரு கக்ஷியாரும், தாங்கள் சீர்திருத்த விரும்பும் அநேக துராசாரங்களுக்கு ஹிந்து மதமே காரணமாய்த் தோன்றுவதால், அம்மதம் தொலைந்து விடுதல் நலமாயிருக்கும் என்று மற்றொரு கக்ஷியாரும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஹிந்து மதத்தை நன் கறிந்து, நன்கு மதிக்கும் மூன்றாவது கக்ஷியாருக்கோ, இவ்விருதிறத்தார் எண்ணங்களும் தவறாகத் தோன்றுகின்றன. எப்படி யெனில், அவ்வுத்தேச சட்டத்தை எதிர்ப்போர், நமது ஸநாதன தர்மத்தை இப்பொழுது மூடிக்கொண்டிருக்கும் துராசாரங்களையும், ஆபாஸங்களையுமே, அந்த தர்மத்தின் சாசுவதமான உண்மைகளாக மதிப்போராகவும்; மற்றோர் அவ்வுண்மைகளின் உட் கருத்துகளைச் சிறிதுமே அறியாதவராகவும் காணப்படுகிறார்கள்.

ஹிந்துக்களின் தற்கால நிலைமையைக் கவனித்துப் பார்த்தால், தாறுமாறாகச் சீர் குலைந்து, அலங்கோலப்பட்டு இழந்து பாழாகிடக்கும் ஹிந்து மதம் என்னும் பழங்கோட்டையை, அங்கே சிறிது இங்கே சிறிதாக எவ்வாறு ஒழுங்குபடுத்தி, முட்டுக்கள் கொடுத்துப் பழுது பார்த்தாலும், பயன் படாதென்றும்; நாம் முன்னுக்கு வரவேண்டுமானல், ஹிந்து மதத்தின் புராதன அஸ்திபாரங்களை மூடிக்கொண்டிருக்கும் யாவற்றை..., தயவு தாக்ஷிணியமின்றி வெட்டித் தள்ளி... விட்டு, ஆதி அடிப்படைகளின்மேல் ... தற்கால அவசியத்துக்கும் உபயோக...கும் ஏற்றதாக, சாதாரணமான புதுக்... ஒன்று கட்டுவதே உத்தம மென்றும் தோன்றுகிறது. இந்த வேலையும் சுலபமான தன்று; மஹா மேதாவிகளாலும் குணசீலர்களாலுமே நிறைவேற்றத்தக்கது. தங்கள் தற்கால கஷ்டங்களெல்லாம், புராதனமான ஹிந்து மதத்தினல் விளைந்தனவே என்று நினைக்கும் கக்ஷியார், அம்மதத்திலிருந்து நன்மை ஒன்றுமே சித்திக்காது, அதையே திரும்பியும் மூலாதாரமாகக் கொள்ளுதல் தவறு என்று ஆக்ஷேபிப்பர்.

மற்று, கிறிஸ்து மதமோ, மகமதியர் மதமோ, வேதாந்த சித்தாந்த விசாரணைகளில் ஒப்புயர்வில்லாத நம்மைத் திருப்திசெய்யப்போகிறது? இமயமலைதொட்டுக் கன்னியாகுமரி வரையிலும் எண்ணிறந்த தலைமுறைகளாக, ஹிந்து ஆத்மகோடிகளின் தாகத்தையெல்லாம் தணித்து, அவர்களைப் போஷித்துக்கொண்டு வந்திருக்கும் திவ்யதடாகமாகிய ஸநாதநதர்மத்தை விட்டுவிட்டு, நாம் வேறெதை அடுப்பது? புத்தர், சங்கரர், ராமாநுஜர், சைதந்நியர், துளசிதாஸர், ஆதி மஹாத்மாக்கள்

இணையெதிரில்லா மேதாவிகள், ஜீவகாருண்யமே உருவெடுத்து வந்தாற்போன்ற பரோபகார சிகாமணிகள், ஒவ்வொருவரும் தத்தம் நாள்களில் நடைபெற்றுவந்த துராசாரங்களைச் சீர்திருத்தி, ஸதாசாரங்களை நிலைநாட்ட முயன்ற முயற்சிகளிலும், செய்த ஹிதோபதேசங்களிலும் புராதனமான ஸநாதந தர்மத்தின் ஏதாவது ஒரு பாகத்தை அநுசரித்துப் பிரவர்த்தித்தாரே யன்றி, அதை முற்றிலும் திரஸ்கரித்துவிட்டு, அதற்கு விரோதமாக நடந்தாரில்லையே. அந்த மஹான்களது சிறந்த முன் மாதிரியே, இவ் விஷயத்தில் நன்மாதிரியாக நாமும் பின்பற்றத்தக்கது. முதலிற் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி, இனிச் சிறிது விவரமாய் விசாரிப்போம்.

புராதனமான திவ்ய கிரந்தங்கள்:—இந்த நாளிலே சர்வோத்தமமாய் நினைக்கப்படும் கிரந்தங்களை ஆராய்ந்து, பதர் வேறு தானியம் வேறாகப் பிரிக்கவேண்டும். இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட உண்மைகளை மட்டும், ஸம்ஸ்கிருத பாஷையிலும், நாட்டில் சாதாரணமாய் வழங்கும் பிறமொழிகளிலும் எல்லோருக்கும் பயன்படும்படி ஒழுங்குப்படுத்தி எழுதவேண்டும். கூடியவரையும் அவற்றின் ஸாராம்சத்தை இந்தியதேசத்துக்கெல்லாம் பொது பாஷையாகப் பரவி விளங்கும் இங்கிலீஷிலும் எழுதவேண்டும். இவ்வா றெழுதப்படும் புதுக்கிரந்தம், ப்ரும்மவித்தையை யாவரும் தெரிந்துகொள்ளும்படி, அரும் பெரும் இரகசியங்களை உண்டாக்கிக்கொண்டிருக்கும் ப்ரணவம், காயத்ரி, மஹா வாக்கியங்கள் முதலிய முக்கிய மந்திரங்களை நன்றாய் ஆராய்ந்தோரால் எழுதப்படவேண்டும்.

குடும்பம்.—எல்லோரும் ஏகதாரவிரதத்தையே அநுசரித்து அதைச் சார்ந்ததாகவே குடும்பமும் ஏற்படவேண்டும். தக்க வயதாகுமுன், யாரும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. அதி தூர பந்துக்களைக் குடும்பச்சொத்து [illegible]தபடி, சட்டங்களை ஏற்படுத்தவேண்டும். தெய்வபக்தியும், [illegible] ஜந்மத்தையும் கர்மத்தையும்பற்றிய உண்மையறிவும், ஆண[illegible] இருபாலார்க்கும் குழந்தைப்பருவத்திலேயே மனதிற் பதியும்படி போதிப்பதைத், தாய்தந்தையர் தமது முக்கிய கடமையாக நினைத்து ஒழுகவேண்டும்.

வர்ணாசிரம தர்மம்.—வர்ணாசிரம தர்மத்தின் உட்கருத்து முற்றிலும் மறக்கப்பட்டு, அதனால் இப்பொழுது அநுகூலங்களின்றி இடையூறுகளும் கஷ்டங்களுமே நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருவதால், அந்த தர்மத்தை அறவே கைவிட்டுவிடுவதைத் தவிர வேறு விதியில்லை. ப்ரும்மசரியத்தில் அறிவை சம்பாதித்து, கிருகஸ்தாசிரமத்தில் அதை அநுஷ்டித்து, வானபிரஸ்தாசிரமத்தில் அதன் உண்மையை அறிந்து ஸந்நியாஸ ஆசிரமத்தில் அநுபவ ஸித்தியால் சச்சிதாநந்த சொரூபத்தைத் தெளிவாய் உணருவதற்கு அநுசாரணையாகவே, நான்கு வர்ணபேதங்களும் ஏற்படுத்தப்பட்ட உட்கருத்து யாவராலும் மறக்கப்பட்டு, பொறாமைக்கும் சண்டை சச்சரவுகளுக்குமே இப்பொழுது அவை ஆஸ்பதமாய் விட்டபடியால், வர்ணாசிரம தர்மத்தை [illegible] உசிதம்.

தெய்வஆராதனை.—"பரமாத்மா", "சச்சிதாநந்தம்", "பரமேசுவரன்", என்று கூறப்படும் "நிர்குண ப்ரும்மமும்", "ஸர்குண ப்ரும்ம"முமே, இப்பொழுது போல ஸநாதநதர்மத்துக்கு மூலாதாரமாகும். நிர்குணப்ரும்மம்' மனசுக்கு எட்டாததாக, ஸகுண ப்ரும்மத்துக்கே ஆராதனைகள் உரியன. ஆகவே, பரமேசுவரனையும், ஈசுவரனையுமின்றி, ஏனைய கீழான தேவதைகளையும், சக்திகளையும், வணங்கி ஆராதிப்பது உசிதமன்று. ஏனெனில், கடவுள் ஒருவரேயாயினும் அவனவன் பக்திக்குத் தக்கபடி அருள்செய்கிறாராயினும், சாதாரண ஜனங்களால் தேவ கணங்களுக்குள்ளே நடைபெறும் ஏற்றத்தாழ்வுகளை அறியமுடியாது; ஆகவே சில்லறை தேவதைகளை வணங்குவதால் பலவித அஞ்ஞானங்களும், துராகிருதமான மதகோஷ்டிகளும் ஏற்பட்டு விடுகின்றன. இது கூடாது.

ஸம்ஸ்காரங்கள்.—இவை பதினாறு; இவற்றில் அநேகம் வீண் செலவுகளுக்கு ஆஸ்பதமாயிருக்கின்றனவேயன்றி, நற் பிரயோசனத்தை இப்பொழுது கொடுக்கவில்லை. அவற்றை யெல்லாம் அநுஷ்டிக்க, நமக்கு அவகாசமும் இல்லை. அதனால் உபநயநம், விவாகம், தகனம் வரையுமுள்ள அபர கிரியைகள், ஆகிய இம்மூன்று ஸம்ஸ்காரங்களைமட்டும் வைத்துக்கொண்டு, மிகுந்த பதின் மூன்றையும் விட்டுவிடுவதே உத்தமம். அநுஷ்டிக்க வேண்டிய ஸம்ஸ்காரங்களையும் அவற்றில்வரும் மந்திரார்த்தங்களையும், செவ்வையாய் விளக்கும் ஸம்ஸ்காரகிரந்தம் ஒன்று யாவராலும் தெரிந்துகொள்ளும்படி எழுதப்படவேண்டும். இக் கிரந்தமும் ஸம்ஸ்கிருதத்தில் மட்டுமின்றி நாடோடியாய் வழங்கும் பிறமொழிகளிலும் எழுதப்பட வேண்டும்.

மேலே கூறியவண்ணம், நமது மதத்தையும் ஆசார அநுஷ்டானங்களையும் சுருக்கித்தெளிவாகச் சீர்படுத்தி, இந்த நவீன ஹிந்து மதத்தைக் கைக்கொண்டு ஒழுகும் ஜனசமூகம், அதிசீக்கிரமாக முன்னுக்குவந்து சிறப்புற்று விளங்குமென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது, எந்த வழியிலும் மேற்செல்ல முடியாமல் நம்மைத்தடைசெய்யும் தளைகளையும், இடையூறுகளையும், இவ்வாறு நீக்கிக் களைவதினால், புதியதோர் யமைக்கியமும், ஊக்கமும், உற்சாகமும் நமக்குண்டாகி ஹிந்துக்களெல்லோரும் ஒருமைப்பட்டு, நமது இந்தியாதேசம் மறுபடியும் தலையெடுத்து, விருத்தியடைந்து மகிமைபெற்று விளங்குவதற்கு முக்கியகாரணமாகுமென்பது நிச்சயமே. இதை வாசித்தவுடன், நமது ஜனங்களெல்லாரும் ஜாதிபேதங்களையும், ஸம்ஸ்காரங்களையும், விக்கிரக ஆராதனைகளையும், திருவிழா முதலிய வேடிக்கைகளையும், அஞ்ஞான பூர்வகமான பலவித அநுஷ்டானங்களையும் விட்டு விடுவார்களென்று நான் நம்பவில்லை. சாதாரண ஜனக்கோடிகளுக்கன்று நான் கூறுவது. தீர்க்கதரிசிகளாய், ஆழ்ந்தகன்ற புத்தியும் விவேகமும் உடையவராய், ஸநாதந தர்மத்தின் உட்கருத்துகளை உணர்ந்தவராய்; பழைய வழக்கத்தால் ஏற்பட்டிருக்கும் துராசாரங்களையும், நிர்ப்பந்தங்களையும், தொலைத்தாலன்றி, ஹிந்துமதமும், இந்தியாதேசமும், ஹிந்துக்களாகிய நாமும் ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டோமென்பதை மனதாரத் தெளிந்து தெரிந்தவராயுள்ள பத்திமான்களுக்காவே, நான் இதை எழுதலானேன்.



## ஒரு விசேஷ விவாகம்

மிஸ்டர் A. மாதவய்யா ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பு:—

எனக்குத் தெரிந்த மட்டில் அடியிற் கண்ட சமாசாரம் உண்மையானது. உண்மையென்றே நான் நம்புகிறேன். ஹிந்து ஜனசமூகம் அதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்; பொதுஜன அபிப்பிராய பலத்தினாலேயே அவசியமான திருத்தங்கள் உண்டாய் விடுமென்றும் ஆகையால் சட்ட பூர்வமாகத் திருத்தங்களை உண்டாக்க உத்தேசிக்கக் கூடாதென்றும் சொல்லுகிறவர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

சுமார் 70-வயதுள்ள பிராமணரல்லாத ஒரு தமிழர் 16-வயதுள்ள ஒரு பெண்ணை சமீபத்தில் விவாகஞ் செய்துகொள்ள உத்தேசித்திருக்கிறார். வெகு நாள் ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்து விட்டு, இப்பொழுது நிரம்பப் பென்ஷன் பெற்று வருகிறார். இப்பொழுது வேறொரு சேவகத்தில் அமர்ந்து பென்ஷனை விட அதிகச் சம்பளம் பெற்று வருகிறார். அவருக்கு வயது வந்த ஒரு குமாரனுண்டு. அந்தக் குமாரனுக்குச் சில குழந்தைகள் இருக்கின்றனர். ஆனால் தகப்பனுக்கும் மகனுக்கும் இப்பொழுது மனோராஜியில்லை. 99-வயதுள்ள தாயாரும் இருக்கின்றாள். விவாகம் செய்து கொள்ள வேண்டியதற்காக அவர் எடுத்துச் சொல்லும் காரணங்களை அவர் சொல்லுகிறார்:—"என்னுடைய மனைவி 10-வருஷத்துக்கு முன் இறந்து போனாள்; உடனேயே நான் மறுபடி விவாகஞ் செய்து கொண்டிருப்பேன்: ஆனால் என்னுடைய கிழத் தாயாரை, என் மகனும் அவனுடைய குடும்பமும் சரியாகச் சம்ரட்சிக்க மாட்டார்களென்று அப்பொழுது நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய தாய் அலட்சியம் செய்யப்படுவதைப் பார்க்கையில், எனக்கு இன்னும் வயதாகையில் என்கதி என்னவாகுமென்று நினைக்க என் உள்ளம் நடுங்குகிறது. என்னுடைய தாயாரையும் என்னையும் சரியாகப் பாது காப்பதற்காக எனக்கு ஒரு மனைவி வேண்டும். தடையில்லாமல் அவளுக்குத் தேவையான சொத்து வைப்பேன். அடுத்த வருஷத்தில் என்னுடைய தாயாருக்கு சதாபிஷேகம் செய்யவேண்டி யிருக்கும். அதைக் கிரமப்படி நடப்பிக்க, எனக்கு தம்பதி வேண்டும். காமவேட்கையால் இப்பொழுது நான் விவாகம் செய்துகொள்ள விரும்பவில்லை. அதை அடக்க எப்பொழுதும் எனக்குப் பழக்கமுண்டு. சில மூடர்கள் பிதற்றலாம்; ஆனால் 21-பெண்களின் ஜாதகம் என்னிடம் வந்திருக்கிறதைக்கொண்டு, பொது ஜன அபிப்பிராயம் எப்படி இருக்கிறதென்பது எனக்குத் தெரியும்"—இம்மாதிரி விவாகம்செய்துகொள்ளப் போகிறவர் சொல்லுகிறார். பெண்ணின் தகப்பன் பின்வருமாறு சொல்லுகிறார்:— 70 வயதுக்காரர் [illegible]தென்று நீங்கள் ஆட்சேபிக்கிறீர்கள். [illegible]னுடைய தாயாதி ஒருத்தர் 18 வயதுள்ள [illegible]னுடைய பிள்ளைக்கு 15 வயதுள்ள ஒரு [illegible]ணை விவாகம் செய்து வைத்தார். ஆனால் விவாகம் நடந்து 40 நாட்களுக்குள் அந்தப் பையன் இறந்துபோய்விட்டான், அதே பையனுக்கு என்னுடைய பெண்ணைக் கொடுத்திருந்தேனேயானால், இப்பொழுது அவள் அமங்கலியாகத்தானே இருப்பாள்? தலைவிதி எப்படி இருக்கிறதென்பதை யாரையா கண்டது! 25-வருஷம் சுமங்கலியாக என் பெண் வாழ்வாள் என்று ஜோதிடர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் எந்த மனுஷ்யன் கூடாதென்கிறீர்களோ அந்த மனுஷ்யனுடைய வம்சத்தார் வெகுகாலம் ஜீவித்திருப்பவர்கள். அவருடைய தாயார் 99-வயதாகியும் இன்னும் ஜீவித்திருக்கிறாள் பாருங்கள் என்று பெண்ணின் தகப்பன் சொல்லுகிறார். இதன்மேல் என்னுடைய அபிப்பிராயம் எதையும் சொல்ல நான் உத்தேசிக்கவில்லை. ஒருவர் வைதீகச்சடங்கை ஆதாரமாகக் கூறுவதையும், மற்றவர் ஜோதிடத்தை ஆதாரமாகக் கூறுவதையும் கவனியுங்கள்.

---

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடையவான் சகடம்
செல்லாது தெற்றின்று நின்று,

## ஜாதி அடையாளங்கள்

இந்தியாவில் ஒவ்வொருவருடைய பெயரிலும், உடையிலும் வழக்கத்திலும் ஆசாரத்திலும், சடங்கிலும் சமையல் செய்யும் முறையிலுமேயல்லாமல், பாஷையிலும் சாதியடையாளங் காணப்படுகின்றது. இந்தியர் அறிவின் மேன்மைக்கும் நாகரீக வளர்ச்சிக்கும் ஏற்ப மற்றவைகளெல்லாம் மாறி மாறி வரும் இந்நாளில் இச் சாதியடையாளம்மட்டுஞ் சிறிதுந் திரியாமல் இருப்பது ஆச்சரியமாகும். இந்த அடையாளமானது ஒரு வகுப்பிலிருந்து ஒரு வகுப்பையும், ஒரு உள் சாதியிலிருந்து ஒரு உள் சாதியையும் பிரித்துக் காட்டுகின்றது. முதலில், ஒவ்வொரு சாதியாரும் ஒவ்வோர் காரணத்தைப்பற்றி ஒரு கௌரவப் பட்டத்தைத் தாம் பிறப்புரிமையாகக் கொண்டிருந்தனர். நாளடைவில் ஒரு சாதியாருடைய பட்டத்தைப் பிற சாதியாரிற் சிலர் தரித்துக்கொண்டு அதில் தமக்கும் உரிமைகாட்டப் புகுந்தனர். அதனால் உண்டான வாதங்களின் கொடுமையோ, அம்மம்ம! எடுத்தெழுத இயலாது. இத்தகைய சாதியடையாளங்களானவை ஒரு சாதி மற்றொரு சாதியோடு கலவாமல் இருப்பதற்குப் பிரயோஜனப்படினும், இக்காலத்தில இந்திய ஜனங்களுள் வேண்டப்படும் ஒற்றுமைக்கும், சம[illegible]லக்கும், அபிவிருத்திக்கும் இடையூறுகளாக இருக்கின்றன. சாதிமுறையின் தீமையை அறிந்து அதைக் களைய முயலுஞ் சீர்திருத்தக்காரர் சிலர் பட்டப்பெயர் முதலான இவ்வெளி வேறுபாடுகளால் ஒரு தீங்குமில்லை; நாம் கலப்புப்போஜனத்திற்கும், கலப்பு விவாகத்திற்கும் மட்டும் துணியவேண்டுமென்று கூறுகின்றனர். இவ்வெளி வேறுபாடுகளெல்லாம், முக்கியமாக ஐயர், ஐயங்கார், சர்மா, குப்தா, செட்டியார், முதலியார், பிள்ளை முதலான சிறப்புப்பட்டங்களெல்லாம் விலக்கப்பட்டாலன்றி சனங்களுள் எவ்விஷயத்திலும் கலப்புண்டாவது கடினம். முக்கியமாக இப்பட்டப் பெயர்களே பெரும் வித்தியாசத்தை யுண்டு பண்ணுகின்றன. ஆகவே, இவ்வெளி வித்தியாஸங்களை யெல்லாம் அறவேவிடுவதல் முதலில் சென்னையிலுள்ள ஹிந்து ஜனசமுதாய சங்கத்திலும், பம்பாயிலுள்ள ஆரிய சகோதர சமாஜத்திலும், அங்கத்தவர்கள[illegible] [illegible] யாளர் [illegible] மற்றைய கல்விமான்களும், பிறரும் தஞ்சாதிச்சிறப்புப் பட்டங்களையும், பிறவேறு பாடுகளையும் விட ஆரம்பிப்பார். அதனால், இப்போதுள்ள நானாவித சாதிகளும் ஓரேசாதியாகும். அப்போதுதான் இந்தியருள் ஒருமைப்பாடும் சமமும்தோன்றும்—என்று சுதேசமித்திரனில் எழுதுகிறார் உருத்திரகோடீசுவரர்.

## அம்மை குத்துதல்

(வைத்திய கலாநிதி.)

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒருவயது நிரம்புவதற்கு முன்னமே அம்மை குத்தித் தீரவேண்டுமென்று இந்தியாவில் கட்டாயச் சட்டம் ஏற்பட்டிருப்பதை இப்பொழுது பலர் கண்டிக்கின்றனர். இங்கிலாண்டு, ஜெர்மனி முதலிய நாடுகளில் அம்மை குத்துவது அநாவசியகமென்றும், அதனால் சில தீங்குகளும் ஸம்பவிக்கின்றனவென்றும் சாஸ்திர நிபுணர்கள் அறிந்து, அம்மை குத்தும் முறைக்குப் பிரதிகூலமான சங்கங்களையும் சிலர் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அநேகம் வியாதிகளைத் தடுப்பதற்காக அந்தந்த வியாதிக்குக் காரணமான பதார்த்தங்களைப் புசித்தோ வேறுவிதமாக தேஹத்திற் செலுத்தியோ, அவ்விஷ பதார்த்தங்களைத் தாங்குவதற்கேற்றவாறு சரீரத்திற்கு ஒருவாறு ஸம்ஸ்காரம் செய்யும் சில உபாயங்களை முற்காலத்தில் ஆயுர்வேத சாஸ்திரஞ்ஞர்களும் அறிந்திருந்தனர். "த்ரவ்யைஸ் தைரேவ வா பூர்வம் சரீரஸ்யாபி ஸம்ஸ்க்ருதி:"—(எவ்வித பதார்த்தங்களால் வியாதி ஸம்பவிக்கின்றதோ, அதே பதார்த்தங்களை முன்னதாய் உபயோகப்படுத்தி தேஹத்திற்கு அவற்றை அனுகூலமானவையாகச் செய்துவிடுவதும் வியாதிகளைத் தடுக்கும் முறைகளில் ஒன்றாம்) என்று வாக்படன் முதலானவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் அவ்விதம் வியாதிகளைத் தடுப்பதற்கென்று வியாதிக்குக் காரணமான வஸ்துக்களை உபயோகிக்கும் வழக்கம அவ்வளவு யுக்தமல்லவென்று நிச்சயித்து, அவ்வழியை அதிகமாய் அவர்கள் பின்பற்றவில்லை யென்றறிகிறோம். குழந்தைகளுடையவும் பெரியோர்களுடையவும் ஆரோக்கியமான தேஹத்தில் வியாதிகொண்ட நிணநீரைக் (Lymph) குத்திச் செலுத்துவதும்,' அதற்கென்று ஒரு கட்டாயச் சட்டம் ஏற்பட்டிருப்பதும் சில மேனாட்டுப் பண்டிதருடைய கொள்கைப்படியே [illegible] இதைப்பற்றி "நியூ இந்தியாவில்" ஓர் ஐரோப்பிய கனவான் சில நாட்களுக்கு முன் எழுதி வெளியிட்டிருக்கும் வியாசத்தை இதனடியில் மொழிபெயர்க்கின்றோம்; அதுவே இதற்குப் போதுமான அத்தாட்சியாகலாம்.

"அம்மை குத்தும் விஷயமா யேற்பட்டுள்ள கட்டாயச் சட்டத்தைப்பற்றி நீங்கள் உங்களுடைய பத்திரிகையில் நேற்றைய 10-ந்தேதி எழுதியிருந்த நிருபத்தைப் பார்த்தேன். இந்தியாவில் வருஷந்தோறும் 10,000,000 பேருக்கு கவர்ன்மெண்டு அதிகாரிகளால் அம்மைக் குத்தப்பட்டு வருவதைப்பற்றி ஸாமானியமான விவேகத்தினால் அறியக்கூடிய சில வார்த்தைகளைச் சொல்ல வெகு ஆவலுள்ளவனாக யிருக்கிறேன். கவர்ன்மெண்டார் இவ்விதம் 100 வருஷங்களானாலும் அனைவருக்கும் அம்மை குத்திக்கொண்டே போகின்றனர். வேண்டியவளவு நம்பிக்கை வைத்தே இவ்விதம் செய்யப்பட்டு வருகிறது; ஆனால் இதன் பலனைப்பற்றி சாஸ்திர முறைப்படி விசாரம் செய்தவரில்லை. வியாதியைத் தடுப்பதற்கு இம்முறை மிகச் சிறந்த உபாயமென்று சிபார்சு செய்யும் சாஸ்திர நிபுணர், அதனாலுண்டாகும் உபயோகத்தையும் தெளிவாக நிரூபிக்க வேண்டியது கடமை; அந்தந்த ஊர்களில் அம்மை பரவி வரும்போது, அம்மை குத்தியவர்களுக்கு அவ்வியாதி வாராமலிருந்ததா வென்று ஜாக்கிரதையாக விசாரணை செய்யவேண்டியது அவசியம்; ஆனால் அநேக விடங்களில் இவ்வாறு விசாரணை செய்யாமலே காரியம் ஏதோ நடந்து வருகிறது. இவ்விஷயத்தை நன்றாக விசாரிக்க முயன்றார்களானால் வியாதியைத் தடுப்பதற்காக அம்மை குத்துவதால் பிரயோஜனமில்லையென்று நன்குவிளங்கும். கிரேட் ப்ரிடனிலும், இடாலியிலும், ஜெர்மனியிலும் இது ஸம்பந்தமாக நன்றாக விசாரணை செய்து வந்ததில் இவ்விதப் பிரயோகத்தினால் அம்மைவாராதபடி தடுக்க முடியாதென்றும், இது பிரயோஜனமற்ற காரியமென்றும் அத்தேசத்தோருக்குத் தெரியவந்தது. அவ்விதமாக இந்தியாவிலும் 36 வருஷங்களுக்கு முன் விசாரணை செய்யப்பட்டு வந்ததில் அறிந்துகொண்ட விஷயத்தைப்பற்றி முன்னால் சில ரிபோர்டுகள் வெளியாயிருக்கின்றன. அவற்றைக் கவனித்தோமாயின் சிறிது உண்மைவெளியாகும்.

1879–80 வருஷங்களின் சுகாதார முறைகளைப் பற்றிய ரிபோர்டில் 141-வது பக்கத்தில் 'இந்தியாவில் அம்மை குத்துவதால் அம்மையென்னும் வியாதியைத் தடுப்பது ஸாத்தியமல்ல என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் பஞ்சாப் ராணுவக் கமிஷனுடைய 1879-வது வருஷத்திய ரிபோர்டில் 186-வது பக்கத்தில் 'இந்தியாவின் மற்றப் பிரதேசங்கள் போலவே பஞ்ஜாபிலும் அம்மை குத்திவந்தும் அப்பெருவாரி வியாதியைத் (அம்மை) தடுக்க முடியவில்லை யானதால் அந்த முறை பிரயோஜனமற்றதாகத் தெரிய வருகிறது' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தை டாக்டர்கள் கவனிக்கவில்லை யென்று அவர்கள் பேரில் நாம் பழிகூற வகையில்லாதவராயிருக்கிறோம். உபயோக மில்லாத அல்லது சில சமயம் தீங்குவிளைவிக்கக்கூடிய இம்முறையைக் கையாடவேண்டியது அவசியமென்று கட்டாயமாகச் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருப்பதால், டாக்டர்கள் இதில் குறுக்கிட முடியாமற் போனதுடன், இவ்விஷயத்தில் அவர்கள் உத்தரவாதமா யிருக்கவேண்டிய கடமையும் ஒருவாறு குறைந்துவிட்டது மறுபடியும் சொல்லுகிறேன்; அம்மை குத்துவது உபயோகமற்ற முறை யென்பது மட்டுமல்ல, அது தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. அம்மை குத்துவதற்காக க்ளிஸரைன் என்னும் பாணியைச் சேர்த்து மஹா சுத்தமென்று பக்குவம் செய்யப்பட்ட அந்தநிணநீர் (Pure Glycerinated Lymph) என்பது ஸாதாரண சீழேயன்றி வேறல்ல; வியாதிகொண்ட ஒரு கன்றின் வயிற்றில் ரோமங்களைச் சிரைத்துவிட்டு நூற்றுக் கணக்கான சிறிய விரணங்களை யுண்டுபண்ணி, அவ்வெளிய பிராணியின் அவயவத்தில் கொப்புளங்களை யுண்டாக்கி அவற்றிலிருந்தே இந்த நிணநீரெனும் சீழ் சேகரிக்கப்படுகிறது. அக்கொப்புளங்களைப் பிதுக்கி எடுக்கப்படும் இப்பதார்த்தம் மிகவும் கொடிய விஷப்பொருளென்பது நன்கு நிர்த்தாரணம் செய்யப்பட்ட விஷயமே; ஆகவே மனிதருடைய இரத்தத்தில் அதைப் பிரயோகிப்பதற்கு முன், இந்த நிணநீரில் ஜலத்தையும் க்ளிஸரைனையும் சில ஸமயம் கிராம்புத் தைலத்தையும் சேர்த்து அதிலுள்ள விஷப்பொருளைக் குறைப்பதற்காக அது விளாவப்படுகிறது. சில வாக்ஸினேடர்கள் (அம்மை குத்தும் அதிகாரிகள்) க்ளிஸரைன் சேர்ப்பதை ஆக்ஷேபித்து, அதற்குப் பதிலாக லானோலின் என்கிற தைலத்தைச் சேர்க்கலாமென்றும், வேறு சிலர் இவ்விரண்டையுமே ஆக்ஷேபித்து க்ளோரோபாரத்தைச் சேர்த்து விளாவக் கூடுமென்றும் அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் கூறுவதுடன், அவ்விதமே செய்தும் வருகின்றனர். இவர்களுள் ஒருவராவது சாஸ்திர முறைப்படி இவ்விதம் விஷப்பொருளை அவரவர் அபிப்பிராயப்படி

வேறு வித விஷப்பதார்த்தங்களான க்ளோரோபாரம் முதலிய வற்றுடன் கூட்டி அவற்றின் குணகுணங்களைப் பிரத்தியக்ஷத்தில் பரீக்ஷித்தவர் அல்லர்; அவை அவ்வியாதியைத் தடுக்கக்கூடிய சேர்க்கை தானா என்று விசாரித்தவர்களல்ல; ஆனால் பொது ஜனங்கள் என் செய்வார்? அவர்கள் எளியவர்; அவர்கள் இவ்விஷயங்களையெல்லாம் உணராதவர்; பொது ஜனங்களில் பெரும்பாலோர் படிக்கவும் தெரியாத பாமரர்; அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அம்மை குத்தும் அதிகாரிகள் எவ்வித பதார்த்தங்களைச் சேர்த்துக் கலந்த சாக்கை உபயோகித்துக் கொள்ள உத்தரவு செய்தபோதிலும், அவர்கள் அதற்கு உடன்பட்டுத் தீரவேண்டியிருக்கிறது. இங்கிலாண்டில் 1907-ல் பார்லிமெண்டு மெம்பர்கள் பலர் சேர்ந்து, மனச்சாக்ஷியின்படி நடக்கவேண்டும் என்று விரும்புகிற ஜனங்களின் நன்மையைக் கருதி (Conscience clause) ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே இவ்வித காரியங்களை ஆக்ஷேபிக்கும் கருத்துள்ள ஜனங்கள் ஒரே வருஷத்தில் 300,000-க்கு மேலாகவே முன் வந்து, இதில் விருப்பமில்லாத ஜனங்களைக் கட்டாயப்படுத்துவதும் அவர்களை தண்டனைக்கு உட்படுத்துவதும் பிசகென்று வாதித்தனர். இந்த 300,000 பேர்களும் அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்கிற நிர்ப்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டார்கள். இப்பொழுது இங்கிலாண்டில் பிறந்த குழந்தைகளில் பாதிக்கும் குறைவான குழந்தைகளுக்கே அம்மை குத்தப்பட்டுவருகிறது. இவ்விதியிலிருந்து விலக்கப்பட்ட மனிதர்களின் எண்ணிக்கை இன்னும் சில வருஷம் இவ்வாறே மேன்மேலும் விருத்தியடைந்து வருமானால், இங்கிலாண்டில் குழந்தைகளுக்கு அம்மை குத்தும் வழக்கம் ஒன்று இருந்ததென்பதே கிரமமாக மறந்துபோய்விடும்; இங்கிலாண்டில் தற்காலத்திலும், அம்மை குத்தும் வழக்கம் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை; நன்கு கவனித்துப் பார்த்தால், அத்தேச அனுஷ்டானம் இவ்விதிக்கு விலக்கானதேயென்று சொல்லத் துணிவேன்; அங்கு வஸூரிகையென்னும் பெரியம்மைமுற்றிலும் உண்டாவதுமில்லை. பல வகையிலும் உயிரைக்காப்பது ஜனங்களுக்கு மிகக் கடினமாயிருக்கும்போது, அவர்களுடைய சுகாதாரத்தைக் காக்கவேண்டிய வழிகள் அநேகம் இருக்க, இராஜாங்கத்தார், ஜனங்களுடைய சரீரத்தில் இளங்குழந்தைப் பருவத்திலேயே விஷப்பொருளை ஏற்றி அவர்களுடைய ஆரோக்கிய ஸ்திதியை நிலைகுலையச் செய்வதற்கான ஒரு கட்டாயமான சட்டத்தை ஏற்படுத்தியிருப்பது விஸனிக்கத்தக்கது,"

இவ்வாறு மிஸ்டர் ஆர்னால்ட் ல்யுப்டன் என்கிற கனவான் எழுதியதை இந்திய ஜனங்களும் கவனித்து, இதில் விருப்பமில்லாத வகுப்பார் தம்மை வீணில் இதற்காக நிர்ப்பந்திக்கக் கூடாதென்றும் இங்கிலாண்ட் முதலான தேசங்களில் இதுவிஷயமாய் ஜனங்களுக்குக் கொடுத்திருக்கும் ஸ்வாதந்திரியம் தமக்கும் அவஸ்யமென்றும் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்வது உசிதம்.

## ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் 245-வது வருட குருபூஜை

தமிழ்நில மாந்தருள் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் வரலாறும் அவரது அரும்பாக்களின் சிறப்பும் அறியாதாரிலர். அவர் பாடல்களை பாமரர்கள் முதல் பரமஞானிகள்வரை தத்தமறிவின் விளக்கத்திற்கேற்ப அறிந்து ஆனந்தமடைகின்றனர். மதாபிமானிகளுட் பலர் ஒவ்வோரிடத்திற் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக்கொண்டு அம்மகானை தம்மதச் சார்புடையரெனக்கூறி வாதித்து வருவது மிகப்பிரசித்தமாம். இத் தாயுமானசுவாமிகளின் சரிதமோ மற்ற புராண இதிகாசங்களிற் கூறும் கதைகள் போலன்று. 245-வருஷங்களுக்கு முன்புதான் பரிபூரண தசை அடைந்துளாரென்பதற்குத் தக்க சான்றுகளுண்டு. அம்மகானின் பெருமையை அவரியற்றிய நூல் தமிழ்நாடெங்கும் உலவி விளக்குகின்றது. மதவாதிகளது மயக்கிலாழ்ந்து கெடாது சமரசவாழ்வை ஜனங்கள் பெற்றுய்யுமாறு ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடலில் அருமறையின் சிரப்பொருள் அமைந்திருப்பதை அறிவிக்க வல்ல ஸ்ரீலஸ்ரீ ஷண்முகானந்தகிரி சுவாமிகள் ஸ்தாபித்துள்ள சமரசஞான சங்கத்தாரால் அப்பெருந்தகை பூரணமடைந்த புண்ணிய தினத்தை அச்சங்கத்தின் 8-வது வருஷோத்ஸவமாக வழக்கம்போல சென்னை, வண்ணாரப்பேட்டை, தங்கசாலைக்கடுத்த ஸ்ரீ யோகானந்த முனீஸ்வர ராஸ்ரமத்தில் நாளது ராக்ஷஸ வருஷம் தை மீ 16உ (29-1-16) சனிவாரமும் விசாக நக்ஷத்திரமுங்கூடிய நன்னாளில் நடத்தப்படும். அன்று காலை 9-மணிக்கு சுவாமிகள் திருவுருவத்திற்கு அலங்கார தூபதீபாராதனைகளும், 11-மணிக்கு மகேஸ்வர பூஜையும், மாலை 4-மணிமுதல் பெரியோர்களால் சத்விஷயமான பிரசங்கங்களும் நடை பெறும்.

முந்துங்கள்! புது மாதிரி கெடியாரம். நல்ல லாபம்!!


'ரால்ஸ்' பாக்கெட்

# லீவர் ரிஜிஸ்டர் கெடியாரம்.

இனாம் சாமான்களுடன் ரூ. 2—4—0.

6-வருஷ உத்தரவாதம் கொடுக்கப்படும்.

எனது அன்பர்களே கவனியுங்கள். இந்த கெடியாரத்தின் பெருமைகளை இத்தனை நாட்களாகத் தாங்கள் காதாரக் கேட்டிருக்கிறீர்கள். இந்த குறைந்த



விலை கெடியாரம் நெடுநாளைக்கு உழைக்கக் கூடிய கெடியாரம் இது ஒன்றே என்று என் அனுபவத்தில் தெரிந்தது. இந்த விலையுயர்ந்த கெடியாரத்தை பெரிய பெரிய உத்தியோகஸ்தரும் பாங்கில் இருக்கும் துரைகளும் ஆயிரக் கணக்கான கெடியாரங்களை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இக்கெடியாரம் பார்வைக்கு வெகு அழகுடையதும், நிக்கல் வெள்ளி கேசும் நடுத்தர அளவானது, பார்சலுடன் மேல்மூடியினுட் புறத்தில் 6-வருஷ உத்தரவாத பத்திரிகை ஒட்டியிருக்கும். யுத்தத்தை அனுசரித்து மற்ற கெடியாரங்களின் விலைகள் உயர்ந்திருப்பினும் இதன் விலைமட்டும் நாம் வேணுமென்றே உயர்த்தாமலிருக்கிறோம்.

இனாம் சாமான்கள் விபரம்:—(1) அழகான சங்கிலி (2) கர்பால (3) ஜப்பான் கைக்குட்டை (4) கை மோதிரம் (5) சென்ட் புட்டி (6) ஷர்ட்டு பொத்தான் (7) டைமன் கை பொத்தான் (8) கிலிட் பொத்தான் (9) அழகான பட்டு கெடியாரப் பெட்டி.

வி. ஏ. எஸ். பாணி,

ஜெனரல் மர்சென்ட், நெ. 3, இருளப்பன் தெரு, சென்னை.

இதை அவசியம் கவனிக்கவேண்டும்

அபூர்வமானது! அபூர்வமானது!!

# ஒரு தடவை எங்கள் மணிமார்க்கு

வாசனை சுருட்டுகளை உபயோகியுங்கள்

நல்ல மணமும், சுகமான வாசனையும், திரேகத்திற்கு சௌக்கியத்தையும் கொடுக்கக் கூடியது.



ஒரு தடவை வாங்கிப் பார்த்தால் இதின் அருமையானது தெரியவரும்.

10 சுருட்டுகள் அடங்கிய ஒரு பாக் விலை 0-1-6.

1 பெட்டியில் 12 பாக் அடங்கியது விலை ரூ. 1-0-0

தபால் சார்ஜ் அணா 5.

மாதிரிவேண்டியவர்கள் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் மாதிரி சுருட்டு அனுப்பப்படும்.

ஏஜெண்டுகள் தேவை!

விலாசம்:—மானேஜர்,

தி. னேஷனல் சிகார் கம்பெனி,

34, நம்புலய்யர் தெரு, மதராஸ்.

கவனிப்பு:—விலாசம் எழுதும்பொழுது, பெயர், ஊர், இவைகளை தெளிவாய் எழுதவேண்டும்.


OFFICE OF THE REGISTRAR OF ... 22 MAR 1916 MADRAS.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்


1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1916ளு ஜனவரிமீ [சஞ்சிகை 4


## ஒளிவளர் விளக்கு

சென்ற 1915ளு டிஸம்பர்மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை-179.

*
* *

லார்டு ஹார்டிஞ்சுக்குப் பதிலாக பிரடரிக் ஜான் நேபியர் திஸீகர் பாரன் செம்ஸ்போர்ட் G. C. M. G. என்பவரை இந்தியாவிலே ராஜப் பிரதிநிதியாக நியமிக்கும்படி பிரதான மந்திரி சிபார்சுசெய்ய அவ்வாறே சக்கரவர்த்தி உத்திரவு செய்துவிட்டார். இவர் ஹார்டிஞ்ச் பிரபுவைப்போலவே தயையும் நீதியுங்கொண்டு ஆட்சி புரிவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது.

*
* *

இங்கிலாந்திலே மான்செஸ்டர் நகரிலுள்ள விக்டோரியா யூனிவர்ஸிடியைச் சேர்ந்த டாக்டர் ஜே. ஹோப் மௌல்டன் என்பவரை பம்பாய்க்கு வந்து, ஆரியர்களின் உற்பத்தி என்னும் விஷயமாய் ஆறு பிரசங்கங்கள் செய்யுமாறு பம்பாய் யூனிவர்ஸிடியார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆரியர்களின் உற்பத்தியைப்பற்றி நாம் மேல்நாட்டாரிடமிருந்து அறியவேண்டியவர்களா யிருக்கிறோம்!

சௌராஷ்டிர வகுப்பைச்சேர்ந்த மிஸ்டர் M. C. சீதாராம னென்பவர் இங்கிலாந்துக்குப்போய் அங்குள்ள காலேஜிலும், பஞ்சாலைகளிலும் நெசவுத் தொழில் கற்றுவந்தது மன்றி, வேறு ஐரோப்பிய தேசங்களுக்கும் சென்று அங்குள்ள நெசவுச் சாலைகளைப் பார்த்து வந்திருக்கிறார். இவர் நெசவுத்தொழிலுக் குரியவராதலினால், அத்தொழில் செய்வதில் விருத்திக் கிடமான மாறுதல்களையுண்டாக்கி நெசவுத் தொழிலாளிகளுக்கு சகாயஞ் செய்வாரென்று நம்புகிறோம்.

*
* *

கத்தியவாரைச்சார்ந்த துவாரகையிலிருக்கும் ஸ்ரீ சங்கராசார்ய மாதவதீர்த்த ஸ்வாமிகளாற் பிரசுரிக்கப்பட்டதோர் நூலில் விஸ்வகர்ம குலத்தாருடைய உற்பவத்தைப்பற்றித் தாழ்வாகக் கூறப்பட்டிருக்கிறதென்றும், அதனால் ஷெ யார் மீது மானநஷ்ட வியாச்சியந் தொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், விஸ்வப்பிரம்ம வம்ஸ ஜீரணோத்தாரகரென்னும் பட்டந் தரித்தவராகிய ஸ்ரீ சிற்பாசார்ய நாகேஸ்வர சர்மா அவர்கள் ஆமதாபாத் நகரத்திலிருந்து நமக்கறிவிக்கின்றார். இக்

தப் போராட்டம் இந்தியா முழுவதும் நிகழ்வது மிகவும் விசனிக்கத் தக்கது.

* * *

ஜப்பான் தேசத்திலே கியூஷூ என்னும் செழிப்பான பாகத்தில் ஆண்மக்களின் சராசரி கலியாண வயது சுமார் 27; பெண்மக்களின் கலியாண வயதோ சுமார் 23. மேனாடுகள் பலவற்றிலும் விவாக வயதுக்கிரமம் 20-க்கு மேல் இருக்கிறதேயொழிய, 20-க்குக் குறைவாக இல்லை. இதனால் அத்தேசமக்கள் நல்ல தேகவளர்ச்சி பெற்று திடசாலிகளாகவும் வீரமிக்கவர்களாகவுமிருக்கின்றனர். இந்தியாவிலோ வெனின், 20-வயதுக்குட்பட்ட ஆண்மக்களும் 16-வயதுக்குட்பட்ட பெண்மக்களும் சுமார் 2, 3 குழந்தைகளுக்குப் பெற்றோராகி விடுகின்றனர்!

* * *

சென்ற 29-ந்தேதி மாலையில் பம்பாயில் ஸ்திரீகளின் கூட்டமொன்று நடந்தது. எம்-ஏ. பட்டம் பெற்றுள்ள மிஸ் ஹேமவர்ம போஸ் அக்கிராஸனம் வகித்து மதம், ஜனச்சாரம், ராஜ்ஜியம் முதலிய விஷயங்களில் புருஷர்களுடன் கலந்துழைக்க ஸ்திரீகளும் முன்வரவேண்டுமென்று வற்புறுத்திப்பேசினார். இது ஸ்திரீகளுடைய காலம், புருஷர்களுடன் ஸ்திரீகளும் கலந்து வேலைசெய்தாலொழிய எந்த முயற்சியும் முன்னுக்கு வராது என்றும் சொன்னார். இம்மொழிகள் நமது ஜாதிக்கும் ஏற்குமன்றோ?

* * *

பம்பாயில் பிரசுரமாகும் இந்துப்பிரகாஷ் பத்திரிகை அடியில் வருமாறு கூறுகிறது:—கொங்கணத்தைச் சேர்ந்த மால்வான் என்ற ஸ்தலத்தில் சிறிய சுதேசி கடியாரத் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தப்பட்டது. மிஸ்டர் சிவராம தாதாபா என்ற மயாச்சாரி அத்தொழிற் சாலையின் சொந்தக்காரராவார். அவர் கடலைக் கடந்து அன்னிய தேசத்திற்குப்போய் இத்தொழிலைக் கற்றுக்கொள்ளவில்லை; அவருக்கு மேனாட்டாரின் தொழிற் பயிற்சியுமில்லை. என்றாலும், கடியாரத்தின் சகல பாகங்களையும் சீராகச் செய்வதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை அவர் அடைந்திருக்கிறார். ஆனால், கடியாரத்திலுள்ள ஸ்ப்ரிங்களைச் செய்வதற்கு மாத்திரம் அவரால் முடியவில்லை. இப்பொழுது சிவராம தாதாபா 15-ரூபாய் முதல் 20-ரூபாய் வரையிலும் மதிப்புள்ள கடியாரங்களைச் செய்து வருகிறாரென்றும், அவை நிரம்பத் திறமாயிருக்கின்றனவென்றும் சொல்லப்படுகின்றன. மேனாடுகளிலிருந்துவரும் பலவஸ்துக்களை விஸ்வகர்ம ஜாதியார் இந்தியாவிலேயே செய்துமுடிக்கக் கூடுமென்பது நிச்சயம். அங்ஙனஞ் செய்வதில் இவர்கள் இன்னும் நாட்டஞ் செலுத்தவில்லையென்றும், செய்வதற்கேற்ற சௌகரியங்கள் தக்கவாறு அமைக்கப்படவில்லையென்றும் அபிப்பிராயப் படுகிறோம்.

* * *

ஜாதி பேதமில்லாது ஹிந்து சமபந்திபோஜன விருந்தொன்று சென்ற மாதத்தில் பம்பாயில் நடைபெற்றது. விருந்துக்குவரும்படி சுமார் 800 பேர் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதில் 450-பேர் வரையில் விருந்துக்கு வந்திருந்தனர். அவர்களில் 50-பேர் ஸ்திரீகள். தாழ்ந்த வகுப்பாரில் 20-பேரும் வந்திருந்தார்கள். விருந்துக்கு வந்திருந்த 450-பேரில் 125-பேர் பிராமணர்கள். வங்காளம் சென்னை பஞ்சாப் ஐக்கிய மாகாணம் பம்பாய் முதலிய இடங்களிலிருந்தும் பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் விருந்துக்கு வந்திருந்தார்கள். விருந்து நடந்தேறியதும், ஹிந்துக்களில் பலவகுப்பினரையும் ஒன்றுகூட்டி அவர்களுக்குள் சகோதரபாவம் பரவச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே விருந்து நடத்தப்பட்டதென்று ஸர் நாராயண சந்த்ரவர்க்கார் சொன்னார். ஹிந்துக்களும் முகம்மதியருஞ் சேர்ந்த விருந்தும் நடந்தது, இவ்வாறு வெவ்



MADRAS 22 MAR 1916

வேறு ஜாதியாரும் வெவ்வேறு மதஸ்தர்களுங் கலந்து சமபந்திபோஜனஞ் செய்யும்போது, ஒரே ஜாதியாராகவும் ஒரே மதஸ்தராகவுமுள்ள நாம் சமபந்தி போஜனங்கொள்ளப் பின்வாங்கிச் சங்கடப்படுவானேன்?

* * *

முகம்மதியரைத் தவிர மற்ற இந்தியர் அனைவரும் புதிய உணர்ச்சி கொண்டிருக்கும்பொழுதும், இந்தியாவின் பிற்கால நிலைமையானது திருத்தி அமைக்கப்படும்படியிருக்கும்பொழுதும் முகம்மதியராகிய நாம் எதுவும்செய்யாமல் சும்மாவிருப்பது தகுமா? அல்லது தேசாபிமானந்தானாகுமா? புத்திசாலித்தனந்தானாகுமா? தன் மதிப்பும் தன் சக்தியில் நம்பிக்கையுங்கொண்டு வாழ நாம் விரும்புவோமாயின், இந்தியாவின் நிலைமை திருத்தி அமைக்கப் படும்பொழுது, அதில் நமக்குள்ள பொறுப்பையும் சுமையையும் நாம் முழுமனதுடன் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? முயற்சி செய்யாதவர்கள் பலனடைவதில்லை. கஷ்டங்களையும் பொறுப்பையும் வகித்து முயற்சிகளில் நாமும் கலந்து கொள்ளாமல் சும்மாவிருந்துவிட்டு, முயற்சியால் பலனை அனைவரும் அடையும்பொழுது, நாம் சென்று பெரிய பாத்திரத்தைக் கையிலேந்தி அதன் பலனைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டுவோமாயின், தன்மதிப்புள்ள முகம்மதியருக்கு அது கௌரவக் குறைவாகுமென்றே நான் நம்பியிருக்கிறேன். நாமே முயற்சிசெய்து, நம்முடைய முயற்சியில் நம்பிக்கை கொண்டு சக்தியுடன் உழைப்போமாயின், நாம் அடையவேண்டிய நன்னிலைமைக்கு இடையேயுள்ள கஷ்டங்களை நாம் போக்கிக்கொள்ளலாம்.—இவ்விதமாக ஜஸ்டிஸ் அப்துல்ரஹிம்அவர்கள் பூனாவிற் கூடிய முகம்மதிய கல்விக் கான்பரன்ஸ் அக்கிராசனபதியாயிருந்து உபந்நியசித்தார். முகம்மதியர் என்ற பதத்திற்குப் பதிலாக விஸ்வகர்மர் என்ற பதத்தைக்கொண்டு இவ்வாக்கியங்களை நம்மவர் வாசித்துணர விரும்புகிறோம்.

* * *

சென்னை விக்டோரியா பப்ளிக்ஹாலில் பொதுமீட்டிங் கூட்டுவித்து ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடியின் ஸ்தாபனத்தைப்பற்றி அலகாபாத் நகரத்து ஆனரெபில் பண்டித் மதன் மோஹன் மாலவியா அவர்கள் மிகச் சிறந்ததோர் உபந்நியாசஞ் செய்தார், அப்போது சென்னைப் பிரமுகர்களிடமிருந்து 61-ஆயிரத்து 750 ரூபாய்க்குக் கையொப்பம் கிடைத்தது. மொத்தக் கையொப்பத் தொகையாகிய 90 லட்சம் ரூபாயிலே இதுவரையில் ஹிந்து யூனிவர்ஸிடிக்காக 60-லட்சம் ரூபாய் வசூலாயிருக்கிறதென்றும் கங்காநதிதீரத்திலே 2-மைல் நீளமும் ஒருமைல் அகலமும் உள்ளபூமி கிடைத்திருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். அடுத்த பிப்ரவரிமீ 4-உபன்று ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடிக்கு லார்ட் ஹார்டிஞ்ச் அவர்களால் அஸ்திவாரக்கல்நாட்டப்படும். மாகாணத் தலைவர்கள் பலரும் அவ்வைபவத்திற்கு விஜயஞ் செய்வதாக வாக்களித் திருக்கின்றனர். காசிமாநகரிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும் இருக்கும் மாணவர்களின் நன்மைக்குமட்டும் ஹிந்துயூனிவர்ஸிடி ஏற்படவில்லையென்றும், இந்தியாவிலுள்ள அனைவருக்கும் உபயோகமாயிருக்க வேண்டுமென்பதே கோரிக்கையாகுமென்றுஞ் சொல்லப்படுகிறது. ஹிந்து யூனிவர்ஸிடி என்ற பெயர் கொடுத்திருப்பினும், எல்லா வகுப்பினரும் ஆண் பெண் ஆகிய இருவகையாரும் யூனிவர்ஸிடியில் சேர்ந்து கற்கலாம். இந்த யூனிவர்ஸிடியால் பல நன்மைகள் ஏற்படும். இங்கிலாந்துக்குச்சென்று ஸிவில் ஸர்விஸ் போட்டிப் பரிட்சை கொடுக்கும்படி இந்த யூனிவர்ஸிடியானது மாணவர்களைத் தயார் செய்யக் கூடுமென்றும், இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் சென்று படிக்கப்போகும் மாணவர்கள் அங்

கே கிடைக்கும் படிப்பை கங்காதீரத்திலே ஜன்மதேச யூனிவர்ஸிடியில் பெறுவது சாத்தியமாகுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

மகம்மதிய வகுப்பார்மீது கவர்ன்மெண்ட் தங்கள் அபிமானத்தை அனுவச்யமாக சுமத்திவருகிறார்களென்று கூறி அதைக்கண்டித்தெழுதுமிடத்து 'சுதேசமித்திரன்' பின்வருமாறு கூறுகிறது:—"பரம ஏழைகளாய் துர்ப்பாக்கிய நிலைமையிலிருக்கும் இந்த (பஞ்சம) வகுப்பாருக்குப் பலவழிகளில் கவர்ன்மெண்ட் உதவிசெய்யக் கடமைப்பட்டவர்கள். பஞ்சமர்களைப்போல நெசவுக்காரர்களையும் கவர்ன்மெண்ட் ஒத்தாசைசெய்து அவர்கள் சங்கங்கள் ஸ்தாபித்துக்கொள்ளும்படிப் போதித்து அவர்கள் செய்யும் தொழிலையும் ஆதரித்து எத்தனையோ வழிகளில் அவர்களுக்கு ஒத்தாசை செய்யலாம். இவ்வகுப்பாருக்கும் பஞ்சமர்களுக்கும் கவர்ன்மெண்ட் கூடியவரையில் சாத்தியமான வழிகளிலெல்லாம் ஒத்தாசைசெய்து படிப்புச்சொல்லிவைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வகுப்பாருக் கல்லவோ கவர்ன்மெண்டும் லோகல் போர்டுகளும் தனியான ஸ்கூல்கள் ஸ்தாபித்து அந்தப் பிள்ளைகளிடம் அரைச்சம்பளமோ, கால்சம்பளமோ வாங்கி, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகளும் கொடுத்து புஸ்தகம், சிலேட் முதலியவைகளை இனாமாயும் கொடுத்து அவர்களிடத்தில் விசேஷ அபிமானங்காட்டிப் பணத்தைத் தாராளமாய்ச் செலவு செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்? அந்த வகுப்பார் விஷயத்தில் பணச்செலவு செய்வது கவர்ன்மெண்டுக்கு வீண் செலவாகாது. பஞ்சமர்களும், நெசவுக்காரர்களும் தேசத்துப் பொருள் நிலைமைக்கு அடிப்படையாவார்கள். அவர்கள் நல்ல நிலைமையிலிருந்து கல்வி கற்றவர்களாயிருந்தால் விவசாயம் செழிக்கும். ஜனங்களுக் கவசியமான துணிகளும் மலிவாயும் நல்லவைகளாயும் கிடைக்கும்."—கும்பகோணத்தில் சென்ற வருஷத்திற் கூடிய விஸ்வகர்ம கான்பரன்ஸைப்பற்றி இப்பத்திரிகை எழுதிய வாக்கியங்களை நமது வாசகர்கள் இவ்விடத்து வருவித்துப் பார்க்க விரும்புகிறோம். அவை, 2-வது சம்புடத்தின் 146-வது பக்கத்திற் பிரசுரிக்கப்பட்டன.

## ஜப்பானின் தொழிற்பெருக்கம்

*மிஸ்டர் லாலா லஜபதிராய் மாடர்ன் ரிவியூ என்ற மாதப் பத்திரிகைக்கு ஜப்பானிலிருந்து பின்வருமாறு எழுதுகிறார்:—*

பிரிட்டிஷ் அரசாட்சியின் ஆரம்பத்தில் தொழில்களில் இந்தியா இருந்த மாதிரியாகவே 45 வருஷத்திற்கு முந்தி ஜப்பானும் இருந்தது. மேற்கு தேசத்து வியாபாரங்கள் பிரபலிப்பதற்கு முந்தி இரண்டு தேசங்களும் தம்தம் தேசங்களுக்கு வேண்டிய தொழில்களைச் செய்து ஜனங்களுக்கு வேண்டியவைகளையளித்து வந்தன. ஆனால், இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் சில வித்தியாசங்க ளிருந்தன. அவைகளாவன.—இந்தியாவில் அன்னிய இறக்குமதிகளுக்குத் தடையொன்றுமிருந்ததில்லை. ஜப்பானைப்போல அன்னிய தேசங்களுக்குப் போவதில் தடையொன்றுமில்லாமலிருந்தது. ஜனங்கள் எந்தத் தொழில்களையும் செய்யலாம்; அன்னிய வியாபாரத்திலும் தடையில்லாமலிருந்தது. 1868-ம் வருஷத்திற்கு முந்தி ஜப்பானியர்கள் தங்கள் இஷ்டப்படி எந்தத் தொழில்களையும் சில கூட்டத்தார்கள் மட்டும் தலைமுறை தலைமுறையாய்ச் செய்துவந்தார்கள். ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்குமுந்தி அவன் பயிற்சி அடையவேண்டும். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த தொழிலைத் தவிர வேறுதொழிலை செய்யக்கூடாது. ஜப்பான் தேசத்தில் அன்னியர்கள் வர்த்தகம் செய்யக்கூடாது.

சில டச்சுக்காரர்களும் ஸ்பெயின் தேசத்தார்களும் வியாபாரம் செய்ய இராஜாங்கத்தாரிடம் அனுமதி பெற்றிருந்தார்கள். ஜப்பான் தேசம் மற்ற தேசங்களுடன் செய்துகொண்ட ஏற்பாட்டினால் அன்னிய வியாபாரம் தடையன்னியில் நடந்தது. இந்த வியாபாரத்தின் பலனாக ஜப்பான் தேசமானது தொழில்களில் விருத்தியடைய ஆரம்பித்தது. இந்த மாறுதல் தேசத்திலேயே ஏற்பட்டுவிட்டது. இந்த மாறுதலுக்கு அன்னிய தேசங்களின் சகவாசமும் அவைகளின் கொள்கைகளையனுசரித்ததுமே காரணமாகும். ஜப்பான் சேனைக்கு அன்னிய தேசத்து உடுப்புகளைக் கொடுத்தது முதல் அன்னிய வஸ்துக்களுக்கு அபிலாஷை அதிகமாயிற்று. இதனால், தேசத்தார்கள் செய்யும் கைத்தொழில்கள் மாறிவிட்டன. பழைய தொழில்களில் அநேகம் நசித்துப்போயின. தொழிலாளிகளுக்கு இன்னது செய்ய வேண்டுமென்று தெரியவில்லை.



அந்நிய தேசத்தார்களுடன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி இறக்குமதி வரிகளில்லாமல் போய்விட்டன. சுதேசத் தொழில்களைக் காப்பதற்கு வழியில்லாமல் போயிற்று. ஜனங்களுக்கு யந்திரங்களைக் கொண்டு வேலை செய்யத் தெரியாமலிருந்ததுடன் தகுந்த பணமுங்கிடையாது. இவ்விதமாக இருந்ததில் ஜப்பானில் எல்லா அந்நிய சாமான்களும் குவிந்து போயின. தினப்படி வேண்டிய முக்கியமான வஸ்துக்களுக்குங்கூட அந்நிய தேசங்களை எதிர்பார்க்க வேண்டியதாயிற்று. 1908-வருஷம் வரை ஜப்பான் தேசத்தின் இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விட ஜாஸ்தியாக இருந்தன. பிறகு, கவர்ன்மெண்டார் கண்ணைத்திறந்து கொண்டார்கள். அந்நிய சாமான்களை தேசத்திலேயே செய்ய ஏற்பாடு செய்தார்கள். நசித்துப் போன பழைய தொழில்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். ஜப்பானின் தொழில்களையும் வேலைப்பாடுகளையும் உலகத்தாருக்குத் தெரிவிக்க கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்தார்கள். 1873-ம் வருஷத்தில் வியன்னாவில் நடத்தப்பட்ட பெரிய பொருட் காட்சியில் ஜப்பானும் சேர்ந்து வேலை செய்தது. இப்போது முதல்மந்திரியா யிருக்கும் கௌண்டு ஓகூமா அந்த ஏற்பாட்டிற்கு வைஸ் பிரசிடெண்டாய் நியமிக்கப்பட்டு ஜப்பானின் வஸ்துக்களையெல்லாம் காட்சிக்கனுப்ப ஏற்பாடு செய்தார். ஜப்பான் வஸ்துக்களை விற்பதற்காக 70-உத்தியோகஸ்தர்கள் மேற்படி காட்சிக்கு அனுப்பப்பட்டார்கள். ஐரோப்பியர்களுக்கு வேண்டிய சாமான்களையும் தற்காலத் தொழில்களையும் தெரிந்து கொள்ள வேலைக்காரர்களனுப்பப்பட்டார்கள். இந்தக் காட்சிக்குச் சென்றவர்களில் சிலரைப் பொறுக்கி யெடுத்து அன்னிய தேசத் தொழில்களை சாஸ்திர பூர்வமாய்த் தெரிந்து கொண்டு வர அனுப்பினார்கள். காட்சியான அடுத்த வருஷத்தில் ஐரோப்பிய மாதிரி சில்லரை சாமான்களுடனும் கருவிகளுடனும் யந்திரங்களுடனும் சாயத்தொழில் சம்பந்தமான சாமான்களுடனும் நெசவுச் சாமான்களுடனும் பின்னல் வேலைகளுடனும் கவுண்டு ஓகூமா ஜப்பான் வந்து சேர்ந்தார். இவைகளெல்லாம் ஜனங்களுக்குக் காண்பிக்கப்பட்டன.

மறுபடியும் அமெரிக்காவைச் சேர்ந்த பிலடெல்பியாவில் கண் காட்சி நடத்தப்பட்டபோது ஜப்பான் தொழில்களையும் சாமான்களையும் காண்பிக்க தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாதிரி செய்ததில் அநேக பலன்கள் உண்டாயின. மேற்கு தேசங்களின் யந்திர முதலிய சாதகங்களைக் கொண்டு தொழில்கள் செய்யப்பட்டன. அத்தேசத்தார் அறியாத புதுத் தொழில்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. இவ்விதம் செய்ய முடியாத தேசங்கள் முன்னுக்கு வருவதில்லை. இம்மாதிரியான தேசங்களில் ஜெர்மனி மலிவானசாமான்களை இந்தியாவுக்கு கொண்டு வந்து குவித்தது போல உபயோகமற்ற சாமான்கள் வந்து குவிகின்றன. ஜப்பானில் தொழிற்காட்சிகளும் வியாபாரக் காட்சிகளும் நடந்தவண்ணமா யிருக்கின்றன. புதுத்தொழில்களை ஸ்தாபிக்க கவர்ன்மெண்டாரே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவை விருத்திக்கு வந்ததும் முதலாளிகளுக்கு விற்றனர்.

அன்னிய தேசங்களிலிருந்து மாதிரி சாமான்கள் சர்க்கார் செலவில் கொண்டுவந்து ஜனங்களுக்குக் காண்பிக்கப்பட்டன. முதன் முதலில் தொழிற்சாலைகளில் ஐரோப்பியத் தொழிலாளிகள் நேமிக்கப்பட்டார்கள். நாளடைவில் ஜப்பானியர்கள் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார்கள். வர்ணவேலைகள் கொத்து வேலை சரிகை வேலை முதலியவைகளை சாஸ்திர பூர்வமாகச்செய்யக் கற்றுக்கொடுக்க வித்தையிலாகா தகுந்த ஏற்பாடு செய்தார்கள். சக்ரவர்த்தியின் அரண்மனையைச் சேர்ந்த சிப்பந்திகள் 1899-வருஷத்தில் தொழில்கள் கற்றவர்களாக நியமிக்கப்பட்டார்கள். கவர்ன்மெண்டார் உபகாரச் சம்பளங்கள் கொடுத்து அனேகம் பேர்களை வெளி தேசங்களுக்கனுப்பி தொழில்களைக் கற்றுவர ஏற்பாடு செய்தார்கள். இப்படிக்கற்ற தொழிலாளிகளையுடைய பல தொழில் பள்ளிக்கூடங்கள் தேசமெங்கும் ஏற்படுத்தப்பட்டன. வெளி தேசங்களுக்கு அனுப்பப்பட்டவர்களின் தொகை 1906-ம் வருஷத்தில் 85-ஆக விருந்து 1912-ம் வருஷத்தில் 132-ஆகப் பெருகிற்று.

விவசாயம் முதலிய தொழில்களைக் கற்பிக்க ஜப்பானில் 1907-08-வருஷத்தில் 318-பள்ளிக்கூடங்களிருந்தன. 1911-12-வருஷத்தில் 355-இருந்தன, 3-பெ

ரிய வியாபார காலேஜ்கள் இருக்கின்றன. தவிரவும் பெரிய தொழிற் பள்ளிக்கூடங்கள் 6-இருக்கின்றன. ஒரு சுரங்க ஸ்கூலும், 2-பெரிய விவசாய ஸ்கூல்களும், ஒரு அன்னிய பாஷை ஸ்கூலும் ஒரு மீன்தொழிற் சாலையு மிருக்கின்றன. இவைகளுக்காகச் செலவாகும் தொகைக்கு கணக்குக் கிடையாது. அநேக உபாத்திமார்களிருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களில் சென்ற 40-வருஷத்திற்குள் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்த மாணுக்கர்களின் தொகை அபரிமிதமானது.

இவர்கள்தான் ஜப்பான்தேசத்தை தொழிலில் விருத்திக்குக் கொண்டுவந்தவர்கள். டோக்யோ நகரிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலை பிரதம நிபுணருக்கு மாதம் 75-ரூபாதான் சம்பளம். மற்ற வேலைக்காரர்களுக்கு 5-அணு முதல் 1¼-ரூபாவரையில் தினசரிச் சம்பளம். தோல் தொழிற்சாலையில் உள்ள நிபுணருக்கு மாதத்திற்கு 52ரூபாதான்சம்பளம். இவர் அமெரிக்காவில் வித்தைகற்று வந்தவர். டோகியோ உயர்தரத் தொழிற் பள்ளிக்கூடத்தில் வாசித்த ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 45-தான் சம்பளம். ஜப்பானில் வேலைக்காரர்கள் அபரிமிதமாய்த் பல தொழில்களையும் கற்று வருவதால் சம்பள விகிதங்கள் இவ்வளவு குறைச்சலாயிருக்கலாயின. சாதாரண கல்வியற்ற வேலைக்காரனின் சம்பளமோ இந்திய தேசத்தைவிட குறைச்சல் தான். பெண் கூலிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4½: ஆண் கூலிக்கு மாதம் ஒன்றுக்கு 6-ரூபா; இதர தினக் கூலி வேலைக்காரர்களுக்கும் ஆண் பெண்கள் உள்பட கூலி அதிகமில்லை. கூலிகள் இவ்வளவு மலிவாக இருப்பதற்குக் காரணம் வித்தைகள் கற்ற தொழிலாளிகள் கணக்கில்லாம லிருப்பதொன்று. இறக்குமதிவரி ஜாஸ்தியாயிருப்பது மற்றொன்று. இவைகளைத் தேசத்திற்கிசைந்தபடி ராஜாங்கத்தார் உண்டு பண்ணினதுதான் தேசத்தின் அபிவிருத்திக்குக் காரணம்.

---

சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்கம்,—மேற்படி சங்கத்தின் நிர்வாக கமிட்டியார் இம்மாதம் 4-ந் உயலறு கூடி, தங்களுடைய சங்கவிருத்திக்கு மிக உழைத்தவராகிய மிஸ்டர் பலபத்திர நாயகர் இறந்து போனதற்கு வருந்தி ஒரு தீர்மானஞ்செய்து அதை அவருடைய குடும்பத்திற்குத் தெரிவித்தார்கள்.

## விஷ்ணுபுராண ஆராய்ச்சி

### ஸ்ரீ விஸ்வகர்மாவின் உற்பத்தியைப்பற்றியது.

ஸ்ரீ V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி, திருவாரூர்.

இதனை நமது விஸ்வகர்மவம்ச வித்யாசிரோமணிகள் விநயத்துடன் விரும்பிப் பார்க்குமாறு வேண்டுகின்றனன்.

முதலம்சம்.—மயித்திரேயருக்குப் பராசர் சொல்லுகிறார்! தக்ஷன் திரும்பவும் பிரஜாசிருஷ்டி செய்ய நினைத்து அக்னியினிடத்திலே 60 பெண்களைப் பெற்றான். அவர்களிலே தருமனுக்கு 10 பேரையும் காசிபருக்கு 13 பேரையும் சந்திரனுக்கு(நக்ஷத்திரங்கள்) 27 பேரையும் அரிஷ்டநேமிக்கு 4 பேரையும் வெகுபுத்திரனுக்கு 2 பேரையும் அங்கிரசுக்கு 2 பேரையும் பிரஜாவசுவுக்கு 2 பேரையுமாகக் கொடுத்தான்.

முதல் 10 பெண்களுடைய நாமதேயங்களைக்கேளும்! 1-அருந்ததி, 2-வஸு, 3-ஜாமி, 4-லங்கை, 5-பாநு, 6-மருத்வதி, 7-சங்கல்பை, 8-முகூர்த்தை, 9-சாத்தியை, 10-விசுவை என்று சொல்லப்பட்ட இப்பத்து கன்னிகைகளையும் தருமன் விவாகம் செய்துகொண்டான்.

அவர்கள் புத்திரர்களைச் சொல்லுகிறேன் கேளும்! விசுவை என்கிறவளிடத்தில் விசுவதேவதைகளும், சாத்தியை யினிடத்தில் சாத்தியர்களும், மருத்வதியினிடத்தில் மருத்வந்தர்களும், வசு வினிடத்தில் வசுக்களும், முகூர்த்தையினிடத்தில் முகூர்த்தங்களும், பாநுவினிடத்தில் பாநுக்களும், லங்கை என்கிறவளிடத்தில் சுகோஷனும் நாகவீதி என்கிற (திவ்யார்க்க) அபிமான தேவதையும், அருந்ததியினிடத்தில் பூமியைச் சேர்ந்த வஸ்துக்கள் முழுமையும், சங்கல்பை யினிடத்தில் சங்கல்பனென்கிறவனும் பிறந்தார்கள்.

அவர்களிடத்தில் (அபாரமான) பலமும் தேஜஸுமுடையவர்களாய் விளங்குகிற அக்கினி முதலான வசுக்களுடைய வம்ச விஸ்தாரத்தை (விசிதமாகக்) கேளும்!

அஷ்டவசுக்கள் உற்பத்தி.—வசுக்கள் 8 பேர்; அவர்களுக்கு ஆபன், துருவன், சோமன், தர்மன், அநிலன், அனலன், பிரத்யூஷன், பிரபாசன் என்பவை நாமதேயங்களாகும்.

அவர்களுக்குள்ளே ஆபனுக்கு வைஸ்தப்தன் (சகல போகங்களையும் செலுத்துகிறவனுன) காலன் உண்டானான். சோமனுக்கு வர்ச்சன் என்கிற தனயனுண்டானான். அவனாலேதான் சகலஜனங்களுக்கும் வர்ச்சஸ் என்கிற (ஒருவித) பிரகாசமுண்டாகிறது. தருமனுக்கு மனோகரை என்கிறவளிடத்தில் திரவிணன், உதகவன், சிசிரன், பிராணன், ரமணன் என்கிற குமாரர் உண்டானார்கள். அநிலனுக்கு சிவை என்கிற ஸ்திரீயினிடத்தில் புரோசவன் அவிக்யாதகதி என்கிற 2-புத்திரர் உண்டானார்கள்.

* அனலனுக்கு (நாணற்புதரிலே குமரன் என்று சொல்லப்படுகிற) சுப்பிரமணியன் உண்டானான். அவனுடைய முதுகிலிருந்து சாகன், விசாகன், நைகமேஷன், என்கிற (மூன்று) பிள்ளைகள் உதித்தார்கள். அந்தச் சுப்பிரமணியன் கிருத்திகைகளின் ஸ்தன்யபானம் பண்ணினதினாலே அவர்களுக்குப் பிள்ளையாகி கார்த்திகேயன் என்கிற பெயரையடைந்தான். பிரத்யூஷனுக்குத் தேவலன் என்கிற மகாரிஷி ஜனித்தான். அவனுக்குப் பொறுமையுள்ள 2-மக்கள் உண்டானார்கள். அவர்களில் ஒருவன் பிரகஸ்பதி, அந்த (பிரகஸ்பதிக்குச் சோதரியான † ஒரு பெண்பிள்ளை யோக சித்தி யுள்ளவளாய் விரகதி யடைந்தவளாகி (பிரமசரியத்தோடு) உலகமெங்கும் சஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந்தாள். பின்பு அவள் வசுக்களில் (எட்டாவதான) பிரபாசனுக்குப் பத்தினியாகி விசுவகர்மாவைப் பெற்றாள்.

அவன் சிற்ப சாஸ்திரங்களில் சிலவற்றை யறிந்துதான் பூலோகத்திலுள்ள ஜனங்கள் வேலைசெய்து பிழைக்கிறார்கள். மேலும் அந்தப் பெண்ணாசியிடத்தில் அஜைகபாத், அதிர்ப்புத்யன், துவஷ்டா, ருத்ரன் என்கிற †† நான்கு குமாரர்கள் பிறந்தார்கள்.

---

*அனலன் என்றால் அக்னி ருத்ரவீர்யத்தை அக்னி கைக்கொண்டு கங்கையின் வழியாய் நாணற்புதரில் விட்டதனால் சுப்பிரமண்யனை, அக்னிபுத்ரன் என்றது. சாகன் முதலானவர்களை சுப்பிரமணியனுடைய தம்பிகள் என்றுஞ் சொல்வார்கள்.

† இங்கு இவள் பெயர் கூறவில்லை.

†† இந்நால்வரும் ருத்ர மூர்த்திகள் தாம் அரன் முதலான ஏகாதச ருத்ரர் இம்மரபினர்தாத்தர் என்றறிக. இவர்கள் குமாரர்களும் ருத்ரர் என்று சொல்லப்படுவார்கள்.

கவனிப்பு:—இங்கு இப்புராணத்தில் விசுவகர்மா பிரகஸ்பதியின் சகோதரிக்குப் பிறந்தாரென்று சொல்லப் பெற்றிருக்கிறது. இதை நோக்குங்கால் இச்சரித்திராசிரியர் இவ்விடத்தில் சோதரி என்றவர் மூத்த சகோதரி என்றும் இளைய சகோதரி யென்றும் குறிப்பிடவில்லை. அன்றியும், இத்தனை யுகாந்தரத்திலுமுள்ள பெயர்களையும் வரன் முறைகளையும் ஓர் அணுத்துகளேனும் விடாமல் ஞாபக சக்தியோடு சொல்லி வந்தவர் பிரகஸ்பதியின் சகோதரியின் பெயரைமட்டும் சொல்லாமல் விட்டுவிட்டார்.

இவ்வளவு (பூர்வகால) பூர்வ விருத்தாந்த மெல்லாம் புகலவந்த பூர்வோத்திரம்தெரிந்த பூர்வஞ்ஞான புண்ய சீலமகா முனிபுங்கவருக்கு இந்தப் பெண்மணியின் பெயர்மட்டும் மறந்துபோனது என்னோ? இம்மகாரிஷி அப்பெண்மணியின் பெயரை நினைத்தவுடன் சிங்காரப் பெண்கண்டால் ஞானம் போச்சு என்ற நம்முன்னோர்களின் (முதுமொழிச்) சிறப்புச் சொல் வீண்போகாது விளக்கினர் போலும். இம்மகாரிஷி அப்பெண்மணியின் ரூபத்தையும் அவள் நவசிரேஷ்டத்தையும் அவள் அறிவானந்த விவேகத்தையும் விளக்கி வர்ணிக்கும் போது அவள் உருவம் இவர்க்குச் சொப்பனத்தில் தோன்றுவதுபோல் தோன்றி இவர் புத்தியை என்னவிதம் குறையாடினதோ தெரியவில்லை. ஆனாலிவர் மகா உத்கிருஷ்ட தவசிரேஷ்ட ராதனதினால் உருவ நினைப்பவர்க்குள்ளுறுஞ்சோதி என்ற நம் திருமூல மகாதேவரின் திருமந்திர மகாவாக்கியத்தை நினைக்கும் போது அது கும்பகர்ணனுக்கு நித்ய சுகம் என்பது மாறி நித்ரை சுகம் என்பது தோன்றினது போல் நினைப்பதொன்று சொல்வதொன்றாய் நினைவு தடுமாறி மதிமறந்து (அப்பெண்மணியின்) உருவ நினைப்பவர்க்கு உணர்வுறுஞ் சோதி (பெண்சோதி) என்று தோன்றி பூர்வஞ்ஞான நேத்திரமானது மறைந்து மாயாவிருள் மூடி மறந்து புலம்பினர்போலும்.

வேண்டுகோள்-ஆதலின் இதனைக் கண்ணுறும் நமது விசுவகுல சிரேஷ்ட வித்வசிரோமணிகள் இச்சரித்திர பூர்வத்தை நன்குணர்ந்து நம் முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீ விசுவகர்மம் தோன்றி உற்பத்தியான வரலாற்றையும் நமது வம்சாவளியின் விபரத்தையும் (சுருதிப் பிரமாணமாய்) நமது விசுவகர்மன் வாயிலாய் உலகோர்க்கு நன்கு விளங்கும்படி விளக்கி எழுதி வெளியிட்டு இச்சரித்திரத்தின் சந்தேக நிவர்த்தி செய்யும்படி மிகவும் வேண்டுகின்றனன் சுபம்.

குறிப்பு:— இதன் அடுத்த மாத சஞ்சிகையில் தக்ஷன் உற்பத்தி விஷயமும் ஸ்ரீ சுப்பிரமண்யர் உற்பத்தியின் (புராண பேத விபரமும்) விபரமாய் வெளியிடப்பெறும்.

## சபைக் கோர்வை

ஸ்ரீ நா. குருநாத ஆசாரியார்.

குலசம்பந்தமான விவகாரங்களை குலப்பிரதிநிதிகளாயிருந்து அபிப்பிராயந் தெரிவிக்க நமக்குள் முக்கியஸ்தர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். இவர்களே கான்பரன்ஸ்களில் வோட் கொடுத்து தீர்மானங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சுதந்திரம் பெறுவார்கள். பிரதிநிதிகளைக் கொண்டு கான்பரன்ஸ்கள் நடத்தப்பட வேண்டும். பார்க்கவும் கேட்கவும் வரும் மகா ஜனங்களுக்கு தீர்மானங்களைப்பற்றிப் பேசும் யோக்கியதை கிடையாது. அந்த யோக்கியதை வாய்க்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் மகா ஜனங்களால் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டு கான்பரன்ஸ்களுக்கு அனுப்பப்பட வேண்டும். அப்படி அனுப்பப்பட்டவர்கள் சேர்ந்து ஆலோசித்துத் தீர்மானிக்கும் விஷயங்களே குல ஜனங்களால் நன்கு மதிக்கப்படும். அப்படியல்லாமல், தோன்றியவாறு கூடியவர்களை யெல்லாம் கொண்டு மீட்டிங் நடத்துவது குலத்தார்க்காவது அரசாங்கத்தார்க்காவது மற்ற ஜாதியார்க்காவது ஒப்பாகாது.

இனி, பிரதிநிதிகளாக நியமிக்கப்படுஞ் சுதந்திரம் எந்த ஜனங்களுக்கு உண்டு என்னுங்கேள்வி பிறக்கிறது. கான்பரன்ஸ் காலத்தில் அதைச்சார்ந்த அழைப்புப் பத்திரம் பெற்றவர்கள் தங்களூரார்களை ஒன்று கூட்டி அக்கூட்டத்தில் சில பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அவர்களைக் கான்பரன்சுக்கு அனுப்பி, தமது ஊராருடைய அபிப்பிராயங்களைத் தழுவி கான்பரன்ஸ் தீர்மானங்களை ஆதரிக்கவோ அகற்றவோ செய்யும்படி பொறுப்புக் கொடுக்கலாம். இப்படிப் பொறுப்பு வற்றவர்கள் மட்டுமே மற்றவர்களுக்காகவும் குலத்திற்காகவும் பேசத்தக்கவர்களாவர். மற்றப்படி, நேரே பெற்ற அழைப்புப்பத்திரங் கொண்டோடிக் கான்பரன்ஸில் உட்கார்ந்து கொள்ளுகிறவர்கள் தமக்காக மட்டும் பேசலாமே யல்லாமல் குலத்திற்கெல்லாமாகப் பேசுதலொண்ணாது.

இப்படித் திரட்டுமொன்று சேர்க்கப்பட்ட கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிலும் நிரந்தரமாய் நடை பெற்றுவருஞ் சபையார்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சிலாக்கியமானவர்களாவர். ஆதலால், ஒவ்வொரு ஊரிலும் ஒரு சபை ஏற்படுதல் நல்லது. இந்தச் சபைகளை ஜில்லாவாரியாகவும், தாலுக்காவாரியாகவும் ஏற்படுத்துதல் நல்லது. தாலுக்காச் சபைகளை ஜில்லாச்சபைக்கு ஐக்கியமாகவும், ஜில்லாச் சபைகளை மாகாணத் தலைச்சபைக்கு ஐக்கியமாகவுஞ் செய்யவேண்டும். சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையையே மாகாணத்தலைச்சபை யாக்கலாம். அதன் கீழ் ஒவ்வொரு ஜில்லாவுக்கு ஒரு சபையையும், ஒவ்வொரு ஜில்லா சபையின் கீழ் அதைச்சேர்ந்த ஒவ்வொரு தாலுக்காவில் ஒரு சபையையும் ஏற்படுத்துவது அவஶ்யமாயிருக்கிறது. இம்மட்டில் சபைகள் இப்போது ஏற்படுத்தினால் போதும். கிராமகிராமமாகச் சபை யேற்படுத்துவது இப்போது எளிதில் நடக்கமாட்டாது.

ஒரு தாலுக்கா சபையில் அந்த தாலுக்காவைச் சேர்ந்த கிராமங்களில் வாசமாயிருக்கும் குலத்தினர்களை யெல்லாம் மெம்பர்களாகச் சேர்க்கலாம். ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு பிரதிநிதி ஜில்லாசபையிலிருக்கும் படியாகவும், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு பிரதிநிதியோ அதிகம் பிரதிநிதிகளோ மாகாணத்தலைச் சபையில் நிர்வாகஸ்தானம் பெறவுமாக ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வித ஏற்பாடுகளோடு சபைகள் நடைபெற்றால், அந்தந்த சபையிலிருந்து பிரதிநிதிகள் கான்பரன்சுக்கு வருவார்கள். ஜில்லாக் கான்பரன்சுக்கு அதிலுள்ள தாலுக்காப் பிரதிநிதிகள் வருவார்கள். மாகாணக் கான்பரன்சுக்கு ஜில்லாப் பிரதிநிதிகளும் தாலுக்காப் பிரதிநிதிகளும் வருவார்கள். இவர்களைக் கொண்டு நடைபெறும் கான்பரன்ஸ்கள் விமரிசையாய் முடியும். ஆலோசனைக்கு அனந்தம் விஷயங்கள் கொண்டுவரப்படும். அந்தந்த சபையார் அந்தந்த தாலுக்காவிலோ ஜில்லாவிலோ இந்த ஜாதியாரை யநுசரித்து வருஷ முழுவதிலும் அநுபவமுகமாய்க் குறிப்பிடும் விஷயங்கள் எல்லாம் நன்றாய் ஆராய்ச்சி செய்யப்பட்டு தக்க தீர்மானங்கள் ஏற்படும்.

இதுவேயல்ல. தீர்மானங்களின்படி நடவடிக்கைகள் ஜாதியாரிடத்திற் செய்யப்படுதற்கான சௌகரியங்களும் உண்டு. ஒரு வருஷத்தில் ஓரிரண்டு நாட்கள் கான்பரன்ஸ் கூடி பல தீர்மானங்கள் செய்துவிட்டதினாலேயே யாதொரு பிரயோஜனமும் உண்டாகமாட்டாது. தீர்மானங்களை ஜனங்களுக்கெல்லாம்



அறிவித்து அவர்கள் அந்தத் தீர்மானங்களைப் பின்பற்றி நடக்கும் படிச் செய்ய வேண்டியதுதான் முக்கியமான காரியம். இந்த அனுஷ்டானத்திற்கு இடஞ் செய்து கொள்ளாமல் கான்பரன்ஸ்களை நடத்துவது முழுப் பிரயோசனத்தைத் தரமாட்டாது. ஆதலால், இந்த மாதிரி சபைகளை முதலில் ஸ்தாபித்துக் கொண்டு பிறகு கான்பரன்ஸ் பிரயத்தினஞ் செய்வது சிலாக்கியமாகும். சபை யேற்பாட்டின் முன் கான்பரன்ஸ் ஏற்பாடு ஆரம்பமாய் விட்டால், அதைக் கெடுத்து சபை யேற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லமாட்டேன். அப்படி ஆரம்பமான போதிலும், உடனே சபை யேற் பாட்டைச் செய்து கொள்வதுதான் நல்லது. ஏனென்றால், கான்பரன்ஸ்களுக்கு சபைகளே ஆதாரமாகும். சபை யாதாரமின்றி கான்பரன்ஸ் ஏற்பாடு செய்தல் அஸ்திவாரமில்லாமல் கட்டடங் கட்டுவதற்கு நிகராகும். அவ்வித கட்டடம் சிலகால மிருக்கலாமேனும் நாளடைவில் இடிந்து சரிந்து வீழ்ந்துவிடும். ஆதலினால், அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டுக்கொண்டு பிறகு கட்டடம் எழுப்பவேண்டும்.

மேற்சொன்ன மாதிரி சபைகளேற்பட்ட பிறகுதான் கிரமமாக வருஷாவருஷம் தாலுக்கா கான்பரன்ஸ்களும், ஜில்லாக் கான்பரன்ஸ்களும், மாகாணக் கான்பிரன்சும் ஒழுங்குடன் நடைபெறும். பிரதிநிதி ஏற்பாடு நிராக்ஷேபமானதா யிருக்கும். ஆதலால், நமது ஜாதிப் பெரியவர்களெல்லாம் இவ்விஷயங்களைப்பற்றி நன்றாக ஆலோசித்து அங்கங்கு சபைகளை உடனே ஏற்படுத்துவார்களாக. இம்மாதிரிக் கோர்வையாய்ச் சபைகளிருக்கும் பக்ஷத்தில் நமது ஆச்சாரிப்பட்ட மாற்றுதலைப்பற்றி நாம் சிர்ச்சிந்தையாய்க் காலங்கழிக்க நேரிடுமோ? இந்த உதாரணமொன்றே வைதிக உறவுச்சபைகளின் அத்தியாவஶ்யத்தை நன்குவிளக்கப்போதுமானது.

---

**புகையிலைக் கப்பல்.**—போன நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து 2,00-000-ரூபாய் அல்லது 3,00-000-ரூபாய் பெறுமான 261-பாரம் எடையுள்ள புகையிலையை ஏற்றிச் சென்ற வாடிவல்லாகி என்ற கப்பல், மலையாளக் கரைக்குப் பிரயாணமானது எங்கே போயிருக்கிறது என்ன ஸ்திதியிலிருக்கிறது என்னும் விஷயம் இன்னும் தெரியவில்லை என்று யாழ்ப்பாணத்திய மார்னிங் ஸ்டார் பத்திரிகை கூறுகிறது.

## விஶ்வகர்மண்யம்

ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி.

இவ்விடம் பழனியில் புராதன சில்பி ஆச்சாரியார் ஒருவர் கிருகத்தில் நெடுங்காலத்து ஏட்டுப்பிரதியான மேற்கண்ட மஹா சாஸ்திரத்தின் ஓர் பாகத்தில் இதனடியிற்கண்ட சுலோகங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இதைக்கண்ணுற்ற சனவான்கள் அவைகளின் தாத்பரியங்களை அடுத்த சஞ்சிகையில் வெளிப்படுத்துவார்களென எதிர்பார்க்கின்றனன். அவையாவெனில்:

### சுலோகங்கள்

கைலாஸஶிகரேரம்யெ நாநாரத்நஸமாகுலெ |
நாநாம்ருககணாகீர்ணெ நாநாபக்ஷிஸமாகுலெ || 1.

நாநாஶ்வராக்கிஷிதெ நாநாஸ்வரகணாஶ்சதெ |
நாநாவ்ருக்ஷாபிராஜீர்ணெ நாநாகந்தர்வஸேவிதெ || 2.

நாநாமுநிகணாஜீர்ணெ நாநாபத்ரைஸ்ஸமாகுலெ |
கிந்நரைந்நாரதைஶ்சாபி நித்யாந்ஹம்ஸஶோபிஸ்ஸஹா ||

திவ்யங்கனைஸமாகீர்ணெ ஸர்வதாதேவஸந்நிதௌ |
ஆகாஶகங்காஸலீலைஶ் ஶீதளோருபசாரகெ || 4.

ஶ்ருதிஸ்ம்ருதிபுராணத்யை ரிதிஹாஸஸ்ததாவிதை:
பூதமாநெதுரிஷிப்யம் ஸநந்தெநஸநகாதிபி: || 5.

ஶைவந்துஸப்தத்வியாஶ்ச ஸமுத்ராஶ்சிவிதீயதெ |
ஏதெஷாம்ஸமிதாகர்த ஸமஸ்தமஸ்தகம்ஶிவம் || 6.

இத்யதெதேவதேவேஶா மந்நாக்நிபதிஶ்ஶிவம் |
ஸமீக்ஷ்யெவிஶ்வகர்மாணம் தஸ்யமெஜகதீஶ்வரம் || 7.

தேவதேவொமஹாதேவோ லலாடொநயநோத்பவம் |
த்ரிணேத்ரம்ஸஹஸ்ரவக்த்ரஞ்ச லக்ஷஹஸ்தந்துஸம்யு [தம்,
அஷ்டாதஶாயுதம்ஆதி த்ரிமூர்த்யாயுதமெவஹி |
ஈஶ்வராயுதபேதாநாம் யதாயதம்விதிக்ரமாத் || 9.

தாவள்யவர்ணதேஹஞ்ச சித்ரவர்ணமலங்க்ருதம் |
ப்ரதிவ்யாஸநஸம்யுக்தம் அந்திராந்நந்துமௌலிகம் ||

ஶ்ருஷ்டிஸ்திதிலயாகாரம் திரோதாநுக்ரஹகாரணம் |
இத்யெவம்விஶ்வமூர்தீநாம் விஶ்வகர்மாததொபவம் ||

ஶிந்தூரம்ஜடாகேஶஞ்ச பஞ்சவக்த்ரந்ததொஶ்சவம் |
அப்யம்வரதஞ்சைவா பொஸ்தகெலெக்யகட்ககம் || 12.

கட்வாங்கபீஜபூரஞ்ச அப்ரகலஶோத்ரத: |
குண்டிகஞ்சாக்ஷமாலாச யக்ஞஸூத்ரொத்தரீயகம் ||

ஶிவமந்த்ரஸ்ஸமுஶ்சார்யா ஶிவபூஜாஶ்சகாரணம் |
விஶ்வகர்மமஹாதேவா லலாடநயநோத்பவம் || 14.

க்ருதாயாஞ்சதுவக்ரஞ்ச ஸாஷ்டபாகுஶவிப்ரபா |
அபயம்வரதம்ஶாந்தம் பொஸ்தகம்லெக்யமெவசா || 15.

கட்வாங்கம்பீஜபூரஞ்ச குண்டிகஞ்சாக்ஷமாலிகா |
ஸர்வாபரணஸம்யுக்தம் பீதவஸ்த்ரோத்தரீயகம் || 16.

யக்ஞோபவீதஸம்யுக்தம் ஸர்வகாமபலப்ரதம் |
த்ரேதாயாந்த்ரிவக்த்ரஞ்ச ஷட்புஜஞ்சஶவிப்ரபா || 17.

அபயம் வரதம்மஹேவம் பொஸ்தகவெக்யந்ததா ||
குண்டிகஞ்சாக்ஷமாலாஞ்ச த்ரிணேத்ரம்கமலோத்பவம்
த்வாபரெத்விமுகஞ்சைவா சதுர்பாஹூரமஹாப்ருஷா-
அபயம்பொஸ்தகஞ்சைவ அக்ஷமாலாகமண்டலம் || 19
யக்ஞஸூத்ரோத்தரீயஞ்சா ஸர்வாபரணபூஷணம் |
கலௌசவகவக்த்ரஞ்ச த்விபாஹூம்ஸாங்குரப்ரபா ||
பொஸ்தகம்குண்டிகஞ்சைவ யக்ஞஸூத்ரோத்தரீயகம்,
ஸிவரூபம்ஸிவத்யாநம் பரமந்த்ரஞ்சமுச்சரேத் || 21.
க்ருதாயாம்மநஸாஸ்ருஷ்டித்ரேதாயாம்த்ருஷ்டிஸம்பவா
த்வாபரெமந்த்ரமாக்யாதம் கலௌகர்மஞ்சவிதிதம் ||
ஆச்சார்யொவிஸ்வகர்மாநு தக்ஷொவர்த்தகீததா |
ஸ்தபதிஸில்பிகஞ்சைவ ரதகாரஞ்சமீரிதம் || 23.
நாமந்தத்ஸப்தகெசைவ ஸமுத்பந்நமஹாபலா |
விஸ்வகர்மாஸ்வஜந்தெவ்ய வாருணிஸாந்தகீததா || 24.
ஸ்ருஷ்ட்யாதஸ்வைவம்கரோதி விஸ்வகர்மாநுபவஸ்வய
ஸர்வலக்ஷணதத்கத்தெ தஸ்மாத்ஸில்பிஸமீரிதம் || 25.
ஆச்சார்யவிஸ்வகர்மாணும் ஸ்தபதிநாஞ்சலக்ஷணம் |
ஸிகாயக்ஞோபவீதஞ்சா ஜபமாலாகமண்டலம் || 26.
கூர்மபீடஸ்யசத்ராணும் யோகவேஷ்ட்யாலலங்க்ருதம்,
ஹஸ்தொஹரிஹரஞ்சைவா சந்த்ராதித்யத்விநேத்ரகம்.
ஹ்ருதயம்ப்ரம்ஹதேவத்வம் ஆத்யாங்கம்ஸர்வதேவதா,
மணிபந்தஸ்வயம்ப்ரஹ்மா அங்குஷ்டாஞ்சகணேஸ்வரம்.
தர்ஜநீமீஸ்வரம்ப்ரோக்தம் மத்யமாங்குலிமாதவம் |
அநாமிகாமநம்கஸ்சாத் நிஷ்ட்யாபாஸ்கரந்ததா || 29.
தலமத்யெத்ரியொதிர்க்யம் கங்காயமுநஸரஸ்வதி |
நகம்நக்ஷத்ரதேவாநாம் யக்ஞஸூத்ரபவித்ரகம் || 30.
ரேகாநாம்பர்வதாகாரெ தத்ரகாலெதுகாரணம் |
யத்ரலோகெசவர்ணாநாம் தர்மகாம்யார்த்தமோக்ஷகம் ||
த்வஷ்டாமநுத்ரயஞ்சைவ விஸ்வகர்மஞ்சகாஸ்யபௌ,
யாதௌத்வௌஸ்ருஷ்டிகர்தாச பஞ்சாச்சார்யருஷிஸ்
[ததா ||
ளபப்ருஷ்டகரீகரவந்தநம் ளபகர்பகரேணஸமாயுதம்
தைவஸில்பிகரணெஸமாயுதம் ப்ரதமஆலயதர்மாதிஸ
[முத்பவம் ||

---

**தோல் வியாபாரம்.**—அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்துக்கு வழக்கத்தைவிட அதிகமாக பதனிடாத தோல்களை ஏற்றுமதிசெய்ய வியாபாரிகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் அனுமதிகொடுக்க இஷ்டப்பட்டால், சென்னை மாகாணத்திலிருந்து எத்தனைத் தோல்கள் அதிகமாக அனுப்ப அனுமதிவேண்டுமென்று வீகஸ்டம்ஸ் கலெக்டர் சென்னையிலுள்ள ஐரோப்பிய வர்த்தக சங்கத்தாரைக் கேட்டார். இந்த சென்னை மாகாணத்திலிருந்து வழக்கத்துக்குமேல் ஒன்றரைலட்சம் தோல்கள் அனுப்ப அனுமதி கொடுக்கலாமென்று அந்தச் சங்கத்தார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

## இங்கிலீஷ் படிப்பு

கவர்ன்மென்டார் இந்திய ஜனங்களுக்கு தொழில் ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறார்களென்றும், அந்தச் சம்பளங்களை நமது ஜாதியாரொழிந்த மற்ற ஜாதியார் அடைந்து வருகிறார்களென்றும் விஸ்வகர்மன் பத்திரிகை மூலமாக இப்போது நமதுகுலத்தாருக்கெல்லாம் விசிதமாயிருக்கிறது. சென்ற ஜூலைமாதச் சஞ்சிகையின்படி இந்த ஸ்காலர்ஷிப்கள் 9-பேர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த உபகாரச் சம்பளங்கள் என்பன பற்பல தொழில்களை வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கற்றுவருவதற்கு இந்திய மாணக்கர்களுக்குக் கவர்ன்மென்டாரால் பிரதி வருஷமும் கொடுக்கப்படுகின்றன.

இந்த உபகாரச் சம்பளங்கள் தொழில்களைக் கற்கும் பொருட்டாகக் கொடுக்கப்பட்டபோதிலும் தொழில்செய்து ஜீவனம்செய்யும் கர்மகாரர்களாகிய நமது சிறுவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஏன்? இந்த ஸ்காலர்ஷிப்கள் யாருக்குக் கொடுக்கப்படுகின்றனவென்று ஆராய்ந்து பார்த்தால் யூனிவர்ஸிடிப் பரீக்ஷைகளில் தேர்ந்து பட்டம்பெற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவென்றுதெரிகிறது. இந்தப்பட்டங்களை நமதுஜாதியார் பெறுவதில்லை. பெற்றால் ஷை ஸ்காலர்ஷிப்கள் பெறுவதற்கு அருகர்களாகலாம்.

உயர்தரக் கலாபட்டங்கள் பெறாத குறையில் நமது ஜாதியார் கவர்ன்மென்ட் தொழில் ஸ்காலர்ஷிப் பெறுதற்கு அனருகர்களாய் நிற்கின்றனர். இந்தக் குறை தீருவதெப்படி? இங்கிலீஷ் கல்வியினால்தான் தீரவேண்டும். உயர்தரக் கல்வி கற்று பி. ஏ. முதலிய பட்டப்பரீக்ஷைகளில் தேறினால் அவை கிடைக்கும். கிடைத்தால், இந்தியாவிலேயோ அல்லது அமெரிக்கா ஜபான் முதலிய வெளிதேசங்களுக்குச்சென்றோ மெகானிகல் இஞ்சினீரிங், எலக்ட்ரிகல் இஞ்சினீரிங் முதலிய பலவிதப்பட்ட தொழில்களைக் கற்றுவரலாம். அப்படிக் கற்றுவருவோரே தொழில் விற்பன்னர்களென்று நமது தேசத்தில் சிறப்பும் செல்வமும் அடைகிறார்கள்.

நாம் தொழிற்காரஜாதியா ரென்பதினால் நமக்குச் சிறப்புங்காணோம் செல்வமுங்காணோம். தொழிற்காரர், கூலிக்காரரென்ற பெயர்கள் தாம் நமக்கு லபித்திருக்கின்றன. தொழில் விற்பன்னர் என்ற பட்டமும் அதற்



கேற்ற அந்தஸ்தும் வருவாயும் செல்வாக்கும் தொழிற்காரரல்லாதபிறஜாதியார்களுக்கே சொந்தமாகின்றன. நாம் பழைய நிலைமையிலேயே காலங்கழித்து வருகிறோம். நம்மைக் கீழே தள்ளி மற்ற ஜாதியாரெல்லாம் நம்மீது ஏறுகின்றார்கள். நாமும் குனிந்து குனிந்து இடங்கொடுத்துக்கொண்டு நிற்கிறோம். இதுதான் நமது தற்கால கதியாயிருந்துவருகிறது. இந்தகதியிலேயா நமது காலத்தைக் கழித்துவிடவேண்டும்!

ஐயோ! அன்பர்களே! கண்விழித்துப்பாருங்கள். ஜாதிச்சண்டை போட்டுப் போட்டு நலங்குலைந்து நடுத்தெருவில் நிற்கலானோம். உட்கலகங்களினால் உடைந்து ஓட்டையாய்ப் போய்விட்டோம். கல்வியை மறந்தோம் கனத்தில் குறைந்தோம் கல்வியைத் திரும்பவும் கைப்பற்றினாலல்லவோ கனத்தில் பெருகுவதற்கு முடியும்? தொழிலுக்கும் கல்வியிருக்கவேண்டுமேயொழிய கல்வியில்லாமல் தொழில் சிறப்படையமாட்டாது. கல்வியில்லாத் தொழிலாளி கூலிக்காரனாகவே காலங்கழிக்கவேண்டும். கல்வியுள்ள தொழிலாளியோ மேஸ்திரியாகவும், போர்மனாகவும், சூபரின்டென்டென்டாகவும், இஞ்சினீராகவும் மேன்மேலும் அந்தஸ்தும் சம்பளமும் அதிகம் பெற்றுமேன்மையடையலாம். கல்வியானது தொழிலைக் கைதூக்கி மேலெழுப்பிவிடுகிறது; கல்வியில்லாத் தொழில் கவனிக்கப்படாமல் காட்டில் மலர்ந்த பூப்போலொழிகிறது.

ஆதலால், நாம் தொழிற்காரராயினும் கல்வியை அசட்டை செய்யக்கூடாது. கல்வியென்றால் தமிழ்க் கல்வியல்ல; இங்கிலீஷ் கல்வியே தொழிலுக்குப் பிரகாசந்தருவது, இங்கிலீஷ் கல்வியே கவர்ன்மென்ட் ஸ்காலர் ஷிப்களை பெறுவிப்பது, இங்கிலீஷ் கல்வியே பிறதேசங்களுக்கு நம்மைச் செலுத்தக்கூடியது, இங்கிலீஷ் கல்வியே நானாவித தொழில்களின் நுட்பங்களைக் காணும்படி கண்ணைத் திறப்பிப்பது, இங்கிலீஷ் கல்வியே பெரிய உத்தியோகங்களில் அமர்த்துவது, இங்கிலீஷ் கல்வியே ஊராருடைய மதிப்பையுண்டாக்குவது, இங்கிலீஷ் கல்வியே கவர்ன்மென்டாருடைய நோக்கத்திற்கு இடந்தருவது, இங்கிலீஷ் கல்வியே செல்வாக்கை அதிகப்படுத்துவது, இங்கிலீஷ் கல்வியே இக்காலத்தில் இன்றியமையாதிருப்பது, இங்கிலீஷ் கல்வியே நம்மால் அசட்டைப் படுத்த வொண்ணாதது, இங்கிலீஷ் கல்வியே நம்மால் அசட்டைப்படுத்தபட்டிருப்பது;

இந்த அசட்டையே நம்மை உலகத்தாருடைய அசட்டைக்கும், அரசாங்கத்தாருடைய அசட்டைக்கும் பாத்திரமாக்கிப் பதங்குலையச் செய்திருப்பது. இந்த அசட்டையை நாம் கைவிட்டால்தான் பிறர் தமது அசட்டையைக் கைவிடுவார்கள். இது திண்ணம். ஆதலால், அன்பர்களே! உயர்தரக் கல்வியை நமது மக்களுக்கு ஊட்டுங்கள். அவர்களைக் கவர்ன்மென்ட் ஸ்காலர்ஷிப்களுக்குப் பாத்திரவான்களாக்குங்கள், கவர்ன்மென்ட் கருணைக்குப் பாத்திரவான்களாயிராமல் கவர்ன்மென்டாருடைய சகாயங்கிடைக்கவில்லையென்று பிராதுசெய்வது யுக்தமல்லவென்று தோன்றுகிறது. நமது நிலைமையைச் சீர்திருத்திக்கொண்ட பிறகு நமது பாத்தியதைகளைக் கொண்டாடுவது நியாயமாயிருக்கும்; அதுவரையிலும் உள்ளுக்குள்ளே சீர்திருத்திக்கொள்வோமாக. உயர்தரக் கல்வியை நமது மக்களுக்கு ஊட்டுவோமாக.

---

## தமிழ் மொழி பேணுவோர்

கோட்டாற்று மகாவித்வான், ஸ்ரீமத் நீ. கணபதி ஆசாரி அவர்கள் குமாரர் ஸ்ரீமான் ஜி. சுவாமிநாதன் ஆசாரி அவர்கள் இரணியல் அம்மன்கோவிலின் முன்புறம் அமைத்துள்ள மண்டபத்தின் போவையில், ஸ்ரீ கம்பராமாயணச் சுந்தரகாண்டத்திற்குப் பொருள் உரைத்தனர். இரணியல் வைசியகுலக் கனவான்கள்,வித்வான்களைப் பரீக்ஷிக்கும் வன்மைகொண்ட அறிவாளர். சங்கீதத் திறமையுடன் பெண்பாலாரும், ஆண்பாலாரும், தாளத்துடன் பாடுகின்ற கல்விப்பொருளுடையார் என்பது பிரசித்தம். செல்வப்பொருளுடையார் என்பது இங்கு சொல்லாதுதானே அறியும் பான்மையுடைத்து. சுந்தரகாண்ட வாசிப்பிற்கு எற்பட்ட கனவான்கள், கனம் சுப்பிரமணிய வுபாத்தியாயரவர்கள், கனம் அழகப்பெரு சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் முதலியோர் பாலது. ஸ்ரீமான் மான் பிள்ளை அவர்கள் ஸ்ரீ சுவாமிநாதன் ஆசாரி அவர்கள் கல்வித்திறமையை வியந்தும், புகழ்ந்துங் கேட்டின்புடன் உவகைகொண்டனர். வாசிப்பு முடிவில், முன்னர் ஒவ்வொருநாளுங் கூடிய கூட்டத்தாரன்றி, விசேடமாகத் தக்கோர்சேர்ந்த போவையில், அவ்வூர்க் கனவான்களின் பிரேரணையின் பேரில், சற்றேறத்தாழ நூறுரூபாய்க்கு மோதிரம், ஆடை, ரூபாய் முதலியன ம-ா-ா-ஸ்ரீ, சி காத்தபெருமாள் பிள்ளை அவர்கள் அளித்தனர். இதில், நாம் கவனிக்கவேண்டிவ தென்னையெனில் பரிசில். தற்காலம் நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்மொழியைப் பேணுதற் குறைக்கு, இங்ஙனம் பேணுதல் தமிழ் நாட்டின் பெருமையையன்றோ விளக்கும். **சுடலமுத்துப் பிள்ளை.**

## விஸ்வகர்ம சத்திரங்கள்

ஸ்ரீ நா. கந்தசாமி ஆச்சாரியார்

சென்னையில் ஓர் மடம் நமது ஜாதியாருக்கென்று ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் செ[illegible] சில மாதங்களுக்கு [illegible] பத்திரிகையில் வாசித்தோம். [illegible] முயற்சியைப்பற்றிய விவரங்களொன்றும் நமது பத்திரிகையில் பிறகு வெளியாகவில்லை. எவ்வளவு பணஞ் சேர்க்கப்பட்டதென்றும், இன்னும் எவ்வளவு வசூலாக வேண்டுமென்றும், வசூல் செய்வதற்கு என்ன பிரயத்தனங்கள் செய்யப்பட்டன வென்றும் அறிந்து கொள்ள என்போல் வெளியூர் வாசிகள் பலர் ஆவலா யிருப்பார்களென்பதில் தடையில்லை. பந்து மித்திரர்களில்லாதவர்கள் சென்னைக்கு வருவதாயின் மிக்க யோசனை செய்ய வேண்டியதாயிருக்கிறது. இந்த கஷ்டம் மற்ற இடங்களுக்கு முண்டென்றாலும் சென்னப்பட்டணமானது நமது இராஜதானிக்குத் தலைநகரமா யிருக்கிறபடியால் அதைப்பற்றி முக்கியமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று. யோசித்துப் பார்க்குமிடத்து, ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஒரு விஸ்வகர்ம மடம் இருந்தால் தான் நமது ஜாதியாருக்குச் சௌகரியமாயிருக்கும்.

இவை சத்திரங்கள் போல யாத்திரைக்காரர்களால் உபயோகிக்கப்படுவதை யுத்தேசித்தே இவ்வளவும் எழுதலானேன். இப்போதும் பலவிடங்களில் நமது ஜாதியாருடைய சத்திரங்களிருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. அவை எங்கெந்த ஊர்களிலிருக்கின்றன என்பதைப்பற்றிய விபரங்களை அறிந்தவர்கள் நமது பத்திரிகை மூலமாக வெளியிட்டால் பலருக்கும் உபயோகமாயிருக்கும். பல சத்திரங்கள் சிலமாகி [illegible] உபயோகத்திற்கு உதவாத கேவலஸ்திதியிலிருக்கலாம். சில [illegible] யிருந்துவாராமல் சொந்த வீடுகள் போல் உபயோகிக்கப்பட்டு [illegible] சில நல்ல ஸ்திதியிலேயே இருக்கலாம். இவைகளைப் பற்றிய முழு விவரங்கள் எல்லாருக்கும் பத்திரிகை மூலமாக அறிவிக்கப்படுவது நல்லது. சீர் குலைந்திருப்பவைகளுக்கு விமோசன காலம் பிறக்கலாம்.

இந்த மடவிஷயமாய் விசாரித்து வேண்டிய நடவடிக்கை செலுத்துவதற்கே ஒரு தனிச் சபையிருந்தாலும் சிலாக்யமாகும். சென்னையிலிருக்கும் தர்மரக்ஷண சபையைப்போல, இந்த சபையானது அங்கங்குள்ள விஸ்வகர்ம சத்திரங்களைப்பற்றிய விசாரணைகளை நடத்தலாம். பழைய சத்திரங்களைப் புதுப்பிக்கலாம். [illegible] சொத்துக்கள் போல் பாவிக்கப்பட்டு வருகின்ற சத்திரங்களை கோர்ட்தாவா முதலிய வியவகாரங்களால் பழையபடி பொதுச்சொத்துக்களாக்கலாம். சத்திரங்களில்லாத இடங்களில் அவற்றைக் கட்டுவிக்கலாம். கட்டியுள்ளவைகளைப் பரிபாலனஞ் செய்யலாம்.

இப்படிச் சத்திர தருமம் சரியாகப் பரிபாலனஞ் செய்யப்படுமென்ற நம்பிக்கை உண்டானால் சொத்துக்காரர்கள் சத்திரங்கள் கட்ட முன்வரலாம். எத்தனையோ பேர்கள் நம்மவர்களிலும் தர்மசிந்தனை கொண்டவர்களில் பிள்ளையில்லாதவர்களும் உள்ளவர்களும் இன்ன விதமான தர்மஞ் செய்வதென்று தெரியாமல் தியங்குகின்றார்கள். தாங்கள் செய்யுந் தர்மம் சாஸ்வதமாக நிலைநிற்குமா வென்று யோசித்துப் பின் வாங்குகிறார்கள். மேற்சொன்ன மாதிரியான சபை யொன்று ஏற்பட்டு தக்கவர்களால் நடத்தப்படுமானால் அந்த யோசனைக்கும் பின் வாங்குதலுக்கும் இடமிருக்க மாட்டாது.

இவ்வளவோடு நிற்க வேண்டாம். ஷை சபையார் அங்கங்குள்ள கனதனவான்களைக்கண்டு அவர்களுக்கு இந்த தர்மத்தின் சிறப்பை எடுத்துக் காட்டி வேண்டிய இடங்களில் சத்திரங்கள் கட்டுவிக்கச் செய்யலாம். மற்ற ஜாதியார்கள், செட்டிகள், முதலியார்கள், நாயுடுகள் முதலியோர், பல சத்திரங்கள் கட்டியிருக்கவில்லையா? நாளும் கட்டிக்கொண்டு வரவில்லையா? அந்த மாதிரியாக நம்மவர்கள் கட்டிக்கொடுத்து ஏன் புண்ணியம் பெறக்கூடாது? அவர்களுக்கு வழி காட்டுகிறவர்கள் இல்லையென்று நினைக்கின்றேன்.

பல பேர்களுக்கு தாங்கள் சம்பாதிக்கும் சொத்தைப் புண்ணியந்தேடுவதில் உபயோகிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாவதில்லை. இந்த எண்ணம் உண்டாகாமலே எத்தனையோ பேர் காலங்கழித்து மாண்டு போனதைப் பார்த்திருக்கிறோம். பிள்ளைகளுக்கும் உறவின் முறையார்களுக்குமே சொத்துக்களை வைத்துவிட்டுச் சாக வேண்டுமென்னும் நிபந்தனை எங்கும் ஏற்பட்டிருக்கவில்லை. எத்தனைப் பிள்ளைகளிருந்த போதிலும் ஒருவனுடைய செல்வத்தில் கொஞ்சம் பாகத்தையாகிலும் தர்மத்திற்குக் கொடுப்பதுதான் முறை. இதுதான் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இதை விட்டு, பிள்ளைகள் எவ்வளவு குணக்கேடர்களாக இருந்தபோதிலும் அவர்களுக்கு சொத்தைக் கொடுத்து அவர்கள் கெட்ட வழிகளில் பழகி பணத்தைச் சூறையிட்டுப் பிழைக்கும் வழி தெரியாமல் திண்டாடித் தெருவில் நின்று தம் பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் பெரும் பழியை யுண்டாக்கும்படி வைப்பது புண்ணியத்திற்குப் பதிலாய்ப் பெரும் பாவமாகின்றதே! இந்தக் கொடுமையை இவர்கள் ஏன் யோசித்துப் பார்க்கிறதில்லை?

பிள்ளைகளுக்குச் சொத்தாவது கல்வி அல்லது வேலை செய்து பிழைக்குந்திறமை. இந்தச் சொத்தைப் பெற்றோர்கள் தேடிவைக்கவேண்டுமே யல்லாமல் பணச் சொத்தை வைக்கவே கூடாது. வைத்தால் வருவது பழியும் பாவமுமேயல்லாமல் வேறில்லை. அதிலும், நமது ஜாதியைப்பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. எத்தனைச் சொத்துக்காரக் குடும்பங்களைப் பார்த்திருக்கிறோம். எத்தனைப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் சொத்தைக் காப்பாற்றினார்கள்? இந்த விபரந் தெரிந்துகொண்ட பிற்பாடும் நமது நண்பர்களுக்குத் தெளிவு பிறக்கமாட்டாதென்றால், அவர்கள் எல்லோருடைய பரிதாபத்திற்கும் பாத்திரவான்களாவார்களென்றே சொல்லவேண்டும்.

---

**வட இந்தியாவில் யானைகள்.**—வட இந்தியாவில் காட்டானைகள் செய்யும் உபத்திரவம் பொறுக்கவில்லை. மூன்று சேர்ந்து அந்நாட்டின் இரண்டு இந்தியர்களைக் கொன்றதுடனில்லாது, கௌர்மாரா என்னும் காட்டுப் பங்களாவையும் இடித்துத் தகர்த்தனவாம். பங்களாவைச் சுற்றிலும் ஆழமான கிடங்குகள் வெட்டி, அப்பங்களாவிற்கும் வெளிப்பக்கங்களுக்கும் இழுவைப் பாலங்கள் போடப்பட்டிருந்தனவாம்.

*
* *

**சென்னை முனிஸிபாலிடி.**—இதில் இஞ்சினீராயிருக்கும் மிஸ்டர் கோட்ஸ் தமது ரிபோர்டில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—"கான்ஸர்வென்ஸி ஓவர்ஸியர்களில் 17-பேர் பிராம்மணர்கள். அவர்கள் தங்களது வர்ணாசிரம லட்சியங்களை யொட்டி, தோட்டி வேலை செய்ய எவ்வாறு மன மொப்புகிறார்களென்பது தெளிவாகத் தெரியவில்லை. அவர்கள் ஆசார சீலர்களாக இருப்பார்களேயானால், தோட்டி வேலையானது அவர்களுக்கு அருவருப்பா யிருக்கவேண்டும்."

## ஸ்ரீ நீ. கணபதி ஆச்சாரியார்

கோட்டாறு, திராவிடப் புலமையிற்சிறந்த வித்வான், ஸ்ரீமத், நீ. கணபதி ஆசாரி அவர்கள் விதேக முக்தி யெய்தியபோது, மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவர்களுளொருவரான தேவாமிர்தப் பிரசங்கக்களஞ்சியம், மகாமதி, சதாவதானி, கோட்டாறு, ஸ்ரீமாந், **கா. ப. செய்குத்தம்பிப் பாவலர்** அவர்கள் இயற்றியன.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நீர்பூத்த கனைகடலி னிலம்பூத்த
பொலம்பூத்து நிலவி யாண்டு
மேர்பூத்த செந்தமிழி னியல்பூத்த
கோட்டாற்றி லிருந்து மாறாச்
சீர்பூத்த விசுவகுலத் திறன்பூத்த
நீலகண்டச் செம்ம லீந்த
பேர்பூத்த கண்மணியே கணபதியே
கலைவல்லோய் பேசக் கேட்டி.

எண்ணேறு கலைக வைப்பசி நாலே
ழமரபட்சத் திகத்தை நீத்து
மண்ணேறு புலவரெலா மயக்கேறத்
தியக்கேறி மக்க ளுள்ளம்
புண்ணேற வுறமுறையார் புலம்பேற
வடுத்தவர்கள் புழுக்க மேற
விண்ணேறிச் சென்றதென்கொ
லையையோ வென்செய்கேம் விபுலமீதே.

ஒருவாதிங் கலைதழுவி யோலமிடு
பெருங்கடல்சூ ழுலகி லென்றும்
பொருவாத வானடிக்கன் பிருத்திமலத்
தின்பொறுத்த புதுமை யன்றோ
வருவாத வரும்புகழ்சே ரருண்மணியே
கணபதியே யண்ணா லன்னான்
திருவாதி ரைத்தினத்து நீயடைந்தா
யவன்றிருத்தாள் சேர்த்த தாமால்.

மண்ணுடும் புலவர்குரு வாய்நாட
வந்தகவி வாணா நீயு
மெண்ணுடும் வியாழனகத் திவணுட
வவனுடு மியல்பை நாடில்
விண்ணுடும் புலவர்குரு வியாழனுல
காய்தப்பேர் விரித்துப் பாவப்
புண்ணுடப் பெற்றதனு லவற் பதிலாய்ப்
புரத்தல்செயப் போந்த தாமால்.

நிலங்கண்ட புலவர்மன நிலைகண்டு
வேணதெலா நிகழ்த்திய விண்
டலங்கண்ட புலவர்குறை தவிர்த்திடுவான்
சென்றனையத் தலைகசால் முற்றால்
குலங்கண்ட பெருமதியின் குணங்கண்ட
கணபதிப்பேர்க் கோவே வேறெப்
பலங்கண்ட பதிகண்டு பரிந்திடுவா
யுலகறியப் பகர்கிற் பாயே.

(தொடரும்) ஜி. சுவாமிநாதன் ஆசாரி.

## பெண்கள் விடுதலைக் கும்மி

[புதுச்சேரியிலுள்ள ஸ்ரீமான் C. சுப்பிரமணிய பாரதியின் பத்தினியாகிய ஸ்ரீமதி-செல்லம்மாள் பாடியது.]

காப்பு

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேயொளி போல உயிரில்
கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே. (1)

கும்மி

கும்மியடி ! தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி !
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின ;
நன்மை கண்டோமென்று கும்மியடி ! (2)
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.—கும்மியடி (3)
மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினி லெம்மிடங் காட்டவந் தாரதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி.—கும்மி (4)
நல்ல விலை கொண்டு நாயைவிற் பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டிவைத்தார் பழி கூடிவிட்டார்.—கும்மி (5)
கற்பு நிலையென்று சொல்லவந்தார்—இரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.—கும்மி (6)
பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி.—கும்மி (7)
வேதம் படிக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டிவந் தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்.—கும்மி (8)
காத லொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவிலுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்.
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி.—கும்மி (9)

## நமது வாசகர்கள்

### ஜீவவதை நிவாரணம்

ஜீவஹிம்ஸை நமது நாட்டில் நாளுக்குநாள் அதிகமாய்ச் செய்யப்பட்டுவருகிறது. மாமிச போஜனமே இந்த ஜீவஹிம்ஸைக்கு முக்கிய காரணமாயிருக்கிறது. மாமிஸபோஜனம் குறைவுபடுமானால், ஜீவஹிம்ஸையும் குறைவுபடும். ஆதலால், மாமிஸபோஜனத்தை இந்திய ஜன சமூகத்தார் விலக்கச்செய்வதில் நம்முடைய ஜாதியார் அக்கரை காட்டவேண்டும். இந்த நோக்கம் கைகூடுவதற்காக நம்மவர்கள் அங்கங்கு ஜீவவதை நிவாரண சங்கங்கள் ஏற்படுத்தி எல்லா மதஸ்தர்களுக்கும் ஜாதியார்களுக்கும் மாமிஸபோஜன விலக்கத்தைப் போதித்துவரவேண்டும். இது முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயமாயிருக்கிறது.

நா. சோமசுந்தர ஆச்சாரி.

### கெஜட்டில் பெயர்கள்

கெஜட்டில் உத்யோகசமாசாரங்களை வாசிக்குமிடத்து உண்டாகிற மனக்குறைவை என்னென்பேன். இந்தியப்பெயர்களை வாசிக்குமிடத்து ஒன்றின்பின்னொன்றாகத் தொடர்ச்சியாய் நமது ஆருஷேய சகோதரர்களுடைய பெயர்கள் காணப்பட்டாலும், இங்குமங்குமாகவாவது மற்ற சோதரர்களுடைய பெயர்களும் காணக்கிடைக்கின்றன. பௌருஷேய புமான்களுடைய பெயர்களோ மருந்துக்கும் கிடைப்பதில்லை. நம்முள்ளிருக்கும் ஓரிரண்டு உத்தியோகஸ்தர்களுடைய பெயர்கள் எப்போது கெஜட்டில் வருமோ அறிகிலேன். அநேகர் நமது ஜாதியில் கற்று பாஸ்செய்து பெரிய உத்தியோகங்கள் வகிக்கும்போதல்லவா, அடிக்கடி நம்மவர்களுடைய பெயர்களை கெஜட்டில் காணலாகும். அப்படிக் காணும் பாக்கியம் இத்தலைமுறையார்க்குக் கிடைக்குமோ ?

இங்கிலீஷ் கற்போன்.

### விஸ்வகர்ம கான்பரன்ஸ்

சென்ற வருஷம் கும்பகோணத்தில் நடந்த கான்பரன்ஸ் இவ்வருஷம் இரண்டாமுறையாக நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே யிருக்கின்றன. என்றாலும், இதுவரையிலும் அதைப்பற்றிய பிரஸ்தாபம் ஒன்றுமே காணோம். எந்த இடத்தில் இந்த வருஷம் நடக்கப்போகிறதென்பது தெரியவில்லை. இதைச் சீக்கிரம் நிச்சயிக்கவேண்டியது அவஸ்யமாயிருக்கிறது. ஏனென்றால், இடம் நிச்சயிக்கப்பட்டால் [illegible]ணைக்கமிட்டி ஏற்படும். இந்தக் கமிட்டி ஏற்பட்ட பிறகல்லவா கான்பரன்ஸ் ஏற்பாடுகள் ஆரம்பமாகும்? இனி, கான்பரன்ஸ் தலைவர் நியமனமும் சீக்கிரம் ஆகவேண்டும். சாவகாசமாக இந்த நியமனஞ் செய்தால்தான் நியமிக்கப்படும் கான்பரன்ஸ் தலைவர் தமது வியாசத்தை நிதானமாய்த் தயார்செய்யப் போதிய காலம் கிடைக்கும். கடைசிநாளில், தாங்களிருக்கவேண்டும் தாங்களிருக்கவேண்டுமென்று ஒவ்வொருவரையும் கேட்கப் புகுந்தால், அவர்கள் நான் மாட்டேன் நான் மாட்டேன் என்று சொல்ல நேரிடும். அப்புறம், இவரைக் கேட்டோம், மறுத்துவிட்டார், அவரை வேண்டினோம் முடியாதென்றார்என்று நிஷ்டூரஞ்சொல்லவேண்டியதாகும். அவசரத்தால் மற்ற ஏற்பாடுகளும் பூரண திருப்திக்கு இடமாயிருக்கமாட்டா. ஆதலால், காலஹரணமில்லாமல் இவ்வருஷத்திய கான்பரன்ஸ் ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தா. கூ. சூரப்பாச்சாரி.

### உணவு பாண்டங்கள்

ஆக்ஷேபனைக்கிடமாக நம்மவர்களிடம் காணப்படும் அநுஷ்டானங்களில் இரண்டைப்பற்றி இங்கு பிரஸ்தாபிப்பேன். அவையாவன, புழுங்கலரிசிச்சாதமும் மட்கலங்களும். சில குடும்பங்களில் இன்னும் புழுங்கலரிசிச் சாதம் சாப்பிட்டுவருகிறார்கள். இதன் நிஷேதத்தை எடுத்துக்காட்டுவது அனாவசியம். அதின் நாற்றத்தையும் மற்ற துர்க்குணங்களையும் முன்னிட்டு சூத்திரக் குடும்பங்களும் நாளாவட்டத்தில் புழுங்கலரிசியை விலக்கிப் பச்சரிசியை உபயோகஞ்செய்யத் தலைப்பட்டுவரும் இக்காலத்திலும், பிராம்மணர்களாகிய நம்முள் சில குடும்பத்தார் புழுங்கலரிசியைச் சாப்பிடுவதைவிட நிஷேதமான காரியம் ஒன்றிருக்கக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. பச்சரிசி திரேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்று சிலர் சொல்வது வீண் பிரமையே யல்லாமல் உண்மையாகவே மாட்டாது. பல்லாண்டுகளாகப் புழுங்கலரிசி சாப்பிட்டுவந்தவர்களுக்கு பச்சரிசி ஒரேநாளில் ஒத்துக்கொள்வது கூடாமையாயிருக்கலாம். அடுத்து நாலுநாள் சாப்பிட்டால் ஒத்துக்கொள்ளவே செய்யும். இடையில் நேரிடலாம் கோளாறுகளுக்கு சொற்ப சிகிச்சை செய்துகொண்டால் எல்லாம் சரியாய்விடும். இதற்குப்பயந்து, வழக்கமாய்விட்டதென்ற ஒரே சாக்கைக் கொண்டு புழுங்கலரிசியை [illegible]யாகப் பிடித்துக் கொண்டு அதையே சாப்பிட்டுவருவது மிகவும் மடமையாகும். பச்சரிசியின் சிலாக்கியத்தைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் தகும். அதில் சற்றேனும் வாத குணமிருப்பதாக நம்புகிறவர்கள் பெருங்காயத்தின் லக்ஷணத்தையும் உபயோகத்தையும் அறியாதவர்களாயிருப்பார்களென்றே சொல்லவேண்டும். பெருங்காயத்தை உபயோகிப்பவர்களுக்கு பச்சரிசிச்சாதம் யாதொரு அற்பசங்கடமும் உண்டுபண்ணமாட்டாது. ஆதலால், புழுங்கலரிசி உபயோகித்துவரும் நமது ஜாதியார் அதை உடனே விட்டொழிக்கவேண்டும். இனி, மட்கலங்களைப்பற்றிச் சொல்வேன். இவைகளைப் பிராம்மணர்களாகிய நாம் உபயோகிக்கலாமா? இவைகளைத் தொடுதலே தீட்டாகுமென்றால், இவைகளில் சமைத்த அன்னத்தையும் காய்கறிகளையும் சாப்பிடுதல் எவ்வளவு நிஷேதமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ ! மட்பாத்திரங்களாகிய சட்டிகளும் பானைகளும் சமையற்காரியத்திற்கு நமக்கு ஆகாதவை. ஆதலால், அவற்றை உபயோகிக்கலாகாது. சட்டி பானைகளை உபயோகிப்பது அனாசாரம் மட்டுமேயல்ல. வீண் செலவுக்கும் இடமாகிறது. தாம்பிர வெண்கல பித்தளைப்பாத்திரங்களை உபயோகித்தலே குடித்தனச்செட்டாகும். ஏழைகளுக்கும் இதுவே தக்கது.

சு. ப.

### சுரங்கத்தொழில்கள்

இவற்றைப்பற்றி அருமையாய் "சத்தியவசனர்" எழுதினார். பூர்வகாலத்தில் இந்தியர்கள் சுரங்கத்தொழில்கள் செய்துவந்தார்களென்பதில் சந்தேகமில்லை. அப்படிச் செய்தவர்களில் முதன்மைபெற்றவர்கள் நமது ஜாதியாராகத்தானிருப்பார்கள். அப்போது அவர்களுக்கு சாஸ்திரஞானம் ஏற்பட்டிருந்தது. அதனால் சுரங்கத்தொழில்களே யல்லாமல், வாவி கூப தடாக மாடகூட மண்டபமாதியாய பற்பல அற்புதத்தொழில்களைச் செய்தார்கள். இப்போதோ எல்லாவற்றிற்கும் இஞ்சினீர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். அடிப்பிடியெடு வேலைகளுக்குத்தான் நாம் ஆளாயிருக்கிறோம். நாம் மாத்திரமல்லாமல் இவ்வித கூலிவேலைக்கு நானாஜாதியாரும் தொடைதட்டிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு என்ன கௌரவம் இருக்கிறது? நாம் இஞ்சினீயர்களானாலல்லவோ சுரங்கத்தொழிற்காரர்களென்று பெ

ருமை பேசலாம்? அதிலும், சுரங்க [illegible] [illegible] [illegible]ழககபபடுகிறுர்கள். நம்மவர்க ளும் சீமையில் இஞ்சினீயரிங் கற்றுவந்தால், சுரங்கத் தொழிற்காரர்களாகலாம். இதற்குவேண்டியது இங்கி லீஷ்படிப்பு. போதுமானவரையில் இங்கேயே படித் துக்கொண்டு புத்திசாலியென்று காட்டினுல், கவர்ன் மெண்ட் ஸ்காலர்ஷிப்பினுலாவது மற்ற உதவி தேடியா வது சீமைக்குப்போய் படித்து பாஸ்செய்து பெரிய இஞ்சினியராய் சுரங்கத்தொழில் நடத்தலாம். கல்வி யில் விருப்பத்தையே நம்மவர்களுக்குப் புதிதாக உண்டு பண்ண வேண்டியதாயிருக்கும் கஷ்டத்திற்கு என்ன செய்யலாம்!

சா. காவேரி ஆச்சாரி.

## ஆச்சாரிப் பட்டம்

இது நம்மவர்களுக்குள் தெற்கேதான் அதிகமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. வடக்கே யுள்ளவர்களில் மிகச் சிலபேர்களே ஆச்சாரிப்பட்டம் கொண்டிருக்கி ருர்கள். இதற்குக்காரணம் யாதோ தெரியவில்லை. தெலுங்குதேசத்தார் பெரும்பாலும் பெயரை மொட் டையாய் வைத்துக்கொள்ளுகிறுர்கள். அல்லது ரங் கைய ராமையவென்று ஐயஎன்னும் பட்டத்தைச் சேர்த் துக்கொள்ளுகிறுர்கள். சிலர் ராவ் சேர்த்துக்கொள்ளு கிறுர்கள். சாஸ்திரி, சர்மா, தீக்ஷிதுலு, அவதானுலு முதலிய பட்டங்களும் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் விட்டு தென்னுட்டார் ஆச்சாரி ஒன்றையே ஏன் கட்டிக்கொண்டிருக்கவேண்டும்? மற்றவைகளையும் கையாண்டுக்கொண்டிருந்தால், இப்போது இவ்வளவு துன்பம் ஏற்பட்டிருக்கமாட்டாதல்லவா?

N. ஏகாம்பரம்.

## சிற்பப் பொருட்காக்ஷி

கும்பகோணக் கான்பரன்ஸோடு ஒரு சித்திரப் பொ ருட்காக்ஷியும் நடத்தவேண்டுமென்று நமது பத்திரிகை யில் எவ்வளவோ வற்புறுத்தி எழுதியும் அது நடை பெருமலே போயிற்று. இதற்குக்காரணம் கான்பரன்ஸ் நடந்த அவசரமென்று சொல்லப்படும். போனது போ கட்டும், இவ்வருஷமாவது பொருட்காட்சி நடத்தப்பட வேண்டும். இதுதான் நமக்கு முக்கியமான விஷயம். இதையநுசரித்து கான்பரஸ் நடத்தினுல் தொழிலாளி களாகிய நமது ஜாதியாருக்கு பிரயோஜனம் அதிகமா யுண்டாகும். இப்படியே நாம் நடத்தவேண்டியவர் களாயிருக்கிறேம். நமது வேலைகள் ஓரிடத்திற் செய் [illegible]யதுபோல் மற்றோரிடத்தில் செய்யப்படுவ தில்லை. பலவிடங்களிலிருந்து வருகிறவர்களுக்கு பல மாதிரி வேலைகளைக் காண்பித்தால் அவர்கள் தொழிலை விருத்திசெய்துகொள்வார்கள். நம்மால் செய்யப்படும் வேலைகளே யல்லாமல் நம்மால் செய்யக்கூடிய பொ ருள்களும் சேகரித்து வைக்கப்படவேண்டும். அதனுல், அவற்றை நாம் செய்வதற்குத் தூண்டப்படுவோம். ஆகையினுல், பல பொருள்களையுஞ் சேர்த்து சிற்பப் பொருட்காக்ஷி வைக்கவேண்டும்.

தொழிலாளி.

## பெண் கல்வி

பாகசாஸ்திரம் ஒவ்வொரு மாதமும் எழுதப்படு கிறது. இவ்விஷயமாய் நம்முடைய குடும்பங்களுக் குப் போதனை செய்யவேண்டியது நிர்ப்பந்தமா யிருக் கிறது. ஏனெனில், பொதுப்பட நமது ஜாதியாரு டைய பாகமே மிகவும் கர்னுடக ரீதியாயிருக்கிறது. அதைச் சீர்திருத்திப் புதுமாதிரியாகக் கறிகளையும் பல காரங்களையுஞ்செய்து வாய்க்கு ருசியையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் மனதிற்கு இன்பத்தையும் வரு வித்துக்கொள்ள வேண்டியது அவஸ்யமே. இதற்காக நமது பத்திரிகையின் வாசகர்கள் பாகசாஸ்திர விபரங் களைப்படித்து தமது மனைவிமக்களுக்குச்சொல்லி அந்த விதமாக சமையல்செய்யச் சொல்லவேண்டியதாயிருக் கிறது. இப்படிசெய்து சாப்பிடும்போது மிகவுந்திருப்தி யுண்டாகிறது. ஆனுல், ஸ்திரீகளே நேராக பத்திரி கையை வாசித்து அதில் எழுதப்பட்டிருப்பதை கிரகித் துக் கொள்வார்களானுல், புருஷர்களுக்கு இன்னுமதிக சந்தோஷமுண்டாகும். புருஷர்களுடைய பொழுதும் மிச்சமாகும். இப்படித்தான் மற்ற ஜாதிக்குடும்பங்களில் நடைபெற்று வருகிறது. அங்கு வாசிக்கத்தெரிந்த ஸ்திரீகளிருக்கிறுர்கள். நமது குடும்பங்களில் படிக்க வறியாத பெண்களே இருப்பதினுல், பாகசாஸ்திர விஷயமொன்றிலே மாத்திரமல்லாமல் மற்றும் பல விஷயங்களிலும் பல துன்பங்கள் உண்டாகின்றன. இந்தத்துன்பங்களை மாற்றும் உபாயம் பெண் கல்வி யொன்றேயாகும். பெண்களுக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்தால் நமது குன்றகளில் பலவற்றை அவர்கள் தீர்த்துவிடுவார்கள். "அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பேதுக்கு?" என்று அறியாத்தனமாய்ச் சிலர் கூறுவார் கள். அடுப்பூதுவதற்காகவே படிப்பு அவஸியமாயிருக் கிறது. அப்புறம், பிள்ளைகளை வளர்ப்பதற்குக் கல்வி அவஸ்யமாயிருக்கிறது. குடும்ப நிர்வாகத்திற்கு கல்வி அவஸ்யமாயிருக்கிறது. வைதிகதர்மத்தைச் சரியாய் நடத்துவதற்கு கல்வி அவஸ்யமாயிருக்கிறது.

சாஸ்வதி.



## [illegible]திற்றுறைகள்

[illegible]லே தாளு என்னும் ஜில்லாவில் [illegible]ங்கள் பயிராகின்றன. அவைக [illegible]ரிலிருந்து சாறு இறக்குவதற்கு [illegible]ர் அம்மாகாண கவர்ன்மெண்டி [illegible] பெற்றிருப்பதாகத் தெரிகிறது. [illegible]து சலபமாகவும் அதிகச் செல [illegible] செய்பலாமெனப்படுகிறது.

*
* *

[illegible] கண்ணுடி வியாபாரத்தில் பாலி [illegible] என்னும் இந்திய கம்பெனியார் [illegible]. மூக்குக் கண்ணுடிகளைத் தயாரிக் [illegible]பெனியாரே முதன்முதல் இந்தி [illegible]ர் என்றுசொல்லலாம். அத்தொ [illegible]ல யந்திர சாதனங்களுடன் மின் [illegible] தயாரித்து வருகிறுர்கள். மிகப் [illegible]தொழிற்சாலையொன்று அவர்களுக் [illegible]ாக்கியமான கண்ணுடிகள் சரிவா [illegible] படுகின்றன. மேனுடுகளிலிருந்து [illegible]களை விட அக் கம்பெனியார் தயா [illegible]யமாக இருக்கின்றனவாம்.

*
* *

[illegible] ஏப்ரல்மாதம் முதல் நவம்பர்மாதம் [illegible] ஸ்டேட்ஸிலிருந்து 1117-மோட் [illegible]இந்தியாவில் இறக்குமதியாய் இருக் [illegible]டிகளின் மொத்தக் கிரயம் 26¼-லட் [illegible]ாலத்தில் கிரேட் பிரிட்டனிலிருந்து [illegible]-வண்டிகள் தருவிக்கப்பட்டன. அவ் [illegible]யம் 22¾ லட்சம் ரூபாய் ஆகிறது. [illegible]கிலே அதேகாலத்தில் 32¼-லட்சம் [illegible] 780-வண்டிகள் கிரேட் பிரிட்டனி [illegible]சம் ரூபாய் பெறுமானமுள்ள 329- [illegible]டட் ஸ்டேட்ஸிலிருந்தும் இந்தியா [illegible]சென்ற ஜூன்முதல் நவம்பர்வரையில் [illegible]ருந்து மொத்தம் 4-கோடியே 88-ஆயி [illegible]லயுள்ள 1378-வண்டிகள் தருவிக்கப் [illegible]

*
* *

[illegible]து வருஷங்களுக்கு முன்னுல் இந்தியா [illegible]-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டும் [illegible]ம் ஏற்றுமதி செய்யப்பட்டன. அப் [illegible]சத்தில் பட்டுத்தொழில் நல்ல நிலைமையி [illegible]பட்டுத்துணிகள் நம் தேசத்தில் விற்கப் [illegible]வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் [illegible]. ஆனுல், அந்தத்தொழில் விரைவாய் [illegible]து சென்ற வருஷத்தில் 15½-லக்ஷம் [illegible]ள்ள பட்டுச்சரக்குகள்தான் வெளிநாடுக [illegible]ப்பட்டிருக்கின்றன. அம்மட்டோ? [illegible] பட்டுச்சரக்குகளும் நம் தேசத்தில் இப் போது ஏராளமாய் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன. 1914-ம் வருஷத்தில் 436-லக்ஷம் ரூபாய் பெறும்படி யான பட்டுச் சரக்குகள் அந்நிய நாடுகளிலிருந்து நம் தேசத்துக்கு வந்து விற்பனையா யிருக்கின்றன.

*
* *

டாக்டர் மஹேந்திர சந்திர நந்தி கோமில் ஜில்லா பிரம்மன்பேரியா ஸப்டிவிஷனைச் சேர்ந்த கலிக்கச்சு என்ற ஊரில் நீக்குச்சிகளைச் செய்வதற்கு அனுகூலமான ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்திருக் கிறுர். ரெவினியூபோர்ட் மெம்பரான ஆனரெபில் மிஸ்டர் மோனஹன் பிரம்மன்பேரியாவுக்கு உத்தி யோக அலுவலில் போயிருக்கையில் டாக்டர் நந்தி யிருக்கும் இடத்திற்குச்சென்று அவரால் கண்டு பிடிக்கப்பட்ட யந்திரத்தின் பல பாகங்களைச் சோ தனை செய்து, அந்த யந்திரம் செய்யும் வேலை யைக் கண்டு திருப்தி யடைந்தார். 'உம்முடைய யந்திரத்தின் ரகசியங்களைப் பிறர் அறிந்து கொண்டு அதைப்போல வேறு யந்திரங்களைச் செய்யாமலிருக் கும் பொருட்டு அந்த யந்திரத்தை ரிஜிஸ்டர் செய்யும்' என்று அவர் டாக்டர் நந்திக்கு யோசனை சொன்ன தாகத் தெரிகிறது.

*
* *

ஜப்பான் தேசம் மூன்ருவது வருஷத்தில் 15-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள கண்ணுடிச் சாமான்களை இந்தி யாவுக்கு ஏற்றுமதி செய்தது. போன வருஷம் 29- லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள கண்ணுடிச் சாமான்களை ஏற்றுமதி செய்தது. ஜப்பானிலிருந்து இந்தியா வுக்கு 42-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள நெருப்புப் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இப் பொழுது 93-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள நெருப்புப் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. யுத்தத்திற்கு முந்தி இந்தியாவுக்கு ஜப்பானிலிருந்து 6409-ரூபாய் மதிப்புள்ள சர்க்கரை ஏற்றுமதியாகி வந்தது. யுத்தத்திற்குப் பிறகு 19-லக்ஷத்து 9-ஆயி ரத்து எழுநூற்றுப் பத்தொன்பது ரூபாய் மதிப்புள்ள சர்க்கரை ஏற்றுமதியாயிற்று. வெள்ளை ஜவுளிகள் ஏற் றுமதி 17-லக்ஷத்திலிருந்து 33-லக்ஷம் ரூபாய்க்கு அதி கப்பட்டது.

*
* *

சென்னை மீன் இலாகா அஸிஸ்டண்ட் டைரெக்ட ரான மிஸ்டர் வி. கோவிந்தன் மூர் மண்டபத்தில் சென்ற டிஸம்பர் மாதத்தில் ஒரு வியாசத்தை வாசித் தார். அதில் கீழ்க்கண்ட விபரங்கள் குறிக்கப்பட்டிருந் தன:—தானூரில் செம்படவர்களுக்கு ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மற்றொரு சங்கம் தலைச்சேரியில் ஸ்தாபிக்கப்படும். செம்படவர்களுக் கென் றேற்பட்டிருக்கும் சங்கங்களைச் சேர்ந்த மெம்பர் கள் குறிப்பிட்ட கொஞ்சகாலம் வரையிலும் மாதந்தோ றும் கொஞ்சம் சந்தாத் தொகையைக் கொடுக்கும்படி

கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். அதிலிருந்து ஒரு சிறிய நிதியை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். மீன்களிலிருந்து மீன் எண்ணெயை இறக்கும் வழி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மீன்களிலிருந்து எண்ணெயை இறக்கும் தொழில் 5-வருஷத்திற்கு முந்தி தான் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அது பலமாக அபிவிருத்தி யடைந்து வருகிறது. மேற்குக் கரையில் மீன்களிலிருந்து இறக்கப்படும் எண்ணெய்த் தொழில் சாலைகள் 250-வரையில் இருக்கின்றன. ஸாடாயின் என்ற மீன் எண்ணெய் இறக்கப்படுகிறது. இந்தத் தொழிற் சாலைகளை சாதாரண செம்படவர்களே ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். மீன் இலாகாவில் நடைபெற்றுவரும் மற்றொருசிறந்தவேலை என்னவென்றால், செம்படவர்களின் குழந்தைகள் வாசிப்பதற்கு தொழிற் சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதேயாகும். அங்கே அவர்களுக்கு அத்தொழில்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த இலாகாதார் மதுவிலக்குச் சங்கம் ஒன்றையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். அதன் பிரயோஜனம் என்னவென்றால், மதுபான வழக்கம் செம்படவர்களுக்கு உண்டாகாமல் அவர்களுக்குப் போதித்து வருவதேயாகும். இச்சங்கத்தில் 70-மெம்பர்கள் வரையிலும் இருந்து வருகிறார்கள். இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இன்னும் இரண்டு வருஷமாகவில்லை. அச்சங்கத்து மெம்பர்களிடமிருந்து 600-ரூபாய் வரையிலும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் வசூல் செய்யப்பட்ட பணத்தை குறைந்த வட்டிக்கு மெம்பர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

*
* *

சென்றமாதத்தில் பம்பாயில்கூடிய எல்லா இந்திய தொழில்கான்பரன்ஸ் முக்ய தீர்மானங்கள்வருமாறு.—

1. முன்னமுள்ள இந்தியத் தொழில்களையும் புதிதாக இன்னும் பல தொழில்களையும் விருத்தி செய்ய வேண்டுவது அவசியம். ஆதலின், அவைகளை விருத்தி செய்வதற்கு ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் வேண்டிய உதவிபுரிவது கடமையாகும். மேலும், இதுவரையில் கவர்ன்மெண்டார் செய்துள்ள உதவிகளைப் பாராட்டுவதோடு, இன்னும் கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய விஷயங்கள் எவை யெனின்:—

(1) ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்கு வரி விதிப்பதில் இந்தியருக்கு முழுபாத்தியம் கொடுக்கப்படவேண்டும்.

(2) எல்லா மாகாணங்களிலும் கைத்தொழில் இலாக்காக்களை ஏற்படுத்தவேண்டும்.

(3) தேசத்தில் இன்ன தொழில்களை விருத்தி செய்யலாமென்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும்.

2. "பருத்திநூல் துணிகளுக்கு உள்நாட்டு வரி விதித்திருப்பதை எடுத்துவிடவேண்டுமென்று இதற்கு முன் பல தடவைகளில் இக்கான்பரென்ஸும், தொழிற்சாலைச் சங்கத்தாரும் ஜனசமூகத்தாரும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வரியினால் நமது பூர்வீகத் தொழில்களுக்குப் பாதக முண்டாகிறது. ஆகவே, அவ்வரியை எடுத்துவிட வேண்டும். மேலும், இந்தியத் தொழில்களின் நன்மையைக் கவனிக்கும்பொழுது, பணவுதவியும் வேறு சாதனமும் பெற்று இந்தியாவில் இறக்குமதியாகும் சாமான்களுக்கு வரி போடவேண்டியது ஏற்றதாகும்."

3. எந்த ஜாதியாரும் க்ஷேமலாப விருத்தியடைவதற்குக் காரணமா யிருப்பது தொழிற்கல்வியே யாகும். ஆதலின் முக்கியமான இந்திய யூனிவர்ஸிடிகளிலே தொழிற் கல்வியைக் கற்பிக்கப் போதகர்களைக் கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டும். ஏற்கெனவே யுள்ள தொழிற்பாடசாலைகளை கவர்ன்மெண்டார் விருத்தி செய்வதோடு, புதிதாக இன்னும் தொழிற் பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும்.

4. அன்னிய தேச ராஜ்யங்களுக்குள் சமாதான உடன்படிக்கை ஏற்படும்பொழுது, தானும் அதில் யோசனை சொல்லும்படி இந்தியா கவர்ன்மெண்ட் ஏற்பாடு செய்து, ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் விஷயமாய் வரி விதித்தலைப்பற்றிமட்டுமாவது தான் சொல்வதை அத்தேச ராஜ்யங்கள் கவனிக்கும்படி செய்ய வேண்டும்.

## சுகாதாரம்

பீபில்ஸ் பார்க் கண்காக்ஷி நடந்த ஸ்தலத்தில், மேஜர் ஜஸ்டிஸ் (Major Justice) மதராஸ் பிரஸிடென்ஸியில் பானம் செய்யும் ஜலத்தைப் பற்றியும் சாதாரணமாய் சுத்தி செய்யாத ஜலபானத்தினாலுண்டான அசௌக்கியத்தைப் பற்றியும் அதனாலுண்டான வியாதிகளின் அபிவ்ருத்தியைப் பற்றியும் ஒரு உபந்நியாஸம் செய்தார். அவர் சொன்னதாவது:—

இந்த மதராஸ் பிரசிடென்சியில் அனேக இடங்களில் கோயில் குளத்தில் ஜனங்கள் ஸ்நானம் செய்வதினாலும், அவ்விடத்திலேயே துணி முதலான அசுத்த வஸ்துக்களைச் சுத்தி செய்கிறதினாலும், பிறகு அந்த குளத்திலுள்ள ஜலத்தையே பானம் செய்கிறதினாலும் வாந்திபேதி முதலான வியாதிகளுக்கு ஆஸ்பதமாகிறது. மேலும், சில இடங்களில் தரைமட்டம் உள்ள சில கிணறுகளிலிருந்து ஜலபானம் செய்வதும் நல்லதல்ல. ஏனென்றால், கிணற்றிற்குச் சுற்றுப்பக்கத்தில் துர்நாற்றமுள்ள வஸ்துக்களைச் சேர்த்து வைப்பதுடன், ஆடுமாடுகளைக் கட்டி வைத்திருப்பதினால் அந்த அசுத்தமான வஸ்துக்கள் கிணற்றில் போய்ச் சேரும்படியானதாயிருக்கும். அந்த ஜலபானம் அசௌக்கியத்தைத் தரும். ஆகையால், தேக சௌக்கியத்திற்கு அதிக ஆழமுள்ள கிணற்று ஜலத்தை எடுத்துப் பானம் செய்வது அதிக நல்லது. அல்லது காட்டிலுள்ள புல்பூண்டின் மார்க்கமாய் வரும் ஊற்று ஜலத்தைக் காய்ச்சிப் பானம் செய்வது அதிக மேன்மை. விசாகப் பட்டணத்திலும் இன்னும் இதர சில ஜில்லாக்களிலும் ஏற்பட்டிருக்கிறதுபோல ஜலத்தைச் சுத்தம்செய்து குழாய் மார்க்கமாய்த் தருவித்து அதை உபயோகப்படுத்துவது அதிக சிலாக்கியம். அநேக ஜனங்கள் ஜலத்தைக் காய்ச்சாமலும் வடிக்கட்டி சுத்தம் செய்யாமலும் உபயோகப் படுத்துகிறார்கள். அவர்கள் அப்படிச்செய்வது அவர்களுடைய புத்திஹீனத்தைக் காண்பிக்கிறது; தென்கன்னடம் ஜில்லாவில் சில விடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜலபானம் மிகவும் சௌக்கியத்தைத் தருகிறது. எபபொழுதும் மழை பெய்து ஜலம் கல்லின் பேரில் புரண்டு போனால் அப்போக்கொத்த ஜலத்தை உபயோகப்படுத்துவதில் மிகவும் நன்மை உண்டாகும். ஜன சௌக்யத்திற்கு எப்பொழுதும் ஜலபானம் முக்கியமாகையால், யாவரும் ஜலத்தைக் கூடியவரையில் சுத்தி செய்துக் காய்ச்சி பானம்செய்தால் அதனால் பிரயோஜனம் அதிகமாக உண்டாகும்.



## ஆதப சிகிச்சை

(வைத்தியகலாநிதி)

இப்பொழுது வியாதிகளுக்குச் சிகிச்சைசெய்வதில் வெயிலை ஔஷதங்களைப்போல உபயோகிக்கும் வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகமாய்க்கொண்டே வருகிறது. சில வியாதி கொண்ட அவயவங்களின்மேல் சூரிய கிரணங்களை ஒரு ஸாதாரண பூதக்கண்ணாடியின் மூலமாகத் திரட்டிப் பிரயோகிப்பதால் மிகச் சிறந்த பயனுண்டானதாக அறியப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஸீலீ என்பவர் சர்மத்தைப்பற்றியுண்டான (முக்கியமாய் கண்மடலைச்சுற்றி யேற்பட்ட) வியாதியுடன்கூடிய அநேகம் பெயர்களுக்கு சூரிய ரச்மிகளை உபயோகித்ததில், அவர்களனைவருக்கு மிருந்த சர்ம வியாதி வேருடன் அறுபட்டுப்போயிற்றென்று அவருடைய ரிபோர்ட்டால் தெரியவருகிறது. இந்த முறை எவ்விதத்திலும் செலவைத் தாக்கூடியதா யில்லாததுடன், 'எக்ஸ்ரே' அல்லது 'ரேடியம்' என்னும் பெருஞ் செலவால் நிறைவேற்றக்கூடிய பிரயோகங்களினும் வியாதி நிவாரண விஷயத்தில் சற்றும் குறைந்த குணமுள்ளதன்று.

சூரியகிரணம் சர்மத்தின்மேலுண்டாகும் சிரங்குமுதலிய விகாரங்களைப் போக்குவதில் சிறந்த சக்தியுடையதென்பது ஒருபுறமிருக்க, இது தகுந்த அளவில் உபயோகிக்கப்பட்டால் தேஹத்திற் பொதுவாக உண்டாகும் பலவித கோளாறுகளும் நிவாரணமாவதுண்டு. பலக்குறைவுக்கும், மற்றும் அவ்வித தேஹ இளைப்பு முதலியவற்றிற்கும் வெயிலானது மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கிறது. இது உணர்ச்சி நரம்புகளைத் தூண்டி, அவற்றின வேலைகளைச் சரிவர நடத்தச்செய்யும்; இரத்தத்தின் குணங்களை அபிவிருத்தி செய்யும்; சரீர நிலைமையையே பொதுவாக ஸகல விதத்திலும் சீரான நிலைமைக்குக் கொண்டுவரும். பாண்டு ரோகத்திலும், மற்றும் அதுபோன்ற வேறுவித இரத்தக் கோளாறுகளிலும் வெயிலால் உண்டாகும் குணத்தைப் பார்க்க மிக ஆச்சரியகரமாயிருக்கும்.

காலையாவது,மாலையாவது ஆதபஸ்நாநத்திற்கு ஏற்ற காலமாகக் கருதப்படுகிறது. வெயிலில் இருந்து நிறைவேற்றவேண்டிய இச்சிகிச்சையை தாழ்வாரத்திலாவது, மாடியின்மேலாவது, அல்லது முக்கியமாக வீட்டிற்கு வெளியில் வெயில்பாவக்கூடிய தோட்டத்து நிலத்திலாவது செய்துகொள்ளலாம். பிணியாளி ஒரு சிறிய துண்டுத் துணியைமட்டும் அரையில் கட்டிக் கொண்டு, உடம்பிலுள்ள எல்லா வஸ்திரங்களையும் அவிழ்த்துவிட்டு வெயில் தேக முழுமையும் பரிசிக்கும் வண்ணம் இருக்கவேண்டும். வெயிலின் பிரகாசம் கண் முதலிய அவயவங்களுக்குச் சிறிது அஸௌகரியமுண்டுபண்ணினால், கண்களுக்குக் குளிர்ச்சிதரும் கண்ணாடியையும், தலைக்கு ஒரு வெண்மையான மெல்லிய குல்லாவைய்ம் போட்டுக்கொள்ளலாம். வியாதியின் நிலைமைக்கு ஏற்றவாறு வெயிலும் தீவிரமாக இருப்பது அவசியமாகத் தோற்றினால், பிணியாளிக்கு நடுப்பகலில் ஆதப ஸ்நாநத்தைச் செய்து வைக்கலாம். ஆனால் தலை மட்டும் குளிர்ச்சியா யிருப்பதற்காக இந்த ஸமயத்தில் பனிக்கட்டியைச் சிரசில் கட்டிக்கொண்டு வெயிலில் இருக்கவேண்டும்.

இவ்வாறு ஆதபஸ்நாநம் செய்யும்போது அதிக ஆயாஸ முண்டுபண்ணாத எவ்வித வியாயாமமும் (தேஹப் பயிற்சி) செய்யத் தகுந்ததேயாம்; ஆகிலும் வெயிலில் இருந்துகொண்டு 10-அல்லது 15-நிமிஷங்களுக்கு அதிகமாக வியாயாமம் செய்வது உசிதமல்ல; என்றாலும் பிணியாளுக்கு ஆதபஸ்நாநம் செய்வதும் அப்பொழுதே வியாயாமத்தை நிறைவேற்றுவதும் வழக்கமாகப் போய்விடுமானால், இதற்கு வேண்டிய நேரத்தை அரைமணியிலிருந்து ஒருமணி ஸாவகாசம் வரையில் அதிகமாக்கிக் கொள்ளலாம். வெயிலில் பூமியின் மீது கவிழ்ந்து நன்றாகப் படுத்துக் கொண்டும், அல்லது மல்லாந்துப் படுத்துக்கொண்டும், நின்று கொண்டும் இச்சிகிச்சையைச் செய்து கொள்ளலாம்.

அல்லது ஏதேனும் ஒரு அவயவத்தில் மாத்திரம் வெயிலைப் பிரயோகிக்க வேண்டுமானால், முற்கூறியவாறு ஒரு பூதக்கண்ணாடியின் மூலமாய் வெயிலைத் திரட்டி அவ்வவயத்திற்கு நேராகப்பிடிக்க, சூரிய கிரணங்கள் அதிக அளவாக அவ்விடத்தில் விழுந்து, வியாதிக்குக் காரணமான தோஷங்களைப் போக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணும். ஆதப ஸ்நாநம் செய்யுப்பொழுது தாராஸ்நாநம் (உயரத்திலிருந்து மெல்லிய அநேகம் தாரையாக விழும் ஜலத்திற்கு அடியில் உட்கார்ந்து செய்யப்படும் ஸ்நாநம்) செய்வதும் உடம்பை ஸுகமாகமர்த்தனம் செய்யச்சொல்வதும் மிக உபயோககரமானவையாயிருக்கும். வெயிலில் இருந்து கொண்டு செய்து கொள்ளப்படும் இச்சிகிச்சை மிகவும் எளிதாகவும் செலவில்லாததாகவும், சிறந்த குணந்தாக்கூடியதாகவும் இருப்பதால் மற்றத் தேசங்களைப்போலவே இந்தியாவிலும் இந்த முறை அனைவராலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்படுவது பலவகையிலும் இலாபகரமாயிருக்கும்.—Health and Happiness,

## சண்டையைச் சார்ந்தவை

சென்ற வருஷத்திலே ஜெர்மனியிலுள்ள துருப் யுத்த ஆயுதச்சாலைக்கு 16-லட்சத்து 95-ஆயிரம் பவுன் லாபம் கிடைத்தது. இவ்வருஷத்திலோ 43-லட்சத்து 20-ஆயிரம் பவுன் லாபம் கிடைத்திருக்கிறது. ஆகவே பங்குக்காரர்களுக்கு நூற்றுக்கு 12-வீதம் லாபத்தைப் பிரித்துக் கொடுப்பதாகத் தீர்மானமாயிருக்கிறது.

*
* *

பிரான்ஸின் வடக்குக் கோடியிலே வடகடலிலிருந்து தெற்கே ஸ்விட்ஸர்லாந்து தேசம் வரையிலுள்ள மேற் காங்கத்தின் நீளம் சுமார் 500-மைல். அங்கே போர் முனை நெடுக ஒரு பக்கத்தில் பிரஞ்சு பிரிட்டிஷ் துருப்புகளும், மற்றொரு பக்கத்தில் ஜெர்மன் துருப்புகளுமாக அணி வகுத்து நின்று அரண்களில் தங்கியிருந்து போர் புரிந்து வருகின்றனர். இரு பக்கத்தாரும் அந்த 500-மைல் தூரத்தில் ஒன்றன்பின் ஒன்றுகப் பலவரிசை அரண்களைக் கட்டியிருக்கின்றனர். அவ்வாறு 500-மைல் தூரத்திலும் நேசத்துருப்புகள் ஒன்றன்பின் ஒன்றுக 10-ஆயிரம் மைல் நீளமுள்ள அரண்களைக் கட்டியிருக்கிறார்களென்று தெரிகிறது.

*
* *

9-ந் தேதி வரையிலும் பிரான்ஸில் பிரிட்டிஷாரின் மொத்த சேதத்தைப்பற்றி மிஸ்டர் ஆஸ்குவித் பின் வருமாறு கூறுகிறார்:—

பிரான்ஸில் 371517-பிரிட்டிஷார் சேதமானார்கள். அவர்களில் 4829-ஆபீஸர்களும், 77473-ஆட்களும் கொல்லப்பட்டார்கள். 1699-ஆபீஸர்களும் 52685-ஆட்களும் காணமற் போனார்கள். டார்டினெல்ஸைத் தவிர மற்ற அரங்கங்களில், நேர்ந்த மொத்தச் சேதம் 24018-அவர்களில் 871-ஆபீஸர்களும், 10953-ஆட்களும் கொல்லப்பட்டார்கள. எல்லா அரங்கங்களிலும் நேர்ந்த சேதத்தின் மொத்தம்:—

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | $11992^{3}$ |
| காயம் பட்டவர்கள் | $33875^{8}$ |
| காணமற் போனவர்கன் | $6954^{6}$ |

*
* *

மேற்காங்கத்திலே பூமியின் கீழ் நேசத்துருப்புகள் அரண்கள் கட்டி அவைகளில் தங்கியிருப்பதால், அங்கே ஏராளமான எலிகள் உண்டாய் விட்டன. அந்த எலிகளின் தொகையோ அதிகரித்து வருகிறது. அதனால் ஸோல்ஜர்களுக்கு மிகுந்த பாதகம் உண்டு. அவைகளைக் கண்டு தூரத்திருல் அவைகள் ஸோல்ஜர்களை எதிர்த்துக் கடிக்கும்படியான அவ்வளவு திறமையுள்ளவைகளாய் இருக்கின்றனவாம். ஆகவே, ஸோல்ஜர்களின் கஷ்டத்தைப் போக்கி விட, எலிகளைக் கொன்று விடுமாறு பாஷாணத்துடன் பல டாக்டர்களை பிரஞ்சு கவர்ன் மெண்டார் போர்முனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். மேலும் அந்த எலிகளைக் கொன்று தின்னும்படி 2-ஆயிரத்து 700-நாய்களையும் அனுப்பியிருக்கின்றனரென்று சொல்லப்படுகிறது.

*
* *

ஜெர்மானியர் தங்களது எதிரிகளின் மீது விஷக் காற்றை உபயோகிப்பதனல் உண்டாகும் ஹிம்ஸை கொஞ்சமல்ல. அக்கினித்திராவகத்தை ஜெர்மானியர் உபயோகிக்கும்பொழுது, துருப்புகளுக்கு நேரும் துன்பத்தைப்பற்றி பிரஞ்சு ஸோல்ஜரொருவன் பின்வருமாறு எழுதியிருக்கிறான்: "நாங்கள் ஒரு சமயம் அரண்களில் தங்கி யிருந்தபொழுது எனது நண்பரிலொருவன் "ஐயோ! இதென்ன நம்மீது பிரயோகிக்கப்படுகிறது? இதென்ன பெட்ரோலியமா?" என்று கூவினன். அச்சமயம் அவன் சொன்னதை நாங்கள் நம்பவில்லை. ஆயினும், திராவகமானது எங்கள்மீது விழுந்துகொண்டிருந்தது. உடனே கவசத்தைத் தரித்துக்கொள்ளும்படி எங்களுக்கு உத்தரவாயிற்று. அக்கவசத்தை நாங்கள் தரித்துக்கொண்டும் பயனில்லை. பின் சில நிமிஷங்களுக்கெல்லாம், தீமூட்டக்கூடிய குண்டுகள் எங்களது அரணில் சரமாரியாய் வந்து வீழ்ந்தன. உடனே அரணெங்கும் தீமயமாய்விட்டது. அப்பொழுது அரணானது நரகத்தைப்போ லிருந்ததென்றே சொல்லவேண்டும். சில ஸோல்ஜர்கள் தீப் பற்றி யெரியும் தங்களது உடைகளை அவிழ்த்தெறிந்து கூக்குரலிட்டனர். மற்றுஞ் சிலர் அக்கினித்திராவகத்தால் வாதைப்பட்டனர். 'ஐயோ! என் கண்ணை ஜெர்மானியர் போக்கிவிட்டார்களே" என்று ஒருவன் கதறினன். இவ்வாறு எங்களுடைய அரணில் குழப்பந்தோன்றி யிருப்பதைக் கண்டு இதுவே தக்க சமயமென்றறிந்து திருட்டு ஜெர்மானியரோ எங்களுடைய அரணை நோக்கி முன்வந்தனர். மேலும் எரியும் தீவர்த்தியையும் அவர்கள் எங்களது அரணில் எறிந்தார்கள். அந்நெருப்பிலிருந்து ஒருவராவது தப்ப முடியவில்லை. எங்களது புருவங்களும் கண்ணிமைகளும் சரிந்துபோய் விட்டன, உடையும எரிந்துபோயிற்று. உடலிலுள்ள சதையும் நெருப்பில் வறுக்கப்பட்ட இறைச்சிபோலாயிற்று."

*
* *

ஜெர்மானியரால் முழுக்கடிக்கப்பட்ட யாஸாகாமாரு என்ற ஜப்பானிய ஸ்டீமரில் வந்தவர்களில், சென்னை ஜுடிஷியல் செக்ரிடெரியான திவான் பகதூர் பி. ராஜகோபாலாச்சாரியர் ஒருவர். இவரும் மற்றுஞ் சிலரும் தப்புவிக்கப்பட்டதைப்பற்றி பின்வருமாறு சொன்னர்.- நாங்கள் இங்கிலாந்திலிருந்து ஏறிவந்த யாஸகாமாரு என்ற ஜபபானிய ஸ்டீயர் மார்ஸேல்ஸ் என்ற துறைமுகப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டதுமுதல் ஜெர்மன் ஸப்மரீன்கள் ஜப்பானியர்களின் ஸ்டீமர்களைத் துரத்தித் தாக்கி மூழ்கடிக்கச்செய்யும் என்று சந்தேகங் கொண்டு மெற்கண்டஸ்டீமர், வழக்கமாய்ச்செல்லுமார்க்கத்தை விட்டுவிட்டு கடற்கரையோரமாக வந்துகொண்டிருந்தது. ஸ்டீமர் போர்ட்ஸெயிட்டுக்கு 50-மைலுக்கப்பால் வந்துகொண்டிருந்தபொழுது, ஜெர்மானியர்கள் முன் எச்சரிக்கை செய்யாமலே மத்தியானம் 3-மணிக்கு டார்பிடோ வெடியைப் பிரயோகித்தார்கள். வெடித்ததினுல், மாலுமிகளில் 9-பேர்கள் கொல்லப் பட்டார்கள். எறியப்பட்ட டார்பிடோ நல்ல அதிர்ஷ்டத்தினல், நமது ஸ்டீமரின் முன்பாகத்தில் பட்டதினல் அது ஜலத்தில் மூழ்கிப்போவதற்குக் கொஞ்சம் நேரம் சென்றது. அந்த ஸ்டீமரிலுள்ள காப்டனும், மாலுமிகளும், நிரம்பசாமர்த்தியத்துடன் நடந்துகொண்டார்கள். அதன் பிறகு, ஸ்டீமரிலிருந்த பிரயாணிகள் அமைதியுடன் கூட்டம் கூட்டமாக படகுகளில் ஏறிக்கொண்டார்கள். ஸ்டீமரின் காப்டன் உதவி தேவையென்று போர்ட்ஸெயிட்டுக்கு கம்பியில்லா தந்திசமாசாரத்தை அனுப்பினர். 20-நிமிஷத்திற்குப் பிறகு இந்தப்படகு புறப்பட்டது. யாஸகமாரு என்ற ஸ்டீமர் 50-நிமிஷங்களுக்குள் மூழ்கிப்போயிற்று. ஸ்டீமர் மூழ்குவதை ஜெர்மானியர் அரைமணி நேரம்வரையிலும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். போர்ட் ஸெயிட்டுக்கு நடு இரவில் போய்ச் சேர்ந்தோம். மாலுமிகள் நடந்துகொண்ட விதம் புகழத்தக்கது. போர்ட் ஸெயிட்டில் பிரயாணிகள் ஏஜண்டுகளால் வரவேற்கப்பட்டார்கள். சாப்பாடு வசதியும், இருப்பு வசதியும் கவனிக்கப்பட்டன, பல இடங்களுக்கு தந்திகள் அனுப்பபட்டன. ஹோட்டலுக்குக் கொடுக்கவேண்டிய பணம், கம்பெனியாரால் கொடுக்கப்பட்டது. போர்ட் ஸெயிட்டிலிருந்து, பிரயாணிகள் அவரவர்களுடைய ஸ்தலங்களுக்குப் போவதற்கு டிக்கட்டுகளையும் கம்பெனியார் வாங்கிக்கொடுத்தார்கள்.

*
* *

'பெர்ஷியா' வென்னும் தபால் கப்பலை ஜெர்மானியர் தகர்த்துவிட்டார்கள். இதில் பிரயாணஞ் செய்து வந்த நூற்றுக்கணக்கான ஜனங்கள் கடற்கிரையாயினர். தப்பியவர்களில் ஒருவர் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறார். "யாஸாகா மாறு" என்ற பெரிய ஜெப்பான் கப்பல்மேல் டார்பிடோ வெடி பிரயோகிக்கப்பட்டு அது சேதமாய்விட்ட சமாசாரம் மால்டாவில் தான் எங்களுக்குத் தெரிந்தது. இந்தச் செய்தியைக் கேட்டதும், பிரயாணிகளுக்குச் சிறிது கவலை உண்டாயிற்று; ஆயினும் எல்லோரும் வாயை மூடிக்கொண்டிருந்தார்களே யல்லாது, அவ்விஷயமாக ஒருவரும் பேசவில்லை. ஆயினும் டிஸம்பர் 29-ந்தேதி காலை 10-மணிக்கு 'பெர்ஷியா'வின் காப்டன் எல்லோரும் படகுகளில் ஏறிப் பழகவேண்டுமென்று உத்திரவுசெய்தார், ஒரு சமயம் ஆபத்து நேர்ந்தால் ஒவ்வொரு பிரயாணியும் இன்னின்ன படகில் இந்த வந்த இடத்தில் ஏறிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடபபட்டது. 30-தேதி பகல் 1-மணிக்கு நானும் பிறரும் சாப்பிட்டுக் கொண்டு பேசிக்கொண்டிருக்கையில், திடீரென ஒரு பெரிய சத்தம் கேட்டது. உடனே எங்கள் அறையில் புகை புகுந்துவிட்டது. கப்பல்மேல் டார்பிடோ பட்டு விட்டதென்று நாங்கள் தெரிந்துகொண்டு உயிர் பெல்டை எடுத்துக்கொண்டுவா ஓடினேம், என்னுடைய பெல்டை நான் எடுத்துக்கொண்டு எனக்கேற்பட்ட படகைத் தேடிச் சென்றேன். அதற்குள் 5 படகுகள் நீர்மேல் இறங்கிவிட்டன. அதற்குள் கப்பல் ஒருபுறமாய் உட்கார ஆரம்பித்துவிட்டதால், படகுகள் கடலில் முழுகிவிடும் போலிருந்தன. கப்பலின் கம்பியை சிறிது நேரம் பிடித்துக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கையில் அதிவேகமாக கடலுக்குள் இழுத்துக்கொண்டு போகப்பட்டதானது வெகு பயங்காமாகவிருந்தது. அப்பொழுது சமீபத்தில் ஒரு படகு இருக்கக் கண்டு நீந்திக்கொண்டு அதற்கு அருகில் சென்றேன். கொஞ்ச நேரம் முழுகிப்போன கப்பலுக்கருகில் கிடந்தேன். கடைசியாக என்னைத் தூக்கி படகில் போட்டபொழுது, நாலு படகுகள்தான் கண்களில் பட்டன. வெகு சிரமப்பட்டு இவைகளை ஒருமிக்கச் சேர்த்து கயிற்றால் பிணைத்தார்கள். வியாழக்கிழமை மத்தியானமும், ராத்திரியும், வெள்ளிக்கிழமை பகல் முழுமையும் படகில் இருந்தோம். வெள்ளிக்கிழமை மாலை 6½-மணிக்குமேல் சுரங்கமெடுக்கும் கப்பலொன்று எங்களைக்கண்டு ஏற்றிக் கொண்டது. எங்கள் படகில் கொஞ்சம் பிஸ்கோத்தும் சுத்தஜலமும் இருந்தன. வியாழக்கிழமை ராத்திரி நாங்கள் ஒன்றும் சாப்பிடவில்லை. வெள்ளிக்கிழமை காலையில் தலைக்கு ஒரு பிஸ்கோத்து கிடைத்தது. ஜலத்தை ஜாக்கிரதையாகக் கையிருப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று எல்லோருக்கும் கவலை அதிகமாயிருந்ததால், ஒருவரும் ஜலம் குடிக்கவில்லை. ஒரு சொட்டு ஜலமன்னியில் 30-மணிநேரம் கழித்தோம். சுரங்கம் வாரி எங்களுக்கு வெகு சௌகர்யம் செய்துகொடுத்தது. அக்கப்பல் எங்களைக்கண்ட இடமானது அலெக்ஸாண்டிரியாவிலிருந்து 400-மைல் தூரமிருக்கும். அலெக்ஸாண்டிரியாவிலிருந்து போர்டு ஸெட்டுக்கு எங்களை அனுப்பினர்கள். போர்டுஸெட்டில் "மெடினு" என்ற கப்பலில் சௌகர்யமாக ஏறிக்கொண்டோம்.

## விசேஷ வர்த்தமானம்

**உபகாரச் சம்பளம்.**—இந்தியாவிலிருந்து இங்கிலாந்திலுள்ள யூனிவர்ஸிடி ஒன்றில் படிக்க இந்தியா கவர்ன்மெண்டு வருஷாவருஷ மனுப்பும் மாணவன் ஆக்ஸ்போர்ட் அல்லது கேம்பிரிட்ஜ் யூனிவர்ஸிடியில் இடம் பெற்றால் வருஷமொன்றக்கு இது வரையில் கொடுத்துவந்த 200-பவுனை, 250-பவுனக இந்தியா செக்ரிடரியின் அங்கீகாரத்தின் பேரில், இந்தியா கவர்ன் மெண்டார் உயர்த்தியிருக்கிறார்கள். இது 1916-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் அமுலுக்கு வரும்.

*
* *

**சென்னையில் குடி வழக்கம்.**—மதுவிலக்கு சம்பந்தமாய் சில விஷயங்களைப் பிரசுரஞ் செய்வதற்காக சென்னையிலிருக்கும் Y. M. C. A. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையிலுள்ள கள்ளுக் கடை சாராயக் கடைகளை மாலை 4-மணி முதல் இரவு 9-மணி வரையிலும் கவனித்து அங்கே வந்து போன ஆட்களை ஜாதி

வாரி கணக்கெடுத்தார்கள். சென்னைக் கள்ளுக் கடைகளில் நாள் ஒன்றுக்கு ஆண் பெண் சிறுவர்கள் உள்பட 45,000-பேர்கள் வந்து குடித்துப் போகிறார்கள். சாராயக்கடைகளில் 5-மணி நேரத்தில் 18000-பேர்கள் வந்து குடித்துப் போகிறார்கள் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இதனால் மேற்கண்ட இரண்டு கடைகளிலும் நாள் ஒன்றுக்கு 63,000-பேர்கள் வந்து போகிறார்கள் என்று ஏற்படுகிறது. ஜனத் தொகையில் இக்கணக்கு நூற்றில் பத்துவீதம் ஏற்படுகிறது.

*
* *

**பஞ்சப்பிர்ம்ம யாகம்.**—காஞ்சிமாநகரத்தின் கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகியாகிய ஸ்ரீ ஆதி பீடாபரமேஸ்வரி அருள் பிரசாதம் பெற்ற ஸ்ரீமத் விராட் பஞ்சானனஜேத்பவ மனு மய துவஷ்ட சில்பி விஸ்வக்ஞ மூன்று கோவில் அய்த்தாகி பௌரோகிதர் தர்மகர்த்தா எஜண்ட்டு காரியஸ்தர் விஸ்வப்பிராம்மண மஹாசபையார் ஸ்ரீமத் விராட் பஞ்சப்பிர்ம்மயாகம் நடத்த நிச்சயித்திருக்கிறார்கள். விஷ்ணுகஞ்சி ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானத்திற்கு அடுத்த விஸ்வப்பிராமண வீதியில் இராக்ஷஸஹு மாசி௴ 2வ திங்கட்கிழமை இராத்திரி அனுக்கியை வாஸ்துசாந்தி, மிருத்திசங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், 3வ செவ்வாய்க்கிழமை சூரிய உதயத்திற்கு கலஸஸ்தாபன யாகம் தொடங்கி 7வ சனிக்கிழமை சூரிய உதயத்திற்கு பூர்ணகுதியும இராத்திரி விராட் விஸ்வேஸ்வரர் மஹோற்சவமும் நடைபெறும்.

*
* *

**திருவண்ணாமலையில் பூமியதிர்ச்சி.**—சென்ற 7-ந் தேதி சுக்கிரவார தினத்தன்று காலை 6-48-மணிக்கு முதலில் புகை வண்டியின் குமுறல் போலும், பின் மோட்டார் வண்டியின் வேகமான சப்தம் போலும், முடிவில் மாரிகால மேக கர்ச்சனை போலும் ஓர்வித பயங்கரத்தொனி யுண்டாயிற்றாம். பிரம்மாண்டமான மரங்களும் பெரிய கட்டடங்களும் கிடு கிடு கிடுவென அதிர்ந்து குலுங்க, சுண்ணும்பு பட்டை போடாத சாதாரண வீடுகள் சிலவற்றின மேல்கூரை ஓடுகள் சரிந்து கீழேவிழுந்தனவாம். திடீரென உண்டான இவ்வாச்சரிய சம்பவத்தால சில ஜனங்கள் மெய்ம்மறந்து பீதியோடு தத்தம் குழந்தைகளை அவசரத்துடன், வாரி யெடுத்துக் கொண்டு தெருவில் ஓடிவந்து திகில்கொண்ட மனத்தினராய் பெருங் குழப்ப மடைந்தனராம். காலை 7-மணி விடேரில் சுமார் 2-நிமிஷம் வரையில் விடாமல் பூமி அதிர்ந்துகொண்டிருந்ததெனப்படுகிறது.

*
* *

**ஸவரன்களின் திருட்டு.**—டிஸம்பர் மாதம் 30-ந் தேதியன்று ரப்பீஷா சாஹேப் என்ற ஒருவன், தங்கசாலையிலிருக்கும் மார்வாடி ஒருவனுடைய ஷாபபிலிருந்து 633-ரூபாய் 14-அணா மதிப்புள்ள 40 ஸவரன்களைத் திருடினான் என்று ஆனைகெவுனி போலீஸாரால் சார்ஜ் செய்யப்பட்டு, பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாரின் முன்பாக விசாரணைக்குக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். குற்றஞ்சாட்டப்பட்டவன் ஸவரன்களை வாங்குவதற்காக மார்வாடி ஷாப்புக்குப் போய் ஸவரன் ஒன்றுக்கு ரூபாய் 15-14 அணா வீதம் 40 ஸவரன்களைப் பொறுக்கி யெடுத்து வைத்துக்கொண்டு அவைகளுக்கு பணம் கொடுக்காமல் போய்விட்டான். அவன் தனக்கும் வாதிக்கும் இருந்த விரோதத்தினால் வாதியானவர் ஸவரன்களின் விலையைப் பெற்றுக்கொண்டும் தன் பேரில் இவ்விதம் பிராது செய்தார் என்று வாதாடினான். ஆயினும், அவன் குற்றஞ்செய்ததாக ருசுவாயிற்று. மாஜிஸ்ட்ரேட்டு அவனுக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனையை விதித்தார்: திருடின சொத்தை வாதிக்குத் திருப்பிக்கொடுத்து விடும்படி உத்தரவு செய்யப்பட்டது.

*
* *

**ஆசார சீர்திருத்தம்.**—சென்ற டிஸம்பர் மாதத்தில் பம்பாயிற் கூடிய இந்திய ஆசாரத்திருத்த கான்பரன்ஸ் தலைவருடைய உபந்நியாசத்தில் இவ்வாறு கூறப்பட்டது:—பூலோகத்தில் அவரவர்களின் தொழில்களுக்கிசைந்தபடி ஜனங்கள் ஒவ்வொரு கும்பலாய்ச்சேருவது சகஜந்தான். இப்போக்கொத்த கும்பல்கள் நெருங்கிப் பழகுவதினால் அதிக நேசத்துக்குள்ளாவதும் சகஜந்தான். ஆனால் இப்போக்கொத்த நாளிலும் கூட ஒரு மனிதனை அவன் பிறப்பினாலேயே மதிப்பதானது காரணமற்றதாயும் அருத்தமில்லாததாயு மிருக்கிறது. கீழ் ஜாதியார்கள் நடத்தப்படும் விதத்தை அவர்கள் தெரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். இந்த ஜாதி வித்தியாசங்கள் ஏற்பட்டதின் காரணங்களைக் கண்டு கொள்ளாமல் நாம் கண்மூடித்தனமாய் நடந்து வருகிறோம். இந்த வித்தியாஸங்களைப் போக்குவதற்கு நாம் நமது செய்கைகளினால் நடத்திக் காண்பிக்க வேண்டும். எல்லா ஜாதியாரும் சேர்ந்து உண்ணவேண்டும். ஜாதி வித்தியாஸம் பாராட்டாமல் விவாகங்கள் செய்யவேண்டும். இப்படிச் செய்வதினால் காலக்கிரமத்தில் அபிவிருத்தி யடையலாம். ஒவ்வொரு ஜாதியும் மற்ற ஜாதிகளின் சகாயத்தைத் தேடி அடையவேண்டும். நாம் இந்தியர்கள் இந்தியர்களாகவே யிருக்கவேண்டும். சுற்றுப் பக்கங்களில் நடக்கும் உலக நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும். குருடர்களாக இருக்கக்கூடாது. இதுவரை நாம் தனித்திருந்தோம். இனி அப்படியிராமல் சேர்ந்திருக்கவேண்டும். அற்ப விஷயங்களில் சண்டை யில்லாமல் சமரஸப் படுத்திக்கொள்ள வேண்டும். தடைகளிருந்தால் அவைகளை சட்டதிட்டங்களினால் நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும். ஆகையினால் மிஸ்டர் பாஸு கொண்டுவந்திருக்கும் மசோதாவையும் பம்பாய் ஆரிய சங்கத்தாரால் கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஹிந்து விவாக மசோதாவையும் இந்த சபையார் ஆதரிக்க வேண்டும்.

7/1/72 Missing

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1916௵ பிப்ரவரி௴ [சஞ்சிகை 5

## ஒளிவளர் விளக்கு

1916௵ ஜனவரி மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை-160.

*
* *

விஸ்வகர்ம பண்டித பரிஷத்தைப்பற்றி சென்ற டிஸம்பர் மாதப் பத்திரிகையில் ஒரு பண்டிதரெழுதியிருந்ததைத் தழுவி, நமது பத்திரிகையின் விஷயதானிகளுடைய பரிஷத் ஒன்றைத் தனியாய்க் கூட்டுவிக்க வேண்டுமென்று ஒரு நிருபர் நமக்கெழுதுகிறார். பண்டித பரிஷத்தில் மேற்படியார்களுஞ் சேருவார்களாதலால் இவர்களுக்கெனத் தனித்தொரு பரிஷத் சேர்ப்பது அனுவசிய மென்றெண்ணுகிறோம்.

*
* *

விருதுப்பட்டி நாடார்கள் கல்வியின் பயனையும் கல்வியாலுண்டாகும் மேம்பாட்டையும் நன்கறிந்து தங்கள் பிள்ளைகள் உயர்தரக் கல்வி பயிலும்படி மதுரை சென்னை போன்ற விடங்களிலுள்ள காலேஜ்களுக்கு அவர்களை அனுப்பியிருப்பதில் சிலர் F. Aக்கும் சிலர் B. Aக்குமாகப் படித்து வருகிறார்களென்றும், சிலர் இங்கிலாந்துக்குப்போய் I. C. S. பரீட்சைக்குப் படிக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்று மறிந்து மகிழ்கின்றோம். இவ்வித ஊக்கம் விஸ்வகர்ம ஜாதியார்க்கு உண்டாவதென்றோ!

*
* *

பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு ஏற்ற வயதுள்ள குழந்தைகளிலே 1873-ம் வருஷத்தில் 100க்கு 28-பேர் ஜப்பானில் ஆரம்பப் படிப்பு பெற்றுவந்தார்கள். 1903-ம் வருஷத்திலோ அத்தேசத்திலே பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் குழந்தைகளின் தொகையானது 100-க்கு 90 ஆக உயர்ந்துவிட்டது. இந்தியாவிலோ வென்றால், 100-க்கு சுமார் 20 குழந்தைக~ பள்ளிக்கூடங்களில் படித்த ~ ஒனறனர். இவ்வாறு படிச்ருப் ±UU-குழந்தைகளில் விஸ்வகர்ம குலக்குழந்தை யொன்றைக் காண்பது கடினமாயிருக்கிறது. என்றால், ஜப்பானியருக்கு மிகத் தாழ்ந்த படியில் இந்தியரிருப்பதும், இந்தியருள் மிகத் தாழ்ந்தபடியில் விஸ்வகர்மரிருப்பதும் ஆச்ரியமன்றோ!

*
* *

இந்திய ஊழிய சங்கத்தார், பம்பாய்ப்பட்டணத்து தெருப்பெருக்குகிறவர்களாகிய தோட்டிகள், குப்பைவாருகிறவர், பால்காரர் முதலியவர்க

ளுள் கூட்டுறவை யுண்டுபண்ணி, அவர்களுள் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்பாடுசெய்துக்கொடுத்து, அதனால் அவ்வகுப்பார் சுகமடையச் செய்கிறார்களெனத் தெரிகிறது. 1913-ம் வருஷத்தில் இச்சங்கத்தாரால் 3 சங்கங்கள் மேற்கூறிய ஜாதியார்க்கென்று ஆரம்பமாயின. அவை நல்ல ஸ்திதியிலிருந்து வருவதாகத் தெரிகிறது. பிற்பாடு $2\frac{1}{4}$ வருஷகாலத்திற்குள் 14 சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டன. இம்மாதிரி சங்கங்கள் நமது வகுப்பாருக்குள் உண்டானால் நாமும் நமது தொழில்களும் முன்னுக்கு வருதல் நிச்சயமல்லவா ?

***

பம்பாய் மாகாணத்தின் மேல்பாகத்து பூர்வீக நாகரீகச் சின்ன பரிசோதனை ரிபோர்ட் வெளி வந்திருக்கிறது. அதில் குவாலியர் ராஜாங்கத்தில் நாளது வருஷத்தில் ஜி. ஐ. பி. ரெயில்வேயில் டர்பா ஸ்டேஷனுக்குத் தென்மேற்கில் 15-மைல் தூரத்திலுள்ள பாவயா என்ற இடமே பூர்வீக பத்மாவதி என்னும் கிராமம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. பத்மாவதியானது நாகர்கள் என்ற ஜாதியார்களுக்கு ராஜதானியாக இருந்ததாக விஷ்ணுபுராணம் சொல்லுகிறது. ஸம்ஸ்கிருத மஹாகவியாகிய பவபூதி இயற்றிய மாலதி மாதவம் என்னும் நாடகமும் இங்கு நிகழ்ந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

***

மேஜர் திவான் கணபதிராய் I. M. S. 'விவாகமும் அதனால் ஜனங்களுக்குண்டாகும் சுகமும்' என்ற விஷயத்தைப்பற்றி, மதுரையில் செய்ததோர் உபந்நியாசத்தில் பின்வருமாறு பேசினார் : விவாகத்திற்கு முந்தி, விவாகஞ் செய்து கொள்ளுகிறவர்கள் ஆரோக்கிய த்ருடகாத்திராயிருக்க வேண்டும். ரக்த சம்பந்த முள்ளவர்களின் பெண்களை விவாகஞ் செய்து கொள்ளக் கூடாது. விவாக காலத்தில் அதிக செலவு செய்யக்கூடாது. ஜனங்கள் விவாக காலத்தில் அவர்களுடைய சொத்துக்களின் சரிபாதியைச் செலவு செய்து விடுகிறார்கள். சென்னை ராஜதானியில் வரதக்ஷிணை வாங்கும் வழக்கம் இருந்து வருகிறது. விவாகஞ் செய்து கொள்ளுவது கடமை யென்று எண்ணாமல், பணத்திற்காக விவாகஞ் செய்து கொள்ளுகிறவன், தேசாபிமானி யாக மாட்டான். பெண்களைக் கொண்டு பணம் சம்பாதிப்பதற்காக விவாகஞ் செய்து கொடுக்கக்கூடாது. அவர்களுக்கு விவாகஞ் செய்து முடிப்பது கடமை யென்று நினைக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய பெண்களைக் கூட்டில் அடைப்பதுபோல அடைத்து விட்டால் அவர்கள் உங்களுக்குத் தகுந்த மனைவிகளாக எப்படி ஆவார்கள் ?

***

திருவாங்கூர் காடுகளிலிருந்து 112 மாதிரி மரத்துண்டுகள் டார்வார் நகரத்தில் நெருப்புப் பெட்டி நிபுணர் மிஸ்டர் ஆர். வி. ஆலக்வாடி என்பவருக்கு அனுப்பப்பட்டன. அவைகளைப் பரிசோதித்து எம்மாதிரித் துண்டுகள் தீப்பெட்டி செய்யத்தகுந்தவை, எவை தீக்குச்சிகள் செய்யத் தகுந்தவை, எவை தீப்பெட்டிகளும் தீக்குச்சிகளும் செயத்தகுந்தவை, எவை இரண்டிற்கும் உபயோகப்படாதவை என்பதை நிர்ணயித்து தமது அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறார். மரத் துண்டுகள் மிருதுவாய் வேலைக்கு உதவ எத்தனை மணிநேரம் நீரில் கொதிக்க வைக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். விஸ்வகர்மன் பத்திரிகையில் நெல்குத்து யந்திரத்தை எங்கே லாபம் வரும்படியாக வைக்கலாம் என்று விஷயதானரில் ஒருவர் எழுதினதாக என் ஞாபகத்திற்கு வருகிறபடியால் இத்தகைய சமாசாரத்தைப் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தால் அவரும் அவரைப் போன்ற கனவான்களும் சேர்ந்து, தீப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தப் பிரயத்தனப் படுவார்கள் என்று கருதி இதைத் தெரிவித்தனன். கொச்சின் தீப்பெட்டிச் சாலைக்கு திருவாங்கூர் காடுகளிலிருந்து தான் மரம் அனுப்பப்படுகிறது. இதைப்பற்றி எவ்வித விவரம் வேண்டினும் வரைகுதும்—என்று 'சத்தியவசனன்' தெரிவிக்கிறார். இவ்விவரங்கள் நமது பத்திரிகை வாயிலாக வெளியாவதும், தீப்பெட்டித் தொழிற்சாலையை ஸ்தாபிக்க நம்மவர்கள் முயல்வதும் அவஸ்யமென்பதை யாரேமறுப்பர் ?



## விஸ்வகர்மன்

ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியார், கோயமுத்தூர்.

சுருதி ஹிதிகாச புராணங்களிலும் சிற்பங்களிலும் காணும் விஸ்வகர்மன், த்வஷ்டா, சுதன்வன், ரிபுக்கள், ரதகாரர்கள், சூதர்கள் என்னும் நாமங்களைப்பற்றிய பொருள்களை முதன்மையாக ஆராய்ந்து நிச்சயித்தல் அவஸ்யமா யிருக்கிறது. அவைகளைப்பற்றி சுருதியாதிகளில் கூறப்படும் சங்கதிகளில் நான் குறித்த சந்தேகங்களையும் ப்ரஸ்னைகளையும் எழுதுகிறேன். பண்டிதர்கள் மிக்க சாந்தியோடு ஆலோசித்து முடிவு கூறுவார்களாக.

விஸ்வகர்மன்என்னும் பெயரைப்பற்றிய சந்தேகங்கள்.—ரிக்வேதம் 10-வது மண்டலம் 80-81-வது சூக்தங்களில்தான் விஸ்வகர்மன் என்னும் பெயர் ஜகத்கர்த்தாவும் தேவ தேவனுமாகிய பரம் பொருளின் பெயராகக் காணப்படுகின்றது. ஷை சூக்தங்களில் காணும் விஸ்வகர்மனை தேவர்களுக்குசில்பி என்று வேதங்களிலாவது சுருதிகள் என்னும் ப்ராஹ்மணங்கள் உபநிஷத்துக்கள் சில்பசூத்திரங்களில் கூறப்படவில்லை. க்ருஷ்ண சுக்லயஜுர் அதர்வண வேதங்களிலும் அவைகளுக்குச் சம்பந்தமான ப்ராஹ்மணாதி சுருதிகளிலும் ஷை ரிக் வேதத்தில் 10-வது மண்டலத்திய 80-81-வது சூக்தங்களில் காணும் விஸ்வகர்மனைப் பற்றிக் காணலாம். க்ருஷ்ண சுக்லயஜுர் வேதங்களில் ஜகத்கர்த்தா விஸ்வகர்மன் என்பவரைப் பற்றியும் விஸ்வகர்மன் என்னும் ஒரு ரிஷியைப் பற்றியும் ஆக இரண்டு விஸ்வகர்மன் என்னும் விஷயங்களைக் காணலாம்.

புருஷ சூக்தத்திய விஸ்வகர்மன் ரிக் வேதத்திய விஸ்வகர்மனேயன்றி புவன புத்திரர் விஸ்வகர்மனும் பிரபாவசுவின் புத்திரர் விஸ்வகர்மனு மன்றும். ரிக்காதி வேதங்களில்-இந்திரன்-ஆதித்யன் அக்னி சவிதா முதலிய தேவர்களுக்கும், விஸ்வகர்மன், என்று உபசாரமாய்ப் பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தாலும், ஷை ரிக்வேதம்-10வதும் 80-81வது சூக்தங்களில் சொல்லிய யோக்யதைகளையெல்லாம். இந்திரன் முதலானவர்களுக்குச்சொல்லப்படவில்லை.ஆகையால் ரிக்வேதத்திய விஸ்வகர்மன் ஜகதீசன் தேவதேவன் சிவன் விஷ்ணு ப்ரஹ்மாமுதலான மூர்த்திகளுக்கெல்லாம் மூர்த்தியாவார் என்பது துணிவாகக் கவனிக்கவேண்டியது அவசியம். ஸ்ருதிப்ரோக்த விஸ்வகர்மன் என்பவர்களில் ரிக்வேதத்திய விஸ்வகர்மனே மற்ற விஸ்வகர்மன் என்பவர்களுக்கெல்லாம் முதன்மையான பரம்பொருள் பரமத்மாவென அறியவேண்டும். ஷை வேதங்களிலும் த்வஷ்டா என்னும் தேவதையின் பெயரும் பலஇடங்களில் சிறப்பாகக்காணலாம். ஆனால் ஷை ஸ்ருதிகளில் த்வஷ்டாவை ரிக்வேதத்திய விஸ்வகர்மன் முகத்தில் ஜனித்தவர் என்றாவது மானசீகபுத்திரர் என்றாவது த்வஷ்டா என்னும்பதம் ஷை விஸ்வகர்மனாகிய பரம்பொருளுக்கு பரியாயமாகவாவது சொல்லப்படவில்லை என்பதும் நிச்சயமாய்க்காணலாம்.

ரிக்காதிவேதங்களில் த்வஷ்டாவேறு விஸ்வகர்மர் வேறு என்றே விகற்பித்து வற்புறுத்தி விளக்கியிருப்பது உண்மையாகையால் புராணங்களிலும் கோசங்களிலும் காணுகிறபடிக்கு விஸ்வகர்மன் என்றால் த்வஷ்டா, த்வஷ்டாவென்றால் விஸ்வகர்மன் என்று பரியாய சப்தநியாயங்களால் இரண்டும் ஒன்றென்று வற்புறுத்துவது ஸ்ருதி சம்மதமாயில்லை. ஷை விஸ்வகர்மனும் த்வஷ்டாவும் அங்கீரசு கோத்திரஸ்தர்களுமல்ல.

ரிக்வேதத்திய 10-வது மண்டலம் 80-81வது சூக்தங்களை உலகிற் களித்தவர் ரிஷி விஸ்வகர்மனவர். இவர் தான் புவனபுத்திரர். விஸ்வகர்மன். இவர் பிதாவாகிய புவநர் அபதியின் குமாரர், அபதி என்பவர் அங்கீரசுவின் குமாரர்; அங்கீரசு சப்தரிஷிகளில் பூர்வகாலங்களில் ப்ருகுரிஷிக்கு சமமான தெய்வீகப் பிறப்பையுடையரிஷியாவர். இந்த புவன புத்திரராகிய விஸ்வகர்மரிஷியானவர் கஸ்யபரிஷியைக் கொண்டு ஐதரேய

ப்ராஹ்மணத்திலும் சதபதப்ராஹமணத்திலும் பார தத்திலும் மஹாபிஷேகமென்னும் யாகங்களிலெல்லாம் தலைமையான யாகத்தை முடித்த மஹான்களில் ஒருவ ரென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அங்கீரசகோத்திரஸ்தராகிய விஶ்வகர்மன் இவரே யன்றி முன் சொல்லிய ஜகத்கர்த்தாவாகிய விஶ்வகர் மன் அன்றென்பது ஸ்ருதிசம்மதம். இந்த புவனபுத்திரர் விஶ்வகர்மன் என்னும் ரிஷியானவர் ப்ரஹமகர்மபாரா கவேயிருந்து சிருஷ்டிவல்லபத்தையும் வசித்து அர்ஜு னனுக்கு ஹநுமத்வஜத்தைக் கொடுத்தாரே ஒழிய, இவர் சில்பகர்மத்தையே செய்து மஹிரிஷியாக விளங் கினர் என்பதற்கு சுருதிகளிலாவது ஹிதிகாசத்திலா வது புராணங்களிலாவது ஆதாரம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது வீணகவே முடியும்.

ரிக்காதி வேதங்களிலும் ஹிதிகாச புராணாதிகளிலும் காணும் த்வஷ்டா என்பவர் ஷை புவனபுத்திரர் விஶ்வ கர்ம ரிஷியினுடைய குமாரர் அன்று என்பதும் ஶ்ருதி ப்ரோக்தம். நிகண்டு கோசங்களில் காணும் விஶ்வகர் மன் என்னும் பரியாய நியாயத்தால் புவனபுத்திரர் விஶ்வகர்மனை தேவசில்பி விஶ்வகர்மன் மனுவாதிக ளின் பிரஜாபதி என்று நிரூபிக்கமுடியாதென்பதற்கு ஶ்ருதியாதிகளே பலமான சாக்ஷியங்களாயிருக்கும். ரிக் வேதத்திலும் இதர ஶ்ருதிகளிலும் ரிக்வேதம் 10-வது மண்டலம் 80-81-வது சூக்தங்களில் ஸ்துதிக்கப்பட்ட விஶ்வகர்மன் 1-(ஒருவர்) ஷை இரண்டு சூக்தங்களுக்கு ரிஷியாகிய புவனபுத்திரர் விஶ்வகர்மன் (2) ஆக இ ரண்டு விஶ்வகர்மன் என்பவர்களைப் பற்றித்தான்ஶ்ருதி கள் ப்ரதிபாதிக்கின்றனவேயன்றி ப்ரபாவசுவின்குமார ராகிய தேவசில்பி விஶ்வகர்மனைப் பற்றியாவது ஐந்து முக விஶ்வகர்மனைப் பற்றியாவது சிற்பங்களில் காணும் த்யான ஸ்லோகங்களில் சொல்லும் "பஞ்சவக்த்ரம் ஜடாபாரம்" என்னும் விஸ்வகர்மனைப்பற்றியாவது ரிக் காதி வேதஶ்ருதிகளில் சிறிதும் சொல்லப்படவில்லை. ஆகையால் ஹிதிகாசம் புராணம் சில்பத்யான ஸ்லோ கங்களில் சொல்லப்பட்ட விஶ்வகர்மன் என்பவர்களை ஶ்ருதிகளில் சொல்லப்பட்ட ஷை இரண்டு விஶ்வகர் மன் என்பவர்களாக ரூபிக்க ஶ்ருதிகள் சம்மதிக்கவே மாட்டா என்பதை வற்புறுத்துகிறேன். அங்கீரசு வழி வந்த புவனருடைய புத்திரராகிய ரிஷி விஶ்வகர்மன் விஶ்வகர்ம சூகதங்களின் கர்த்தா இவரைப்பற்றி ஐத ரேய ப்ராஹ்மணம்-அஷ்டமபஞ்சிகா 4-வது அத்யாயம் 21-வது ப்ராஹ்மணம்–

ஏதேநஹவா ஐந்தரேண மஹாபிஷேகேண கஶ்யபோ விஶ்வகர்மாணம் பௌவம் பிஷிஷேச. தஸ்மா उदु விஶ்வகர்மா भैवान। भू மாஹஜ் गा வித யு ताஹரம்தி, நமாமர்த்ய: கஶ்தூந ता து மர்ஹதி விஶ்வகர்மன் मौ வநமாம் ददृ ஸிவு; நிமம்க்ஷயே. थ ஹம்ஸலிலையம ये மோ ष ஸ்த்வஷ கஶ்யபா யாஸ ஸங்गरा இத்யேதேந.

"With this inauguration ceremony *Kasyapa* inaugurated *Visvakarma*, the son of *Bhuvana*. Thence *Visvakarma* went conquering everywhere over the whole earth up to its ends and sacrificed the sacrificial horse.

They say that the earth sang to *Visvakarma* the following stanza : 'No mortal is allowed to give me away (as donation). '*Visvakarma*, thou has given me, (therefore) I shall plunge into the midst of the sea. In vain was thy promise made to Kasyapa."

"இந்த ஐந்தரம் என்னும் மஹாபிஷேகத்தை கஶ்ய பர் பௌவன புத்திரர் விஶ்வகர்மனுக்கு முடித்தார். அதனல் விஶ்வகர்மன் பூமி முழுவதையும் ஜயித்து யாக அஸ்வத்தை மேதம் செய்தார்.

பூமியானது விஶ்வகர்மனைப் பார்த்து அடியில் வருமாறு சொல்லியதாக அவர்கள் (முன்னோர்களாகிய ரிஷிகள்) சொல்லுகிறார்கள். அதாவது "ஓ விஶ்வ கர்மனே! என்னைத் தக்ஷிணையாகக் கொடுப்பதற்கு எந்த மனிதனுக்கும் (புருஷனுக்கும்) ஸ்வதந்திரமில்லை, நீ என்னைக் (கஶ்ய பருக்கு) கொடுத்தபடியால் நான் சமுத்திர மத்தியில் அழிந்து விடுகிறேன். நீ கஶ்யப ருககுத் தத்தம் செய்தது (தானமாகக் கொடுத்ததாகச் சொல்லிய வாக்குத் தத்தம்) வீணுய்ப் போயிற்று" என்று பூமி சொல்லியதாம். ஷை ப்ராஹ்மணத்தினல் புவன புத்திரர் விஶ்வகர்மன் என்பவர் க்ஷத்ரிய தர் மத்தைச் செய்திருப்பதாகவும் திக்விஜயம் செய்த தாகவும் விளங்குகிறது. ப்ராஹ்மணர்களுக்கு க்ஷத்ரிய தர்மம் சித்திக்காது என்பதற்கு ஷை ப்ராஹ்மணம் உதாரணமாக எடுத்துக் காட்டப்படும் என்பதினல்



புவன புத்திரர் விஶ்வகர்மன் அங்கீரசு வழி வந்த ப்ராஹ்மணர் இந்திர பதவிக்குச் சமமாகிய மஹாபி ஷேகத்தைச் செய்து முடித்தவர் என்று முடித்தும் அவரும் அவர் சந்ததிகளும் ராஜ வம்சமாயிருந்து அதி காரிகளாகவில்லை என்றும் நிச்சயிக்கப்படும்.

மாஹாபாரதம் ஆதிபர்வம் சம்பவ பர்வத்தில் ப்ரம்மா வின் மானசீக புத்திரரில் ஒருவராகிய தர்மப்பிரஜா பதிக்கும் தக்ஷப்பிரஜாபதியின் குமாரத்திகளில் ஒருத்தி யாகிய வசு என்பவளுக்கும் பிறந்த 8-வது வசுவாகிய பிரபாவசுவுக்கும் அங்கீரசுவின் குமாரத்தி யோகசக் திக்கும் பிறந்தவர் ஒரு விஸ்வகர்மன் உண்டல்லவா? இந்தப் பிரபாவசுவின் குமாரர்தான் தேவர்களுக்கு சில்பியென்றும் ஸகஸ்ர சில்பங்களுக்கு கர்த்தா வென் றும் மஹாபாரதத்திலும் எல்லாப்புராண காவ்ய நாட கங்களிலும் காணலாம்.

இவர் தாயார் யோகசக்தி என்பவள் அங்கீரசுவின் மகளாயிருப்பதால் இவருக்குத் தாயின் கோத்திரமாகிய அங்கீரசுகோத்திரம் எப்படி ஏற்படுமோ அறிகிலேன். ஆரிய ப்ராஹ்மண சம்ப்ரதாயங்களில் தகப்பன் கோத் திரம் ஏற்படும் என்பது சுருதி ஸ்ம்ருதி சம்மதம். மேலே சொல்லிய புவனபுத்திரர் விஶ்வகர்மனுக்கு அங்கீரசு கோத்திர மேற்படுமே ஒழிய பிரபாவசுவின் குமார ருக்கு உண்டென்று சொல்வது சிறிதும் பொருந்தாது. ஆரியர்கள் மக்கத்தாயத்தாரே ஒழிய மருமக்கத்தாயத் தார்களன்று. பிரபாவசுவின் குமாரர் விஶ்வகர்மனுக்கு தர்மப்ரஜாபதியின் கோத்திரமேயன்றி அங்கீரசு கோத்திரம் எப்படி சித்திக்குமோ தெரியவில்லை. மரு மக்கத்தாயம் ஆர்யர்களுக்கு ஶ்ருதி விரோத வழக்க மல்லவா? அங்கீரசு கோத்திரஸ்தர்கள் மருமக்கத்தா யத்தாரென்றும் மக்கத்தாயத்தார் அல்லவென்றும் ஒத் துக்கொள்ள இடமுண்டா?

பிரபாவசுவின் குமாரரைப்பற்றி ஸ்ருதிகளில் காண படவில்லை காணவே முடியாது என்று நிச்சயித்திருக் கிறேன். இவர் ஹிதிகாச புராணாதிகளில் கூறப்படும் விஶ்வகர்மனேயன்றி ஶ்ருதிப்ரோக்த விஸ்வகர்ம சூக் தத்திய விஶ்வகர்மனுமன்று, புவனபுத்திராகிய மஹா பிஷேகத்தைச் செய்த விஸ்வகர்மனுமன்று. விஸ்வகர்ம சூக்த விஸ்வகர்மனுக்கு ஸகஸ்ர சிரம் ஸகஸ்ராக்ஷங்கள் ஸகஸ்ர பாதம் என்பது வேத சம்மதமல்லவா?

புவன புத்திரர் விஸ்வகர்மனுக்கும் ப்ரபாவசு விஸ்வ கர்மனுக்கும் ஏகமுகமேயன்றி சத்யோ ஜாதாதி பஞ்ச வக்த்ரங்களில்லை யல்லவா? நம்மவர்களின் மூல புரு ஷர்களென்னும் மனுவாதிகள் அல்லது சானகாதிகள் பஞ்சவக்த்ர விஸ்வகர்மனிடமாய்த் தோன்றியவர்களெ ன்று சொல்லிக்கொண்டு, பிரபாவசுவின் குமாரரையும் புவன புத்திரரையும் ஸகஸ்ரசிர விஸ்வகர்மனையும் எல் லாம் ஒன்றே, எல்லாம் சில்பிகளே, எல்லாம் அங்கீரசு ரிஷிஜன்யர்களே என்றும் சொல்லிக்கொள்வது நியாய மாகத் தோற்றவில்லை. பஞ்சமுக விஸ்வகர்மனைப்பற்றி சுருதிகளிலும் ஹிதிகாசங்களிலும் முக்ய புராணங்களி லும் காவ்ய நாடகங்களிலும் சில தாம்பிர சாசனங்களி லும் ஆதாரங் கிடைக்குமென்று எண்ணுவது வீணய் முடியும்.

நாகரகாண்டாதி நம் ஜாதிபுராணக் கோட்பாடுகளில் வற்புறுத்தப்பட்ட 5-முக விஶ்வகர்மனே ஜகத்கர்த்தா அவரிடமே மற்ற 5-முக சிவன் ப்ரஹ்மா விஷ்ணு முதலானவர்கள் ஜனித்தார்களென்பது நம்மவர் கொள் கையாகில், அது பொருந்தாது, சுருதி விரோதமாகு மாகையாலென்க. ஸ்ருதி ஹிதிகாச புராணங்களில் ஸகஸ்ரசிர விஸ்வகர்மனிடமாக விராட் புருஷனும் இவ ரிடமாக மற்ற பிரஹ்மாதி தேவதைகளும் ஜனித்தார்க ளென்றே காணலாம். இதுவே ஆரிய திராவிடதே சத்து சர்வஜனங்களும் அங்கீகரித்துக்கொண்ட பத்ததி யாகும்.

சில்பிகள் குடும்பங்களிலும் நம்மவர்களில் சிலரும் 'பஞ்சவக்த்ரம் ஜடாபாரம' என்னும த்யானஶ்லோகங் களில் பஞ்சமுக விஶ்வகர்மனைபபற்றி ப்ரஸ்தாபித்து வருகிறோமல்லவா? இந்த த்யான ஸ்லோக விஸவகர்ம னுக்கும் நாகரகண்டத்தில் காணும் பஞ்சமுக விஸ்வகர் மனுக்கும் விசேஷசம்பந்த மிருக்குமென்பதே நம்மவர் ... சம்பிரதாயம். சில்பிகளிடமன் ... ஆதாரமாகப்பேசினல் அவைகளுக்கு ஸ்ருதி ஹிதிகாசமுதலியவற்றில் ஆதாரம் காட்டாவிட்டால் த்யான ஸ்லோகங்கள் நவீன கற்பனையாக பாவிக்கப் படும். நாகரகாண்டம் அல்லது சில்பிகளின் த்யானஸ் லோக விஶ்வகர்மனே ஸ்ருதிப்ரோக்தம், விப்ராதிகள் ஸ்ருதிகளில் எடுத்துவிட்டு வேறு வேறு விஸ்வகர்மன் என பவர்களை நுழைத்துவிட்டார்கள் என்று நாம் வா தித்தால் நகைப்பிற்கு இடமாய்விடும்.

ஸ்வயம்பு மனுவின் புத்திரர் பிரியவிரதனுக்கு ப

## சிலா செதுக்குவேலை

"சத்தியவசனன்" எழுதியது

இந்தியர்கள் ஆலய வழிபாட்டில் சிரத்தையுள்ளவர்கள். இந்தியா தெய்வபக்திக்கு ஆதிஸ்தலமாகவுள்ளது. கீழ்நாடுகள்தான் மத ஸ்தாபனத்திற்கு பேர்போனவை. கௌதமர், மகம்மது, கிருத்து முதலிய மதஸ்தாபகர்கள் கீழ்நாடாகிய ஆசியாகண்டத்தில் தான் தோன்றி நிவாசமாயிருந்தவர்கள். சங்கரர், இராமானுஜர், மத்வாச்சாரிகள் இந்தியாவில் இந்து மதஸ்தாபகர்கள். எத்தேசங்களில் மதஸ்தாபனம் நடந்தேறுகிறதோ அத்தேசங்களில் ஆலய நிர்மாணம், விக்ரஹ நிர்மாணம் இன்றியமையாதிருக்கும். கடவுளை ரூபபேதங்களால் தொழக்கூடாது, ஆவியில் ஏகப் பரம்பொருளாய்த் தொழவேண்டும் என்னும் மதாச்சாரமுடையோரும், மாதா கோயில்களையும் மசூதிகளையும் சிலா செதுக்குவேலை செறிந்துள்ளவைகளாகத் தான் செய்துவைத்திருக்கிறார்கள். விக்ரகாராதனையை பக்தி என்னும் ஏணியில் கீழ்ப்படியாகக்கொண்டு ஒழுகும் இந்தியர்கள் கோயில் நிர்மாணங்களிலேயும் விக்ரக நிர்மாணங்களிலேயும் சித்திரச் செதுக்குவேலையைச் செறித்துவைக்கும்படி சிலாசிற்பியரை ஆதரித்துவந்தார்கள். ஆகையினால் சிற்பியர்கள் சிறந்து விளங்கினார்கள். இத்தகைச் சிறப்புவாய்ந்த சிலா செதுக்கு வினை சிறிது விவரித்தெழுதினால் பயனுள்ளதாக இருக்கும்.

சிலா செதுக்குவேலை நிகழும் ப்ரதேசம்:—சிலா செதுக்குவேலைக்கு சிலைகள் வேண்டியிருத்தலின் அவ்வேலை சிலைகள் அகப்படக்கூடிய ப்ரதேசங்களில் தான் செயத்தக்கது. சிலைகள் அகப்படுவதும் அகப்படாததும் பூசார நிலைமைகளை யடுத்தது. சிலா சித்திரச் செதுக்குவேலை நிகழும் நாடுகளில் ஜனசமூகத்தார் அமைதியை யுடையவர்களாகவும் அதிக நாகரீகத்தைப் பொருந்தியவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே, நாகரீகத்தின் உயர்வு சிற்பியர்களால் தான் தேயங்களில் உண்டாகிறது. பூர்வத்தில் இந்தியாவில் எங்கும் காடு பாந்து இருந்தமையின், சிலை அகப்படாத் தேசங்களுக்கு மலைநாட்டிலிருந்து சிலைகளைக் கொண்டு சேர்ப்பது கஷ்டமாயிருந்தது. அத்தேசங்களில் சிற்பியர்கள் சிலைக்குப் பதிலாக மரத்தில் சித்திரச் செதுக்குவேலையைச் செய்தார்கள். கருங்கல்லோ அல்லது செந்நிறக்கல்லோ அகப்படக்கூடிய இடங்களில் சிற்பியர்கள், மரத்தில் செய்யும் செதுக்குவேலையைச் சிலையில் செய்துவந்தார்கள்.

ஐக்கிய மாகாணங்களிலேயும் பஞ்சாப்பிலேயும் அகப்படும் செவ்வியகல் வளைவான உத்திரங்கள் செய்வதற்கும் திராவிகளுக்கு உபயோகமாகும் பலகைகளாகச் செய்வதற்கும் சௌகரியமானது. இப்பிராந்தியங்களில் செய்யப்படும் சிலா செதுக்குவேலை தாரு செதுக்கு வேலையின் மாதிரியைப் பின்பற்றியது போல் தான் இருக்கிறது. பஞ்சாப்பிலும் இராஜபுதனத்திலும் மணற்கல்லில் செய்யப்படும் செதுக்குவேலை மரவினைஞர் மாதிரியைப் பின்பற்றியதாயிருக்கிறது. அழுத்தமான கருங்கல்லில் வேலைக்காரர்கள் வேலை செய்யும் பிராந்தியங்களில்தான் கருங்கல்லில் வேலைசெய்யும் மாதிரியைக் கைக்கொண்டு வேலைசெய்கிறார்கள். மரவேலையின் பிரதிகளாக வுள்ள பூர்வீக புத்த கல் கட்டிடங்கள் இந்தியக்கட்டிடக்காரர்களால் பூர்வத்தில் செய்த கட்டிடங்களாகக் [illegible]. அக்கட்டிடங்கள் எல்லாம் மரவினைஞரின் ஆயுதங்களால் வினையியற்றக்கூடிய கற்கள் ஏராளமாய் அகப்படக்கூடிய பிரதேசத்தில் வந்த சிற்பியர்கள் அக்கல்லையே சௌகரியமான வினைப்பொருளாக தேர்ந்து எடுத்துக்கொண்டார்கள் என்று தெரிவிக்கிறது.

தற்காலத்தில் கல் செதுக்கு வினைஞருக்கும் மர செதுக்கு வினைஞருக்கும் ஜாதிபேதமில்லை. ஒரே

ஹவிஷ்மதி என்பவளையும், விவஸ்வான் என்னும் ஆதித்யருக்கு சம்ஞாதேவியையும், சூரபத்மனுக்கு பத்மகாமளையையும், குபேரனுக்கு கௌந்தி என்பவளையும் மஹிஷிகளாக அளித்த விஸ்வகர்மன் என்பவர் அநேகமாய் பிரபாவசுவின் குமாரர் விஸ்வகர்மன் என்பதே மஹாபாரதம், பாகவதம், விஷ்ணுபுராணம், ஸ்காந்தம் முதலிய க்ரந்தங்களின் வற்புறுத்தல். ஷை ஸ்திரீகளின் [illegible] இதிகாச புராணங்களில் [illegible]ன்டென்று சொல்லப்படவில்லை. [illegible] மாவின் வழிவந்த தர்மப்ரஜாபதியின் குமாரர் ப்ரபாவசுவிற்குப் பிறந்த ஏகமுக விஸ்வகர்மனே ஷை ஸ்திரீகளின் பிதாவாவர்.

காசிகாண்டத்தில் விஸ்வகர்மேச லிங்கமாகிய ஒருவர் த்வஷ்டாவின் புத்திரர் என்று சொல்லப்பட்ட விஸ்வகர்மன் என்பவரை மேலே சொல்லிய 4-5 விஸ்வகர்மன்களுக்கு வேறானவர் அல்லவா? இன்னும் 3-4 ப்ரத்யேக விஸ்வகர்மன் என்பவர்களைப்பற்றி கி. மு. 500-க்குப் பிற்பட்ட சரித்திரங்களிலும், க்ரந்தங்களிலும் சாசனங்களிலும் காணலாம். இவர்களைப்பற்றியும் யோசிக்கவேண்டியது அவசியமாகும்.



மனிதன் மரசெதுக்கு வேலையையும் கல் செதுக்கு வேலையையும் செய்கிறான். இரண்டு வேலையிலேயும் உபயோகப்படுத்தும் ஆயுதமும் வினையின்மாதிரியும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஒரிஸ்ஸாவில் கட்டாக்கு புரி என்னும் ஊர்களில் கல்கட்டிடவேலையும் கல்செதுக்கு வேலையும் அதிக உயரிய நிலையை அடைந்திருக்கிறது. ஆங்குள்ள நூற்றுக்கணக்கான ஆலயங்களிலேயும், மடங்களிலேயும் செறிந்துவைத்துள்ள சித்திரச் செதுக்குவேலையை சிலாக்கியமாகக்கொண்டாடுகிறார்கள். ஆங்குள்ள சிற்பியர்க்கு அவை உயர்வைத் தருகின்றன. இத்தகைய உயரிய கல்செதுக்குவேலை தற்காலத்தில் நன்றாய் ஆதரிக்கப்படவில்லை. கவர்ன்மெண்டார் இவ்வினையை ஆதரிக்காவிட்டால், இன்னும் சிறிதுகாலத்திற்கெல்லாம் சிதைந்துபோகும். இந்த அநாதரணைக்காலத்திலும்கூட சில சிலாசெதுக்குவேலைக்காரர்கள் தங்கள் மூதாதையர்களின் வேலைநுட்பத்திலும் சாமர்த்தியத்திலும் குறைந்தவர்களாயில்லை.

பூர்வீககட்டிட ஜீர்ணோத்தாரண பாதுகாப்பு இலாகா உத்தியோகஸ்தர்களால் இவ்வேலைக்காரர்கள் பழைய கட்டிடங்களைப் புதுப்பிக்க அமர்த்தப்பட்டார்கள். இவர்கள் மனிதமிருகங்களினுடைய உருக்களைப்புதுப்பிக்கும்போது பழையமாதிரிகளில் செறித்துள்ள சித்திரச் செதுக்குவேலையின் சாமர்த்தியத்தைக் காட்டவில்லை. மற்றவிஷயங்களில் பூர்வீக வேலைக்குச் சமானமாகவே வினையை இயற்றுகின்றனர். ஜீர்ணமாயுள்ள பூர்வீக கட்டிடங்களைப் புதுப்பிக்கும் தொழிலில் சிற்பியர்களை அமர்த்தினாலும்கூட சிற்பியர் கைத்தொழில் சிதைவையடையாதிருக்கும் கட்டாக்கு என்னும் ஊருக்கு அருகில் டோம்பரா என்னுமிடத்தில் அகப்படும். (Soap-Stone) சோப்புக்கல்லைக் கொண்டு செதுக்குவேலை செய்து ஜீவிக்கிறார்கள். இந்தக்கல்லில் வேலை செய்வது சுலபம். நயப்பானது. வேலைக்காரர்கள் அடையும் சொற்ப ஊதியத்திற்குத் தகுந்தமாதிரியாயும் இருக்கிறது.

சிலவேளைகளில் பால்சோர் என்னும் ஊருக்கு அருகில் நீலகிரிமலைகளில் அகப்படும் (Potstone) சட்டிக்கல்லிலேயும் வேலைசெய்கிறார்கள். இந்தக் கல்லில் வேலைசெய்தல் கடினமானது. சோப்கல் செதுக்கு சாமான்கள் கருப்புவர்ணம் கொடுக்கப் படுகின்றன. அப்போது வேலையின் நாணயம் மறைந்துபோகிறது.

சோப்புக்கல்லில் கிருஷ்ணனோடு கோபிகாஸ்திரீகள் கூடிய பிம்பங்களைச் செறித்துவைக்கிறார்கள். அஃது இரண்டு மூன்றுநாள் வேலையாகிறது. வேலைப்பாடாகவும் சத்ரூபமாகவும் இருக்கின்றது. சேர்க்கையும் உயர்வுதாழ்வின் கலப்பும் ரூபங்களை விளக்குவதில் ஆச்சரியகரமாயிருக்கிறது. புரி அல்லது ஜகன்னாதத்தில் சித்திரக்கல் செதுக்குவேலையுள்ள கல்கதவுகள் இருக்கின்றன. அவைகள் ஐரோப்பாவில் மத்தியகாலத்தில் (Gothic) காதிக் மாதிரியில் செய்த அத்தியக்ஷகர் ஆலயத்திற்குச் சமானமாக இருக்கிறது. இப்போது சிலா செதுக்கு வேலையை வேண்டுவார்களே இல்லை. வேலைத்தரத்தில் குறைவான இற்றலிதேசத்து சலவைக்கல் பொம்மைகளுக்கு அதிக கிராக்கி எப்போதும் கிடைக்கிறது. அவைகளை விலை அதிகம் கொடுத்து வாங்குகிறார்கள். வேலைப்பாடான இந்தியர் சாமான்களுக்கு கிராக்கியும் கிடையாது. ஊதியமும் குறைவு. இற்றலி பிம்பங்களுக்கு கொடுக்கிறபணத்தை ஒரிஸ்ஸா வேலைக்காரனுக்கு கொடுத்தால் ஒரிஸ்ஸாவேலைக்காரன் எவ்வளவோ பணக்காரனாய் விளங்குவான்.

இற்றலிதேசத்து சாதாரணதோட்டத்தில் வைக்கும் பிரதிமைக்கு கொடுக்கும் பணத்தில் குறைச்சலான பணத்திற்கு (1200-ரூபாய்) ஒரு நேர்த்தியான சிலா சித்திரச் செதுக்குவேலையமைத்த வாயிலை அமைத்துக்கொள்ளலாம். 50-ரூபாய் கொடுத்தால் இந்தியர்கள் எவ்வளவோ வேலைத்திறத்தைக்காட்டுவார்கள். இத்தகைய உயர்வான வேலைக்காரர்களுக்கு சராசரிகூலி 4-அணு முதல் 8-அணுவரையில் வித்தியாசப்பட்டிருக்கிறது. புரியில் ஓர்வித சேர்மானகல்லில் சித்திரவேலை ரூபங்களைச் சிற்றுளியைக்கொண்டு மொத்தாகாரமாய் ஏற்படுத்திக்கொண்டு பிறகு சுண்ணும்புப்பூச்சினால் நேர்த்தியான வேலைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

(தொடரும்)

---

குண்டோதரன்.—வட இந்தியாவிலுள்ள பீஹாரில் ராமலால் வர்மாவின் ஜேஷ்ட சகோதரனின் சிரார்த்த காரியம் நடந்தேறிற்று. 500-பிராமணர்களுக்குப் போஜனம் செய்விக்கப்பட்டது. 200-பக்கிரிகளுக்கும் ஆகாரம்கொடுக்கப்பட்டது. இவர்களுள் குண்டோதரன் ஒருவன் இருந்தான். அவன் சுமார் 16-பவுண்டு நிறையுள்ள 18-பூரிகளைத் தின்றான். பூரிகள் வயிற்றில் பூர்த்தியான பிற்பாடு 4-பவுண்டு பருப்பும் சருக்கரையு முண்டான்.

## சமஸ்கிருத வித்யா சகாயம்

'ஸ்தபதி' யென்று கையெழுத்திட்ட நிருபரொருவர் பின்வருமாறெழுதுகிறார்.—

விஸ்வகர்மன் அக்டோபர்மாதச் சஞ்சிகையின் 5-வது பக்கத்தில் ஷை தலைப்பின்கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தைக் கண்டு நான் அடைந்த ஆனந்தத்திற்களவில்லை. என்போன்ற சிற்பிகளும் மற்ற சாஸ்திரிகளும் இதுபோலவே சந்தோஷமுடையவர்களாவார்களென்பதில் எள்ளளவுஞ் சந்தேகம் இல்லை. சமஸ்கிருத வித்யா சகாயஞ் செய்ய நமது சபையார் முற்பட்டிருப்பது மிகவுஞ் சிலாக்கிய மென்பதை எவரே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்! சமஸ்கிருதக் கல்வியினாலல்லவோ நமது குலம் ஈடேறவேண்டியதாயிருக்கிறது? சமஸ்கிருதக்கல்வியில் நமது ஜனங்கள் தேர்ச்சிபெற்றிருந்தகாலமட்டும் இவர்களுக்கு மதிப்பு ஏற்பட்டிருந்தது. அதை அசட்டை செய்யச்செய்ய நம்ம ஜாதியாரை மற்றவர் அசட்டை செய்யலானார்கள்.

முற்காலத்தில் நம்மவர்களுக்குள் சமஸ்கிருதபாஷை தெரியாத குடும்பத்தாரே கிடையாதென்று அறிந்தோரால்சொல்லப்படுகிறது. இக்காலத்திலோ அதையறிந்த குடும்பத்தாரைப் பார்ப்பது மிகவுந் துல்லபமாயிருக்கிறது. ஆதலால், அக்காலத்தில் நம்மவர்கள் பெருமைபடைத்திருந்ததும் இக்காலத்தில் சிறுமையடைந்திருப்பதும் நியாயத்திற்கு ஒத்தவாறே காணப்படுகிறது. பௌரோகிதர்களிடத்திலும் சமஸ்கிருத பாஷா ஞானம் இப்போது காணக்கிடைக்கவில்லை. ஸ்தபதிக் குடும்பத்துச் சிறுவர்களுக்குத் தமிழெழுத்துந் தெரியவில்லையென்றால் சமஸ்கிருதமா தெரியப்போகிறது? அதுதானில்லை. சமஸ்கிருதக் கல்வி வேண்டியதாகிய ஜீவனத்தைக் கைக்கொண்டிருக்கும் மேற்படியார்களிடமே சமஸ்கிருதம் பூஜ்யமாயிருக்கிறதென்றால், இரும்படிக்கும் கொல்லக் குடும்பங்களிலும், மரம் வெட்டும் மயக்குடும்பங்களிலும், செம்படிக்கும் துவஷ்டக் குடும்பங்களிலும், சொர்ண முருக்கும் சுபர்னஸக் குடும்பங்களிலுமா சமஸ்கிருதம் அமர்ந்து விளங்கப்போகிறது? சேற்றிற் செந்தாமரை பூத்தாற்போல் இக்குடும்பங்களிலும் அது காணப்படலா மென்பதை மறுதலிக்க வந்தேனில்லை. இங்கு நான் பொதுவாகப் பேசவந்தவனேயல்லாமல் வேறல்ல.

இப்படி சமஸ்கிருதமாகிய தாய்ப்பாஷையை நம்மவர்கள் அசட்டை செய்து கைவிட்டு வந்தால், எப்படி இவர்களைப் பூர்வம் போல் மற்றவர் பூசிக்கலாகும்? ஆகாதாகாது. தற்காலத்திலும், சமஸ்கிருத ஞானமுள்ள சாஸ்திரிகளும் சிற்பாச்சாரிகளுமாகிய நம்மவர்கள் பிறரால் பூசிக்கப்பட்டே வருகிறார்களென்று சொல்லலாம்! அந்த பூஜிதம் அவரவர்களோடு நின்றுவிடுகிறது. ஜாதி முழுவதிற்கும் எட்டவில்லை. ஏன்? அவ்விதமான பெரியோர்கள் ஜாதிக்குள் அநேகரில்லாமையினாலேதான். ஆதலினால், சமஸ்கிருத பாஷா பயிற்சி, ஜாதியா ரெல்லோராலும் கைக் கொள்ளப்பட வேண்டும். தமிழ்ப் பாஷையைப்பற்றி அதிக சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சமஸ்கிருதம் பயின்றவர்களுக்கு அது தானாக வந்துவிடும். மேலும் அது தினமும் வசனிக்க வேண்டிய பாஷையல்லவா? ஆனபடியால், அதைக் கற்றுக் கொள்வது சுலபம். சமஸ்கிருதம் படிப்பதில் தான் நமது சிறுவர்களுடைய புத்தியைப் புகுத்த வேண்டும்.

நமது ஆருஷேய சகோதரர்கள் தமது மக்களுக்கு சிறு பிராய முதற் கொண்டே சமஸ்கிருதம் கற்றுக் கொடுத்தல் சகஜமாயிருக்க வில்லையா? அவர்களே போல் பிராம்மணராயுள்ள நாமும் நமது குடும்பங்களில் அதே மாதிரிச் செய்து வரும் பழக்கத்தை பூர்வ காலம் போல் இப்போதும் ஏன் கொண்டு வரலாகாது? வரத்தான் வேண்டுமென்பதை ஒவ்வொரு குடும்பத் தலைவரும் குறித்துக் கொண்டு அதற்கிசைய நடந்தால், வெகு சீக்கிரத்தில் நமதுகுலம் மிக மேன்மை யடையுமென்பது நிச்சயம். சமஸ்கிருதப் பயிற்சி யுண்டானால் வைதிக சாஸ்திர ஆராய்ச்சியும் சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியும் மேற் கொண்டவர்களாய் அரிய பெரிய உண்மைகளை நமது வித்தியார்த்திகள் வெளியிடுவார்கள்.

பிறஜாதியார் நம்மைப்பற்றி ஈனமாய் ஒரு வார்த்தை சொல்ல அஞ்சும்படியாக நமது குல கௌரவத்தைக் காப்பாற்றும் அரண்போல் அவர்கள் நிலைகொள்வார்கள். சிற்பசாஸ்திர வல்லமையினால் உலகமெல்லாம் கண்டு வியக்கும்படியாக அற்புத நிர்மிதங்களைப் பொற்புறப் பூர்வகாலத்திற் செய்ததுபோல், இன்னுமின்னும் பல நிர்மிதங்களை நம்மவர்கள் செய்தலாகும். சமஸ்கிருத பாஷா பயிற்சியும் பாண்டித்தியமுமில்லாமையினாலல்லவா மேற்சொல்லிய உன்னத நிலைமை நமது ஜாதிக்கு ஏற்படாமலிருக்கிறது? இனிமேலாவது இக்குறையை நீக்கிக்கொள்ள நமது ஜனங்கள் முன்வரக்கூடாதா?



முன்னொரு சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம், நமது வித்தியார்த்திகள், அதாவது இங்கிலீஷ் படிக்கப் பாடசாலைகளிற் புகுவோர், தமது இரண்டாவது பாஷையாகத் தமிழுக்குப்பதிலாய் சமஸ்கிருதத்தைப் படித்தால், அப்பாஷை சுலபமாய்த் தெரிந்துவிடுமே! இங்ஙனஞ் செய்வதினால் அத்தியாவசியமாய்க் கற்கவேண்டிய பாஷைகளான இங்கிலீஷ் சமஸ்கிருதம் என்னும் இரண்டு பாஷைகளையும் ஒருங்கே கற்றுக்கொள்ளலாமன்றோ?

இனி, பிரத்னஸ கோத்திரத்தினராகிய சிற்ப வகுப்புக் குடும்பத்தின ரெல்லோரும் கட்டாயமாகத் தமது ஆண்மக்களுக்கு சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இவர்கள் அவ்விதஞ் செய்யாதபட்சத்தில் தமது மக்களுக்கும் தமது குலத்திற்கும் பெருங்கொடுமை செய்தவர்களாக மதிக்கப்படுவது திண்ணம். பொருட்சகாயந் தேவையானால், நமது சபையார் அளிக்கத் தயாராயிருக்கிறார்கள். அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு சோம்பல்கொண்டு பிள்ளைகளைக் கெடுத்துவிட்டுக் குலப்பழியுஞ் செய்யத்துணிவது நியாயமா, அல்லது தர்மந்தானாகுமா? இவ்வாறே, பௌரோகித உயர் ஜீவனங்கொண்டு வாழுங் குடும்பத்தோர்களும் முக்கியமாய்ச் சமஸ்கிருத பாஷையைத் தமது சிறுவர்களுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். அப்படிச் செய்யாத பக்ஷத்தில் அவர்கள் அபராதிகளாவார்களென்பதில் கொஞ்சமேனுஞ் சந்தேகமில்லை.

ஒவ்வொருவருக்கும் நிரம்பிய பாண்டித்தியமுண்டாகச் செய்வித்து அவர்களுடைய கல்வி ஞானத்தைக் கண்டு உலகம் பிரமிக்கச்செய்வதில் பிரதி குடும்பத்தாரும் போட்டிபோடவேண்டும். வம்புக்கும் வழக்குக்கும் விதண்டவாதங்களுக்கும் வீண் செலவுகளுக்கும் துடைதட்டுவதினால் துக்கமே பிராப்தியானதினால், அத்துஷ்டகாரியங்களைத் தூர விலக்கி ஷை சற்காரியத்தில் பந்தயம் போட்டால் பிற்காலத்தில் பெருமையும் புண்ணியமுமுண்டாகும். இதற்கு வழிகாட்டிகளாகவும் சகாயிகளாகவும் நமது சபையார் ஏற்பட்டிருக்கும்போது, அவர்கள் துணைபற்றிக் கரையேறுவதிலல்லவோ நமக்குக் கவனமிருக்கவேண்டும்? சமஸ்கிருத கலாசாலைகளிருக்கும் ஊர்களில் வாசமாயிருக்கும் நமது ஜாதியார் அக்கலாசாலைகளில் தமது மக்களைச் சேர்க்கவேண்டும். நமக்கு வேண்டியது பாஷா பயிற்சி. அது கிடைத்தால், பிற சகாயமில்லாமல் நமக்கு வேண்டிய சாஸ்திரங்களை நாம் ஆராய்ந்துகொள்ளலாம்.

நமக்கென்று தனியாய் ஓர் சமஸ்கிருதபாடசாலையேற்படுத்துவது கூடாமை. அதில்வாசிக்கப் போதுமான மாணாக்கர்கள் ஓரிடத்தில் கிடைப்பதுங் கஷ்டம். அயுக்தமானவர்களைச் சேர்த்துவைத்துப் பாடஞ் சொல்லிவைப்பதும் பிசகு. சிலபேருக்காக பெருஞ் செலவு செய்வதும் வீண்விரயமாகும். செலவுக்குவேண்டியபடி அதிகப்பணமுங்கிடைக்காது. ஒரூரில் பாடசாலையமைத்தால் மற்ற ஊராருக்குச் சௌகரியமிருக்காது. இவ்வித அசந்தர்ப்பங்களை யெல்லாம் நன்றாக நினைத்துப்பார்க்குமிடத்து யாரியார் சமஸ்கிருதப்பயிற்சியில் அபிலாஷை கொள்ளுகிறார்களோ அவர்கள் தம்மை யடுத்துள்ள ஷை பாடசாலையிலோ அல்லது பண்டிதரிடத்திலோ பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிக்கற்போருடைய தொகை நாளடைவில் அதிகப்பட்டு, தனியாக விஶ்வகர்ம சமஸ்கிருத வித்யாசாலை யென்பதொன்று ஏற்பட வேண்டிய அவசியம் வெளிக்காணத் தோன்றுமாயின், அப்போது அதற்கான யோசனைகள் செய்யலாம். அப்போதும், மாணவரை அங்கங்கு பயிற்றுவிப்பதே பணச்செலவிலும் பிரயாசையிலும் சுலபமாகுமென்றெண்ணுகிறேன். முதலில், நாம் வித்தியார்த்திகளைத் தேடினால் பிறகு மெள்ள மெள்ள மற்றவற்றை யோசிக்கலாம்.

---

**பம்பாய் போஸ்டாபீஸில் திருட்டு.**—போஸ்டாபீசு உதவி கஜான்ஜி காவாஸ்ஜி நவரோஜி, ஜனவரி மாதம் 6-ந்தேதி பம்பாய் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டின்முன் குற்றஞ்சாட்டப்பட்டார். கோர்ட்டார் குற்றவாளியைக் கேள்வி கேட்டதில், தான் குற்றவாளி யென்று ஒப்புக்கொண்டு, மன்னிக்கவேண்டுமென்று கோர்ட்டாரைக் கேட்டுக் கொண்டான். போஸ்டாபீசு பணம் 39,000-ரூபாயைக் களவாடினதாக ஒப்புக்கொண்ட கவாஸ்ஜி நவரோஜிக்கு 9-மாஸ கடுங்காவல் தண்டனையும், 1000-ரூபாய் அபராதமும் விதித்தார்கள். தவறினால் ஆறுமாஸம் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

## நம் முன்னேற்றம்

ஸ்ரீ அத்தியாபக—லிங்காசாரியார், கணியம்பாடி

நம்முடைய முன்னேற்றத்திற்கான காரியங்களையெல்லாம் நாமே செய்யவேண்டும். நாமே செய்விக்கவேண்டும். பிறர் செய்வார்களென்றெதிர்பார்ப்பது பொழுதுபோக்காய் முடியும். துரைத்தனத்தார் ஜனங்களின் முன்னேற்றத்துக்குண்டான சௌகரியமேதாவது செய்கிறதானால் சமுதாய ஜனங்களுக்குச் செய்கிறதேயன்றி யாதொரு வகையாருக்கென்று செய்கிறதில்லை. கல்வி எப்படியோ அப்படியே கைத்தொழிலுமாயிருக்கிறது. இத்தென்னிந்தியாவை மத்தியகாலத்தில் ஆண்டிருந்த இந்து அரசர்கள் கைத்தொழில் வகுப்பாரைத் தாழ்த்தியதே நம்முன்னேற்றத்துக்குத் தடையாய்விட்டது. இப்போது நாம் கல்வியிலும், கைத்தொழிலிலும் முன்னேறப் பார்க்கிறோம். காருண்ய பிரித்தானிய துரைத்தனத்தார் ஜாதி சமயபேதம் பாராட்டாமல் எல்லாம் சமமாய்ப்பார்க்கிறார்கள். ஜாதிபேத சமயபேத விவகாரத்தில் துரைத்தனத்தார் தலையிடுகிறதில்லை, நாம் முன்னேற்றம் பெறவேண்டுமானால் இந்து சமுதாய ஜனங்களுடன்கூடி கல்வியிலும், கைத்தொழிலிலும் முன்னேற்றம் பெறவேண்டும். அதற்காகத் துரைத்தனத்தாருடைய உதவிபெறவேண்டுமானாலும் அப்படியே. ஆனால் இப்போது நாம் அங்கங்கே சபைகள் கூடுவதானாலும், கான்பரன்சுகள் நடத்துவதானாலும் பயனின்றோவெனின் அவற்றில் நடக்கும் வர்த்தமானத்தைநோக்கி இருவிதபயனுண்டு.

1-வது மேற்கூறிய பொதுக்கல்வி கைத்தொழில் அபிவிருத்திவிஷயமாய் இந்துசமுதாய ஜனங்களையே சபைகளிலும் நடக்கும் கான்பரன்சுகளிலும் நாமுங்கூடிக் கலந்துழைப்பதே போதுமானதாகும். அதிலும் வரவர நம்மவர்களின் தொகை அதிகரித்துவரவேண்டும். அதற்காக (நம்மவர்களுக்கு நவீனநாகரீகம் உண்டாவதற்காக) பத்திரிகைகளும் அவற்றின் முக்கிய சாராம்சத்தையுடைய துண்டுபத்திரிகைகளும், நம்மவர்களுக்குள் பரவவேண்டும்; நம்மவர்களிற் சிலர் முன்னின்று அவற்றைப் பரவச்செய்யவேண்டும். அதுவும் போதாதென்று நம்மவர்களுக்குள் சபைகள் கூட்டியும், கான்பரன்சுகள் நடத்தியும் மேல்கண்ட கல்வி கைத்தொழில் அபிவிருத்தியைக் குறித்து வற்புறுத்தியும் வரலாம். இப்படிச் செய்வதனால் அறையிலாடி அம்பலத்திலாடவேண்டுமென்றபடி இந்துசமுதாய ஜனங்கள் கூடுகிற சபைகளிலும் நடக்கிற கான்பரன்சுகளிலும் நம்மவர்கள் நன்குகூடிக் கலந்துழைக்கப் பழக்கமுமுண்டாகும்.

இதற்காக நம்மவர்களுக்கென்று பிரத்தியேகமான பாடசாலைகளும், தொழிற்சாலைகளும் வேண்டியதில்லை. சமுதாய ஜனங்களின் பாடசாலைகளும் தொழிற்சாலைகளுமே போதுமானவைகளாகும். அவைகளில் நம்மவர்களின் சிறுவர்கள் போய்ப் பயிலச்செய்வதே நம்முன்னேற்றத்திற் குரிய சாதனமாகும். நம்மவர்களுக்குள் பிரத்தியேக பாடசாலைகளும் தொழிற்சாலைகளும் நடைபெறுதென்றும் ஜாதி பேதமில்லாமல் எல்லோரும் கல்வியிலும் கைத்தொழிலிலும் பழகித் தேறவேண்டுமென்று பொது ஜனங்களும் துரைத்தனத்தாரும் எண்ணுகிறபடியினாலும், அப்படி எண்ணுவதினால் நம்மவர்களின் சுயநய எண்ணம் நன்கு மதிக்கப் பெறுதென்றும் கருதி இவ்விதமாய்க் கூற வேண்டியதாயிற்று. ஆகையால், நாம் ஒவ்வொருவரும் சமுதாய ஜனங்களுடன் கூடிக் கலந்து கல்வியிலும் கைத்தொழிலிலும் முன்னேற்ற மடைய உழைத்து வருவோமாக. இங்கே கல்வி, கைத்தொழில் என்றது நவீன நாகரீகத்துக்கேற்றவைகளையே யன்றி நம் குலாசாரத்துக்குரியவைகளை யல்ல.

முதலில் இந்து ராஜாக்கள் தமக்குள் ஒற்றுமையின்றியும் இந்தியர்களுள் பல ஜாதிபேதங்களும் சமய பேதங்களும் இருந்து உயர்வு தாழ்வு பாராட்டிப் பகைத்துக்கொண்டிருந்ததனால் இந்தியாவை மேனாட்டார் கைப்பற்றவும் இந்தியர்கள் தங்கள் சுவாதீனத்தை இழந்துவிடவும் காரணமாயிருந்ததென்றும் இப்போதும் அதேஸ்திதியில் இருக்கிறார்களென்றும், இனியும் அதேஸ்திதியில் இருந்தால் தாங்கள் சுவாதீன மடையப் போகிறதில்லையென்றும் மேனாட்டார்கள் எண்ணுகிறதை இப்போது வரவர இந்தியர்கள் உணர்ந்து தேசாபிமான மேலிட்டு தங்கள் ஜாதிபேத சமய பேதங்களை விட்டு, உயர்வு தாழ்வை நீக்கித் தங்களுக்குள் பரஸ்பரம் ஒற்றுமையடையப் பார்க்கிறார்கள். (தொடரும்)

---

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள.—குறள்.



## ஜாதிபேதமே முக்கிய தடை

ஸ்ரீ து. ப. வே. ஆச்சாரியார், திருச்சி

நம்மனோர் தற்கால அபிவிருத்திக்கு நம்மவர்க்குள்ளிருக்கும் ஜாதிபேதமே ஓர் பெரிய தடையாயிருக்கிறது. இதைப்பற்றியே நான் முன்னொரு வியாசம் எழுதியிருப்பதாக என் ஞாபகத்திற்கு வருகிறது. இருந்தாலும் இதைப்பற்றி நம்மவர்கள் நன்கு கவனிக்கவேண்டுமென்று திரும்பவும் எழுத ஆரம்பிக்கிறேன். இவ்விஷயத்தைப்பற்றி ஆயிரக்கணக்கான வியாசங்கள் பிரசுரிக்கப்பட்டாலும் நம்மவர் மனதை மாற்றவல்லதோ என்பது என் சந்தேகம்.

கம்மாளராகிய ஐவரும் ஒரே இனத்தவர். பரஸ்பர ஒற்றுமையுள்ளவர்கள். பஞ்சபூத சேர்க்கையால் தேகம் எப்படி உண்டாகிறதோ அதேவிதமாக மனு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்ஞக்ய ஆகிய ஐவரும் கம்மாளர் என்ற பதத்திற்கு ஆதாரபூதர்கள். கம்மாளன் என்ற பதம் ஒருவரைமட்டும் தனித்துக் குறிப்பிக்கப்பட்டதல்ல. தேகத்தின் அவயவங்களில் ஏதாவதொன்றுக்கு ஒரு காயம் ஏற்பட்டால் தேகமுழுதும் அதினாலுண்டான துன்பத்தை அனுபவிப்பதுபோல் நம்மவர் ஐவருக்குள் எவருக்கேனும் ஒரு குறை சம்பவித்தால் கம்மாளருக்கே அக்குறை உரித்தாகிறது.

ஆனால், தற்காலத்தில் நம்மவர்கள் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்ச்சியாகத் தூற்றிக்கொள்கிறார்கள். கொல்லனில்லாமல் எந்த இரும்பாயுதம்மற்றவர்க்குக் கிடைக்கும்? தச்சனில்லாமல் நாம் குடியிருக்கும் வீடுவாசலேது? கன்னான் கல்தச்சனில்லாமல் நாம் நேர்த்தியாயும் சுத்தமாயும் ஆண்டு அனுபவித்துவரும் பாத்திரங்கள் முதலானதும், இராஜாக்கள் வசிக்க மாடமாளிகைகளும், தேவதைகள் தங்க ஆலயங்களும் பூஜிக்கக்கூடிய விக்ரகங்களும் இங்கு எவ்விதம் கிடைக்கும்? தட்டானில்லாமல் மூதேவிகளுக்கும் முகப்பவிசு கொடுக்க ஆபரணங்களைக் கொடுப்பவர்யாருளர்? கொல்லனது மனைவி தட்டான் செய்யாத ஆபரணத்தைப் பூட்டிக்கொண்டிருக்கிறாளா? கொல்லர் தச்சர் கட்டாத கட்டடத்தில் தட்டான் குடியிருந்துவருகிறானா? இதையேன் நாம் நன்றாய் ஆலோசிக்கக்கூடாது? தட்டார்கள் மாத்திரம் விலையுயர்ந்த இரத்தினங்களிலும், பொன் வெள்ளிகளிலும் வேலை செய்வதால் தாங்களே உயர்குலத்தோரென்று மமதைகொண்டு தம் சகோதரர்களை மதிக்காததினால் தான் அன்னோர்களுக்குப் பழிச்சொல் விசேஷமாகக் கிடைத்திருக்கிறது! கொல்லன் இருக்கும் உலைக்களத்தன்றோ பிற ஜாதியார் ஓடிவருகிறார்கள்? தட்டார்களெல்லாம் துக்காலத்தில் பிற ஜாதியார் வீட்டைத்தேடிப்போகிறார்கள்! இதில் யார் தாழ்ந்தவர்களென்று சற்று யோஜியுங்கள்! ஆகையால் இத்தகைய துவேஷ புத்தியை வேர் அறுக்கவேண்டியது நமது முதன்மையான கடமைகளில் ஒன்று.

இன்னும், நம்மவருள் வெம்பா நாட்டார், காரைக்காட்டார், மலைநாட்டார், சோழியர், பெண்ணைக் கரையார் இது போன்ற பல வகுப்பினர்கள் தாம் தாம் வேறு என்றும் உயர்ந்தவர்களென்றும், இவரல்லாத மற்றவர்கள் தாழ்ந்தோரென்றும் அவமதிக்கிறார்கள். இப்பெயரெல்லாம் அவர்கள் குடியேறி வாசம்செய்து வந்த நாட்டைக் குறிக்கின்றதேயல்லாமல் உயர்ந்தார் தாழ்ந்தவர் என்று பட்டம் நெற்றியில் ஒட்டிக்கொண்டிருப்பதாக தெரியவில்லை. சென்னையில் ஒரு கூட்டம் கூடியிருப்பதாக வைத்துக்கொள்வோம். அக்கூட்டத்திற்கு நம்மவர்கள் திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருக்கிறதாகவும் வைத்துக்கொள்வோம். சென்னபட்டணத்தார், திருச்சினாப்பள்ளியார், தஞ்சாவூரார், மதுரையார் இவர்கள் எல்லோரும் ஒரு ஜாதியாரன்றோ? இதில் ஏற்றத்தாழ்ச்சி எங்ஙனம் கூறுவது? ஏற்றத்தாழ்வு கூறும் நம்மவர் மதியீனத்தை என்னென்று சொல்வது! பாவம்! பாவம்!! ஆனால் ஒருவருக்கொருவர் நாகரீகத்திலும் நடையுடை பாவனைகளிலும், பாஷைகளிலும்கூட தேசாசாரப்படி சற்று வித்தியாசப்பட்டிருப்பார்கள்.

சென்னை வாசிகள் பொதுவாய் வெளியே புறப்படும்போது குடுத்துணி, தலைக்குட்டை இல்லாமல் புறப்படுகிறதில்லை. ஆனால் திருச்சி தஞ்சாவூர் வாசிகள் பஞ்சகச்சம் அங்க வஸ்திரத்தோடு மட்டுமே வெளியில் காணப்படுகிறார்கள். இவ்வேடங்களால் ஜாதி எங்ஙனம் வேற்றுமைப்படும்? ஆகையால், ஒரு தாயின் பல குழந்தைகள் ஒருவருக்கொருவர் நாகரீகத்திலும், நடையுடை பாவனை, குணம் முதலியவைகளில் வித்யாசப்பட்டிருந்த போதிலும் எல்லோரும் அத்தாய்க் குழந்தைகளேயாவர் ஆனது பற்றி நம்மவர்கள் ஒவ்வொருவருக்கும் சகோதரவாஞ்சை ஏற்பட்டாலொழிய நமது குலம் என்ஞான்றும் ஈடேற மார்க்கம் இல்லையென்பது சத்தியம்.

## கூட்டுறவு

'கூட்டுறவு நெசவுச் சங்கங்களும் அவைகளை எப்படி ஸ்தாபிக்கிறது என்பதும்' என்னும் விஷயமாய் ம-ள-ள-ஸ்ரீ O. M. வெங்கடநாதய்யங்கார் அவர்கள் பின் வருமாறெழுதுகிறார்.—

உடுப்பானது ஒவ்வொருவருக்கும் வேண்டிய வஸ்து. அவைகள் இப்பொழுது உற்பத்தியாவது போதுமானதாகவும் இல்லை. நயமாகவும் இல்லை. இதற்கு இப்பொழுது யந்திரங்களைக் கொண்டும் சீக்கிரமாக நெசவு செய்யும் கருவிகளைக்கொண்டும் விருத்திசெய்கிறார்கள். முற்காலத்தில், அதாவது சுமார் 30,40, வருஷங்களுக்கு முந்தி, நூல் நூற்கும் இயந்திரம் அதிகம் இல்லாததினால் நூல்நூற்கும் இயந்திரத்திற்குப் பர்த்தியாக கையால் நூல் நூர்த்துக்கொண்டிருந்தார்கள். நெசவுக்காரர்கள் பஞ்சைப் பொதிப்பொதியாக வாங்கி ஒவ்வொரு கிராமத்திலும் வசிப்பவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தூக்கு அல்லது 2-தூக்கு பஞ்சைக்கொடுத்து அதை நூற்கச் சொல்லிவந்தார்கள். பயிர் முதலிய தொழில் செய்பவர்கள் தொழில்முடிந்து ஓய்ந்திருக்கும் காலத்தில் தம் குடும்பச் செலவுக்காக இம்மாதிரி பஞ்சை நூர்த்துக் கொடுத்திருந்தார்கள்.

இப்பொழுது ஐக்கிய சங்கங்களினால் விவசாயிகளுடைய கஷ்டம் ஒரு விதமாகக் குறைவு படலாமென்று யோசிக்கலாம். அவைகளை நாம் நன்கு உணர்ந்து ஐக்கிய முறையைச்சார்ந்த விஷயமான விதங்களைத் தேடிக்கொண்டு சீர்ப்படச் செய்தால் தான் நாம் முன்னுக்கு வரலாம். இந்த ராஜதானியில் நாணய விஷயமானது (Credit) விருத்தியாகிக்கொண்டு வருகிறதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் நாளடைவில் இது விருத்தியாக வேண்டுமானால் கடன்பட்ட விவசாயிகள் தங்கள் கடனை ஒழிக்கவும் விவசாயம் இல்லாதவர்கள் தங்கள் ஜீவனத்திற்காக சில முதல்கள் வைத்துத் தொழில்களை இந்தக் கூட்டுறவின் தாத்பரிய மூலமாய் வேலைகளைத் துவக்கினாற்றான் க்ஷேமப்படலாம் என்பதற்கு யாதொரு ஐயமில்லை.

அனேக தொழில்களில் முக்கியமான தொழில் நெசவுத் தொழிலாகும்; இந்தத் தொழிலை விருத்தி செய்ய நாம் முயலவேண்டும். ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் இப்போதிருக்கும் நெசவுக்காரர்களை ஒன்று கூட்டி கூட்டுறவு சம்பந்தமான நெசவு செய்யும்படி நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த நெசவுக்காரர்கள் முதல் பணம் இல்லாமல் நூல்களைக் கடனுக்காக வாங்கி அதை நெய்து விற்பதில் அவர்களுக்கு லாபம் கட்டுவதில்லை. வாங்குபவர்களுக்கும் நயமாகக் கிடைப்பதில்லை. ஆகையால் அதற்காக கூட்டுறவினர்கள் ஒன்று சேர்ந்து இந்த நெசவு சம்பந்தமாய் சில ஏற்பாடுகள் செய்தால் கைத் தொழில்கள் விருத்தியாவதற்கு இது ஒரு பிரயத்தனமாகுமென்று தோன்றுகிறது. தவிரவும், நெசவு செய்பவர்கள் தங்களுக்கு வேண்டிய நூல்களை ஒன்று கூடி மூட்டை மூட்டையாக வரவழைத்துத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டும் லாபம் அடையலாம்.

அம்மாதிரிச் சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டுமானால் காஞ்சீபுரத்தில் ஏற்படுத்தி யிருக்கும் வீவர்ஸ் யூனியன் (Weavers' Union) என்பதைப் பார்த்தால் தெரியவரும். இதே மாதிரியாக புதுக்கோட்டையிலும் 2-சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளைப்போலவே ஒரு ஜில்லாவில் பெரிய இடங்களில் நெசவு சங்கங்கள் ஏற்படுத்தினால் விருத்தியாகும் என்பதற்குத் தடையில்லை. அம்மாதிரிச் சங்கங்கள் ஏற்படுத்த முதல் வேண்டும். தவிரவும், நெசவு செய்த வஸ்துக்களைக் கண்டு முதல் எப்படிச் செய்வது என்று யோசிக்கலாம். யோசிக்க வேண்டியது அவசியமாகும். இப்பொழுது சில இடங்களில் அடர்த்தியாக ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை ஒரு கோவாபரேடிவ் யூனியனாகச் செய்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட யூனியனாவது அல்லது ஒரு தாலூக்காவிலாவது ஒரு கூட்டுறவு நெசவு சங்கம் ஏற்படவேண்டும்.

அதற்குமுதல் வேண்டியதற்காக பங்குகள் ஸ்வல்பதொகையில் ஏற்படுத்தி ஐக்ய நாணய சங்கத்திற் சேர்ந்தவர்களையும் மற்றவர்களையும் எடுத்துக்கொள்ளச் சொல்லவேண்டும். உதாரணமாக பங்கு ஒன்றுக்கு ரூ.5-வீதம் 1000-பங்குகளை ஏற்படுத்தி மூலதிரவியம் ரூ. 5000 வைத்தால் ஆரம்பத்தில் போதும். அந்தச் சங்கத்தில் நெசவுக்காரர்களையும் பங்கு எடுக்கும்படி செய்து ஒரு பங்கு எடுத்தவனுக்கு ரூ. 25-க்கு நூலாகக் கொடுத்து தக்கிய ஜாமீன் பெறவேண்டும். பணரூபமாக கொடுக்கக்கூடாது. அப்படி நூலாக கொடுக்கவேண்டியதற்கு மொத்தமாக நூல் மூட்டை மூட்டையாக வாங்கி வைத்துக்கொண்டு கொடுக்க வேண்டும். இப்படித் தரி ஒன்றுக்கு ரூ. 25-பொறுப்பான நூல் கொடுத்தால் ஒரு வாரத்திற்குள்ளாகவே நெசவுசெய்து துணி ரூபமாக இந்த சங்கத்தில் ஒப்புவித்துவிடவேண்டும். அந்த நெசவுக்குத் தக்கபடி கூலி விகிதம் கட்டி சங்கத்தார் எடுத்துக்கொண்டு அதற்கு வட்டியும் சேர்த்து விற்பனைக்கு அனுப்பவேண்டும். இப்படிக்கு அக்கம் பக்கம் விலைக்கு அதிகம் இல்லாமல் நயமாக விற்பதால் லாபமும் கிடைக்கும். கைத்தொழிலாளிகளுக்கு ஒத்தாசையும் ஆகும். அப்படி விற்பதில் லாபம் பங்குதாரர்களுக்கு பங்கிட்டுக்கொடுக்கலாம். இப்படிச் செய்வது கஷ்டசாத்தியமல்ல. இதற்குப் பண உதவிதான் வேண்டும். இந்தமாதிரி சங்கங்கள் ஏற்படுத்தினால் வேண்டியகாலத்தில் பண உதவி ஸென்ட்ரல் அல்லது ஜில்லா பாங்கிகளிலிருந்து பெறலாம். துணிகளை நெசவுசெய்து வைப்பதில் நஷ்டம் உண்டாகுமென்று யாவரும் நினைக்கவேண்டாம். நெசவு செய்த துணிகள் விலைபோகாமல் அழிந்துபோனதாக எப்போதும் ஏற்படவில்லை. அப்படி சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டாலும் சுமார் 3-வருஷங்களுக்கு ஒரு முறைக்குமேல் இருப்பாக துணிகள் இருந்ததில்லை.

---

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றி லேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாரமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடிய பாழ்ங்
கல்லாமை எத்தனை அகந்தைஎத் தனைமனக்
கள்ளமெத் தனைஉள்ள சற்
காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை
கதிக்கென் றமைத்த அருளில்
செல்லாமை எத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
செல்வ தெத்தனை முயற்சி
சிந்தைஎத் தனைசலனம் இந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலா
யல்லாமை எத்தனை அமைத்தனை உனக்கடிமை
யானேன் இவைக்கும் ஆளோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே.

—தாயுமானவர்.

## விஸ்வகர்ம தயாநிதிக் கண்ணி

ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

(1) அண்ட சராசர மெண்டிசை யும்படைத்
தானந்தங் கொண்டவனே-பவ
கண்டனஞ் செய்தன்ப ருக்கரு ளும்விஸ்வ
கர்ம தயா நிதியே.

(2) சிற்பர திவ்யதே ஜோமய வானந்த
தேசிக ளுகவந்த-தேவ
கற்பகமே யென்மு கங்கண் டருள்விஸ்வ
கர்ம தயா நிதியே.

(3) பிரபஞ்ச சிற்பியாச் சாரியென வேதம்
பேசியமெய்ப் பொருளே-மனோ
காமுடன் வந்தெனை யாண்டருள் வாய்விஸ்வ
கர்ம தயா நிதியே.

(4) நாரமெனும் ஜலம் தன்னில் வசித்ததால்
நாராயண னெனும்பேர்-தனைக்
காரணமாய்க் கொண்ட பூபதியே விஸ்வ
கர்ம தயா நிதியே.

(5) மாலயன் காணவ றியமுடி யாத
வஸ்துவாய் நின்றவனே-கலி
காலத்தி லெந்தன்முன் வந்தருள் செய்விஸ்வ
கர்ம தயா நிதியே.

(6) விஸ்வப்ரம் ஹாவெனச் சர்வலோ கங்களும்
வேண்டும் பராத்பரனே-திகழ்
கஸ்யபாதி நவ ப்ரம்ஹர் துதிவிஸ்வ
கர்ம தயா நிதியே.

(7) தானந்தவஞ் சற்றுஞ் செய்ய வறியாத
தமியேனைக் காக்கவந்த-வேத
கானப்ரிய னெனும் காருண்ய விஸ்வ
கர்ம தயா நிதியே.

(8) மனமாயை யைக்களைந் தானந்த சிற்சுகம்
வழங்குங் க்ருபாகரனே-தினங்
கனதனந் தந்தெனைக் கைதூக்கி யாள்விஸ்வ
கர்ம தயா நிதியே.

(9) பண்டு செய்தவினை முற்றையும் போக்கிநின்
பங்கயப்பொற் பதத்தைத்-தினங்
கண்டுகொண்டானந்தங் கொள்ளவருள் விஸ்வ
கர்ம தயா நிதியே.

(10) தண்டமி ழால்மௌன குருருத்ர மூர்த்தி
சாற்றும் ப்ரபந்தமதைத்-தினங்
கண்டனந்த மகிழ் கொண்டரு ளும்விஸ்வ
கர்ம தயா நிதியே.

## குலோத்தாரணத்திற்குப் பொருள்தேடு மார்க்கங்கள்

ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார், திருநெல்வேலி

நமது குலாபிமானிகள் கற்பகவிருக்ஷம் போன்றதோர் சபையைச் சென்னையில் ஸ்தாபித்து நமதுகுல மேம்பாட்டிற்குப் பத்திரிகா வாசகமே சிறந்ததென மேற்கொண்டு (நமது சபையின் முதலாவது இரண்டாவது ஆண்டின் வருடாந்திர ரிப்போர்ட்டுகளில் கண்டபிரகாரம்) நமது கவனத்திற்குரித்தான விடயங்களைப் பிரசுரித்து வருமுண்மையை நங்குலநேயர்களுக்கு எடுத்துரைக்கவேண்டிய அவசியமில்லை.

பல்வேறு தேயங்களிலுள்ள நங்குல நேயர்களுக்குள் முகாலோபன மில்லாவிடினும் பரஸ்பர அன்னியோன்னியம் மேலிட்டிருப்பது இப்பத்திரிகையினாலன்றோ? இதற்குக் காரணபூதமாய் உள்ளது கல்வியன்றோ? அக்கல்வியை விர்த்திசெய்வான்வேண்டி "விஸ்வகர்ம வித்தியாநிதி" ஒன்றை ஸ்தாபித்துளர். மேலும், பிற ஜாதியர் வித்தியாநிதிகளை ஏற்படுத்திக் கல்வியை அபிவிர்த்தி செய்வதில் எங்கெந்தவிதமாய்ப் பாடுபட்டு எவ்விதபலன்களை யடைகிறார்கள் என்பதை நமது விஸ்வகர்மன் பத்திரிகை ஒவ்வொன்றிலும் சாங்கோபாங்கமாய் வெளியிட்டு வருவது நாம் அதைக் கருத்தில்கொண்டு அவர்களைப்போல் வரவேண்டுமென்ற கருத்துபற்றியேயாகும்.

நமது "விஸ்வகர்மன்" நம்மினத்தவர் ஒவ்வொருவரிடத்திலும்சென்று நம்மில் அனைவருக்கும் அன்னியோன்னியத்தை உண்டாக்கிவைக்கும் மித்திரன். அம்மித்திரனைப் போஷித்தாலன்றி அவன் சம்போதனைகள் என்ற ஆபரணங்களைப்பூண்டு இன்னும் பலவிடங்களுக்குத் தைரியமாயும் துரிதமாயுஞ்சென்று நம்மில் ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் எப்படி ஏற்படுத்துவான்?

அம்மித்திரனை (விஸ்வகர்மனை)ப் போஷிக்கவும் நம்மவர்களுக்குள் கல்வியை அபிவிர்த்திசெய்யவும் பொருள்வேண்டும். பொருள்கூடின் பலம்கூடும், பலன் கூடின் கூடாதகாரியம் கைகூடும். ஆனதினால், இவ்விரண்டு காரியங்களுக்கும் போதுமான பொருள் உண்டோவென்று நமதுசபை ரிப்போர்ட்டின் "பொக்கிஷம்" எனத் தலைப்புக்கொண்ட பாராவைப் பார்க்கலானேன்; பார்த்ததும் என்மனம் என்னவிதமான நிலையிலிருந்ததென்பதை என் சகோதரர்களுக்கு எடுத்துரைக்க அசக்தனாயிருக்கிறேன்.

நம்மினத்தில் 2,70,000 ஜனங்களிருந்தும் இவ்வளவு வருக்கும் தலைநகர்போன்ற சென்னையில் ஒரே சபையிருந்தும் அதற்கு 1000 - ரூபாய்தான் வருமானமென்று குறிப்பிட்டுள்ளது எவ்வளவு கேவலம் என்பதை எடுத்துக்காட்டவும் வேண்டுமோ? பிறஜாதியார் மூலதனம் சேர்க்கும் வகையையும் தொகையையும் நம்பத்திரிகாசிரியர் சாங்கோபாங்கமாய் எடுத்துக்காட்டியும் நாம் கண்மூடித்தனமாயிருப்பது வெட்கக்கேட்டிலும் வெட்கக்கேடே! இதற்கு யாரைநோவது? கல்வியில்லாக் குறையைத்தான் நோகவேண்டியது!

I (1) சென்னை இராஜதானியிலுள்ள 2,70,000 விஸ்வப்பிராமணர்களில் 1,70,000 ஸ்திரீகள் நீங்க, நின்ற 1,00,000 ல் விருத்தாப்பியர் 50,000 நீங்க மீதி 50,000ல் சிறுவர்கள் 25,000 பேர்கள் நீங்கினாலும் மீதியுள்ள 25,000 விஸ்வகர்மாக்கள் தலை 1-க்கு மாதம் 1-க்கு 1-பைவீதம்கொடுத்தாலும் மாதம்1-க்கு,130-3-4 கிடைக்கும். அதிலும் விதண்டாவாதம் பேசும் புண்ணியவான்கள் -போக 1000 மீதியுள்ளவர்கள் கருணை புரிந்தாலும் வருடத்திற்கு ரூ. 1500-சபைக்கு மூலதனமாகச் சேர்க்கலாம்.

(2) 24000 பேர்களில் 16-ல் 1-பங்கு ஐசுவரியவான்களிருப்பார்களல்லவா? அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வட்டிகளில் மாதாமாதம் தலை 1-க்கு 4-அணா கொடுத்தாலும் வருடத்திற்கு 4,500 ரூபாய் சேர்த்துவிடலாம். அல்லது 2-அணா கொடுத்தாலும் 2,250 ரூபாயாகின்றது. அல்லது வருஷம் 1-க்கு தலை 1-க்கு 1-ரூபாய்வீதம் கொடுத்தாலும் 1-வருடத்தில் 1500 ரூபாய் சேர்த்துவிடலாம். தற்காலம் இருசால் செலுத்தக்கூடிய காலமாதலால் ஒவ்வொருவரும் எவ்வளவு பேரீஜ் உடையவர்களென்று எளிதிலறியலாம். கழணிக்கு ரூ. 20 பகுதி செலுத்தக்கூடிய ஒவ்வொருவரும் 20-ரூபாயுடன் 1-சேர்த்து 21-ஆக கொடுப்பதாய்க் கருதி யீன்றாலும் போதுமானதே.

(3) 1,500 தனவந்தரில் நமதுசபைத்தலைவர்பிரம்மஸ்ரீ சோ. கந்தசாமி ஆச்சாரிபோன்ற காருண்யமிக்க புண்ணியவான்கள் 10-ல் ஒருபங்கு 150 பேர்களில் நபர்



1-க்கு வருடம் 1-க்கு 10-ரூபா வீதம் கொடுத்தாலும் ரூபா-1500 சேர்ந்துவிடலாம் அல்லது மாதம் 1-க்கு 8-வீதம் கொடுத்தாலும் போதுமானது.

(4) ஷை 150 தனவான்களும் தலை 1-க்கு 20 ரூபாய் எடுத்து தங்கள் ஊரில் சபையின்பேரால், ரிஜிஸ்டர் செய்து மாதம் 1-க்கு ரூ. 1-க்கு 4-பைவீதம் வட்டிக்கு விட்டாலும் வருடம் 1-க்கு 5-ரூபாய் வட்டி ஆகின்றது. வருடத்திற்கு 750-ரூபாய் ஆகின்றது. இவ்விதம் செய்வதில் முதலுமழியாது சந்ததியார்களும் விநியோகிக்கமுடியாது. சபைக்கும் வருடாவருடம் 750-ரூ. அல்லது பாடுவாசி நீங்க. 375-ரூபாயாவது கிடைக்கும்.

II. இனி ஒவ்வொரு வகுப்பினரைப்பற்றி யோசிப்போம்.

(*a*) இச்சென்னை இராஜதானியில் அயம்வேலைசெய்யும் தொழிற்சாலைகள் 500 இருக்குமென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. ஒவ்வொரு பட்டரைக்காரரும் மாதம் 1-க்கு 4-அணா கிடைக்கக்கூடிய ஓர் மகிமையை அந்தந்தநாட்டின் தொழிற்குத் தக்கவிதமாய் ஏற்படுத்தி வருடம் 1-க்கு ரூ. 3-அனுப்பினால் 1-வருடத்தில் ரூ. 1500 சேர்த்துவிடலாம்.

(*b*) குன்றந்தபக்ஷம் மரவேலைசெய்யும் 6000-பேர்களும் தங்கள் தங்கள் வரும்படியில் வருடம் 1-க்கு நபர் 1-க்கு 4-அணா வீதம் கொடுத்தாலும் ரூ. 1500-ஒருவருடத்தில் சேகரித்துவிடலாம்.

(*c*) செம்பு பித்தளை வேலைசெய்யக் கூடியவர்கள் 5000 பேர்களும் பாத்திரங்கள் செய்து வியாபாரிகளுக்குக் கொடுத்துவருகிறார்கள். 1-படி நிறையுள்ள பாத்திரங்களுக்கு 3-பைவீதம் மகிமை தள்ளிக் கொடுக்கவேண்டுமென்ற உடன்பாட்டிற்கு நம்மினத்தவர் ஒத்துதான் நடக்கின்றனர். அவர்கள் அவ்விதம் செய்தது நமக்கு ஓர் படிப்பினையேயாகும். அதாவது ஷை படி 1-க்கு 6-பை கூட்டிவைத்து அவனுக்குக் கொடுக்கவேண்டிய மகிமை காலணா (3-பை) வை அவனுக்குக் கொடுத்து மீதி கால் அணா (3பை) வை நமது சபைக்கு ஏன் அளிக்கலாகாது? இதுவொரு கஷ்டமா? (நாம் செய்துகொடுக்கும் பாத்திரங்களின்மேல் லாபம் வைத்து ஜீவித்தும் அவர்கள் நம்மிடமே மகிமை வைப்பது நம்மை நல்வழிப்படுத்தி நாமும் அவ்வாறே நடக்க வேண்டுமென்றுதான். இதை நன்றாய்க் கவனத்தில் கொள்ளவும்) இவ்வையாயிரம் பேர்களும் வருடமொன்றிற்கு 96,000 படிநிறையுள்ள சாமான்கள் செய்யமாட்டார்களா? அப்படிச்செய்வதில் ரூபா 1500 சேகரித்துவிடலாம்.

(*d*) சிற்பவேலைசெய்யும் 8000 கல் தச்சர்களும் மாதம் 1க்கு நபர் 1க்கு காலணாவீதம் கொடுத்தாலும் ஒரு வருடத்தில் 1500 ரூபாய் சேகரித்து விடலாம்.

(*e*) பொன்வேலைசெய்யும் கூடங்கள் 2,70,000ல் 27வில் 1பங்கு 10,000, அதிலும் நன்றாய் வேலை செய்யக்கூடிய பட்டறைகள் 1500 என்று வைத்துக்கொள்வோம். மாதம் 1-க்கு பட்டறை 1-க்கு 10-பவன் வேலைக்கு வருவதாய் வைத்துக்கொண்டால் 1500 பவுன்களாகின்றன. பவுன் 1-க்கு 3 பைசா வாசி வைத்தாலும் மாதம் 1-க்கு 225 முதல் 230 ரூபா கிடைக்கும். வருடத்தில் குறைந்தது 2700-ரூபாயாவது கிடைக்கும். அல்லது 1500 கூடத்திற்கும் மைக்காட்டிற் கிடைக்கக் கூடியது மாதம் 1-க்கு ரூபா 2-வீதம் பார்த்தாலும் வருடத்தில் ரூபா 36000 சேருகிறதில் 12-ல் 1-பங்கு 5000 ரூபா கொடுத்தாலும் போதுமானது.

(f) இந்த ஐந்து வகுப்பினராலும் இம்முயற்சி இடைவிடாது ஒன்றைவிட ஒன்று முந்தவேண்டுமென்று போட்டிபோட்டுழைத்தால் 1-வருடத்தில் 9,000 ரூபாயாவது சபைக்கு மூலதனமாய்ஏற்படுத்திவிடலாம். 3-வருடத்தில் ரூபா 27000 கிடைக்கும். அதாவது 2,70,000 ஜனத்தொகையில் 27-ல் 1-பங்கேயாகும். தலை 1-க்கு 3வருடத்திற்கு (சராசரி கணக்குப்பார்ப்பதில்)ரூபா 1. ஆகின்றது. இந்தத்தொகையுங் கொடுப்பதற்குப் பின் வாங்கும் புண்ணியவான்கள் மேற்குறித்த எண்ணத்தை எப்படிப் பூர்த்திசெய்வார்கள். 27000-ரூபாயை 100-க்கு அணா 8 வீதம் வட்டிக்கு விட்டாலும் வருடத்திற்கு 1620 ரூபா ஆகின்றது. இவ்விதம் நாம் எழுதுவதிலும் கிளிப்பிள்ளையைப்போற் பேசுவதிலும் பிரயோசனமில்லை. இடைவிடாது வியாஸங்களும், விடாமுயற்சியும் மென்மேலும் பெருகி வந்ததனால்தான் "கும்பகோணம் கான்பரன்ஸ்" நிறைவேறியது. இதை மனதிற்கொண்டு இவ்வேற்பாட்டிற்குத்தக்க வியாஸங்களும் விடாமுயற்சியையும் மென்மேலும் வற்புறுத்திக் கூறவும் வேண்டுமோ.

இவ்வெண்ணங்கைகூட ஒவ்வொரு கிராமத்திலும் 5

பேர்கள் கொண்ட (1 பிரஸிடெண்ட் 2 காரியதரிசி 3 பொக்கிஷதார் 4 5 நிர்வாகமிட்டியார்கள்) விஸ்வகர்ம வித்தியாநிதி சங்கமொன்றை யேற்படுத்தி அவ்வைந்து பேர்களும் அந்தந்த கிராமத்தின் நாட்டாண்மைக்காரர் பெரிய தனக்காரரிவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும். ஏனெனில், இவ்வேற்பாட்டிற்கு உடன்படாதவர்களை ஜாதிக்கட்டுப்பிரகாரம் பஞ்சாயத்துப்பேசி இதற்கு உள்ளடங்கி நிற்கும்படி செய்வார்கள். இதற்கென்று ஏற்பட்ட உண்டி. விஸ்வகர்ம வித்தியாநிதி, விஸ்வகர்ம குலோத்தாரண சபை, 462 தங்கசாலை வீதி, சென்னை என்ற மகுடம் பூண்டிருக்கவேண்டும்.

ஷை முறையை நடத்துவதாய் முடிவுசெய்து மேற்குறித்த 7 பெயர்களின் (உத்யோகஸ்தர்களின்) திருநாமங்களைச் சென்னைச் சபையார்க்கு அனுப்பவேண்டும். சபையார் (Receipt Book) ரசீதுபுஸ்தகம் அனுப்பவேண்டும். அது 3 பாகமாய் இருக்கவேண்டும். பணம் கொடுத்தவர்க்கு ஒரு ரசீதும் விஸ்வகர்மவித்தியாநிதி சங்கத்தாருக்கு ஒன்றும், சென்னைச் சபையார்க்கு ஒன்றும் இருக்கவேண்டும். இவ்விதம் சேகரிக்கப்படும் தொகையைச் சென்னைச் சபைக்கு மாதமாதமாவது, 3 மாதத்திற்கு 1 தடவையாவது அனுப்பவேண்டும். சபையார் ஷை தொகையை விவரமாய் விஸ்வகர்மன் பத்திரிகையில் வெளியிடுவார்கள். இவ்விதம் நிகழ்வதில் எங்கெந்த நாட்டார்கள் இம்முயற்சியில் பற்றுடையவர்களாய் உழைக்கின்றார்கள் என்று எண்ணமுண்டாகி இதர ஜில்லா வாசிகளும் உழைக்க முன்வருவார்கள்.

தன் ஸ்திரீ பதிவிரதையா யிருக்கவேண்டுமென்று எவ்வித முயற்சி செய்தாலும் அவளாகத் தன் கற்பைக் காத்துக்கொண்டாலன்றி அவள் எண்ணம் எவ்விதம் கைகூடாதோ, அதைப்போல் நமது குலவிர்த்தி என்னும் கற்பு நம்மினத்தவர் ஒவ்வொருவர் மனதிலும் வேரூன்றி உள்ளன்புடன் தானே இக்காரியத்தில் முன்னின்றுழைப்பதாகவும் தன்னால்தான் இக்காரியம் நிலைபெறுகிறதென்று இடைவிடாது முயற்சி செய்துவந்தால் விஸ்வகர்மன் என்னும் மித்திரனைப் போஷிக்கவும், விஸ்வகர்ம வித்தியாநிதியை விர்த்திசெய்யவும், சயன்ஸ் கிருதவித்தியா சகாயம் செய்யவும் ஏதுவாகும்.

பொருளின்றி நமதெண்ணம் நிறைவேறுதல் கடினம்; பொருள் சேகரிக்க வழிதேடாததாலும், ஒருவர் கருத்திற்கு மற்றவர் இணங்காததாலும்விதண்டாவாதம் பேசுவதாலும் இதற்கு முன் ஏற்பட்ட சபைகளும், பள்ளிக்கூடங்களும் இருந்தவிடம் தெரியாதொழிந்தன.

“விஸ்வகர்மன்” என்னும் மித்ரன் சென்னையில் அவதரித்தான்; அவன் அவதரித்தது நாம் செய்த புண்ணியமே; குலத்தை விர்த்திசெய்யவந்தவனே அவன். அவனைப் (1) போஷிக்கவேண்டியதும் (2) அலங்கரிக்கவேண்டியதும் (3) அழகுபடுத்தவேண்டியதும் (4) அவனை மாதத்தில் இருமுறை நம்மைவந்து காணும்படிச் செய்யவேண்டியதும் (5) அவன் எண்ணம் நல்ல வழியாயிருப்பதால் அவன் கருத்து நிறைவேற ஒத்துழைத்து அவனுக்கு வசதியான இடம் ஒவ்வொரு நாட்டிலும் தேடிவைக்க வேண்டியதும் (7) சென்னையில் அவன், தன்போன்ற மித்ரர்களுடன் குதூகலித்திருக்கவும் நாம் சென்று அவன் போன்ற மித்ரர்களுடன் சேர்ந்து அவர்கள் கருத்துகளையும் கண்டுதெளிந்து ஆனந்த முறவேண்டியும் ஓரிடத்தைத்தேடி வைக்கவேண்டியதும் விஸ்வகர்ம வம்ஸத்தில் ஒவ்வொருவரும் தனித்தனி தம்முடைய பொறுப்பாய்க் கொள்வது அவஸியமாகும்.

என்போன்றவர்கள் இச்சென்னையில் அவதரித்து இடம் பொருள் ஏவலில் மிக்க மேன்மையுற்று விளங்குகிறார்கள்; அவர்கள் பெற்றோர்கள் அவர்களை நாளுக்குநாள் விர்த்திசெய்துவருகிறார்களே; அவர்களுக்கு ஒரே தந்தை சிலருக்கும், பலதந்தைகள் சிலருக்கும் இருக்கின்றார்கள், எனக்கு 2,70,000 தந்தைகள் இருந்தும் நான் இந்த நிலைமையிலிருக்கின்றேன். உங்களுடைய புத்திரர்களை இவ்வித நிலையில் விடுவீர்களா? விடமாட்டீர்களே! அப்படியிருக்க என்னை ஏன் கவனிப்பதில்லை? குலத்தை விர்த்திசெய்யவந்த என்னைப்போஷிக்காது விட்டால் குலம் எவ்விதம் விர்த்தியடையும்? கவனியுங்கள், கவனியுங்கள், கவனியுங்கள் என்று விஸ்வகர்மப்பாலகன் கூறுவதாய்க் கனவுகண்ட மறுதினமே இவ்வியாஸம் எழுதலானேன். ஆதலால் கனவான்களே! மேற்குறித்த 7 விஷயங்களையும் பூர்த்திசெய்ய இன்றுமுதலே கங்கணங்கட்டி உழைக்கும்படி மிக்க வந்தனத்துடன். கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

ஸிலோன் இருப்புப்பாதை.—தென்னிந்தியா இருப்புப்பாதை கம்பெனியாருக்கும் ஸிலோன் கவர்ன்மெண்ட் இருப்புப்பாதைக்கும் சில விஷயங்களில் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அத் தகராறுகளை நேசபாவத்துடன் தீர்த்து விடவேண்டுமென்று இலங்கை கவர்ன்மெண்டைக் கேட்கும்படி, ரயில்வே போர்டாரை தென்னிந்தியா இருப்புப்பாதைக் கம்பெனியார் கேட்டுக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது.



## நமது வாசகர்கள்

### விவாகக் கலப்பு

சோழியப்பார்ப்பாருக்கும் ப்ராஹசரணவகுப்புப் பெண்ணுக்கும் திருவனந்தபுரத்தில் விவாகமான விவரத்தை வாசித்தோம். இதுபோன்ற திருஷ்டாந்தங்கள் அடிக்கடி பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. அப்படியிருக்க, நம்மவர்கள் தாராளமாய் ஒருவரோடொருவர் சம்பந்தஞ்செய்துகொள்ள ஏன் பின்வாங்கவேண்டும்? சம்பந்தங்களைப்பற்றி சண்டையிட்டுக்கல்யாண காரியங்களைப் பங்கப்படுத்துவதற்கென்றே சிலர் தோள் தட்டிக்கொண்டிருக்கிறார்கள்: இவர்களை லட்சியம் செய்யாமல் புறக்கணிக்க வேண்டும். இல்லறவாழ்க்கைக்கு இசைந்ததாயிருக்கவேண்டுமென்னும் ஒரு கருத்துக்குமேல் மற்றொன்றும் கல்யாணவிஷயமாய்க் கவனிக்கப்படவேண்டியது அனுவசியமென்று தோன்றுகிறது.

ம. பு. கோடி ஆச்சாரி.

### விவாக வழக்கங்கள்

இவ்விஷயமாய் குன்னூர் ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியாரவர்கள் எழுதியுள்ள வாக்கியங்கள் பொருத்தமானவையென்றே சொல்லவேண்டும். யாரும் இவற்றைப் பற்றி நன்றாய் யோசித்து, வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளவேண்டும். சாஸ்திரிகளுடைய அபிப்பிராயம் முக்கியமாய்த் தேவையாயிருக்கிறது. அவர்கள் சொல்வதை யநுசரித்துத்தான் மற்றவர்கள் பேசுவார்கள். ஆதலால், அதை முதலிற் பெறவேண்டும். கும்பகோணக் கான்பரன்ஸில் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசாதது மிகவும் விசனிக்கத்தக்கது. இது போன்ற குலாசார சம்பந்தமான விஷயங்களொன்றும் அங்கு கவனிக்கப்படவில்லையென்பதினால் பலர் அதிருப்தியடையலாயினர். பன்முறை நமது பத்திரிகையில் இவையெல்லாம் ஞாபகமூட்டப்பட்டும், விஷயாலோசனைக்கேற்பட்ட குலாபிமானிகள் அசட்டைசெய்ததினால் குலத்திற்கேற்பட்ட பாதகம் நீங்குவதில் தாமதம் நேரிட்டுவரலாயிற்று. மறு கான்பரன்ஸிலேனும் மறவாமல் இவர்கள் விவாகச் சீர்திருத்த விஷயத்தை ஆலோசனைக்குக் கொண்டுவராத் தவறமாட்டார்களென்று ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றேன்.

ந. முத்து.

### ஜாதீயக்கோண்டாட்டங்கள்

இவற்றைப்பற்றி பல மாதங்களுக்கு முன் வியாசங்களும் கடிதங்களும் நமது பத்திரிகையில் எழுதப்பட்டு வந்தபோதிலும், இப்ப[illegible] எழுதப்படக் காண்கிலேன். நமது குலப்பெரியோர்களுடைய ஞாபகத்தை அப்போதைக்கப்போது நமக்குக் கொண்டுவரக்கூடியவை இந்த ஜாதீயக்கொண்டாட்டங்களேயாகும். அவ்விதப்பெரியோர்களில் பண்டிதமார்க்க சகாய ஆச்சாரியார் ஒருவர், காவாந்தண்டலம்-தாண்டவாச்சாரியார் ஒருவர், டாக்டர் பழனியாண்டி ஒருவர், இன்னும் பலபேர்களுமிருக்கின்றனர். இவர்களுடைய வருஷாப்திகதினத்தை ஜாதியாரெல்லோரும் பிரதிவருஷமும் கொண்டாடி, அந்த தினத்தில் ஒன்றுகூடி ஒற்றுமைகாட்டி ஜாதி விருத்தாந்தங்களை விஸ்தரித்துப்பேசி, குலாபிமானத்தை யூட்டி, ஜாதிக்குறைபாடுகளை நீக்கவேண்டிய வழிகளை நிச்சயித்து, அவ்வழிகளில் பலரும் உழைக்கப் போதித்துவந்தால், ஜாதிக் காரியங்கள் வெகு விமரிசையாயிருக்கும். இப்படி ஒன்றுஞ்செய்யாமல் பழைய விதமாகவே யிருந்துவந்தால் நாம் எப்படித்தான் ஈடேறப்போகிறோம்?

க. சுந்தரேஸன்.

### ஒத்துப்பாருங்கள்

எல்லாதேசத்தாரும், எல்லா மதத்தார்களும், எல்லா ஜாதியார்களும் கல்வி யபிவிருத்திக்காக கட்டப்பட்டுழைத்து வருகிறார்கள். அவர்களுடைய முயற்சிகளோடு நம்முடைய முயற்சிகளை ஒத்துப்பார்க்கவேண்டும். ஒத்துப்பார்த்துக்கொண்டே உழைத்துவந்தால் மட்டுமே ஒருவாறு அவர்களைப் பின்பற்றி யிருக்கமுடியும். நமது பத்திரிகையில் பலருடைய கல்வி முயற்சிகளைப்பற்றி வெளிப்படும் விபரங்களைத் தூண்டுகோலாகக்கொண்டு ஒவ்வொருவரை நோக்கியும் சொல்லப்பட்ட வார்த்தைகளாக அவற்றை ஏற்றுக்கொண்டு நம்மவர்கள் கவனித்தொழுகுவது மிகவும் முக்கியம். உதாரணமாக, சென்ற மேமாதப்பத்திரிகையில், ஆரியவைசியருடைய கல்வி முயற்சிக்கு ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டப்பட்டது. இஞ்சினீரிங்வாசிக்க இவர்கள் இங்கிலாந்துக்கும் அமெரிக்கா முதலிய விடங்களுக்கும் செல்கிறார்கள். நாமோ உள்ளூரிலேயே படித்து விருத்திபெறவும் முன்வராமல் பதுங்குகிறோம். நாம் முன்னுக்கு வரமுடியுமா, மற்றவர்கள் முன்னுக்கு வரமுடியுமா? கஷ்டத்திற்குத் தகுந்த பலனல்லவா எவனுக்குங் கிடைக்கும்! கஷ்டப்பு

டாமல் வீண்பேச்சிலேயே காலங்கழித்துக்கொண்டு வந்தால் இன்னுமின்னும் பின்னமடைவோமென்பதில் சந்தேகமொன்றுங்கிடையாது. கல்வி.

## ஐக்கிய சங்கங்கள்

தோட்டிக்கு முதலாக இக்காலத்தில் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களும் பொருளைச் சிக்கனப்படுத்திச் சேர்த்துவைக்கப்பழகிவருகிறார்கள். மீளாக்கடன்பட்டு மிதக்கமாட்டாது அமிழ்ந்திருந்தவர்களும் ஐக்கிய சங்கங்களிற் சேர்ந்து அவதியற்று சுகமடைந்து வருகிறார்களென்று பத்திரிகையிற் படித்திருக்கிறோம். எல்லா ஜாதியாரும் இந்த ஐக்கிய சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களிலெல்லாம் முதன்மைப்பட்டிருப்பவர்கள் நமது ஆருஷேய சகோதரர்களே. என்றாலும், நமது விஸ்வகர்ம ஜாதியார் மட்டும் இந்த முயற்சியில் அதிகமாகக் கலக்காதிருக்கிறார்களென்றெண்ணுகிறேன். காஞ்சீபுரத்தில் நெசவுக்காரர்களுக்கென்று தனியாய் ஒரு ஐக்கியசங்கம் ஏற்பட்டிருப்பதுபோல், விஸ்வகர்மத் தொழிலாளிகளுக்கென்று தனியாக அவர்கள் அதிகமாய் வாசஞ்செய்யும் பெரும்பட்டணங்களிலெல்லாம் ஒரு கூட்டுறவுச்சங்கம் ஏற்படவேண்டும். அப்போது இவர்கள் தொழிலும் வியாபாரமும் பலப்படும். இந்த ஜாதியில் நல்லவேலைக்காரர்களாயிருப்பவர்கள் பெரும்பாலும் ஏழ்மையால் பிரகாசம் பெறாமலிருக்கிறார்கள். ஐக்கிய சங்கங்களில் இப்படிப்பட்டவர்கள் சேர்ந்துகொண்டால் சுலபமாய் பணங்கிடைக்கப்பெற்று தமது கைவேலைகளை பலருங்காண வெளிப்படுத்தலாம். இதுபோன்ற பலன்கள் அடையும்பொருட்டு இம்முயற்சியை நமக்குள் ஸ்தாபிக்க அறிவாளிகள் முன் வருவார்களாக.

கொவாபரேடர்.

## ஜாதிப்பிள்ளைகள்

நமது குலசம்பந்தமான காரியங்களில் இவர்கள் உதவியாயிருக்கச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ மதுரகவி-புதுவை-நடராஜாச்சாரியார் எழுதுகிறார். ஆனால், எம்மட்டும் இவர்கள் சகாயம் நமக்கு உபயோகப்படலாமென்பதை நன்றாய் ஆராய்ச்சிசெய்வது அவஸ்யமாயிருக்கிறது. வீட்டுக்குவீடு சென்று தங்கள் சாப்பாட்டிற்கு நாள் நியமித்துக்கொள்வதிலும், அங்கு சென்று சாப்பாட்டிற்குக் காத்துக்கொண்டிருப்பதிலும் இவர்கள் காலம் கழிந்துபோகிறது. ஆதலால், வேறு வேலைசெய்ய இவர்களுக்கு சாவகாசங் கிடைக்குமென்று தோன்றவில்லை. கூலிக்கோ சம்பளத்திற்கோ இவர்கள் கட்டுப்படுவார்களென்று எண்ணுவதற்கும் இடங்காணோம். ஏனென்றால், விதம்விதமான சாப்பாட்டை வயிறாரத் தினமும் சந்துஷ்டியுடன் சாப்பிடுவதைவிட்டு, சொற்ப வருவாய்க்கு இசைந்திருக்க மனங்கொள்ளமாட்டார்கள். அன்றியும், இவர்கள் ஊரூராய்த் திரிகிறவர்களாகவோ அல்லது சொற்பகாலம் ஒரூருக்கு வந்திருந்து பிறகு தங்களூருக்குத் திரும்புகிறவர்களாகவோ காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களில் ஒரு குடும்பத்தாரோ சில குடும்பத்தாரோ மற்றவர்களை விட்டுப் பிரிந்து ஒரூரில் சாஸ்வதமாய்க் குடியேறியிருக்க உடன்படமாட்டார்கள். வேண்டுமென்றால், இவ்விஷயம் கான்பரன்ஸ் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படலாம்.

M. சுந்தராச்சாரி.

## சமஸ்கிருதக் கல்வி

இது நமக்குள் க்ஷீணித்துப்போனதினாலேதான் நமது நிலைமை தவறிவிட்டதென்று நினைக்கிறேன். சமஸ்கிருதக்கல்வி நமக்குள் இப்போது பூஜ்ஜியமாய் விட்டது. பெரியபண்டிதர்களென்று மதிக்கப்பட்டிருப்பவர்களும் பிறரிடமிருந்து விஷயங்களைக் கேட்டறிய வேண்டியவர்களாயிருக்கின்றனர். சமஸ்கிருதத்திற்கும் நமக்கும் சம்பந்தமொன்றுங் கிடையாதென்ற நம்பிக்கைக்கு நம்மவர்களிற் பெரும்பாலர் வந்துவிட்டார்கள். நமது அழிவுக்கு வேறொரு காரணமும் வேண்டுமோ? வேதமந்திரங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கும் பௌரோகிதர்களும், சமஸ்கிருதக்கல்வியில் லட்சியம் வையாமல், வாய்ப்பாடமாக மந்திரங்களைமட்டுங் கற்றுக்கொண்டு ஜீவனந் தொடங்கிவிடுகிறார்கள். இதுவே போதுமென்று பகிரங்கமாய்ச் சொல்லிக்கொள்ளவும் அபிமானிகள் துணிந்திருக்கிறார்கள். இந்த லக்ஷணத்தில் யாருக்கு சமஸ்கிருதக் கல்வியில ஆசையுண்டாகப்போகிறது? சிற்பத்தொழிற்காரர்களுடைய குடும்பங்களில் பூர்வகாலத்தில் கொஞ்சம் சமஸ்கிருத ஞானமிருந்துவந்தது. இதுவும் நாளுக்குநாள் நசித்துப்போகிறது. சிற்றுளியால் தானே வேலை செய்கிறோம், சமஸ்கிருதத்தோடா வேலைசெய்யப்போகிறோமென்று சிற்பவம்ஸச் சிறுவர்கள் சொல்லுங்காலம் வந்துவிட்டது. இனி நாம் சீரழிவது ஆச்சரியமா? ஈழவர்கள் முதலானவர்களும் சமஸ்கிருதம் வாசிக்கிறார்களென்றும், வருஷாவருஷம் சமஸ்கிருதம் வாசிக்கும் ஈழவர்களின் தொகை அதிகமாய்க்கொண்டு வருகிறதென்றும் நமது பத்திரிகையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. காட்டப்பட்டுமென்ன? நமக்கு அதில் நாட்டமுண்டாகப்போகிறதா? வித்தியார்த்தி



## இஞ்சியின் விசேஷ குணங்கள்

(வைத்திய கலாநிதி.)

இதற்கு ஒருவித நறுமணமுண்டு; இது வயிற்றில் சேரும் வாயுவை ஹரிக்கும்; உத்ஸாஹத்தையும் உத்தீபநமும் செய்யும். (1) ஆகவே அஜீரணத்திலும், வயிற்றுப் பொருமலிலும், இறைப்பையின் இசிவிலும் உபயோகிக்கக்கூடிய சரக்கு. (2) வயிறுளைத்தலையும் குமட்டலையும் அடக்குவதற்காக ஆமணக்கெண்ணெய் முதலிய விரேசன ஔஷதங்களுடன் இதன் சாற்றைக் கூட்டிக் கொடுப்பது உத்தமம்; அல்லது இதன் ஒரு சிறு துண்டையாவது அவ்வித ஔஷதமுண்ட பிறகு இந்துப்புடன் கடித்து மென்று விழுங்கலாம். (3) உலர்ந்த இஞ்சியைக் கொண்டு வீட்டில் அவரவர்களே ஒருவித ஔஷதம் பின்வருமாறு தயார் செய்துகொள்ளலாம். சுக்கை ஒன்றிரண்டாக உடைத்து அதில் 3-பலமெடை யெடுத்து இருபது அவுன்ஸ் ப்ராண்டியில் சேர்த்து, 10-நாட்கள் வரையில் ஊறவைத்து, அப்பால் திராவகத்தை மட்டும் வடிக்கட்டி ஒரு புட்டியில் போட்டு வைத்துக் கொள்ளவும்: இதில் ஒரு தேக்கரண்டி யளவோ அல்லது அதற்குச் சிறிது அதிகமாகவோ விரேசன ஔஷதங்களில் கலந்து கொடுக்கலாம்; இவ்வௌஷதம் வயிற்றில் சேர்ந்துள்ள புளிப்பைப் போக்குவதில் சிறந்த வீர்யமுள்ளது; அஜீர்ணத்தையும் வயிற்றுப் பொருமலையும் போக்குவதற்கு இதை மட்டுமோ அல்லது அவ்வித குணமுள்ள வேறு ஔஷதச் சரக்குகளுடன் கூட்டியோ கொடுக்கலாம். (4) ஒரு பலம் சுக்கை வறுத்து உடைத்து, அரைப்படி ஜலத்தில் போட்டு, பாத்திரத்தின் வாயை மூடி ஒருமணி நேரம் காய்ச்சி வடிக்கட்டி யெடுக்கவும். இக்கஷாயத்தை வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வாந்தி, குடல் முதலியவற்றிலுண்டாகும் உளைத்தல் என்னும் இந்நோய்களில் 1-அல்லது 2-அவுன்ஸ் அளவாக ஒரு மணிக்கு ஒரு முறை இளஞ்சூடாக உட்கொண்டு வந்தால் சீக்கிரத்தில் நற்குண முண்டாகும். உஷாக்ஷாரம் என்கிற ஸோடாவுப்பும் இக்கஷாயத்தில் சிறிதளவு சேர்க்கப்படுமானால் முற்கூறிய இதன் குணங்கள் அதிகமாய் உபயோகிப்பவருக்கு வெகு சீக்கிரத்தில் சௌக்கிய மேற்படும். குழந்தைகளுக்கு ஒரு தேக் கரண்டியளவு கஷாயம் போதுமானது. (5) சுமார் 6-அவுன்ஸ் ஜலத்தில் $\frac{1}{2}$ பலம் சுக்கை நறுக்கிப் போட்டுக் கொதிக்கவைத்து வடிக்கட்டி யெடுக்கவும்; இதை ஆமவாத மென்னும் ஒருவித கீல் வாயுவில் இரவில் படுக்கும் போது உஷ்ணமாகவே குடிக்கக் கொடுத்து, துப்பட்டியால் உடம்பைப் போர்த்து விட விசேஷமாக வியர்வை யுண்டாய் குறிப்பிடக் கூடியவாறு சீக்கிரத்தில் குணமுண்டாகும். முறைக் காய்ச்சல்களிலும் ஜலதோஷம் முதலிய வற்றால் கபம் அதிகரித்திருக்கும் போதும் இதே கஷாயத்தை இவ்விதமே உபயோகிக்க வெகு சீக்கிரத்தில் ஸௌக்கிய முண்டாவதுண்டு. (6) இஞ்சியை யாவது சுக்கையாவது சிறிது ஜலம் விட்டு நுண்மையாக அரைத்துக் கொதிக்கவைத்து சுடச் சுட நெற்றியிலும் தலையிலும் பற்று போட்டால் பலவித காரணங்களாலுண்டாகும தலைவலி தீரும்.

## தொழிற்றுறைகள்

சென்ற 1914-ம் வருஷத்திலே வெளிநாடுகளிலிருந்து, சுமார் 13-லட்சம் பவுன் அதாவது 195-லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கண்ணாடி சாமான்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. அதில் ஆஸ்டிரியா, ஜெர்மனி இவ்விரண்டு தேசங்களிலிருந்தும் இந்தியாவுக்கு வந்துள்ள சாமான்களின் கிரயம் சுமார் 8-லட்சம் பவுனாகும். ஆஸ்டிரியாவிலிருந்து மட்டும் சுமார் நாலரை லட்சம் பவுன் மதிப்புள்ள கண்ணாடி வளையல்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன.

*
* *

1915ஹு டிசம்பர்மீ 31உ யோடு முடிவாகிற அரை வருஷத்திற்கு சென்னை பக்கிங்ஹாம்மில் கம்பெனி (லிமிடெட்) யின் ரிபோர்ட்டின்படி கட்டிடங்களும் யந்திரங்களும் க்ஷீணதிசையடைந் திருப்பதற்கென்று ஒரு லட்சத்து 15-ஆயிரத்து 827-ரூபாய், 2-அணா. 9-பைசா எடுத்துவைத்தது போகக் கிடைத்துள்ள லாபத் தொகை 94-ஆயிரத்து 193-ரூபாய் 1-அணா 11-பைசா ஆகும். முந்திய ஆறுமாதத்தில் விநியோகஞ் செய்ததுபோக மீதியுள்ள லாபத்தொகையானது 36-ஆயிரத்து 16-ரூபாய், 7-அணா 6-பைசாவையும் கூட்டினால் மொத்தம் ஒருலட்சத்து 30-ஆயிரத்து 209-ரூபாய் 9-அணா 5-பைசா ஆகிறது. அதே அரை வருஷத்திற்கு கர்னாடிக் மில் கம்பெனியின் (லிமிடெட்) ரிபோர்டின்படி கட்டிடங்களும் யந்திரங்களும் க்ஷீண திசை யடைந்திருப்பதற்கென்று ஒரு லட்சத்து 5-ஆயிரத்து 571-ரூபாய் 11-அணா 7-பைசா எடுத்துவைத்தது போக, இலாபம் கிடைத்துள்ள தொகையானது 71-ஆயிரத்து 981-ரூபாய், 15-அணா 1-பைசா ஆகும். முந்திய அரை வருஷத்தில் பட்டுவாடா ஆனது போக மீதியுள்ள லாபத் தொகையான 6604-ரூபாய், 6-அணாவையும் மேற்படி லாபத் தொகையுடன் கூட்ட 78-ஆயிரத்து 675-ரூபாய், 5-அணா, 11-பைசா ஆகிறது.

1913—14-ம் வருஷங்களிலே, சண்டை ஆரம்பிப்பதற்கு முன், வெளிதேசங்களிலிருந்து அடியில் விவரித்திருக்கும் மாதிரி தினசரிச் செலவுக்கு வேண்டியிருக்கும் சாமான்களை வரவழைத்திருக்கிறோம்.

இறக்குமதி விவரம்

| | ரூபாய் |
|---|---|
| பெப்பர்மன்டு வகையரா மிட்டாய்கள் | 26,33,007 |
| டப்பிகளிலும், வீஸாக்களிலும் அடைந்த பதார்த்தங்கள் | 56,69,000 |
| கட்டிப்பால் வகையரா | 41,52,000 |
| பிஸ்கோத்துகளும், கேக்குகளும் | 44,81,000 |
| காகிதங்களும், காகித அட்டைகளும் | 1,58,77,000 |
| வளையல்கள் | 80,45,000 |
| புட்டிகளும், குப்பிகளும் | 21,93,000 |
| தகடுகளும், தட்டுகளும் | 12,35,000 |
| புனல்களும், குழோபுகளும் | 17,9[illegible],000 |
| சோப்புகள் | 75,06,000 |
| பூட்ஸுகளும், செருப்புகளும் | 79,26,000 |
| எழுதுவதற்கான சாமான்கள் | 69,98,000 |
| குடைகளும், அதற்குத்தகுந்த சாமான்களும் | 53,10,000 |
| விளையாட்டுச் சாமான்கள் | 44,1[illegible],000 |
| கத்தி முதலிய சாமான்கள் | 28,33,000 |
| பதனிட்ட தோல்கள் | 15,37,000 |

***

"காடுகளில் விளையும் அருமைப் பொருள்கள்" என்பதைப்பற்றி காட்டிலாகாவில் வேலை பார்க்கும் மிஸ்டர் ரே போர்ன் செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம் பின் வருமாறு:—காட்டில் பல பொருள்கள் விளைவதனால் மனிதருக்கு மிக்க பலனுண்டு. மேலும் சீதோஷ்ணநிலைமையானது காடுகள் இருப்பதனால் ஒழுங்குபட, அதனாலும் மனிதருக்கு அனுகூலம் ஏற்படுகிறது. காடுகளைச் சரிவரக் கவனிக்க வேண்டியதவசியமென்று 1842-ம் வருஷத்திலே வெளியாயிற்று. இந்த ராஜதானியிலே காடுகளின் விஸ்தீரணம் 17-ஆயிரத்து 816-சதுர மைல் ஆகும். அக்காடுகளை நன்கு கவனிப்பதற்கு ஏற்ற மதிப்புத் திட்டங்கள் சீக்கிரத்தில் ஏற்படுவது அவசியமாக, 11-ஆயிரத்து 286-சதுர மைல் கொண்ட காடுகளை கவனிப்பதற்கு ஏற்ற மதிப்புத் திட்டங்கள் 1913-14 ம் வருஷத்தில் தயாராயின. ஆயினும், அவைகள் முழுவதும் அவ்வாறே கவனிக்கப்படவில்லை. அவ்விதம் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், வேண்டிய அளவு காட்டிலாகா அதிகாரிகளும் சிப்பந்திகளும் இல்லா திருப்பதேயாம். தீக்குச்சி செய்வதற்கு ஏற்ற மரங்கள் இன்னின்னவென்பதைக் கண்டு பிடிக்கும் பொருட்டு மிகுந்த சோதனைகளும் ஆராய்ச்சிகளும் நடத்தப் பட்டுள்ளன. உலகத்திலே நாகரீகம் பெற்ற ஜாதியார்களோ நிமிஷ மொன்றுக்கு 30-லட்சம் தீக்குச்சிகளைத் தயார் செய்து வருகின்றனர். 1913-14-ம் வருஷத்திலே இந்தியாவில் ஒரு கோடியே 60-லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் செலவா யிருக்கின்றன. (ஒரு குரோஸ் என்பது 144-உருப்படி கொண்டது) அத்தொகையில் 10-லட்சம் குரோஸ் தீப் பெட்டிகள் தான் இந்தியாவில் செய்யப்பட்டன. தீக்குச்சிகள் செய்வதற்கு ஏற்ற மரங்கள் பல, இந்தியாதில் உள்ளன. அம்மாதிரியான மரங்களில் எட்டுவகை மேற்குத் தொடர் மலையில் உற்பத்தியாகின்றன. தேயிலைப் பெட்டிகள், சுருட்டுப் பெட்டிகள் முதலியன செய்வதற்கு ஏற்ற மிருதுவான மரங்கள் பலவும் மேற்குக் கடற் கரையிலே ஏராளமாய் விளைகின்றன. அவ்வாறு மிருதுவான பல மரங்கள் இருப்பதில் பென்சில் செய்வதற்கு ஏற்றதாக 5-வகை மரங்கள் உளவென்று தெரிகிறது. கடுதாசி செய்வதற்கு மூங்கில் நன்கு உபயோகமாகுமென்றும் வெளியா யிருக்கிறது. இந்தியாவில் பயிராகும் மரங்களிலே மூங்கிலினால்தான் மிக்க பலன் கிடைக்கும். ஸ்வீடன் தேசக் கம்பெனியா ரொருவர் தங்களுடைய நிபுண ரொருவரை இந்தியாவுக்கு அனுப்பவே, அவர் இங்கு வந்து பரிசீலனை நடத்தி வந்தார். கடுதாசி செய்வதற்கு அனுகூலமாக அவர்களுக்கு வருஷந்தோறும் 20-ஆயிரம் டன் எடையுள்ள மூங்கில் இலகுவில் கிடைக்குமென்று அவர் மதித்திருக்கிறார். இந்தியாவிலுள்ள காடுகள் நமது ஆஸ்தியாகும். ஆகவே, அவைகளால் நமக்கு க்ஷேம லாபங்கள் உண்டாகுமென்று அவைகளின் நிர்வாகத்தை கவர்ன்மெண்டார் விருத்திசெய்து வருகின்றனர்.

---

ஹிந்து யூனிவர்ஸிடி.—இதின் பொதுப்பண்டிற்காக ரூபாய் இரண்டு லக்ஷமும், 10 வருஷ கால அளவு வருஷவாரியில் பன்னீராயிர ரூபாயும் கொடுத்து வருவதாக மைசூர் மகாராஜா சொல்லியிருக்கிறார்.



## சண்டையைச் சார்ந்தவை

ஆஸ்ட்ரியாவில் ராணுவத்திற்குச் சேர்க்கப் பட்டவர்களின் வயது 55-வரையிலும இருக்கலாம் என்று வயது வரையறை உயர்த்தப் பட்டிருக்கிறது.

***

பட்டத்திற்கு வரவேண்டிய துருக்கிய இளவரசரான 1-பிரின்ஸ் ஜூஸிப் இஸ்டின் என்பவர் நோய் காரணமாக தற்கொலைசெய்துகொண்டுவிட்டாரென்று, கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்துகிடைத்த தந்தியொன்றால் தெரியவருவதாக ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது.

***

ஐர்லாண்டில் ராணுவச் சேவகத்தில் சேர்ந்தவர்களின் விவரத்தைப்பற்றி லார்ட் விம்போர்ன் என்பவர் பேசிய பிரகாரம் தெரியவருவதென்னவென்றால்-யுத்தம் ஆரம்பித்தது முதல் 86227-பேர் இதுவரையில் சேர்ந்திருக்கிறார்கள். சேனையிலும், கடற்படையிலும் சேர்ந்திருக்கும் ஐர்லாண்டு ஜனங்களின் மொத்தம் 1,45,869-இன்னும் 4,00,000-சேருவதற்கு சித்தமாயிருக்கிறார்கள்.

***

ஆசியாத் துருக்கிக்கு தென்பாகத்தில் யூப்ரடிஸ், டைக்ரீஸ், என்ற இரண்டு நதிகளின் மத்தியிலிருக்கும், மெஸப்பொடேமியா என்ற மாகாணத்துப் போர் முனையி லிருக்கும் ஸோல்ஜர்களுக்கு ஆகாராதிகளை சப்ளைசெய்வதற்கும் மூட்டைகளையும் சாமான்களையும் கொண்டுபோவதற்கும் ஆட்கள் வேண்டியிருப்பதால், ஆட்களைச்சேர்த்து அனுப்புவதற்காக பெரம்பூரிலுள்ள 2 லெப்டினெண்டுகள், ஜனவரி மாதம் 10-ந் தேதியன்று பிரயத்தினஞ் செய்து 600 கூலியாட்களை சேர்த்தனுப்பியிருக்கிறார்கள். அக்கூலியாட்கள் கொஞ்சம் நாட்களுக்கு முந்தி சென்னை நகரிலும், அதைச் சுற்றிலுமுள்ள ஸ்தலங்களிலும், ரிக்ஷாவண்டிகளை இழுக்கும் தொழிலையும் மூட்டைகளைச் சுமக்கும் தொழிலையும் இன்னும் இவ்விதத் தொழில்களையும் செய்துவந்தவர்கள் என்று மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறது.

## அதிமதுரம்

சொர்க்கபுரம் ஆதீனத்தைச்சேர்ந்த கூழங்கைத்தம்பிரான் என்பவர் மடத்தில் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குப்போய்ச் சிலகாலம் வசித்துவந்தார். அவ்விடத்தில் கோவிந்தமுதலியார் என்ற ஒரு பிரபலதனவந்தர் இருந்தார் ஷை முதலியாருக்கும் ஷை தம்பிரானுக்கும் ஏதோ சில காரணங்களால் விரோதம் மேலிட்டு ஒருவர்க்கொருவர் பேச்சுவார்த்தைகூட இல்லாமலிருந்தனர். அப்படி யிருக்குங்காலத்தில் முதலியாரவர்களுடைய பசுமாடு ஒன்று காணாமற் போய்விட்டது. ஊரெல்லாம் தேடியும் அகப்படவில்லை. தம்பிரான் சுவாமிகள் அடுத்த கிராமத்துக்குப்போய்த்திரும்பி வருகிறஇடத்தில் ஷை பசுமாடு நிற்கக்கண்டு தம்பிரான் சுவாமிகள் பசுவை ஓட்டிக்கொண்டு முதலியார் வீட்டுக்கொல்லைபுறமாகவந்து "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூவினர். எல்லோரும் திடுக்கிட்டு ஆ! ஆ! இது என்ன அநியாயம் தம்பிரான் சுவாமிக்கு அனர்த்தகாலம் வந்துவிட்டது. இதுவரையிலும் யாரும் இந்தமாதிரி கூப்பிட்டதில்லையே யெனத் திகைத்து நிற்க, ஷை முதலியாரும் அதிகக்கோபத்துடன் தம்பிரானை உற்றுநோக்கத் தம்பிரான் மறுபடியும் (கோ—இந்தா) என்றனர். உடனே முதலியார் அதன் உண்மையையறிந்து தாம் முன் தம்பிரானிடம் வைத்திருந்த பகைமை நீங்கி அதிக உபகாரம் செய்தனராம். (கோ—பசு—இந்தா)

சென்னையில் இராமசாமிப்புலவர் என்று ஒரு பிரபல வித்வானிருந்தார். அவரை ஒரு தனவந்தர் வீட்டில் நடந்த விவாக விருந்துக்கு அழைத்திருந்தார்கள். வித்துவான்போய் பந்தியில் போஜனஞ்செய்துகொண்டிருக்கும்போது பந்தியில் குழம்புரசம் முதலிய போஜனம் ஆனவுடன் பரிமாறும் பரிசாரகர்கள் பாயசம் படைப்பதற்காக "பாயசம் பாயசம்" என்று சொல்லிக்கொண்டு பந்தியில் நுழைந்தவுடன் மேற்படி புலவர் பந்தியைவிட்டு அடே அப்பா! செத்தேன்! பிழைத்தேன்! என்று ஓட்டம் பிடித்தார். பந்தியிலிருந்தவர்களும், மற்றவர்களும் திடுக்கிட்டு என்ன ஐயா? ஆபத்து என்று புலவர்பின் ஓடிக்கேட்க அவர் பாடசம் வருகிறதாமே! அது ஓடிவந்தால் குடலைக் குத்திச் சரித்துவிடுமே. அதற்குப்பயந்துதான் ஓடுகிறேன் என்றாராம்! பாய்—பாயும்படியான அசம்—ஆடு என்பது கவனிக்கத்தக்கது. எல்லாரும் விலாப்புடைக்கச் சிரித்து மகிழ்ந்தனர்.

நாகை-நீலலோசனி.

## விசேஷ வர்த்தமானம்

**புதுரயில்பாதை.**—விழுப்புரம் காட்டுப்பாடி லயனிலிருந்து ஆரணியுடன் மதுராந்தகத்தைச்சேர்த்து ரயில் போடுவதற்கான யோசனை செய்யப்பட்டு வருகிறது.

*
* *

**ஒரு பெண்ணின் தற்கொலை.**—மத்திய இந்தியாவிலுள்ள ஒரு பிராமணப்பெண் தன் புருஷன் இறக்குந்தருவாயிலிருந்ததைப்பார்த்துச் சகியாமல், ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலைசெய்துகொண்டு பிராணனை விட்டாள். அவள் மரித்த கணவனுடனே சேர்த்து தகனம் செய்யப்பட்டாளென்று பானிபட் நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

*
* *

**புருஷவேஷத்தில் புறப்பட்டாள்.**—வங்காளத்தில் லிப்பூர் என்ற ஊரில் மகமதியனொருவன் மனைவி, தன் கணவன் தன்னை நடத்தும்மாதிரி பொறுக்காமல் தன் புருஷன் உடுப்புகளைத்தரித்துக்கொண்டு தன்னுடைய பிறந்த அகம் போக வெளிப்பட்டு ஹௌரா ஸ்டேஷனுக்கு வந்து, ஸ்டேஷனில் ரெயில் ஏறப் பிரயத்தனப்பட்டாள். இவள் குரலினாலும், பார்வையினாலும் சந்தேகித்த போலீஸாரில் ஒருவன், இவளைப் பிடித்து விசாரிக்க, உண்மையை இவள் சொல்லப் பின்னால் இவளைத்தன் கணவனிடத்தில் ஒப்புவித்தார்கள் என்று இந்தியன் டெயிலி நியூஸ் கூறுகிறது.

*
* *

**கௌதம புத்தரின் அஸ்தி.**—தட்சசீல மென்றும் டாக்ஸில்லா என்றும் வழங்கப்படும் மலைகளின் சிகரங்களில் அநேக விதமான ஸ்தூபிகளில் அடக்கம் செய்யப்பட்டு கௌதம புத்தரின் பூர்வீக நாகரீகச் சின்னங்கள் சென்ற சில வருஷ காலங்களாய் அகப்படுகின்றன. இவை சுமார் 1900 வருஷங்களுக்கு முன் இங்கு வைக்கப்பட்டதாகவும் உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட பாத்திரங்களில் அடக்கஞ் செய்யப்பட்ட வெள்ளி பொன், வயிரக் கற்கள் நாணயங்கள், நகைகளுடன் அகப்படுவதாகவும் தெரிகிறது. அந்தச் சின்னங்களில் ஒன்று கௌதம புத்தரால் ஆசீர்வதித்து வைக்கப்பட்டதாம். மற்றைய சின்னங்கள் அவரதும், அவரது சிஷ்யர்களதுமாகும். இவைகளெல்லாம் பூர்வகாலத்து பூஜ்யதைக் குரியனவாயிருந்தன.

**தைரியமிக்க ஸ்திரீ.**—நல்ல உடுப்பு தரித்த மூன்று வங்காள வாலிபர்கள் கல்கத்தாவில் ஜாடுமணி தேசாய் என்பவள் வீட்டிற்குள் போனார்கள். நாலாவது பேர் வழியும் உள்நுழைந்து கதவைத்தாளிட்டு, உள்ளே சென்று அந்த ஸ்திரீ சத்தமிடாமலிருந்தாலல்லது சுட்டு விடுவதாகச் சொன்னான். இப்படிச்சொல்லியும் கேட்காமல் அவ்வீட்டுக் குடையவள் சத்தமிட்டுக்கொண்டு தன் வீட்டு மாடியின் மேலேறி, தன்னுடைய அறையைத் தாளிட்டு, மாடியின் உயரப் போய்ப் பெருங் கூச்சலிட்டாள், ஜனங்கள்வந்து என்னென்று கேட்பதற்குள் உள்நுழைந்த நால்வரும் தப்பியோடி விட்டார்கள் என்று ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை கூறுகிறது.

*
* *

**பெட்டியில் குழந்தை.**—லக்நௌ பட்டணம் வட இந்தியாவில், ஐக்கிய மாகாணங்களில் அயோத்திக்கு அருகிலுள்ளது. அந்தப்பட்டணத்து ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நாள் ஸ்டேஷனைப் பெருக்குகிறவன், ஒரு தோல் பெட்டி வெகு நாழிகை வரையில் கேள்விமுறையில்லாமல் ஒரு பக்கத்திருப்பதைப் பார்த்து, இவ்விஷயத்தை ஸ்டேஷன் மாஸ்டருக்கு அறிவித்தான். ஸ்டேஷன் மாஸ்டர் அவ்விடம் வந்து அப்பெட்டியைத் திறந்து பார்க்க, அதில் சிறியதோர் குழந்தையைக் கண்டார். ஒருவேளை அது செத்துப்போயிருக்குமோவென்று அதனை உற்று நோக்குகையில், அஃது திடீரென்று அழுவதைக் கண்டு உடனே அக்குழந்தையை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார் என்று வட இந்தியா அட்வோகேட் பத்திரிகை கூறுகிறது.

*
* *

**ரயில்வே கம்பெனியாரின்மீது வியாஜ்ஜியம்.**—மைசூரிலிருக்கும் சதாஜி படாம்ஜி என்ற ஒரு வியாபாரி கதக் சமஸ்தானத்திலிருக்கும் தமது ஏஜெண்டால் தமக்கு அனுப்பப்பட்ட 60,000-ரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள் அடங்கிய இரண்டுபெட்டிகள் தமக்கு வந்து சேராததினால், தமக்கு 60,000 ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று மதராஸ் அண்டு ஸதர்ன் மராட்டா ரெயில்வே கம்பெனியாரின் மீது சென்னை ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியஞ் செய்தார், கதக் சமஸ்தானத்திலிருக்கும் மைசூர் வியாபாரியின்



ஏஜெண்ட் ரெயில்வே ஆக்ட் 75-வது செக்ஷன்படி அனுப்பாததினால், அந்த ரெயில்வே கம்பெனியார் நஷ்டத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வியாபாரிக்குப் பணத்தைக்கொடுப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை யென்று கம்பெனியின் பக்கம் வக்கீல்கள் வாதாடினார்கள். ஹைகோர்ட்டார் இவ்வழக்கை தள்ளிவிட்டார்கள். தீர்க்க குறித்தார்கள்.

*
* *

**புதுச்சேரி ஜெயிலிலிருந்து ஓட எத்தனம்.**—புதுச்சேரி ஜெயிலிலுள்ள கைதிகள் சென்ற மாதம் 19உ வழக்கப்படி வேலை செய்ய வெளியே போனவுடன் திடீரென ஒரு சத்தம் கேட்டது. உடனே எல்லோரும் ஓடிக் காவற்காரர்களை அடித்து அவர்கள் கையிலிருந்த துப்பாக்கி வகையராவைப் பிடுங்கிக்கொண்டு நடுக்கதவண்டை போவதற்குள் அங்கிருந்த காவல்காரன் ஓடிப்போய் மேலுத்தியோகஸ்தருக்கு அறிவித்து விட்டான். அவர் ஓடிப்போய் கைதிகளின் மேல் சுட்டு, சிலர் காயம்படுகிற வரையில் கைதிகள் அடங்கவில்லை. காயம் பட்டவர்கள் உடனே ஹாஸ்பிடலுக்கு அனுப்பப்பட்டார்கள். வெகு நாளாக நடந்த யோசனையின் மேல் இந்தக் காரியம் நடந்ததாகத் தெரிகிறது. விசாரணை நடந்து வருகிறது.

*
* *

**பிரம்மாண்டமான மீன்கள்.**—ஸிலோனிலுள்ள கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைந்த ஜப்பானியக் கப்பலைப் பின்தொடர்ந்து துறைமுகத்துள் இரண்டு பெரிய மீன்கள் நுழைந்தன. அக்கப்பலிலுள்ளோர் சிலர் ஆகாராதிகளைச் சமுத்திரத்தில் எறிந்துகொண்டேவர, அவைகளைத் தின்றுகொண்டே அம்மீன்கள் துறைமுகத்தில் நுழைந்தனபோலும். அம்மீன்களைப் பிடித்து அளந்து பார்த்ததில் அவை 35 அடி நீளமுள்ளனவென்று தெரியவந்தது. துறைமுகத்தினுள் நுழைந்து சற்று நேரத்திற்குள் அவை அப்படியு மிப்படியும் புரண்டு தாமிருக்குமிடத்தைக் காட்டிக்கொண்டதாகத் தெரியவந்தது என்று ஸிலோன் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

*
* *

**நெற்பயிர்.**—1915-வருஷம் டிஸம்பர் மாதம் 1 தேதி வரைக்கும் சென்னை ராஜதானியில் நெற்பயிர் சாகுபடி செய்ததின் மொத்த திட்டம் சுமார் 10,236,300-ஏக்கர்கள்; அதாவது போன வருஷத்தில் சாகுபடி செய்ததைக்காட்டிலும் 100-க்கு 5½-வீதம் அதிகம் சாகுபடி செய்திருக்கிறார்கள். வங்காளத்தில் இரண்டு மூன்று வருஷங்களாக நெற்பயிர் செழிக்காமல் தவறிப்போய் இந்த வருஷம் அது நன்றாய் விளையுமென்று தோன்றுகிறபடியால், அந்த மாகாணத்திலிருந்து நாலு பக்கங்களிலும் நெல் ஏற்றுமதியாகும். சென்ற சில வருஷங்களாக வங்காளத்துக்கு வேண்டியிருந்த நெல் பர்மாவிலிருந்தும் தென்னிந்தியாவி லிருந்தும் தருவிக்கப்பட்டது. இப்போது வங்காளத்தில் நெற்பயிர் குறைவில்லாம லிருப்பதோடு கூட தென்னிந்தியாவிலும் இதுவரையில் வேர்க்கடலை பயிர் செய்யப்பட்டு வந்த நிலங்களில் நெற்பயிராகி வருகிறபடியால் அங்கும் நெல் வேண்டுமான வரையில் விளைந்து அவசியமான இடங்களுக்கு அனுப்பப்படும்.

*
* *

**வக்கீல்கள் வருமானம்.**—இங்கிலாந்தில் தங்களிடம் வருகிற பெரிய கேஸுகளுக்கு பிரபல வக்கீல்கள் கோர்ட்டுகளில் வாதம் செய்வதற்காகக் கட்சிக்காரரிடமிருந்து 10,000 பவுன் முதல் 50,000 பவுன் வரையில் வாங்கி வருகிறார்களெனத் தெரியவருகிறது. இங்கிலாந்தில் ராபர்ட் எம். மார்க்ஸ் என்னும் பிரபல வக்கீல் உயில் சம்பந்தமானதொரு கேஸில் வாதித்ததற்காகச் சமீபகாலத்தில் 50,000 முதல் 60,000 பவுன் வரையில் பிரதிப்பிரயோஜனம் பெற்றார் எனத் தெரிகிறது. அந்தக்கேஸ் எதிர்கட்சி வக்கீல்களில் இருவர் தலைக்கு 20,000 பவுன் பிரயோஜனம் பெற்றார்களெனத் தெரியவருகிறது. மிஸ்டர் மார்ஸ் ஒரு கேஸில் வாதித்ததற்காக இவ்வளவு பணம் வாங்கினதற்கு முன்னால், மிஸ்டர் ஏ. ஸி. ப்ளாச் என்பவர் ஸ்டாண்டர்ட் ஆயில் கேஸ் சம்பந்தமாய் 40,000 பவுன் வாங்கியிருந்தார். அமெரிக்காவில் எச். டப்ள்யூ சாப்லின் என்பவரும் சில பிரபல கேஸ்களில் வாதத்திற்காக 20,000 பவுன் வாங்கினதாகத் தெரியவருகிறது என்று "டிட்பிட்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

*
* *

**ஒரு தந்திரம்.**—போனமாதம் 26-ந் தேதி யன்று புத்தூர் ஸப் போஸ்ட் மாஸ்டரின் மனைவியான பங்காரு அம்மாள் என்பவள் பேஸின் பிரிட்ஜ் ஸ்டேஷனிலிருந்து புத்தூர் ஸ்டேஷனுக்கு ரயிலில் பிரயாணஞ் செய்

தான். அதே வண்டியில் அந்த அம்மாளின் சமீபத்தில் ஒரு மனிதனும் ஒரு ஸ்திரீயும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். திருவள்ளூருக்கும் ...ணூர் ஸ்டேஷனுக்கும் இடையில் ரயில் போய்க்கொண்டிருந்தபொழுது அந்த மனிதன், அந்த அம்மாளின் குழந்தைக்குக் கட்டியிருந்த தங்க அரைமூடியை நிரம்ப சாமர்த்தியத்துடன் கழற்றிவிட்டான். அச்சமயம், அந்த ஸ்திரீ மேற்கண்ட பங்காரு அம்மாள் தன் குழந்தையின்பேரில் கவனத்தைச் செலுத்தாமல் இருக்கும்படியாய் அவளுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தாள். இந்த விஷயம் ரயிலில் பிரயாணஞ்செய்யும் சென்னை போலீஸான மாசிலாமணி என்ற கான்ஸ்டேபிலினிடம் அறிவிக்கப்பட, கான்ஸ்டேபில் சோதனை செய்யவே அந்த நகை அந்த மனிதனிடமிருந்து கண்டெடுக்கப்பட்டது. அவர்கள் இருவரும் அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

*
* *

**இந்தியன் ஸிவில் ஸர்விஸ்.**—இவ்விஷயமாய் அமிருத பஜார் பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது:—

இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள இந்தியன் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களின் தொகை எவ்வளவு, அவர்களில் இந்தியரின் தொகை எவ்வளவு, ஐரோப்பியர்களின் தொகை எவ்வளவு என்பதைக் கீழே காணலாம்.

| | மொத்தம். | ஐரோப்பியர். | இந்தியர். |
|---|---|---|---|
| வங்காளம் | 174 | 162 | 12 |
| பம்பாய் | 185 | 173 | 12 |
| சென்னை | 176 | 165 | 11 |
| அஸ்ஸாம் | 45 | 44 | 1 |
| பீஹார் ஒரிஸா | 116 | 111 | 5 |
| பர்மா | 127 | 125 | 2 |
| மத்திய மாகாணம் | 97 | 93 | 4 |
| பஞ்சாப் | 150 | 145 | 5 |
| வடமேற்கு மாகாணம் | 15 | 15 | 0 |
| ஐக்கிய மாகாணம் | 239 | 227 | 12 |

ஆகவே ஸிவில் ஸர்விஸில் மொத்தம் 1324-உத்தியோகஸ்தர்கள் இருக்க, அவர்களில் 1260-பேர் ஐரோப்பியர்கள்; மீதி 64-பேரே இந்தியர்கள். அதாவது 100-க்கு சுமார் 5-பங்கே ஸிவில் ஸர்விஸில் இந்தியர் வேலைபார்த்து வருகிறார்கள்.

**ஸ்திரீகளுக்கு மெடிகல் காலேஜ்.**—இந்தியாவிலுள்ள வைத்தியத்தொழிலை யனுஷ்டிக்கும் ஸ்திரீகளின் சங்கத்தைச் சேர்ந்த தெற்கு டிவிஷன் கான்பரென்ஸ் ஒன்று மெடிகல காலேஜில் லேடி பெண்ட்லண்டின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று வேலூரில் கியாதிபெற்ற மிஷினெரி லேடிடாக்டரான டாக்டர் ஜெ. ஸ்கட்டெர், ஸ்திரீகளுக்கு மெடிகல் காலேஜ் ஒன்று அவசியம் என்பதைப்பற்றியும், அதில் ஸ்திரீகளே உபாத்திமார்களாக இருந்து வரவேண்டுமென்பதைப் பற்றியும், அவ்வித காலேஜ் ஒன்று ஏற்பட்டால் அத்தொழிலுக்குத் தயாராக்குவதற்காக இந்தியர்கள் அவர்களுடைய பெண்களை அதற்கு அனுப்பக்கூடுமென்பதைப் பற்றியும் ஒரு வியாசத்தைப்படித்தார். இந்தியப் பெண்கள் ஆண் பிள்ளைகளுடன் மெடிகல் ஸ்கூல்களில் சேர்ந்து படிக்கலாம் என்ற விஷயத்தை வற்புறுத்த முடியாது. ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமாய் மெடிகல் காலேஜ் ஒன்று ஏற்பட்டால், இந்தியப் பெற்றோர்கள் அவர்களுடைய பெண்களை அவ்வித காலேஜுக்கு அனுப்பப பின்வாங்கமாட்டார்கள். அப்படிச் செய்தால் பல இந்தியப் பெண்கள் மெடிகல் காலேஜில் படித்து பரீக்ஷைகளில்தேறி வைத்தியத் தொழிலை அனுஷ்டித்து, மற்ற ஸ்திரீஜாதிகளுக்கு வேண்டிய அனுகூலத்தைச் செய்து வருவார்கள். அவ்வித காலேஜை எங்கே வைப்பது என்ற விஷயத்தில் வாதத்திற்கு இடமுண்டாயிற்று. இதைப்பற்றி நெடுந்தூரம் யோசனை செய்த பிறகு அவ்வித காலேஜ் ஒன்று வேலூரில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. வேலூரில் மெடிகல் காலேஜ் ஏற்படுத்துவதற்கு வேலூர் நகரிலிருந்து 3-மைல் தூரத்தில் இடம் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டது, கவர்ன்மெண்டார் இப்பெரிய காரியத்திற்கு 100-ஏகரா பூமியை சாங்கிஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அவ்வித மெடிகல் காலேஜ் ஏற்படுத்தப்பட்டால் அதனால் ஜனங்களுக்குண்டாகும் நன்மைகள் அளவற்றவையாகும். பாலிய விவாக வழக்கமும் அதனால் உண்டாகும் பல கெடுதிகளும் நீங்கிப் போகும் என்று டாக்டர் ஸ்கட்டர் சொல்லிவிட்டு, அவ்வித காலேஜுக்கு ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருக்கும் பிளானையும் மதிப்புத்திட்டத்தையும் எடுத்துக் காண்பித்தார்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 4-MAY 1916 MADRAS

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1916ளு மார்ச்சுமீ [சஞ்சிகை 6

## ஒளிவளர் விளக்கு

சென்ற 1916ளு பிப்ரவரிமாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய மொத்த எண்ணிக்கை 180.

*
* *

எல்லா இந்தியா முகம்மதிய கல்விக் கான்பரன்ஸுக்கு வருஷம் 6000 ரூபாய் வருமானம் வரும்படியான தொகையைக் கவர்ன்மெண்டார் வசம் ஐதராபாத் நிஜாம் அரசர் நன்கொடையாக அளித்திருக்கிறார்.

*
* *

நமது சபைவிஷயத்தில் பூரணமா யுழைக்கப் பிரியமுற்றிருப்பதாக, நமது நண்பர் திருவாரூர் ஸ்ரீ V. வைத்தியநாத ஸ்தபதியவர்கள் அன்புடன் உறுதிவாக் களித்திருக்கிறார்கள். இவருடைய குலாபிமானத்தை என்னென்று புகழ்வோம்!

*
* *

மாயவரம் சிரஸ்தாதார் ஸ்ரீ S. கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் நமது குலச்சிறுவர்களுடைய வித்தியாபி விருத்தியில் மிகுந்த ஊக்கங்காட்டி வேண்டிய பொருளுதவியுஞ் செய்து வருவதாயறிய மிகமகிழ்கின்றோம். இவருடைய உதாரணத்தை பிறகனவான்களும் கைப்பற்றுதல் நன்று.

ஹிந்துக்களுடைய நாகரீகத்துக்குப் பிரதமக் களஞ்சியம் ஸம்ஸ்க்ருத பாஷையாதலால், நமது நாட்டில் பாண்டித்யம் பெற்று விளங்க வேண்டுமென்ற எண்ணமுடைய எல்லோரும்—பிராமணரும், சூத்ரரும், ஆணும், பெண்ணும்—ஸமஸ்க்ருத பாஷையில் தேர்ச்சிபெற முயல வேண்டுமென்று ஸ்வாமி விவேகாநந்தர் சொல்லியிருக்கிறார்.

*
* *

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தத்துவ சாஸ்திர உதவிபோதகாசிரியராகிய ஸ்ரீ A. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் தம்மாலியற்றப்பட்டதாகிய "விஜயகாருண்யம்" என்னும் அரிய கத்தியப் பிரதியொன்று நமது சபைப் புத்தகாலயத்திற்கு அன்போடு மளித்ததற்காக, அவருக்கு வந்தனஞ் செலுத்துகிறோம். இவ்வாறு மற்ற நூலாசிரியர்களும் செய்தருள்வார்களாக.

*
* *

தமிழ்த் தொன்மையாராய்ச்சிக் கழகக் காரியதரிசியாராகிய ஸ்ரீ. M. ஜீவரத்தினஆச்சாரியார், பி, ஏ. அவர்கள், சென்னைத் தமிழ்க்கழக (Tamil Academy) ஆதரணையில் "தமிழ்த் தொன்மை" யென்ற விஷயத்தைப்பற்றி, சென்னை ஐகோர்ட் ஜட்ஜ் கனம் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி ஐயர், பி. ஏ. பி. எல் அவர்கள் கிருகத்தில் சிறந்ததோர் உபந்நியாசம் செய்தார். அப்போது கல்வி வல்லார் பலர் விஜயமாய்ச் சிரவணித்து மிக்கானந்த மெய்தினர்.

திருவனந்தபுரம் புலேயர் கான்பரன்ஸின் வருஷாந்தக் கூட்டம் இம்மாதம் 5-ந் தேதி யன்று மாலையில் திருவனந்தபுரம் திவானின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடியது. ஸ்திரி புருஷர்களெல்லோருமாகச்சேர்ந்து 1000-புலேயர்களுக்குமேல் சபையில் வந்திருந்தார்கள். மற்றும் பல பிரக்யாதிபெற்ற மனிதரும் சபையில் வந்திருந்தனர். புலேயர்கள் பலர் சபையில் எழுந்து பேசினார்கள். அந்த ஜாதிப் பெண்ணொருத்தியும் சபையில் எழுந்து பேசினாள்.

* * *

தமது உத்தியோகமுறைமையில் மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருவையாறு முதலிய விடங்களுக்குச் சென்ற நமது சபைத்தலைவர் ஸ்ரீ சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் ஆங்காங்கு நமது ஜாதியினரைக்கண்டு சுஜாதிசம்பந்தமான விஷயாலோசனை செய்யும்படி போதித்துவந்தனர். தங்களூர்விட்டுச் செல்ல நேரும்போதெல்லாம் மற்றவரும் இங்ஙனம் செய்து வருவது அவசியமென்பதை ஈண்டு வற்புறுத்துகின்றோம்.

* * *

தேச சேவைக்காக முன் வரும் நம்மவர்கள் முதல் முதல் சத்திய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். பொய் கூறுமலிருப்பதே சத்தியமல்ல.இதற்குப் பிரக்லாதாழ்வானே அத்தாட்சி. இன்னும், அஹிம்ஸா, பிரம்மசரியம், அபரிக்கிரகம், பயமின்மை முதலிய விரதங்களேயும் அனுஷ்டிக்க வேண்டும். இதல்லாமல், நாட்டின்கண் உற்பத்தியாகும் விளைபொருள்களைக் கொண்டு வேலைசெய்து அதின் வாயிலாக தேசாபி விர்த்தியைத்தேடவேண்டும். அந்தந்த நாட்டிலுள்ளவர்கள் அந்தந்த நாட்டில் செய்யும் வஸ்துக்களை உபயோகித்தல் கடமையாம். இத்துடன் நமது சுயபாஷைகளைக் கற்கவேண்டும். வர்ணாச்சிரம தர்மங்களில் நாம் தோட்டிமுதல் தொண்டைமான் வரையிலும் சமத்துவத்தையே பாராட்டவேண்டும்—என்று ஸ்ரீமான் காந்தியவர்கள் போதிக்கிறார்கள்.

* * *

1916-17வது வருஷத்திய வரவு செலவு திட்டத்தின்படி, உப்புவரி, நெருப்பாயுதங்கள் குண்டுகளிவற்றின்வரி, மதுபான வகைகளின் வரி, வருமானவரி இவையும், இறக்குமதிச் சரக்குகளில் சர்க்கரை, புகையிலே, சிகரெட்டுகள், வெள்ளி சாமான்கள், இரும்பு, எஃகு இவைகளின் வரியும் உயர்த்தப் பட்டிருக்கின்றன. ஏற்றுமதிச் சரக்குகளில் தேயிலே, மட்டச்சணல், சணல் சாமான்களிவற்றிற்கும், இறக்குமதிச் சரக்குகளில் தானியங்கள், அச்சடிக்கும் சாமான்கள் இயந்திரங்கள், ரயில் சாமான்கள், நிலக்கரி, பழங்கள், மூங்கில் சணல், முத்துகள், இரத்தினங்களிவற்றிற்கும் புதிதாய் வரிபோடப்பட்டிருக்கிறது. இரும்பு எஃகு வரி 100 க்கு 1 ரூபாயிலிருந்து $2\frac{1}{2}$ ரூபாயாயிற்று. முத்துகளுக்கும் இரத்தினங்களுக்கும் 100-க்கு $7\frac{1}{2}$ வீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இறக்குமதி வெள்ளிச் சாமான்களின் வரி 100 க்கு 5-லிருந்து 16-க்கு உயர்த்தப் பட்டிருக்கிறது.

* * *

சென்னையிலுள்ள குறவர் சிலகாலத்திற்கு முன்வரையில் மூங்கில் சிம்பினால் நேர்த்தியான பல கூடைகளும், பெட்டிகளும் வேறு விசித்திர சாமான்களும் செய்துவந்தார்களென்றும், அந்தத் தொழில் இப்போது பலகாரணங்களால் குறவர்களால் செய்யப்படாமல் நின்றுபோய்விட்டதென்றும் தெரிகிறது. இவர்கள் சாதாரணக் கூடைகள் மட்டுமசெய்து 1-அணு 2-அணுவுக்கு விற்று இப்போது ஜீவிக்கிறார்கள். பழைய மாதிரியாக வேலைப்பாடான பெட்டிகள் செய்து விற்பார்களானால் ஒரு ரூபாய் வரையில் சம்பாதிப்பார்கள். இந்தப் பழைய தொழிலைப் புதுப்பித்து நல்ல ஜீவனம் செய்யும்படி சென்னை ஜனஊழிய சங்கத்தார் குறவர்களுக் குபதேசித்து வருகிறார்கள். இதனால் ஏற்கனவே நற்பலன்கள் சித்தித்து வருவதறிந்து சந்தோஷிக்கிறோம். ஒவ்வொரு ஜாதியாரும் தமது தொழில்களை விருத்திசெய்து அதிக ஊதியந் தேடிக்கொள்வதில் நாட்டஞ் செலுத்தி உழைப்பது மிகமுக்கியம்.

* * *

5-வயதிற்கு முன்னுள்ள ஆண் பெண் தொகைகளில், ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளின் தொகையே 100-க்கு 38 வீதம் அதிகம். இந்த வயதில் பெண் பாலாது மரணவிகிதம் குறைவுதான். ஆனால், 15-வயது முதல் 30-வயதுவரையுள்ள பருவத்தில் புருஷர்களைவிட ஸ்திரீகளே அதிகமாக இறந்துபோகிறார்கள்.



இந்தக் காலத்துக்குள் புருஷர்களில் 5-பேர் இறந்தால் ஸ்திரீகளில் 6-பேர் மரிக்கின்றனர். இந்தப்படி மரணம் அதிகப்படுவதானது ஸ்திரீகள் கருப்பம் தரித்தற்கான காலபக்குவம் தொடங்கிய நாள்தொட்டேன் றேற்படுகிறது. பால்யத்தில் மணம் நடந்து ஸ்திரீகள் 13, 14 வயதில் புருஷ சம்பந்தத்திற்கு உட்பட்டுப் போவதால் மேற்கண்ட துயரமான மரணங்கள் நேர்கின்றன. பிரஸவம் என்றபேய் அவர்களைப் பலிகொண்டு விடுகிறது. ஆயிரம் புருஷர் மரணத்திற்குப் பெண்கள் மரணம் 15-வயது வரையில் 976-பேரும், 15-வயது முதல் 20-வயது வரையில் 1234-பேரும், 20 முதல் 30-வயது வரையில் 1231-பேரும், 36-வயதிலிருந்து 960-பேருமாக இருக்கிறது.

* * *

சென்ற ஜனவரிமாதச் சஞ்சிகையில் வெளியான "பஞ்சப்பிரம்ம யாகம்" என்னும் விசேஷ வர்த்தமானத்தைப் பற்றி, மீனாக்ஷிபுரம் ஜோஸ்யர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்கள் இவ்வாறெழுதுகிறார்கள்: "யான் கேட்டறியாததும் பார்த்தறியாததுமான பஞ்சப்பிரம்மயாகம் காஞ்சியில் நடக்கிறதாகத் தெரிகிறது. இதற்கு எந்த சுருஸ்மிருதி சாஸ்திராதாரங்க ளிருக்கின்றனவோ அறிகிலேன். யாகம் என்பது சரீர சம்ஸ்காரம் 40-ல் சேர்ந்தது. அவையாவன—கர்ப்பாதான முதல் விவாகம் வரை 14; தேவயக்ஞம், பிதுர்யக்ஞம், மனுஷிய யக்ஞம், பூதயக்ஞம், பிரம்மயக்ஞம் இவை பஞ்சயக்ஞங்கள். ஹோமயக்ஞம் -7; அவையாவன—அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்தியம், ஷோடசி, வாஸபேயம், அதிராத்திரம், அப்தொரியாமம் ஆக ஏழு. அவிர்யக்ஞம் 7; அக்னி ஆதேயம், அக்னி ஹோத்திரம், தரிச பூர்ணமாசம், சாதுர்மாசியம், நிரூட பசுபந்தம், ஆக்ராயணம், ஸவுத்திராமணி ஆக ஏழு. பாகயக்ஞம்—7; அவையாவன—அஷ்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணீ, ஆக்கிரதாயணீ, சைத்திரீ, ஆசுவயுஜி—இந்தப்படி 40-சமஸ்காரங்களினால் சரீரம் சுத்தியாகின்றது. யாகத்திற்கு அத்வரியு, ஹோதா, உத்காதா, பிரம்மாவென்ற நான்குருத்விக்களும், அநேக கணங்களும் வேண்டும். இவைகளைப்பற்றி சுருதி ஸ்மிருதி சாஸ்திரங்களிலும் நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கிறது. இதையன்றி பஞ்சப்பிரம்ம யாகமென்பதை யான் காண்கிலன்."—இந்தயாகம் குறித்த நாட்களில் நடைபெறவில்லையென் றறிகிறோம். இதைப்பற்றி காஞ்சிமாநகரத்து ஐதாகிகள், பௌரோகிதர், ஏஜண்டுகளென்னும ஸ்ரீமனு-ஆனந்தாச்சாரியார் முதலிய 19-பேர்களால் வெளியிடப்பட்ட பிரகடன பத்திரிகையில், இந்த யாகம் ஸ்ரீமத் வீபூர் வெங்கடாச்சாரிய குரு ஸ்வாமிகள் உத்திரவுப்படி நடத்தப்படுவதாய்க் கூறப்பட்டது.

## நவீன பட்டம்

ஸ்ரீ சாலிவாடி புராதீனம் தர்மபதி

நவீன பட்டமொன்று நமது ஜாதியாருக்காக கவர்ன்மெண்டாரால் சிருஷ்டித்வமாயிருக்கிறது. நவீன பட்டமாவது, ஆஸாரி என்ற பட்டமே. வர்ணாச்சிரம தர்மங்கள் உதித்த காலம் முதல்கொண்டு நம் ஜாதியார்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது ஆச்சாரி என்ற பட்டமே. இந்தப் பட்டப்பெயரானது திராவிட பாஷையிற கலந்த தல்ல. தொன்மையானதும் தேவபாஷையானதுமான சமஸ்கிருத பாஷையிற் கலந்ததாகும். ஸ்மார்த்தர்களுக்குஏற்பட்டபட்டம் திராவிடபாஷையில் மிச்ரமாயுள்ளது.ஐயர் என்பதற்கும் ஐயாஎன்பதற்கும் என்ன வித்தியாசம்? ஐயா என்றது விளிவேற்றுமைக் குறிப்புடையது, உயர்திணை ஆண்பால் அருமைப் பொதுவசனமானது, ர் என்ற இறுதி விகாரத்தைப்பெற்று ஐயர் எனப்பட்டது. இந்தப் பட்டமானது திராவிடோற்பன்ன காலத்தின்பின் அல்லது திராவிடோற்பன்ன காலத்தில் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. வைஷ்ணவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்கார் என்ற பட்டமும் தெலுங்கு பாஷையின் மிச்ரமான்தாகும். பின்னும், சாஸ்திரம் படித்து சாஸ்திரிகள், கனம் படைத்து கனபாடிகள், இவைபோன்ற பட்டங்களெல்லாம் காரணப் பட்டங்களேயாகும்.

நமக்கு ஏற்பட்ட பட்டமோ காரியமானதும் காரணமானதுமாகும். ஆச்சாரி என்ற த்வனியானது ஜகத்குரு என்றும் கம்மாளர் என்றும் பஞ்சசிருஷ்டிக்கு அதிபதிகள் என்றும் வேதவேதாங்க சம்பன்னர்களென்றும் குறிப்பதான கண்டாமணிபோல் இப்பூமியில் வழங்கப்பட்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட பேரழகுவாய்ந்த ஸ்வரம் அபஸ்வரமாக மாறுவதெனில், இனி ஓம் என்ற

பிரம்ம நாதமானது ஆம் என்று மூன்று த்வனியாகுமோ! இந்து ஜனசமூகத்தில் பிறக்கும் குழந்தைகள் அம்மா என்று த்வனித்து வந்தது வேறு விதமாய் த்வனிக்கப்படுமோ! இந்து மதம் உள்ளவரையில் யாதொரு நாதங்களும் மாறப்போகிறதில்லை. சூத்திரர்களும் மேலான பட்டத்தைப் பெற ஆசித்துக்கொண்டிருக்கிறார்கள். விளையும் புல் பூண்டு முதல் மேல்நோக்கி வளரத்தான் பார்க்கின்றன. அப்படியிருக்க விஸ்வகர்ம குலத்தாரின் பட்ட த்வனிக்கு மாத்திரம் ஈனம் வருவது இயற்கைக்கு விரோதம்.

இனி, நம் குலாபிமானிகள் கவனிக்க வேண்டிய விபரமாவது—சீசா என்ற உச்சரிப்பு ஸ என்றதாக அடி நாவிலிருந்து நுனி நாவுக்கு வந்திருக்கிறது. மறுபடியும் சீசா என்ற உச்சரிப்பை நாட்ட வேண்டியது குலோத் தாரணங்களில் அத்யாவசிய கடமையாகும். அஜாக்கிரதையா யிருக்கலாகாது. கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பத்தின் மேல் விண்ணப்பங்கள் புறப்பட வேண்டியது. நமக்கு இது காறும் கிடைத்த நன்மைகளைக் கொண்டு கவர்ன்மெண்டார் நம் குலோத்தாரணத்தில் பற்றுடையவர்களென்றே நிதானித்துக் கொள்ள வேண்டியது. நவீன பட்டத்தைத் திருத்தலாம் என்ற திடத்திற்கு நமக்கு மூன்று ஆதாரவுகள் இருக்கின்றன. அதாவது—கவர்ன்மெண்டார் மதாசார விஷயங்களில் பிரவேசிப்பதில்லை என்ற சம்மதம் ஒன்று. இரண்டாவது, வர்ணாச்சிரம அருமைக் காரர்களால் நம் குலத்தாருக்கு ஏற்பட்ட இடுக்கண்களை நிவர்த்தித்து பிராம்மணீகத்தை ஸ்தாபித்துள்ளதான கவர்ன்மெண்ட் தீர்ப்புகள். மூன்றாவது, ஒரு ஜாதியின் மெஜாரிட்டியாரின் நியாய விண்ணப்பத்திற்கு, தக்க வரம் கொடுக்க கவர்ன்மெண்ட் சித்தமாயிருக்கிறது. இம்மூவித ஆதாரவுகளால் நாம் நவீன பட்ட சிருஷ்டியை மாற்றி ஐதிக பட்டத்தைப் பெறலாம் என்பது சித்தம்.

ஆகையால், ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஆயிரக்கணக்கான கையொப்பங்களோடு அல்லது ஒவ்வொரு ஜில்லாவில் ஏக காலத்தில் கூடும் சங்கத்தின் ரிஸலூஷன்களோடு விண்ணப்பங்கள் புறப்பட வேண்டும். இதற்காக 16-தமிழ் ஜில்லாக்களிலிருந்து 16-மெம்பர்கள் அடங்கிய ஒரு செண்ட்ரல் கமிட்டி ஏற்பட வேண்டும். அந்த செண்ட்ரல் கமிட்டியார் குலோபகாரத்தை முன்னிட்டு காலாண்டு காலமாவது முயற்சிக்கவேண்டும். அந்த முயற்சியால் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் மகஜர் புறப்பட வேண்டியது. இதை விட்டு நம்முடைய பாட்டை பத்திரிகையில் எழுதுவதும் பார்ப்பதும் போதுமானதல்ல. இதைப்பற்றி குலாபிமானிகள் என்ன அபிப்பிராயங் கொள்கிறார்களென்பதை அறிய விரும்புகிறோம்.

## விஸ்வகர்ம வித்யா நிதி

### ஸ்ரீவேகம்பூர்-குமாரசிவன்

குலோத்தாரணஞ் செய்யப் பொருள் வேண்டுமென்பதையும், அது எவ்வள வதிகமிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய்க் குலோத்தாரண காரியங்கள் செய்யலாமென்பதையும், அது எவ்வளவு குறைகிறதோ அவ்வளவும் குலோத்தாரண காரியங்கள் குறைவுபடுமென்பதையும் நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கின்றோம். இவ்வளவு அவசியமாயிருக்கும் பொருளைச் சேகரிக்கும் மார்க்கங்களை வெகு விமரிசையாக ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியாரவர்கள் சென்ற மாதப் பத்திரிகையில் விளக்கினார்கள்.

அவர் தெரிவித்த மாதிரி ஊர்தோறும் கமிட்டி ஏற்பட்டு பணவசூல் செய்யவேண்டியது மிகவும் முக்கியம். வசூல் பொருளை யெல்லாம் வித்தியா போதனையிலேயே விநியோகிக்கவேண்டும். யாரியார் எங்கெந்த ஊரில் கல்வி கற்று வருகிறார்களோ அவர்களில் ஏழைகளாயிருந்து உதவி தேடுவோர்களுக்கெல்லாம் பண உதவி செய்யவேண்டும். இதற்கு ஏராளமாய்ப் பொருள் வேண்டும். வருஷா வருஷம் குறைந்தபக்ஷம் ஐயாயிர ரூபாயாவது செலவிடாமற்போனால், நல்ல கல்விமான்களை யுண்டுபண்ணுவது கஷ்டம். வருஷத்திற்கு ஐயாயிரரூபா யென்றால், மாதமொன்றுக்கு சுமார் 400 ரூபாயாகிறது. நானூறு ரூபா நாற்பது பிள்ளைகளுக்கும் போதாது. என்றபோதிலும், ஆரம்பத்தில் இவ்வளவு ரூபாய் சேகரிப்பதும் கஷ்டமாயிருக்கும்.

பண உதவி செய்வதாய்த் தெரிந்தால், நாற்பது பிள்ளைகளல்ல, நானூறு பிள்ளைகள் இந்த இராஜதானி முழுவதிலும் நம்முடைய உதவியை நாடி வருவார்கள். மற்ற ஜாதியார் தமது குலமக்களுடைய கல்விப்பயிற்சிக்காக எவ்வளவு பண உதவி செய்துவருகிறார்களென்னும் விவரங்கள் சஞ்சிகைதோறும் நமக்கு அறிவிக்கப்பட்டுவருகிறது. அவ்விவரங்களை நாம் வாசித்து வாசித்துச் சும்மா இருந்துவிட்டால், என்ன பலனுண்டாகப்போகிறது? ஆரிய வைசியரென்னுங் கோமுட்டிகள் வருஷ வாரியில் 30,000 ரூபாய்க்கு அதிகமாக கல்வியில் செலவழிப்பதாகத் தெரிகிறது. கன்னிகா பரமேஸ்வரி தர்மம், பைஸானி மாதவசெட்டி தர்மம், எதிராஜுலுசெட்டி தர்மம், ஒலேடி ரங்கநாயகியம்மாள் தர்மம் என்னும்பலதர்ம நிதிகளிலிருந்து அவர்களுக்கு ஏராளமாய்ப் பணங்கொடுக்கப்பட்டுவருகிறது. வித்தியார்த்திகளுக்கு சம்பளங் கொடுப்பதோடு சாப்பாடு போடுகிறார்கள், புத்தகங்கள் வாங்கிக்கொடுக்கிறார்கள். இன்னும்பலவிதசகாயங்களுஞ் செய்கிறார்கள் இப்படியே பார்ப்பார்க்குள்ளும், வன்னியர்க்குள்ளும், வேளாள்ர்க்குள்ளும் இன்னும் மற்ற ஜாதியார்க்குள்ளும் பல வருஷங்களாக நடைபெற்று வருகிறது.

நாமோ இனிமேலேதான் இந்த முயற்சி செய்ய வேண்டியவர்களா யிருக்கிறோம் நமது சபையார்தான் இவ்விஷயத்தில் ஜாதியார்க்கு வழிகாட்டிகளா யிருப்பவர்கள். இவர்கள் சுமார் இரண்டு வருஷமாக இவ்வழியிலுழைத்துவருவது நமது குலப் புண்ணியமென்றே புகலவேண்டும். இவர்களுக்கு குல ஜனங்களெல்லாம் சகாயமாயிருந்தாலொழிய இவர்களால் விசேஷ நன்மைகள் பயக்கமுடியாதென்பது உண்மை. ஆதலால், நமது குலமுழுவதுஞ் சீர்திருத்தமடைய இடைவிடாது முயன்றுவரும் நமது சபையார்க்குச் சகல விஷயங்களிலும் விஸ்வகர்மகுலத்தார் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு பொருட்சகாயமும், மனோவாக்குக் காயமுதலியவற்றால் செய்யக்கூடிய சகலவித சகாயங்களும் செய்யவேண்டும். இப்படிச் செய்யத்தக்க விதங்களை மேற்குறித்த ஆச்சாரியார் தெரிவித்திருக்கிறார். பலதுளி பெருவெள்ளம் என்னுங் கதையாய், ஒவ்வொருவரும் கொஞ்சங்கொஞ்சமாகக் கொடுத்தபோதிலும், எல்லாவற்றையுந் திரட்டிப்பார்க்கும்போது பெருந்தொகையாய் முடியுமென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், கொடுக்கவேண்டும்; கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்வதோடு நின்றுவிடக்கூடாது.

சபையார் மேற்கொண்ட தீபாவளித் தண்டலானது பண வசூலுக் கேற்றதொரு சீரியான மார்க்கமென்று தோன்றுகிறது. இதை இவர்கள் சென்ற வருஷத்தில் நடத்தாத காரணமேதோ தெரியவில்லை. ஜனங்கள் காட்டும் உபேக்ஷையே இவர்கள் அக் காரியஞ் செய்யப் போதிய ஊக்கந்தராமல் நிறுத்திவிட்டதுபோலும். இனிமேலாவது இந்தத் தண்டலை வருஷந்தவறாமல் மும்முரமாய் நடத்தவேண்டும். இந்தத் தண்டற் பணத்தை விஸ்வகர்ம வித்யா நிதிக்கென்று தனியாக வைத்திருக்கச் செய்யவேண்டும்.

மற்றவர்களைப் போலல்லாமல், நமது சபையார் வருஷவாரியில் வரவு செலவு கணக்கைத் தக்கவர்களால் பரிசோதிப்பித்து ரிபோர்ட் வெளியிட்டு வருவதால், பணவிஷயத்தில் இவர்கள்மீது எல்லோருக்கும் நம்பிக்கை யேற்பட்டிருக்கிறது. இச்சபை ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதினால் யாவராலும் கௌரவமாய்க் கொண்டாடப் படத்தக்க நிலைமையிலிருக்கிறது. அன்றியும், நம்முள் கல்வியறிவு வாய்ந்தவர்களும் உத்தியோகஸ்தர்களுமாகிய பலர் இதில் மெம்பர்களாகவும் நிர்வாகாதிகாரிகளாகவும் சேர்ந்திருக்கின்றனர். நமது ஜாதியாருடைய கல்விப்பயிற்சிக் கான சாதனங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் இவர்களினு மதிகமாய்ச் சிரத்தை கொள்ளக்கூடியவர்களைக் காண்பது கூடாமை. ஆதலால், இவர்களேற்பாடு செய்துள்ள விஸ்வகர்ம வித்தியாநிதிக்குப் பொருள் சேகரிப்பதாகிய தீபாவளித் தண்டலை எல்லா ஜில்லா வாசிகளும் ஏகோபித்து அக்கறையாய் நடத்தவேண்டும்.

எல்லாஜில்லாவாசிகளுக்கும் இந்தப்பணம் உபயோகமாகும் என்பதை நமது ஜனங்களுக்கெல்லாம் எடுத்து விளக்கவேண்டும். இதுவரையிலும், இவ்வித்தியா நிதியிலிருந்து உதவிபெற்றவர்கள் வெளியூர்க்காரர்களே யென்று தெரிகிறது. பலருக்கும் பிரயோசனப்படக்கூடிய காரியத்தில் பலரும் பிரவேசித்துழைக்கப் பின் வாங்குவானேன்? இதற்கு கமிட்டிகள் ஊரூராய் உடனே ஏற்படவேண்டும். இக்கமிட்டியார்க்கு நமது சபையார் விளம்பரங்களை யச்சிட்டனுப்பவேண்டும். அவர்கள் பெற்று வீடுவீடாய் அந்த விளம்பரங்களைக் கொடுத்து எல்லோருக்கும் இவ்வித்தியாநிதியின் பிரயோஜனங்களை யெடுத்துக்காட்டி யாவரும் தாராளமாய் இதற்குப் பொருளுதவி செய்யும்படித் தூண்டவேண்டும். இப்படிச் செய்தால், வருஷவாரியில் ஐயாயிர ரூபா வசூலாவது பெருங்காரியமல்ல; சுலபமாய் வசூல் செய்துவிடலாம். ஜனங்களுக்குள் அபிமானம் மட்டும் உண்டாய்விட்டால், பணம் ஏராளமாய் வெளிப்படும். நம்மவர்களைப்போல் பிறர் கொடுக்கமாட்டார்கள்; செலவு செய்யவுமாட்டார்கள்.

இனி, சிறு சிறு தொகைகள் இப்படி வசூலிக்கப்பட, பெருந்தொகைகளைத் தனிகர்கள் கொடுக்கவேண்டும்.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 185035

அன்னோரைக்கண்டு மற்றவர்கள் கேட்கவேண்டும். வித்தியார்த்திகளுக்குப் பரிசு கொடுப்பதற்கென்று செஞ்சி சுப்பராய ஆச்சாரியார், டாக்டர்-பழநியாண்டியவர்கள்பெயரால் பணம்வைக்கப் பட்டிருப்பதினால், இவர்கள் திருநாமங்கள் நிரந்தரமாய்க் கொண்டாடப் பட்டுவருதல் நிச்சயம். இவ்வித நிதிகளை மற்ற ஜாதியார்களில் அநேகர் வைத்திருக்கின்றனர். இவை, யூனிவர்ஸிடியென்னும் சர்வகலா சங்கத்தாரிடமோ, பிரஸிடென்ஸி காலேஜ், க்ரிஸ்டியன் காலேஜ், பச்சையப்பன் காலேஜ், ஸென்ட் ஜோஸப்காலேஜ் முதலிய கல்விச்சாலை அதிகாரிகளிடமோ வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், நம்மவர்கள் பலரும் தங்கள் தங்கள் பெயரால் ஸ்காலர்ஷிப் என்னும் பணச் சகாயஞ் செய்தற்கு குறிப்பிட்ட தொகைகளை விஸ்வகர்ம வித்தியா நிதிக்குக் கொடுக்கலாம். ஸ்தாவர சொத்துக்கள் கொடுக்கலாம்.

இப்படி யெல்லாஞ் செய்யாதபோதிலும், ஆளுக்கோரைந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்தால், அதனால் சபைக்கு வருஷவாரியில் ஒரு பத்தரூபாவருமானமும், அதில் ஓரிரண்டு ரூபாயாவது மிச்சமும் ஏற்பட்டால், அதைக்கொண்டாவது சபையார் வித்தியார்த்திகளுக்குப் பொருட்சகாயஞ் செய்ய நேரிடும். இதனால், விஸ்வகர்மனுக்கு சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுக்கிறவர்களும் விஸ்வகர்ம வித்யாநிதிக்குப் பொருள் சேர்க்கிறவர்களாவார்கள். எவ்விதத்திலாவது பொருள் சேகரிக்கும் வழிகளில் நம்மவர்கள் உழைக்க விஸ்வகர்மப் பரமேஸ்வரர் அருள்செய்வாராக. சுபம்.

---

எருமை மேல் ரெயில் ஏறினது.—இரங்கூன் பள்ளத்தாக்கு ரெயில் பாதையில் சென்ற 2-தேதி 1-மணிக்கு டாங்னியிலிருந்து ஸாமன் என்னும் ஸ்டேஷனுக்கு ஒரு ரெயில் வண்டித்தொடர் போகையில் ஒரு எருமை மேல் ஏறி வண்டி கவிழ்ந்து விட்டது. ஒரு கூட்ஸ் வண்டி ஒரு குதிரை வண்டி இரண்டும் சேதமாய்ப் போய் விட்டன. 3-வது கிளாஸ் பிரயாணி வண்டிகளில் மூன்று தண்டவாளத்தினின்றும் நழுவின. இஞ்சின் டிரைவருக்கு பலத்த காயம் பட்டது. இரண்டாவது நெருப்பு தள்ளுகிறவன் வண்டியினின்று குதிக்க இஞ்சின் அவன் மேல் விழுந்து மாண்டான். முதல் நெருப்புத் தள்ளுகிறவனுக்கும் பலத்த காயம்பட்டு அவனும் மாண்டான்.

## விஷ்ணுபுராண ஆராய்ச்சி

### தக்ஷவம்ச உற்பத்தியைப் பற்றியது

(முதலம்சம் 14-ம் அத்தியாயம்)

மைத்திரேயர் பராசரைப் பார்த்து, முனிந்திரரே மகாத்மாக்களான பிரசேதர்கள் சாகரத்திலே மூழ்கி என் தவஞ் செய்தார்கள்: அதை விசிதமாகச் சொல்லியருள வேண்டுமென்று கேட்கப் பராசர் அருளிச் செய்கிறார்.

சதுர் முகனுடைய உத்தரவின்படி பிராசீனபர்கி பிரஜைகளை அபிவிருத்தி செய்ய நினைத்துத் தன் புத்திரர்களான பிரசேதர்களைப் பார்த்துப் புத்திரர்களே! தேவதேவனான பிதாமகர் என்னைப் பிரஜாபி விருத்தி பண்ணும்படி நியமித்தார், நானும் அப்படியே ஆகட்டுமென்று அந்தத் தேவனுடனே விண்ணப்பம் செய்தேன். ஆனதினாலே நீங்களெனக்குப் பிரியமாகப் பிரஜாபிவிருத்தி செய்யுங்கள்; ஆலஸ்யமில்லாமல் லோகேசுவரனான விரிஞ்சகனுடைய ஆக்கினையைப் பரிபாலனஞ் செய்யுங்களென்று சொன்னார்.

பிரசேதரும் தகப்பனுடைய வசனத்தை அங்கீகரித்துத் தகப்பனை நோக்கி ஐயா! நாங்கள் எந்தக் காரியஞ் செய்தால் பிரஜாபிவிருத்தி செய்யத்தக்க ஸாமர்த்தியம் உடையவர்களாவோம்? அதை விளங்கச் சொல்ல வேண்டுமென்று விரும்பிக் கேட்க, பிராசீனபர்கி புத்திரர்களைப் பார்த்து! அபீஷ்ட பலப்பிரதனான ஸ்ரீ மகா விஷ்ணுவை ஆராதித்த புருஷன் இஷ்டத்தைப் பெறுவானே யல்லாமல் வேறொரு உபாயத்தினாலே இஷ்டசித்தி பெறமாட்டான். இனி நான் வேறென்னசொல்ல வேண்டும்? நீங்கள் உங்கள் இஷ்டம் சித்திக்க வேண்டுமென்று விரும்புவீர்களாகில்,

> "எல்லாப் பொருளு முடிக்கலாம் ஈசன்றன்
> தொல்லை யருள் பெற்றக்கால்."

என்றபடி ஸ்ரீ கோவிந்தனை ஆராதியுங்கள் விரைவில்; எண்ணியதும் எண்ணமெலாம் ஈடேறும்; நீங்கள் உடனே பிரஜாபிவிருத்தி செய்வீர்கள்; புருஷனுக்குத் தர்ம அர்த்த காமிய மோக்ஷம் என்கிற சதுர்வித புருஷார்த்தங்களிலே அபேக்ஷை யுண்டானால், ஆதியந்த ரகிதனும் பகவானுமான புருஷோத்தமனை அர்ச்சிக்க வேண்டும், ஆதி காலத்திலே பிரம்மா ஸ்ரீ ஜனார்த்தனனை ஆராதித்துத்தான் சிருஷ்டிக்கும் ஸாமர்த்தியத்தைப் பெற்றார். ஆதலால் உங்களுக்கும் அச்சுதனை ஆராதிப்பதினாலே பிரஜாபிவிருத்தி ஸாமர்த்திய முண்டாம் என்று சொன்னான்.

அதைக் கேட்டு அந்தப் பிரசேதர் பத்துப் பேரும் தகப்பனுடைய நியமனப்படி தந்தைசொன் மிக்க மந்திரம் இல்லை என்று தவம் பண்ண நிச்சயம் செய்துக்கொண்டு சாகரத்திலே மூழ்கி (ஸமேகித சித்தர்களாய்) ஸர்வலோக சரண்யனும் ஜகத் கதியுமான ஸ்ரீமந் நாராயணனுடைய சரணாரவிந்தங்களில்மனதைச்சமர்ப்பித்து (10,000) பதினாயிர வருஷம் தவஞ் செய்துக்கொண்டு சகல அபீஷ்டங்களையும் கொடுக்க வல்லவனான இலக்ஷ்மி வல்லபனை மனோக்கியமான (ஸ்துதி) வசனங்களினாலே துதித்தார்கள்.

வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாய்க் கண்ணினாற் காணக் கூடாததாய் (இப்படி எல்லாவிதத்திலும் மேலானதாய்ப்) பரமபிராப்பியமுமாய் விளங்குகிற அந்த ஸ்ரீ விஷ்ணு பகவானுடைய ஸ்வரூபத்திற்குத் தண்டன் சமர்ப்பிக்கிறோம் என்று இந்த விதமாகப் பிரசேதர்கள் எம்பெருமானைத் துதிசெய்துக் கொண்டு அங்கேயே மனம் பற்றினவர்களாய்,

> "கூடிப்பிரிந்து விட்ட கொம்பனையைக் காணமல்
> தேடித்தவிப்பவன்போற் சிந்தைவைப்பதெக்காலம்."

என்று உள்ளமுருகி மகார்ணவ ஜலத்திலேயிருந்து 10,000-ம் வருஷகாலம் தவஞ் செய்தார்கள். அப்பால் ஷட்குண ஐஸ்வர்ய சம்பன்னனான ஸ்ரீ ஹரியானவர் அவர்களிடத்திலே கிருபை கூர்ந்து அந்த சமுத்திர ஜலத்திலே பிரத்தியக்ஷமானார்.

அப்போது அந்த பிரசேதர்கள் விகஸித்த நீலோற்பல இதழைப்போல நீலச்சாயையுடனே பிரகாசிக்கின்ற திவ்ய தேகத்துடனேயும் (கிரீட மகுட குண்டலாதி) திவ்யாபரணங்களுடனேயும் (சங்குசக்ராதி) திவ்யாயுதங்களுடனேயும் பக்ஷிராஜனான பெரிய திருவடியின் திருத்தோளில் ஏறிவந்து சேவைசாதித்த ஸ்ரீமந் நாராயணனைக் கண்களாரக்கண்டு சேவித்து (பக்திபாரத்தினாலே) தலைவணங்கி தண்டப்பிரணாமங்கள் செய்து கைகூப்பிக்கொண்டு நின்றார்கள்.

அனந்தனான பகவான் அவர்களைக் கடாக்ஷித்து ஓ! பிரசேதகரே! உங்கள் தவத்திற்குச் சந்தோஷித்து பிரசன்னனானேன் உங்களுக்கு வேண்டும் வரங்களைக் கேளுங்கள்! கொடுக்கிறேனென்று அருளிச்செய்ய அவர்கள் மறுபடியும் வந்தனங்களைச் செய்து, "பிதிர்தேவோபவா" என்றபடி பிதாவினுடைய வசனப்பிரகாரம் பிரஜாபிவிருத்தி யுண்டாக்க எங்களுக்கு ஸாமர்த்திய முண்டாகும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அந்த தேவதேவனும் அவர்கள் கேட்ட வரத்தைக் கொடுத்தருளி அந்தர்த்தானமானான். பிரசேதரும் ஸ்ரீ விஷ்ணுவினுடைய அனுக்கிரகத்தினாலே அபீஷ்டவரம் பெற்று கடலிலிருந்து தங்கள் ஸ்தானம்போய்ச் சேர்ந்தார்கள்.

### பதினைந்தாம் அத்தியாயம்

### கண்டுசரித்திரமும் தக்ஷவம்சமும்

இந்தப்படி சொல்லிப் பராச முனீந்திரர் மேல் நடந்ததை அருளிச்செய்கிறார். கேளீர்!மைத்திரேயரே! அந்தப் பிரசேதகர் சமுத்திர ஜலத்திலே முழுகித் தவஞ் செய்துக்கொண்டிருக்கையில் இவர்களுடைய பிதாவான பிராசீனபர்கி நாரதமுனிவருடைய உபதேசத்தினாலே இராச்சியத்தைத் துறந்து யோக நிஷ்டையிலிருந்ததினாலே (அராஜகமாகி) ஜனங்கள் பயிர்த் தொழில் செய்யாமலிருந்ததைப்பற்றி, பூமியிலேயுண்டான விருக்ஷங்கள் கிளைகள் அதிகமாக நெருங்கிப் பூமியையும் ஆகாசத்தையும் மூடிக்கொண்டிருந்தன. அதனால் காற்றும் வீசக்கூடாமற்போயிற்று. இப்படியாக மரங்களெல்லாம் அதியுன்னதமாக வளர்ந்து (10,000) பதினாயிரம் வருஷம் காற்றில்லாமலிருக்கச் சகல ஜனங்களும் அசையமாட்டாமல் நாசமடைந்தார்கள். பின்பு பிரசேதர்கள் தண்ணீரைவிட்டுப் புறப்பட்டுவந்து மரங்கள் உலகமெல்லாம் வெளியில்லாதபடி வளர்ந்து மூடிக்கொண்டதினாலே மிகுதியாகப் பிரஜாக்ஷயமானதைப் பார்த்துக் கோபங்கொண்டவர்களாய்த் தம்முடைய முகங்களிலிருந்து வாயுவையும் அக்கினியையும் உண்டாக்கினார்கள். அந்தப் பெருங்காற்று வந்து மரங்களையெல்லாம் வேரோடே வீழ்த்தி கோஷிக்கப்பண்ண, காலாக்கினிக்குச் சமானமான அந்த அக்கினி அவைகளை எரிக்கத் தருக்கணங்கள் ஏககாலத்திலே நாசமாகத் தலைப்பட்டன.

இவ்விதமாய் விருக்ஷங்கள் அங்கங்கே ஒன்றிரண்டே நின்று மற்றவை யெல்லாம் நாசமடைவதைக்கண்டு ஓஷதிகளுக்கு அதிபதியான சந்திரன் பிரசேதகர்கள் கிட்டவந்து ராஜகுமாரர்களே! நீங்கள் கோபத்தை

## இலௌகிகச் செயல்கள்

ஸ்ரீ ஜி. சுவாமிநாதன் ஆச்சாரியார், கோட்டாறு.

இவை எவரால் இயலுகின்றன என்பதின் சூசனைகள்.—அகவிட மதனில் நிறைந்த சராசர வஸ்துக்களின் உற்பத்தி, திதி, லயம், எனும் முத்தொழில்களையும் எவர் நடாத்துகின்றனரோ, அப்பெருமானை இனையரென லக்ஷண பூர்வமாய் இவண் பிரஸ்தாபிக்கின்றேன் என அறியற் பாற்று.

லௌகிக கிருத்தியங்களைக் குறித்து கல்விமான்கள் எத்தனை பாகு பாடுகளாகப் பகுத்திருக்கின்றனர் எனக் கேட்பின், மனுடீசம், ராஜீகம், தெய்வீகம் என முப்பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர். மேற்சொன்ன முப்பகுப்புகளில், மனுஷீகம் என்ப தென்னையோவெனில், மானுடப் பிறப்பிற் காதியில், ஒரு பாவம் மருவியுளதென்பது சர்வ சாஸ்திர துணிபென்ப. அவ்வாதிபாவத் தொடர்பினாற்றானே, மக்களிடத்து காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், முதலிய குணங்கள் இயற்கையில் சேர்ந்துள்ளன வென்பது நமதனுபவத்திற் கண்கூடன்றோ! எங்ஙனமெனில், மனிதர்கட்கு, ஞானம், பொறுமை, கல்வி, நீதி, முதலிய சற்குணங்கள் சாரவேண்டுமேல், சாஸ்திர ஆராய்ச்சியானும், சற்சங்க சாவகாசத்தினாலும் வரல் வேண்டுமேயன்றி வேறின்று. காமக்குரோத லோபாதிகளின் தோன்றிப்புகளோவெனில், எச்சிறு உபாத்தியாயரின் பயிற்றுதலின்றியே, அவசியமிலாது தானே உண்டாகிவிடுகின்றன.

தண்ணீரை வெந்நீராக்கிய போதினும், அத்தண்ணீர் மீண்டும் மீண்டும், தனது இயற்கைக் குணமான குளிர்ச்சியை அடைவதுபோல, மனுஷியர்களுக்கும் சன்மார்க்க வுபதேசம் மறந்த போழ்தே மீளவும் காமாதி துற்குணங்கள் சுபாவத்தில் வந்தண்மிக்கொள்ளுகின்றன. தீக்குணங்களாகிய இவைகள் மனுஷியர்களின் இயற்கையில் அளாவியுள்ளனவென்பது சிறிதும் ஐயப்பாடின்றி அறியும்பான்மைத்து.

ஆராயின், இத்தீக் குணங்களும், மனுஷியர்களுக்கு துற்சங்க வுறவால் உண்டாகின்றனவென்றே சிலர் ஆசங்கை செய்வதோடு, இவை இயல்பில் வருவ தன்றென மறுத்துரைப் பாருமுளர் என்று நினைக்கின்றோம். ஆனால், வனசரரென்று செப்புகின்ற காட்டுமிராண்டி கட்கு, சன்மார்க்கத்தை யேனும், துன்மார்க்கத்தை யேனும் உபதேசஞ்செய்து வைப்பதற்காக உபாத்தியாயரில்லாதிருக்க, அக்காட்டுமிராண்டிகள் காமாதி தீக்குணங்களில் மூர்க்கர்களா யிருக்கிறதை மனக்கண்கொண்டு பரியாலோசிக்கில், இத்தீக்குணங்கள் மானுடர் தமதியல்பில் ஈண்டியுள்ளதென்பது நிச்சயத்துடன் உணர்ந்தறிவார் என்பது விகசிதம்.

இங்ஙனமாய இத்துற்குணங்கள் மனுஷியனுடைய சயகுணமென்கிற நிண்ணயம் பற்றியே, “ இந்தச் சிவனால் வரும் அறுபகையெலா மிவன்செயலல்லாமல், அந்தத் தேவனால் வரும் என்ற மூடர்கள் அதோகதி அடைவார்கள் என்று பெரியோர் கூறியுள்ளார். இப்படிப்பட்ட மாந்தர்களின் செய்கைகளினால் எங்ஙனம் லௌகிகாபி விருத்தியுண்டாகின்றதென்று கேட்பின் சாதாரணமாக, மானுடர்களின் சிகிற்சையாதிகளினால் ஆயிரக்கணக்கில் பிரஜோற்பத்திகளும், கிருஷி வியாபாரங்களினால் லெக்ஷக்கணக்கான பறவை மிருகாதிகளும், சஸ்யாதிகளும் அபிவிர்த்தி யுண்டாகின்றன. இதுபோன்றே கொலை முதலிய துற்பிரவிருத்திகளினால் அளவற்ற ஜீவநாசங்களும் உண்டாகின்றன என்பது நமது பிரத்தியக்ஷானுபவ மென்பதெவரும் மறக்கார்.

ஆனால், இத்துணையளவில் லௌகிகாபி விர்த்திகளை மனுஷியர்கள் எந்நோக்கப் பான்மையில் சாதாரணமாய் இயற்றி வருகின்றார்கள் என்று கேட்குங்கால், தங்களுடைய சொந்தக் குணமாயிருக்கிற காமாதி கடோரங்கட்குபயோகமாகும், ஆகார, நித்திரை, புணர்ச்சி முதலிய

---

விட்டு என் வார்த்தையைக் கேளுங்கள்! விருக்ஷங்களுக்கும் உங்களுக்கும் சந்திசெய்துசினேகத்தைஉண்டாக்குகிறேன். விருக்ஷங்களுக்கெல்லாம் மகளான மரீஷை என்கிற கன்னியை (வருங்காரியத்தை யறிந்து) நான் கிரணங்களினாலே வளர்த்து வைத்திருக்கிறேன். (ஜெகன்மோகன) ரூபலாவண்ய சௌந்தர்யங்களாலே மிகுந்து ரத்னம்போலே விளங்காநின்ற அந்தப் பெண்ணை உங்களுக்குப் பாரியையாகக் கொடுக்கிறேன். அவள் வம்சத்தை அபிவிருத்தி செய்யத்தக்கவன் அந்தப் பெண்ணினிடத்திலே உங்களுடைய தேஜஸின் பாதியினாலும் என்னுடைய தேஜஸின் பாதியினாலும் மகாவித்துவானான தக்ஷன் என்கிற பிரஜாபதி பிறந்து அக்கினிக்குச் சமானமான தேஜசுள்ளவனாய் (வெகுவாய்ப்) பிரஜாவிருத்தி செய்வன். அக்கன்னிகையின் உற்பத்திக்கிரமத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சந்திரன் சொல்லுகின்றான். (தொடரும்)

ஸ்ரீ V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி,
ஆரியன் சோதிடசாலைத் தலைவர், திருவாரூர்.



விருப்பம் பெற்றே செய்துவருகின்றனர் என அறியற்பாலது. அன்றி வேறுற்ற நோக்கங்கள் அவர்கட்கந்தர்க்கதமாயுளதென யாமறிந்த மட்டிற் கண்டிலம்.

மேற் கூறிப் போந்த முப்பகுதிகளில், இனி, ராஜீகத்தின் பிரிவு இனையதெனக் கூறுதும். முன்னர்ப் பகுத்துணர்த்திய மானுஷீகாபி விருத்தியானது, ஒவ்வொரில்லங்கடோறும், எவ்விதம் பெருக்குற்று வருகின்றதோ அன்னணம் தேசங்கள் பலவற்றினிடத்தும் மண்டலாதிபதிகளாகிய அரசர்கள் அவுடதசாலைகள் பாடசாலைகள், அறச்சாலைகள், பொது மன்றங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி அவற்றால் உலகத்தில் பலான இலக்க அளவில் ஜன சௌக்கியமும், நதி, தடாகம், கூபம், மார்க்கம் முதலியவைகளால் அனந்த குணாபிவிருத்திகளையும் அடைய நிர்த்தாரணஞ் செய்துவருகின்றனர். அவைகளை உபயோகித்துவருந் தன்மையில், பென்னம் பெரிய கிருஷிவியாபாரங்களும், அதனாற் கோடிக்கணக்கான தானியாபி விருத்தி முதலிய தேச க்ஷேமங்களும் பலகுகின்றன. இவையிற்றாக,

அரசர்கள் பெருங்கோபத்தினானும், யுத்தங்களினாலும், பலவிதக் கோடி எண்களில், மனுஷியர்கள் பக்ஷிகள் மிருகங்கள் முதலியன நாசம் அடைவதை நான் காணுகின்றனம். இப்படியே, மன்னர் அனுக்கிரகத்தினால், காடு நாடாகவும், இராஜ நிக்கிரகத்தினால் நாடு காடாவும் ஆகின்றன.

ஆகவே, அரசர்களும் சாமானிய மானுடாவதாரஞ் செய்தவர்களாயிருக்க, அவ்வரசர்கள் செயல்களை வேறு பிரித்து ராஜீகம் என்று விசேஷித்துக் கூறுவ தெற்றுக்கெனில், உலகாக்ஷயின் நிமித்தம்பற்றியே, மனுஷீகத்தில் நின்றும், ராஜீகத்தைப் பிரித்துள்ளதென்றறிக. இராக்ஷயின் நோக்கம் என்னை எனில், சாமானிய மனுஷனுடைய நோக்கமுற்றும் ஆகாராதிகளைப் பெற்றுள்ளதேயாம். மகாமன்னர்களுடைய எண்ணங்கள் அங்ஙனமன்று. ஈசுராஞ்ஞையை நிலைநிறுத்துவான் சதாப்பொறுப்புற்ற தேற்றமெனக் கொள்க. ஆனால், ஈசுராஞ்ஞை யாவதென்னை? உலகிற்கரசர்கள் எவ்விதம் அனுகூலஞ்செய்தற்பொருட்டு முன்வந்துள்ளார் என வினவில், இனி, ஈசுராஞ்ஞையில் காசினியினிடத்துள்ள சகல ஜீவப் பிராணிகளும், பாரம் பரிய ஜென்னியமாய்ப் பெருகி வளமுற்று வரவேண்டும் என்னுங் கடப்பட்டிற் செறிவுற்றதாம். அரையர்களின் நோக்கங்கள் பூர்வீக ஜென்னியமா யுண்டாகிக் கொண்டிராநின்ற ஆன்மகோடிகள் தமது குரோதாதி குணங்களினால், தம்மிற் போர்செய்து நசித்துப்போகாமல், சாம, தான, பேத, தண்டம் முதலிய உபாயங்களினால் பாதுகாத்துக்கொள்வதென்க.

இவை வேந்தர்களால் ஈசுரராஞ்ஞைக்காகச் செய்யப்படுகின்ற அனுகூலங்கள் என்றே சொல்லவேண்டுந் தகைமை யுடைத்து. இக்காரணம்பற்றி மனுஷீகத்தினும் ராஜீகஞ் சிறப்புற்றதென்றறியப்படல்வேண்டும்.

முற்செப்பியுள்ள மூன்று வகுப்புகளில் தெய்வீகமாவ தென்னவென்றால், தொன்று தொட்டுள மனுடவினத்தவர்க்கு எவ்விதங் காமக்குரோதாதி துற்குணங்கள் ஸ்வாபீகமாயிருக்கின்றனவோ, அங்ஙனமே பரிசுத்தனாகிய கடவுளுக்கு, சருவஜ்ஞத்துவம் முதலிய குணங்கள் இயற்கையில் உள்ளன. அக்குணங்களாவன. (1) சருவஞ்ஞத்துவம், எல்லாம் அவருக்குத் தெரியும். (2) சருவேசுரத்துவம், எல்லா ஐசுவரியமும் அவருடையது. (3) சருவநியந்தாத்துவம், எல்லாவஸ்துக்களும் அவரிடத்திலே பொருந்தியுள்ளன. (4) சர்வேந்திரியாமித்துவம், எங்கும் அவர் வியாபித்திருக்கின்றார். (5) சர்வகர்மித்துவம், எல்லாவஸ்துக்களும் அவராலே உண்டாக்கப்பட்டுள்ளன. (6) சர்வசக்தித்துவம், எல்லாவல்லமையும் அவருக்குண்டு. இப்படிக்குள்ள போற்றலும், முற்றறிவும், நிறைதொழிலுமுடைய முழுமுதற் கடவுளால், எவ்விதம் லௌகிகவியல்கள் உண்டாகின்றனவெனக் கேள்வி நிகழுமேல், பின்னர் அதனை விரிப்பாம். (தொடரும்)

---

**பாம்பின் அதிசயச்செயல்.**—ரங்கூனில் பிரசுரமாகும் அரங்கவர்த்தமானி பின் வருமாறு சொல்லுகிறது:லோயர்பர்மாவைச்சேர்ந்த பின்மானாவிலிருக்கும் ஓர் பொங்கிமடத்தின் வாழைத்தோட்டத்தில் சில பெரும் இரஸ்தாளித் தாறுகளிருந்ததைக்கண்ட இரண்டு பர்மியர் சென்ற புதவாரம் இரவு 11-மணிக்கு தோட்டத்துக்குட்புகுந்து இரண்டுபேரும் இரண்டு பெரும் வாழைத்தாறுகளை வெட்டும்போது இரண்டு பெருஞ் சர்ப்பங்கள் இரண்டுபேர் கால்களையுஞ் சுற்றிக் கொண்டனவாம். அதினால் அவர்கள் பயந்துகூச்சற் போட பொங்கி மடத்திலிருந்த பவுத்த குருக்களெல்லாம் ஓடிவந்தார்கள். ஜனங்கள் கூடிய பின்பு சர்ப்பங்களும் பின்னலையவிழ்த்துக்கொண்டு போய்விட்டனவாம். இக்காட்சியைக் கண்ணுற்ற புத்த குருக்கள் கடவுளால் பிடிபட்ட கள்ளர்களைப் போலீசுக்கு அனுப்பக்கூடாதென்று அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லி அனுப்பி விட்டார்களாம்,

## சிலா செதுக்குவேலை

"சத்திய வசனன்" எழுதியது

(79-வது பக்கத் தொடர்ச்சி)

சுண்ணாம்பு வேலையில் சித்திரவேலையை அமைப்பது இந்தியாவில் பூர்வீகமாயுள்ளது. சுண்ணாம்பு வேலை வர்ணம் கொடுப்பதற்கு தகுதியானது. புத்த சித்திர வேலைக்காரர்கள் சுண்ணாம்பு வேலையில் சித்திரவர்ண மிடுவதில் பேர்போனவர்கள். ஜகந்நாதத்தில் துளசி மாடங்கள் எல்லாம் சுண்ணாம்பு வேலையில் வர்ண சித்திரம் செறிந்துள்ளவை. சுண்ணாம்பு சித்திர வர்ண வேலையை சிலா சிற்பியர் செய்கிறதில்லை. சோட்டா நாகப்பூரில் சரசமான கல் பாத்திரங்கள் (கல் சட்டிகள்) செய்கிறார்கள். அப்பாத்திரங்கள் தொட்டிகள், கோப்பைகள், மிடாக்கள் முதலாயின. சாமான்கள் இரண்டு பை முதல் 3-அணா வரையில்விலையாகின்றன. கயாவில் சிறு விக்ரகங்களும் பூஜை சாமான்களும் மிருகங்களின் உருவங்களும் செய்யப்படுகின்றன. அவைகள் அதிக வேலைத்தரமாக இருக்கின்றன. வேலைசெய்வோர்க்கு அதிக ஊதியத்தையும் தருகின்றன.

மேற்கூறியவையெல்லாம் உறுதியானபாண்டச்சிலையில் ஆகின்றன. கயாவுக்கு வடக்கே 19-மைல் தூரத்தில் பத்தல்கட்டி மலையில் இக்கல் அகப்படுகிறது. கயாவில் அநேக சிற்பியர்கள் கல்பாத்திரங்கள் செய்கிறார்கள். இவர்கள் தங்களை ஜாதியில் பிராமணர்கள் என்கிறார்கள். இவர்களெல்லாம் சிலா செதுக்கு வேலைக்காரர்களுடைய அல்லது சிலா கட்டிட வேலைக்காரர்களுடைய சந்ததியார். இவர்களெல்லாம், கயாவில் மிகப் பெரிதாகிய விஷ்ணு பாத ஆலயத்தை நிர்மாணம் செய்வதற்காக இராஜபுதனத்திலிருந்து 140-வருடங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் ஜெயபூர் சிற்பியர்கள். அவர்கள் மூதாதையர்கள் சிற்பசாஸ்திரத்திலும் சிற்பத்தொழிலிலும் கைதேர்ந்தவர்கள். தற்காலத்தில் கயாவிலுள்ள சிற்பியர் சிற்பத்தொழிலின் பழக்கத்தை இழந்துவிட்டார்கள். இராதாகிருஷ்ணனுடைய கோயில் ஜெயபூர் சிற்பியர்களால் செய்யப்பட்டிருக்கிறது. இதில் இராஜபுதன சித்திரவேலை அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சித்திரவேலை மர சித்திரவேலையைப் போன்றிருக்கிறது. ஒரிஸ்ஸாவில் உள்ள உயரிய சித்திரச் செதுக்குவேலையைப்போன்று இல்லை.

பிரதான சிற்பியர்க்கு கூலி மாதத்திற்கு 30 ரூபா அல்லது 40-ரூபா ஆகிறது. சாதாரண சித்திர வேலைக்காரருக்கும், கட்டிட வேலைக்காரருக்கும் மாதக் கூலி 15-முதல் 25-ரூபா ஆகிறது. பாடலிபுரத்தில் சிற்பியர்கள் சிறு விக்ரகங்களைச் செய்கிறார்கள். அவைகள் நான்கு அணா முதல் ஐந்து ரூபாய் வரையில் விலையாகின்றன. சிலர் எந்திரக்கல்லையும், குயவனுடைய தண்ட சக்கரத்தையும் கல்பாத்திரங்களையும் செய்கிறார்கள். கல்கத்தாவில் ஐரோப்பியர் ஷாப்புகளில் சிற்பியர்கள் கருங்கல்லிலும் இற்றலிதேசத்து வெண்கல்லிலும் கல்லறைக்கற்களும் ஞாபகக் குறிக்குரிய கட்டிட சாமான்களையும் செய்கிறார்கள். இவர்கள் கூலி 10-முதல் 25-ரூபா வரையில் வித்தியாசப்படுகிறது. இவர்களெல்லாம் மாங்கிர், பாடலிபுரம், டினாபூர் சிற்பியர்கள் கல்கத்தாவில் வெகு நாணயமான சிலா செதுக்குவேலை செய்யவேண்டியிருந்தால் பம்பாயிலிருந்து தருவிக்கிறார்கள்.

சிலா செதுக்கு வேலையில் உபயோகப் படுத்தப்படும் ஆயுதங்கள் தாருசெதுக்கு வேலையில் உபயோகப் படுத்தப்படும் சாமான்களைப் போன்றுதான் இருக்கின்றன. ஆனால் சிலா செதுக்கு வேலைக்காரனுடைய கொட்டு மரத்துண்டு அதிக பாரமானதாகவும் சுய பாரத்தை யுடையதாகவும் இருக்கிறது. ஆகையால் அதிக பலமாகத் தாக்குகிறது. உளிகள் சீக்கிரமாக வெட்டித் துளைக்கின்றன. கோப்பைகள், தட்டுகள் முதலிய கல் பாத்திரங்கள் சாதாரண சுதேச கைகடைச்சல் பட்டரையில் துளைத்து ஆக்கப்படுகின்றன. இந்திய சிலா செதுக்கு கைத்தொழிலை நிலை நிறுத்த இராஜாங்கத்தார் இது வரையில் எடுத்துக்கொண்ட பிரயாசையைக் காட்டிலும் அதிக முயற்சியால் பிரயத்தனங்களை எடுத்துக் கொண்டாலொழிய கூடிய சீக்கிரத்தில் சிலா செதுக்கு வேலை இந்தியாவில் நசித்துப் போய்விடும். கைத் தொழில் காட்சிகளிலும், கைத்தொழில் காட்சிச் சாலையிலும் கைதேர்ந்த சிலா செதுக்கு வேலை சிற்பியர்களின் மாதிரிகளைச் சேகரித்துப் பரிசு கொடுக்கும் பட்சத்தில் இந்திய சிலா செதுக்கு வேலை இந்தியாவில் நிலை பெறும்.

ஆனால், ஒரிஸ்ஸா சிற்பியர்களின் சிலா செதுக்கு வேலை அபாரமானதால், பொருட் காட்சியில் வைக்கப் படுவதற்கும் பொருட் சாலையில் சேகரித்து வைப்பதற்



கும் சௌகரியக் குறைவாயிருக்கிறது. தற்காலத்தில் கவர்ன்மெண்டாரால் ஆதரிக்கப்படும் பொருட் காட்சிகள் நீடித்தகால பொருள் சேகரத்தை யுடையதாயில்லை. இராஜாங்க உத்திரவிற்கும் காட்சி நடை பெறுங் காலத்திற்கும் இடையிலுள்ள காலம் மிகச் சிறிதாயுள்ளபடியால் கை தேர்ந்த சிற்பிகள் பொருட் காட்சிக்கென்று தங்கள் முழுமனோ பாவமும் செறிந்துள்ளதாய்ப் பொருள்களைத் தயாரித்து அனுப்புவதற்கு அசக்தர்கள் ஆகிறார்கள். பொருட் காட்சியில் வைக்கப் படும் பொருள்கள் விற்பனைக்காக செய்யப்படும் சிலா செதுக்கு வேலைப் பொருள்களேயாம். விற்பனைப் பொருள்களெல்லாம் சுவல்ப காலத்தில் செய்யப்படுவனவாகையால் மிகுந்த மனோபாவத்தை யுடையனவாயிருத்தல் அருமை. ஆகையால், இராஜாங்கப் பொருள் காட்சியின் உத்திரவு காலத்திற்கும் காட்சி நடை பெறும் காலத்திற்கும் இடையிலுள்ள காலவளவு நீடித்ததாயுள்ளதானால் கை தேர்ந்த சிற்பியர்கள் தங்கள் முழு மனோபாவத்தைச் செலுத்தி காட்சிப் பொருள்களைக் கைப்பாடாகச் சிருட்டித்துத்தர சக்தியுள்ளவர்கள் ஆவார்கள்.

### சிலா செதுக்குவேலைச் சிதைவிற்கு காரணங்கள்

(1) தற்காலத்திய சிலா கட்டிடங்களை யெல்லாம் ஐரோப்பிய மாதிரியில் கட்டுகிறார்கள். பூர்வீகமாயுள்ள சிலா சிற்பியர்களை அக்கட்டிடங்களில் வேலை செய்ய அமர்த்துகிறதில்லை. கைப்பாடான சிலா செதுக்கு வேலையைக் கவனிக்கிறதேயில்லை.

(2) இந்து தேசத்து சிற்ப கலாசாலைகளில் இந்திய கட்டிட சிற்பசாஸ்திர விசாரணையைக் கவனியாதிருப்பதே சிலா செதுக்கு வேலையின் சிதைவிற்குக் காரணம். இந்திய சிற்பசாஸ்திர கலாசாலையில் தேர்ந்த கல்விமான்கள் இந்திய பிரபுக்களின் வீடுகளையும் அரண்மனையையும் ஏற்படுத்தற்கு வேண்டிய மாதிரியை வரைந்து காட்டுங்கால், தங்களுக்குத் தெரிந்த ஐரோப்பிய மாதிரியையே பின்பற்றுகிறார்கள். இஃது இந்திய சிற்பசாஸ்திர மாதிரியை நசிக்கச்செய்கிறது.

(3) ஜனசமூகத்தார் வேலைப்பாட்டைக் கவனிக்கிறதேயில்லை. தற்காலத்திய நாகரீகத்திற்கு ஒத்துள்ளதா என்பதை மாத்திரம் கவனிக்கிறார்கள் அவர்களுக்கு வேலைத்திறம் இத்தகையது என்பதும்கூட தெரியாது. இன்னும் சிலர் வேறு காரணங்களைக் காட்டுகின்றனர்.

(1) யுத்தகாலம், குழப்பக்காலம், வீடுவாசலின்றி திரிந்து வாழும் மகம்மதியர் கொள்ளைக்காலம், மதசம்பந்த உணர்வு நீத்தமை இராஜகுமாரர்களும் சீமான்களும் ஒழிந்தமை, தினந்தோறும் விர்த்தியைக் காட்டுகின்ற ஏழ்மை. மகம்மதியர்கள் இந்தியவேலைப்பாடான ஆலயங்களை மதவைராக்கியங்கொண்டு அழித்தார்கள் என்றாலும், அவர்களால் இந்திய சிற்ப செதுக்குவேலை நசித்துப்போகவில்லை. (Fergusson) பர்குசான் சொல்லுகிற மாதிரியாய், டைமர் என்பவனுக்கும் இன்னும் இதர மகம்மதிய படையெடுப்புக்காரர்களுக்கும், இந்திய கைத்தொழில் சாமர்த்தியத்தை ஒழிக்கவேண்டுமென்பது எண்ணமல்ல. அவர்களுக்கு மசூதி கட்டுவதற்கு வேலைதீர்ந்த சாமான் வேண்டியிருந்தது. அது பாதி காரணமாகவும் மதவைராக்கியம் பாதி காரணமாகவும் இந்திய ஆலயங்களை அழித்ததே தவிர வேறல்ல அவர்கள் பட்டணங்களில் கொள்ளையடித்துக் கொலைசெய்தபோதிலும் சிற்ப கட்டிடக்காரர்களையும் சிற்ப செதுக்குவேலைக்காரர்களையும் தப்பவைத்தார்கள். அச்சிற்பியர்களை தங்கள் இராஜதானிப் பட்டணத்தின் அலங்கார நிர்மாணத்தில் வேலைசெய்யும்படி விடுத்தார்கள்.

(தொடரும்)

---

**காகிதச்சிக்கனம்.**—காகிதத்தை உபயோகிப்பதில் எவ்வாறு சிக்கனமாய் இருக்கலாமென்று சொல்வதற்காக லண்டனில் ஒரு கமிட்டி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும், லண்டன் பத்திரிகைகளின் அளவு குறைக்கப்பட்டுப் போகுமென்றும் ஒரு பிரபல லண்டன் பத்திரிகையின் நிருபர் சொல்லுகிறார். சந்தாதாரர்கள் வருஷமுழுவதிற்குமாவது அரைவருஷத்திற்காவது சந்தாதாரர்களாகச் சேர்ந்தால், பத்திரிகை ஆபீஸ்களில் அவர்களுக்காகச் செய்யப்படும் கடிதப் போக்குவரத்து கம்மிப்படுமாகையால், காகிதத்தில் சிக்கனங்காட்டலாமென்றும் ஜனங்களுக்கு எடுத்துக் காட்ட லண்டனில் மிகுந்த முயற்சி செய்யப்படுமென்றும் நினைக்க இடமுண்டு. இது நிற்க, ஜனங்கள் கடிதமெழுதும்பொழுது அனாவசியமாய் இரட்டைக் கடிதத்தை உபயோகிக்காமல் ஒரே கடிதத்தை உபயோகித்துவந்தால், காகிதச் செலவு கம்மிப்படும். ஜனங்களால் வீணாக்கப்படும் பழைய சமாச்சாரப் பத்திரிகைகளைச் சேகரிப்பதற்கும் அந்நகரில் பலவேறு மார்க்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

## விஸ்வேஸ்வர விண்ணப்பம்

ஸ்ரீ V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி

இராகம்-முகாரி-தாளம்-சாபு

பல்லவி

வேதாகமந் துதி-விஸ்வகர்மாவெனும்
விமலவிஸ்வேஸ் வரனே-உன்றன்
பாதாரவிந்தஞ் சதமெனநம்பினேன்
பாலிப்பாய் தற்பரனே.

கண்ணிகள்

(1) மாதாபிதாகுரு தெய்வமும்நீயன்றி
வையத்தில் வேறுமுண்டோ-வரந்
தாதாமெய்ஞ்ஞானச் சுயஞ்ஜோதியாய்வளர்
சத்யதயாபரனே. (வேதா)

(2) சந்ததமென்னைப் பரிபாலனஞ்செய்த
தந்தைதாயற்ற பின்னர்-பெற்ற
மைந்தர்களால்வந்த கஷ்டநிஷ்டூரத்தால்
மனமெலிவுற்றனனே. (வேதா)

(3) வேதாவிதித்த விதிப்பயனாலிந்த
மேதினிதன்னில் நிதம்-வந்து
வாதாடும்பற்பல தொல்லைகண்டஞ்சிநான்
வாடிமயங்கினனே. (வேதா)

(4) இப்பிறவி தப்பி யுன்றன் றிருவடி
யென்று காணப்பெறுவேன்-என்ன
தப்பிதவாளி நானாகிலுஞ் சாயுச்யந்
தந்தருள் தாயகனே. (வேதா)

(5) பூதலந் தன்னிற் றனுகரணமுடன்
புவனபோகங்க ளென்னும்-நான்கு
சாதனந்தந்தென்னை யாளுவாய் மெய்ஞ்ஞான
சத்ய பராத்பரனே. (வேதா)

(6) எண்ணாத வெண்ணங்க ளெண்ணியெண்ணி
ஏக்க முற்றேனே-முன்னந் [நிதம்]
கண்ணாரக் கண்டதோர் காட்சியைக்கைவிட்டுக்
கலக்கமு முற்றேனே (வேதா)

(7) எந்தனிடந்தனில் விஸ்வகர்மபுரம்
என்னு மூருண்டு பண்ண-வரந்
தந்தருள் செய்வாய் பரிபூரணானந்த
சற்குருதேசிகனே. (வேதா)

(8) சாதுசங்கசக வாசத்தாலத்வைத
சாஸ்திரஞ் சொன்னபடி-யானெப்
போதுமேகாக்கிர சித்தமுடன் பூசை
புரிவதும் விட்டனனே. (வேதா)

(9) ஓங்காரப்ரணவ குண்டலி மையத்துள்
ஓங்கிய தற்பரனே-மஹா
ரீங்கார ஸக்தியா விப்பிரபஞ்சத்தை
நிர்மித்த சிற்பரனே. (வேதா)

## பண்டைய இந்தியரின் அன்னியதேச வியாபாரம்

ஹிந்து யூனிவர்ஸிடிக்கு அஸ்திவாரக்கல் நட்ட சம்பந்தமாக நடந்த பல பிரஸங்கங்களில் கனம் மிஸ்டர் லஜுவாய் ஸாமல் தாஸ் செய்த பிரஸங்க ஸாரம்சம்.—

வெகு பூர்வ காலத்திலும், அதாவது வேதங்கள் ஏற்பட்ட காலமென்று சொல்லப்படுகிற காலத்திலும் வியாபாரத்தையே குலதர்மமாக ஒரு ஜாதி கொண்டிருந்தது. இத்தேச வியாபாரிகள் பணத்தாசையினால் அன்னிய தேசங்களுக்குக் கப்பல்களை அனுப்பிவந்ததாகவும், இன்ன வியாபாரத்தைச் செய்கிறது, இன்ன வியாபாரத்தைச் செய்கிறதில்லையென்று கட்டுப்பட்டிராத வியாபாரிகள் இரவும் பகலும் ஓய்வில்லாமல் பிரயாசைப்பட்டு வந்ததாகவும், லாபத்தை உத்தேசித்து அவர்கள் எங்கும்போய் வந்ததாகவும், அவர்கள் சஞ்சரிக்காத கடல்கள் இல்லையென்பதாகவும், விற்பனைக்காலத்தில் சம்மதப்பட்ட விலை போதுமாயிருந்தாலும் இல்லாவிடினும் அதற்குக் கட்டுப்படவேண்டிய அவசியத்தையறிந்து அப்படியே கட்டுப்பட்டு வந்தார்களென்றும், செல்வாக்கு நாணயமாக நிஷ்கா என்ற பொன் காசுகளை உபயோகித்து வந்தார்களென்றும் ரிக் வேதத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பதிலிருந்து, கப்பலோட்டும் தொழிலை அவர்கள் அறிந்திருந்தனரென்றும், தொழில் ஊக்கம் கொண்டவர்களென்றும், ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படவேண்டிய நியாயங்களை அவர்கள் அறிந்தவர்களென்றும், பொன் நாணயத்தின் விசேஷத்தை அறிந்திருந்தார்களென்றும் தெரிகிறது. ஆகையினால் வியாபாரத்தினால் தங்களுடைய நிலைமையை விருத்தி செய்துகொள்ள இக்காலத்தில் மேனாட்டார் கருதுவது போலவே பழைய காலத்து ஹிந்துக்களும் கவலைப் பட்டு வந்ததாகத் தெரிகிறது.

இக்காலத்தில் மேனாட்டு தனிகர்கள் ஆசைப்படுவது போலவே பழைய காலத்து வைசியர்கள் பிறர் வியாபாரத்தைக் கைக்கொள்ளப் பார்த்தார்கள். உலகம் தோன்றிய எக்காலத்திலும் மனுஷ்ய சுபாவம் ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. பிற தேசங்களுடன் வியாபாரஞ் செய்வதற்கு வேண்டிய கப்பல்கள் முதலிய சாதனங்கள் அக்காலத்தி லிருந்ததுடன், அவைகளைக் கொண்டு சாவதானமாக வியாபாரஞ் செய்யலாமென்ற



தைரியமும் வியாபாரிகளுக்கு இருந்திருக்கிறது. அம்மாதிரி தைரியமில்லாமல் வியாபாரம் பெருகி இருக்க முடியாது. புராணங்களைக் கவனிப்போம். சுக்ரீவன் கடலிலுள்ள தீவுகளைச் சொல்லும்பொழுது கோசகாக் என்ற தீவுகளைக் குறிப்பிடுகிறான். அது சீனாவாக இருக்கலாம். யவன த்வீபமென்றும், சுவர்ண த்வீபமென்றும் அடிக்கடி பிரஸ்தாபங்களைக் காணலாம்; அவை முறையே ஜாவாவாகவும், ஸுமட்ராவாகவும் இருந்திருக்கலாம். லோகித்ரஸாகரம் என்று சொல்லப் பட்டிருக்கிற கடலானது இக்காலத்தில் 'செங்கடல்' என்று வழங்கும் கடலாக இருக்கலாம்.

அக்காலத்துஹிந்துக்கள் இந்தியாவுக்குக் கிழக்குத் திக்கிலிருந்தநாடுகளைநன்குஅறிந்திருந்தார்களென்றும், அவைகளுடன் வியாபாரம் செய்துவந்தார்களென்றும், அங்கிருந்து அவர்கள் கொண்டுவந்த அதிசய சாமான்களைத் தங்கள் நாட்டு அரசருக்குக் காணிக்கையாகக் கொடுத்து வந்தார்களென்றும் தெரிகிறது. கடலின் அட்டகாசத்தால் வியாபாரிகள் கஷ்டப்பட்டதாக மகாபாரதத்திலும் சொல்லப்பட் டிருப்பதிலிருந்து அன்னியதேச வியாபாரம் பாரதமெழுதப்பட்ட காலத்திற்கு முன்னும் நடந்துவந்ததாகத் தெரிகிறது. ஆனால், வருஷந்தோறும் நடந்த அன்னியதேச வியாபாரத்தின் பெறுமானம் என்னவென்றாவது, எந்தெந்த தேசத்துடன் வியாபாரம் நடந்ததென்றாவது மேற்சொன்ன பிரஸ்தாபங்களிலிருந்து விளங்கவில்லை. இக்காலத்தில் போல் அக்காலத்தில் கணக்குகள் வெளியிடப்படவில்லையாயினும், அக்காலத்தில் நடந்த அன்னிய வியாபாரத்தைப் பற்றிக் கிடைக்கும் எல்லா சமாசாரங்களையும் ராதாகுமுதமுகர்ஜி இந்தியாவில் கப்பல்கட்டும்தொழில் என்ற தம்முடைய புஸ்தகத்தில் திரட்டி வெளியிட்டிருக்கிறார். பண்டைக்கால நூல்களை ஆராய்ச்சிசெய்து அவரைப்போல் உழைக்க கல்வி கற்ற மாணவர்கள் முற்படுவது மிகவும் விரும்பத்தக்க விஷயம்.

வியாபாரியானவன் பிறதேச பாஷைகளை அறிந்திருக்க வேண்டிய அவசியத்தை இக்காலத்தில் மிகவற்புறுத்துகிறார்கள். வியாபாரப் படிப்பில் பட்டம்பெற ஒரு அன்னிய பாஷாஞானம் அவசியமாக விருக்கிறது. இந்த அவசியத்தை மனுவும் உணர்ந்து, வைசியனானவன் மனுஷர்கள் பேசும் எல்லாப் பாஷைகளையும் அறிந்திருத்தல் நல்லதென்று சொல்லி யிருக்கிறார். ஒரு கப்பலின் சரக்கு பழுதாய் விட்டால், அக்கப்பலிலுள்ள சிப்பந்திகள் எல்லோரும் சேர்ந்து ஜவாப்தாரி என்றும், தெய்வாதீனத்தால் பழுதாய் விட்டால் ஒருவரும் பதில் ஜவாப்தாரி யல்ல வென்றும் மனு சொல்லியிருப்பதிலிருந்து வியாபாரிகளுக்கும் கப்பல்காரர்களுக்கு மிக் காலத்தில் இருந்துவரும் சம்பந்தத்தை அக்காலத்திலும் அறிந்திருந்தார்களென்பது விளங்கும். சேதத்துக்கு மாலுமிகள் எல்லோரும் சேர்ந்து ஜவாப்தாரி என்று மனு சொல்வதிலிருந்து அவர்கள் சொந்தக்காரர்களாகவு மிருந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டாகிறது. கூட்டாய்த் தொழில் செய்யும் வரையில் ஜனங்கள் எவ்வளவு நாகரிகத்தில் முதிர்ந்திருந்தார்களென்றும் அதிலிருந்து நாம் அறியலாம்.

வேதத்திலும் புராணங்களிலும் வியாபாரத்தைப் பற்றிக் காணப்படும் பிரஸ்தாபங்களிலிருந்து நாம் என்ன ஊகிக்கலாமென்ற விஷயமாக அபிப்பிராய பேதமேற்படலாமாயினும், சந்திரகுப்தனுக்கு முந்தினகாலத்தில் இந்தியாவில் வியாபாரத்தின் நிலைமை எப்படி இருந்ததென்ற விஷயமாக மேனாட்டு விற்பன்னர்கள் ஒருமனதாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இந்தியாவுக்கும் பாபிலோன் என்ற நாட்டுக்கும் பூர்வத்தில் நடந்துவந்த வியாபாரத்தைப்பற்றி எழுதும் பொழுது மிஸ்டர் கென்னடி என்ற ஆசிரியர் இன்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன் இரண்டு தேசங்களுக்கும் வியாபாரம் நடந்துவந்ததாகவும், 2300 வருஷங்களுக்குமுன் மும்முரமாக நடந்துவந்ததாகவும் ருஜு உளதென்று சொல்லுகிறார்.

இந்தியாவில் புத்தர்களிருந்த காலத்தைப்பற்றி மிகவும் ஆராய்ச்சி செய்தவராகிய மிஸ்டர் ரிஸ் டேவிட்ஸ் என்ற வித்வானும் அப்படியே கருதுகிறார். இந்தியாவின் தென் மேற்குக் கரையிலிருந்து என்ன சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன வென்றும், இக்காலத்தில் ஸுபாரா வென்றும் ப்ரோச் என்றும் வழங்கப்படும் துறை முகங்களிலிருந்து ஏற்றுமதி அதிகமாக நடந்ததென்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெயர்கள் ஸம்ஸ்கிருத பாஷைச் சொற்கள் அல்லவென்றும் தமிழ்ச் சொற்கள் என்றும் அவர்கள் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"பம்பாய் கெஜட்டீர்" என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த மிஸ்டர் ஜாக்ஸன் சுமார் 2900-வருஷங்

களுக்கு முன் ப்ரோச், ஸுபார என்ற துறை முகங்களின் வழியாக இந்தியாவுக்கும் பாபிலோன் நாட்டுக்கும் 300-வருஷ காலம் வியாபாரம் மும்முரமாக நடந்து வந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

**சந்திரகுப்தன் காலம்.**—சந்திர குப்தனுடைய மந்திரியாயிருந்த வெகு கீர்த்தி பெற்றவராகிய சாணக்யர் என்பவர் எழுதின அர்த்த சாஸ்திரத்தில் வியாபார அபிவிருத்தி நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சந்திர குப்தன் இன்றைக்கு 2236-வருஷங்களுக்குமுன் பட்டத்துக்குவந்து 30-வருஷம் அரசாண்டவர். கப்பல் இலாக்கா சபையொன்று தனியாக இருந்ததாகவும், அதற்கு அதிபதி ஒருவர் இருந்ததாகவும் சாணக்யர் சொல்லி யிருப்பதிலிருந்து பல கப்பல்கள் இருந்ததாகத் தெரிகிறது. அன்னிய வியாபாரத்தைக் காக்க வேண்டியது கப்பல் சபையின் வேலையாக இருந்திருக்க வேண்டும்.

இந்தியாவுக்கும் அன்னியதேசங்களுக்கும் நடந்து வந்த வியாபாரத்தின் பலனாக பல அன்னியர் தேசத்துக்கு வந்ததால், அவர்களுக்கு ஜாகை ஏற்படுத்திக் கொடுக்கவும், பந்தோபஸ்துக்காக பாரா அனுப்பவும், வைத்தியஞ்செய்யவும் ஏற்பாடு செய்வதற்காகத் தனியாக ஒரு சபை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அன்னியர் உயிருடன் இருந்தவரையில் அவர்களுக்கு ராஜாங்கத்தார் உதவி செய்து வந்ததுடன், அவர்கள் இறந்து போன பிறகு அவர்களுடைய ஜிவேஜிகளை வசூல் செய்து ரொக்கமாக அவர்களுடைய உறவினர்களுக்கு அனுப்பியும் வந்தார்கள். நவத்யட்சா என்று ஒரு உத்யோகஸ்தர் புதிதாக நியமிக்கப்பட்டார். கப்பல்களின் சொந்தக்காரர்களிடமிருந்து தவறாமல் துறைமுகத் தீர்வையை வசூல் செய்யவேண்டியது அவருடைய வேலை. கடல்கள், ஆறுகள், சுபாவமாக ஏற்பட்ட ஏரிகள், வெட்டப்பட்ட ஏரிகள் இவைகளில் கப்பல்கள் சஞ்சரிப்பதைக் கண்காணிக்க வேண்டியது அவருடைய கடமை. காற்றுக்குப் பயந்துகொண்டு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு உதவி செய்யவும், நீரினால் நனைந்து பழுதாய்விட்ட சாமான்களுக்குத் தீர்வையைத் தள்ளிக் கொடுக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு.

வியாபாரத்தைக் கண்காணிக்க இன்னொரு சபை ஏற்பட்டிருந்தது. இப்பொழுது இங்கிலாந்திலுள்ள வியாபார சபைக்குள்ள அதிகாரத்தை விட அதற்கு அதிக அதிகாரம் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. எப்படியென்றால், முத்திரைபோட்ட தராசு படிகளை வியாபாரிகள் உபயோகிக்கும்படி அந்த சபையார் பார்த்துக்கொண்டதல்லாமல், வியாபாரத்தையும் கண்காணித்தார்கள்.

தொழில்களைக் கண்காணிக்கவும் ஒரு சபை இருந்தது. வெளித் தேசங்களுடன் இந்தியர் அக்காலத்தில் வியாபாரம் செய்துவந்ததல்லாமல், மதுரை, காசி முதலிய பெரிய உள்நாட்டுப் பட்டணங்களுடனும் வியாபாரம் செய்துவந்தார்கள். வியாபாரம் அதிக வியாபகமாக இருந்ததால், வியாபார சபை வேறு, தொழில் சபை வேறு நியமிக்க அவசியமேற்பட்டது. 100-வருஷம் கும்பெனியாரும் 50 வருஷம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருமாக 150 வருஷம் ஆங்கிலேயர் இந்தியாவை யாண்டபிறகு, வியாபாரத்துக்கும் தொழிலுக்குமாகச் சேர்ந்து ஒரு தனி அதிகாரியை நியமித்தார்கள் என்பதை நாம் நினைப்பில் வைத்துக்கொண்டால்தான், ஆதி காலத்தில் இருந்த ஏற்பாட்டின் விசேஷம் விளங்கும். 2200 வருஷங்களுக்கு முன் மாரிய வம்ச சக்கரவர்த்திகள் காலத்தில் அன்னிய தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் போக்குவரத்து பலமாயிருந்ததென்பதும், அன்னியர் பலர் வியாபாரத்தின்பொருட்டு அந்த ராஜ்யத்தின் தலைநகருக்கு வந்துகொண்டிருந்தார்களென்றும் பல சபைகள் ஏற்பட்டிருந்தனவென்றும் விளங்குகிறது" என்று மிஸ்டர் வின்ஸெண்ட் ஸ்மித் என்பவர் சொல்லியிருக்கிறார்.

பணக்காரர்களுடைய பணத்தைக் கழித்துவிடவேண்டுமென்று சாணக்யர் சொல்லியிருப்பதிலிருந்து, வியாபாரத்தினால் பெரும்பணம் குவிந்ததென்று விளங்குகிறது. இப்பொழுது மிஸ்டர் லாயிட் ஜியார்ஜ் ஏற்படுத்தி இருப்பதுபோல், படிப்படியாக அவன் அவன் அந்தஸ்துக்குத் தக்கபடி வருமான வரி விகிதத்தை உயர்த்தி வசூலிக்க வேண்டுமென்று சாணக்யர் சொல்லியிருப்ப தல்லாமல், பணம் கொடுக்கிறவர்களுக்குப் பட்டங்களைக் கொடுக்கலா மென்றும் வாய் கூசாமல் சொல்லியிருக்கிறார். நன்மையை உத்தேசித்து யார் தங்களுடைய பொருளை அரசனுக்குக் கொடுத்து விடுகிறார்களோ அவர்களுக்கு குடை தலைப்பாகை முதலிய ஏதேனும் ஒரு பிருதைக் கொடுக்கலாமென்று சாணக்யர் சொல்லியிருக்கிறார். இக்காலத்தில் சிலர் பட்டம் பெறுவதானது முற்காலத்தில் நடந்த மாதிரியாகவே இருக்கிறது.



**ரோமாபுரியுடன் வியாபாரம்.**—சந்திர குப்தனுடைய பேரனாகிய அசோக மகா சக்ரவர்த்தி காலத்தில் முன் போல் அன்னிய வியாபாரம் நடந்து வந்ததுடன், க்ரீஸ், ரோம், ஈஜிப்டு, சீனா முதலிய பல தேசங்களுடன் வியாபாரம் பலத்து விட்டதாகத் தெரிகிறது. ரோமா புரியிலிருந்து வருஷா வருஷம் ரொக்கம் ஏராளமாக இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்ததாக ப்ளினி முதலிய பூர்வ காலத்து ஆசிரியர்கள் சொல்லி யிருக்கிறார்கள். மிளகு, முத்து, மரகதம் ஆகிய மூன்று பண்டங்கள் தமிழ் நாட்டில் மாத்திரம் கிடைத்து வந்ததால், தமிழ் நாடுகள் அப்பண்டங்களைப் பெருவாரியாக ஏற்றுமதி செய்தன வென்றும், தமிழ் அரசர்களிடத்தில் வெகு வல்லமையுள்ள கப்பல்கள் கூட்டங் கூட்டமாக இருந்தன வென்றும், மேனாட்டு வியாபாரிகள் தமிழ் நாட்டுப் பண்டங்களுக்குப் பதிலாக பொன்னையும் வெள்ளியையும் விசித்திரப் பண்டங்களையும் கொடுத்தார்களென்றும் வின்ஸெண்டு ஸ்மித் சொல்லியிருக்கிறார்.

இக்காலத்தில் கிராங்கனூர் என்று வழங்கும்முசிரியில் யவனர்களுடைய பெரிய கப்பல்கள் மிளகு முத்து முதலிய பண்டங்களைவாங்கி ஏற்றிக்கொண்டதாகச்சொல்லப்பட்டிருப்பதிலிருந்து மேனாட்டார் இந்தியாவில்சரக்குகளைத்தாங்களேவாங்கி தங்களுடைய கப்பல்களிலேயே கொண்டுபோனார்களென்று தெரிகிறது. சில சமயங்களில் மேற்சொன்னபடி நடந்தாலும், இந்தியர்கள் தங்களுடைய சொந்தக் கப்பல்களில் பிறதேசங்களுக்குப் போய் வியாபாரம் செய்துவந்தார்களென்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. கிறிஸ்து பிறந்ததற்கு 77-வருஷம் முந்தி வியாபாரம் வெகுவாக பலமாய் விட்டதால் ரோம ராஜ்யத்தின் செல்வவான்களுடைய டாம்பீகத்தால் வருஷமொன்றுக்கு அத்தேசத்திலிருந்து 10-கோடி பவுன் வெளிப்பட்டு விட்டதாக ப்ளினி கோபித்துக்கொண்டு எழுதியிருக்கிறார். வடக்கிலும் தெற்கிலும் இப்படியே இருந்ததாகத் தெரிகிறது.

இரண்டாவது சந்த்ரகுப்தன் சௌராஷ்டிர தேசத்தையும் மாளவதேசத்தையும் பிடித்துக்கொண்டதன் பலனாக விசேஷச் செல்வமும் செழிப்பும் பொருந்திய நாடுகளைப் பிடித்துக்கொண்டதல்லாமல், கிழக்குக் கரையோரத்திலுள்ள துறைமுகங்களுக்குப் போக வழியுமுண்டாயிற்று. ஈஜிப்டு வழியாக ஐரோப்பாவுடன் நேராக வியாபாரம் செய்யவும் சந்திரகுப்தனுடைய ராஜ்யத்துக்கு சௌகர்ய மேற்பட்டது. ப்ரோச் என்று இக்காலத்தில் சொல்லப்படும் துறைமுகத்திலிருந்து என்ன பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டனவென்றும் அவை உள்நாட்டில் எந்தப் பட்டணங்களிலிருந்து துறைமுகப் பட்டணத்துக்குப் போயினவென்றும் பெரிப்ளிஸ் என்ற மேனாட்டு பூர்வீக கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்குக்கரைத் துறைமுகங்கள் ஐரோப்பாவுடனும் கிழக்குக்கரைத் துறைமுகங்கள் ஸுமட்ரா, ஜாவா, சீனாவுடனும் வியாபாரம் செய்துவந்தன. குஜராத்திலிருந்து கூட கிழக்கு தேசத்துடன் வியாபாரம் செய்ததாகத் தெரிகிறது.

"ஜாவாவுக்குப் போனவன் திரும்பிவரமாட்டான்; வந்துவிட்டால் பல தலைமுறைகளுக்குக் காணும்படி சொத்துக்கொண்டு வருவான்" என்று குஜராத்தி பாஷையில் ஒரு பழமொழி இருப்பதால், குஜராத்திலிருந்து புறப்பட்டு இந்தியாவைச் சுற்றிக்கொண்டு கீழ்த்தேசங்களுக்குப் போவது கஷ்டமாயிருந்தாற் போல் தெரிகிறது. பிரஸ்தாப காலத்திற்குப் பிறகும் அநேக நூற்றாண்டுகள் ஆகும் வரையில் அன்னிய தேசங்களுடன் இந்தியா வியாபாரம் செய்து வந்ததாகப் பிரமாணங்கள் இருக்கின்றன. பண்டைக்கால ஹிந்து ராஜ்யங்களின் சரித்திரங்களைப் படித்துப் பார்த்தால்தான் முற்காலப் பெருமை விளங்கும்.

---

**ஆலய விக்கிரகங்கள்.**—வங்காள மாகாணத்தருகிலுள்ள வாரம் என்னும் கிராமத்திலே ஜாகிர்தா ரொருவர் பூமியைத் தோண்டிக் கொண்டிருந்தபொழுது, கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயமும் விக்கிரகங்களும் காணப்பட்டன. பெரிய சிவலிங்களில் ஏழு, எட்டு லிங்கங்களும் அகப்பட்டிருக்கின்றன. தவிர, கறுப்பு சலவைக்கல்லால் செய்யப்பட்ட பல விக்கிரகங்களும் உள. 10-கையுள்ள ஈச்வரியின் சிலையொன்றும் அகப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

## புஸ்தக ஆராய்ச்சி

விஜயகாருண்யம் எனப்பெரிய ஓர் கற்பனைகாதையை சென்னை பச்சையப்பன் சர்வகலாசாலை தத்துவ சாஸ்திர உபபோதகாசிரியராய நமது நண்பர் வ. பாலகிருஷ்ணபிள்ளை பி. எ. அவர்கள் நமது பார்வைக்கு அனுப்பி யுள்ளார். கற்பனைகாதைக்குரிய இலக்கணங்கள் அதில் செறிந்துள்ள மேம்பாட்டைச் சிறிது விவரிப்பாம்.

கற்பனை காதையின் இலக்கணை.—கற்பனை காதைகள் மானிட இயற்கையைவெளிப்படுத்துவன. மானிட உயிர்வாழ்க்கையில் எவ்வித வேறுபாடுகள் உளவோ அவற்றையெல்லாம் புலப்படுத்துவது இவ்வித காதைகளின் முக்கிய கருத்தாம். இதற்காக கற்பனைகாதை ஆசிரியர்கள் எத்தேசத்தில் எச்சனங்களின் நடையுடை பாவனைகளை விவரிக்க எண்ணுகின்றனரோ அத்தேயத்து ஜனங்களின் எல்லாவேறு பாட்டையும் தமது காதையில் குழுமச்செய்து அவர்கள் சம்பாஷணைவாயிலாக அவர்களது மனோசங்கற்பங்களையும், நடையுடைகளையும் ஜனசமூகநிலைமையையும், நாகரீகத்தின் உயர்வு தாழ்வையும், பாஷைமூலமாக அவர்கள் வாய்வழிப் புலப்படும் மரியாதையையும் விளங்கவைப்பார்கள். விளங்கவைக்கும் காலை மானிட உயிர் வாழ்க்கைக்குரிய ஞானத்தை வாசகர்க்குப் புகட்டுவார்கள். அவ்விதம் புகட்டும்போது ஜனங்களின் மனத்தைத் தம்வயப்படுத்துவான் சுவாரஸ்யமான விஷயங்களை நவரசங்களும் பொருந்த இயற்றுவார்கள்.

இவைபோன்ற இலக்கணை விஜய காருண்யத்தில் நிரம்பியுள்ளதோவென சிறிது விசாரிப்பாம். ஆசிரியர் சரித்திரப் பிரதேசம் கள்ளக்குறிச்சி முதலாக மதுரை வரையில் விசாலித்து இருக்கிறது. ஆகையினால், இவ்விரண்டு இடங்களுக்கும் இடையுள்ள முக்கனியினும் தேனினும் பாலினும் இனிய தமிழ்ப்பாஷையைப் பேசும் தமிழர்களின் உண்மை நிலைமையையும், நாகரீகத்தையும், வழக்கப்பாடுகளையும், நற்குண துர்க்குணங்களையும் விவரிக்க விஜயகாருண்யத்தில் எதிர்பார்க்கிறோம். இவ்விஷயங்களில் எவ்வளவுதூரம் நமக்குத் திருப்தி விளையச் செய்கிறார் என்பதின்மேல் புத்தகத்தின் மேம்பாடு நிலை நிறுத்தப்படும்.

கள்ளக் குறிச்சியில் திருடர் கூட்டத்தை அடக்குவான் திருடரோடு சேர்ந்து அவர்களுக்குத் தலைவனும் ஒழுகும் சுந்தரநாதன் என்னும் வீரன் மணிமங்கலம் ஜமீன்தாரியில் தான் கொள்ளையடிக்கக் கருதியதாக முன்னரே கடிதம் வரைந்தனுப்பியது வாசகருக்குள்ளே பின் நிகழும் காரியம் யாதோ வெனப் பார்க்கும் ஓர் அவாவை உண்டாக்குகிறது. மணிமங்கலத்துள்ளார் நடுநடுங்கி மதுரைக் கள்ளர் வழக்கத்தைப்பற்றி நினைத்தலும் கள்ளர் பயமும் அவர்கள் இருப்பிட வர்ணனையும் பயங்கரத்தைக் கொடுக்கிறது. காருண்யம் என்னும் தலைமகளும் கண்ணகியும் சம்பாஷித்து சுழற்காய் ஆடியது தலைவி தோழியர் சிநேக பாவத்தையும் அவர்களுக்குள் கோபமூட்டா பரிகாசத்தையும், ஒரு தலைக்காம அகப்பொருளையும் தெரிவிக்கிறது. தலைவன் தலைவி என்னும் தலைப்பின்கீழ் காதல் மிகுதியையும் வளர்ச்சியையும் பரஸ்பரமாய்த் தெரிவிக்கிறார். காரியதரிசி என்னும் தலைப்பின்கீழ் சதியோசனையும், காருண்ய மின்மையும், கொடுமையும் நிரம்பிய ஓர் படிறனை வர்ணிக்கிறார்.

இரவு என்னும் அதிகாரம் பயத்தையும் கலக்கத்தையும் விளக்குகிறது. சோமசுந்தரம் என்னும் அதிகாரம் ஆசிரியனையடுத்து மதுரையில் கல்வி பயிலும் விதத்தை விஸ்தரிக்கிறது. மீனாக்ஷி சுந்தரம் என்னும் அதிகாரம் காணாதுபோன பிள்ளையைப் பற்றிய கவலுதலையும் துயரத்தையும் தெரிவிக்கிறது. சித்திரைமீ 25உ என்னும் அதிகாரம் கொள்ளைத்திருடரால் நேரத்தக்க குடிபயத்தைத்தெரிவிக்கிறது. சந்து என்னும் அதிகாரம் கீழ்ச்சாதியர் இருப்பிடத்தையும் அவர்கள் நிலைமையையும் நாகரீகமின்மையையும் தாழ்ந்த கடவுள் வணக்கத்தையும், தெரிவிக்கிறது. சூனியம் என்னும் அதிகாரம் மந்திரத்தில் ஜனங்களுக்குற்ற நம்பிக்கையையும் பிறர்க்கு கேட்டை விளைவிக்கும் குணத்தையும் காட்டுகிறது. வனவிருந்து என்னும் அதிகாரம் இந்துக்களின் வனபோஜன வழக்கத்தையும் அச்சமயத்தில் பானத்தில் விஷங்கலந்து கொடுக்கும் காரியதரிசியின் சதியோசனையையும் புலப்படுத்துகிறது. பிரிவாற்றுமை என்னும் அதிகாரம் விஜயத்தின் நிலைமை இன்னதெனத் தெரியாது காருண்யம் மனமாழ்கி நிற்றலைக் காட்டுகிறது. கல்லறை என்னும் அதிகாரம் அடைக்கலம் புகுந்தானை ஆதரித்தலையும் மிகுந்த இரக்கத்தையும் பச்சாதாபத்தையும் தெரிவிக்கிறது. காருண்யத்தின் கஷ்டம் என்னும் அதிகாரத்தில் காதலான கனவானையே தான் மணக்கவேண்டும் அன்னியரை மணத்தலொண்ணாது என்னும் கற்புத்திடத்தையும் காதலன் வருவானா என்னும் எதிர்நோக்கமும் ஜோஸ்யத்தில் உள்ள நம்பிக்கையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. விஜயத்தின் மனவெழுச்சி என்னும் அதிகாரத்தில் ப்ரஞ்ஞை தவறியிருந்தவிஜயம் தினே தினே கள்ளர்குகையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச்செய்த உபசரணையில் தேகம் வலிமையை யடைந்து உணர்வுவந்து தன்னை உபசரித்தவர் இன்னாரெனத்தெளிந்து தன் இருப்பிடத்திற்குப் போகும் எண்ணம் கொண்டதை விளக்குகிறது. மணம் என்னும் அதிகாரம் அலங்காரத்தையும், வாத்திய முழக்கத்தையும் ஸ்திரீகள் மணமகன் மணமகளைப்பற்றி தங்கள் தங்கள் பந்து முறைமைப்படிக்கு உயர்வாகவும் தாழ்வாகவும் பரிகாசமாய் மிகுந்த களிப்புடன் சம்பாஷித்தலையும் பௌரோகிதருடைய பேராசையையும் மந்திரங்களை நிரம்பச் சொல்லா குறைப்பாட்டையும் காரியதரிசியின் சதியோசனை யெல்லாம் நிறைவேறப் போகிறதென்னும் மனக்கிளர்ச்சியையும், காருண்யத்தின் மனோதுக்கத்தையும், காரியதரிசி விசனத்தை யடையும்படியாகவும் காருண்யம்துயரக்கடலிலிருந்துஎழுந்து ஆனந்தக் கடலில் விழும்படியாக விஜயம் என்னும் காதைத் தலைமகன் மணப்பந்தரில் ஆச்சரியமாய்த் தோன்றுதலையும் விளக்கி மிகுந்த வியப்பைத் தருகிறது. பிறகு காருண்யத்திற்கும் விஜயத்திற்கும் விவாகமகோற்சவம் சந்தோஷகரமாய் நடந்ததெனப் புலப்படுகிறது.

இக்காதையில் கற்கவேண்டிய அறநெறிப்பாடம் யாதோ வெனில் எல்லாம் வல்ல கடவுள் மானிடர்கள் மனத் தூய்மைக்கும் அன்பிற்கும் தகுந்த மாதிரியாக அவரவர்கள் கோரிக்கையை நிறை வேற்றுகிறார் என்பதும் சதி யோசனைக்கும் அன்பு இன்மைக்கும் தகுந்த மாதிரியாக அவர்கள் காரியங்களை யெல்லாம் விருத்த மாக்குவதோடு அவர்களைப் பரிகாசத்திற்கும் அவமானத்திற்கும் துயரத்திற்கும் ஆளாக்கித் தண்டிக்கிறார் என்பதுமேயாம். நமது ஆராய்ச்சியில் விஜயகாருணியம் என்னும் கற்பனை காதை கற்பனை காதைக்குரிய இலக்கணம் பொருந்தி பிரகாசித்தலின், நமது அபிப்பிராயத்தில், இக்காதை தமிழ் உலகத்திற்கு நன்மைபயக்கும் என்பது உறுதிப்பாடான உண்மையாகும்.

சத்திய வசனன்.





## ஸ்ரீ நீ. கணபதி ஆச்சாரி யவர்கள்

### விதேக முத்தியிற்பாடிய இரங்கற்பாக்கள்

(91-வது பக்கத் தொடர்ச்சி)

நின்போலு மடுத்துவரு மாணவர்க
ளுளங்தெளிய நினைத்த யாளம்
பொன்போலும் போற்றி யறிவுறப்
புகட்டியாட் கொளுமப் புந்தியாளர்
முன்போது மாந்தருளும் பின்பெவரே
யிருக்கின்றார் மொழிய நன்று
யன்போடு மருள்சிறந்த வருள்குண மார்
கணபதியா மையா வையா. (6)

நித்தியா னந்தனென வந்தபெருங்
குரவனடி நினைவிற் பூண்டு
புத்திபா நந்தமுறக் கற்றபெரும்
புலமையெலாம் போதத் தாக்கிப்
பத்தியா நந்தமொடு கத்திபம
னந்தமெனப் பணித்த கைகள்
சித்தியா நந்தவெடுத் தெங்கொளித்தா
யாதுசெய்தாய் செப்பா யப்பா. (7)

பொற்பழுத்த முற்றதிருப் புலவர்குழா
நிதங்குழுமிப் புகழ்ந்து போற்றி
மற்பழுத்த சிரஞ்சாய்த்து வணங்கியருட்
கணபதிப்பேர் வள்ளா னின்றன்
கற்பழுத்தங் கற்பழுத்த மெனக்கழறக்
கவின்பழுத்துக் கனியு மின்பச்
சொற்பழுத்த நாவெங்கே யக்தோயாங்
துயர்பழுக்கத் தொலைத்திட் டாயே. (8)

முன்னொருபோழ் தெமையழைத்து முன்னிருத் [திப்
பலவினவி மொழிந்த மாற்றந்
தன்னையறிந் தடுத்திருந்த தட்பாளர்
தமைநோக்கித் தக்கோய் மிக்கோய்
என்னையிவுன் கோட்டாற்றி னிருந்தவனு
யிருந்தவனு வென்று கேட்ட
பன்னரிய வாயுமினிப் பார்த்திடுங்கா
லுண்டுகொலோ பாவி யேமே. (9)

பண்ணமுவாப் பலன்படைத்த பாக்கியவ
ரேந்த்ரகண பதிமா னீயு
மெண்ணமுவ விவண்விடுத்தா யெனுமாற்றங்
காதேற விசைந்த வன்றே
மண்ணமுமா மலைபழும்பன் மாமழுமவ்
வானமுமெம் மறுவி லாத
கண்ணமுநீ ரொருபெரிய கடலமுமற்
றவர்துயரங் கழறற் பாற்றே. (10)

(தொடரும்)

ஜி. சாமிநாதன் ஆச்சாரி, கோட்டாறு.

# இதோபதேச நீதிபோதினி

## இல்லற வாழ்க்கையும் வனப்புறவும்

(பாரதம்—சாந்திபர்வம்)

கடவுளின் அருளைப்பெற்ற பெரியோர்களின் கருணைபோன்ற ஒரு ஆரண்யத்தில் விழுதுவிட்டுத்தழைத்திருக்கின்ற ஆலமரத்தின் கிளையில் புருடனும் பெண் சாதியுமாகிய இரண்டு புறாக்கள் இருந்தன.

அவ்விரண்டும் தங்கள் குடித்தனமுறையில் குறைவறக்கலந்து (மனதொருமையாய்) ஒற்றுமையோடு ஒன்றைவிட்டு ஒன்றுபிரியாமல் வாசம்பண்ணிக்கொண்டு வருநாளையில், ஒருநாள் ஆண்புறா வெளியேபோயிருக்குஞ்சமயத்தில் பெண்புறா தன் நாயகனைத்தேடி தங்கள் இனத்தின் கூச்சலின்படியே கூவிக்கொண்டிருக்கும்போது ஒரு வேடன் வில்லும் கோல்லும்அம்பும் பிடித்து மிருக முதலிய பக்ஷிகளைக்கண்டால் தாக்ஷண்யமில்லாமலடித்து நெருப்பிலிட்டுப் பொசுக்கிக் கடித்துத்தின்னும்படியாகிய (கடூரமான) மனசை யுடையவன் எந்நேரமும் கொலைசெய்யுந் தொழிற் குறிப்பினையுடையவன் (சிறுகண்ணி இறுக்கி முறுக்கி) வலையைக்கட்டி இரையைத் தெளித்து தீபகப் பக்ஷியைவைத்து உட்சுருக்குக் கயிற்றைக் கையிற்பிடித்துக்கொண்டு (தழைகளினாலே தன்னை மறைத்து) பக்ஷிமிருகங்களுக்கு எமன்போல் ஒளித்திருந்தான்.

அப்போது அம்மரத்திலிருந்த பெண் புறாவானது கண்ணிகுத்தி வைத்திருக்கின்ற காரியந் தெரியாமல் வேடன் பழக்கிவைத்திருக்கிற தங்கள் இனமாகிய புறாக்களும் அங்கிருக்கக்கண்டு பறந்துவந்து விழுந்து வலையில் அகப்பட்டுக்கொண்டது. உடனே அந்தவேடனானவன் சுருக்குக் கயிற்றை யிழுத்து சுருக்கில் ஓடிவந்து பெண்புறாவைப் பிடித்துப் பையிலடைத்து இன்னம், வேறு பக்ஷிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஆகாயத்தில் மேகங்கள் கவிந்து சூரியகிரணை மாறி பெருங்காற்று மின்னல் பேரிடி முழக்கத்துடனே நறநறவென்று பெருமழைபொழிய இந்த வேடன் (தோற்பைபோல்) நனைந்து நடுக்கமும் குளிரும் உண்டாய் சரீரம் சிலிர்த்து வெளேல் என்று வெளுத்துக் கையுங்காலும் விறைத்துக் கண்ணும் மனமும் இருண்டு காதுமூக்கும் அடைத்து கருவிகரணங்களுங் குறைந்து பூமியில் வீழ்ந்தான்.

அச்சமயத்தில் ஆண் புறாவானது ஆலமரத்திற்கு வந்து தன்னுடைய பெண் புறாவைத்தேடி ஐயோ! பெண்கள் நாயகமே! பெண்கள் சிகாமணியே! பெண்கள் பெருமாளே! பெண்ணரசியே! செங்காலன்னமே! செம்பொன்னின் வன்னமே! மயிலே! குயிலே! மடப்புறாவே! என்று மனம் நொந்துவாடி அந்தோ! இந்த மழையில் எங்கே அகப்பட்டுக்கொண்டையோ! எங்கே வழிதெரியாமல் நின்றையோ! வருந்தி என்னைத் தேடுகின்றையோ! வென்று (வாய்வரண்டு) புலம்பி எவ்விடத்திலும் ஓடி இலை இலையாய்த்தேடி இனி என்னுசை எவ்வாறுமோ வந்திழையே! எனக்கிசைந்த இன்பமே! என்று தான் வேடன்கையிலகப்பட்டு (வலைப்பையில்) இருக்கிறவிதமறியாமல் வாய்விட்டலறி பேய்போற் பறந்தது.

அதனுடைய வருத்தத்தைப் பார்த்து அவ்வனத்திலிருக்கின்ற மாதவரெல்லாரும் வருந்தி ஆ! ஆ! பெண்ணாசையின் பெருமை இப்படிப்பட்டதோ வென்று நினைத்துக்கொண்டு பேதுற்றார்கள். அப்பொழுது, அவ்விடத்துள்ள மிருகங்கள் பக்ஷிகள் மரங்கள் மலைகள் எல்லாம் புண்ணீர்போன்ற கண்ணீர்விட்டன.

இப்படி மண்ணும் விண்ணும் கலங்கும்படியாய் வருந்திய ஆண்புறா சற்றுநேரம் மூர்ச்சைபோயிருந்து தெளிந்து நெடுமூச்செறிந்து சொல்லத்தொடங்கியது.

ஓ! பெண்ணே! உன்னைக் கூடிய நாள்முதல் இந்நாள்வரையிலும் ஒரு நிமிஷமேனும் யான் பிரிந்தறியேனே! நீயும் என்னைவிட்டு, ஒருநிமிஷமும் நீங்கினதில்லையே நாயகனே தெய்வம் என்று கூறும் நல்லூலின் நெறியையும் பூலோக வழக்கத்தையும் நத்தி குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல் என்று என்னைப்பற்றி மிகவும் உபசாரம் பண்ணிவந்தாயே!

> உடம்பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
> பாம்போடு உடனுறைந்தற்று—

என்று கூறும் முதுமொழிபோல் (அதாவது) ஸதிபதி மனம் ஒற்றுமை யில்லாத வாழ்க்கையானது ஒரு குடிசையினுள்ளே பாம்போடு கூடிவாழ்தல்போலாகும் என்பதுபோலிராமல்,

> கொண்டான் குறிப்பொழுகல் கூறியகாணுடைமை
> கண்டதுகண்டு விழையாமை—கண்டு
> வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
> உறுப்போ டுணர்வுடையாள் பெண்—என்றும்
> மிடியினர், குணமிலர், விருத்தர், நோயினர்,
> வடிவிலர், உறுப்பிலர், வஞ்சர், மூடர், வெங்
> கொடியவர், ஆயினுங் கொழுநர் தம்மிடை
> மடிகுவர் அன்பு கற்புடைய மாதரே.

என்றும் கூறிய முதுமொழியின் கட்டளைப்படி மனமுரண்படாது ஒப்புர வொழுகு என்பதுபோல் நாம் ஒருமை மனதோடு உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாகக் கூடி இருந்து வாழ்ந்தோமே! (தொடரும்)

V. வைத்தியநாத ஸ்தபதி ஜோஸ்யர்,
ஆரியன் சோதிடசாலைத் தலைவர், திருவாரூர்.



# நமது வாசகர்கள்

## குடி வழக்கம்

Y. M. C. A' சங்கத்தவர்கள் போன்றவர்கள் குடிவழக்கத்தை நிவர்த்திப்பதற்காக செய்யும் பிரயத்தினங்களில் நம்மவர்களும் அதிகமாய்க் கலக்கவேண்டும். ஜீவவதை நிவாரணத்திற்கு நம்மவர்கள் துணை நிற்கவேண்டுமென்று ஒரு நிருபர் தெரிவித்திருந்தார். அதேபோல், குடிவிலக்கிற்கும் நாம் முன்னிற்கவேண்டும். இவ்வித சத்காரியங்கள் முக்கியமாய் எல்லோராலும் செய்தற்குரியன.

ம. வடிவேலு.

## ஆச்சாரிப் பட்டம்

64-வது பக்கத்திலெழுதிய N. ஏகாம்பரம் என்பவரின் அபிப்பிராயம் எனக்குப் பிடிக்கவில்லை. நமக்கு எத்தனைப் பட்டங்களிருந்தபோதிலும் ஆச்சாரிய பட்டமே சிறந்தது. அது தவறிப்போகாமலும் திரிந்துபோகாமலும் பாதுகாப்பதில் நாம் அக்கரை காட்டவேண்டுமே யொழிய அலக்ஷியமாயிருக்கக் கூடாது. நமது பத்திரிகையில் பலமுறை தெரிவித்தபடி ஆசாரிப்பட்டத்தை அனங்கீகாரஞ்செய்து ஊர்கள்தோறும் உள்ளவர்கள் அரசாங்கத்தாருக்கு அறிவிக்கவேண்டியதே நாம் செய்யத்தகுவது.

R. S. ஆச்சாரி.

## விஸ்வக்ஞர்களுக்கு

21-2-1916 உயில் வெளியான (தேவகோட்டை) வைசியமித்திரன் 6-வது பக்கத்தில் "நகைமாறுதலும் ஆக்குவோரின் புரட்டு வெளிப்படுதலும்" என்ற தலைபுடன் "முதல் இழுந்தோன்" என்று கையெழுத்திட்டெழுதிய நிருபர் ஒருவர், பொடி லோகவஸ்துக்கள் கலக்க ஹேதுவில்லாமல் செய்யப்படும் ஆபரணங்களை அணியவிரும்பி அவைகளையே உபயோகிக்க வேண்டும் என்பதை வற்புறுத்திப் பிறகு இவ்வாறு கூறுகிறார்:—"நண்பர் ஒருவர் முன் உபயோகப்படுத்திவந்த இரத்தினம் பதித்த திருமாங்கல்யம் காப்பு கொலுசு முதலியவைகளை அழிக்கநேர்ந்ததில் அவைகளுக்குள் அரக்குபாய்ச்சும் உள் பாகங்களில் வெள்ளி செம்புத் துண்டுகள் சுமார் 7-பவுண், இடை வெளிப்பட்டன. அன்னத்தில் பின்னம் என்பதுபோல் ஆபரணம் ஆக்குவோரின் மோசத்தை என் சொல்லுவது? காசுக்கடை என்று வழங்கப்படும் பொன் வெள்ளி வர்த்தகம் செய்யப்படும் கடைகள் நம் நகரங்களில் அதிகரித்து வருவதற்கு ஆபரணம் ஆக்குவோரின் மோசச்செய்கையே காரணமாகும். ஒவ்வோர் கடையிலும் பிரதிதினம் அந்தியிலும் மிகச்சிறிய துண்டுதுணுக்குகள் ஆக்குவோர்களால் கொண்டுவரப்பட்டு பாதி விலைக்கு விற்கப்படுகின்றன. * கையாடப்படும் தங்கத் துண்டுகளுக்கு பதிலாக மோசவழிகளால் நிறை சரிக்கட்டப்படவேண்டுமல்லவா?"

துக்கி.

## சபை ஸ்தாபனம்

சென்ற ஜனவரியாதப் பத்திரிகையில் "சபைக் கோர்வை" என்ற மகுடமிட்டு ஸ்ரீதா. குருநாத ஆச்சாரியா ரென்பவ ரெழுதிய வியாசம் மிகவும் நன்றாகவேயிருக்கிறது. ஆனால், அந்த வியாசக் கருத்தின்படி நடைபெறுவதற்கு நமதுஜாதிக்கு இன்னுங் காலம் வரவில்லையென்றே சொல்லுவேன். நமக்குள் சபை ஒழுங்குகள் தெரிந்தவர்கள் மிகவுங் கொஞ்சமாயிருக்கிறார்கள். தெரியுமென்று சொல்லிக்கொள்கிறவர்களும் நடவடிக்கையில் தங்கள் அறியாமையைக் காட்டிவிடுகிறார்கள். நம்மவர்களுக்கு ஏற்படுத்திய சபைகளி லொன்றும் சுகப்பட்டு வாழ்ந்ததாய் தெரியவில்லை. பலவூர்ச் சபைகளைப்பற்றிப் போதுமானவரையிலும் கேள்விப்பட்டிருக்கிறோம். சபை விஷயத்தில் உத்தியோகமாறுதலென்னும் ஒழுங்கிலே தான் முக்கியமாய் எங்கும் மனஸ்தாபமும் வம்பும் நடப்பதாகக் காணப்படுகிறது. பணம்பிடித்துக்கொண்டார்கள் என்றும் ரிகார்ட்கள் கொடுத்தாரில்லையென்றும் இன்னுமிவ்விதமாகவுங் கூக்குரல்களும் விளம்பரங்களும் பாவுதல் சர்வசாதாரணமாய் விட்டது. இந்த அவலக்ஷணங்களுக்கிடையே ஊருக்கொரு சபை ஏற்பட்டு இந்த ஜனங்களுக்குள் இக்காலத்தில் சீராய்ச் செவ்வையாய் நடக்குமென்று எதிர்பார்ப்பது வீண், வீண், வீண். நமக்குள் கல்வி அதிகம் பரவவேண்டும். தற்பெருமையையும் தன் பெயரே விளங்கவெண்டுமென்பதையும் நம்மவர்கள் மறக்கவேண்டும். ஜாதிப்பொதுநன்மையை விரும்புகிறவர்கள்தொகை அதிகப்படவேண்டும் அதற்கப்புறம் சபைக்கோர்வையைப்பற்றி எண்ணலாமென்று தோன்றுகிறது.

கங்கா குமாரன்.

## ஓர் ஐயவினா

மாசிமாதம் கிருஷ்ண பக்ஷத்தில் ஓர் திருவிழா நாடெங்கும் நடை பெறுகின்றது. அது பத்து நாள் நடை பெற்று 10-ம் நாள் இரவு தான் மகா சிவராத்திரி தினம். அன்று 4-காலம் அம்பாள் சிவனை நோக்கித் தவம் புரிந்து இடபாகம் பெற்றதாயும் டை நாட்களில் 6-ம் நாள் கப்பரை ஒன்று புஷ்பத்தினால் செய்து அதற்குக் கீழ் மட்கலசத்தில் அன்னம் வைத்துக் கட்டி அதனுடன் ஊர்வலம் வந்து மயானத்தில் சேர்த்து விடுகிறார்கள். 8-ம் நாள் வீரபத்திரர் நவமுகத்துடனும் ஈரொன்பது கையுடனும் மலரினால் அலங்கரித்து அதனடியிலும் மட்கலசத்தில் அன்னம் வைத்துக் கட்டி ஊர்வலம் வந்து வீரபத்திரர் ஆலயத்தில் சேர்த்து விடுகிறார்கள். 9-ம் நாள் ஆண் ரூபமான சிர சொன்று செய்து அதன் நெற்றியில் நாமந்தீட்டி அதன் கீழும் மட்கலத்தில் அன்னம் வைத்துக் கட்டி ஊர் கோலத்துடன் பிச்சை எடுத்து மயானத்தில் கொண்டு உத்தியாவனம் செய்து விடுகிறார்கள். இந்நாட்களில் அம்மன் சன்னதி முன்னும், கபபரை முன்னும் இராம வெட்சாந்திர பூசை எனக்கூறி ஒரு சக்கரம் வரைந்து பூஜை

செய்து வருகின்றார்கள். பரமேஸ்வரி விசேடம் போல் நடத்துகிறார்கள். அவள் சொரூபம் சதுர் முகத்துடனும் அஷ்ட புஜத்துடனும் கூடியிருக்கிறது. அவள் பாதத்தில் 3-ஆண்சிரசுகள் வரிசையாயிருக்கின்றன. அங்காள பரமேஸ்வரி என்றும் பாாவதி என்றும் தாக்ஷாயணி பாண்டிய ராஜபுத்திரி என்றும் பற்பல திருநாமங்கள் உண்டாம். இவை இன்ன ஐதீகம் இன்ன புராணத்திலுள்ளது, சாஸ்திரத்திலுள்ளது இன்ன ஆகமத்திலுள்ளது என்ற விவரங்களைப் பண்டிதர்கள் இப்பத்திரிகை மூலமாய்த் தெரிவிப்பார்களாகவும்.

குன்னூர். T. தங்கவேல்.

## நமது பாக்கியம்

விஸ்வகர்ம குலத்தாருடைய பாக்கிய வசத்தினாலே தான் இப்பத்திரிகை மூன்று வருஷங்களாக நடைபெற்றுவருகிறதென்று சொல்லவேண்டும். இப்பத்திரிகையை உள்ளபடியே நமது ஜனங்கள் கவனித்து வாசித்து வருவார்களானால், நமது ஜாதி வெகு சீக்கிரத்தில் சீர்திருத்தம் அடையு மென்பதில் எள்ளளவாயினும் சந்தேகமில்லை. ஏனெனில், இதில் நம்மவர்களுடைய சீர்திருத்தத்திற்கு அவசியமான பல அந்தரங்க துட்டங்கள் வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. இதனால் இப்பத்திரிகையை நம்மவர்களில் ஒவ்வொரு ஊாரும் ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கட்டாயமாக வாசித்துவரவேண்டும். அதிலும், ஒருமாதமேனும் தவறாமல் படிக்கவேண்டும். ஏனென்றால், பிரதிமாதமும் புதிது புதிதாய் விஷயங்கள் வெளியாய்க்கொண்டிருக்கின்றன. ஒருபத்திரிகையைப் படிக்கத் தவறும்பக்ஷத்தில் அதிலுள்ள அருமையான விஷயங்கள் அறியப்படாமல் விடுபட்டுப்போகும். இப்படி நமது பத்திரிகையின் தற்கால வாசகர்கள் பெற்றிருக்கும் பாக்கியத்தை நமது ஜாதிச் சகோதரர்களெல்லாம் பெறும்படியாக, ஒவ்வொரு சந்தாதாரரும் புதிது புதிதாய் மாத மாதம் புது சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொண்டே வரவேண்டும். அப்படிச்செய்தால் அதிகமதிகமாக நம்மவர்கள் இதிலுள்ள விஷயங்களை வாசித்துச் சீர்திருத்தமடைவிக்கலாம். உதாரணமாக, நமது பத்திரிகையின் 63-வது பக்கத்தில் வந்த "உணவு பாண்டங்கள்" என்ற கடிதத்தை எல்லோரும் படித்தால் எவ்வளவு சிலாக்கியமாயிருக்குமென்பதை எண்ணிப்பாருங்கள்! இதை வாசிக்கப்பெறும் பாக்கியமில்லாதவர்கள் இதனால் அடையக் கூடிய சீர்திருத்தம் கைகூடாமலே காலங்கழித்து வருவார்களல்லவா? அவ்விதங் கழிவோர் தொகையைச் சுருக்குவது குலோத்தாரணமாதலால், மேற்சொன்னபடி நமது பாக்கியத்தைப் பலரும் பெறும்படி பிரதி சந்தாதாரரும் முயற்சிசெய்ய வேண்டுகிறேன்.

கா. மாணிக்காச்சாரி.

## சமஸ்கிருத வித்யாப்யாஸம்

சமஸ்கிருத பாஷையின் பெருமையும், அதை விஸ்வகர்மஜாதியார் படிக்கவேண்டிய அவசியமும் நமது சகோதரர்களுக்குப் புலப்பட்டு, இவர்கள் உள்ளபடியே அதில் அக்கறைகாட்டிப் பாஷையைக் கற்றுக்கொள்வார்களானால் தேவப்பிராம்மண சப்தத்திற்குப் பொருந்தியவராக இவர்கள் ஒழுகுவதற்கு மார்க்கமுண்டாய்விடும். இந்த உண்மையை நமது சபையார் அறிந்து நடந்துகொள்வதினால் நமது ஜாதிக்கே நல்லகாலம் பிறந்துவிட்டதென்று சொல்லலாம். இந்த உண்மையையறியாமல் காலகாலமாக அநேகர் நம்முள் கஷ்டப்பட்டார்கள், பொருள் விரயஞ்செய்தார்கள். இன்னும் சிலர் செய்துவருகின்றனர். எத்தனையோ ஊர்களில் வேதாத்தியயன பாடசாலைகளேற்படுத்தி எத்தனையோபேர் எவ்வளவோ பணஞ் செலவிட்டார்கள். ஒரு பாடசாலையாவது திருப்திகரமாய் நடந்தேறிற்றா? அப்படி நடந்தாலும், ஒருவன் கடைத்தேறினனோ? அப்படியே ஓரிரண்டுபேர் புண்ணியாவசனங் கற்றுக் கொண்டாலும் ஜாதிக்குறை தீர்ந்தா? இல்லையென்று ஆயிரம் புண்ணியாவாசனப் புரோகிதர்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் ஒரு சமஸ்கிருத பண்டிதனுக்கு ஈடாவார்களா? ஐங்கோடி நக்ஷத்திரங்களிருந்தாலும் ஒரு சந்திரப்பிரகாசத்திற் கிணையுண்டா? அங்கங்கு அவசராவசரமாய் போட்டாபோட்டி செய்து வேதாத்தியயன பாடசாலைகளை வைத்தவர்களையெல்லாம் நெருங்கிக்கேட்டால், அவர்களெல்லாம் நஷ்டமடைந்ததுடன் மிகுந்த அதிருப்தியும் ஜாதியின்மீது விரக்தியும் கொண்டதை இலேசாய் அறியலாம். இவர்கள் தாம் செலவிட்டபொருளைத் தக்கசிறுவர்களுக்கு சமஸ்கிருதபாஷையைக் கற்பிப்பதில் செலவிட்டால் எவ்வளவோ கிருதார்த்தமடைந்து இதுவரையிலும் சில சமஸ்கிருத பண்டிதர்களையாகிலும் நமது ஜாதியிலுண்டாக்கி யிருக்கலாமன்றோ? இந்தமாதிரி செய்யத்தக்கவற்றைவிட்டு தகாதவற்றைப் பிடித்து வைராக்யஞ் செய்துகொண்டு எத்தனையோபேர் தான்கெட்டதுமல்லாமல் சந்திரபுஷ்கரணியையுங் கெடுத்த கதையாய்ப் பொழுதைக் கழித்துக்கொண்டும் பொருளை விரயப்படுத்திக்கொண்டு மிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஈசன் என்றுதான் அறிவு அளிப்பரோ?

க. சுந்தரேசன்.

## ஓர் மரணம்

நீலகிரி ஜில்லா குன்னூர் ஆஷ்லி ஓர்க்ஸில் (கார்கானா) (Ashley works) சுமார் 20-வருடகாலம் மானேஜராயிருந்து வந்தவரும், பிறகு சொந்தத்தில் ஓர்க்ஷாப் வைத்து அயவேலையில் தனக்கு நிகரில்லை எனப் பேர் வாங்கி முனிசிபல் முதலான சர்கார் வேலைகளைச்செய்து வந்தவரும், அநேக ஈரோப்பியன் ஆபீசர்கள் இராஜாக்கள் முதலானவர்களால் தமது வேலையின் நுட்பத்தால் நல்ல புகழையும் நற்கியாதியையும் பெற்றவரும், சுமார் 30-வருடகாலம் குன்னூரில் நாட்டாண்மைக்காராயிருந்து அநேக வழக்குகளைப் பாரபக்ஷமின்றி நடுநிலைமையிலிருந்து தீர்த்துவந்தவரும், எவ்வழக்கையும் அவரிடம் கொண்டுபோனால்தான் நியாயமாய் முடியும் எனறு யாவரும் கூறும்படி நடந்துவந்தவரும், விகடவார்த்தையில் அதிசமர்த்தராயும் ரஞ்சித புருஷராயும், பேச்சில் இவரை வெல்லமுடியாதென்று யாவரும் கூறும்படியான சமர்த்தராயும், பிற ஜாதி சகோதரர்களின் அன்பையும் புகழையும் பெற்றவரும், குலோத்தாரணத்தில் மனங்கோணாது உழைத்துவந்தவரும், 1912ஹு சென்னைச் சபையின் தீபாவளித் தண்டலுக்கு கூட்டங்கூட்டி வி.க.கு. சபையை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய வழிகளைக் கூறியவரும் ஷை தண்டலைத்தண்ட ஏற்பாடு செய்தவரும், சபையின் பிரசுரத்தில் கண்டபிரகாரம் 'திருமங்கல்யம்'' ஓரேவிஸ்வக்ஞர் செய்யவேண்டு மென்று பிரயாசை எடுத்துவந்தவரும் (இதை சபையின் 16,17,18-வது பிரசுரங்களில் காணலாம்), தருமரைப் போன்ற அன்பும் பொறுமையும் தர்மசிந்தையுமுள்ளவரும், தயாளகுணமுடையவரும் நமது மெம்பர் ஸ்ரீதங்கவேலாச்சாரியாரின் பிதாவுமான பிரம்மஸ்ரீ தளவனாச்சாரி அவர்கள் தமது ஜெனனதேசமாகிய திருநெல்வேலிக்குச்சென்று 2-மாதம் சரீர அசௌக்கியமாயிருந்து தமது 75-வது ஆண்டில் ஜனவரிமீ 6௳ வியாழக்கிழமை இரவு 7-மணிக்கு சிவலோகபதவி யடைந்தார்கள்.

T. S. பிச்சை ஆச்சாரி. குன்னூர்.



## விஸ்வகர்மண்யம்

1916ஹு ஜனவரி மாதத்திய விஸ்வகர்மன் சம்புடம் 3 சஞ்சிகை 4-ன் 57, 58-வது பக்கங்களில் ஸ்ரீமௌன குரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் பழநி என்பவரால் "விஸ்வகர்மண்யம்" என்ற தலைப்பின்கீழ் 33-ஸ்லோகங்கள் அனுப்பிப் பிரசுரித்திருப்பவைகளை வாசித்தேன். "பழநியில் நெடுங்காலத்து ஏட்டுப்பிரதியான "விஸ்வகர்மண்யம்" என்னும் மஹாசாஸ்திரத்தின் ஓர் பாகத்தில் ஷை 33-ஸ்லோகங்கள் வரையப்பட்டிருக்கின்றன" என்னும் விசேஷத்தால் அவைகளின் கருத்துகளை நன்குணர்ந்து பிறருக்கும் விளக்கவேண்டுமென்று சமஸ்க்ருத வித்வான்களுக்குக் காட்டினேன்.

விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு வழிபடு கடவுளும் உறபத்திக்கு மூலபுருடரும் பிரஜாபதியுமாகிய ஸ்ரீவிஸ்வகர்மனைப்பற்றிய சிறப்பும், பூர்வ சரித்திரமும் ஷை 33-ஸ்லோகங்களில் நிறைந்திருப்பதால் ஷை ஸ்லோகங்களை விஸ்வகர்ம ஜாதியார் சரியாய் அர்த்தம் செய்து கொள்ள வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

ஷை ஸ்லோகங்களை சமஸ்க்ருத வித்வான்கள் வாசித்துப் பார்த்ததில் சில ஸ்லோகங்களில் எழுத்து சொல் பொருள் குற்றங்கள் மிகுந்திருப்பதாகவும் சமஸ்க்ருத இலக்ஷண சாஸ்திரங்களுக்கு விரோதமாகவும், பொருள் கொள்வதற்கு சரிப்படாமலும் ஸ்லோகங்களைத் திருத்துவதற்கு கஷ்டமாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். நெடுங்காலத்து "விஸ்வகர்மண்யம்" என்னும் ஏட்டுப்பிரதியிலிருந்து பெயர்த்து எழுதின ஸ்லோகங்கள் மிக்க லோபமடைந்திருப்பதாகக் கேட்க யார்தான் விசனிக்கமாட்டார்கள்?

விஸ்வகர்ம குலோத்தாரண சபைப் பிரசுரங்களிலும், விஸ்வகர்மனிலும், ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் நம்மவர்களுடைய பூர்வ சரித்திரங்களை உணர்வதற்கும், கோர்வையாக புதிய முறையாய்ச் சரித்திரமெழுதுவதற்கும் ஆதாரங்களாக உதவும் அரிய பெரிய விஷயங்களில் பல சங்கதிகளை விளக்கிவந்த பேருபகாரத்திற்கும், குலாபிமானத்திற்கும், கருணைக்கும், நம்மவர்களெல்லோரும் மிக்க வந்தன மளிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றனர் நானும் ஷை யாருக்கு வந்தனம் செலுத்த வேண்டியவனாயிருக்கிறேன். ஷை யார் நம்பூர் வோத்தர விஷயமாய் ஓர் விரிவான சரித்திரம் எழுதி வருகின்றதாகவும், அதற்காக நீண்டகாலமாய் பல சங்கதிகளைத் திரட்டிக் கோர்வைப் படுத்தி வருவதாகவும் சீக்கிரம் புத்தக ரூபமாய் வெளியாக்கப் போவதாகவும் கேள்விப் படுகின்றேன். ஷை பிரசுரங்களில் ஷை யாரால் வெளியிடலான ஸ்ருதிகள் ஸ்லோகங்கள் புராணாதி சரித்திரங்களில் சில சந்தேகங்கள் ஜனித்திருப்பவைகளை அடுத்து வரும் விஸ்வகர்மன் சஞ்சிகைகளில் தெரிவித்து ஷை ஆச்சாரியார் மூலமாயாவது நம் ஜாதி வித்வான்களாலாவது சந்தேகங்களைப் போக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் நெடுநாளாக இருந்து வருகின்றது.

நிற்க, மேலே சொல்லிய 33-ஸ்லோகங்களோடு சேர்ந்த தொடர் ஸ்லோகங்கள் பல இருக்குமென்று தோற்றுகின்றன. "விஸ்வகர்மண்யம்" என்பது லோகப் பிரசித்தியாயிருக்கும் 32-சில்பங்களில் எந்த சில்பத்திற்கு சேர்ந்தது. விஸ்வகர்மண்யம் என்னும் சில்பத்தின் எத்தனையாவது அத்யாயத்தில் ஷை 33-ஸ்லோகங்களைக் காணலாம் என்னும் விஷயங்களை விளக்கும் படியாயும் ஷை 33-ஸ்லோகங்களை ஸ்ரீ மௌன குரு ருத்திர மூர்த்தி ஆச்சார்யார் அவர்களே பழநி ஸ்தலத்திலாவது வேறு இடத்திலாவது உள்ள சம்ஸ்க்ருத ஞானமுள்ள சிற்பாச்சாரிகளுடன் கலந்து யோசித்து சுத்த மாக்கி வெளியிடும்படியாயும் பிரார்த்திக்கின்றேன். 23-வது ஸ்லோகமாகிய—

ஆச்சார்யோ விஸ்வகர்மாநு தக்ஷகோவர்த்தகீ ததா|
ஸ்தபதி வில்பிகஞ்சைவ ரதகாரஞ்சமீரிதம்॥23

என்பது மற்ற ஸ்லோகங்களை விட எக்காலத்திற்கும் விசேஷமாய்க் கவனிக்கத் தக்கதாகுமென்பது நிச்சயம். மற்ற ஸ்லோகங்களிலுள்ள கருததுகளுக்கும் சரித்திரத்திற்கும் வர்ணனைகளுக்கும் ஸ்ருதிகளில் ஆதாரம் கிடைத்தால் மிக்க பயனை விளைக்குமென்பது உண்மை. ஷை 33-ஸ்லோகங்களின் பொருள்களை உணர்ந்து கொள்ள முயலும் பலருக்கும் மேலே தெரிவித்த சந்தேகங்கள் ஜனிக்கலாம். ஸ்ரீ மௌ. ருத்திர மூர்த்தி ஆச்சாரியாருக்கு பலரும் எழுதினால் பலருக்கும் தனித்தனியாய் விடையளிப்பது சாத்தியப்படாது என்று நினைத்து தங்கள் பத்திரிகைக்கு எழுதலாயிற்று. அடுத்து வரும் விஸ்வகர்மனில் ஸ்ரீ ஆச்சாரியார் சிரமம் பாராட்டாது விடை பகர்ந்தால் எல்லோரும் தெரிந்து கொள்ளுவதற்கு அனுகூலமாயிருக்கும்.

C. R. சுப்பராயாச்சாரி.

## சுகாதாரம்

இந்திய வீட்டின் உள்புறமும் வெளிப்புறமும் என்ற விஷயத்தைப்பற்றி டாக்டர் யு. ராமராவ் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம் அடியில் வருமாறு:—

வீடுகளைச்சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால்,பட்டணங்களில்தானாகவே சுத்தம் ஏற்படும். ஆகையால்,சுகாதார அபிவிருத்தி ஒவ்வொன்றும் முதலில் வீட்டில் தான் ஆரம்பஞ் செய்யப்படவேண்டும். வீடுகளைச் சுத்தமாக வைக்கத்தெரியாதவர்கள் பெரியம்மை, ஜ்வரம், முதலிய வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள். தூசிகளையாவது வியாதிகளின் விஷத்தன்மையான அணுக்களையாவது,வீட்டில் வந்துசேரும்படி விடக்கூடாது. அப்படிச் சேர்ந்தாலும் அவைகளை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய சௌகரியங்கள் வீட்டில் ஏற்படவேண்டும். வீடுகளில் ஈரம் இருக்கக்கூடாது. நல்ல காற்றோட்டம் இருக்கவேண்டும். சூரியவெளிச்சமும் பரவியிருக்க வேண்டும். வெளிச்சமும் உயிர்வாழ்க்கையும், மரணமும் இருட்டும் ஒன்றைக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. பரிசுத்தமான தண்ணீர் வீட்டில் இருக்க வேண்டும். மேற்கண்ட சௌகரியங்களை உடைத்தாயிருக்கும் வீடுகள்தான் சௌகரியமான வீடுகளாகும்.

தோட்ட வீடுகள், தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் இருக்கும் வீடுகள், குடிசைவீடுகள் என்று மூன்று விதமான வீடுகள் உண்டு 2-வது விதமான வீடுகள் ஜன நெருக்கமுள்ள ஸ்தலங்களில் கட்டப்பட்டிருக்கிறதுமன்றி அவற்றில் ஜாஸ்தியாகக் குடியிருந்தும் வருகிறார்கள். இப்படி யிருப்பது தகாத காரியமாகும். வீடுகளையும், அவற்றின் பக்கங்களையும் சுத்தமாக வைக்க வேண்டும். வீடுகளில் ரத்தினக் கம்பளங்களைப் போடக்கூடாது. ஏனெனில்,அவைகளில் தூசி படியும். தெருக்கள் ஒழுங்காகவும் வரிசையாகவும் இருக்கவேண்டும். சாக்கடை வசதிகள் ஏற்படவேண்டும். தரை உலர்ந்திருக்கவேண்டும். தெருக்கள் விசாலமாயிருக்கவேண்டும். அப்படி யில்லாவிட்டால், சுகாதாரம் கெட்டுப் போகும். இவ்விதக்குறைகள் ஏற்படாமலிருப்பதற்கு பாமரர்கள் கல்வி கற்பிக்கப்படவேண்டும்.

## சண்டையைச் சார்ந்தவை

துருக்கி கவர்ன்மெண்டின் வரவு செலவு மந்திரியின் ரிபோர்ட் (அறிக்கை) பிரகாரம் அவர்களுடைய கஜானாவில் வருகிற வருஷத்தில் 1,10,00,000 பவுன் குறைவாக இருக்குமென்று தெரியவருகிறது. ஆஸ்டிரியர்களும் ஜெர்மானியர்களும் துருக்கி கவர்ன்மெண்டுக்கு மூன்றுகோடி நாற்பத்தைந்து லக்ஷம் பவுன் கொடுத்திருக்கிறார்கள்.

⁂

ஜனங்களுடைய பயத்தை நிவர்த்திக்கிறதற்காக சென்னைக் கவர்ன்மெண்டார் பின்வருமாறு விளம்பரமிட்டிருக்கிறார்கள்.—சென்னை, பம்பாய், கராச்சி, கல்கத்தா, ரங்கூன் போர்ட்ப்ளேர் (அந்தமானிலுள்ளது) ஏடன் (அரபியாவிலுள்ளது) ஆகிய துறைமுகப்பட்டணங்களில் சில விஸ்தீரணங்கள் பொதுப்பாதுகாப்பு விதிகளின்படி பாதுகாக்கப்பட்ட துறைமுகங்களாகுமென்று சென்ற பிப்ரவரிமாதம் 12-ந் தேதி யன்று இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த விதிகள் போர்டு ஸெயிண்டு ஜியார்ஜ் கெஜட்டில் 1915-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ந் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டன. அவ்விதிகளில் ஒன்றின்படி எந்தத் துறைமுகம் பாதுகாக்கப்பட்ட துறைமுகமென்று இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்கிறார்களோ அதுவே பாதுகாக்கப்பட்ட துறைமுகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதிகளில் 19-வது விதிப்படி, எந்தக் கடற்படைக் கட்டடத்தையாவது அல்லது ராணுவக் கட்டடத்தையாவது அல்லது துறைமுகக் கட்டடத்தையாவது அல்லது அவைகள் சம்பந்தப்பட்ட எந்தக் கட்டடத்தையாவது சத்துருவுக்கு உபயோகமாகும் பொருட்டோ அல்லது உபயோகமாகக்கூடிய தாகவோ படம் (போட்டோ) பிடிக்கவும் கூடாது. பிளான் எழுதவும் கூடாது. அல்லது அதுபோல் சிறியதாக ஒரு உருவைச் செய்யவும் கூடாது.

துறைமுகக் கட்டடமென்றால் துறைமுகத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது அதிலிருந்து வெளிப்போகவும் உபயோகப்படக்கூடிய வெளிச்சங்கள் விளக்குகள் தெப்பங்கள் அடையாளங்கள் முதலிய எல்லாப் பொருள்களுமாகும்.

ஆகையால் துவக்கத்தில் சொல்லப்பட்ட விளம்பரமானது மேலேசொன்னவிதியை அமுலுக்குக்கொண்டு வருகிறதற்காகப் பிரசுரம் செய்யப்பட்டதே யொழிய, சென்னை நகருக்காவது துறைமுகத்துக்காவது எவ்வித பயமும் உண்டாகக்கூடியதாயிருப்பதை உத்தேசித்துப் பிரசுரம் செய்யப்பட்டதல்ல.



## இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ், தஞ்சாவூர்

1916ளு பிப்ரவரிமீ 26உ விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் செண்ட்ரல் கமிட்டி பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்கள், வைஸ் பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ த. கு. சுந்தரமாச்சாரியாரவர்கள், ஜெனரல் சேகரட்டரி பிரம்மஸ்ரீ ஜி. கிருஷ்ணசுவாமி ஆச்சாரியாரவர்கள், கமிட்டி மெம்பர்கள் பிரம்மஸ்ரீ தே. மா. சொக்கலிங்காச்சாரியாரவர்கள், ஆ. கோவிந்தாச்சாரியாரவர்கள் தஞ்சைக்குச் சென்றிருந்து ஆங்கு ஒரு ஜெனரல் மீட்டிங் கூட்டி அடியில்கண்ட உத்தியோக நியமனங்களையும். தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

### உத்தியோகஸ்தர்கள்

(1) தஞ்சை அரண்மனை எஸ்டேட் ஹெட் கிளர்க், பிரம்மஸ்ரீ T. V. இராஜலிங்காச்சாரியாரவர்கள் உபசரணைக் கமிட்டி சேர்மன்.

(2) பிரம்மஸ்ரீ P.S. இராமஸ்வாமிப் பத்தரவர்களும், T. V. பழணியாண்டி ஆச்சாரியாரவர்களும் காரியதரிசிகள்.

(3) பிரம்மஸ்ரீ P: கோபாலசுவாமி பத்தரவர்கள், பொக்கிஷதார்.

(4) பிரம்மஸ்ரீ T. K. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்கள், வாலண்டியர் காப்டன்.

### தீர்மானங்கள்

(5) கான்பரன்ஸ் பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு குறிப்பிட்ட சில கனவான்களை எழுதிக் கேட்டு அபிப்பிராயம் தெரிந்து பின்பு பிரசுரப்படுத்துவதென தீர்மானிக்கலாயிற்று.

(6) இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் 1916ளு ஏப்ரல்மீ 22, 23உகளில் நடைபெறுவதென தீர்மானிக்கலாயிற்று.

(7) உபசரணைக் கமிட்டி மெம்பர்களுக்கும், டெலிகேட்டுகளுக்கும் கட்டணம் முறையே ரூபாய் 3, 2 என ஏற்படுத்தப்பட்டது.

(8) வெளியூர் குலாபிமானிகள் விரைவில் டெலிகேட்டுகளைத் தெரிந்தெடுத்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

(9) செண்ட்ரல் கமிட்டியார் தயாரித்தனுப்பும் கான்பரன்ஸ் தீர்மானங்களை குறிப்பிட்ட சுஜாதி கனவான்களுக்கனுப்பி அபிப்பிராயம் பெறுவதென தீர்மானிக்கப்பட்டது.

(10) உபந்நியசிக்க விரும்பும் சுஜாதிக் கனவான்கள் தாங்கள் பேச விரும்பும் விஷயத்தை முன்னாடியே தெரிவிக்கவேண்டுமென தீர்மானிக்கலாயிற்று.

## அதிமதுரம்

மாதர்கள் மஞ்சள்பூசுவது எதற்காக?—ஆடவர்களது தேகமும் பெண்களுடைய தேகமும் மிக வித்தியாசமுள்ளது. பெண்களுடைய தேகம் எப்போதுஞ் சூடுள்ளதாகவே யிருக்கும். பெண்களுடைய சுவாசத்தில் ஒருவகையான அசுத்தமும் நஞ்சுத்தன்மையு மிருக்கின்றது. ஆதலால், பெண்களுடைய சுவாசம் நாயகன் மேற்பட்டால், அதினும் படுத்திருக்குங்காலத்து முகத்திற்பட்டால், அந்த நஞ்சுத்தன்மையுள்ள சுவாசம் மூக்குவழியாக உட்சென்று நோய்க்கிடமாகி அதுவுஞ் சுவாசப்பையில் தங்கித் தீங்குசெய்யும். சுவாசத்தில் தீங்குசெய்யவே அதனால் ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் சீக்கிரம் மரணத்தை யுண்டாக்கிவிடும். அது பற்றியே ஆயுள் குறையுமென்று தரும சாஸ்திரங்கள் கூறும். பெண்களுடைய மூக்கு வழியாக வருஞ் சுவாசத்தின் நஞ்சுத்தன்மையை எடுப்பதற்கு மஞ்சள் நல்ல மருந்தாகும். மஞ்சளில் அந்த நஞ்சுத் தன்மையை நீக்குங் குண விசேஷ மிருக்கின்றது. அதை யறிந்தே நஞ்சுத் தன்மையை நீக்கும் மருந்துப் பொருளாக மஞ்சளை உபயோகப்படுத்தி வரும் வழக்கத்தை சாஸ்திர நிபுணர்கள் கைக் கொண்டார்கள். மஞ்சளால் அந்த நஞ்சுத்தன்மை நீங்கவே சுவாசமும் சுவாசம் படியும், பெண்களுடைய முகமும் சுத்தமாயிருக்கும். அப்பொழுது நாயகனுக்கு அச்சுவாசத்தால் வருந்தீங்கு உண்டாக மாட்டாது. அது பற்றியே மஞ்சள் பூசுவதால் நாயகனுக்கு ஆயுள் பெருகு மென்று பெரியோர் சொல்லுவார்கள். சுமங்கலியான பெண்கள் நாயகனுக்கு ஆயுள் பெருகும் பொருளென்று மஞ்சளை விசுவாசமாக அணிவார்களென்பதை அறிந்து கொள்க. இச்சுவாசத்தின் அசுத்தத்தையும் நஞ்சுத் தன்மையையும் போக்குதற்கே குற்றமில்லாத முத்து சேர்ந்த மூக்குத்தியென்னும் ஆபரணத்தை அணிந்து கொள்ளுகிறார்கள். அதிலிருக்கும் முத்து அச்சுவாசத்தின் நஞ்சுத்தன்மையை மாற்றி விடுமென்பதையும் அறிந்து கொள்க.

இந்நுட்பங்களை ஆராயாது இக்காலத்துப் பெண்கள் மஞ்சட்பூச்சினால் முகத்தின்தோல் சுருங்கிப்போமென்றும் அழகு குறைந்து விடுமென்றும் பூசப் பின்வாங்குகிறார்கள்.

பாரதி.

---

இரண்டாவது கான்பரன்ஸ் சம்பந்தமான (தீர்மானங்களை நிர்ணயித்தல் நீங்கலாக) மற்றவைகளுக்கு தஞ்சாவூர் காரியதரிசிகளுக்கு எழுதல் வேண்டும். கான்பரன்ஸ் ஆபீஸ் தஞ்சாவூர் தெற்கு ராஜவீதி, 2635 நெ. கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. கிருஷ்ணசுவாமி ஆச்சாரி,
ஜெனரல் சேகரிடரி.

கான்பரன்ஸ் செண்ட்ரல் கமிட்டி ஆபீஸ்,
32, செக்கடித் தெரு, கும்பகோணம்.

## விசேஷ வர்த்தமானம்

**சீனுவில் மகம்மதியர்**—சீனு முழுமைக்கும் ஒரு கோடியே 20-லக்ஷம் மகம்மதியர்களும், திபேத்தில் ஒரு லக்ஷம் மகம்மதியர்களும் இருக்கிருர்களாம். சீன ஸ்திரீகளை மகம்மதியர்கள் மணந்துகொண்டாலும், தங்கள் பெண்களை சீனர்களுக்குத் தருவதில்லை.

* * *

**மிளகு ஏற்றுமதி:**—பிரிட்டிஷ் தேசத்துக்கும் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான நாடுகளுக்கும் தவிர மற்றெந்த நாடுகளுக்கும் இந்தியாவிலிருந்து மிளகு முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று வீகஸ்டம்ஸ் ஆக்டுப்படி கவர்னர் ஜெனரல் உத்தரவிட்டுவிட்டார்.

* * *

**உப்பு விலை:**—இந்தியா கவர்ன்மெண்டாரால் ஒரு மணங்கு உப்பின் விலை 1-4-0 வுக்கு உயர்த்தப்பட்டிருக்கிற விஷயம் 1916-ம் வருஷம் மார்ச்சுமாத முதல் தேதிமுதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று ரெவினியூ போர்டாருக்கும், திருவாங்கூர், கொச்சி இவ்விரண்டு சமஸ்தானங்களின் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுக்கும் அறிவிக்கப்படுகிறது.

* * *

**படியாத வகுப்பாரின் சங்கியை**—பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்களில் 100-க்கு இத்தனை பெயர் படியாதவர் உலகத்திலுள்ள பற்பல தேசங்களில் இருக்கிருர்களென்பதன் கணக்குவிவரம் பின்வருமாறு:

| தேசங்கள். | 1870-ஆ ஸென்ஸஸ் கணக்கு. | 1900-ம் ஆ ஸென்ஸஸ் கணக்கு. |
|---|---|---|
| ஜெர்மனி | 4 | 1 |
| நார்வே | 3 | 1 |
| ஸ்வீடன் | 3 | 1 |
| ஸ்விட்ஸர்லாண்டு | 5 | 1 |
| நியூஸீலண்டு | 7 | 4 |
| பிரான்சு தேசம் | 15 | 5 |
| கிரேட் பிரிட்டன் | 10 | 6 |
| ஆஸ்திரேலியா | — | 9 |
| ஹாலண்டு | 14 | 10 |
| யுனைடட்ஸ்டேட்ஸ் | 13 | 19 |
| பெல்ஜியம் | 20 | 12 |
| ஆஸ்ட்ரியா | 45 | 31 |
| இடாலி | 53 | 44 |
| ஸ்பெயின் | 68 | — |
| ருஷியா ஐரோப்பா) | 85 | 78 |
| இந்தியா | 92·5 | |
| பிலிப்பைன் தீவுகள் | 55·5 | |
| ஆசிய ருஷ்யா | 87·3 | |
| அமெரிக்கன் நீகரோக்கள் | 30·5 | |

**புத்தக சாலைகள்.**—பிரிடிஷ் மியூஸியம் புஸ்தகசாலையில் இரண்டு லக்ஷம் புஸ்தகங்களிருக்கின்றன. அதில் 50,000 கையெழுத்துப் பிரதிகளுமிருக்கின்றன. அந்தப் புஸ்தகசாலை 32 மைல் விஸ்தாரமானது. வருஷவாரியில் லட்சக்கணக்கான ஜனங்கள் அப்புஸ்தகசாலையில் வந்து வாசிக்கிருர்கள். பாரிஸ் புஸ்தகசாலையின் விஸ்தீர்ணம் 18-மைல்; அதில் 86000 கையெழுத்துப் பிரதிகளிருக்கின்றன.

* * *

**புதிய இராஜப்பிரதிநிதி.**—லார்ட் செம்ஸ் போர்ட் சீமையிலிருந்து பம்பாய்க்கு ஏப்பிரல் மாதம் 4-ந் தேதியன்று வந்து சேர்வார். உத்தியோக முறையில் பம்பாயில் பிரவேசித்து ராஜப்பிரதிநிதித்துவத்தை அதற்குரிய சடங்குகளுடன் ஏற்றுக்கொள்வார். அன்றைய தினம் இராத்திரி அவர் பம்பாயிலிருந்து புறப்பட்டு ஏப்பிரல் மாதம் 5-ந் தேதியன்று உத்தியோக முறையில் டில்லியில் பிரவேசிப்பார்.

* * *

**ஜெயிலில் 42-வருஷ காலம் இருந்தவன்.**—55-வயதானவனும், சஞ்சி என்றழைக்கப்படுபவனுமான முனுசாமி என்பவன், 4-வயதுள்ள ஒரு குழந்தையைத் திருடிக்கொண்டுபோய், அக்குழந்தை அணிந்துகொண்டிருந்த வெள்ளி நகைகளைத் திருடினனென்று குற்றஞ் சாட்டப்பட்டு பிரிஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரின் முன்னிலை விசாரணைக்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். அவன் குழந்தையைத் திருடிக்கொண்டுபேயின் பிரிட்ஜுக்கருகில் கொண்டுபோய் குழந்தையின் நகைகளைக் கழற்றப் பிரயத்தனப் படுகையில் குழந்தைஅழ ஆரம்பித்தது. அச்சத்தத்தை 2-கான்ஸ்டேபில்கள் கேட்டு அவ்விடத்திற்குப் போய் அவனை அரெஸ்ட் செய்தார்கள். எதிரிக்குப் பல பாஷைகள் பேசத்தெரியும். அவனை விசாரித்தபொழுது ஒரு சமயம் அவன் தான் கல்கட்டாவிலிருந்து வந்ததாகச் சொன்ஞன். நன்ருக விசாரிக்கவே, அவன் பல தடவைகளில் ஜெயிலில் இருந்ததாகத் தெரியவந்தது. அவன் பெயர் 1871-ம் வருஷத்திலேயே குற்றவாளியின் ஜாப்தாவில் பதிவு செய்யப்பட்டிருந்தது. 1872-ம் வருஷத்தில் அவனுக்கு 10-கசையடி தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்த வருஷம் 3-மாதம் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பிறகு 18-வருஷ காலத்திற்குள் அவன் மூன்று தடவை தண்டிக்கப்பட்டான். மொத்தத்தில் 17-வருஷம் 6-மாதம். 1891-ம் வருஷத்தில் இவனுக்கு தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது. இவன் அண்டமான் தீவுகளிலிருந்து திரும்பி வந்தான். 1912-ம் வருஷத்தில் 4-வருஷம் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 1914-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 7-ந் தேதியன்று விடுதலை யடைந்தான். மறுபடியும் அவன் ஷை குற்றத்திற்காக அரெஸ்ட் செய்யப்பட்டான்.

OFFICE OF THE

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1916ஆ ஏப்ரல், மே, ஜுன்மீ [சஞ்சிகை 7-8-9

## ஒளிவளர் விளக்கு

புதுக் கோட்டையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு இருப்புப்பாதை போடும் வேலைக்காக உடனே நிலத்தை வாங்கும்படியாக புதுக்கோட்டை தர்பாரின் உத்திரவு பிறந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

* * *

கொச்சி ராஜாவின் குமாரர் இப்போது ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் கல்வி பயின்று வருகின்ருர். ஸூரிச் யூனிவர்ஸிடியார் நடத்தப்போகும் அடுத்த பரீக்ஷைக்கு அவர் முன்வந்திருக்கிருர். அப்பரீக்ஷை நடந்தேறிய பிறகு அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போவாராம்.

* * *

ஜப்பானியக் கவர்ன்மெண்டார் ஜப்பானியத் தொழிலாளிகளுக்குத் தாராளமாகப் பணம் கடனுக உதவுகிருர்கள். தொழிற் பாங்கிகட்கு ஏராளமாக ஒத்தாசை செய்கிருர்கள். சென்ற 50-வருஷ காலத்திற்குள், அத்தேசத்தாரில் 100-க்கு 40 பேர்கள் தொழில்கள் செய்வோராக மாறிவிட்டனர். சென்ற சர்க்கார் வருஷத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தீப்பெட்டிகள் இந்தியாவில் இறக்குமதியாயின. அன்னிய தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்த சரக்குகளில் 100-ல் 83 பங்கு ஜப்பானுடையனவாம்.

சென்னை அடையாற்றில் தியாஸபிகல் சங்கத்தில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரும் அவரது பத்தினியும் ஸமாராதி போஜன விருந்து நடப்பித்தனர். அதற்கு ராஜதானியின் பற்பல பாகங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். பிராமணர்-17, க்ஷத்திரியர்-1, வைசியர்-2, பிராமணரல்லாத வகுப்பினர் 37, ஐரோப்பியர்-25, பாரஸிகர்-5, முகம்மதியர்-1, பௌத்தர்-1 ஆக எல்லோரும் உட்கார்ந்து வாழையிலையில் போஜனம் செய்தனர். இதில் பெண்பாலருமுண்டு. வெண்பொங்கல், பச்சடி, பஜ்ஜி, சாம்பார், ரஸம், தயிர்வடை, பூந்தி, சேமியாபாயஸம், பகாளபாத் இவை பரிமாறப் பட்டன. விருந்து நன்ருக நடந்தேறியது.

* * *

மைசூர் சமஸ்தானத்தின் விஸ்தீரணம் சுமார் 30 ஆயிரம் சதுர மைலாகும். அதன் ஜனத்தொகை சுமார் 60 லட்சம். ஜனங்களில் பெரும்பாலரும் பேசிவரும் தாய்ப்பாஷை கன்னடமேயாம். அந்த சமஸ்தானத்திலே முதல் கிரேட் கலாசாலைகள் இரண்டு உள. அவ்விரண்டிலுமாக சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தவிர, 14 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளில் சுமார் 2700 பிள்ளைகள் படித்து வருகிருர்கள். போதனுமுறைக் கலாசாலை யொன்றும் இருக்கிறது.

சிக்கந்தராபாத்தில் 38 வயதுள்ள மிஸ்டர் எஸ். வெங்கட நரசிங்கராவ் என்பவருக்கும், 25-பிராயமுள்ள லக்ஷ்மீபாய் அம்மாள் என்பவருக்கும் மறுவிவாகம் வெகு சம்பிரமமாய் நடந்தேறிற்று. இருவரும் கோல்கொண்டா ஸ்மார்த்த வைஷ்ணவப் பிராமண வகுப்பினராவர். மணமகன் ஒரு கவர்ன்மெண்ட் ஸ்கூல் ஹெட் மாஸ்டர். ஆனைக்குந்தி சமஸ்தானத்துத் திவானும் அவரது மனைவியும் விவாகத்துக்கு வந்திருந்து சிறப்பித்தார்கள்; சமபந்தி போஜனமும் நடந்தது. ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி அவர்கள் எழுதி வைத்துள்ள சமஸ்கார விதியின்படி விவாகம் நிறைவேற்றப் பட்டது.

* * *

சமீபத்தில் நடந்த சட்டசபையில் இறக்குமதிச் சரக்குகளின்மீது வரி விதித்தபோது இதுவரையில் வெள்ளிச் சரக்குகளின் மீது விதிக்கப்பட்டிருந்த 100-க்கு 5 வீத வரியை 15-க்கு உயர்த்தினார்கள். கட்டி வெள்ளியின் மீது ஒரு ஔன்ஸுக்கு $\frac{1}{4}$ ரூபாய் வரி ஏற்பட்டிருக்கிறது. வெள்ளி சாமான்களின் வரியையும் அதற்குச் சமமாகச் செய்ய இம்மாதிரி சாமான்களின் மீதுள்ள வரியை உயர்த்தினார்கள். எந்தச் சாமான்கள் செய்யப்பட்டு வந்தாலும் அவற்றில் வெள்ளிக்கலப்பிருந்தால், அவை முற்றிலும் வெள்ளியால் செய்யப் பட்டிருந்ததாக நினைத்து வரி வசூல் செய்து வந்தார்கள். தீர்வையுண்டு. அதில் கலந்திருந்த வெள்ளியின் மதிப்புக்கு மாத்திரம் தீர்வை விதிக்கும்படி உத்தரவு செய்யப் பட்டிருக்கிறது.

* * *

கண்ணாடி சீஸாக்கள் இப்போது பிரான்ஸில் மிகவும் குறைவாய்ச் செய்யப் படுவதால், ஸோடா முதலிய பானங்களையும் சாராய தினுசுகளையும் செய்யும் வியாபாரிகள் அளவற்ற சங்கடங்களை அனுபவிக்கிறார்கள். கண்ணாடி இப்போது பிரான்ஸில் குறைவாயிருப்பதற்கு மூன்று முக்கிய காரணங்களிருக்கின்றன. (1) கண்ணாடித் தொழிற்சாலைகள் பெரும்பாகமும் ஜெர்மனியரால் வசப்படுத்திக்கொள்ளப்பட்ட பிரஞ்சுபூமியில் இருக்கின்றன. ஆதலால் பிரஞ்சுக்காரரின் வசத்திலுள்ள தொழிற்சாலைகள் மிகவும் சொற்பமாம். (2) அந்த சொற்பக் கண்ணாடித் தொழிற் சாலைகளிலும் வேலை செய்வதற்கு வயது சென்ற கிழவர்களே கூலியாட்களாகக் கிடைக்கின்றனர். மற்ற திடகாத்திர முள்ளவர்கள் யுத்தகளத்திலும் தளவாடச்சாலைகளிலும் இருந்துவருகிறார்கள். (3) கண்ணாடிச் சாமான்கள் செய்வதற்குத் தேவையான சில உப்பு தினுசுகளை வெளிதேசங்களிலிருந்து கொண்டுவர வியாபாரக் கப்பல்கள் குறைவாயிருப்பதால், அந்தச் சாமான்கள் இறக்குமதியாவது கஷ்டமாயிருப்பதோடு விலையும் ஐந்து மடங்கு அதிகரித்துவிட்டது. தொழிற்சாலையிலுள்ள யந்திரங்களுக்கு அவசியமான கரியும் கிடைப்பது அரிதாகி விட்டது.

* * *

தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்கு ஒரு ரயில்பாதை போடவேண்டுமென்று தஞ்சாவூர் ஜில்லாபோர்டு விரும்பினதன் மேல், போர்டின் பணத்தில் பன்னீராயிரம் ரூபாய் செலவிட்டு ரயில்பாதை போகும் வழியை ஸர்வே செய்யும்படி கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்தார்கள். அப்படியே ஸர்வேவேலை ஆய்விட்டது. அந்தப் பாதையின் மொத்த நீளம் எட்டேமுக்கால் மைல். தஞ்சாவூரிலிருந்து முதலிரண்டு மைல் தவிர பாக்கிப் பாதை முழுவதும் நன்செய் பூமி வழியாகவே போகவேண்டியிருக்கிறது. போகும் வழியில் சிறிதும் பெரிதுமாக 7-நதிகளை ரயில் பாதை தாண்டவேண்டியிருக்கிறது. அவைகளுக்காக ஏழு பெரிய பாலங்கள் கட்டவேண்டும். புன்செய் நிலத்தின் விலை ஏகர் ஒன்றுக்கு 350 ரூபா முதல் 900 ரூ. வரையிலும், நன்செயின் விலை ஏகர் ஒன்றுக்கு 900 ரூ. முதல் 1800 ரூ. வரையிலுமிருப்பதால் நிலவிலையாக மாத்திரம்



2 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவாகும். நிலவிலையைச் சேர்த்து பதினொன்றரை லட்சம் ரூபாய் திட்டமேற்பட்டிருக்கிறது. வியாபாரம் பெருகுமென்று வைத்துக்கொண்டு பார்த்தால் வாரம் ஒன்றுக்கு மைல் ஒன்றுக்கு 80 ரூபாய் கிடைக்கலாம். வருஷ வரும்படி 36 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். சரிபாதி செலவுக்குத் தள்ளிவிட்டு நிலவிலை தவிர மற்ற முதல் தொகைக்கு வட்டி என்ன கட்டுமென்று பார்த்தால் 100 க்கு வருஷம் ஒன்றுக்கு 2 ரூபாய் ஒரு அணாவாகும்.

* * *

ஸர் பி. லூகிஸ் என்னும் இந்திய வைத்திய இலாகா தலைவர், ஆயுர்வேதப் பிரபாவத்தைப் பின்வருமாறு விளக்கினார்: நான் வியாதியாயிருந்தால் கெட்டிக்காரனல்லாத ஒரு மேனாட்டு வைத்தியனிடம் வைத்தியஞ் செய்து கொள்வதைவிட, கெட்டிக்காரனான ஒரு ஆயுர்வேத வைத்தியனிடம் வைத்தியஞ் செய்துகொள்ளவே விரும்புவேன். ஆயுர்வேத வைத்தியர்களும் ஹக்கீம்களும் குருட்டு முறைக்காரர்கள் என்று மேனாட்டு வைத்தியர்கள் அலட்சியம் செய்வது எனக்கு வெகு கோபமாயிருக்கிறது. பைஸபாட் நகரில் வாழ்ந்த நவாப் ஷுஜாஉத்டௌலா வுடையவும், கல்கத்தாவில் வாழ்ந்த கவிராஜ் விஜயரதன் ஸேனருடையவும் சிநேகத்தை நான் அடைந்திருந்ததை எப்பொழுதும் பெரிய பாக்கியமாகக் கருதுவேன். இக்காலத்தில் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பல விஷயங்கள் பண்டைக்காலத்தில் பூர்வீகர்களுக்குத் தெரிந்திருந்த விஷயங்களே என்பதை வைத்தியப் பழக்க மில்லாதவர்கள்முன் நான் இப்பொழுது ருஜுப்படுத்துவதாயிருந்தால், சிரமமாயிருக்கும். பண்டைக்காலமுறைகள் சிலாக்கியமானவை என்று நான்மாத்திரம் சொல்லவில்லை. வேறு பல மேதாவிகளும் என்னைப் போல் அபிப்பிராயப்பட் டிருக்கிறார்கள், ஸர் ஹூரவ்ஸ்க் சார்ல்ஸ் என்ன, கிண்டியில் ஒரு

## தஞ்சை
## விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ்

தஞ்சைமா நகரில் ஏப்ரில் மாதம் 22, 23 தேதிகளில் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் நடந்தேறிற்று. தஞ்சைநகருள் கோட்டைவாசிகளான சுஜாதிப் பிரமுகர்களில் சிலர்மட்டுமே இக்கான்பரன்ஸ் விஷயமாய் சொற்ப ஊக்கம் கொண்டிருந்தன ரென்றும், காந்தை முதலிய அக்கம் பக்கத்தார் நாட்டம் செலுத்தவில்லையென்றும் சொல்லப்படுகிறது. முதல்நாள் கூட்டம் மிகக் குறைவாயிருந்ததாகவும், இரண்டாம் நாள் கூட்டம் ஒருவாறிருந்ததாகவுந் தெரிகிறது. வெளியூர்ப் பிரமுகர்களிலும் முக்கியமானவர்கள் பலர் வாராதொழிந்தனர்.

கான்பரன்ஸுக்கு பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் அவர்கள் B.A. 20-தேதி சாயுங்காலம் சென்னையினின்று புறப்பட்டு 21-தேதி காலை தஞ்சையடைந்து உபசாரணைக் கமிட்டிச் சேர்மன் முதலியோர்களால் உபசரிக்கப்பட்டனர்.

22உ சனிக்கிழமை காலை 8-மணிக்குக் கான்பரன்ஸ் ஆரம்பமாயிற்று.—

ஸ்ரீ பா. சுப்பிரமணிய சாஸ்திரிகள் விஸ்வேஸ்வரப் பிரார்த்தனை செய்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரீ நமசிவாயம் — சிவக்கொழுந்தாச்சாரியார் அவர்களும், பழநி ஸ்ரீ மௌனகுரு ருத்ரமூர்த்தி ஆச்சாரியாரவர்களும் அனுப்பியிருந்த வாழ்த்துக்கவிகள் வாசிக்கப் பட்டன. உபசாரணைக் கமிட்டி சேர்மன் ஸ்ரீ T. A. சுப்பிரமணியாச்சாரியார் தமது வரவேற்புப் பிரசங்கத்ஸை வாசித்து, ஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் B. A., அவர்கள் கான்பரென்ஸ் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதை மஹா ஜனங்கள் அங்கீகரிக்க வேண்டுமாய்ப் பிரரேபித்தனர். இப்பிரரேபணையை ஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியாரவர்கள் ஆமோதிக்க, மஹாஜனங்கள் தங்கள் கரகோஷத்தால் அங்கீகரித்தனர். பின்னர்,

---

பெரிய சாஸ்திர ஆராய்ச்சிசாலை வைப்பதற்குக் காரணராயிருந்தவரும் சென்னை சுகாதார இலாகாத் தலைவராயிருந்தவருமான கர்னல் கிங் என்ன, பம்பாய் சுகாதார உத்தியோகஸ்தராகிய டாக்டர் டர்னர் என்ன, இவர்களைப் போன்ற பலர் என் கோஷ்டியில் சேர்ந்தவர்கள்.

பிரசிடெண்டு அவர்கள் தமது ஆரம்ப உபந்நியாசத்தை வாசித்தனர்.

கான்பரன்ஸில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கென 12 கனவான்களடங்கிய விஷயாலோசனைக் கமிட்டியொன்று திருச்சி ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ணாச்சாரியரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ T. S. இராமஸ்வாமி ஆச்சாரியரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டிக்கு சென்னை ஸ்ரீ கா. கந்தஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் சேர்மனாக நியமிக்கப்பட்டார். அக்கமிட்டியார்களின் அபிப்பிராயத்தைத்தழுவி முதல் ஐந்து தீர்மானங்களும் அவைகளை யொட்டிய கிளைத் தீர்மானங்களும் அப்பகல் நிறைவேறின.

பிரசிடெண்டவர்கள் இராஜவிஸ்வாஸ தீர்மானத்தை இங்கிலீஷில் பிரரேபித்தனர். அப்பிரசங்கத்தையொட்டி ஸ்ரீ T. M தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்தள் பேசினர். இராஜப் பிரதிநிதிகளைக் குறித்த தீர்மானங்கள் சென்னை ஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டன. தென்னிந்திய தேசாபிமானக் குரிசிலும் சுதேசமித்திரனாசிரியராயிருந்தவருமான ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்களின் மரண சம்பவத்தைக்குறித்த தீர்மானம் ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியா ரவர்களால் பிரேரேபிக்கப்பட்டது. அதை ஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியரவர்கள் ஆமோதிக்க ஸ்ரீ M. R. துரைசாமி அய்யரவர்கள் ஆதரித்துப் பேசினர். ஆச்சாரியப்பட்டத் திரிபைச் சார்ந்த தீர்மானம் ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ணாச்சாரியா ரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ பா. சுப்பிரமண்ய சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, ஸ்ரீ வைத்தியலிங்காச்சாரியா ரவர்களால் ஆதரிக்கப்பட்டது. பிற்பகல் மூன்றுமணிக்கு மீண்டும் கான்பரென்ஸ் கூடிற்று. சுஜாதிச் சிறுவர் சிறுமிகளின் கட்டாய ஆரம்பக் கல்வியைப் பற்றிய தீர்மானத்தை ஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச் சாரியா ரவர்கள் பிரரேபிக்க, ஸ்ரீ T. M. சொக்கலிங்காச்சாரிய ரவர்கள் ஆமோதித்தனர்.

இரண்டாம் நாள் ஆதிவாரம் காலை 8-மணிக்கு மறுபடியும் கான்பரன்ஸ் ஆரம்பமாயிற்று. பிரதமத்தில் கடவுள் வணக்கம் செய்யப்பட்டது. நமது வம்சத்தினர்க்குரிய வைதிக கருமங்களைப் பற்றிய தீர்மானத்தை ஸ்ரீ பா. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் பிரரேபிக்க, அப்பிரேரேபனையை ஸ்ரீ P. S. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் ஆமோதித்துப் பேச, ஸ்ரீ வித்வான் உலகநாத ஆச்சாரியாரவர்களும், ஸ்ரீ T. தங்கவேலாச்சாரியா ரவர்களும் ஆதரித்துப் பேசினர். கான்பரன்ஸுக்கு, ஸ்ரீ கோபாலஸ்வாமி ரெகுநாத ராஜாளியாரவர்கள் ஸ்ரீ O. N. அப்பாசாமி அய்யரவர்கள், ஸ்ரீ T. V. சீனிவாசய்ய ரவர்கள் முதலியோர் விஜயமாயிருந்தனர். பிற்பகல் 3-மணிக்கு மீண்டும் கான்பரன்ஸ் கூடிற்று சென்ட்ரல் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட ரூல்ஸ்கள் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டன. பிறகு, மூலதனசேகர சம்பந்தமான தீர்மானம் ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்களால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீ கொ. கன்னியப்பாச் சாரியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. பின்னர், குலாபிமானிகள் எழுதிய வியாசங்கள் வாசிக்கப்பட்டு அவர்களுக்கு ஓர் தீர்மான பூர்வகமாய் வந்தனம் செலுத்தப்பட்டது.

ஜப்பான் தேசத்திற்கு தொழில்கல்விகற்கச் சென்றிருக்கும், ஸ்ரீ T. A. ராமஸ்வாமி ஆச்சாரியார் பூரண சௌக்கியத்துடன் இந்நாடு திரும்பிவந்து ஜாதியாருக்கு வேண்டிய சகாயங்களியற்றக் கிருபைபுரியுமாறு இறைவனருளவேண்டுமென்றொரு தீர்மானம் செய்யப்பட்டது. ஸ்ரீ T. A. முத்துகிருஷ்ணாச்சாரியாரவர்கள் இதுவரையில் சுஜாதி சம்பந்தமான விஷயங்களில் முன்னின்று உழைத்ததைப் பாராட்டி கான்பரன்ஸ் சென்ட்ரல்கமிட்டியார் அவருக்கு ஓர் வெள்ளிப்பதக்கத்தை பிரசிடெண்டு மூலியமாக பரிசளித்தனர். அடுத்த வருடம் திருச்சியில் கான்பரன்ஸ் நடைபெற வேண்டுமெனத் திருச்சி வாசிகள் கேட்டுக்கொண்டனர். அக்கிராசனாதிபதி யவர்களுடைய முடிவுரையுடன் கான்பரன்ஸ் கலைந்தது.

## உபசரணைக் கமிட்டி சேர்மன் வரவேற்புப் பிரசங்கம்.

குலாபிமானமிக்க நண்பர்களே!

குலநல உணர்ச்சிகொண்டு இம்மஹாசபைக்கு எழுந்தருளியிருக்கும் தங்களனைவரையும் தரிசிக்கு முகத்தால் எமது பலவித குறைபாடுகளும் குன்றி, ஜாதீய பெருமித உணர்ச்சியும், உத்ஸாகமும் பெருகுகின்றது. சென்ற வருடத்திலும், இவ்வருடம் பல புதிய நண்பர்களைக் கொண்டிருக்கும் பாக்கியத்தை அடைந்த இம்மஹாசபையை நோக்கின் நமது குலமுன்னேற்ற விஷயத்தில் எவ்வளவு அக்கரையும், அநுதாபமும், ஒற்றுமை யுணர்ச்சியும் நம்மனோர் தற்காலம் பெற்றிருக்கிறார்களென்பது நன்கு விளங்குகின்றது. இதனைக் கண்கூடாக் காணவே என் மனதிலெழும் சந்தோஷத்திற்கு அளவேயில்லையென நிச்சயமாய்ச் சொல்லுவேன். இம்மஹாசபை ஜாதீயப் பெருமுயற்சியாதலாலும், இம்முயற்சியுடன் கலந்துழைக்க இங்கு குழுமியுள்ளவர்கள் எம்மிலும் மிக்க குலநலப்பிரியர்களும், பேரபிமானிகளும், வயதிலும் உலகாநுபவத்திலும் மிக்கோர்களாதலாலும், அவர்கள் தங்கள் தேககஷ்டம், பொருட்செலவு முதலியவற்றைக் கவனியாது நெடுந்தூரத்தினின்றும் இங்கு வந்தடைந்த பெருந்தகைமைக்குப் பிரதியாக யான் அவர்கள்மாட்டு செலுத்தும் வந்தனங்கள் வெறும் உபசாரவார்த்தைகளாகவே முடியுமென அஞ்சுகின்றேன். என்றாலும், கமிட்டியார்களின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு எமது கடமையைச் செலுத்தவேண்டி யிருப்பதால், இங்கு விஜயமாகியிருக்கும் குலாபிமானச் சிரேட்டர்கள் ஒவ்வொருவர்கட்கும் தனித்தனியே நல்வரவு கூறுகின்றேன்.

பிரதிநிதிகளாகிய தங்கள் துணைவலியால் 'கான்பரன்ஸ்' என்னும் இப்பெருங்குலோத்தாரண மரக்கலத்தைக் குழப்பம் என்னும் அலையால் தாக்கப்படாமலும், பிரயத்தின மாறுபாடென்னும் பாறையால் தட்டழியாமலும் மனப்பிளவு என்னும் கடலின்வாய்ப்புகாமலும் இனிது நிறைவேற்றக் கூடுமென்பது எங்கள் பூரண நம்பிக்கை. ஆகையின், பல வழியிலும் எங்கட்கு சகாயிகளாகவும், குல நலத்திற்குக் கர்த்தர்களாகவும் எழுந்தருளியிருக்கும் தங்கள் பேரபிமானத்திற்குப்பிரதியாக எங்கள் மனமார்ந்த வந்தனங்களைத் தயைசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள். இக்கான்பரன்ஸ் விஷயமாக தாங்கள் எங்களுடன் தங்கி கலந்துழைக்கும்வரை தங்களுடைய பல சௌகர்யங்களில் நாட்டம்வைத்து தக்கவாறு நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறோமென்பதை விநயமாய்த் தெரிவிக்கின்றேன்.



### ஸ்தலச் சிறப்பு

நாம் ஒன்று சேர்ந்துள்ள இத்தஞ்சைநகர் தென்பிராந்தியத்திலுள்ள புராதன ஸ்தலங்களில் முதன்மையானது பூர்வீக அரசர்களின் அரசாட்சி ஸ்தானமும் ஆகும். சிற்பசாஸ்திர ரீதியாக நிர்மாணிக்கப்பட்ட நகரங்களில் இந்நகர் சிறந்து விளங்குகிறதென்பது பல நிபுணர்களின் அபிப்பிராயம். சிற்பசாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டபடி தேவாலயங்களைச் சுற்றியிருக்கும் நகரையும், இராஜவாசமாகிய அரண்மனையைச் சூழ்ந்து விளங்கும் பட்டணத்தையும் இந்நகர் ஒருங்கே பெற்றிருக்கின்றமையால், மேற்றிசை நகர் நிர்மாண நிபுணர்களால் வரம்பின்றி மெச்சப்பெற்றிருக்கின்றது.

கைத்தொழில் பிரபல்யத்திலும் இந்நகர் எந்நகரிலும் தாழ்ந்த தன்று. ஐரோப்பிய தேசாந்திரிகள் இந்நகரையும், ஆலயங்களையும் நாளும் தரிசித்துச் செல்கின்றனரென்றால், இந்நகரின் பெருமையை விரித்துச் சொல்லவும் வேண்டுமோ? நமது பூர்வீக சிற்பிகளின் கை அற்புதங்களையும், அவர்களின் திரிகாலக்கியான முதிர்ச்சியையும் விளக்குவதற்கு இந்நகரிலுள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரர் ஆலயமே தக்க சான்றாக விருக்கிறது. இவ்வாலய விமானத்தின் அழகும், நந்தியின் ஆகிருதியும், பக்கத்தில் அமைந்துள்ள சுப்பிரமண்ய ஸ்வாமியின் திருக்கோயிலின் வேலைப்பாடும் அதி அற்புதமானவைகளாகவே கருதப்படுகின்றன. விமானத்தின் வடபுறத் திணுச்சியில் கருங்கல்லில் அடிக்கப்பட்டு அமைத்துள்ள தொப்பியிட்ட ஓர் ஐரோப்பிய தலையை இவ்வாலயத்தைப் பிரதிஷ்டை செய்த சிற்பாச்சாரியர் பல ஆயிர வருடங்களுக்குப் பின் தோன்றிய ஆங்கிலேய அரசாட்சியை சூசிப்பிக்கும் வண்ணம் ஆங்கு அமைத்து வைத்தனரென்றால், நமது பூர்வீகர்களான சிற்பிகளின் மகத்தான யோக்கியதைகளையும், சிற்பசாஸ்திர வல்லபத்தையும் போற்றாதார் யாரே!

இவ்வாலயத்தின்கண் காணப்படுகிற சிலாசாஸனமென்னும் வெட்டெழுத்துகளிலிருந்து, நம்மனோர் பூர்வத்தில் பலவகைச் சிறப்புடன்மான்யாதி சுகபோகங்களையும் இராஜ ஆக்ஞையால் அடைந்திருந்தனரென்றும் பெறப்படுகிறது. ஸ்ரீ இராஜராஜச் சோழர் அரசாட்சி காலத்திற்குப் பின் தோன்றிய மகாராஷ்டிர அரசாட்சியிலும் சிற்பசாஸ்திரிகளும், கைத்தொழில் வல்லோராகிய நம்முன்னோர்களில் பலர் சர்வமானியங்களையும் சமான ஸ்தானங்களையும், பலவித இராஜ மரியாதைகளையும், பிருதுக்களையும், வாகனங்களையும் பெற்று அபிமானிக்கப்பட்டு வந்தனரென்பதற்கு பல அத்தாட்சிகளுண்டு.

தீர்த்த விசேடத்தில் சிவகங்கை என்னும் குளம் இங்கு குறிப்பிடத்தகும். இத்தீர்த்தத்தின் மத்தியில் பொன் மணித்தட்டார் எனும் பொன்மணிபக்தரின் சமாதியொன்றிருக்கிறது. இச்சமாதியின் விசேடத்தாலும், பொன்மணி பக்தரின் அருள்வாக்காலும் இத்தீர்த்தத்தில் தவளைகள் பூச்சிகள் முதலிய அநுஜிகளொக்கை

கள் சேர்வதில்லை என்று கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதையின் உண்மையை நிதரிசனமாக இன்றும் காணலாம். இத்தீர்த்தத்தின்மற்றொரு விசேஷத்தையும் கூறுவதால் நமது முன்னோர்களின் அரிய சாமர்த்தியமும் நிலைநாட்டப்படும்.

இந்நகரிலுள்ள இராஜமாளிகையிலும் மந்திரி பிரதானியர் முதலியோர் மந்திரங்களிலுமுள்ள தடாகங்களுக்கும், கோட்டையிலுள்ள பல முக்கிய பாகங்களிலும், வீடுகளிலும் அமைத்துள்ள கிணறுகளுக்கும் பூமிசுரங்க வழிகளால் இத்தீர்த்தத்தின் ஜலத்தைப் பானம்செய்யும் வசதிகள் பூர்வத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இந்நகர்வாசிகள் பிறந்தநாள்தொட்டு இறக்கும் நாள்வரை இந்த ஜலத்தையே பருகிவந்தனரென்ப. சங்கீத, பரதசாகித்யங்களிலும், பலவித இன்னிசைக் கருவிகளின் தேர்ச்சியிலும் இந்நகர் ஆதிகால முதல் பேர்போனது. சங்கீத நிபுணராக விளங்கினவர்கட்கும், தற்காலம் விளங்கி வருபவர்கட்கும் இந்நகரைத் தாயகம் என்பர்.

## பூர்வீகத் தொழில் சிறப்பு

'இன்லெய்டு' எனப்படும் உலோக நகாசுபதிப்பு வேலைகளிலும்; மிருதங்கம், வீணை தம்பூர், 'சுரபத்து முதலிய வேலைகளிலும், தந்தவேலையிலும், சிற்றுளி செதுக்கு வேலையிலும் இந்நகர் பிரபல்ய முற்றிருந்தது. காலதேசமாறுபாட்டினால் இத்தொழில்களின் பிரபல்யம் நாளுக்குநாள் குன்றி, தொழில் வல்லோர்களின் வருமானமும் குறைந்து வருகின்றது. இந்நகர் சித்திர வேலையிலும் ஒருவாறு சிறப்புடையது. பலவர்ணங்களாலும், செம்பு, பச்சை, ஸ்படிகம் முதலிய இரத்தினங்களைத்|தங்கரேக்குகொண்டு பதிப்பிக்கப்பட்ட சித்திரப் படவேலை இன்றும் நடந்தேறி வருகின்றது. மாதந்தப்பதிப்பு வேலையிலும் இந்நகர் கீர்த்திவாய்ந்துள்ளது. வல்லத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் ஸ்படிகக் கல்லுகளிலிருந்து முதல்தரமான மூக்குக் கண்ணாடிகள் செய்வதில் இந்நகர் பேர்போனது. குந்தனவேலையிலும் இந்நகர் பிரசித்தி பெற்றதெனினும், அத்தொழிலைப் பிரகாசமாகச் செய்பவர்களின் தொகை தற்காலம் அதிகமில்லை.

## ஜனசங்கியையும், தற்காலத்தொழில் நிலைமையும்

இந்நகர், தஞ்சை ஜில்லாவிற்குப் பிரதான நகரம் அதிகமில்லை. அவர்களின் தொகையை தாராளமாக மதிப்பிட்டால், கோட்டையிலும், கரந்தை முதலிய அக்கம் பக்கங்களிலும் வசிக்கும் சுஜாதியர்கள் 1500-க்கு மேலில்லை. கைத்தொழில் பிரியர்களும், அபிமானிகளுமான பூர்வீக இராஜர்கள் இறந்துவிட்டதாலும், அவர்களை அடுத்து வாழ்ந்த பிரபல்ய குடும்பங்கள் நசித்துவிட்டதாலும் நம்மனோர் இந்நகரை விட்டு ஜீவனோபாய நிமித்தம் வெளிப்போந்தனரென்றும், அது காரணமாக நமது ஜாதியரின் தொகை குறைந்துவிட்டதென்றும் சொல்லப்படுகின்றது.

மரவேலை, இரும்பு, பித்தளை வேலைகளை லாபமுடன் செய்தற்கான வழிகளைத் தெரிந்து கொள்ளாமையாலும், அவைகளை விர்த்தி செய்வதற்கான் மூலதனமின்மையாலும் நம்மனோர் தங்கள் பாரம்பரியத் தொழில்களைத் தொலைத்துவிட்டு தற்காலம் தங்கள் சிறுவர்களுக்குப் பொன்வேலையைப் போதித்து வருகின்றனர். இதனால், பொன்வேலையொழிந்த மற்ற சுஜாதி வேலைகள் க்ஷீணித்து வருகின்றன. சுஜாதியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் இங்கு ஒன்றுமேயில்லை. இதர ஜாதியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் பலவுள. இவர்கள் வழியைப் பின்பற்றியும், ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தியும், தற்காலம் நசித்துவரும் நமது தொழில்களை உயிர்ப்பிக்கும் அத்தியாவசியத்தை உணர்ந்தவர்களிங்கு இல்லை. பதிப்புத்தாம்பாள வேலைகளைக் கூடியவரையில் பிரபல்யமாகச்செய்துவரும் சுஜாதிக் கம்பெனிகள் பல விருக்கின்றன. ஆனால், அவைகளொன்றும் நவீன இயந்திரங்களின் ஒத்தாசைகொண்டும், தற்காலத் தொழின் முறைகளை அநுசரித்தும் நடத்தப்படவில்லை.

இன்னிசைக் கருவிகளைச் செய்வதில் இணையற்ற வேலைக்காரர்கள் இன்னும் இருந்து வருகின்றனர். வேலையின அருமைப்பாட்டிற்கு மட்டுமே இத்தொழில் இங்கு குறிப்பிடப்பட்டதேயன்றி, அதனால் அத்தொழில்வல்லோர்களடையும் ஊதியத்திற்காகவன்று. பொன்வேலைக்குரிய பொடிவெட்டி, சாமணம், குறடு, சுத்தி முதலிய ஆயுதங்கள் இங்கு சுருங்கிய அளவிற் செய்யப்படுகின்றன. இத்தொழிலை விஸ்தாரமாச் செய்வதற்கும், தற்கால முறைகளைத் தெரிந்து தாராளமாக உற்பத்திசெய்து தக்கலாபம் பெறுவதற்கும் போதுமான மூலதனம் சுஜாதியரிடத்



வரும் அன்னியரும் இல்லை. இக்காரணங்களால் இம்முக்கிய தொழிலும் நாளுக்குநாள் க்ஷீணித்துக் கொண்டே வருகின்றது.

சித்திரச் செதுக்கு வேலையிலும், தேர், விமான வாகனவேலைகளிலும் பிரபல்யம் பெற்றிருந்த குடும்பங்கள் பல இருந்து தற்காலம் நசித்துவிட்டன. எஞ்சிய ஓர் குடும்பத்தாரும் தற்காலம் அத்தொழில்களை நாடுவாரும், ஆதரிப்பாரும் இல்லாமையால் தந்தவேலை, ரப்பர் ஸ்டாம்புவேலை, எஃகு அச்சுவேலை முதலியவைகளில் பிரவேசித் திருக்கின்றனர். மேலே சொல்லியவற்றால் இந்நகரில் சுஜாதித் தொழிலபிவிர்த்தி அதிகமில்லையென்றும். நூதன தொழிலுணர்ச்சி கிடையாதென்றும், தொழில்களைச் சீர்திருத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை யென்றும், இக்காரணங்களால் பூர்வீகத் தொழில்கள் நசித்துக்கொண்டு வருகின்றனவென்றும் விசிதமாகும்.

## சுஜாதியரின் கல்வி நிலைமை.

சுஜாதிச் சிறுவர்களுக்கென தனிமையான பாடசாலைகள் இந்நகரில் இல்லை. ஆயினும், பல ஹைஸ்கூல்களும் காலேஜ் ஒன்றும் இங்குண்டு. இவைகளின் முழுப் பிரயோசனத்தையும் பெறுவதற்கு அக்கறையையும், போதிய வரும்படியையும் உடைய சுஜாதியர்களில்லை யென்பது இப் பாடசாலைகளில் வாசிக்கும் நம் சிறுவர்களின் தொகையிலிருந்தே ஊகித்தறியலாம். பிரைமரி பாடசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களைத்தாராளமாக மதிப்பிட்டால் அறுபதிற்குமேலில்லை. i பாரத்தில் இருவரும், ii பாரத்தில் மூவரும், iii பாரத்தில் இருவரும், iv பாரத்தில் ஒருவரும், v பாரத்தில் ஒருவரும், vi பாரத்தில் இருவரும் ஆகமொத்தம் சகெண்டரி படிப்பைப் பெறும் சிறுவர்களின் தொகை பதினொன்றே! உயர்தர வகுப்பில் வாசிப்பவர் ஒருவருமேயில்லை! இந்நகரிலுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மெடிகல் ஸ்கூலில் சப் அசிஸ்டெண்டு சர்ஜன் வகுப்பில் ஒரு சுஜாதிமாணவர் வாசித்து வருகின்றனர். சுஜாதிக் கைத்தொழில் கல்வியைப் போதிக்கும் பாடசாலைகளிங்கு இல்லை. தஞ்சை டிஸ்டிரிக்ட் போர்டாரால் ஏற்படுத்த எண்ணங் கொண்டிருக்கும் கைத்தொழில் பாடசாலையால் நமது சிறுவர்களுக்கு விரைவில் பூரண கைத்தொழில் ஞானம் ஏற்படக்கூடுமென நம்புகிறோம்.

## சுஜாதி வித்தியார்த்திகளும், சங்கங்களும்.

ஆங்கிலக்கல்வி முதிர்ச்சிபெற்று சென்னை சர்வகலா சங்கத்தாரால் பட்ட மளிக்கப்பெற்ற சுஜாதியர் ஒருவருமே இந்நகரில் இல்லை! பல உத்தியோகத் துறைகளி லிருந்துவருபவர்கள் அறுவரேயாம். சுஜாதிச் சங்கங்களும், சபைகளும் இங்குகிடையா. ஜாதீய ஒற்றுமையும் கட்டுப்பாடுகளும் இந்நகரில் அதிகமாகக் குறைந்து காட்டுகின்றது கட்சிப் பிரதிகட்சிகள் ஒழிந்தபாடில்லை. இந்த ஸ்திதியில் குலோத்தாரணப்பெருமுயற்சிகள் எங்ஙனம் கைவல்யமாகுமென சந்தேகம் ஒவ்வொருவருக்கும் உண்டாவது ஆச்சரியமாகமாட்டாது. இக்கான்பரன்ஸ் கூடுமுகத்தால் சுஜாதியரிடத்து ஒற்றுமையுணர்ச்சி உண்டாகி, நவீனமுறையில் சபைகளும், சங்கங்களும் ஸ்தாபனம் பெறுமென நாம் நம்புவது வீணாகாது. இந்நகரின் பலபாகத்தில் 'நாட்டாண்மை' யென்னும் பழைய ஜாதீய அதிகாரஸ்தானங்கள் பெயர் மாத்திரமாக விளங்கிவருகின்றன.

## ஆசார வியவகாரங்கள்

சுஜாதி வைதிக ஆசரணையிலும், வைதிகப் பற்றிலும் இந்நகர் அவ்வளவு சிலாக்கியம் பெற்றதல்ல. வைதிகக் கல்வித் தேர்ச்சியும், வான் முறைகளும் தெரிந்த சுஜாதிப் பௌரோகிதர்கள் அதிகமில்லை. சுஜாதியர்களே யன்றி விஜாதியர்களையும், பௌரோகிதர்களாகச் கொள்ளும் வழக்கம் இந்நகரில் உண்டு. தகனக் கிரியைகைக்கொண்டிருக்கும் சுஜாதியர்களின் தொகையைக் கைவிரலால் எண்ணிவிடலாம். 'ஆச்சார்ய' பட்டப்பெயரை வகிப்பவர்கள் அதிகமில்லை. சுஜாதியரில்பெரும்பான்மையோர் 'பத்தர்' என்றும், 'பக்தர்' என்றும் சொல்லிக் கொள்கின்றனர். அப்பட்டப் பெயர்களைக் கொண்டே அன்னியர்களால் அழைக்கப்படுகின்றனர். அக்கம்பக்கத்திலுள்ள கிராமவாசிகளான சுஜாதியார் 'பிள்ளை' என்றும் செட்டியென்றும் பலபல பட்டப் பெயர்களையும் வழங்கி வருகின்றனர். எக்ஞோபவீதத்தில் அவர்களுக்கு அவ்வளவு நாட்டமும், வைதிகக் கருமங்களில் அவ்வளவு பற்றும் கிடையாது. நமது ஜாதிக்குரிய சரியானபட்டப் பெயர்கள் சாஸ்திரோக்தமாய்த் தொகுக்கப்பட்டு இவ்வித கான்பரன்ஸ் முன்னிலையில் மஹாஜனங்களின் அங்கீகாரம் அடைந்து அமுலுக்கு வரும் வரையில், 'ஆச்சாரி' பட்டத்தை ஊன்றிப்பேச இந்நகர் வாசிகளுக்கு போதிய தைரியமுண்டாக மாட்டாது என அஞ்சுகிறேன்.

## நம் கவனத்திற் குரியவைகள்

நமது தேசமும், நம்மனோர்களும் வறுமையினின்று விடுபட வேண்டுமாயின், உண்மையான கைத்தொழி

லபிவிர்த்தியும், தொழில் ஞானமும் நம்மனோர் மிகுதியாகப் பெறவேண்டுமென்பது தற்கால ஸ்திதியிலிருந்து நாம் அறிந்த உண்மையாகும். நம்மனோர் மாட்டு கல்வியின்மையால் கைத்தொழிலைப் பிரகாசமாகச் செய்வதற்கும், அதற்குரிய மார்க்கங்களைத் தெரிந்து கொள்வதற்கும், நமது தொழிற்குறைபாடுகளை மற்ற நாட்டார்களின் தொழிலுன்னதத்துடன் ஒத்திட்டுப் பார்த்து சீர்திருத்துவதற்கும் கூடவில்லை.

உலகமே ஆவற்படுகிற சிறந்ததோர் கைத்தொழிலை ஜீவனோபாயமாகவும், உரிமையாகவும் கைக்கொண்டு நடத்து முறையும், ஆதரிப்பாருமின்றி அல்லல்படுகின்ற நம் ஜாதியார், யாதொரு கவர்ன்மெண்டு வித்தியா சகாயம் நமக்கென தனியாக ஏற்படாத இக்காலத்து ஒரே நாளில் கல்வி முதிர்ச்சியடைந்து, கைத்தொழில் திறமைபெறுவது கடினம். கல்வியபி விர்த்தியைக் கோரி நம்மாலியன்ற முயற்சிகளை நாமே தேடவேண்டுமேயன்றி அன்னியர் உதவியை மலைபோல் கருதியிருப்பது சரியல்லவெனத் தோன்றுகின்றது. நமது குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்வதில் தன் தலையில் தீப்பிடித்தவன் செயலையொத்து இனிநாம் நடக்க வேண்டும்.

நமது குல முன்னேற்றத்திற்குத் தடைகளாக முன்னிற்பவைக ளின்னின்னவைகளென நாம் சென்ற சில வருடங்களாக நன்றாய் உணர்ந்து வருகிறோம். அத்தடைகளில் கல்விக் குறைவுதான் எல்லாவற்றிலும் முற்பட்டு நிற்கின்றது. ஆகவே, இவ்விஷயம் நம்மால் பிரதமத்தில் கவனிக்கப்பட வேண்டியதாக விருக்கின்றது. கல்வி முதிர்ச்சியடையும் வரையில் கைத்தொழிலபிவிர்த்தியில் நாட்டம் காட்டாதிருப்போமாயின் அஃது அலையோய்ந்த பின் சமுத்ர ஸ்நானம் செய்யக் காத்திருந்தவர் செயலையொக்கும். அலையும் மோதிக்கொண்டிருக்க வேண்டும்; ஸ்நானஞ் செய்து முடிக்கவும்வேண்டும். கல்வியும் ஒரு புறத்தில் காலங்கருதி அப்பியசிக்க வேண்டும். கைத்தொழில் அபிவிர்த்தி முயற்சிகளும் ஒருபுறத்தில் நடந்தேறிக் கொண்டிருக்க வேண்டும். நம் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி ஒவ்வோர் ஊர்களிலும் போதிக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை இக்கான்பரன்ஸில் முன்னமே மேற்கொண்டிருந்தாலும், அவைகளை வெகு பரபரப்புடன் இயற்றுவதற்கு இக்குலத்துதித்த ஆண், பெண் இருபாலர்களும் தங்களால் இயன்றளவு ஒத்தாசைகள் புரிய வேண்டும்.

இந்நகரில் அன்னியர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறிவரும் தொழிற்சாலைகளே நமக்கு கைத்தொழில் ஞானத்தையும் தொழிலை விர்த்தி செய்யும் மார்க்கங்களையும் போதிக்கப்போதிய வழிகாட்டிகளாக விருக்கின்றன. மூலதனம் நீங்கலாக, இத் தொழிற்சாலைகள் எந்த ஜாதியாரின் ஒத்தாசையை மிகுதியாகப் பெறுகின்றன? அத்தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைகள் எச்சாதியரால் செய்யப்படுகின்றன? இவ்விரண்டு கேள்விகளை, இந்நகர்வாசிகளான நம்மனோராயினும்சரி, இதர ஜில்லாவாசிகளாயினும்சரி, தாங்களே அடிக்கடி கேட்டுக்கொண்டு வருவார்களாயின், நமது வம்ஸத்தினர் இரண்டொரு வருஷத்திற்குள் நம் கைத்தொழிலை மிக்க பிரபல்யமாகவும், கௌரவமாகவும் நடத்துவதில் தடையிராது. தொழில்ஞானம் நமது வம்சத்தாரின் சுபாவீகதர்மம், தொழில்களை யியற்றுமாற்றல் நம்முடன்பிறப்பு. இங்ஙனமிருந்தும் நமது கவனக்குறைவால் கனங்குறைகிறோம். சுஜாதித் தொழிற்சாலைகள் ஒவ்வோர் ஊரிலும் தீவிரமாய் ஏற்படுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கோள்ளவேண்டும்.

நெசவு ஐக்கிய சங்கங்களைப்போல், தொழில் ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்தி தங்கள் தங்கள் தொழில்களை விஸ்தாரமாகச் செய்யும் வழிகளைத் தேடவேண்டும். கவர்ன்மெண்டாரை இதுபோன்ற விஷயங்களில் ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வது நியாயமென்றாலும், முழுப்பொறுப்பையும் அவர்கள் மீது சுமத்திவிட்டு நாம் வாய்ஞானம் பேசுவது தர்மமாகமாட்டாது. நம்மாலியன்றதை செய்து முடித்துக் காட்டி இனி இதற்குமேல் கவர்ன்மெண்டார் ஒத்தாசையின்றி முடியாதென்று அவர்களுக்கு எடுத்துக் காட்டுவோமானால், அவர்கள் முழு கவனத்தையும் அனுதாபத்தையும் பெறலாம். கைத்தொழில் முன்னேற்றமடைந்து, உன்னதம்பெற்ற நாடுகளெல்லாம் தத்தம் கவர்ன்மெண்டார் ஒத்தாசைகளைப் பெற்றிருப்பது சரித்திர பூர்வமாக உண்மையா யிருந்தாலும், பிரதம முயற்சிகள் ஜனங்களாலேயே துவக்கப்பட்டனவென்பதற்கு அத்தாட்சிகள் பலவுள. ஆகையால், நாம் விரைவில், பரஸ்பர நம்பிக்கையும், ஒற்றுமையும் அடைந்து தொழில் ஐக்கிய சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும்.

நம் கைத்தொழில்களைச் சீர்படுத்துவதற்கென ஏற்படும் இத்தொழிற் சாலைகளைக் கண்காணிப்பதற்கென மேற்றிசை நிபுணர்களை பிரமத்தில் அமர்த்தவேண்டிய



அவசியமில்லை. தொழில் வளர்ச்சிக்கேற்ப நமது முயற்சிகளைக் காலக்கிரமமறிந்து கூட்டவும், குறைக்கவும் கூடும். ஜப்பான் தேசத்திற்குச்சென்று தற்காலம் நெசவுத் தொழிலையும், அதை யொட்டிய மற்ற தொழில்களையும் அப்பியசித்து வரும் எமது சகோதரர் மிஸ்டர் T. A. இராமஸ்வாமி ஆச்சாரியாரால் நமது குலத்திற்கு பலவித நன்மைகள் விளையக்கூடுமென எமது நண்பர்கள் பலரும் கருதுகிறார்கள். அவரை இன்னும் கொஞ்சகாலம் அங்கு தாமதிக்கச்செய்து கெடியாரவேலையை அப்பியசித்துவரச் செய்யவேண்டுமென்பது எமது கோரிக்கை. இவர் நம்குல முன்னேற்ற விஷயத்திலும், கைத்தொழி லபிவிர்த்தியிலும் அதிக நாட்டமும், பற்றும் உடையவராய் இருப்பதால், இவர் சுகமே தமது ஜென்மதேசம் திரும்பியபின் நமது தொழின் முறைகளில் மிக்க கவனம் செலுத்துவா ரென்பது திண்ணம். அவர் இங்கு திரும்பி வருவதற்குமுன் இத்தென் இந்தியாவில் பல சுஜாதித் தொழிற்சாலைகள் ஐக்கிய சங்கங்கள் மூலமாக ஏற்பட்டு தங்கள் கைத்தொழிலை செவ்வனே நடத்தி வருவார்களாயின், அதற்கு மற்பட்ட தொழில் இரகசியங்களையும் இன்னும் ஜப்பானியரால் கையாடப்பட்டுவரும் வியாபாரத் தந்திரங்களையும் இவரால் சுலபத்தில் போதிக்கப்படுவதற்கு நம்மனோர் பாத்திரவான்களாவார்கள். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்".

ஜாதிப்பித்தை அவசியம் கடந்து மென்மேல் பெருகச்செய்து கொள்வதால் சர்வஜன சகோதரத்துவத்திற்கு பங்கமுண்டாகுமென்பது எமது அபிப்பிராயம். இதனால் நம்மனோர் அவசியம் கைக்கொள்ளவேண்டிய வைதிகக் கருமங்களைக் கைவிடவேண்டுமென்பது எமது கருத்தன்று. அளவிற்குமிஞ்சினால் அமிர்தமும் விஷமன்றோ? வைதிகப்பற்றும் அவ்வாறேயாம். நமது சகோதர ஜாதியார்களுடன் நாமும், நமது ஸ்திரீகளும் எவ்வளவு நட்பு பாராட்டி ஊடாடிப்பழகுகிறோமோ அவ்வளவிற்கவ்வளவு நமது வழக்க வொழுக்கங்களும், குடும்பச் செட்டும் சிக்கனமும் சீர்படுமென்பது ஒருதலை. பிறரை நாம் நேசியாவிடில், நம்மை பிறர் நேசிக்க விரும்புவது ஞாயமாகுமா? நிற்க,

நமது ஸ்திரீகளை வீட்டுவேலை செய்யும் அடிமைகளென மதித்து உள்வீட்டில் அடைத்துவைக்கும் வழக்கத்தை முற்றிலும் களையவேண்டும். ஆண்பாலாகிய ஒரு சாரார் திருந்துவதினால் மட்டுமே குலோத்தாரணம் கைகூட மாட்டாது. வாழையடி வாழையெனத் தோன்றும் நம் சிறுவர்கட்கு கல்வியும், உலகானுபவமும் பெற்ற தாய்கள் எத்தனையோ உபகாரங்களை நமது உதவியை எதிர்பாராமலே இயற்று மாற்றலுடையவர்களாவார்கள். நாமும் நமது தொழின் முயற்சிகளிலும், மற்ற லௌகிகங்களிலும், நமது முழு கவனத்தையும் செலுத்தக்கூடும். ஒருவருடைய சகவாசப் பழக்கத்தால் அவருடைய குணதோஷங்கள் மாறுபாடடைகின்றதென்பது உண்மையாதலால், கல்வியறிவும், உலகானுபவமுமற்ற மனைவிகளுடன் இல்லறம் நடத்துவது எவ்வளவு அனர்த்தங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கின்றதென் பதை குலாபிமானிகள் சிந்திக்க வேண்டுகிறேன். ஆகையினால், நமது குலஸ்திரீகளுக்கு நாளையே கல்வி பயிற்றுவிக்க முடியாவிட்டாலும், இக்கான்பரன்ஸ் போன்ற மஹாசபைகளுக்கு அழைத்துச்செல்வதினால் குலோத்தாரணம் விரைவிற் கைகூடுமென எண்ணுகிறேன்.

## முடிபுரை

நான் இதுகாறும் தங்கள் விலையேறப் பெற்றகாலத்தையும், கவனத்தையும் அதிகமாக எம்வசப்படுத்தியதற்கு தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். நம் சுஜாதியாரின் அதிர்ஷ்ட வசத்தால் இக்கான்பரன்ஸுக்கு பிரசிடெண்டாக ஓர் சிறந்த கனவானைப் பெற்றிருக்கின்றோம். அவர் சுஜாதிப் பற்று மட்டுமேயன்றி சர்வஜன சகோதரத்வத்திலும் அதிக நாட்டமுடையவர். உயர்தரப் படிப்பும், உத்தியோக அந்தஸ்தும், செல்வாக்கும் ஒருங்கே உடையவர். அந்நிய ஜாதியர்களுடன் ஊடாடிப் பழகி அவர்கள் சபைகளிலும், சங்கங்களிலும் உத்தியோக பதவிகளைப் பெற்றவர். வாக்குவல்லமை யுடையவர். தற்கால நாகரீகத்தை யொட்டி நமது சுஜாதியர்க்கு புத்திபுகட்டக் கூடியவர். அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும் இக்கான்பரன்ஸின் நடவடிக்கைகள் இனிது முற்றுப்பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால், பிரசிடெண்டு ஸ்தானத்தை மகிழ்ந்தேற்று இங்கு விஜயமாகியிருக்கும் ஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் B. A. அவர்களுக்கு எமது வந்தனங்களைச் சேர்ப்பிக்கின்றேன். அக்கனவானை இம்மஹா சபையார் பிரசிடெண்டாக அங்கீகரித்த மேல் நடைபெறவேண்டிய கான்பரன்ஸ் காரியங்களைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டுகிறேன். எமது கல்வியின் அளவு, வயது, அநுபவம் முதலியவற்

# அக்கிராஸனபதியின் ஆரம்ப உபந்நியாஸம்

## முன்னுரை

**சகோதரர்களுக்கு விஞ்ஞாபனம்:—**

1. இன்று நாம் எல்லோரும் இங்கே கூடிப் பேசி நிறைவேற்ற எண்ணங்கொண்டிருக்கும் அரிய பெரிய காரியங்கள் அனைத்தும் கைகூடும்பொருட்டு நாம் அனைவரும் எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்தவேண்டுவது நமது முதற் கடமையாகும். அவன் அருள்கொண்டே நாம் எந்தக் காரியமும் தொடங்கவேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால் நாம் எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பி அக் கடவுளைப்பாடி நமது காரியங்களைத் தொடங்குவோமாக.

இக்கான்பொன்ஸானது நம்மவர் பொதுநோக்கங் கொண்டு இரண்டாவது முறை கூடும் கூட்டமாகும். இக்கூட்டத்தின் நோக்கங்களெல்லாம் நமது ஜாதியாரின் பொதுநன்மையையும் அபிவ்ருத்தியையும் குறித்தவை. நம்மவர்கள் முன்னிருந்த உயர்பதவியை நினைத்து மகிழ்வதுடன் இப்போது நமக்கு நேர்ந்திருக்கும் தாழ்ந்த நிலையை நினைத்து இரங்கி, இனி நாம் முன்னுக்குவந்து முன்போலவே சிறப்படைந்து வாழவேண்டும். இதற்கான முயற்சிகளெல்லாம் நாம் தனித்தனி ஆங்காங்கே செய்துகொள்வதால் மாத்திரமே நம்முடைய எண்ணங்கள் முற்றுப பெறுவனவல்ல. இது போன்ற பெரிய கூட்டங்கள் அவ்வப்போது கூடித் தீர்மானித்து ஏற்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இப்போது அறிஞர் பலரும் இங்குவந்து வீற்றிருக்கிறீர்கள். இந்தப் பெரிய கான்பரென்ஸின் அக்கிராசனம்வகித்து அதனைச் செவ்வனே நடத்துவதற்கு உரியவர் என்னினும் சிறந்தோர் பலர் இருக்க, எனக்கு

---

றைக் கருதாமலே இவ்வுத்தியோகத்தை யளித்த கான்பரன்ஸ் கமிட்டியார் பால் பொதுப்பட நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருந்தாலும் நமது குலாபிமானப் பெருந்தகையரும் கான்பரன்ஸ் செண்டரல் கமிட்டியின் பிரசிடெண்டுமாகிய ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்களுக்கு பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றேன்.

T. A. சுப்பிரமண்யாச்சாரி
உபசரணைக் கமிட்டிச் சேர்மன்.

இந்தக் கௌரவத்தைக் கொடுத்ததற்காக நான் உங்களுக்கு எனது நன்றியையும் வந்தனத்தையும் செலுத்துகிறேன். நீங்கள் எல்லோரும் ஒருமித்து அன்புகொண்டு அமைந்திருந்து கான்பரென்ஸின் காரியங்களைச் சரிவர நடத்தும்படி பிரார்த்திக்கிறேன்.

## நமது மரபு

நண்பர்களே! நமது மரபு மிகப் பழமையானது; ஆதிகாலந் தொடங்கிக் கௌரவமும் பெருமையையும் பொருந்தியது. சிருஷ்டி காலத்திலேயே அது முதன்மை பெற்று விளங்கிற்று என்று வேதபுராணங்கள் கூறுகின்றன. இதை நினைக்கும்போது நமக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாகின்றது. ஆனால் நாம் அந்தச் சந்தோஷத்தோடு திருப்தியடைந்து அதையே பன்னிப் பன்னிப் பாடிக் கொண்டிருப்பதால் பயனில்லை. அவ்வித உயர்நிலையை நாம் மறுபடியும் எப்போது அடைவோம், எவ்வாறு அடைவோம் என்னும் ஆர்வத்தோடு ஒற்றுமைப்பட்டு, ஏற்ற முயற்சிகளை நாடி, தளராத ஊக்கத்தோடு உழைக்கவேண்டும்.

## ராஜ விசுவாசம்

2. பொது நோக்கங்கொண்டு உழைக்கும் இவ்வரிய காரியத்தில் பெரிய சாதகம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சாதகத்தை நாம் நன்குகக் கவனிப்போமானால், நம் முயற்சிகள் எல்லாம் சித்திபெறும் என்னும் உறுதி நமக்கு எளிதில் உண்டாகும். நமது ஜாதியார் ஆதியில் உயர்நிலைபெற்றிருந்தனரென்றும் அதி இடையில் சீர்குலைந்து ஒழுக்கம் குன்றித் தாழ்மையடைந்ததென்றும் முன்பே கூறினேன். அப்படிப்பட்ட தாழ்வுக்குக் காரணங்கள பல உண்டு. அவற்றுள் முக்கியமான காரணம் அடிக்கடி ராஜாங்கம் மாறுதலடைந்து நாடு முழுதும் நசித்து வந்ததென்பதை சரித்திர ஆசிரியர் நன்கு உணர்வார்கள். இப்போது அப்படிப்பட்ட பரிதாப நிலை அறவே மாறிவிட்டது. நாம் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் ஆகின்றன. இவ்வரசாட்சியின் கீழ் நமது நாடு அனேக நன்மைகளைப் பெற்று அபிவிருத்தி யடைந்திருக்கின்றது. 'நாம்' 'நமது' என்னும் சுவேச்சையான எண்ணம் மீண்டும் நம்மனத்தில் இக்காலத்தே உண்டாயின.

கல்வி ஓங்கி, நல்விவேகம் நாளுக்கு நாள் எங்கும் பரவுவதாயிற்று. எங்கெங்கும் பாடசாலைகள் பரவின. படிப்பென்னும் பெருஞ் செல்வம் பலர்க்கும் சாதகமாயிற்று.



மிகச் சிறிய கிராமங்களிலும் நமது சிறுவர் கண்ணெனப்படும் எண்ணும் எழுத்தும் கற்றுவருகிறார்கள். வைத்தியம் முதலிய பற்பல சாஸ்திரங்கள் நாடெங்கும் பரவி நாட்டிற்கு நன்மைபயக்கின்றன. நாடு நகரங்கள் அனைத்தும் சுத்தமடைந்து ஒளியுற்று விளங்குகின்றன. மிகப்பெரியகண்டம்போல் பரந்துவிளங்கும் நமது இந்தியநாட்டில் ஒற்றுமைவளர்ந்து, அன்புபெருகி பற்பல ஜாதியாரும் பல்வேறு மதத்தினரும் அன்புகொண்டு உறவாடுகின்றனர். ராஜ்ய பரிபாலனத்தில் நமக்கு ஆதிக்கம் உண்டாகி, நமது நன்மைக்கேற்ற பொது விஷயங்களை நாமே தீர்மானித்துக்கொள்ளும் சுவேச்சையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

இவ்வளவு அனுகூலங்களையும் நாம் சீரும் சிறப்பும் பெற்ற ஆங்கில அரசாட்சியில் அடைந்துள்ளோம் என்னும் எண்ணத்தை ஒருபோதும் மறக்கவொண்ணாது. இவ்வரசாட்சியில் மற்றொரு விசேஷமும் நமக்குண்டு. அதாவது நமது நாட்டில் எவ்வெவ் வகுப்பினர் தம் தாழ்வு நிலைமையை யுணர்ந்து முற்பட முயல்கிறார்களோ அவ்வவ் வகுப்பினருக்கு ஏற்ற உதவியைக் களிப்புடன் நமது ராஜாங்கத்தார் செய்ய முன்வருகிறார்கள். அப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆகையால் நாம் உண்மையாக ஊக்கங்கொண்டு நமது பொது நன்மைக்காக உழைக்கும் பக்ஷத்தில் அவ்வுழைப்பு முன்னுக்கு வருவதற்கான சகாயங்களை நமது ராஜாங்கத்தினிடம் நாம் உறுதியாகப் பெறலாம்.

இவ்வளவு நன்மைகளையும் நமது ராஜாங்கத்தார் நமக்குச் செய்துகொண்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் நமது மதாபிமானம், மதக்கொள்கை, ஆசாரங்கள் முதலிய விஷயங்களில் அவர்கள் சிறிதும் பிரவேசிப்பதில்லை. அவரவர் மதமும் அவ்வவர் மானமும் இனிதமைந்திருக்கின்றன.

நமது நாட்டிற்கோர் ரக்ஷகமாக ஏற்பட்டிருக்கும் ராஜாங்கத்தவர் இப்போது ஐரோப்பாவில் நடக்கும் பெரும் போரில் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது மன்னர் யாதொரு சுயநலத்தையும் நாடி இப்போர்க்கு முன் வரவில்லை. யுத்தத்திற்கு முன்னாள் வரையில் இந்த யுத்தத்தில் பிரவேசிக்கவேண்டும் என்னும் எண்ணமே நமது அரசர்மனதில் உண்டாகவில்லை. இந்த யுத்தம் நடவாமலிருக்கும்பொருட்டு நம்மரசர் எவ்வளவோ முயன்றார். முயன்றும் பயன்படா தொழிந்தது. சிறிய நாடாகிய பெல்ஜியம் என்னும் ராஜ்யத்திற்கு நமது அரசர் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டும், அந்நாடு அநியாயமாய்ப் பகைவர் வசப்பட்டு அழியாதிருக்கும் பொருட்டுமே இந்த யுத்தத்தில் நம்மரசரும் கைகலக்க நேர்ந்தது. சத்தியமே ஜயம் என்பது உண்மையாயின் இந்த யுத்தத்தில் நம்மரசர் ஜயம்பெறுவர் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. இப்போது பகைவர் எவ்வளவோ பலங்கொண்டு முயன்றும் நாளுக்கு நாள் நம்மவர் பலம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இறைவன் நம்மரசனுக்கு வெற்றியைத் தந்து, அவரது புகழை நிலைநிறுத்துவாராக.

## நமது மரபினரின் கல்விக் குறைவு

3. நிற்க, நம் மரபினரின் தற்கால நிலையை உன்னும்போது, கல்வியில் நம்மவர்க்கு ஏற்பட்டிருக்கும் குறைவே மிகப் பெரிதாகத் தோன்றுகின்றது. இந்த ராஜதானியில் நமது மரபில் சமார் மூன்று லக்ஷம் ஆண்மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 16-பேர்களே பரீக்ஷைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். நண்பர்களே! இதைக்காட்டிலும் பெருங்குறை ஒன்று இருக்கவுங் கூடுமோ! கல்வியே கருந்தனம் என்னும் மூதுரையை அறியாதார் யார்? இது நிற்க, வித்தியாபிவிருத்தியே எவ்வித அபிவிருத்திக்கும் முதற்காரணமாகும். காலத்துக் கேற்றவாறு சீர்திருத்த மடைந்து நாம் பெருமையும் புகழும் உயர்நிலை உத்தியோகமும் அடையவேண்டுமானால், கல்விப்பெருக்கே அதற்கு முக்கியமான ஆதாரமாகும். அதுதானும் இருவகைப்படும். முதலாவது பால்யவித்தை. நம்மரபிலுதித்த சிறுவர்கள் சிறுமிகள் ஆகிய இருபாலரும் எழுதப்படிக்கவாவது தெரிந்துகொள்வது எல்லாச் சீர்திருத்தத்துக்கும் ஆதாரமாகும். கட்டாய எலிமென்டெரிப் பாடசாலைகள் ஏற்படுத்தும் நல்லெண்ணம்கொண்டு காலஞ்சென்ற கோக்கேல் முதலிய புண்ணியசீலர்கள் பெருமுயற்சி கொண்டனர். துரைத்தனத்தாரும் அதற்கிணங்கியே இருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய ஆதரவுகள் கிடைத்தவுடன் துரைத்தனத்தார் இப்பெரிய நன்கொடையை நமது நாட்டுக்கு அளிக்க உறுதிகொண்டிருக்கிறார்கள். அதற்குள் பற்பல வகுப்பாரும் அவரவர்களுக்குள் இதற்கு அனுகூலமான முயற்சிகளைத் தேடி பால்யவித்தியாபிவிருத்தி உண்டாக நாடவேண்டும் அதிலும் நமது வகுப்பினர் மற்ற வகுப்பினரைக் காட்

டிலும் அதிக தாழ்ந்த நிலையில் இருப்பதால் இவ்விஷயத்தில் நாமே பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றோம்.

இரண்டாவது நம் சிறுவர்களுக்கு உயர்தரக் கல்வி சித்திக்கச் செய்யவேண்டும். மேற்சொல்லியபடி நம்மவரிலுள்ள ஆண்மக்கள் மூன்று லக்ஷத்தில் 16 பேர்களே பரீக்ஷைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்றால், இன்னும் என்ன சொல்லவேண்டும்! இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து, இதற்கு ஏற்ற பரிகாரத்தை உடனே தேடவேண்டுவது மிகவும் அவசியமாகும்.

ஆகையால் வித்தியாபிவிருத்தி விஷயமாக தகுந்த முயற்சிகளைத் தேடிக்கொள்ளும் பொருட்டு இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் பிரதிநிதிகள் நியமித்து அவர்களெல்லோரும் ஓரிடத்தில் சேர்ந்து 'விசுவகர்ம வித்தியாபிவிருத்தி சங்கம்' என்னும் பெயருடன் உழைக்கும்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இச்சங்கம் செய்யவேண்டிய காரியங்களாவன:-

(1) ஏற்ற மாணாக்கர்களைத்தேடி அவர்களுக்கு உயர்தரக் கல்வியும், பட்டப் பரீக்ஷைக் கல்வியும் சித்திபெறச் செய்வது.

(2) அதற்காகப் பொருளுதவி வேண்டியிருப்பதால் நம் மரபிலுள்ள செல்வர்களையும், நமது நோக்கங்களில் அன்பு கொண்டுள்ள இதர மரபுகளைச் சேர்ந்த செல்வர்களையும் அடுத்து அவர்களிடம் பொருளுதவியும் ஏனைய ஆதரவுகளும் பெறுதல்.

(3) நமது குலச் சிறுவர்களும் சிறுமிகளும் பால்ய வித்தை மாத்திரமாவது அடையும்படி நம் மரபினரைத் தூண்டுதல்.

(4) நம் குலத்து ஏழைப் பிள்ளைகள் பால்ய வித்தை பெறுவதற்கான சகாயங்களைச் செய்யும்படி துரைத்தனத்தாரைக் கேட்டுக் கொள்ளுதல்.

## தொழிற் கல்வி

4. கல்வி விஷயமாகப் பேசும்போது அதை ஒட்டினாற்போல் நம் மனத்தில் உதிக்கும் எண்ணம் ஜீவனோபாயமாம். அதுதானும் நம் மரபினர்க்கே சிறப்பாய்த் தொன்று தொட்டு ஏற்பட்டுள்ளது. இக்காலத்தில் எந்நாட்டிலும் சிறப்பித்துக் கூறப்படும் கைத்தொழிலே நமக்கு குலாசார தர்மமாக ஏற்பட்ட ஜீவனோபாயம். உலோகங்களில் அரிய சித்திர வேலைகள் செய்யும் ஆற்றல் நம்மவர்க்கு ஆதிமுதல் அமைந்திருக்கிறது. நம்மவர்கள் அதைக் கைவிட்டது நமக்குப் பெருங் குறையாகும். நமது கைத்தொழில் கேவலம் சீர்குலைந்து பாராட்டுவாரின்றிச் சிதைந்து கிடக்கின்றது. அதை நாம் முன்னுக்குக் கொண்டுவந்து முன்போலவே சீர்பெறச் செய்யவேண்டும். பண்டைக்காலத்தில் நம்மவர் செய்துள்ள சிறந்தவேலைகளை நாளதுவரையில் கண்டுகளியாத ஜாதியார் உலகத்தில் ஒருவரும் இல்லை. இவ்விஷயத்தில் நாம் பண்டைக் காலத்திய உச்ச நிலையை அடைய முயல்வது நமது முதற் காரியம். இப்போது ஐரோப்பாவில் நடக்கும் பெரியயுத்தத்தின் காரணமாக, நம் நாட்டு கைத்தொழில்கள் விருத்தியடையும்பொருட்டு நமது துரைத்தனத்தார் வேண்டிய ஊக்கங்கொடுத்து உதவிசெய்ய முன் வருகிறார்கள். இதுவே நமது கைத்தொழில் விருத்திக்கு ஏற்ற சமயமாகும். இச்சமயத்தில் நாம் பெருமுயற்சிகள் செய்து துரைத்தனத்தாரின் ஆதரவுபெற்று, நமது கைத்தொழில் வித்தைகளை நூதன வழிகளில் விருத்தி செய்துகொள்ள முயலவேண்டும்.

இதுவிஷயமாக நாம், செய்யவேண்டிய காரியங்கள் முக்கியமாக இரண்டு—முதலாவது கைத்தொழிற்பாடசாலை ஒன்று இவ்விராஜதானியில் ஏற்படுத்தி, அதில் நம் குலப் பிள்ளைகள் கற்பதற்கான அனுகூலங்களைச் செய்யும்படி நாம் துரைத்தனத்தாரை வேண்டிக் கொள்ள வேண்டும். இரண்டாவது நம் குலத்தில் படித்துத்தேறிய மாணாக்கர்களுக்குப் பொருள் உதவி செய்து அந்நிய தேசங்களுக்கு அனுப்பி உலோகக் கைத்தொழில் வேலைகளிலும் சித்திரவேலைகளிலும் தேர்ச்சி பெறச் செய்யவேண்டும்.

## நமக்குள் ஒற்றுமை

5. நமது வகுப்பினர் சகல விஷயங்களிலும் சிறப்படைந்து விளங்க வேண்டுமானால், அதற்கு இன்றியமையாததான சிறந்த குணம் ஒன்று நம்மிடம் பொருந்தி இருக்கவேண்டும். அதாவது ஒற்றுமை அல்லது ஐக்கிய பாவமாகும். இந்தக் குணம் ஒன்று இருந்தாலன்றி எவ்விதப் பொதுநன்மையும் கைகூடாது. பொது விஷயமாக எந்த முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், நம்மவர் எல்லோரும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்து நமது நோக்கங்களை முற்றுபெறச் செய்யவேண்டும். ஒற்றுமை ஒன்று மாத்திரம் நம்மிடம் ஏற்படுமாயின் எப்படிப்பட்ட இடையூறுகளையும் எளிதில் நாம் புறங்காணலாம். நம்மவரில் பற்பல வகையினர் இருக்கலாம். கடையுடை பாவனைகள் நமது தேசாசாரத்திற்கு ஏற்றபடி மாறுபடக்கூடும். பாஷையும் ஒழுக்கமும் கூட அவ்வாறே மாறுபடக்கூடும். பொது விஷயங்களில் உழைக்கும்போது நாம் இந்த வித்தியாசங்களை முற்றிலும் மறந்து, ஒரு தாய் வயற்றில்பிறந்த சகோதரர் போல் ஒற்றுமைகொண்டு அன்பு பாராட்ட வேண்டுவது அவசியமாகும்.

இன்றியமையாததான இவ்வரியகுணம் நம்மில் பொருந்துவதற்கு இதுபோன்ற கூட்டங்கள் மிகவும் சாதகமானவை. வருஷப் பிரதிவருஷம் நாம் இதுபோலவே வெவ்வேறு முக்கியமான ஸ்தலங்களில் கூட வேண்டும். கூடி நம்நிலைமையை ஆராயவேண்டும். ஆராய்ந்து ஏற்ற முயற்சிகளைத் தேடவேண்டும். தேடி அம்முயற்சிகளை மேற்கொண்டு ஊக்கத்தோடும் ஒற்றுமையோடும் உழைக்கவேண்டும். இதுபோன்ற கூட்டங்களில் நாம் செய்துகொள்ளும் சங்கல்பங்களை உறுதியாகக் கைக்கொள்ளவேண்டும் ஒற்றுமை என்னும் விஷயமாகப் பேசும்பொழுது ஒரு விஷயம் என் நினைவுக்கு வருகின்றது. அதாவது, இப்போது நம்மவரின் பொதுநன்மையை நோக்கி இந்த ராஜதானியில் இரண்டு மாதப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இப்போது நம்மவர்க்குள்ள நிலைமையில் இரண்டு பத்திரிகைகள் இருப்பது அனாவசியம் என்று தோன்றுகிறது. அப்படி இருப்பதால் அபிப்பிராய பேதங்களும் பலவகைப்பட்ட விரோதங்களும் தோன்றும். இவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து ஒரு கமிட்டியின் பார்வையின்கீழ் நடத்துவதே நலம். அந்தக் கமிட்டியானது கான்பரென்ஸில் நியமிக்கப்பட்டு கான்பரென்ஸுக்கு அடங்கி நடத்தப்படவேண்டுமென்பது எனது கொள்கை.

## சிக்கனமும் யோக்கியதையும்

6. நம்மவரை நான் வேண்டிக்கொள்வது மற்றொன்றுண்டு. அதாவது: சிக்கனமாக வசித்தல். நம்மரபினர் ஒவ்வொரு குடும்பத்தவரும் வரவுக்கேற்ற செலவு செய்து கௌரவத்தோடு வாழவேண்டும் எட்டாத சுகத்தை எவரும் தேடலாகாது. விசேஷகாலங்களில் நம்மவர் ஏராளமாகப் பணச்செலவு செய்கிறார்கள் அதைக்கூடியமட்டும் குறைக்கவேண்டும். சாஸ்திரோக்தமாகச் செய்யவேண்டியதை வேண்டாமென்று நான் மறுக்கவில்லை. அதனால்மாத்திரமே அதிகபணம் செலவாகிறதில்லை, அநேக வழிகளில் அனாவசியமாகப் பணச்செலவு செய்கிறார்கள். அதையெல்லாம் குறைக்க வேண்டும். இதுவிஷயமாக நான் நம்மரபினரை ஒன்று கேட்டுக்கொள்ளத் துணிவுகொள்ளுகின்றேன். அதாவது நம்மவர்கள் ஐந்துநாள் கலியாணத்தை மூன்று நாள் கலியாணமாக முடித்துக்கொள்வது கூடுமோ என்று நீங்கள் எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டும். இதுபோலவே மற்றவற்றையும் தேர்ந்து ஆடம்பரமின்றிச் சுருக்கிக் கொள்ளவேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

7. நான் சொல்ல எண்ணிய விஷயம் மற்றொன்று உண்டு. முதலாவது, எக்காரியத்திலும் யாவரிடத்திலும் நாம் சத்தியமாக நடந்துகொள்ள வேண்டும். தொழில் முறையில் பிறருடன் பழகும்போது நாம் நியாயமாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ளவேண்டும். பேராசைக்கும் மோசத்துக்கும் இடம் கொடுக்கலாகாது. இவ்வகையில் நம்மரபினருக்கு நேர்ந்துள்ள அபவாதத்தை நீக்கிக்கொள்ள முயல வேண்டும். அதனால் நம்மைநாமே குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நான்சொல்லவில்லை. நமக்கு உரியது கிடைத்தால் போதுமென்று அமைந்திருக்கவேண்டும் என்பது என் கருத்து.

## மற்ற வகுப்பினரோடு குலவிவாழ்தல்.

8. கடைசியாக நான் உங்களுக்குச் சொல்வதொன்றுண்டு. அதாவது நாம் மற்ற ஜாதியாரோடு கலந்து அன்பாக நடந்துகொள்ளவேண்டும், ஒருவரையொருவர் வெறுத்தல் ஏற்றதன்று. 'பெருமையும் சிறுமையும், தான் தரவருமே' என்னும் மூதுரையை நம் மனதில் உறுதியாகக் கொள்ளவேண்டும். 'நான் உயர்ந்தவன்' 'நீ தாழ்ந்தவன்' என்னும் விவாதம் அறவே ஒழிய வேண்டும். இதனால் ஒருவன் நம்மை நிந்தித்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லை.

ஒருவன் நம்மை குறைகூறினால் அதை சிறிதளவும் பொறுக்கலாகாது. ஆனால் அக்குறையைத் தீர்க்கும் விஷயத்தில் நமது கௌரவத்துக்கும் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு நடந்து கொள்ளவேண்டும்.

## முடிவுரை.

இவ்வளவே நான் இந்தச்சமயம் சொல்ல நினைத்தது. அதாவது: நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டு பொது நன்மையை நாடி என்றும் தளராத ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். பொதுவாய் நோக்குமிடத்து நமது

கான்பரென்ஸின் நோக்கங்கள் வித்தியாபிவிருத்தி, கைத்தொழில் விருத்தி என்னும் இரண்டு விஷயங்களைக் குறித்ததாக இருக்கவேண்டும். நம்மினத்தவர் எல்லாம் ஒருமித்து சகோதரபாவம் கொண்டு நடக்கவேண்டும். நமக்குள் தோன்றக்கூடிய அற்ப வித்தியாசங்களைப் பாராட்டலாகாது. பொது நன்மை கருதி எந்தக் காரியத்தையும் நடத்தவேண்டும். வீண் செலவு, ஆடம்பரம், அளவுகடந்த செலவு முதலிய குற்றங்களை அறவே ஒழிக்கவேண்டும். நம்மினத்தவரின் அபிவிருத்தியை முன்னிட்டு உழைக்கவேண்டும். அந்தக் காரணத்தால் மற்ற இனத்தாரோடும் முரண்படலாகாது. அவ்வாறு நம் நாட்டிலுள்ள பல மரபினர் ஒருவருக்கொருவர் முரண்படுவது தீமையே விளைக்கும். நம் நாட்டுப் பொது நன்மையே நமக்கு முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டும். அந்தந்த மரபினர் அவரவர்களுக்குள் ஒத்து உழைத்து அபிவிருத்தி அடைவாரானுல் அதுவே நாட்டின் பொது நன்மைக்கும் அபிவிருத்திக்கும் ஆதாரமாகும்.

இந்த நோக்கங்களை நமது வருஷாந்த கான்பரென்சுகளின் பொது நோக்கங்களாகக்கொண்டு, அவற்றிற்கேற்ப அவ்வப்போது வேண்டிய முயற்சிகளைக்கொண்டு உழைப்போமானுல், நம்மரபினர் நன்னிலை அடைந்து சீர்பெறுவார் என்பது திண்ணம். அவ்வாறு நமது முயற்சிகள் சித்திபெறவும் நம்மைக் கருணையுடன் ஆண்டுரக்ஷிக்கும் ஆங்கில துரைத்தனம் நீடித்து ஓங்கவும் நம்மரசர் இந்நாளில் உண்டான பெரும்போரில் வெற்றிபெற்று விளங்கவும் நம் நாடு நாளுக்குநாள் செழித்து ஓங்கி உலகத்துக்கோர் திலகமெனத் துலங்கவும் எல்லாம்வல்ல கடவுள் அருள்புரிவாராக.

N. துரைவேலு ஆச்சாரி.

---

பொய்ம்மையே பாவமெல்லாம் விளைதரு பூமியாகும்
பொய்ம்மையே பிரவியெல்லாம் புகப்புரிவித்துமாகும்
பொய்ம்மையே வறுமையெல்லாம் போதரப் புரிவதாகும்
பொய்ம்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தாநிற்கும்.

தருமமே உலகம்போற்ற சகலகாரணமதாகும்
தருமமே அழியாதென்றுந் தாபரமாகிநிற்கும் [கும்
தருமமே தனைவேட்டோர்க்குச் சவுக்கிய மனைத்துநல்
தருமமே முத்திசேருஞ் சாதனமென்றுட்கொள்வான்.

—காசிரகசியம்.

## மனிதர்களில் ஏற்றத் தாழ்ச்சி எப்படி?

ஸ்ரீ N. வேங்கிடரமணன், வடகம்பாளையம்

ஒருவிதமாய்ப் பார்த்தால், இம் மாநிலத்துமானிடர் அனைவரும் ஒரு தன்மையானவர்களேயாம். ஏனெனில், உயிர்வாழ்க்கை, சுதந்தரம், தருமம், நியாயம், அவரவர் பொருளை அவரவர் அனுபவித்தல், அரசனுடைய ஸம்ரக்ஷணைக்கு ஆளாகயிருத்தல் ஆகிய இவைகட்கு யாவரும் பாத்தியஸ்தர்களேயாம். ஆயினும், மனிதரெல்லாரும் ஏற்றத் தாழ்ச்சி உடையவராகவே இருக்கின்றனர். எவ்வாறெனின், இயற்கையிலேயே அவர்கள் வெவ்வேறளவான குணங்களும் யோக்கியதைகளும் உள்ளவராகப் பிறக்கிறார்கள். சிலர் வலிமையுடையவர்கள், சிலர் வலிமையற்றவர்கள், சிலர் மிகத் தெளிவான நுட்பபுத்தி யுடையவர்கள், சிலர் தாமஸகுணமும் மந்தபுத்தியுமுடையவர்கள், சிலர் உள்ளம் உடம்பு ஆகிய இரண்டும் நோயற்றுச் சுகித்து எல்லாநற்குணங்களும் நிறையப் பெற்றிருப்பவர்கள், சிலர் பிணிகளால் நலிந்து உள்ளம் உடம்பு இரண்டும் பலவீனப்பட்டிருப்பவர்கள், இத் தன்மையான ஏற்றத் தாழ்ச்சி உள்ளவர்களாகவே நாம் இவ்வுலகில் வந்து பிறக்கிறோம்.

அன்றியும், சிலர் நாணயமும், பொறுமையும், மனஉறுதியுமுள்ளவர்கள்; சிலர் சோம்பல், பொய், புரட்டு முதலிய தீக்குணங்களுள்ளவர்கள். அவர்கட்குத் தீயவழிதவிர மற்றெதிலும் விடாமுயற்சி கிடையாது. இந்த வேறுபாடுகளெல்லாம் இயற்கையான துஷ்டசுபாவம், கெட்ட படிப்பு அல்லது அறியாமை இவைகளால் உண்டாவனவாம்.

இவ்விதமான ஏற்றத் தாழ்ச்சி உண்டாவதற்குத் திருஷ்டாந்தம் : இயற்கையில் சமமான நிலையிலுள்ள இருவர் உலக வியாபாரத்தில் பிரவேசிக்கின்றனர். ஒருவன் கல்வி கற்றவனுயும், மற்றவன் கல்லாதவனுயுமிருந்தால், அவர்களுடைய நிலைமை சீக்கிரமே பேதப்பட்டுப் போகும். மற்றவர்களெல்லாம் மூடர்களாயிருக்க, ஒருவனுக்கு மாத்திரம் விசேஷமான கல்வியறிவு மாத்திரம் இருக்குமாயின், அவனே மற்றவர்களை யடக்கியாளும் திறமை யுடையவனுகிறான்.

யோசிக்குமளவில், விடாமுயற்சி யென்னும் நற்குணமே மனிதர்க்குள் விசேஷமாய் ஏற்றத் தாழ்ச்சி உண்டாவதற்குக் காரணமா யிருக்கின்றது. "அனைவரும் இன்று இராத்திரி ஒரே காலத்தில் படுத்தாலும் சிலர் விடியற்காலையிலேயே எழுகின்றனர். மற்றவர்கள் காலைப்பொழுதைத் தூக்கத்தில் கழிக்கின்றனர். ஆதலால் நாளை நடுப்பகல் வேளைக்குள் அவர்கள் வேலையில் முன்னும் பின்னுமாய் விடுவார்கள்" என்று சொல்வது இவ்விஷயத்தில் உண்மையாகவே யிருக்கின்றது.

சுபாவத்திலேயே அமைகின்ற இவ்வகைப்பட்ட காரியங்களே சற்று நாகரீகம்பெற்ற தேசமெங்கும் ஏற்பட்டிருக்கின்ற மேல்வகுப்பு, கீழ்வகுப்பு, உயர்ந்த பதவி, தாழ்ந்த பதவி என்னும் பேதங்களுக்கு ஆதிகாரணமாம். நாகரீகம் பெறாத மிருகத்தன்மையானவர்களிலேயும் புத்தியிற் சிறந்த சிலர் மற்றவர்களைப்பார்க்கிலும் உயர்வுபெற்று அவர்களை அடக்கியாள்கின்றனரன்றோ ?



## ஸ்திரீகளின் அலங்காரம்

பெண்பாலார் அவ்வத் தேசங்களில் செய்து கொள்ளும் அலங்கார பேதங்களைப் பற்றி ஒருநிருபர் "இந்து நேச" னில் பின்வருமாறு எழுதுகிறார்.

ஸயாம் இராஜ்யத்தில் ஸ்திரீகள் பட்டுக் கச்சையைப் பூணூல் தரித்துக்கொள்ளும் மாதிரியாய்த் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் ஆடவர்கள் போல சராய் போட்டுக்கொள்ளுகிறார்கள். பலவிதமான வர்ண உடைகளில் தான் இவர்களுக்குப் பிரியமிருக்கிறது.

ஜப்பான்தேச ஸ்திரீகள் பட்டுக்கச்சையை இடுப்பில் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஸ்பெயின் தேச ஸ்திரீகள் தலைப்பாகையும் கையில் விசிறியும் தரிப்பது சிங்காரமென்று கருதுகிறார்கள். இத்தலி தேச ஸ்திரீகளில், இராணி முதல் பிச்சைக்காரி வரையில் பவழமாலையணிந்து கொள்ளாதவர்களில்லை. இம்மாலை திருஷ்டி தோஷ விமோசனம் செய்யுமென்று அவர்களால் நம்பப்படுகிறது.

ப்ரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாய நார்மண்டில் ஸ்திரீகள் சரிகைத் தொப்பி போட்டுக் கொள்ளுகிறார்கள். அந்தஸ்துக்குத் தக்கபடி தொப்பிகளின் விலை உயர்ந்திருக்கிறது.

ரொமேனியா நாட்டு ஸ்திரீகள் தங்கள் தங்கள் தலைமயிரை நாலாய்ப் பிரித்து ஜடைபோட்டுக் கொள்கிறார்கள். அவர்களின் ஆடைகள் வெள்ளி தங்கச் சரிகை போட்டவை; பலவர்ணமானவை.

டர்க்கி தேசத்து ஸ்திரீகள் அந்தப் புரத்தில் பட்டு சராய் ஜிப்பா குல்லாய் முதலியவைகளைப் போட்டுக்கொண்டும் பலவித நகைகளை அணிந்து கொண்டும் இருக்கிறார்கள்.

ஆங்கில ஸ்திரீகள் காது குத்திக்கொண்டு குழைகள் போட்டுக்கொண்டாலும் மூக்கைக் குத்திக் கொள்வதில்லை. ஒன்றை அணிந்துகொள்வதுமில்லை. ஆனால்பெரிஷியா நாட்டு ஸ்திரீகள் எவ்வளவுக்கெவ்வளவு பெரிதும் கனமானதுமான அணிகளைப் பூண்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அலங்காரமென நினைக்கிறார்கள். இவ்விஷயத்தில் இவர்கள் இந்துக்களைப் போன்றிருக்கிறார்கள்.

மேயோரி ஜாதியார் தங்கள் தேகமெல்லாம் பச்சை குத்திக்கொள்வது அழகானது என்று கருதுகிறார்கள்.

உலகத்திலுள்ள ஸ்திரீகள் அழகு செய்து கொள்வதில் பல்லை அவமதிக்கவில்லை. அராபிதேச ஸ்திரீகள் பல்லுக்கு நீலவர்ணமும், சைனுதேச ஸ்திரீகள் கருப்பு வர்ணமும்,ஜப்பானியதேச பெண்கள் கல்யாணம்ஆகும்வரையில் மஞ்சள் வர்ணமும் பூசிக்கொள்ளுகிறார்கள்.

ஜப்பானிய ஸ்திரீகள் கல்யாணம் முடிந்தபின் பல்லுக்குக் கறுப்பு பூசிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில், இப்படி அவலக்ஷணம் செய்துகொள்ளாவிட்டால் புருஷர்கள் பொறுமை கொள்வார்களாம். என்ன நோக்கம்?

மலேய ஆர்ச்சி பெலாகோ நாட்டில் ஸ்திரீகள் பல்லைக் கூர்மையாகும்படி ரம்பத்தால் ராவித் துளைபோட்டு தங்க வெள்ளிச் சுரைகள் போட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஆப்ரிகாவில் ஸ்திரீகள் நகங்களுக்கு மஞ்சள், சிகப்பு வர்ணங்கள் சட்டிக்கொள்ளுகிறார்கள். இந்திய ஸ்திரீகள் சிவப்பு வர்ணம் பூசிக்கொள்ளுகிறார்கள்.

உலகம் பலவிதம் என்பதற்குத் திருஷ்டாந்தம் வேறென்ன வேண்டும்?

ஸங்கிருதி.

---

## தீ

(அக்கி ஸ்தோத்ரம்-வேதரஸம்)

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது.

(பாம்புப்பிடாரன் மெட்டு.)

கதி;—திஸ்ர-ஏகம்

பல்லவி

தீ வளர்த்திடு வோம்—பெருந்
தீ வளர்த்திடு வோம்.

சரணங்கள்

ஆவியினுள்ளும் அறிவினிடையிலும்
அன்பை வளர்த்திடுவோம்—விண்ணின்

ஆசை வளர்த்திடுவோம்—களி
யாவல் வளர்த்திடுவோம்—ஒரு
தேவி மகனைத் திறமைக் கடவுளைச்
செங்கதிர் வானவனை—விண்ணோர் தமைத்
தேனுக் கழைப்பவனைப்—பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 1

சித்தத் துணிவினை மானுடர் கேள்வனைத்
தீமை யழிப்பவனை—நன்மை
சேர்த்துக் கொடுப்பவனைப்—பல
சீர்களுடையவனை—புவி
யத்தனையுஞ் சுட ரேறத் திகழ்ந்திடும்
ஆரியர் நாயகனை—உருத்திரன்
அன்புத் திருமகனைப்—பெருந்திர
ளாகிப் பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 2

கட்டுக்கள் போக்கி விடுதலை தந்திடுங்
கண்மணி போன்றவனை—எமைக்
காவல் புரிபவனை—தொல்லைக்
காட்டை யழிப்பவனைத்—திசை
யெட்டும் புகழ்வளர்ந் தோங்கிட—வித்தைகள்
யாவும் பழகிடவே—புவிமிசை
யின்பம் பெருகிடவே—பெருந்திர
ளெய்திப் பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 3

நெஞ்சிற் கவலைகள் நோவுள யாவையு
நீக்கிக் கொடுப்பவனை—உயிர்
நீளத் தருபவனை—ஒளிர்
நேர்மைப் பெருங்கனலை—நித்தம்
அஞ்சலஞ்சே லென்று கூறி யெமக்கு நல்
லாண்மை சமைப்பவனைப் பல் வெற்றிகள்
ஆக்கிக் கொடுப்பவனைப்—பெருந்திர
ளாகிப் பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 4

அச்சத்தைச் சுட்டங்கு சாம்பரு மின்றி
யழித்திடும் வானவனைச்—செய்கை
யாற்று மதிச் சுடரைத்—தடை
யற்ற பெருந் திறலை—எம்முள்
இச்சையும் வேட்கையு மாசையுங் காதலும்
ஏற்றதோர் நல்லறமும்—கலந்தொளி
யேறுந் தவக்கனலைப்—பெருந்திர
ளெய்திப் பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 5

வானகத்தைச் சென்று தீண்டுவ னிங்கென்று
மண்டி யெழுந் தழலைக்—கவி
வாணர்க்கு நல்லமுதைத்—தொழில்
வண்ணந் தெரிந்தவனை—நல்ல
தேனையும் பாலையு நெய்யையுஞ் சோற்றையுந்
தீம்பழச் சாற்றினையும்—இங்கேயுண்டு
தேக்கிக் களிப்பவனைப்—பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 6

சித்திர மாளிகை பொன்னொளிர் மாடங்கள்
செம்மைத் திரு மகளிர்—இன்பத்
தீயவிர் தேனிசைகள்—சுவை
சேர்த்திடு நல்விளமை—நல்ல
முத்து மணிகளும் பொன்னு நிறைந்த
முழுக்குடம் பறபலவும்—இங்கே தர
முற்பட்டு நிற்பவனைப்—பெருந்திரள்
மொய்த்துப் பணிந்திடுவோம்—வாரீர்! (தீ-ம்) 7

## சிலா செதுக்கு வேலை

### முன் தொடர்ச்சி

சத்தியவசனன்

மத உற்சாகக் குறைவால் சிற்பத் தொழில் ருசிக்கவில்லை. ஏனெனில் பர்ட்வுட் துரையவர்கள் சொல்லுகிறபடி இந்திய கைத்தொழில்களெல்லாம் இந்துக்களின் மதாசார வாழ்க்கையைப் பற்றிய விளக்கமே. மத சம்பந்தமான கட்டிடங்களின் அலங்காரத்தில் சிலா செதுக்கு வேலையை அதிக உயர்வாகவும் அபரிமிதமாகவும் செறிந்து வைப்பதும் தவிர, எங்கே பார்த்தாலும் இதர கட்டிடங்களில்கூட மத சம்பந்த அறிகுறி உருக்களை செறித்து வைத்திருக்கிறார்கள். மத உற்சாகத்திலேயும் மதக்கோட்பாட்டிலேயும் தான் இந்திய சிற்பத் தொழில் தூண்டுதலையும் காரிய காரணத்தையும் அடைகிறது. மதசம்பந்த தூண்டுதல் இல்லையேல் இந்திய கைத்தொழிலும் இலதாகும்.

இந்தியாவில் கைத்தொழிற்கும் மதக்கோட்பாட்டிற்கும் இணைபிரியா அந்யோந்ய சம்பன்ன மிருக்கிறது. ஆகையால் மதக்கோட்பாட்டின் சிதைவால் இந்திய கைத்தொழில் சிதையவில்லை என்பது திண்ணம்.

மதசம்பந்த உற்சாகம் குறையவில்லை. ஆனால், இராஜாங்க வருமானத்தை பக்திமார்க்க கட்டிடங்களின் அலங்காரத்தில் செலவிடச் செயத்தக்க இராஜாங்க சம்பந்தத்தை இழந்துவிட்டது. இந்தியத்தொழிலும் இந்திய இராஜாங்கமும் சம்பந்தப் பிரிவை யடைந்திருக்



கின்றன. இராஜாங்க ஊதியம் வெவ்வேறு உபயோகமான வழிகளில் செலவழிக்கப் படுகிறது.

சிலையை மதசம்பந்த கட்டிடங்களில் தான் உபயோகிக்க வேண்டும், வீடுகளில் உபயோகப்படுத்தக்கூடாது. அஃது கேட்டை விளைவிக்கும் என்று சிற்ப சாஸ்திரத்தில் உரைத்துள்ளதே சிலா சித்திரச் செதுக்கு வேலைக்கும் சிலா கட்டிட வேலைக்கும் நேர்ந்த சிதைவிற்கு காரணமாயிருக்கிறதென்று ஓர் ஐரோப்பிய கைத்தொழில் வித்தியார்த்தி அபிப்பிராயப் படுகிறார். பர்மாவில் ஆலயமும் இராஜ கிருகமும் கல்லாலும் செங்கல்லாலும் கட்டப்படலாமாம். ஆகையினாற்றான், ஆலயம் இராஜக்ருகம் நீங்கலாக உள்ள ஏனைய கட்டிடங்களெல்லாம் மரத்தினால் கட்டப்படுகின்றனபோலும். ஆகையால் பர்மாவில் சிலாசிற்புவேலை சிதைவையடைந்தது. இந்துக்களுக்குள்ளே சில்ப சாஸ்திரப் பிரமாணம் பின்வருமாறு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. "ஓர் ஆலத்திலேயாவது, ஓர் மடத்திலேயாவது அல்லது இராஜகிருகத்திலேயாவது சிலையை உபயோகப் படுத்தினால் நலம்; ஆனால் இல்லற நிவாசத்தில் சிலையை உபயோகப்படுத்தக் கூடாது. இல்லற சட்டிடங்களில் ஓர் சுவரின் வெளிப்பாகத்திலும் கம்பங்களுக்கு அடிகளிலேயும், தரையிலேயும் சிலை உபயோகப் படுத்தப்பட்டால் நலத்தைப் பயக்கும்.

ஓர் இராஜ அரண்மனையில் கூரை உத்திரத்திற்கு மேல் நிறுத்த வேண்டிய கல்பலகை ஒவ்வோர் அடி அளவிற்கும் இரண்டு அங்குலம் கனமுள்ளதாக இருத்தல்வேண்டும். இத்தகைய அளவுள்ள கற்பலகை ஓர் இராஜனுக்கு சந்துஷ்டியை உண்டாக்கும். அதே அளவுள்ள கற்பலகை இதர வீடுகளில் தன நாசத்தை உண்டாக்கும். இப்படிப்பட்ட சிற்பசாஸ்திர விதிகள் இல்லாவிட்டால் சிற்ப சிலா செதுக்கு வேலை வீடுகள் தோறும் நிறைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். ஆகையால் சிற்பசாஸ்திர விதிகளே சிலா செதுக்கு வேலைக்கும் சிலா கட்டிட வேலைக்கும் சிதைவை உண்டாக்கியிருக்கின்றன. பம்பாய் இராஜதானியில் தாழ்வாரக்கம்பங்களின்கீழ் நிறுத்தும் கல்லில் நாணயமான செதுக்கு வேலையை நிறைத்து வைத்திருக்கிறார்கள். மேல் விவரித்துள்ள சிற்ப சாஸ்திர நிபந்தனை யில்லாவிட்டால் சிற்பியர்கள் இல்லற நிவாச கட்டிடங்களில் தங்கள் மனோபாவப்படி சிலாசெதுக்குவேலை நிறைத்துவைப்பார்கள்.

ஓர் கைத்தொழில் நிலைபெற வேண்டுமானால்
அத் தொழில் சிக்கனத்தை கண்காணிக்க வேண்
டும்., ஜனசமூக நாணயத்திற்கும் நாகரீகத்திற்கும் ஒத்
திருக்க வேண்டும், அந்தப்பாட்டையும் அழகையும்
சார்ந்திருக்க வேண்டும். இவ்விஷயங்களுக்கு மாறுபா
டாயுள்ள தொழில் சிதைவைத்தான் அடையும். பூர்வீ
கத்தில் இராஜாங்க ஊதியம் ஆலய நிர்மாணத்தில்
செலவழித்தற்கு காரணங்கள்: பூர்வத்தில் பெரிய பட்
டணங்களில் ஜனங்கள் அடர்த்தியா யிருந்ததில்லை.
ஜனசமூகத்தார் கிராமவாசிகளா யிருந்தார்களே தவிர
பட்டணவாசிகளாயில்லை. தேசமானது தன்னைத்தானே
ரக்ஷித்துக் கொள்ளும் சக்தியை உடைத்தாயிருந்தது.
தேசத்து பொருள்கள் இதர தேசத்து இறக்குமதிப்
பொருள்களுக்காக ஏற்றுமதி செய்யப்பட வில்லை.
ஏற்றுமதிக்குப்போன பொருள்கள் நீங்கலாக மிகுந்
துள்ள தானியங்களைத் தான் உள்நாட்டார் ஜீவனத்
திற்கு ஆதாரமாய்க் கொள்ளவேண்டும் என்கிற நிர்ப்
பந்த மில்லாதிருந்தது. பாதி ஜன சமூகத்தார்
விவசாயத் தொழிலை நடத்தினால் ஜனசமூகத்தார் முழு
வதும் புசிக்க ஏராளமான தானியம் விளைந்தது. மற்ற
பாதி ஜனசமூகத்தார் காலக்கழிவிற்கு வேறு வேலை
களைப் பார்க்கவேண்டியிருந்தது. ஐரோப்பாவில் விவ
சாயத் தொழிலை மேற்கொள்ளாத ஜனசமூகத்தார்
கைத்தொழில் சாமான்களை செய்வதிலேயும் வர்த்தகத்
திலேயும் காலத்தைக் கழிக்கிறார்கள்.

தென் இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கு இதர கைத்
தொழிலும் வர்த்தகமும் இல்லாதிருந்தன. அவர்க
ளுக்கு ஆலயங்கட்டுதல் தான் கிடைத்தது. இத்தொ
ழில் இரும்பு வேலையைக் காட்டிலுமாவது பருத்திப்
பஞ்சைசெய்தல் தொழிலைக்காட்டிலுமாவது பயனுள்ள
தாக இருந்ததா என்று நாம் பார்ப்பது அவசியமல்ல.
விவசாயத்தில் பிரவேசிக்காத ஜனங்களெல்லாம் ஆலய
நிர்மாணத்தில் காலக்கழிவை எய்தினார்கள் என்ப
தைமாத்திரம் நாம் இங்கு கவனிக்க வேண்டியது.
எகிப்து தேசத்து கீர்த்திவாய்ந்த "பரோ" இராஜாக்
கள் காலத்தில்கூட மிகுந்த ஜனசமூகத்தார் கட்டிட
வேலையில் பிரவேசித்திருந்தார்கள். அக்காலத்தில் இரா
ஜாங்க பொக்கிஷப்பணம் மதவைராக்கியத்தைக் காட்டு
கிற ஆலய நிர்மாணத்தில் செலவழிக்கச் சந்தர்ப்பங்கள்
சௌகரியமாயிருந்தன.

இக்காலத்தில் ஊதியத்தை உண்டாக்காத ஆலய
நிர்மாணத்தில் பணத்தைச் செலவிட்டால் இரா
ஜாங்க வசூல் பணத்தில் அதிகமாய்க் குறைந்து

போய்விடும். வேறு விஷயங்களுக்கு (பாதை மராமத்து குளம் ஏரி மராமத்து, வர்த்தகம்) உபயோகப்படுத்த பணமிராது. முற்காலத்தில் ஆலய நிர்மாணத்தில் செலுத்திய உழைப்பு இப்போது ஜனசமூகத்தின் கைத்தொழில் ஜீவனமார்க்கத்தில் திரவிய சேகரத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. சிலா செதுக்கு வேலை கட்டிடவேலையைச் சேர்ந்ததாயிருக்கிறபடியால் ஐரோப்பிய வர்த்தகச் சேர்க்கையால் அதிகச் சிதைவை அடையக்காரணமில்லை. ஆகிலும் இந்தியாவின் மிகுந்த செல்வத்தையும் பெரும்பாக ஜனசமூகத்தாரையும் ஊதியந்தராத ஆலய நிர்மாணத்தில் செலுத்துவதை ஐரோப்பிய வர்த்தக தொழிற் சம்பந்தம் நீக்கியது.

மேல்நாட்டு வர்த்தகத் தொழிற் சம்பந்தம் இந்தியர் இந்தியத் தொழில்களில் வைத்திருந்த அந்தப்பாட்டின் அபிப்பிராயத்தை முழுதும் மாற்றியது. ஐரோப்பிய மாதிரியும் ஐரோப்பிய கல்வியும் ஐரோப்பிய கட்டடமும் இந்தியாவில் வேரூன்றவே, பிரபுக்களின் வீடுகளெல்லாம் இற்றலிதேசத்து அரண்மனைகளைப்போல் ஆயின. அவ்விடங்களில் வைக்கப்பட்ட சாமான்களெல்லாம் (Tottenham Court road) சாமான்களாயின. சிலா செதுக்குவேலையை ஆதரித்த பாரம்பரிய இந்திய பிரபு இப்போது உபேக்ஷிக்கிறார். இப்போது ஆலயத்தில் மாத்திரந்தான் சிறிது சிலாவேலைகள் நடக்கின்றன.

சிலா செதுக்குவேலை பூர்வீக நிலைமையை அடையுமா? பூர்வத்தில் சிலாசெதுக்குவேலை புத்தமதத்தோடு ஆரம்பமாயிற்று. பின்பு இந்துக்கள் மகம்மதியர்கள் கைக்கொண்டார்கள். தற்காலத்தில் ஜைனியர் பதின்மர் கூடுமிடங்களில் ஆலயம் அவசியமாகிறது. இஃது சிலா செதுக்குவேலைக்கு ஓர் தூண்டுதலான ஆதாரணையைக் காட்டுகிறது. இவ்வித சந்தர்ப்பம் இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் உண்டாகாது. இந்துக்களும் மகம்மதியரும், வேறு காரணங்களால் இடம்விட்டுப் போகவேண்டியிருந்தால் அப்போது கோயிலும் மசூதியும் வேண்டியதாயிருக்கும், அப்போது சிலா செதுக்கு வேலைக்கும் சிலா கட்டிடவேலைக்கும் வேண்டுதல் உண்டாகும். ஆலயங்களும் மசூதிகளும் அழிந்துபோனல் அப்போதும் சிலாசெதுக்கு வேலையையும் சிலா கட்டிட வேலையையும் நாடுவார்கள்.

## உட்பதிவு சாமான்கள்

சுதேச சலவைக் கல் அதிகமாய் உபயோகப் படுத்துகிறார்கள். இத்துடன் வெள்ளை, கருப்பு, நீல நிற, இற்றலிதேசத்து சலவைக்கல் உபயோகப்படுத்தப்படுகிறது. வெள்ளை, கருப்பு மஞ்சள் நீல நிற சாமான்கள் இயற்கை நிறமாகவே சலவைக்கல்லை உடைத்து மழுக்கப்படுவதினுல் தயாராகின்றன. சிவப்புகல் வேண்டுமானல் சுதேச மஞ்சள் நிறக் கல்லை கற்கண்டை எலிமிச்சம் பழரசத்தோடு குழைத்துத் தடவி சிறிது சூடேற்றினுல் அடையலாம். உட்பதிவு வேலை உபயோகப்படுத்தப்படுகிற இதர சாமான்கள் என்னவெனில் கார்னீலியன், நீல, பச்சை மஞ்சள் கண்ணுடி, முத்துச்சிப்பி, சங்கு, லாபீஸ் லசூலி கோபால்ட் லேட், பளபளப்பான சாமான் என்பவை. முத்துகளைக்கூட முற்காலத்தில் உட்பதிவு வேலையில் உபயோகித்தார்கள். ஐரோப்பிய சித்திர வித்தியார்த்திகள் இந்து தேசத்து சிற்பியர்களுக்கு காகிதத்தில் வரையப்பட்ட மாதிரியைப்போல் சிலா செதுக்குவேலையை இயற்ற இயலாதென்றும் காகிதத்தில் சித்திரிக்கும் பழக்கமேயில்லை யென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்தியர்கள் சிலா செதுக்குவேலை செய்த மாதிரியைப்போல் வேலை செய்வதில் சமர்த்தர்கள் என்றும் சொல்லுகிறார்கள். தற்காலத்தில் சிற்பியர்கள் மாதிரியை காகிதத்தில் வரைகிறார்கள். பிறகு அம்மாதிரியை பென்சிலினுல் கல்லுக்கு மாற்றுகிறார்கள். உருக்களைச் செய்யும்போது உருவைப் பூர்த்தியாய்க் காகிதத்தில் பென்சிலில் எழுதிக்கொள்ளுகிறார்கள். அம்மாதிரியிலிருந்து அளவு ஆயுதத்தின் உதவியால் வேண்டிய அளவை அளந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். இஃது அவர்களுடைய உயர்ந்த சாமர்த்தியத்தையும் அந்தப் பாட்டின் உணர்ச்சியையும் தெரிவிக்கிறது. உருக்களின் சுபாவகுணத்தை விவரிப்பதில் தங்களுடைய சொந்த இயற்கைஞானத்தைக் காட்டுகிறார்கள்.

உட்பதிவு வேலையில் மாதிரியை பூர்த்தியாய்க் காகிதத்தில் எழுதிக்கொண்டு பின்பு பென்சிலினுல் கல்லுக்கோ அல்லது சலவைக்கல்லுக்கோ மாற்றுகிறார்கள். மாதிரிக்கு சரியாய் அவற்றில் பள்ளம் செய்து நேர்த்தியான கல்லுளியால் துண்டிக்கப்பட்ட பளிங்கையோ சலவைக்கல்லையோ மாதிரியைப்போல் மழுக்கி சுத்தம் செய்துபசைகொண்டு அவ்வவற்றின் இடங்களில் பதிக்கிறார்கள். பசை, கோந்து மெழுகு வெள்ளை ஈயம் இவற்றால் ஆகியது. பதிவு செய்வதற்கு முன்னரே பதிவு செய்யப்படும் துண்டுகள் சக்கரச் சாணையில் ஒட்டப்பட்டுக் கடைந்து வேண்டிய உருவத்திற்கும்



அளவிற்கும் கொண்டுவரப்படுகின்றன. வேலைக்காரர்களின் மனோபாவப்படி துண்டுகளின் ஓரங்கள் சதுரமாகவோ அல்லது கோணமாகவோ திருத்தி வைக்கப்படுகின்றன. துண்டுகளின் தட்டையான மேல் பரப்பு அடிப்பரப்பு பாகங்கள் சாணையில் பிடிப்பதற்கு முன்னமே சதுரமாக்கப்பட்டு மழுக்கப்படுகின்றன. இரும்புத் தகட்டின் மேலாவது அல்லது சலவைக்கல் பலகையின்மேலாவது மணலையும் நீரையும் சேர்த்து தேய்த்து மழுக்கப்படுகின்றன. மழுக்குந் தொழில் ஸ்திரீகள் செய்கிறார்கள். சாணைபிடித்தல் முதலியன சிறுவரால் செய்யப்படுகின்றன.

பதிவு செய்தபிறகு கரடு முரடான இடங்கள் மிருதுவான வெள்ளிய கூழாங்கல்லினுல் நீர் தடவி மட்டமாக்கப்படுகின்றன. கடைசியாக தண்ணிய மிருதுவான வெள்ளிய பானையோட்டை தூள் செய்து அழுத்தமாக முடியப்பட்ட ஓர் வஸ்திரத்தினுல் தேய்ப்பதினுல் சுத்தம் செய்கிறார்கள்.

## ஆயுதங்கள்

ஆயுதங்கள் எண்ணில் அதிகமாயில்லை:—

1. இரட்டைக் கைப்பிடியுள்ள ஓர் இரம்பம். இது கல்லையும் சலவைக்கல்லையும் துணிக்கிறது அதிகமாய்த் தேய்ந்து மழுங்கிய ஓர் கத்தி அத்துடன் இருக்கிறது. கத்தியை உட்புகுத்த கல்லில் ஓர் துவாரம் துளைக்கப்பட்டிருக்கிறது. ஆற்றுப் பெருமணலையும் தண்ணீரையும் அப்போது அப்போது வேலையில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.
2. சதுரப்பலகையும் அளவு கோலும்.
3. கும்பாஸ்.
4. சுரம்.
5. வட்டவடிவான அவாள்.
6. விசாலமான சதுர ஓரமுள்ள சிற்றுளி. இது துண்டிக்கவும் மழுக்கவும் உபயோகமாகிறது.
7. நான்கு கோணங்களுள்ள கூரிய சிற்றுளி. இது மெதுவான கல் வேலைக்கு உபயோகமானது.
8. வட்ட வடிவான கூரிய சிற்றுளி. கடினக்கல்லிலேயும் சலவைக்கல்லிலேயும் வேலைசெய்தற்கு சௌகரியமானது.
9. அகன்ற சதுரவோரத்தையுடைய சிற்றுளி. இது செதுக்குவதற்குரியது.
10. சிறியகோண ஓரமுள்ள சிற்றுளி.
11. துளைக்கும் கருவி.

## லார்டு கிச்சனரின் சரித்திரம்

### 1850—1916

இந்த சூரபுருஷன் 1850-ம் வருஷத்தில் ஜனனமானார். 1870-ம் வருஷத்தில் பிரஞ்சுக்காரருக்கும் ஜெர்மானியருக்கும் சண்டை நடந்தபொழுது பிரஞ்சு கட்சியில் வாலண்டீராகச்சேர்ந்து சண்டை செய்தார். 1871-வருஷம் ப்ரிட்டிஷ் சேனையில் எஞ்சினீர் படையில் ஒரு சிறிய உத்தியோகப் பதவியைப்பெற்று, அந்த வருஷத்திலேயே ஆசியாத் துருக்கியிலுள்ள பாலஸ்டீன் என்ற காட்டிற்கு அனுப்பப்பட்டார். அதுமுதல் 27-வருஷகாலம் பாலஸ்டீனிலும் ஈஜிப்டிலுமாக சேவகஞ்செய்து 1898-ம் வருஷத்தில் ஓம்டர்மன் என்ற இடத்தில் ஈஜிப்டின் அமைதியையும் அந்நாட்டரசராகிய கெடிவின் ஆட்சியையும் அசைக்கப் பார்த்த மஹதி என்பவரைத் தோற்கடித்து பெரிய கீர்த்தி அடைந்தார். அக்காலத்தில் லார்டு கிச்சனர் கெடிவ் அரசருடைய சேனையைத் திருத்தி அமைப்பதற்காக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டால் உதவப்பட்டு அவருடைய சேவகத்தில் இருந்தார். அப்பொழுது அவருக்கு ஸர்தார் கிச்சனர் என்ற பெயர். ஓம்டர்மன் சண்டையில் ஜயித்ததற்காக பார்லிமெண்டு சபை அவருக்கு வந்தனமளித்து 30-ஆயிரம் பவுன் இனுமளித்தது. உடனே தென் ஆபிரிக்காவில் போவர் யுத்தம் உண்டாய்விட்டது. அதில் ப்ரிட்டிஷ் சேனைத்தலைவராயிருந்த லார்டு ராபர்ட்ஸின் தலைமை உத்தியோகஸ்தர் பதவியை லார்டு கிச்சனர் வகித்துவரும் நாளில் லார்டு ராபர்ட்ஸ் உத்தியோகத்திலிருந்து நீங்கி இங்கிலாந்துக்குப் போய்விடவே, லார்டு கிச்சனரே தென் ஆபிரிக்காவில் ப்ரிட்டிஷ் சேனுதிபதியாய், பாக்கி யுத்தத்தை நடத்தி 1900-ம் வருஷத்தில் வெற்றிபெற்றார்.

---

12. தலையில் இரும்பு பாரமுள்ள கொட்டமரத்துண்டு.
13. Templet
14. இலைவடிவான கொல்லுரு.

ஆயுதங்களெல்லாம் எழுகினுல் ஆகியவை. கடின
மான பொருள்களின் வேலைசெய்யவேண்டியிருத்தலின்
எழுகினுல் செய்யப்பட்டிருக்கின்றன.

தற்காலத்தில் சிலா செதுக்குவேலையை கவர்ன்மெண்டார் ஆதரிக்காது இருப்பினும் இனியாவது ஆதரிக்கும் சமயம் வரும் என மனத்திடம் கொண்டு நமது சிலாசெதுக்கு சிற்பியர்கள் தங்களுடைய நாகரீகமான பெருமை வாய்ந்த கைத்தொழிலை கைசோரவிடாது சித்திரப்பழக்கத்தை அப்பியசித்து இயற்றுவாராயின் ஓர் காலத்தில் தங்கள் பூர்வீக சிறப்பையெய்தி ஓங்குவார்கள் என்பது சொல்லாமே அமையும்.

போவர் யுத்தத்தை அவர் நடத்தினதில், ப்ரிட்டிஷ் படைகள் போகும் வழியில் இருக்கக்கூடிய போவர் கிராமங்களிலுள்ள கிழவர்கள் ஸ்திரீகள் குழந்தைகளையும் சாமான்களையுங் கைப்பற்றிக்கொண்டு போய் ஜனங்களை ஓரிடத்தில் அடைத்து அவர்களுக்கு உணவிட்டு வரும்படி உத்தரவு செய்தார். அப்படிச் செய்ததால் போவர் கிராமங்களில் பல, அவர்களுடைய படைகளுக்கு உதவி செய்யக்கூடாமற் போய்விட்டன. போவர் யுத்தத்தில் வெற்றிபெற்றதற்காக பார்லிமெண்டு சபை அவருக்கு வைகவுண்டு என்ற பட்டங்கொடுத்து 50-ஆயிரம் பவுன் இனாமளித்தது. பிறகு 1902-ம் வருஷத்தில் லார்டு கிச்சனர் இந்தியாவிற்கு சேனாதிபதியாய் வந்து 1909-ம் வருஷம் வரையில் அப்பதவியை வகித்திருந்தார். இந்தியாவில் லார்டு கிச்சனர் சேனாதிபதியாயிருந்த காலத்தில், இந்திய சேனையின் அமைப்பில் பல திருத்தங்களை உண்டுபண்ணினார்.

இந்திய சேனையின் அமைப்பு திருத்தப்பட்ட பிறகு லார்டு கிச்சனர் இந்தியாவில் செய்யக்கூடிய வேலையொன்றுமில்லை. ஆகையால், அவர் இங்கிருந்து போய் மத்ய தரைக்கடலிலுள்ள குடியேற்ற நாட்டுப் படைகளின் அதிபராய் ஒரு வருஷமிருந்தார். பிறகு ஈஜிப்டிற்கு பிரிட்டிஷ் ஏஜண்டாய்ப் போய்ச்சேர்ந்து இந்த மகாயுத்தம் ஆரம்பமாகும் வரையில் அங்கேயே இருந்தார். ஈஜிப்டுதேசத்தின் பொருளாதார அபிவிர்த்திக்காக லார்டு கிச்சனர் வெகு பிரயாசைப்பட்டதாக புகழ் பெற்றிருக்கிறார். யுத்தம் ஆரம்பமானவுடன் யுத்த மந்திரியாக நியமிக்கப்பட்டு பார்லிமெண்டில் அவர் முதல் தடவை பேசியபொழுதே அநேகமாக இந்த யுத்தம் 3-வருஷகாலம் நடக்குமென்று அவர் சொன்னதை நினைக்கையில் அவருடைய தீர்க்கபுத்தி விளங்குகிறது. அன்று முதல் சென்ற மேமீ 31-ந் தேதி வரையில் அரசருடையவும், தேசத்தினுடையவும் ஊழியத்தைச் சிரமேற்கொண்டு சுகானுபவங்களைத் துறந்து ஆபீஸ் கட்டடத்தைத் தவிர வேறு ஜாகை இல்லாமற் கூட இரவும் பகலும் புத்தியாலும் சரீரத்தாலும் உழைத்து எண்ணுதற்கரிய பெருஞ் சேனையொன்றைத் திரட்டி அத்தனை பெரிய சேனைக்கு வேண்டிய பீரங்கிகள், துப்பாக்கிகள், குண்டுகள், உடுப்புகள், ஆகாராதிகள், ஆகாய ரதங்கள், டேலிபோன்கள், கம்பியில்லாத் தந்தி, இயந்திரங்கள் முதலிய சாதனங்களெல்லாம் தேவையான அளவு அனுப்புவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யச்செய்து, இனி காரியங்களை எப்படி நடத்தவேண்டுமென்பதை நிர்ணயித்து, உலகெல்லாம் கண்ணீர் சொரிந்து வருத்தப்படும்படி சென்ற மேமீ 31-ந் தேதியன்று ருஷ்யாவுக்குப்போகும் வழியில், வடகடலின் வடபாகத்தில் சத்துருவின், ஸப்மரீனாலோ சுரங்கத்தாலோ தாக்கப்பட்டு உயிர் துறந்தார். அவர் விவாகம் செய்துகொள்ளாமல் 20-வயது முதல் 40 வருஷகாலம் தேச ஊழியத்திலேயே செலவிட்டுவிட்டார்.

## ஆர்சாரி—ஆஸாரி

"அன்பின்மிக்க அரிய சகோதரர்காள்! நமக்குப் பூர்வீகமாயும் சாஸ்திரோக்தமாயுமுள்ள 'ஆச்சாரி' பட்டத்தை கவர்ன்மெண்டார் நவீனமாய் 'ஆஸாரி' என மாற்றினவுடன் அதைப் பழையபடியே 'ஆச்சாரி' என உபயோகிக்க வேண்டுமெனத் தந்திகள் மூலமாயும் மகஜர் மூலமாயும் பிரார்த்தித்தோம். ராவ்பகதூர் ப. கேசவபிள்ளை அவர்கள் கனம் கவர்னர் கவுன்ஸலில் வாதாடினார். இவ்விஷயமாய் நாம் கவனிக்கவேண்டிய வழிகளை "சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை"யினின்று வெளிவரும் "விஸ்வகர்மன்" மாதந்தோறும் கதறிக்கொண்டுவந்து ஒவ்வொருவரிடத்திலும் சாங்கோபாங்கமாய்த் தெரிவித்துவருவதை நண்பர்கள் கவனித்தா விதுவிஷயத்தி விதுவரையும் மவுனஞ்சாதித்துவந்ததுபோ விராரென்பது திண்ணம்.

சிலர் வேறு பட்டங்களைக் கொள்ளலாமென்று சிந்திப்பது சிரிப்பிற்கிடமாகின்றது நமது கையிலுள்ள பொருளைப் பிறர் வேண்டும்பொழுது கொடுத்துவிட்டு, நாம் வேறொரு பொருளைத் தேடிக்கொள்வோமென்று மனத்தேறுதலை யடைவோமா?

குலமகனாகிய "விஸ்வகர்மன்" அவனது பெற்றோரும் உறவினரும், குலத்தாரும் நற்கதியடையவேண்டிய வழிகளைப் போதிக்கக்கூடியவனாதலால் அவனது வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து அவனை விர்த்தி செய்வதைத் தேடவேண்டும்.

குழந்தை பசியாயிருக்கிறதென்று நன்குணர்ந்ததாயும் குழந்தை அழாது மவுனமாய்த் தனது படுக்கையிலேயே யிருந்தால், தனது வேலையிற்றான் கவனஞ்செலுத்திவருவாள். குழந்தை வீரென்று அழத்தொடங்கினால்தான் எவ்வளவு அவசியமான காரியத்திற் கவனஞ்செலுத்தியிருந்தாலும் குழந்தைக்கு அமுதளிப்பதே அவள் கடமைகளில் முக்கியமான முதற்கடமையெனப் பாவிப்பாள். இதனுண்மை "அழுதபிள்ளைதான் பால் குடிக்கும்" "முயற்சியுடையா ரிகழ்ச்சி யடையார்" என்ற வாக்கியங்களால் நன்கு விளங்கும். நமது வேண்டுகோளுக்குத் தாய்போன்ற கவர்ண்மென்டாரிசைவது கடமையாயினும் குழந்தைகளான நாம் தூங்குவதால் தாய்போன்ற காருண்ய கவர்ண்மென்டார் கவனிக்கக்கூடிய காரியங்கள் பலவுளவாதலால் அதில் கவனஞ்செலுத்தி வருகிறார்கள். நாம் ஒரேமொழியாய் எங்களுக்குக் கர்ணபரம்பரையாய் "ஆச்சாரி" பட்டமுண்டென்றும், அதை மாற்றலாகாதென்றும், பழையபடியே அதையுபயோகிக்க உத்திரவாகவேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொள்ளுதல் போதாது. குழந்தை அம்மா, ஆ, வீர் வீரென்று கதறுவதுபோல் நமக்கு அப்பட்டவிஷயமாய் வேதம், இதிகாஸ புராணம், சாஸ்திரம், சிலா தாம்பிர சாசனங்கள் மூலமாய் இன்னின்ன விடத்திலிந்த சந்தர்ப்பத்திலிவ்விதமாய்க் கூறியிருக்கிறதென்றும், அதைக் காருண்ய கவர்ன்மெண்டாருக்குக் காட்டக்கூடிய' வழிகளாயிருந்தால் அதை நாளையுங் காணலாமென்றும் இடமுதலியவைகளைத் தெளிவாயும் சுருக்கமாயுங் காட்டக்கூடியதோர் மகஜர் தயார் செய்து ஒவ்வொரு ஜில்லாவினின்றும் ஒவ்வொரு நாட்டாமைக்காரர் மூலமாய் அந்தந்த ஜில்லாவாசிகளின் கையொப்பம் வாங்கி வக்கீல்கள் மூலமாய் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும். இவ்விதவேற்பாடுகள் சென்ஸஸ்காலத்தில் (Census) விஶ்வபிராமண ஜாதிப்பெயர் விஷயமாய் எவ்விதமாய்ப் பிரயத்தனஞ்செய்தார்களோ அதைப்போல்செய்யவேண்டும். அப்படிச்செய்தால் ஏககாலத்தில் எல்லா ஜில்லாவாசிகளினால் நியமிக்கப்பட்ட வக்கீல்கள் ஓரேசப்ஜெக்டைப் பற்றி ஒரேவிதமான முடிவையடைய வேண்டுமென்று வாதாடுவார்கள். அப்பொழுது கவர்ண்மெண்டாரும் கவனித்து நமதுவேண்டுகோளுக்குக் கருணைபுரிவார்கள். ஆதலால், சகோதரர்காள்! இந்தமுயற்சியைக் கைசோரவிடாது கவனித்துக் கால தாமத மின்று கவர்ண்மெண்டுக்கு விண்ணப்பங்கள் செய்ய முன்வா விஶ்வேஶ்வரனருள் புரிவாராக. து. தங்கவேல்.

---

துறைமுக வேலையாள் ஒருவன் வயிறு வந்த சாமான்களை யெல்லாம் தன்னுள் அடக்கிக்கொள்ளக்கூடியதாயிருந்த விசித்திரமொன்றை "லான்ஸட்" என்ற பத்திரிகை தெரிவிக்கிறது. 32 - வயதுள்ள அவனது வயிற்றுநோவின்மீது சிகிச்சை செய்துவந்த டாக்டர், அவன் வயிற்றிலிருந்து 3-பவுன்ட் 11-அவுன்ஸ் எடையுள்ள உலோகப் பொருள்களை வெளியிலெடுத்தார். அப்பொருட்களில் 5-அங்குல ஆணிகள் 11 - அவுன்சு, நாணயங்களிற் பல, ஆணித்திருகுகள் பல, கம்பியாணிகள், திருகுகள், ஹூக்குகள் இப்படிப் பலவிதமிருந்தன. ஆறு வாரத்திற்குப் பிறகு குணமடைந்தான். சிலநாள் பொறுத்து வயிற்றுவலி என்று ஆஸ்பத்திரிக்கு வா அப்போதும் கண்ணாடித் துண்டுகள், தகரத் துண்டுகள், சிலேட் பென்ஸல்கள் இவற்றை அவன் வயிற்றிலிருந்து எடுத்தனர். அந்த சமயம் இவன் ஆஸ்பத்திரியிலிருந்த சோப்புக் கட்டியையும் அப்படியே தின்றுவிட்டான். இவைகள் அவனுக்குக் கெடுதி செய்யவேயில்லை. முடிவில் அவ



## அதிமதுரம்

### நல்லவனுக்கு அடையாளம் சொல்லாமற்போதல்

நம்முடைய பந்து மித்திரர்களில் யாராவது ஒருவர் நம்மிடம் சொல்லிக்கொள்ளாமற் போய்விட்டால், அப்போது நாம் அவர்களைப்பார்த்து, 'நல்லவனுக்கு அடையாளம் சொல்லாமற் போகிறது' என்றபடி போய்விட்டீர்கள்போல் இருக்கிறது என்று சொல்லுகிறோம். சொல்லாமற்போவது நல்லபிள்ளைக்கு அடையாளமாகுமோ? அப்படி யார் சொல்லாமற் போயிருக்கிறார்கள்? என்று விசாரிப்போம். இது ஸ்ரீராமருடைய விருத்தாந்தத்தில் இருந்து தான் உண்டாயிருக்கிறது. கைகேயி ஸ்ரீராமனைக் காட்டுக்குப் போம்படி சொன்ன ஸமயத்தில், ஸ்ரீராமர் பிதாவான தசரதர் நீங்கலாக மற்றைய எல்லாரிடத்திலும் சொல்லிக்கொண்டு போனார். தசரதரிடத்தில் சொல்லிக்கொள்ளச் சென்றால், அவர் தன்னை மரவுரியும் சடை முடியுமாகக் கண்டவுடன் பிராணனை விட்டுவிடுவார் என்பது ஸ்ரீராமருக்குத் தெரியும். அதனால் நல்ல பிள்ளையான ஸ்ரீராமன் பிதாவான தசரதரிடத்தில் சொல்லிக்கொள்ளாமலே போய்விட்டார். கம்பரும், "தன் துணைத் தாதை பாதம் அத்திசை நோக்கித் தாழ்ந்து" என்று கூறியிருப்பதும் காண்க. ஆகவே, நல்லவனான ஸ்ரீராமன் காட்டுக்குப் போம்போது பிதாவான தசரதரிடம் சொல்லிக்கொள்ளாமற்போன விருத்தாந்தத்திலிருந்து இப் பழமொழி உண்டாகி இருக்கிறது.

### சாப்பாட்டு ராமன்

யாராவது ஒருவன் அவசியமான காரியங்கள் இருக்கும்போது அவற்றைக் கவனித்துப் பாராமல், இதர விஷயங்களைக் கவனித்தால், நாம் அவனை அப்போது, "என்னடா சாப்பாட்டு ராமனாக இருக்கிறாய்" என்று சொல்லுகிறோமல்லவா? பதினான்கு வருஷம் காட்டில் திரிந்து காய் கிழங்குகளைத் தின்று காலங்கழித்த ஸ்ரீராமனைச் சாப்பாட்டுராமன் என்று சொல்வது பொருத்தமாகுமா என்று நம்மில் யாருமே கவனித்ததில்லை. வீட்டிலுள்ள அத்தை பாட்டிகளைக் கேட்டால், "என்னவோ அம்மா! எல்லாரும் சொல்வதை நானும் சொல்லுகிறேன். நான் என்னத்தைக் கண்டேன்" என்று சொல்லுகிறார்கள். நான் சில தினங்களுக்குமுன் ஒரு ராமாயண சாஸ்திரியைக் கண்டு கேட்டேன். அவர்

எழுதுகிறேன். இராவணவதமாகி, ஸ்ரீராமன் அயோத்திக்கு சீதாபிராட்டியுடன் திரும்பும்போது, வழியில் பரத்துவாஜர் என்கிற மகரிஷியின் ஆச்சிரமத்திலே அவர் வேண்டுகோளின்படி தங்கிவிட்டார். அப்போது பதினான்கு வருஷகாலம் பூர்த்தியாய் விட்டபடியால் தம்பியான பரதாழ்வான் தன் வருகையை எதிர்பார்த்திருப்பானென்று கருதி, ஸ்ரீராமன் தனது மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்து, ஹனுமானை அப் பரதனிடம் அனுப்பினார். ஹனுமான் பரதனிடம் போகும்போது பரதன் தமையனான ராமன் வரவில்லையே யென்று வருந்தி அக்னிப் பிரவேசஞ் செய்கிற சமயமா யிருந்தது. ஹனுமான் அதுகண்டு திடுக்கிட்டு "எந்தை வந்தனன், ராகவன் வந்தனன், வீரன் வந்தனன்" என்று சொல்லிக்கொண்டே பரதன் வளர்த்த தீயை அவித்துவிட்டார். பிறகு, ஹனுமானால் ஸ்ரீராமனுடைய விருத்தாந்தத்தைத் தெரிந்த பரதாழ்வான், 'ஸ்ரீராமன் இப்போது எங்கே இருக்கிறார்?' என்று கேட்க. ஹனுமான், 'பரத்துவாஜர் ஸ்ரீராமனுக்கு ஒரு பெரிய விருந்து செய்கிறார். அதை உத்தேசித்து இப்போது அவருடைய ஆச்சிரமத்தில் இருக்கிறார்' என்று சொன்னார். அதைக்கேட்ட பரதன், 'தம்பி ஒருவன் இருக்கிறானே என்பதைக்கூட அவர் கவனிக்கவில்லையே. சாப்பாடுதானே அவருக்குப் பெரிதாய்ப்போய் விட்டது. என்னுடைய துக்கத்தை அவர் நினைத்திருந்தால், இங்கே வராமல் அங்கே சாப்பாட்டுக்கென்று தங்குவாரா?' என்று வருத்தப்பட்டான். இதிலிருந்துதான், காரியத்தைப் பாராமல் சாப்பாட்டைக் கவனிப்பவர்களை, 'சாப்பாட்டு ராமன்' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது என்று சொன்னார். இப்போது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்.

## சௌரி ராஜன்

தஞ்சை ஜில்லாவில், நன்னிலத்திற்குக் கிழக்கே "திருக்கண்ணபுரம்" என்று பெயருள்ள ஒரு சிறந்த விஷ்ணு ஸ்தலம்இருக்கிறது. அங்கே கோயில்கொண்ட எம்பெருமானுக்கு சௌரி ராஜன் என்று திருநாமம். சௌரி என்பதற்கு விஷ்ணு என்று அர்த்தம். விஷ்ணு ஸகஸ்ர நாமத்தில் இரண்டுமுறை சௌரி என்று வந்திருக்கின்றது. அவற்றில் ஒன்றுக்கு உத்பலாவதக க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானது திருநாமம் என்று பட்டர் உரையெழுதி யிருக்கிறார். யாகவும், இப்போது சௌரிராஜன் என்பதற்கு சவரியை முடித்தவர் என்று பொருள் செய்துவிட்டார்கள். சவரி என்பது பெண்கள் தலைமயிரோடுவைத்து முடித்துக்கொள்ளும் ஒருவித மானின் வால் மயிர். இம் மயிரை, பெருமாள் முடித்துக் கொண்டதற்கு ஒரு கதையுங் கட்டி விட்டார்கள். அது என்னவென்றால்:— சோழராஜன் ஒரு சமயம் ஸ்வாமி தரிசனஞ் செய்வதற்கு வந்தானாம். அதற்குச் சிறிது முன்பு கோயில் அருச்சகன் பெருமாளுக்குச் சாத்தியிருந்த மாலைகளைக் களைந்து தாசி கையில் கொடுத்துவிட்டானாம். அரசன் வருகிறானென்று தெரிந்ததும் வேகமாக ஓடி, தாசி தலையிற் சூட்டி யிருந்த மாலையை எடுத்துக்கொண்டு வந்து, சுவாமி பிரசாதமென்று அரசன் கையிற்கொடுக்க, அவன் அதை வாங்கிப்பார்த்து, மயிரிருப்பது தெரிந்து அருச்சகனை நோக்கி, "இதில் மயிரிருப்பதற்குக் காரணமென்ன?" என்று கோபித்துக் கேட்க, அருச்சகன் பயந்து, "ஸ்வாமிக்குத் தலைமயிர் உண்டு" என்று சொல்லிவிட்டானாம். அரசன் ஆச்சரியப்பட்டு, "அப்படியா! பார்ப்போம்" என்று சொல்லிப் பரிசோதிக்க வந்தபோது, பக்த பராதீனனாகிய பெருமான் அருச்சகனைக் காட்டிக் கொடுக்காமல், அவன் சொல்லிய வண்ணமே மயிர் முடியோடு காட்சி கொடுத்தாராம். அதனால், சௌரிராஜன் என்று திருநாமமுண்டாயிற்றாம்.

## யானையுண்ட விளாம்பழம்

யானை விளாம்பழத்தைக் கடித்துச் சாப்பிடாமல், அப்படியே முழுசாக விழுங்கி விடுமாம். பின் அது மலத்தோடு விழும்போதும் முழுசாகவே காணப்படுமாம். உடைத்துப் பார்த்தால் உள்ளுக்குள் ஒன்றுமே இராதாம். இது ஜனங்கள் சொல்வது. சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் 203-ம் பாட்டில் வேழந்தற்றிய வெள்ளில் என்று வந்திருக்கிறது. அதற்கு யானையுண்ட விளாம்பழம் என்று அர்த்தம். அப் பாட்டின் குறிப்பிலே 'யானை விளாம்பழத்திற்கு வருவதோர் நோய்' என்று நச்சினார்க்கினியர் எழுதி யிருக்கிறார். கஜம் உண்ட கபித்தம்போல (கபித்தம் - விளாம்பழம்) என வந்த இடத்தில் ஸம்ஸ்கிருத வித்வான்கள், கஜம் என்பதற்கு ஒரு கிருமியின் நாம விசேஷம் என்று பொருள் செய்கிறார்கள். 'உலங்குண்ட விளங்கனிபோல்' எனத் திவ்ய பிரபந்தத்தில் வந்திருக்கிறது. (உலங்கு - கொசு) துதிக்கையுள்ள கொசுவுக்கு யானைக் கொசு என்று பேர். அது, விளாம்பழத்தின்மேலே மொய்த்து உள்ளிருக்கிற ரஸத்தை வெளியிலிருந்தபடியே துதிக்கையால் கிரகித்து விடுமாம். இவற்றை யெல்லாம் பார்க்கும்போது யானை விழுங்கும் என்ற ஜனங்களின் கொள்கை ஆதாரமற்றதாகத் தெரிகிறது.



# முரசு

(சிந்து)

காப்பு

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல்லா முதலாகும்—ஒரு
தெய்வந் துணைசெய்ய வேண்டும். 1

நூல்

சாதி

வேத மறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்,
நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன். 2

பண்டங்கள் விற்பவன் செட்டி—அவை
பண்ணுமவன் தொழிலாளி
தொண்டரென் றோர்வகுப் பில்லை—தொழில்
சோம்பரைப் போலிழி வில்லை. 3

நாலு வகுப்புமிங் கொன்றே—இந்த
நான்கினி லொன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடு மானுடச் சாதி. 4

ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடக் காப்பவள் தாயாம். 5

ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரு மோர்குல மன்றோ?
மேவி யனைவரு மொன்றாய்—நல்ல
வீடு நடப்பது கண்டோம். 6

சாதிப் பிரிவுகள் காட்டி—அதில்
தாழ்வென்று மேலென்றுஞ் சொல்வோர்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமுஞ் சண்டைகள் செய்வார். 7

சாதிக் கொடுமைகள் வேண்டாம்— அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர மாண்புறச் செய்வோம். 8

பெண்

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார். 9

கண்களி ரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை தீர்ந்திடுங் காணீர். 10

தெய்வம்

தெய்வம் பலபல சொல்லி—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்,
உய்வ தனைத்திலு மொன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம். 11

யாரும் பணிந்திடுந் தெய்வம்—பொருள்
யாவினு நின்றிடுந் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வ மொன்று—இதிற்
பற்பல சண்டைகள் வேண்டாம். 12

நிறம்

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக்கொரு நிற மாகும். 13

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி. 14

எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவு மொரேதர மன்றோ?
இந்த நிறஞ்சிறி தென்றும்—இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ? 15

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர். 16

நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணில மானுட ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம். 17

அன்பு

அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரு நிகராம்

இன்பங்கள் யாவும் விளையும்—இங்கு
ய்ாவரு மொன்றென்று கொண்டால். 18
அன்பென்று கொட்டு முரசே—அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு
துன்பங்கள் யாவுஞ் சிதறும்—வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால். 19
உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம்பெரி துண்டு வையகத்தில்—இதில்
எதுக்குச் சண்டைகள் செய்வீர்? 20
மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்
சிரத்தை யுடையது தெய்வம்—இங்கு
சேர்த்த வுணவெல்லை யில்லை. 21
வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம். 22
உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனித ரெல்லோரும்
திடங் கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ? 23
வலிமை யுடையது தெய்வம்—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்
மெலிவு கண்டாலுங் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ? 24
தம்பி சற்றே மெலிவானால்—அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்குங் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ? 25
அன்பென்று கொட்டு முரசே—அதில்
யார்க்கும் விடுதலை யுண்டாம்
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்று பதம்பெற்று வாழ்வார். 26
அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும். 27
பாருக்குள்ளே சமத் தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமை செய்யாவாம்—புவி
யெங்கும் விடுதலை செய்யும் 28
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை யுயர்த்திட வேண்டும். 29
ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம். 30

**சி. சுப்பிரமணிய பாரதி.**

## சுதேசியம்

சென்னப்பட்டணத்தில் பாதிரிகள் சபையின் முன்பு ஸ்ரீமான் காந்தி செய்த உபந்நியாஸம்:—

### சுதேசியம் என்றால் என்ன?

சுதேசியம் என்பது யாது? இதைப்பற்றி மிகவும் யோசனைசெய்து பார்த்ததில் பின் வருமாறு லக்ஷணம் சொல்லலாமென்று தோன்றுகிறது. நம்மைச் சூழ்ந்திருக்கும் பொருள்களிலே தூரத்தில் இருப்பனவற்றை விட்டு ஸமீபமானவற்றையே உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். மனிதர்கள் விஷயத்திலும் இங்ஙனமே, நமது பக்கத்திலிருப்போருக்குத்தான் முதலாவது ஸேவை புரியவேண்டும். இந்த குணத்துக்கு சுதேசியம் என்று பெயர்.

இந்த முறைப்படி மதவிஷயத்தை யோசனைசெய்து பார்த்தால், ஒருவன் தனது பூர்வீக மதத்திலேயே கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்றேற்படுகிறது. அதாவது, என்னைச் சூழ்ந்திருக்கும் மதங்களிலே மிகவும் ஸமீபமானதை நான் கைக்கொள்ளவேண்டும். அந்த மதத்திலே குறைகள் இருந்தால், அக்குறைகளை நீக்கி அதற்கு நன்மை செய்யவேண்டும். இங்ஙனமே, ராஜாங்க விஷயத்தைக் கவனிக்குமிடத்து சுதேசியமான ராஜ்ய நியதிகளையே கைக்கொள்ளவேண்டும். அவற்றிலே பிழைகள் இருப்பதாக நிச்சயப்பட்டால் அப்பிழைகளைக் களைந்து உபசரிக்கவேண்டும். செல்வ வளர்ச்சி விஷயத்திலும் இப்படியே எனக்கு மிகவும் ஸமீபத்திலிருப்போர் செய்து விற்கும் பொருள்களையே நான் வாங்கவேண்டும். இவருடைய கைத்தொழில்களில் குற்றங்குறைகளிருந்தால், அவற்றை நீக்கி, அந்தத் தொழில்கள் செம்மையாகவும் ஸம்பூர்ணமாகவும் திருந்தும்படி செய்யவேண்டும். இவ்விதமான சுதேசியம் அனுஷ்டானத்துக்கு வருமானால் அது "கிருதயுக"த்திலே கொண்டுவிடுமென்று கருதப்படுகிறது. ஆம் நம்முடைய வாழ்நாளுக்குள்ளே "கிருதயுகம்" ஸ்தாபனமாகாது என்பதைக்கருதி நாம் அதற்குப் பாடுபடாமல் விட்டுவிடலாமா? அதுபோலவே, சுதேசியமும் இன்னும் சில தலைமுறைகள் கழிந்தபிறகுதான் பரிபூர்ணமாக நிறைவேறு மென்பதை உத்தேசித்து நாம் அதைக் கைவிடுதல் தகாது.

### ஹிந்து மதம்

மேலே சுதேசியம் மூன்று வகைகளாகச் சொல்லப்பட்டது. இந்த மூன்றையும் தனித்தனியே சுருக்கமாக ஆராய்ச்சி செய்வோம். ஹிந்து மதத்தில் தனது கிரியைகள் முதலியவற்றை மாற்ற விருப்பமில்லாமல் இறுகப் பிடித்துக்கொள்ளும் குணம் ஏற்பட்டுவிட்டது. இதற்குள்ளே ஒருவித சுதேசிய குணம் ஏறியிருக்கிறது. இதனால் இந்த மதம் மிகவும் வலிமையுடையதாக விளங்குகிறது. அன்ய மதஸ்தரைக் கலைத்து மாற்றும் குணம் இதற்கில்லை. பிறர் வழிக்குப் போகாமலிருக்கும் தன்மையில் ஹிந்துமதம் மிகச்சிறந்தது. புத்த மதத்தை ஹிந்துமதம் ஓட்டிவிட்டதென்று சிலர் சொல்லுவது பிழையென்று நினைக்கிறேன். புத்தமதத்தை இது தன்னோடு சேர்த்து ஒன்றாக்கிக்கொண்டது.

### பாதிரிகளிடம் ஒரு வேண்டுகோள்

சுதேசிய குணமிருப்பதினாலே ஹிந்துக்கள் தமது மதத்தை மாற்றிக்கொள்வதிலே ஸம்மதமில்லாதிருக்கிறார்கள். "நம்முடைய மதமே உயர்ந்தது" என்றகருத்தினாலன்று "நம்முடைய மதத்திலே குறைகளிருந்தால் சீர்திருத்தங்கள் செய்துகொள்ளலாமென்ற அறிவினால் மாறாதிருக்கிறார்கள்" நான் ஹிந்துமதத்தைப்பற்றிச் சொல்லிய வார்த்தை உலகத்திலுள்ள மற்றப் பெரிய மதங்களின் விஷயத்திலும் உண்மை தானென்று நம்புகிறேன். ஆனால் ஹிந்து மதத்திலே இந்த குணம் விசேஷமென்று சொல்லுகிறேன்; அவ்வளவுதான். இத்தனை பூர்வ கதையுடன் நான் சொல்ல முயற்சி செய்யும் விஷயம் யாதெனில், கேளுங்கள் பாதிரிகளே, நீங்கள் ஏற்கெனவே இந்த தேசத்துக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறீர்கள். இன்னும் செய்து கொண்டுவருகிறீர்கள். இதன் பொருட்டு இந்த தேசத்தாராகிய நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றி கடன்பட்டிருக்கிறோம். இனிமேல் பிறரை கிறிஸ்துவராக மாற்றும் நோக்கத்தை விட்டுவிட்டு லோகோபகாரமான காரியங்களை மாத்திரம் செய்து வருவீர்களானால் இதுவரை செய்ததைக் காட்டிலும் அதிக நன்மை யுண்டாகும் கிறிஸ்து மதத்தின் உட்கருத்துக்கு ஒத்தசெய்கையாகவும் இருக்கும். நான் இவ்வாறு சொல்வதைக் குறும்பு வார்த்தையாக நினைத்து விடலாகாது. யதார்த்தமாகவே இந்த யோசனையை உங்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் வார்த்தைகளிலே நீங்கள் கவனம் செலுத்தும்படி வேண்டுவதற்கு நான் கொஞ்சம் உரிமையுடையவன். எப்படி யெனில், நான் உங்கள் 'பைபிள்' புஸ்தகத்தைக் கூடியவரை சிரத்தையுடன் கற்றுத் தெரிந்துகொண்டிருக்கிறேன். எனது பிரமாண சாஸ்திரங்களிலே ஒன்றாக அந்தப் புஸ்தகத்தை மதிக்கிறேன். உங்கள் வேதத்திலே "குன்றின் மேலிருந்து கிறிஸ்து செய்த உபதேசம்" என்ற அமிசம் எனதுள்ளத்திலே அனேகமாக பகவத்கீதைக்கு ஸமானமாகிய அதிகாரத்துடன் நிலவுகிறது. உங்களுடைய பக்திப் பாடல்களிலே சிலவற்றைப் பாடும்போது எனக்கேற்படும் சிரத்தை எந்தக் கிறிஸ்துவனுடைய சிரத்தையிலும் குறைவு பட்டதன்று. உங்களிலே வெவ்வேறு கிளைகளைச் சேர்ந்த பல கீர்த்தி மிக்க பாதிரிகளிடம் நான் சாஸ்திர விசாரணை செய்திருக்கிறேன். இன்றுவரை அவர்களிலே பலருடன் நண்பனாகி மகிழ்ந்து வருகிறேன்.

ஆதலால், மேலே நான் சொன்ன யோசனையை தூபிமானமுடைய ஹிந்து ஒருவன் சொல்லியதென்று புறக்கணிக்கலாகாது. பொதுவாக மதவிஷயத்தைப் பக்ஷபாத மில்லாமல் பணிவுடன் கற்றவனும் கிறிஸ்து மதத்தினிடம் மிகுந்த சார்புடையவனுமாகிய ஒருவன் சொல்லியதாகக் கொள்ளவேண்டும்.

### "ஞான ஸ்நானம்"

"உலகமெங்கும் போவீர்" என்று தொடங்கும் உங்களுடைய பூர்வ வாக்கியத்திற்கு மிகவும் குறுகிய பொருள் கொண்டு விட்டதாகத் தோன்றுகிறது. அதன் உட்கருத்தை நழுவ விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அன்யமதஸ்தரைக் கிறிஸ்துவராக்கி "ஞானஸ்நானம்" செய்விக்கிறீர்கள். இந்த ஞானஸ்நானம் உங்களிலே பலருக்கு வெறும் பெயருக்கு மாத்திரந்தானென்பதை நான் அனுபவத்தா லறிவேன். இது யாராலும் மறுக்க முடியாத செய்தி. சிலஸமயங்களில் பாதிரிகளின்

ஞானோபதேசம் ஹிருதயத்தை நோக்கிச் செல்லாமல், வயிற்றை நோக்கிச் செல்லுவதுமுண்டு. எப்போதும் எவ்விடத்திலும் நீங்கள் பிற மதஸ்தரைச் சேர்த்துக் கொள்ளுவதிலிருந்து சிலருடைய மனமேனும் புண்படாம விருப்பதில்லை. இவ்வாறு புண்படுத்துதல் அநாவசியமென்று நான் நினைக்கிறேன். உலகத்திலுள்ள பெரிய மதங்களிலே ஒருவன் எதில் இருந்த போதிலும் அதிலேயே ஹிருதய சுத்தியடைந்து புதிய ஜென்மம் எடுப்பதற்கு வழியுண்டென்பதும் எனக்கு அனுபவத்திலே தெரியும். இப்போது நான் ஒரு வார்த்தை சொல்லப் போகிறேன். அதிலே சிலருக்கு வருத்தமுண்டாகலாம். எனிலும், ஐரோப்பாவிலே நடந்து வரும் அதிபயங்கரமான குரூர யுத்தத்தை நோக்கும்போது ஸமாதான குமாரனாகிய கிறிஸ்துவின் உபதேசம் அங்கே ஜனங்கள் மனதில் நன்றாகப் பதியவில்லையென்று தோன்றுகிறது. கிறிஸ்து மார்க்கத்தின் உண்மைப் பொருள் இன்னதென்பதைக் கிழக்குத்திசையார் ஐரோப்பாவுக்கு விளக்கித் தரவும் இடமிருப்பதாகத் தெரிகிறது.

## ராஜரீக சுதேசியம்

மதவிஷயத்திலே உங்களிடம் உதவிகேட்டேன். அவ்வுதவி தருவதில் உங்களுக்கு விசேஷ சுதந்திரமுண்டு. அத்துடன் ராஜரீக விஷயங்களிலும் உங்களிடம் உதவி கேட்க விரும்புகிறேன். மதத்திற்கும் ராஜரிக விஷயத்துக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாதென்ற கொள்கை எனக்கில்லை. மதவுணர்ச்சியிலிருந்து பிரிக்கப்படுமானல் ராஜரிக விவஹாரம் பிணத்தைப் போலாகிவிடும். பிறகு புதைக்கத்தான் உதவும். யதார்த்தத்திலே நீங்களும் ராஜரிக விவஹாரங்களில் சக்திசெலுத்திக்கொண்டு தான் வருகிறீர்கள். மேற்கூறிய விவஹாரங்களிரண்டையும் பிரித்துவிட வேண்டுமென்று சிலர் இப்போதுகூட முயற்சி செய்கிறார்கள். இந்த முயற்சி நடைபெறு திருந்தால், அவ்விரண்டிலும் பலமுறை காணப்படுவதாகிய சீர்கேடு தோன்றியிராது. இந்த தேசத்தின் ராஜரீக நிலை இப்போது சந்தோஷமாக இல்லை யென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சுதேசிய தர்மத்தை இந்த விவகாரத்திலே கொண்டு வரும்போது என்மனம் கிராமப் பஞ்சாயத்துக்கள் முதலிய சுதேசிய முறைகளை நாடிச் செல்லுகிறது. பாரத தேசம் உண்மையிலே குடியரசு நாடு, அப்படி யிருப்பதனாலேதான் இதுவரை எத்தனையோ அடிகளுக்குத் தப்பி இன்னும் உயிர் பிழைத்திருக்கிறது. இந்த தேசத்திலே பிறந்தோராயினும் வெளிநாடுகளிலிருந்து வந்தோராலும் இதுவரை எல்லா ராஜாக்களும், அதிபதிகளும், தீர்வை வசூல் செய்யும் சங்கதி யொன்றைத் தவிர மற்றெதிலும் மகா ஜனங்களின் வாழ்க்கையைத் தீண்டியதில்லை. ராஜாவுக்குச் செலுத்திவிட்டு ஜனங்கள் மற்றெல்லாக் காரியங்களிலும் தங்கள் இஷ்டப்படியே நடந்துகொண்டு வந்திருக்கிறார்கள். நமது விஸ்தாரமான ஜாதிக்கட்டுப்பாடு ஜனங்களுக்கு மதஸம்பந்தமாக உதவியது மாத்திரமேயன்றி ராஜரீக விவகாரங்களிலும் பயன்பட்டு வந்தது. கிராமத்து ஜனங்கள் ஜாதிக்கட்டுகளின் மூலமாகவே கிராமக்காரியங்களை நடத்திவந்தனர். அரசாட்சி செய்வோர் கொடுஞ்செயல்கள் செய்தால் அவற்றை எதிர்ப்பதற்கும் அதுவே வழியாக இருந்தது.

## ஜனக்கட்டு

பல துண்டுகளால் ஒரு யந்திரம் அமைப்பதுபோலவும், பல அவயவங்களாலே ஒரு உடல் கட்டியிருப்பது போலவும் பல மனிதரை ஒன்றுசேர்த்துப் பொதுநலத்தின்பொருட்டாக ஒருயிர்போல் தொழில் செய்யும்படி புரியும் திறமைக்கு ஜனக்கட்டு என்று பெயர். இந்தத் திறமை நம்மிடம் ஆச்சரியமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஜாதிக்கட்டு ஏற்படுத்திய தேசத்தாருக்கு இந்த வலிமை கிடையாதென்று சொல்லுதல் சாத்தியமில்லை. சென்ற வருஷம் ஹரித்துவாரத்திலே நடந்த "கும்பமேளா" என்ற உத்ஸவத்துக்குப் போய்ப் பார்த்திருந்தால் அங்கே பத்துலக்ஷத்துக்கு மேலாகக் கூடியிருந்த ஜனங்களனைவருக்கும் யாதொரு சிரமத் தோற்றமில்லாதபடி ஸௌகர்யங்கள் செய்துகொடுத்த நமது ஜாதிக்கட்டின் ஸாமர்த்தியம் விளங்கியிருக்கும். இப்படியிருந்தும் நமது தேசத்தாருக்கு ஜனக்கட்டு உண்டாக்கும் திறமை கிடையாதென்று பேசுதல் பலருக்கு வழக்கமாய்விட்டது. ஆனல், இந்த வார்த்தையானது நமக்குள்ளே புதிய ஐரோப்பிய ஸம்பிரதாயங்களின்படி பயிற்சி பெற்றவர்களின் விஷயத்தில் ஒருவாறு உண்மைதானென்று தோன்றுகிறது. சுதேசிய தர்மத்திலிருந்து நாம் விலகியது பெரு விபத்தாக முடிந்தது. நமது காரியங்களுக்கெல்லாம் அது பயங்கரமானதோர் தடையாக வந்து மூண்டது.

## தேச பாஷைகள்

நமது புதிய படிப்பாளிகள் அன்ய பாஷை யொன்றின் வாயிலாகக் கல்விப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இங்ஙனம் கல்விப்பயிற்சி கொண்ட நமக்கு தேசத்துப் பொது ஜனங்களின்மீது செல்வாக்குண்டாகவில்லை. மஹாஜனங்களுக்கு நாம் பிரதிநிதிகளாக நிற்க விரும்புகிறோம். நம்மால் முடியவில்லை. ஜனங்கள் ஆங்கிலேய உத்தியோகஸ்தரை எவ்வளவு அங்கீகாரம் செய்து கொண்டிருக்கிறார்களோ அதற்குமேல் அதிகமாக நம்மை அங்கீகாரம் செய்யவில்லை. அவர்களுடைய உள்ளக் கருத்துகளை அறிந்துகொள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தர் திறமை யற்றிருப்பது போலவே நாமும் இருக்கிறோம். அவர்களுடைய மனோபீஷ்டங்கள்வேறு நம்முடைய மனோபீஷ்டங்கள் வேறு. நமக்குள்ளே உடைப்புண்டாய் விட்டது. ஆகவே, இப்போது நம் முன்னே தோன்றுவது ஜனக்கட்டுச் செய்வதிலே ஸாமர்த்தியக் குறைவன்று; ஜனங்களுக்கும் பிரதிநிதிகளுக்கு மிடையே தொடர்பில்லாமை தோன்றுகிறது. சென்ற 20 வருஷங்களில் நாம் தேசபாஷை மூலமாகக் கல்விப் பயிற்சி செய்திருந்தோமானல், நமது பந்துக்கள், வேலைக்காரர், அக்கம் பக்கத்தார் எல்லோருக்கும் நம்மறிவு பயன் பட்டிருக்கும். ஜகதீச சந்திரவஸு, பிருதுவீச சந்திரராய் போன்ற நமது மஹாபண்டிதர் கண்டு பிடித்திருக்கும் புதுமை யெல்லாம் பாரத ராமாயணங்களைப் போல், வீடுதவறுமல் தெரிந்திருக்கும் இன்றைய நிலைமையில், அந்தப் புதுமைகளை யெல்லாம் வெளிநாட்டுப் பண்டிதர் கண்டு பிடித்தால் நமது ஜனங்களுக்கு எப்படியோ அப்படியே தானிருக்கிறது. எல்லா சாஸ்திரங்களையும் தேச பாஷைகளின் மூலமாகவே கற்றிருந்தோமானல் அந்த பாஷைகள் இதற்கு முன் மிகவும் ஆச்சரியமான வளம் பெற்று நிற்கும். கிராமசுத்தி மூலதன விவஹாரங்களுக்கெல்லாம் நெடுநாளைக்கு முன்னே தீர்ப்புண்டாயிருக்கும். கிராமப் பஞ்சாயத்துக்கள் விசேஷ சத்தியுடன் வேலை செய்து கொண்டிருக்கும். நமது அவஸரங்களுக்கு வேண்டிய ஸ்வராஜ்யமும் பெரும்பகுதி கைகூடி யிருக்கும். நமது புண்யபூமியில் கொலைக் கூட்டங்கள் பழக்குவதாகிய அவமானக் காட்சி தோன்றியிராது. இன்னும் முழுகிப்போக வில்லை. இனி யேனும் தேச பாஷைக் கல்வியைக் கைதூக்கி விட்டால் பயனுண்டாகும். இந்தக் காரியத்திலே பாதிரிக்கூட்டத்தார் தமக்கு இஷ்டமுண்டானல் மற்றெந்தக் கூட்டத்தாரினும் அதிகமாக உதவி செய்ய முடியும்.

## கைத்தொழிலிலும் வியபாரத்திலும் சுதேசீயம்

இப்போது சுதேசீயத்தின் கடைசி அமிசத்தைக் கவனிப்போம். பொது ஜனங்கள் வறுமையிலே மூழ்கிக் கிடப்பதற்கு முக்கியமான காரணம் எது? கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் சுதேசீயத்தைவிட்டு விலகியதே மூலகாரணம். வெளிநாட்டிலிருந்து வியாபாரப் பண்டம் ஒன்றும் இங்குவந்து புகாதிருந்தால் இன்று பாரததேசம் தேனும் பாலும் பெருகிநிற்கும். இது தெய்வத்துக்கு இஷ்டமில்லாமல் போய்விட்டது. நாம் பேராசைபற்றி நின்றோம். இங்கிலாந்தும் அப்படியேயிருந்தது. இங்கிலாந்துக்கும் பாரத தேசத்துக்கும் ஆதியிலே சம்பந்தம் தவருகவே ஏற்பட்டது. ஆனல் இப்போது இங்கிலாந்து இங்கே தங்கியிருப்பது தவறெண்ணத்துடனன்று. பாரத ஜனங்கள் பொருட்டாக அவர்களுடைய உடமைக்கு உத்தரவாதியாக நின்று தான் பரிபாலனஞ் செய்து வருவதாக இங்கிலாந்து வெளிப்படச்சொல்லிவிட்டது. இது உண்மையானல் மாஞ்செஸ்டர் வியாபாரிகள் நம்மைத் தொலைப்படுத்தாமல் விலகி நிற்கும்படி செய்யவேண்டும். சுதேசீயம் எல்லா தேசங்களுக்கும் பொது. நம்மை விட்டுவிடுவதனாலே மாஞ்செஸ்டர் வியாபாரிகளுக்கு நீடித்த தீங்குண்டாகாது. சிறிது காலத்திற்கு ஸங்கடமுண்டாகும்.

பழிவாங்கும் பொருட்டாக நடத்தும் 'பஹிஷ்கார' முயற்சியாக நான் சுதேசீயத்தைக் கருதுவதில்லை. எல்லாரும் எல்லா தேசத்தாரும் கைப்பற்ற வேண்டியதான, தெய்வீக தர்மமென்று நான் அதைக் கருதுகிறேன். நான் அர்த்த சாஸ்திர பண்டிதனில்லை. ஆயினும் நான் வாசித்த சிலநூல்களில் இங்கிலாந்து தேசமும் தனக்கு வேண்டிய உணவைத் தானே எளிதாக விளைவித்துக்கொண்டு பிறர் கைபார்த்து நிற்காமல் வாழலாமென்று தெரிகிறது. இந்த வார்த்தை சிலருக்கு வெறும் கேலியாகத் தோன்றக்கூடும். மிகவும் இறக்குமதி செய்துவரும் தேசங்களிலே இங்கிலாந்து ஒன்றென்பதைக் கருதுமிடத்து ஒருவேளை என் அபிப்பிராயம் தவருக முடியலாம். ஆனல் பாரததேசம் தன் வாழ்வை நோக்கும்போது வேறெந்த நாட்டின் வாழ்வைக் கருதியும் தான் வருந்துதல் சாத்தியமில்லை. ஸஹோதரவதை பொறாமை முதலிய பல தீங்குகளுக்குக் காரணமாக இருக்கும் அறிவுகெட்ட நாசகரமான போட்டியில் நமது தேசம் தலையிடுதல் அவசியமில்லை; தலையிடக்கூடாது. ஆனல் நமது நாட்டுக் கோடீசுவரர்கள் உலக வியாபாரப்போரில் சேராதிருக்கும்படி எவ்வாறு தடுப்பது? சட்டத்தினல் தடுக்கலாமென்பது யோசிக்கத் தகாத விஷயம். பொது ஜன அபிப்ரா

யத்தின் வலிமையாலும் சரியான படிப்பினாலும் வெகுதூரம் தடுத்துவிடலாம்.

நமது கைத்தறி வேலை சாகும் நிலையிலிருக்கிறது. சென்ற வருஷம் எனது யாத்திரைகளிலே இயன்றவரை பல நெசவுக்காரரைப் பார்த்தேன். ஒரு காலத்தில் மிகவும் செழிப்புற்றோங்கிய இந்த கௌரவமான தொழிலிலே நஷ்டமடைந்து எத்தனை குடும்பத்தார் இதினின்று விலகிவிட்டார்களென்பதைக் காணுமிடத்து என் மனம் புண்ணாயுலைந்தது. நாம் சுதேசிய தர்மத்தை அனுஷ்டிக்க விரும்பினால், நமக்கு அவசியமான பண்டங்களைத் தயார்செய்து கொடுப்பதற்கு நம்மூரிலேயே மனிதரைக் கண்டு பிடிக்கவேண்டும். எப்படித் தயார்செய்து கொடுப்பதென்று அவர்களுக்குத் தெரியவில்லை யானால், நாம் வழி கற்றுக்கொடுக்கவேண்டும். யோக்கியமான தொழில் வேண்டி நிற்கும் மனிதர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும். இது நாமெல்லோரும் செய்யவேண்டிய கடமை. இவ்வாறு செய்தால் தேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் தன்னைத்தான்ஸம்ரக்ஷணை செய்துகொள்ளக்கூடியதாகவும் தன்னிலே தான் நிறைவுற்றதாகவும் இருக்கும். உள்ளூரிலே செய்யமுடியாத அவசியப் பண்டங்களைமாத்திரம் அயலூராரிடமிருந்து வாங்கி கொள்வோம்.

இதெல்லாம் பைத்தியப் பேச்சென்று சிலர் நினைக்கலாம். ஆனால் பாரததேசமோ பலவிதங்களில் பைத்தியங் கொண்டது. தாகத்தினால் தொண்டை வறண்டுபோ யிருக்கும்போது வழியிலே தயையுள்ள ஒரு மகம்மதியர் ஜலம் கொடுத்தால் வாங்கிக் குடிக்காமலிருத்தல் பைத்தியமன்றோ? ஆயினும் ஹிந்துக்களிலே ஆயிரக்கணக்கான ஜனங்கள் தாகத்தினால் உயிரை விட்டாலும் விடுவார்களேயன்றி மகமதியர் வீட்டுஜலம் வாங்கிக் குடிக்கமாட்டார்கள். இங்ஙனம் பித்துக்கொண்டவர்களின் மனதிலே சுதேசியத் துணிகளையே கட்டவேண்டுமென்பதும், சுதேசிய உணவுகளையே உண்ணவேண்டுமென்பதும் தெய்வத்தின் ஆக்கினையென்ற உறுதி யுண்டாகுமானால், பிறகு அவர்கள் வேறெந்தத் துணியும் உடுக்கமாட்டார்கள். வேறெந்த உணவும் உண்ணமாட்டார்கள். லார்டு கர்ஸனாலே தேயிலைக் கஷாயம் குடிக்கும் வழக்கம் இத்தேசத்தில் பிரபலமடைந்தது. இப்போது இந்தக் கொடிய ஔஷதம் தேச முழுமையும் வியாபித்து விடும்போலிருக்கிறது. இதனால் லக்ஷக்கணக்கான ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஜீர்ணக்கருவிகெட்டுப்போய்விட்டது. எற்கெனவே செலவுக்குக்கஷ்டப்படும் ஜனங்களுக்கு இஃதோர் அனாவசியச் செலவாக வந்து மூண்டிருக்கிறது. லார்டு ஹார்டிஞ்சு காலத்திலே சுதேசிய அனுஷ்டானத்தை வழக்கப்படுத்தி வைத்தாரானால் நல்லது. பிறகு பெரும்பாலும் தேசமுழுதும் அன்னிய வஸ்துக்களை விலக்கிவிடும்.

பகவத் கீதையில் ஒரு சுலோகமிருக்கிறது. அதை விரிவாக மொழிபெயர்த்தால் “மேற்குலத்தார் எந்தெந்த வழக்கங்களை அனுசரிக்கிறார்களோ அவற்றையே பொது ஜனங்களும் அனுசரிக்கிறார்கள்” என்றருத்தமாகிறது. நமக்குள்ளே அறிவாளிகளெல்லோரும் சுதேசிய விரதத்தைக் கைக்கொண்டால் நமக்கு நேரிட்டிருக்கும் தீமையை ஒழித்தல் சிரமமில்லை. அது வரை மிகுந்த அசௌகர்யம் ஏற்படலாம்; அது பிரமாதமில்லை.

## அன்னியதேசத்துச் சரக்குகளைத் தீர்வை விதித்து உள்ளே வராமல் தடுத்துவிட வேண்டும்

மனிதர் வாழ்க்கையிலே எந்த விஷயத்திலும் ஸர்க்கார்ச் சட்டம் வந்து குறுக்கிடுதல் பெருந்தொல்லையென்றே நான் கருதுகிறேன். ஒரு தீமையை நிவர்த்தி செய்யும் பொருட்டாகச் சட்டம் வந்து பலவந்தம் செய்யும்போது அந்தச் சட்டத்தை இரண்டாம் பக்ஷத்தீமையாகக் கொள்ளலாம் இருந்தாலும், அன்னிய தேசத்து ஸாமான்களின் மீது சட்டசபையார் காப்புத் தீர்வை அல்லது தடைத்தீர்வை போடுவார்களானால் அதை நான் பொறுத்துக் கொண்டிருப்பேன். அதில் நான் ஸந்தோஷப்படுவேன். ஆம், அது செய்யவேண்டுமென்று நான் மன்றாடுகிறேன். (காப்புத் தீர்வை நமது தேசத்தொழில்களைக் காப்பாற்றும் பொருட்டாக அன்னியதேச வஸ்துக்கள் மலிவாக விற்காதபடி அவற்றின்மேல் விதிக்கப்படும் தீர்வை. நேட்டால் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலே ஒன்று. மோரிஸ் தீவும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுதான். அப்படியிருக்க நேட்டால்காரர் தமது தேசத்து சர்க்கரையை காத்துக் கொள்ளும் பொருட்டு மோரிஸ் சர்க்கரைக்குத் தீர்வை யேற்படுத்தினார்கள். அன்னிய தேசத்து சாமான்களைத் தீர்வையின்றி உள்ளேவிடும் முறைமைக்கு பந்தங்களில்லாத வியாபாரம் என்று பெயர் சொல்லுகிறார்கள். இந்த பந்தமற்ற வியாபாரம் நமது தேசத்துக்குத் தீங்கானது. இதை நமது தேசத்தின் மேல் இங்கிலாந்து சுமத்தியது நமக்குப் பிரதிகூலமேயன்றி வேறில்லை.



## சுதேசீயத்தைப் பற்றிய சில ஆக்ஷேபங்கள

மற்றதெப்படி யிருந்தாலும் கைத்தொழில் வியாபார விஷயங்களில் பாரத தேசத்தார் சுதேசியத்தை அனுசரிப்பது சாத்தியமில்லையென்ற வார்த்தை பல முறை கேட்டிருக்கிறோம். இங்ஙனம் ஆட்சேபனை சொல்லுவோர் சுதேசியத்தை தர்மமாக மதிப்பதில்லை. அஃதோர் தேசாபிமான முயற்சியென்றும் அசௌகரியம் ஏற்படும்போது அதை விட்டுவிட வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். நான் சொல்லுகிற சுதேசியம் அப்படியில்லை. நான் இதை ஒரு தெய்வ நியதமான விரதமென்றும், சரீரத்துக்குளத்தனை கஷ்டமுண்டானபோதிலும் கவனியாமல் இதைப் பரிபாலிக்க வேண்டுமென்றும் கருதுகிறேன், இந்த விரதத்தைக்கைக்கொண்டோர் ஒரு ஊசி அல்லது குண்டூசி பாரத தேசத்தில் செய்யப்படவில்லை யானால் அதற்கென் செய்வதென பயந்துவிடமாட்டார்கள். இப்போது அத்தியாவசியமாகத் தோன்றும் நூறு பண்டங்களை சுதேசிய விரதமெடுப்பவன் அநாவசியமென்று நினைக்கப் பழகிவிடலாம்.

மேலும் சுதேசியம் ஒரு நாளிலே, ஸம்பூர்ணமாக நிறைவேறிவிடாது. அது ஓயாத பிரயத்தனத்தால் நாளடைவிலே நிறைவேண்டிய நோக்கம். அசாத்தியமென்ற காரணத்துக்காக சுதேசியத்தைத் திரஸ்காரம் செய்ய விரும்புவோர் இதற்கு முக்கியமான விஷயத்தை மறந்துவிடுகிறார்கள். அந்த நோக்கம் நிறைவேறவேண்டுமென்ற உண்மையான விருப்பமுடையோர் குறிப்பிட்ட சில சாமான்களில் மாத்திரம் சுதேசீயத்தைக் கொண்டு தேசத்தில் இப்போது செய்யப்படாத ஸாமான்களைக் கொஞ்ச காலத்திற்கு வெளியிலிருந்து தருவித்து உபயோகிக்கலாம்.

சுதேசீயத்துக்கு விரோதமாக இன்னுமொரு ஆக்ஷேபம் சொல்லுகிறார்கள். அதனையும் ஆராய்ச்சி செய்து முடிப்போம். மனுஷ்யஜாதி முழுதும் ஸகோதரமாகையால், நமது தேசத்துக்கு மாத்திரம் நன்மையை விரும்பும் இந்த சுதேசீயம் நாகரீக தர்மத்துக்கு மாறுபட்ட சுய நலக்கொள்கையென்று சொல்லுகிறார்கள். சுதேசீயத்தை அனுஷ்டிப்போர் காட்டு மனிதருடைய நிலைமைக்குத் திரும்பிப் போவதாக இந்த ஆக்ஷேபக்காரருக்குத் தோன்றுகிறது. இந்த அபிப்பிராயத்தை விஸ்தாரமாக ஆராய்ச்சி செய்யரம் சொல்லுகிறேன். மனுஷ்ய ஜாதி முழுமைக்கும் அன்பு பூண்டவனும் பணிவு நடைகொண்டவனுமாகிய யோக்கியனுக்கு சுதேசீயக் கொள்கையே மிகவும் பொருத்தமுடையது.

என்னுடைய குடும்பத்துக்கு வேலைசெய்ய என்னால் முடியாதிருக்கும்போது தேச முழுமைக்கும் வேலைசெய்வேனென்று முன் வருதல் வீண் அஹங்காரமேயன்றி வேறில்லை. அந்த நிலைமையில் நான் எனது சக்தி முழுவதையும் குடும்ப ஸேவைக்கு உபயோகப்படுத்தினால் அதுவே நான் தேசத்துக்கும் மனித ஜாதி முழுமைக்கும் செய்யக்கூடிய உபகாரமாகும். இதுதான் அன்பு. இதுதான் பணிவு. ஒருவனுடைய செய்கையின் குணத்தை அவனுடைய உட்கருத்தைக் கொண்டு தீர்மானஞ் செய்யவேண்டும். ஒருவன் பிறருக்குத் துன்பங்கள் விளைவித்துக் கொண்டு தனது குடும்ப ஸேவை செய்வானாகில் அது பிழை. திருஷ்டாந்தமாக, ஊராரிடம் பணம் பறிக்கும் உத்தியோகமொன்றை ஏற்றுக்கொண்டு அதனால்தான் பணக்காரனாகித் தனது குடும்பத்தாருடைய விருப்பங்களைத் திருப்தி பண்ணுவானானால் அது குடும்ப ஸேவையுமன்று தேச சேவையுமன்று. அவனால் எல்லாருக்கும் தீங்குதான் உண்டாகிறது. அங்ஙனமில்லாமல், ஒருவன் கடவுள் கொடுத்த கைகால்களை உழைத்தும் பாடுபட்டும் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் காப்பாற்றுதல் தனது கடமையென்பதை அறிவானாயின், அதனால் அவனுடைய வாழ்க்கை நேர்மைப்படுவதுடன் அவனைச் சார்ந்தோர் வாழ்க்கையும் நேர்படுகிறது. இவ்விதமான குடும்ப ஸேவையினால் பிறருக்கு யாதொரு தீங்குமில்லை. எல்லாரும் இந்த விதியை அனுஸரித்தால் உடனே ஸத்ய யுகம் தோன்றிவிடும். ஆனால், எல்லாரும் இந்த நிலைமையை ஏககாலத்தில் அடைந்து விடுதல் சாத்தியமில்லை.

இந்த உண்மையை அறிந்த சிலரேனும் இதை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவாராயின், மேற்கூறிய நற்காலம் விரைவுடன் வருவதற்கு வழியுண்டாகும். இவ்வகையான வாழ்க்கையால் ஒருவன் பாரத தேசத்துக்கு மாத்திரம் ஸேவை செய்வதுபோலத் தோன்றினும், அதனால்பிறதேசங்களுக்கு கெடுதியில்லை. எப்படி யென்றால், நான் எனதுஜன்மதேசத்துக்கு மாத்திரம் உழைப்பதனால், பிறதேசங்களுடன் இகலும் பகைமையும் இல்லாதபடி தொழில் செய்வதனால் பிற

# ஆஹாரத்தில் கனிஜ பதார்த்தங்களின் கூறுபாடுகள்

(வைத்திய கலாநிதி)

"மனித தேஹத்தில் ஏழு இருத்தல் கனிஜ பதார்த்தம் அடங்கியிருக்கிறது" என்று டாக்டர் ராபெர்ட் ஹட்சிஸன் என்பவர் தன்னுடைய "டயெட் அண்ட் டயெடெடிக்" என்கிற நூலில் கூறுகிறார். அவ்வளவு கனிஜ பதார்த்தத்தில் 6-ல் 5-பாகம் எலும்புகளிலேயே சேர்ந்திருக்கின்றது. தேஹ முழுமையையும் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தால், உடம்பில் நூற்றில் ஐந்து பாகம் சாம்பர்ப்பொருள் அடங்கியிருக்கக் காணலாம். (சாம்பர் என்பது கனிஜபதார்த்தங்களின் கூட்டேயாம்.) இவ்விஷயம், கனிஜ பதார்த்தங்கள் கலந்த உணவு தேஹத்தில் அந்தந்த பாகங்களைக் கட்டுவதற்கான சிறந்த முக்கியப் பொருளென்பதை வெளிப்படையாக அறிவிக்கின்றது; ஆகவே அப்பதார்த்தங்கள் சாஸ்திர முறைப்படி சரீரத்திற்கு மிகவும் அவசியமான உணவுப் பொருட்களே யென்று தீர்மானிக்கக் கூடியன.

உணவில் கலந்திருக்கவேண்டிய பிரதானமான கனிஜ பதார்த்தங்களாவன—உஷாக்ஷார ஸத்வம் அல்லது பூநீறுச்சத்து (sodium), காரச்சத்து அல்லது பொடாஷ்யம் (potassium), கடிகம் அல்லது சுண்ணச்சத்து (calcium), மெக்னீஷியம் (magnesium), அயம் பாஸ்கரம் அல்லது தீமுறுகற்பாஷாணம் (phosphorous) இவைகளேயாம். மேலும், க்ளோரீன், கந்தகம், ஸிலிகா, ப்ளோரீன், அயோடைன் என்னும் இவற்றின் கூறுகளும் சொற்ப அளவு உண்டு. சரீர தாதுக்களைக்கட்டிப் போஷிப்பதற்கு இவை மிகவும் அவசியமானவை யாகையால் இவற்றை அடியோடு உபயோகிக்காமல் நிறுத்தி மற்ற ஆஹாரக்கூறுகள் உபயோகிக்கப்படினும் ஒருமாதத்திற்குள் அம்மனிதன் இறக்கவேண்டிதான் நேரிடும்.

இவ்வாறு கனிஜபதார்த்தங்களின் கூறுபாடுகள் தாதுக்களைக் கட்டியமைப்பதற்கு முக்கியமானவையே யென்று நிர்த்தாரணம் செய்யப்பட்ட பின்னர் "அவை தேஹச் சூட்டையாவது உடற் சக்தியையாவது உற்பத்தி செய்யக்கூடிய தன்மை யுள்ளவைகளா?" என்று அடுத்தாற்போல் வினவக்கூடும். தேஹச்சூட்டையுண்டுபண்ணுகிறதாஎன்கிற முதற் கேள்விக்கு பதில்—இல்லையென்பதேயாம். உணவுகளிலுள்ள கனிஜ பதார்த்தங்கள் மிகவும் நன்றாகப் பஸ்மமாக மாறிய நிலைமையுடன் தேஹத்திற் பிரவேசிப்பதால், தாதுக்களிற் சென்று அவற்றினின்றும் எவ்விதத்திலும் சூட்டை யுண்டுபண்ணக் கூடியனவல்ல.

அவை உடற்சக்தி அல்லது உரமுண்டாக்கக் கூடியவைகளா வென்னும் கேள்விக்கு அவ்விஷயம் மிகவும் ஸந்தேஹமானதென்றே விடையளிக்க வேண்டி யிருக்கிறது. ப்ரோடீஸ்ட் (Proteids), கொழுப்பு இனங்கள், கார்போஹைட்ரேட் என்னும் கரிப்பொருட்கள் கலந்த உணவுகள் ப்ராணவாயுவின் ஸம்பந்தத்தினுல் பஸ்மமாகப் போவதால் (oxidation) இவை உடற்சக்தியை நேராக உற்பத்தி செய்வது போல் இக்கனிஜ பதார்த்தங்கள் உண்டு பண்ணுவதில்லையென்பது உண்மையென்றே கருதப்படுகிறது; ஆனுல், அவை ஈரமான சில ஜவ்வுகளுக்குள் ஊறி தேகத்தில் ஊடுருவிச் செல்வதற்கான அவற்றின் குணங்களைக் கவனித்தால், அப் பதார்த்தங்களின் கூறுகள் நேராக அவ்வேலையைச் செய்யாவிடினும் வேறொரு முறையிலாவது அவ்வாறு செய்யக்கூடியவை யென்று சொல்லலாம்.

ஆகவே, இப்பொழுது உணவிற் கலந்துள்ள கனிஜ பதார்த்தங்களின் கூறுகள் ஆஹாரப் பொருட்களின் வகுப்பில் சேர்த்துக் கொள்ளக் கூடுமென்பதற்கு இரண்டு ஆதாரங்களுண்டு, (1) அவை தேஹதாதுக்களைக் கட்டியமைக்கக் கூடியன, (2) உத்ஸாஹந்தரக் கூடிய ஒருவித உடற்சத்தையும் உண்டுபண்ணத் தருந்தவை. சரீரத்திற்கு எவ்வளவு கனிஜ பதார்த்தங்களை நாள்தோறும் ஊட்டவேண்டும் என்கிற விஷயத்தை அடுத்தாற்போல் நாம் விசாரிக்கவேண்டி யிருக்கிறது. ஆனுல், இவ்விசாரணையில் திட்டமாக விடையளிக்க

---

குத் துன்பம் ஏற்படாத வண்ணமாக நீ என் உடைமையைக் கையாளவேண்டும், என்ற பொருளுடைய வாக்யமொன்று லத்தீன் பாஷையிலிருந்து நீதி சாஸ்திரக் காரரால் அடிக்கடி மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. ஆனுல், இது சட்ட விதிமாத்திரமன்று. அஹிம்ஸாதர்மத்தின் ஆசாரணைக்கு இதுதான் மர்மம். பாதிரிகளே! ஒரு பெரிய மதத்துக்குக்காவலாளிகளாக விளங்குகிறீர்கள். "பகைமையை ஆதாரமாகக்கொண்ட தேசபக்தி கொல்லினும் அன்பை ஆதாரமாகக்கொண்ட தேசபக்தி உயிர் கொடுக்கும்" என்ற உண்மையை நீங்கள் உபதேசம் செய்வதுடன் அந்த உபதேசம் அனுஷ்டானத்தாலே புனிதமுறச் செய்வீர்களாயின், உலகத்



ஆனுல் பலவித உணவுப் பொருட்கள் கலந்த மிச்ராஹாரத்தில் காணப்படும் கனிஜ பதார்த்தங்களின் அளவானது, சரீரத்தின் தேவைகளனைத்துக்கும் போதுமானது—ஆனுல் வேண்டுமான அளவுக்கு அதிகமானதல்ல—என்று ஒருவன் சொல்லக்கூடும், அவ்வனைத்தும் சுமார் இருபது க்ராம் (ர் ட்ராம் அல்லது முக்கால் அவுன்ஸ்) இருக்குமென்று நிச்சயிக்கப்படுகிறது; இந்த அளவில் நமது இஷ்டத்திற்குத் தேவையானபடி சேர்த்துக்கொள்ளும் கறியுப்பு சேரவில்லை.

ஸாதாரணஉணவுகளில்சேர்ந்துள்ள கனிஜபதார்த்த கூறுகளைப்பற்றி விசாரிப்போமாயின், அக்கனிஜ பதார்த்தங்களில் அநேகம்—அல்லது அவற்றில் நிச்சயமாகும் பெரும்பான்மையானவையும் ஸேந்த்ரிய பதார்த்தங்களின் கூட்டுப்பாடு (organic combination) உடையனவா யிருக்கின்றன என்றறியலாம். பாலில் கடிகமென்னும் சுண்ணச் சத்தும் (calcium), பாஸ்வரமும் (phosphorus) ஸேந்த்ரிய பதார்த்த நிலைமையில் கூடியிருப்பதைக் காணலாம்; அவ்விதமே அயம் முட்டையின் மஞ்சட்கருவிலும், உண்ணு மிறைச்சியிலும் சேர்ந்திருக்கின்றது; ப்ரோடீட் என்னும் ஆகாரச்சத்து கலந்துள்ள எல்லா உணவுப் பொருட்களிலும் கந்தகம் அவ்வாறே கூடியிருக்கின்றது. இன்னும் இவ்வாறான அநேகம் ஆஹாரப் பொருட்களில் ஒவ்வொரு விதமான கனிஜ பதார்த்தம் சேர்ந்திருப்பதைப் பரிசோதனையினுல் அறியலாம்;

இப்பொழுது, சரீரத்திற்கு அவசியமாயுள்ள முக்யமான கனிஜ பதார்த்தங்களைத் தனித்தனியே நான் எடுத்துக் கூறுவதுடன், எந்த உணவுப் பொருட்களில் அவ்வித கனிஜ பதார்த்தங்கள் விசேஷமாக அடங்கியிருக்கின்றனவோ அவற்றையும் குறிப்பிடுகின்றேன்:—

டாக்டர் ஆர். ஹட்சிஸன் கூறுவதாவது:—கடிகம் அல்லது சுண்ணச்சத்து (Calcium) ஸ்திரீகளின் முலைப்பாலைப் பரிசோதித்துப் பார்த்தால், ஒரு குழந்தைக்கு தினந்தோறும் 1/3 க்ராம் (5-க்ரைன்கள்) சுண்ணும்பு வேண்டியிருக்குமென்று கணக்கிடப்பட்டது. யௌவன வயதிலுள்ளவர்களுக்கும் எலும்பு அதிகமாய் வளர்வதில்லையாகையால், அவர்கள் சுண்ணும்பு அடங்கிய வஸ்துவை வெகு குறைவாகவே உபயோகிக்கவேண்டி யிருக்கின்றது. ஒரு சிசுவுக்குக் கொடுக்கப்படும் உணவில் சுண்ணம் குறைவுபடுமாயின், அதனுல் அதன் எலும்புகள் வளையக்கூடியவாறு மெதுத்தன்மை யடையும். ஸாதாரணமான உணவுப்பொருட்களுள் பாலிலேயே கால்ஷியம் என்னும் சுண்ணச்சத்து அதிகமாகச் சேர்ந்திருக்கிறது. சுமார் 35-அவுன்ஸ் அளவான பாலில் 10-க்ராம் (சுமார் 24-க்ரைன்கள்) நிறையுள்ள சுண்ணம் கலந்திருக்கிறது; அல்லது ஒரு வகையில் கவனித்துப் பார்த்தோமானுல், ஒரு பைண்டு (20) அவுன்ஸ் பாலில் அதே அளவான சுண்ணும்புத் தெளிவுநீரில் இருப்பதைவிட அதிக அளவான சுண்ணம் கரைந்திருப்பதாய் அறிவோம். இவ்வாறு சுண்ணம் அதிகமாகக் கலந்திருக்கிற உணவுப்பொருட்களில் பாலுக்கு அடுத்தது முட்டையும் அதற்கடுத்தது தானியங்கள் முக்கியமாய் அரிசியும், முள்ளங்கி-தண்ணீர் விட்டான் முதலிய கறிவகைகளுமேயாம்.

மெக்னீஷ்யம் என்னும் தாதுப் பொருள் ஸாதாரணமாய் உணவுப் பதார்த்தங்களில் கால்ஷியத்தைப்போல அதே அளவில் சேர்ந்திருக்கின்றது.

அயமானது உணவுப் பொருட்களில் எப்பொழுதும் ஸேந்த்ரிய பதார்த்த ரூபமாகவேகலந்துள்ள ஒரு கனிஜ பதார்த்தமாகும்,

நாம் சாப்பிடும் மிஸ்ராஹாரத்தில் சுமார் 10-மில்லிக்ராம் அளவுகொண்ட (ஒரு க்ராமில் 1000-த்தில் ஒரு பாகம் ஒரு மில்லிக்ராம். அதாவது 1-66 க்ரைன் ஒரு மில்லிக்ராம்.) லோஹ பதார்த்தக் கூறுகள் அடங்கியிருப்பதாக ஒருவாறு அறியப்படுகிறது; அவ்வளவு லோஹ பதார்த்தங்கள் இயற்கையான சாக்ர க்ரியைகள் (physiological functions) நடந்தேறுவதற்கும் போதுமானவை யென்று நிச்சயிக்கப்படுகிறது. முட்டையின் வெள்ளைக்கரு, மாட்டிறைச்சி, ஆபிளென்னும் சீமையிலந்தை, ஸ்ட்ராபெரி என்னும் ஒருவகைப்பழம், வெள்ளை அவரைப் பருப்பு, பட்டாணிக்கடலை, உருளைக்கிழங்கு, கோதுமை இவைகளில் அயம் விசேஷமாய் அடங்கி யிருப்பதாகவும், இவற்றுள் கோதுமை முதல் முட்டையின் வெள்ளைக் கருவரையிலும் கீழிருந்து ஒன்றைவிட மற்றொன்று அந்த லோஹத்தை அதிக அளவாக அடக்கிக்கொண்டிருப்பதாகவும் பங்கே என்பவர் கூறுகிறார்.

ஆனுல் இரத்தத்தில் குறிப்பிடத் தகுந்தவாறு அயம் குறைந்திருக்குமானுல், அக்குறைவை ஏதேனும் உணவுகளைக்கொண்டே தகுந்த நிலைமைக்குக் கொண்டுவருமென்பது பெரும்பாலும் அஸாத்தியமான விஷயம்; இரத்தத்தில் மிதமிஞ்சிக் குறைந்துவிடும் அயத்தை மீண்டும் சரிப்படுத்துமாறு அவ்வளவு அதிக அளவான உறுப்புகள் நிரம்பிய உணவுப் பொருட்கள் அரிது; என்றுலும், அநேகவிதமான ஆஹாரப் பொருட்களில்

சேர்ந்திருக்கும் அயத்தின் அமிசங்களைக் குறிப்பாகக் கவனித்தோமாயின் அவற்றிற்கு அயஸம்பந்தமான ஔஷதத்தன்மைசிறிது உண்டென்றும், ஆகவே சிகித்ஸா க்ரமங்களில் வேறு ஔஷதங்கள் அத்தகைய குணமுடையவைகளாய் உபயோகப்படும்போது உணவுகளிலுள்ள இந்த அயவுப்புகளும் இரத்தத்தில் அயவுப்பை ஒருவாறு சரிப்படுத்தக் கூடியனவாயிருக்கின்றனவென்றும் அறியப்படுகிறது.

ஸோடியமும் பொடாஷியமும்:—(1) ஸோடியமென்னும் உஷாக்ஷாரஸ்தவமானது, சரீரத்தில் இயல்பாயுள்ள அதன் அரவம் தகுந்த நிலைமையிலிருப்பதன் பொருட்டு எப்பொழுதும் தேவையா யிருக்கின்றது. (2) பொடாஷியமென்னும் காரச் சத்தானது சரீர தாதுக்களிலுள்ள ஜீவபரமாணுக்களை (cells) செழிக்கச் செய்வது அல்லது அமைப்பதற்காகவும், பிரதானமாய் இரத்தத்திலுள்ள செங்குறுகடங்களையும் தசைநார்களையும் அறைத்துக் கட்டுதற்காகவும் உபயோகப்படுகிறது. பலவிதமான உணவுகளில் உஷாக்ஷார ஸத்வமும் பொடாஷியமும் அடங்கியிருக்கும் அளவுகளைப் பரிசோதித்துப் பார்க்குமளவில், சாக பதார்த்தங்களுடைய வகுப்பில பொடாஷியமும், இறைச்சி முதலிய பிராணி ஸம்பந்தமான உணவுகளில் ஸோடியமென்னும் உஷாக்ஷாரஸத்வமும் விசேஷமாய் சேர்ந்திருப்பதாகக் கூறலாம். பசுமையான சாகங்களும் கனிகளும் குறிப்பிடத் தகுந்தவாறு பொடாஷிய ஸம்பந்தமான உப்புக்கு மிகவும் ஆதாரங்களாயிருக்கின்றன. ஸோடியமானது ஸாதாரண கறியுப்பின் உருவமாக நம்மால் உட்கொள்ளப் படுகிறது. இதை அநேகம் ஜனங்கள் தினந்தோறும் ஆறு பாரம் அளவு உபயோகிக்கின்றனர். இந்த அளவானது தேஹத்திற்குத் தேவையான அளவினும் பெரும்பாலும் குறைந்தது. பத்து மடங்கு அதிகமென்றே கருதக் கூடியது.

ஆஹாரத்தில் பிரத்யேகமாக இவ்வாறு மிகுதியாக உப்பைப் போட்டுக்கொள்ளுவதில் முக்கியமாக சாகாஹாரமுண்பவர்களே அதிக ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர். இவ்விஷயத்தில் எவர் எவ்விதமாக அபிப்பிராயப்பட்டபோதிலும், உணவுப்பொருட்களில் இயற்கையாகச் சேர்ந்துள்ள உப்பைத்தவிர பிரத்தியேகமாக ஆஹாரத்தில் உப்பைச் சேர்த்துக் கொள்வதானது மிஸ்ராஹாரங்களுண்பவரை விட சாகாஹாரங்களை மட்டும் புஜிப்பவருக்கு எவ்வகையில் அவசியமென்பது வெளிப்படையான தத்துவம். வெகு ஸமீபகாலத்தில் செய்த சாஸ்த்ரீயமான ஆராய்ச்சிகளால், உப்பானது சரீரத்தில் தர்கியகாரப் பொருட்களின் (Nitrogenons substances) அழிவைக் குறைப்பது மல்லாமல், அத்துடன் சரீரத்திற்குத் தேவையான ஜலத்தையும் ஏற்றுக்கொள்ள வகையுண்டு பண்ணுகின்றது.

## பாஸ்வரம் அல்லது தீமுறுகற் பாஷாணம்

இது தேஹ தாதுக்களைக் கட்டுவதற்கு ஒவ்வொரு ஸமயம் அருமையாக உபயோகப்படுகிறது. தேஹத்தில் எங்கெந்த விடத்தில் வளர்ச்சி மிகவும் சுறுசுறுப்பாக நடந்தேறுவதாய் அறியப்படுகிறதோ அவ்விடங்களிலெல்லாம் பாஸ்வரம் மிகுதியாயிருப்பதைக் காணலாம். இது தாதுக்களின் எல்லா ஜீவகணங்களின் இடையிலுள்ள ஜீவஸ்தானங்களிலும் (Cellucleri) பாய்ந்து அவற்றின் பௌதிகக்கூட்டுகளில் கலக்கின்றது; மேலும் எலும்புகளிலும், மத்திய நரம்பு மண்டலத்திலும் (Central nervous system) திரள்திரளாகச்சேர்ந்திருக்கின்றது. பழகாத சில உணவுப் பொருட்களில் பாஸ்கர ஸம்பாதமான பாஸவராம்லம் (Phosphoric acid) அடியில் குறிப்பிடப் படும் அளவாகக் கூடியிருக்கின்றது.—

| | | | |
|---|---|---|---|
| முட்டைக்கோஸ் என்று வழங்கப்படும் காபேஜில் | 100-க்கு | .089 | பாகம். |
| உருளைக்கிழங்கில் | ,, | .140 | ,, |
| முட்டையில் | ,, | .237 | ,, |

பாஸ்வராம்லம் என்பது பாஸ்வரம் 2-பங்கும், பிராணவாயு 5-பங்கும் சேர்ந்த ஒருவகைப் பொருளாம்.

ஆக்ஸாலிக் ஆஸிட் என்கிற ஒருவித அம்லப்பொருளும் உணவு வகைகளில் கூடியிருக்கின்றது; ஆனால் ஊன்றிப்பார்க்குமளவில் இப்பொருளானது கனிஜ பதார்த்தங்களின் வகுப்பில் சேர்க்கக்கூடிய தல்லவாயினும், ஆஹாரத்தில் இது இயற்கையாகவே ஆக்ஸலேட் ஆப் லயம் (oxalate of lime) என்னும் சுண்ண வருவமாகச் சேர்ந்திருக்கின்றது. ஆயிரம் பங்கு மிளகில் இது $3\frac{1}{2}$-பாகமாகக் கூடியிருக்கிறதென்று கூறுவதற்குத் தடையில்லை. ஆக்ஸாலிக் ஆஸிட் என்னும் அம்லப்பொருள் இன்னும் அதிக அளவாக அடங்கிய அநேகம் பொருட்கள் இருந்தபோதிலும், இந்தியர்களுக்கு இவ்வம்லப் பொருளடங்கிய மிளகு இன்றியமையாத உணவுப்பொருளா யிருக்கின்றது.

க்ளோரீன் என்னும் கனிஜபதார்த்தமானது முற்றிலும் ஸாதாரண கறியுப்பு ரூபமாகவே உணவுகளில் உபயோகிக்கப்படுகிறது. ஹைட்ரோக்ளோரிக் ஆஸிட் என்னும் இறைப்பையிலுற்பத்தியாவதான ஒருவகையான அம்ல பதார்த்தத்திற்கு மூலகாரணமா யிருப்பதைத் தவிர்த்து இது சரீரத்தில் வேறு எவ்விதத்தில் உபயோகப்படுகிறதென்கிற விஷயம் விளங்கவில்லை.

அயோடைன்:—இப் பதார்த்தத்திற்கு தேஹத்தில் ஆதாரமான அவயவம் தைராய்ட் க்ளாண்ட் என்னும் தொண்டையில் அமைந்துள்ள ஒருவித கிரந்தியேயன்றி வேறொன்றல்ல. இது உணவுப்பொருளில் சேர்ந்திருப்பதன் கருத்து—அல்லது பிரயோஜனம் இன்னதென்று இன்றைக்கும் சிறிதும் விளங்கவில்லை; ஆனால் இனி எப்பொழுதேனும் இது இவ்விதத்தில் உபயோகமானதென்னும் விஷயம் ஒருக்கால் அறிந்துகொள்ளக் கூடியதேயென்று ஆராய்ச்சி செய்பவர் கருதுகின்றனர்

ப்ளோரீன் என்பதும், ஸிலிகா என்பதும் சரீரத்தில் சொற்ப அளவாகச் சேர்ந்திருக்கின்றன; இவற்றை முக்கியமாக எலும்புகளிலும் பற்களிலும் காணலாம். இவை சாகாஹாரங்களிலேயே—அவற்றிலும் பிரதானமாய் முள்ளங்கியில் மிகுதியாய் அடங்கியிருக்கின்றன."



ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

462, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 3] 1916ளு ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர்மீ [சஞ்சிகை 10-11-12

## ஒளிவளர் விளக்கு

இந்தியத் தொழில்களுக்கு ருஷியாவில் என்னென்னவித அனுகூலங்களிருக்கின்றனவென்று தெரிந்துவர ஒருவரை யனுப்புவதற்கு இந்தியா கவர்ன்மெண்டார் எண்ணுகின்றனர்.

*
* *

சீக்கியர் கல்விக் கான்பரன்ஸ் சமீபத்தில் தாருதாரன் என்ற இடத்தில் நடந்தேறியபோது கல்வி அபிவிருத்திக்காக ஒன்பது வயதுள்ள ஒரு சிறு பெண் ஆறுமாதத்தில் ரூபா 719-8-3 சேர்த்து உதவினளென்றும், இத்தொகை வீட்டுக்குவீடு சென்று வசூலிக்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. இவ்விதமே ஒரு பத்து வயதுள்ள இளைஞன் சுமார் ரூபா 500 பலரிடத்தும் வசூலித்துச் சேர்த்து உதவினனென்றும் வெளியிடப்பட்டது.

*
* *

மைசூரில் கட்டாயப்படிப்பு ஏற்பட்டதில் ஒரு விசேஷம். 7-வயது முதற்கொண்டு 11-வயது வரையுள்ள குழந்தைகளை எவரும் வேலை செய்ய வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் சட்டம் செய்திருக்கிறார்கள். இதனால், அக்குறித்தவயதுள்ள குழந்தைகள் யாவரும் பாடசாலைக்குச் கள் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத தாய் தந்தையர்க்கு 2 ரூபாமுதல் 10 ரூபா வரையில் அபராதம் போடப்படுமென்றும், மீறி அக்குழந்தைகளை வேலையில் வைத்துக்கொண்டவர்களுக்கோ ரூபா 20 அபராதம் விதிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

*
* *

கொழும்பு பரதகுல சங்கத்தின் கல்விநிர்வாகக் கூட்டத்தார் சமீபத்தில் கூடி பரத குலத்தவரின் கல்வி யபிவிருத்திக்காக பிரபுக்களால் இதுவரை வாக்களிக்கப் பட்டிருக்கும் நன்கொடை ரூபா 1150-மூலமாய் வரக்கூடிய வட்டியிலிருந்து பரதகுல ஏழை மாணவர்கள் ஐந்து பேருக்கு நடுத்தரப் படிப்புக்கும் உயர்தரப் படிப்புக்குமாக உபகாரச் சம்பளம் கொடுத்து வரவும், சமூக அபிவிர்த்திக் கின்றியமையாதனவாகிய கல்வி கைத்தொழில் முதலிய விஷயங்களடங்கிய பத்திரிகை யொன்றை ஆரம்பித்து அதன் பிரயோஜனத்தை ஜனங்கள் உணரும்படி செய்விக்கவும் தீர்மானித்தார்கள்.

*
* *

சில வருஷங்களுக்குமுன் ஒரு இந்தியவாலிபர் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள சீமைக்குப்

வீட்டில் தங்கியிருந்தார். போனவுடன் காலந் தவறாது காபி சாப்பிடவும் உடுக்கவும் சீக்கிரம் கற்றுக்கொண்டார். இப்படிச் சுகமா யிருக்கும் நாளில் அச்சீமான் தன்தோட்டத்திற்குப்போய் சாமானிய வேலைகளைத் தானே முடித்து அங்க மெங்கும் அழுக்கேறி இந்திய வாலிபர் முன் வந்து நின்றார். உடனே இவரைக்கண்டு வாலிபர் நகைத்து தாங்களும் இந்தத் தாழ்ந்தவேலையைச் செய்யலாமா வென்றார். அதுகண்டு அச்சீமான் இத்தகைய எண்ணம் உன்னிடத்திலும் உன் தேசத்தாரிடத்திலும் குடிகொண்டிருக்கு மளவும் உங்கள் தேசத்தை ஆளுபவர் நாங்களும் ஆளப்படுபவர்கள் நீங்களுமாக விருக்கவேண்டியது நிச்சயம் என்றார்.

*
* *

தஞ்சாவூர் ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் என். கே. ராமஸ்வாமி அய்யர் அடியில் வருமாறு பத்திரிகைகளுக்கு எழுதினார்:—ஸ்ரீராமநவமி தினம் தஞ்சாவூர் வடக்குவீதியில் என் பங்களா நகிரி மஹால் ராமகிருஷ்ண விலாஸம் பிரணவ மந்திரத்தில் எனக்கு புனருபநயன ஸம்ஸ்காரம் நடக்கிற விஷயம் என் ஹிந்து ஸ்நேகிதர்களுக்கு, முக்கியமாய் பிராம்ஹண சிநேகிதர்களுக்கு கொள்ளுகிறேன், எனக்கு 7 வதுவயதில் உபநயனம் நடந்தது. 15 வது வயது முதல் 18-வது வயது வரையில் மிகவும் சிரத்தையாய் ஸந்தியாவந்தனம் செய்துவந்தேன். இங்கிலீஷ் வாசிப்பதால் 19-வது வயதில் நாஸ்திகபுத்தி உண்டாய் ஸந்தியா வந்தனத்தை விட்டு வர்ணாச்ரமதர்மத்திற்கு விரோதமாய் நடக்க ஆரம்பித்தேன். பின்னால், சாஸ்திர விசாரம் செய்ததில் 1904 வருஷத்தில் வேதாந்தத்தில் நம்பிக்கை உண்டாய் கடைசியாய் சென்ற வருஷத்தில் வர்ணாச்ரம தர்மத்தையும் ஒப்புக்கொண்டேன். சேது ஸ்நானம் கங்கா ஸ்நானம் கயா சிராத்தமும் செய்தேன். இப்பவும் கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகளின் உத்தரவுப்படி புனருபநயன

## கல்வி

*படிக்கப் பல்கும்!* *சற்கக் கசடறம்!!*

### முதற்பாகம்

### உலகவனப்பும் மானிடர் வாழ்வும்

### உலக விபரக்கதை

உலகெனப் படுவது
வெறுவெளி தன்னில் வெங்கதி ரோனை
வரம்பு நீங்கா துசாவுஞ் சோளம்
இஃது வாயுசூழ்ந்து
மண்ணுந் தண்ணுமுந் தன்னுட் கலந்து
கொளஞ்சிக் கனிபோற் பேருருக் கொண்டு
கதிரவ னொளியிற் களங்கமற விளங்கும்.
மேல்
பன்னிற மீனினம் பரந் துலாக்கொளுஉம்
உப்புக் கடல்கள் செப்பரு சிறகாய்த்
தாங்க வொண்ணுத் தண்பனிக் குன்றுகள்
வெண்ணிறவெளிகள் வியப்புறு சிரசாய்
மேம்படு மக்கள் மதியிலா விலங்குகள்
மண்ணுறு புழுக்கள் விண்ணுலாம் பறவைகள்
எண்ணில வாகத் தன்னிடத் துளதாய்க்
கான்கொடு பூமியைக் காயமாய்க் கொண்டு
தன்னுட் டானே வரைதவ றாது
வட்டமிட் டாடும் வனப்பினை யுடையது.
அன்றிக்
குலநலக் குமான் குருகா தகனுய்த்
தாரையைத் தழுவித் தன்னெலி மழுங்கி
பக்தியின் பயனுய்ப் பார்ப்பதி நேசன்
பரிவுடன் பகர்ந்த பிறைதனைப் பெற்று
மண்ணுளோர் தமக்கு மதி புகட்டுதல் போல்
விண்ணினூலாவும் வெண்மதி யவனைத்
தன்னுயிர் களிக்குந் தாசனு யுளது.

### மானிடர்

இத்தகைய மகிமையையுடைய பூவுலகின்கண் பெறு தற்கரிய மானிடப் பிறவியை அனைத்துயிரோம்பும் அண்ணலின் அன்பினாலும், முன் செய்வினையின் பயனாலும் பெற்று அறிவெனு மொளியால் அனைத்தையு முணரவல்ல ஆற்றலுற்று, அழிவிலா ஐயன்பதம்பெறவும் வாய்ந்தவர்கள் மானிடரென்பார். இவர், உலக போக மிதுவென உணர்ந்து உலகிலுற்பவித்துள்ளனவற்றை யெல்லாம் தங்கள் கருமத்துக்குஞ் சுகத்துக்



கையும் பெற்றுளர். அன்றி, ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் புகழ்பெறு ஞானபலத்தைப் போகியாய்ப்பெற்று எல்லாம் வல்ல ஈஸ்வரன் சாயலாய் இப்பூமியிலிருந்து வாரா நிற்கின்றனர்.

இத்தகைய மாந்தர் அநாகரீக நிலைமையிலிருந்து நாகரீக பதவி பெற்றதும் கல்வி பிறந்ததும் அதன் பயனாய்க் குலக்கட்டும், இராஜ விசுவாசமும், தேச பக்தியும், தேச விர்த்தியும், சீல வொழுக்கமும், ஜீவகாருண்யமும், ஆசையும், அழிவும் ஆகிய பலவும் பிறந்ததைப் பின்னுணர்த்துவாம்

### மானிடர் நாகரீகம் பெற்றவாறு

ஆதியில் மானிடர் அனைவரும் அநாகரீக நிலைமையிலிருந்தனர் என்பது தற்காலத்தியப் பெரும்பான்மையோர்களின் கொள்கை. ஆகவே, இவர்கள் மானிட வாழ்வின் ஆரம்பத்தைப் பின்வருமாறுரைக்கப்படும். சீதோஷ்ணத்துக்குத் தக்கவாறு சுலப வாழ்வே பெரிதெனக் கருதி சுலபமாகக் கிடைப்பதைக் கொண்டு உண்டு உடுத்தி உயிர் வாழ்ந்து வந்தனர். நமது ஆதிமக்கள் இப்பொழுது மொழியைப் பின்வருமாறு விரித்துரைக்கக் காண்க.

விளைபொருள் அதிகமிலாக் குளிர் நாட்டினர்கள் கஷ்ட ஜீவனத்துக்கு ஈடுபட்டுக் குளிரை வெல்லுவான்வேண்டி ஓடித்திரிந்து வேட்டையாடுவதில் அதிக ஊக்கத்தைக் காட்டிக் கிடைத்த வேட்டைப் பொருள்களாகிய பக்ஷி மிருகாதிகளின் மாமிசத்தைச் சுட்டுப் பொசுக்கி யுண்டும், அவைகளின் இறகுகளையுந் தோல்களையும் உடையாக்கி யுடுத்தியும் மிருகபக்ஷிணிகளாய் மலைக் குகைகளிலும், பள்ளக் குடிசைகளிலும் வசித்து உயிர் வாழ்ந்துவந்தனர். கடற்பாகங்களிலும் நீர்ப் பெருக்குள்ள இடங்களிலுமுன்னோர்கள் மீன் பிடித்துண்டு மச்சபக்ஷணிகளானார்கள். சற்று சீதோஷ்ண தேசத்திலுள்ளவர்கள் வளமுள்ள பூமிகொடுத்ததை வயிறார உண்டும், இடையில் இலை மரவுரி நார்க்கயிறாம் ஆடைகள் உடுத்திக்கொண்டும், நற்காட்சித் தோற்றத்தால் உலக வனப்பைக் கண்டுகளித்துப் பர்ணசாலைகளில் வசித்துக் காலங்கழித்து வந்தனர். நாள்வளரக் குடும்பம் ஓங்கிற்று. குடும்பம் ஓங்கித் தழைக்கவே குடும்பக்கவலைகள் பிறந்தன. தேவைகள் வளர்ந்தன. சுலபவாழ்வு சிக்குண்டது. வளமுள்ள பூமி கொடுத்ததும் போதாதாயிற்று. ஆகவே, விவசாயஞ் முதலாகிய பல்தொழிலாங் கருமங்கள் உற்பவித்தன. வளமுள்ள நாட்டுக்குடியேற்றம் அவசியமாயிற்று. குடும்பம் நிலைகொண்டது. பூ சம்பத்தும் ஏற்பட்டது. குடும்ப பரிபாலன நீதி முறைகளுந் தோன்றின. குடும்பங்கள் பெருகித் தொழில் ஓங்கவே குலம் பிறந்தது. தேசம் வளர்ந்தது. பின், பல்குலம் பெருகப் பற்றொழில் வலுக்கக் குலநன்மைக்கும் பொதுப் பாதுகாப்புக்கும் அரசு ஏற்பட்டது. இவ்விதமாக மானிடவாழ்வு அதிகரித்து அவர்கள் புரியுங் கருமம் விஸ்வரூபங்கொள்ளவே, தொழிற்பிரிவு அதீதியாவசியமாயிற்று.

பல் கருமங்களில் விளக்கம்பெற்று, விவசாயக்கருவி முதல் இல்லங்களையுந் தேவாலயங்களையும் மற்றும் பல வுலகபோகப்பொருள்களையும் இபற்றுதலாகிய பற்றொழிலுக்கும் ஆதித்தொழிலாயுள்ள பஞ்ச தொழில்களைத் தங்கள் வயமாக்கிக்கொண்டு உலக நாகரீகத்துக்கும் சுக வாழ்வுக்கும் ஆதாரபுருஷர்களாய் விஸ்வப்ராமணர்கள் உற்பவித்தார்கள். சாந்தகுணத்தையுஞ் சன்மார்க்க நீதிகளையுந் தத்துவஞானத்தையும் பெரிதும் பெற்றுள்ளோர் வேதம் ஓதி வேதப்ராமணர்களானார்கள். பின், உயிர்க்குணவளிக்கும் விவசாயத்தொழிலைப் புரிவதற்கும் உலகத்தேவைக்கானதை யளிக்கும் வியாபாரஞ் செய்வதற்கும் வைசியர்கள் ஏற்பட்டார்கள். மேற்கூறிய ப்ரம்ம வைசிய ஜாதியார்களை ஆதரிக்கவும் அவர்களின் பொருள்களையுந் தொழில்களையும் போற்றிப் பாதுகாக்கவும் திடகாத்திரர்களாம் க்ஷத்திரியர்கள் உதித்தார்கள். இம்மூன்று ஜாதியார்களின் ஏவுகோளைப் புரிய இதர சாமான்ய மக்களும், கலப்பு மக்களும் சூத்திரர்களாய்த் தோன்றினார்கள். இதுவே ஜாதி பிறந்ததற்குக் காரணம். இந்நான்கு ஜாதிகளும் எத்தேசத்திலுமுள. எனினும், தேசத்துக்கும் நாகரீகத்துக்குந் தக்கவாறு பற்பல நாமங்களை வகித்துவருகின்றன.

### கல்வி பிறந்ததற்குக் காரணம்

இங்ஙனம் அநாகரீகம் நீங்கி நாகரீகவாழ்வைப்பெற்று வந்த மாந்தர்கள் அறிவின்மையால் குடும்பத்துக்குங் குலத்துக்குங் கண்ணியக்குறைவும் பல்கேடும் விளைகிறதென்றும் கல்வியறிவில்லா ஒருவன் தன் குலவொழுக்கங்களை அநுசரிக்கவும், குலத்தின் நன்மைக்கு உழைக்கவும் சற்றும் இயலாதா னென்றும், தொழிலிலா வொருவன் மனமானது துருப்பிடித்துத் தீராச் சிந்தனைகளில் ஈடுபட்டு இழிவுறுங் கருமங்களைச்

உடனே, உயிருக்காதாரமாகிய உண் பொருள்களைப் பயிர் செய்வதற்கும், மீன் பிடிப்பதற்கும், வேட்டையாடுவதற்கும், மானத்தைக் காப்பாற்றுவதோடுகூட ஆகாயம் அனல் குளிரம் இவைகளின் கொடுமையினின்று உடலைக் காப்பாற்றுவதற்கும், அவசியமான ஆடைகளை நெய்வதற்கும், இருப்பதற்கு இல்லம் இயற்றுவதற்கும், படுப்பதற்குப் பாயுங் கம்பளமுஞ் செய்வதற்கும், இன்னும் உலகவாழ்வுக்கும் உலகபோகத்துக்கும் வேண்டியவைகளை உண்டுபண்ணுவதற்கும், இத்துடன் இவ்வுலக போகவிர்த்தியின் பெருக்கால் போசைபிடித்து அகங்கொண்டு கொடிய காரியங்களைச் செய்து அழியாதிருக்கவும் சில மார்க்கத்தை யறியவும் நீதியை யுணர்ந்து சத்திய தர்மத்தை உலகில் நிலைநாட்டவும், ஆன்மலாபத்தையடையவும், கல்வி இன்றியமையாததாக விருக்கிறதென்று அறிந்தார்கள். இவையே கல்வி பிறந்ததற்கு முக்கிய காரணங்கள்.

## கல்வியின் பயன்

கல்வி யதிகரிக்கவே மனம் விரிவுண்டது. சகோதர வாஞ்சையுங் குலக்கட்டும் மனதில் குடிகொண்டன. தேசபக்தியும் இராஜவிசுவாசமும் ஏற்பட்டன. விவசாய விர்த்தி பல கிளையுற்றது. தொழில்கள் பற்பலவாயின. வியாபாரம் விரிவுண்டது. வியாபார வசதிகளாம், நற்பாதைகள், ரயில் ட்ராம்வண்டிகள், டெலிபோன் தந்திகள், நீர்வசதிகளாம் கால்வாய்கள், தோணிகள், கப்பல்கள் ஆகிய இவைகளும், பின் இவைகளுக்கெல்லாம் ஆதாரமாகவும் உதவியாகவும் பல சங்கங்கள் பாங்கிகளாகிய இவைபோன்றவை பல உலகில் உற்பவித்தன. மணியின் ஓசைபோலும் சரீரத்தின் சாயல்போலும் இவற்றுடன் சன்மார்க்க நீதிகளும் ஜீவகாருண்யமும் தெய்வபக்தியுந் தோன்றின. நம்போன்ற அற்பமாம் வாழ்விற் சிக்குண்டு உலகபோக விர்த்தியாற் செருக்குண்டு உலகக் கஷ்டத்துக்கும் அழிவுக்கும் காரணகர்த்தர்களாயிருந்து வரும் மாந்தர்களுக்கும் மற்றுமுள்ள சாமான்ய மக்கட்கும் இந் நீதிமார்க்கங்களைச் சுலபத்தில் எடுத்துக்காட்டி அவர்களை நல்வழியிலிருத்தும்பொருட்டு பல மதங்கள் ஏற்படுத்தப்பட்டன. குடி ஜனங்களைத் தீயவர்களின் இம்சையினின்று போற்றவும், குடிகளின் பொருள்களைத் திருடர்களினின்று காப்பாற்றவும், பொது சமாதானத்துக்குப் போலீஸ் ஏற்பட்டது. இராஜகொடிக்கு மதிப்பைப் பெறவும், இராஜ்யத்தை வெளிநாட்டுப் பகைவர்களினின்று காப்பாற்றவும் தங்கள் குடிகளை அந்நிய நாட்டார் கொடுமையாக நடத்தாதிருக்கவும், அன்றி அந்நிய நாட்டில் அவர்கள் பெற்றுள்ள சுதந்திரங்களைக் காப்பாற்றுவதற்கும், இராணுவ சேனைகளும் கப்பற் படைகளும் ஆகாயவிமானங்களும் நீதிச் சபைகளும் ஏற்பட்டன.

## முற்கால தற்கால நாகரீக நாடுகள்

இவைகட்கெல்லாம் உறைவிடமாயும் உயிர்நிலையாயுமுள்ள தேசங்கள் மூன்று நான்கே. அவைகள் சீன தேசம், பாரதக் கண்டம், பாரசீக நாடு, ஈஜிப்து ஆகிய இவைகளே. இவைகளில் முன்னொன்றைத் தவிர பின் மூன்று நாடுகளும் காலத்தின் கோளாறினாலும் பல காரணங்களினாலும் தம் பதவியையும் சுதந்திரத்தையும் இழந்து தம்முருமாறி உயிரிலா வுடல்போலும் மணமிலாப் பூப்போலும் இன்று அன்னியர் அரசாட்சியின் கீழ் விளங்கி வருகின்றன! சீனா தேசமோ பல்லாண்டாய்ப் பகைவர்களால் பலபாடு படுத்தப்பட்டவரினும் இன்னுந் தன்னுயிரை இழக்காது வெட்டுண்டவுடலோடும் கட்டுண்ட கையோடும் உயிர்வாழ்ந்து வருகிறது. இத்துடன் உட்கலக்கம் பெருங் கலகமாக விருந்து வருகின்றது. இத்தேசமும் தன்னுட் கலக்கம் நீங்கி கைக்கட்டறுப்புண்டு தன் கைப்புண்ணை ஆற்றுநாள் வருமோ அல்லது இப்புண்கள் பெரிதாகி மெய்ப்பிளவு பட்டழியுமோ அறியேன்.

இவை இங்ஙனமிருக்க, இவைகளின் நாகரீகத்தால் உதித்தோங்கினவை க்ரீஸும் ரோமாபுரியுமே. ஒன்றன் பின்னொன்றாய்ப் பல்லாண்டு பொலிந்து விளங்கி இவைகளும் நலிவுண்டன. தற்கால ஐரோப்பிய நாகரீகத்துக்கு ஆதிபீடமாயுள்ள அதீனிய நாகரீகத்தைத் தன்னுள் வகித்துள்ள க்ரீஸ் எனும் நாடானது இந்த பாரத யுத்தமாம் ஐரோப்பா சண்டையில் திரிசங்கு சுவர்க்கம்போல் ஆங்கிலேயப் போர்க்கப்பலுக்கும் ஜெர்மனியின் பீரங்கிக்கு மிடையிலிருந்து நாளும் நடுங்கி வலியற்று வாழா நிற்கின்றது.

இவைகளு மிங்ஙனமிருக்க, இவைகளின் நாகரீகஞ் சிதைவுற்றுப் பிரிவுபட்டுப் பிறந்த நாடுகள் தற்கால உலாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின், ப்ரான்ஸ், இங்கிலாந்து, ருசியா, ஜெர்மனி யிவைகள். இந்நாடுகளில் முன் மூன்றும் வாழ்ந்துகெட்ட பூமிகளோ டொன்றாயிருந்து வருகின்றன. பின்நான்கு தேசத்தினர்களும் பொருளாசைகொண்டு உலக கீர்த்தி இச்சித்து அறிவை யழிக்கு



மகந்தையோடு முன்னாட்டு சரிதைகளைக் கற்றும் கற்றறிமோழையர்களாய், உலகில் வலியற்ற மக்களெல்லாம் மதியிலாதவர்களென்றும் அநாகரீக ஜாதியர்களென்றும் அவர்களுக்கு ஞானத்தையும் நாகரீகத்தையும் புகட்டுங் கடமை தங்களதென்னு மிறுமாப்புடன் இவ் வேழை மக்களில் முதன்மையானவர்களைக் கொண்டு பல காரணங்களைக் காட்டி இவர்கள் நாடுகளைப் போர் புரிந்தும் புரியாமலுந் தாங்கள் வசமாக்கிக் கொண்டும் அனைவரையும் தங்கள் கருமத்துக்குஞ் சுகத்துக்கும் வல்லாளர்களாக்கிக் கொண்டும், இப்பெருவுலகில் பெரும்பாதி தங்களாளுகையில் வகித்து வருகின்றனர்.

இந்நாகரீக இராஜாங்கத்தார்களின் நாட்டாசையும் பொருளாசையும், தங்களுக்குள் பொறாமையையும், பகைமையையும், வியாபாரப் போட்டியையும் விளைவித்தன. இவைகள் அதிகரித்ததினாலுண்டான யுத்தந்தான் இக்கால ஐரோப்பிய யுத்தம். இவைகளே பொதுக் காரணங்கள். அவைகளைவிட உட்காரணங்கள் உண்டோ இல்லையோ நாமறியப்பெற்றோமல்லோம். காரணம் எத்தகையதாயினும் இப்பெரும்போரில் தினந்தோறும் மட்டற்ற மக்கள் மடிகிறார்கள். எண்ணற்ற திரவியம் கரியாகிறது. கணக்கில்லாக் கப்பல்கள் கடலில் முழுகுகின்றன. ஏழைமக்கள் வருந்துகிறார்கள். உலகந் துன்புறுகிறது. இந்தச் சண்டையின் முடிவு என்னவாகுமோ ஈசனன்றி எவருமறியார்.

இவை யிங்ஙனமிருக்க, மேற்படி தேசங்களின் அமைதியின்மையாலும் மத நிர்ப்பந்தங்களாலும் வாதுண்டு பயந்து வெளிச்சென்றவர்களாலும், சொந்த ஊரில் பிழைக்குமார்க்கத்தைப் பெறாதவர்களாலும் குணநடை பிசகின காரணங்களால் பெற்றோரால் வெறுக்கப்பட்டு வீட்டைவிட்டு விரட்டப்பட்ட மக்களாலும், மற்றுமுன்னோர் பெற்றோரில்லா அனாதிப் பிள்ளைகளாலும் கொடுங்குற்றத்தால் தேசாந்தரத் தண்டனையை வகித்தவர்களாலும் ஆனவை தற்கால அமெரிக்கா ஆஸ்ட்ரேலியா ஆப்பிரிக்கா ஆகிய இந்நாடுகள். அன்றி தற்சமயம் அதிதூரத்திலுள்ள அநாகரீகரும் அறிந்துள இந்தப் புகழ்பெறு ஜப்பான் தேசம் பிறந்ததும் வளர்ந்ததும் பெரும்பான்மையோர் அறியார். வேண்டில் பின் சற்றுரைப்போம்.

## இவ்வுலகின் ஐந்து கண்டங்கள்

இத்தகைய முற்கால தற்காலச் சரிதைகளைத் தன்னுள் வகித்துள இவ்வுலகம் ஐந்து பெருங் கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன.—ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா இந்த பஞ்ச கண்டத்துக்குள் ஆதி யொளியாயும், மதமாதாவாயும், நாகரீக நாடாயும் நாளும் விளங்கிவருவது நமது ஆசியா கண்டம். இந்த ஆசியா கண்டத்தில் ஓர் திலகமாய் இன்றும் விளங்கிவருவது இந்த ஜப்பான் தேசம் ஆதிகால வுலக படத்தில் ஓர் புள்ளியாகவேனும் காட்டப்படாமலும், ஐந்து பத்து வருஷங்களுக்கு முன் அநாகரீகர்களைப்போல் வசித்தும் அடைகாக்குங் கோழியைப்போல் வெளிநாடு செல்லாதிருந்தும் வந்த இந்த ஜப்பானியர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் முன் வந்ததற்கும் அவர்களது கீர்த்தி உலகப் பிரசித்தி பெற்று வருவதற்கும் முக்கிய காரணங்கள் சிலவுள. அவைகளில் அதிமுக்கியமானது கல்வி (அதைப் பின் தொடர்ச்சியிற் காண்க)

பரதேச யாத்திரை நாம் பண்ண வேண்டும்
பலநாட்டு வளர்ச்சிதனை யறிய வேண்டும்
பலதிருத்தங்கள் நம்முள் பரவ வேண்டும்
தனபலமுந் தைரியமும் பெறுதல் வேண்டும்
பாமரராய் விலங்குகளாய் இயந்திர மாய்ப்
பான்மைகெட்டு வாழ்ந்திடுதல் பவிஷோ இன்னும்
க்ஷேமமுற வேண்டுமெனில் தொழில்புரியும்
வகையறியச் செல்வீர்! செல்வீர்!!

தோக்கியோ, ஏப்ரல்மீ 5உ
ஓர் விஸ்வகர்மன்.

## இந்தியப் பூர்வீக நிலைமை

அமிருத பஸார் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—

இந்தியா தேசம் இக்காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க எளிய தேசமென்று சொல்லப்படுகின்றது; ஆனால், அது சென்ற காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க வலிய தேசமாயிருந்தது. விக்கிரக ஆராதனை செய்பவர்களும் கடவுளுடைய விரோதிகளுமான ஹிந்துக்களை மிகுந்த மதிப்போடு நடத்துவதற்குக் காரணமென்னவென்று ஜெஹாங்கிர் இளவரசர் தனது தந்தையாகிய அக்பர் சக்கரவர்த்தியைக் கேட்டபோது, அவர் அவ்வாறு செய்து வந்ததற்குப் பல காரணங்களைக் கூறினார். ஆனால், அக்பர் சக்கரவர்த்தி கூறியவற்றில் ஜெஹாங்கிர் மனத்தில் அழுத்தமாக ஊன்றிய காரணம், சகல வித்தைகளும் கைத்தொழில்களும் சாஸ்திரங்களும் ஹிந்துக்களுடைய கையில் இருந்தனவாதலால் அவர்களை அழிப்பது பெரும் பிழையாயும் நஷ்டமாயும் முடியுமென்றதே.

முகம்மதியர்கள் யுத்தம் செய்யக்கூடும்; ஆனால், அவர்கள் பொருள் வரவுசெலவு விபரம் ஒன்றையும் அறியார் என்றும் அக்பர் கூறினார். வித்தைகளையும் கைத்தொழில்களையும் கற்றல் தமது தகுதிக்குத் தாழ்ந்ததென்று நினைத்து முகம்மதியர்கள் அவற்றைக் கல்லாது விட்டுவிட்டார்கள். வித்தைகளிலும் கைத்தொழில்களிலும் சாஸ்திரங்களிலும் ஹிந்துக்கள் முகம்மதியர்களினும் மேம்பட்டிருந்தது மாத்திரமல்லாமல், உலகத்திலுள்ள வேறெந்த ஜாதியாரினும் மேம்பட்டிருந்தார்கள். இந்த மேம்பாட்டினால்தான் இந்தியா தேசம் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பொன்னைக் கவர்ந்து மிகுந்த செல்வமுள்ள தேசமாயிற்று.

தவிரவும், தங்கம் வெள்ளி முதலிய உலோகச் சுரங்கங்களும், வைரம், வைடூரியம், மாணிக்கம் முதலிய இரத்தினச் சுரங்கங்களும் முத்து பவளம் முதலிய விலையுயர்ந்த மணிகளுள்ள கடல்துறைகளும் ஏராளமாக இந்தியாவில் இருந்தன. உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் செல்வம் இந்தியாவில் புகுந்து கொண்டிருக்க, இந்தியாவிலுள்ள செல்வம் அதை விட்டு வெளியில் போகாமலிருந்தது. ஏனெனில், அக்காலத்தில் இந்தியாவை எதிர்க்கவோ அல்லது கொள்ளையடிக்கவோ தக்க வலிமையுள்ள ஜாதியார் எவரும் இல்லை.

இந்தியாவின் கிழக்குப் பாகத்தில் யாத்திரை செய்த டெரி என்பவர் தமது யாத்திரையைப்பற்றி எழுதியுள்ள (Derry's Voyage) நூலில் கூறியுள்ள பின்வரும் வாக்கியமானது அக்காலத்தில் இந்தியாவில் எவ்வாறு பொன் நிரம்பியிருந்த தென்பதைக் காட்டுகின்றது —''பல நதிகளும் சமுத்திரத்திற்குள் ஓடித் தங்குதல்போல், தங்கமும் வெள்ளியும் இந்தியாவுக்குள் ஓடித் தங்கின; இதரதேசங்களின் ஜனங்கள் தங்களுடைய தங்கக் கட்டிகளையும் வெள்ளிக் கட்டிகளையும் கொண்டுவந்து இந்திய ஜனங்களிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து பல வகையான விளை பொருள்களையும் கைத்தொழிற் பொருள்களையும் வாங்கிக்கொண்டு சென்றார்கள்.''

இக்காலத்தில் இங்கிலாந்து தேசம் வியாபார சம்பந்தமாக அடைந்துள்ள உன்னதநிலையை அக்காலத்தில் இந்தியா தேசம் அடைந்திருந்தது. எந்த எந்த சரக்குகளில் இந்தியா அவ்வாறு மேம்பாடுற்றிருந்தது? டாக்கா தேசத்து 'மஸ்லீன்' (ஸல்லாக்கள்), காஷ்மீர் தேசத்து 'ஷால்' (சால்வைகள்) பட்டுகள், முதலிய எண்ணிறந்த சரக்குகள். இவைதவிர, பலவகைச் சீட்டித் துணிகளும் இந்தியாவிலிருந்து அதிகமாய் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், மண்பாத்திரத் தொழிலிலும் மரப்பொருள் தொழிலிலும் இந்தியா மற்றத் தேசங்களினும் மேம்பட்டிருந்ததாக நமக்குத் தெரியவில்லை. லுடோவிஸ்டி வார்த்திமா என்னும் ஐரோப்பியர் தமது யாத்திரைகளைப் பற்றி எழுதியுள்ள நூலில் ''நான் பார்த்த எல்லா வியாபாரிகளிலும் செல்வம் மிக்கவர்கள் இங்கிருக்கின்றார்கள். இதர தேசங்களைக் காட்டிலும் இங்கே பலவகைத் தானியங்களும் சருக்கரையும் இஞ்சியும் பருத்தியும் ஏராளமாய் நிரம்பியிருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்திலும் ஐம்பது கப்பல்கள் நிறையப் பருத்தித் துணிகளும் பட்டுத் துணிகளும் இத்தேசத்திலிருந்து அந்நிய தேசங்களுக்குச் செல்லுகின்றன.''

மாண்டி மான்ஸ்டார்ட் என்பவர் ''உலகத்தில் பல பாகங்களில் செய்யப்படும் மரப்பெட்டிகளை விட மிகவும் அழகும் உறுதியும் வாய்ந்த மரப்பெட்டிகள் இங்குச் செய்யப்படுகின்றன'' என்கிறார். எம். பெர்னியர் என்பவர் மெக்ஸிகோ தேசத்து வெள்ளியும் ''பெரு தேசத்துத் தங்கமும் சிறிது காலம் ஐரோப்பா கண்டத்திலும் ஆசியாகண்டத்திலும் நடமாடி விட்டுப் பின்னர் இந்தியாவுக்குப் போய்ச் சேருகின்றன; அங்கிருந்து அவை ஒரு போதும் வெளியேறுவதில்லை'' என்கிறார். ஆதலால், அக்பர் சக்கரவர்த்தி ஹிந்துக்களை வருத்துதல் கூடாதென்று ஜெஹாங்கிருக்குப் புத்தி சொன்னார்; ஜெஹாங்கிரும் அப்புத்தியைச் சரியென்று உட்கொண்டு நடந்தார். மொகலாயர் இந்தியாவுக்கு வருமுன்னர் ஆப்கானிஸ்தான் தேசத்துக்குறவர்கள் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து மலை மலையாகத் தங்கத்தைக் கொள்ளையடித்துக் கொண்டுபோனார்கள். அவர்கள் அவ்வாறு இந்தியா தேசத்துத் தங்கத்தை மலைமலையாகக்கொண்டு போயும் இந்தியாவில் பின்னும் ஏராளமாகத் தங்கம் இருந்தது. மொகலாயர் இந்தியாவுக்கு வந்தபோதும் இந்தியாவானது உலகத்திலுள்ள மற்றெந்த தேசத்தினும் அதிக செல்வமுடையதாகவேயிருந்தது. அக்காலத்தில் இந்தியாவில் தங்கமானது இக்காலத்தில் செம்பு மதிக்கப்படுகிறபடியே மதிக்கப்பட்டுவந்தது.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் எழுதியுள்ள பின்



வரும் விஷயங்கள் இந்தியாவானது அவருடைய காலத்தில் எவ்வளவு செல்வமுடையதாயிருந்த தென்பதைக் காட்டும். ''சேனாபதியாகிய மான்ஸிங் என்பவர் அக்பர் சக்கரவர்த்தியைப் பார்க்கவந்த ஒவ்வொரு சமயத்திலும் பதினெட்டு லக்ஷரூபாய் காணிக்கை கொண்டுவரக் கடமைப் பட்டிருந்தார்; அவ்வாறு அவர் வருஷத்திற்கு இரண்டு முறைக்குக் குறையாமல் வருவது உண்டு.' விக்கிரமாதித்த மகாராஜன் தனது நகரத்தின் காசுக்கடைகளில் தொண்ணூறுகோடி ரூபாய் கொடுத்து வைத்திருந்தாராம். இக்கணக்கு உத்தேசமாகக் கணிக்கப் பட்டதென்று வைத்துக்கொண்டாலும், இக்காலத்தில் லக்ஷாதிபதிகளைக் காண்பது அருமையாயிருப்பது போல அக்காலத்தில் கோடீஸ்வரர்களைக் காண்பது அருமையாயிருந்ததில்லை யென்பது மாத்திரம் சந்தேகமற்ற விஷயம். அக்பர் சக்கரவர்த்தியிடமிருந்து ஜெஹாங்கிர் அடைந்த சிம்மாசனத்தை அலங்கரிப்பதற்கு மாத்திரம் மூன்று கோடி ரூபாய் செலவாயிற்று. ஒவ்வொன்று பதினைந்து லக்ஷரூபாய் விலையுள்ள பன்னிரண்டு வைரக்கற்கள் அச்சிம்மாசனத்தில் பதிக்கப்பட்டன. ஆக்ரா நகரின் கோட்டை ஒன்றுக்கு மாத்திரம் இருபத்தாறு கோடியே ஐம்பத்தாறு லக்ஷம் செலவாயிற்று.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் தமது அந்தப்புரச் செலவுகளுக்கும் தமது அரண்மனைச் சிப்பந்திச் செலவுகளுக்கும் மாத்திரம் வருஷந்தோறும் பதினைந்து கோடியே பன்னிரண்டு லக்ஷம் பிடித்ததாகக் குறித்திருக்கிறார். அவர் நூர்ஜிஹானை விவாகம் செய்தபோது அவ்வரசிக்கு நகைகளுக்கு மாத்திரம் எழுகோடியே இருபது லக்ஷம் கொடுத்தார். அவளுடைய முத்துமாலையில் ஒவ்வொன்று ஐம்பதினாயிரம் ரூபாய் விலையுள்ள நாற்பது முத்துக்கள் அடங்கியிருந்தன. அவருடைய மருமகளிரில் ஒருத்திக்கு ஒவ்வொன்று பதினாயிரம் ரூபாய் விலையுள்ள அறுபது முத்துக்களடங்கிய முத்தாரமொன்று இனாமாக அளித்தார். அவருடைய தம்பியாகிய தானியெல் என்பவர் தக்ஷணதேசத்தில் வசித்திருந்தார். அவர் இறந்தபின் அவருடைய உடைமைகள் ஆக்ரா நகருக்குக் கொண்டுவரப்பட்டன. அவை மதிப்புக்கடங்காத விலைபெற்றவை. அவர் சரீரத்தில் அணிந்திருந்த நகைகள் மாத்திரம் நாற்பத்தைந்து கோடி ரூபாய் விலைபெறுமென்று மதிப்பிடப்பட்டன.

அக்பர் தாம் சேர்த்துவைத்திருந்த திரவியம் எவ்வளவிருக்குமென்று பார்க்கக்கருதி முதலில் தமது பொக்கிஷத்திலிருந்த தங்கத்தை நிறுத்துக் கணக்குத் தயாரித்துத் தமக்குக் கொடுக்கும்படியாகக் கிலிட்ஜிகானுக்கு உத்தரவு செய்தார். அத்தங்கத்தைக் கணக்கிட்ட விவரத்தைப் பற்றிப் பின்வருமாறு தமது சரித்திரத்தில் ஜெஹாங்கிர் எழுதியுள்ளார்:—'' அவ்வுத்தியோகஸ்தர் (கிலிட்ஜிகான்) 'ஆக்ரா' நகர் பொக்கிஷ சாலையிலிருந்த தங்கத்தை விலைமதிப்பதற்காக நிறுக்கத் தொடங்கினார். அந்நகரிலுள்ள பலவியாபாரிகளிடமிருந்து நானூறு ஜோடி பெரிய தராசுகள் தருவித்து அவற்றால் ஐந்து மாதம் இரவும் பகலும் இடைவிடாமல் தங்க நாணயங்களையும் தங்கக் கட்டிகளையும் நிறுக்கும்படி செய்தார். ஐந்து மாதம் கழிந்தவுடன் எனது தகப்பனார் எத்தனை மணங்கு தங்கம் பொக்கிஷத்தில் இருந்ததென்று தெரிந்துவரும்படி அவ்வுத்தியோகஸ்தருக்கு ஆளனுப்பினார். ஐந்துமாதம் இரவும் பகலும் இடைவிடாது ஆயிரம் மனிதர் நானூறுஜோடி தராசுகளைக் கொண்டு ஒரு பொக்கிஷ அறையின் தங்கத்தை மாத்திரம் நிறுத்துக்கொண்டு வந்ததில் அத்தங்கம் முழுவதும் நிறுத்த முடிவாகவில்லையென்று அவ்வுத்தியோகஸ்தர் பதில் அனுப்பினார். அதன் பின்னர் எனது தகப்பனார் நிறுக்கும் வேலையை அம்மட்டில் நிறுத்தும்படிக்கும், நிறுக்கப்பட்ட தங்கங்களை அதனதன் இடத்தில் வைத்து அரங்கைப் பூட்டி முத்திரை வைக்கும்படிக்கும் உத்தரவு செய்தார். இஃது ஒரு நகரின் ஒரு பொக்கிஷச் சாலையிலிருந்த தங்கத்தைப்பற்றி நடந்த காரியம்.

இந்தியா தேசத்து ஜனங்கள் மோகல் அரசாட்சியில் அடைந்திராத சமாதானத்தையும் பாதுகாப்பையும் பிரிட்டிஷ் அரசாட்சியில் அடைந்திருக்கிறார்கள். அக்காலத்தில் சகல அதிகாரங்களும் ஒரு மனிதனிடத்தில் இருந்தன. அதனால் குற்றமற்ற மனிதரும் குற்றம் செய்ததாகத் தண்டனையடைதல்கூடும். ஆனால், மோகல் அரசர் இந்தியாவைத் தமது வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர்; தூரதேசங்களில் தமது சொந்த வாசஸ்தலங்களைக் கொண்டு இரைகவரவரும் பறவைகளைப்போல அவ்வரசர் தூரதேசங்களில் தமது வாசஸ்தலங்களைக் கொண்டிருக்கவில்லை. இந்தியா தற்காலத் துரைத்தனத்தாருக்கு ஓர் அந்நிய தேசமா யிருப்பதுபோல அவ்வரசருக்கு அந்நியதேசமா யிருக்கவில்லை. ஆதலால், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பணம் அந்நிய தேசத்திற்குப் போகவில்லை. முகம்மதிய அரசாட்சியில் இந்தியா அளவு கடந்த நல்ல செல்வ நிலைமையில் இருந்ததற்கு முக்கிய காரணம் இதுவே

## நம் முன்னேற்றம்

(முன் 82-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ அந்தியாபக லிங்காச்சாரியார்.

முன்காலத்தில் இந்தியாவில் ஜாதிபேதங்களில்லாமலில்லை. அப்படியிருக்க, அக்காலத்தில் இந்தியர்கள் எப்படி ஒற்றுமைப்பட்டு சுயாதீனர்களாய் வாழ்ந்திருந்தார்கள் என்னும் வினவெழும். அப்போதிருந்த ஜாதிக் கோட்பாட்டிற்கும் இப்போதிருக்கும் ஜாதிக் கோட்பாட்டிற்கும் பேதமுண்டு. அக்காலத்தில் இந்துக்கள் தங்கள் குலத்து ஸ்திரீகளையன்றி வேறு குலத்து ஸ்திரீகளையும் விவாகஞ்செய்துவந்தார்கள். அதனால், அக்காலத்தில் அவர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை நீடித்து சுயாதீனம் நிலைத்திருந்தது. அந்த விவாகம் ஸ்மிருதி சம்மதமாயிருந்தது. இக்காலத்தில் பிரதி ஜாதியும் தன் குலத்திலன்றி வேறு குலத்தில் விவாகம் செய்துகொள்ளக்கூடாதென்று ஸ்மிருதிகள் மாற்றப்பட்டு அல்லது ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்கேற்க நடந்துவரப்படுகிறது. அதனால் ஜனங்களுக்குள் ஒற்றுமையின்றி சுயாதீனம் இழக்க நேரிட்டிருக்கிறது.

மேனாட்டாருக்குள் பல ஜாதிபேதங்களிருந்தாலும் அவர்க்ளுக்குள் நம்பூர்வ இந்தியர்களைப்போல ஜாதிபேதம் பாராட்டப்படாமல் விவாகம் நடைபெறுகிறது. மேனாட்டாரையும் நம்பூர்வ இந்தியர்களையும்போல ஜாதிபேதம் பாராட்டக்கூடாத விவாகம் இக்காலத்தில் நடைபெறவேண்டுமானால், மத்தியகாலத்தில் மாற்றப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட ஸ்மிருதிகள் ரத்துசெய்யப்படவேண்டும். அதற்காக, இந்து சமுதாய ஜாதி ஜகத்குருக்கள், உபகுருக்கள், புரோகிதர்கள், ஜாதித்தலைவர்களின் ஆலோசனையும் அபிப்பிராயமும், தீர்மானமும் வேண்டும்; அவ்வித தீர்மானஞ்செய்யப்பட்டு அதை யனுசரித்து நடக்கவும் செய்யப்பட்டால் இந்து சமுதாய ஜனங்களுக்குள் மேற்கூறிய அபேத விவாகம் நிராடங்கமாய் நடைபெறத்தொடங்குவதோடு சமபந்தி போஜனமும் யாதொரு பிரயத்தினமு மில்லாமலே நடைபெறத்தொடங்கும்.

இச்சாதி பேதத்தோடு சமயபேதமும் இக்காலத்தில் பிராம்மணர்களுக்குள் பாராட்டப்படுகிறது. மற்றச் சாதியாரில் ஒரு சமயத்தார் அவ்வச்சாதியின் வேறொரு சமயத்தாருடன் விவாகஞ்செய்துகொள்ளுகிறார்கள். பிராம்மணர்களுக்குள் அப்படிச் செய்துக்கொள்ளப்படுகிறதில்லை. தத்தம் ஜாதியில் தத்தம் சமயத்தாருடன் மாத்திரம் செய்துக்கொள்ளப்படுகிறது. இப்போதவர்கள் அவ்வழக்கத்தை மாற்றத் துணிந்திருப்பதாயும் தெரியவருகிறது. இதனால் ஜாதியைப்போல சமயம் அவ்வளவு கட்டுப்பாடுடையதல்லவென்றுதோன்றுகிறது. ஜாதி கட்டுப்பாட்டை தளர்த்த முயல்வதானால் முற்கூறியவாறு சமுதாய ஜனங்களுடன் கூடிக்கலந்து உறவாடிப் பழகவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இப்படிச் செய்வதோடு நம்மவர்களையும் இப்படிச்செய்விக்கவேண்டும். அக்கட்டுப்பாட்டை முற்றும் நீக்குவதானால் நாம் மாத்திரம் அதற்காக முயல்வது போதாது. முடிவக்கும் வாராது. சமுதாய ஜனங்களுடன் கூடி எதிர்காலப்போக்கிற் கெதிர்பார்க்கவேண்டும்.

நாம் ஒரு முதல்தர ஜாதியாராய்க் கொண்டு எல்லாரினும் மேம்படப்பார்க்கிறோம். இக்கொள்கையே நம்மைப் பின்னுக்குத் தள்ளுகிறது. எதிர்காலமானது தாழ்ந்தவர்களை உயர்த்தப் பார்க்கிறது. அப்போது நம்மெண்ணம் எங்ஙனமாகும்? மேலும், நாம் இந்துக்கள் என்னும் அபிமானத்துக்குள் அடக்கப் பட்டிருக்கிறோமே யன்றி அதைவிட்டுத் தனியாய் வைக்கப்பட்டில்லை. நாம் கல்வியிலும் கைத்தொழிலிலும் அபிவிர்த்தியடைந்து வருகையில் மற்றவர்கள் தாழ்ந்து நிற்கப் போகிறதில்லை. நம் காருண்ய துரைத்தனத்தாரும் நமக்காகப் பரிந்து மற்றவர்களின் அபிவிர்த்தியைத் தடுக்கப் போகிறதில்லை. நம்மவர்களின் விர்த்திக்கே துணைநிற்கப் போகிறதுமில்லை. அவர்கள் தராசின் தட்டுகளை எடையில் சமமாகப் பார்க்கிற கடைக்காரனைப்போல் இந்தியர்களாகிய நமக்குள் உயர்வு தாழ்வில்லாமல் சமமாகுங் காலத்தை எதிர்பார்க்கிறார்கள். சமமாக்குங் காரியத்தில் தாங்கள் பிரவேசிக்கிறதில்லையென்று முன்னமே சொல்லப்பட்டது. ஆதலால் நமக்கு நாமே சமமாய்க்கொண்டு வரவேண்டும்.

ஆனால், நாம்மாத்திரம் இப்போதே நம் ஜாதிக் கட்டுப்பாட்டை விட்டுவிடலாமென்றாலோ மற்றவர்களும் அப்படியே விட்டுவிட்டு நம்முடன் இணங்கி உறவாடுவர்களா? மாட்டார்கள். அதற்காகத்தான் சமுதாய ஜனங்களின் தீர்மானமும் அதையனுசரித்த நடவடிக்கைகளுமாகிய எதிர்கால நோக்கிற் கெதிர்பார்க்கவேண்டுமென்று மேலே கூறப்பட்டது. அப்படியானால்,



இதனிடையில் நாம் சபைகள் கூட்டியும் கான்பரன்சுகள் நடத்தியும அடையப்போகிற நன்மைகளில் ஒன்றின் முக்கிய சாராம்சமாவது:—சபைகளிலும் கான்பரன்சுகளிலும் பத்திரிகை வாயிலாகவும் பிரசங்கவாயிலாகவும் நம்மவர்களுக்கு நவீன நாகரீகம் உண்டாக்குவதும், சமுதாய ஜனங்களுடன் கூடியுழைக்க வேண்டியதைப் பழகிக்கொள்ளுவதுமாகும். அத்துடன் நம்மவர்கள் ஜில்லாபோர்டுகளிலும் தாலூக்கா போர்டுகளிலும் யூனியன் பஞ்சாயத்துகளிலும் நுழைந்து அங்கத்தினர்களாக வேண்டும். ஆக முயல வேண்டும். அதற்காவது கல்வி வேண்டுமென்றாலோ தாழ்தரக் கல்வியும் ஊரில் மதிக்கத்தக்க யோக்கியதையும் இருந்தால் போதும்.

இங்கே கல்வியினும் யோக்கியதை பெற்றிருப்பதே சிறப்பு. அதுதான் நம்மவர்களில் அருமையாயிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வருமைக்குக் காரணம் வெளிப்படையாகவும் குறிப்பாகவு மிருக்கும்; அவற்றை நீக்கும் முறையும் இங்கு காட்டலாயினேன். அவை—நம்மவர்களிற் சிலர் கல்வி கேள்வியின்மையால் நல்லொழுக்க முணராது சற்சாங்கத்தியஞ் செய்வதினின்று விலகித் தம்மளவில் ஒடுங்கி நிற்கிறார்கள், அல்லது, அதற்கெதிர் மறையாய் நடக்கிறார்கள். சிலர் வருவாய்க் குறைவால் தொல்லைகள் மேலிட்டு கல்விகேள்வி பெறப் போதுமான அவகாசமின்றி வாளாவருந்துகிறார்கள்.

இத்தகையாருக்கு நம்மவர்களுடைய பொது நிதியின் உதவியும் போதகர்களும் வேண்டும். இக்காரியத்திற்காக நம்மவர்களுக்குள் ஜில்லாவுக்கொரு பொது நிதி ஸ்தாபிக்கப் படவும், பிரதி பொது நிதி ஸ்தாபனத்திலும் ஜில்லாவுக்குப் போதுமான போதகர்கள் வைக்கப் படவும் வேண்டும். குறிப்பான காரணங்களை நண்பர்களே அறிவார்கள். அறியாதவர்க்குஞ் சொல்வார்கள்.

(தொடரும்.)

---

தென்னிந்தியாவில் நெல் பயிர் எவ்வளவு முக்கியமோ அவ்வாறு பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணத்திலும் கோதுமை சாகுபடி பிரதான மென்பதை நமது நேயர்கள் அறிவார்கள். இவ்விரண்டு பிரதேசங்களிலும் வருஷம்தோறும் 12,209,175, ஏகரு பயிரிடப்பட்டு, உள்நாட்டு உணவுக்கு வேண்டியளவு போக மீதி சுமார் 2,000,000 பாரம்வருஷம்தோறும் காச்சிதுறைமுகம் மூலமாய் மேனாட்டுக்கு ஏற்றுமதியாகி வருகின்றது.

## ஜடாயு ராவண சண்டை

பக்ஷிகளில் கழுகினை நம்மவர் நிக்ருஷ்டமாய்க் கூறுவர். கருடன், கழுகு, ஆந்தை முதலிய பக்ஷிகள் நமது வீட்டில் உட்கார்ந்தாலே, அதற்காகச் சாந்திகள் ஹிந்து சாஸ்திரம் விதித்திருக்கிறது. கருடன் கத்துவதைச் சகுனமாக எடுத்திருக்கிறார்கள். மற்றவைகளின் தரிசனமே உதவாது. உயிருடன் கழுகு கொத்துவதையும், ஆந்தை மேல்பறப்பதையும்நம்மவர் அசுப சகுனமாகச் சொல்லி அவமதிப்பர்.

ஆனால் கருடன், கழுகு, ஆந்தை முதலிய பக்ஷிகளிருந்து நம் விவசாய உலகத்திற்கு எவ்வளவோ நன்மை செய்கின்றன. இவற்றின் எச்சங்கள் நிலத்திற்கு எவ்வளவோ உரத்தினை யளிக்கின்றன. இவை பயிர்களுக்குக் கெடுதலான அநேக பூச்சி புழுக்களைத் தின்று நன்மையளிக்கின்றன. கழுகினை வாயு மண்டலத் தோட்டி என்று, அஃது ஆகாயத்தைச் சுத்தமாக்குவதை யுத்தேசித்துக் கூறுவதுண்டு. ஈச்வரனால் ஸ்ருஷ்டி செய்யப்பெற்ற ஒவ்வொரு பக்ஷியோ புழுவோ, உலகத்துயிர் அறியமுடியாத நன்மையைச் செய்வதற்கென்றே ஸ்ருஷ்டிக்கப் பெற்றதென்று நம்மவர் யாவரும் உணர்ந்தால் அவற்றிற்கு எவரும் ஊறு உண்டாக்கி, ஈச்வரனின் ஸ்ருஷ்டிக்குப் பழுது உண்டாக்கி அவனது அப்பிரியத்தையு மடையார்கள்.

ஜடாயு என்றது தீர்க்கமான ஆயுளையுடையதென்று பொருள் படுகிறது. நீண்டகாலம் வசித்ததனால் க்ருத்ரராஜாவாகிய ஜடாயு அப்பெயர் பெற்றதென்பர். இப்பக்ஷி ராமாயண கதாநாயகனாகிய ஸ்ரீராமனின் தந்தையான தசரத மன்னன் வஸித்த காலவளவுக்கு மேல் வஸித்ததென்பர். இப்பக்ஷி சூரியபகவானின் சாரதியான அருணனின் புத்திரனெனக் கூறுவர். இப்பட்சிக்கும் தசரதனுக்கும் இணைபிரியாச் சிநேகமுண்டு. இஃது மனிதனைப்போல் பேசி இன்ப துன்பங்களையனுபவித்துப், பிறருக்கு அநுகூலம் பண்ணும் உயர்ந்த ஸ்வபாவ முடையதென்று, ராமாயணத்தில் உயர்த்திக் கூறியதிலிருந்தே ராமாயண காலத்தார் கழுகுபோன்ற பக்ஷிகளை எவ்வளவு அன்புடன் போற்றி வந்தார்களென்பது விளங்குகின்றது.

இக்கழுகு மலைபோன்ற ஆகிருதியுடையது. இதன் துண்டங்கள் என்ற குறடுபோன்ற மூக்கு எப்படிப்பட்ட மலைச்சிகரங்களையும் சில்லுச் சில்லாய்ப் பேர்த்துத் தூளாக்கும் வன்மையுடையது. கருடன்போன்ற

தனது கூரிய அலகுகளினால் எப்படிப்பட்ட மலைகளையும் அசைத்துக் குலைக்கவல்லது. இப்படிப்பட்ட வல்லமையுள்ள கழுகரசனான ஜடாயும் ஸ்ரீராமனுடன் ஸ்நேகமாகி அவருக்குத் துணையாய்ப் பஞ்சவடியில் **நிக்ரோதம்** என்னும் ஆலமரத்து நுனியில் ஸ்ரீராமனின் பர்ணசாலைக்கருகில் வஸித்திருந்தது.

மாயமானாகிய மாரீசன் பின்னே ஸ்ரீராமர் போன பின்னர், ஹா! ஸீதே! ஹா! லக்ஷ்மணா! வென்று போட்ட குரலால், லக்ஷ்மணனும் ஸீதையால் ஸ்ரீராமனைத்தேட அனுப்பப்பெற்ற ஸமயத்தில், காஷாய கமண்டலத்துடன் சந்நியாஸி வேடம்பூண்ட ராவணன், பர்ணசாலையில் நுழைந்து ஸீதையை மயிர்பிடித்துத் தூக்கித் தேர்த்தட்டில் வைத்து ஆகாயமார்க்கம் சென்றனன். அப்போது அரைநித்திரையாய்க் கண்மூடினதும் மூடாததுமாய்த் தலையை கீழே நட்டுக்கொண்டிருந்த க்ருத்ர ராஜனாகிய ஜடாயுவுக்கு ஸீதையின் அழுகைக்குரல் காதில் பட்டது. இது கேட்ட கழுகரசன் ஓடோடியும் வந்து பல வார்த்தைகள் ஹிதமாயும் கொடூரமாயும் சொல்லி ராவணனின் ஓட்டத்தைத் தகைத்தது. ஸ்ரீராம கைங்கர்யத்தில் தன் பிராணனையும் கொடுக்க அக்கழுகு யத்தனித்தது. தன்னுடன் யுத்தஞ் செய்து ஜயித்த பிறகே ஸீதையை எடுத்துப் போமாறு ராவணனைப் பார்த்து திக்காரமான வார்த்தைகள் சொல்லி மறித்தது. இதை நோக்கி ராவணனும் எதிர்த்தான். உடனே கழுகரசனும் ராவணன் கன்னத்தில் தன் இறகுகளால் பளீர், பளீர், என்று அறைந்தது; அவனுடம்பெல்லாம் தன் கூரிய மூக்கால் குத்தி ரணகளமாக்கி ரத்தப்பிரவாகமாக்கி அவனுடைய தேகத்தில் அதிகமான வேதையை உண்டுபண்ணிற்று. அவனுடைய தேர்க்குதிரைகள் அத்தனையும் கொத்திக் கொன்று வீழ்த்திற்று. அவனுடைய சாரதியையும் கொன்றது. ராவணன் பக்கலில் நின்று சாமரம் வீசின அரக்கர் அனைவரையும் சாகவடித்தது.' அவன் ஏறின தேரினையும் மூக்கினாலேயும் தன் சிறகுகளாலேயும் அடித்துக் கண்டதுண்டங்களாக்கி, அவனை ரதாஹீனனாய்ப் பூமியில் நிற்கச் செய்தது. அவனது இடது பக்கத்துக் கரங்கள் பத்தினையும், தலைகள் பத்தினையும் தன் மூக்கினாலேயே கொத்திக் கொத்திக் கிளைகள் கழிப்பதுபோல் கழித்தெறிந்தது. திக்குக்கஜங்கள், தேவர்கள் முதலிய ஸகலருடன் யுத்தஞ்செய்து பிரக்யாதி பெற்ற ராவணன், இப்பக்ஷியுடன் நேர்ந்த யுத்தத்தில் அடைந்த சிரமமும் நடுக்கமும் மீதி எந்த யுத்தத்திலுமடைந்ததில்லையென்றால், இப்பக்ஷி செய்த யுத்தாதிசயத்தைப்பற்றி வேறு வர்ணிக்க வேண்டுவதில்லை. ஆயிரம் வருஷத்துக்கோர் சிரம் வீதம் பதினாயிரம் வருடத் தவத்தில் பத்துத் தலையையும் அறுத்து அக்னியில் ஹோமம் செய்த மஹிமையினால், அறுத்த தேஹத்தினங்கங்கள் தக்ஷணமே முளைக்கப் பெறும் வரத்தினைப் பிரம்ம தேவனிடம் பெற்றதனால், கழுகுக்குத் தப்பி ராவணன் பிழைத்து, மீண்டும் தன்னுறையிலிருந்த வாளால் ஜடாயுவின் பக்ஷங்களையும் கால்களையும் வெட்டிவிட்டுச், ஸீதையுடன் லங்கா நகரம் சென்றான்

இதனால் ஜடாயுவின் உபகாரச் சிந்தை விளங்குகின்றது. உயிரில்லாப் பிராணிகளின் ஊனைக் கொத்தித் தின்பதில் பிரியமிக்க ஜடாயுபோன்ற பக்ஷி இம்மாதிரியான ஸமயமறிந்து ஸீதைபோன்ற பதிவிரதைகள் களவாடப் பெறும்போது உடனின்று எதிர்த்துச் சண்டையிட்ட தென்பதிலிருந்து, அதின் நன்றியறிதலுடைமையை நன்கு நிர்ணயிக்கலாம். மலைச் சிகரங்களில் வசிக்கும் கழுகுபோன்ற பக்ஷிகள் நாடுகளில் புகுந்து ஆட்டுக் குட்டிகளையும், சில வேளைகளில் தொட்டிற் குழந்தைகளையும் தன் காலிடுக்குகளில் தூக்கிச் சென்று தின்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். மேனாட்டுக் கதைகள் பலவற்றில் வாசித்துமிருக்கிறோம். அப்படியில்லாமல், இப்பக்ஷி ஸீதாதேவியை ரக்ஷிக்கத் தசகண்ட ராவணனுடன் சண்டையிட்டதினின்றும், இதன் பெருந்தன்மையும் பழக்கமுறின், இஃது மானுட ஸமூகத்திற்கு உதவும் தன்மையும் விளங்கும். இம்மாதிரி ஒவ்வொரு பக்ஷிஜாதியும் ஒவ்வோர் விதத்தில் பிரயோஜனமுள்ளதாகவே இருக்கிறதேயன்றி, மற்றப்படி வேறில்லை. ஆகவே, எதனையும் நிகிர்ஷ்டமென்று தள்ளுதலாகாது. இப்பக்ஷி ராம கைங்கர்யம் செய்தகாலன்றோ ஸ்ரீராமன் அதனைத் தன் பிதாவாகவே பாவித்து அதனுக்குப் பிரேத கார்யமனைத்தும் செய்து, நல்ல லோகத்திற்கு நீ யெமது ஆஞ்ஞையால் செல்வாயாகவென்று சொல்லி அப்பக்ஷிக்கு நல்ல பதவியைத் தந்தருளினார் என்று ஸ்ரீமத் ராமாயணம் கூறும். ஆகவே பக்தியொன்றே ராமனுக்குப் பிரியமான வஸ்துவென்பதும், மற்றைய ஸ்நானம், ஸந்தி, ஔபாஸனம், பூஜை முதலிய சகல கிரியைகளும், அவ்வொன்றிற்குப் பிற்பட்டவை யென்பதும் "**ஜடாயுவின் உபாக்கியானம்**" நன்கு விளக்கும்.

**வி. சுப்பிரமணிய ஐயர்.**

ஜந்து வர்த்தமான ஸாரம்,



## இந்தியக் கலைகளும் சிற்பமும்

கோலார் எக்ஸிகியூடிவ் இஞ்சினீர் மிஸ்டர் ஐயாசாமி ஐயர் செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம்.—

இந்தியக் கலைகளிலும், சிற்பங்களிலும் இந்தியர்களின் மதப்பற்று மிகுதியும் காட்டப்பட்டிருக்கிறது. இந்திய தேசிய வாழ்க்கையிலிருக்கும் விஷயங்கள் இந்தியக் கலைகளிலும் சிற்பங்களிலும் காட்டப்படுமாகில் அந்நிய நாட்டார் அவற்றின் அருமை பெருமைகளை அறியக்கூடாமலும், அச் சிற்பங்களின் அர்த்தம் தெரியாமலும் விழிக்க வேண்டியவராகிறார்கள். அந்த சிற்பங்களை உண்மையான பக்திமானாகிய ஒரு ஹிந்து பார்த்தானானால் அவனை அச்சிற்பம் பரவசமாக்குகின்றது.

இந்தியச் சிற்பங்களைப் பார்த்தமாத்திரத்தினாலேயே பூர்வீக ஆரியர்கள் பூர்வகாலம் முதற்கொண்டே சிற்ப வேலையில் இவ்வளவு ஞானவான்களா யிருந்தார்களென்பது தெளிவாகப் புலப்படலாகும். பௌத்தர் காலத்தில் இந்திய சிற்ப சாஸ்திரம் மகோந்நத தசையை யடைந்திருந்தது. புத்தமதம் நாடெங்கும் பரவியதுபோல் இந்திய சிற்ப சாஸ்திரமும் கலைகளும் அந்நிய நாடுகளாகிய சீனா, ஜப்பான், ஸிலோன், ஜாவா, கம்போடியா முதலிய தேசங்களில் புத்தமதத்தோடு தாராளமாய்ப் பரவியது. திராவிடர்களின் அல்லது தென்னிந்தியாவின் சிற்பசாஸ்திரம், வங்காளத்தின் அல்லது வட இந்தியாவின் சிற்பம், சாளுக்கியன் அல்லது மேலிந்திய சிற்பசாஸ்திரங்களும், கூர்ஜரம் மைசூர்களின் சாஸ்திரங்களும், முகலாய சிற்பமும் வெவ்வேறு வகைப்பட்டன.

இப்படியிருக்கையில், இந்தியாவின் பூர்வீக சிற்பசாஸ்திரம் தற்காலத்தில் ஏற்று எடுத்து அனுசரிக்கும்படியான நாகரீகம் அமைந்ததாயிருக்கவில்லையென்று புதிய மாறுதல்களில் கலந்துகொள்ள ஒருநாளும் மறுதலிக்காது; தற்கால சாஸ்திர ரீதியை அறிந்து கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் தினுசுகளில் இருக்கும் ஐரோப்பிய தேசங்களைக் காட்டிலும் இந்தியாவையே முதன்மை பெற்ற தேசமென்னலாம். தற்காலத்திய ஐரோப்பிய தேசங்களைப்போல் தானிருக்கவேண்டுமென்றிராமல், இந்தியா அத்தேசங்களின் சாஸ்திரமுறையை மட்டும் அனுசரித்து தன் தேசத்தின் சித்திர சாஸ்திரங்களைமட்டும் ஒழுங்குபடுத்துமாகில் அதைவிட இந்தியாவுக்கு வேண்டுவதென்ன? அப்போது இந்தியா தன் பூர்வீகமான சிற்பசாஸ்திரங்கள் ஒன்றையும் அலட்சியம் செய்ய மனங்கொள்ளாது. மற்றப்படி, நம் இந்திய சிற்பசாஸ்திரிகள் தம் தொழிலில் பலனடையவேண்டி மேல்நாட்டு சாஸ்திரங்களையே பார்த்துப் பார்த்துக் கைபழக ஆரம்பித்தால் இந்தியா நாட்டுச் சிற்ப சாஸ்திரம் முன்னுக்கு வர இடமிராது.

ஆகையினால், எல்லா இந்தியர்களும் தம் தேசத்தின் சிற்பசாஸ்திரம் முதலியன மேலோங்க வேண்டுமானால் தேசிய முறைமையான சாஸ்திரங்களை எல்லாரும் விருத்திபண்ண முற்படவேண்டும். வீட்டுச் சிற்பங்களையும் இந்தியர்கள் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவரப் பார்க்கவேண்டும். இந்திய சிற்பங்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், இந்தியர்கள் ஐந்து சிற்பசாஸ்திரங்களையும் நன்கு அப்பியாசம்செய்யவேண்டும். இச்சாஸ்திரம் பிரபலிக்கவேண்டுமானால், நமது குழந்தைகள் சீதாராம சரித்திரங்கள், ராதாகிருஷ்ண சரித்திரங்கள், ஸாவித்திரி ஸத்யவான், நள தமயந்தி சரித்திரங்களைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுமாறு கற்பிக்கப்படல்வேண்டும்.

இக்கதைகள் புஸ்தகங்களில் அவர்களுக்கு வாசிக்குமாறு எழுதப்பட்டு, பாடபுஸ்தகங்களாக ஆக்கப்படுவதன்றி, மேற்கூறிய சரித்திர சம்பந்தமான படங்களை எழுதி ஸ்கூல் பிள்ளைகள் பார்க்குமாறு ஸ்கூல் அறைகளில் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலே மட்டுமில்லாமல் எல்லா வீடுகளிலும், அரண்மனையிலும் இப்படங்கள் எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கவேண்டும். நம் பாலியர்கள் தாங்களாகவே காலேஜ் கட்டடங்களிலும், முனிஸிபல் கட்டடங்களிலும் சித்திரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப் போய்ப் பார்த்துத் தாமாகவே அவற்றுள்ளிருக்கும் மதபேதங்கள், சரித்திர விஷயங்கள் எல்லாவற்றையும் தாமே கற்றுத்தேற முயற்சி செய்யவேண்டும். இக்கட்டிடங்களில் எழுதப்பட்டுள்ள சித்திரங்கள் இந்தியர்களாலேயே எழுதப்பட்டிருக்கவேண்டும். இந்தியர் மாதிரிகளை யநுஸரித்தே அவை எழுதப்பட்டிருக்கவேண்டும்.

இந்தக்காலத்திலும் இந்திய மாதிரியையே நன்றாக அநுஸரித்து இந்திய சித்திரங்களை சித்திரிப்பதில் வல்ல சித்திரக்காரர்கள் இருந்துவருகிறார்கள். அவர்களுக்கு இத்தொழிலில் ஊக்கமட்டும்கொடுத்தால் போதும். கல்வி கற்ற எந்த இந்தியர்கள் தம்

## “எலிபெண்டா” என்னும் “கரிபுர”க் குகைகள்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று வெளிவரும் செந்தமிழ் பத்திரிகையில் ஸ்ரீ ல. அனந்தய்யரவர்கள் சிலா வேலை அற்புதங்களைப்பற்றி சிலாக்கியமாய்க் கீழ்க் குறித்தவா றெழுதியிருக்கிறார்கள்.

“எலிபெண்டா” வென்பது பம்பாய் நகரத்துக் கருகிலேயுள்ளதோர் தீவு. இத்தீவானது குகைகளெனும் மலைமுழைகளுக்குப் பேர்பெற்றது. எலிபெண்டாக் குகைகள் என்று பூகோள சாஸ்திர மறிந்த நிபுணர் சிலர் தாமியற்றியுள்ள சிற்சில நூல்களிற் பொதுப்படக் குறிப்பிட்டிருக்கிறார்களே யன்றி, அக்குகைகள் எவ்விதமா யமைந்துள வென்பதையும், அவ்வமைப்புக் கேற்றவண்ணம் இந்துக்க ளாயினோர் ஆடிப்பாடி வணங்கும் சித்தமுத்த சுத்தனாகிய அம்பலவாணனது அடிசேரும் சாயுஜ்ய பதவியைத் தரக்கூடிய அங்குள்ள விக்ரகங்களையும், உருவமைப்புகளோடு கூடிய கற்பாறைகள் அவற்றுள் (அக்குகைக்குள்) பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கும் நேர்மையையும், இன்னும் விக்ரகங்களைப் பார்த்தளவில் பக்திமிகுந்து பரவசராய் ஜனங்கள் கைகூப்பி “ எதுவும் எம்மையாளு மீசன் செயல் ” எனத் தியானித்துத் தினந் தவறாது அக்குகைகளினருகே கூடித் தோத்திரஞ் செய்து போவதையும் விவரித்துக் குறிப்பிட்டிருப்பதைக் காணோம். ராஜ ராஜர்களையும் மற்றோரையும் ‘ காந்தமானது ஊசியை யிழுப்பது ’ போ லிழுப்பனவும் இந்தியாவின் மேற்குப் பாகத்தில் சீருஞ் சிறப்பு மிகுந்து நம்மவர் பலராலும் புகழுடன் பேசப் படுவனவுமான அக்குகைகளின் ஆதிபத்தியத்தைத் தென்மொழி யொழுகுந் தென்னாடரும் அறிந்து தமக்கொரு வேளை அவையினைப் பார்க்க வேண்டுமெனும் போவல் மிகுந்திருக்கின் அவைகளின் நிலை இத்தன்மையதென்று தெரிந்து கொள்வதற்காகவும் வேண்டியாம் இவ்வியாச மெழுதத் துணிந்து முன் வந்தனம்.

### ஆதிபத்தியம்

பம்பாய் நகரத்திற் கருகிலேயுள்ள இத்தீவுக்கு ஆங்கிலர் ‘ எலிபெண்டா ’ (Elephant = யானை) என்று பெயர் வைத்திருக்கிறார்களெனினும் இந்துக்கள் அத்தீவைக் கரிபுரி என்றழைத்தார்கள். ஆங்கிலர் கொடுத்திருக்கும் பெயரை அர்த்தத்துடன் ஓதுகையில் “யானை புகும் குகைகள் ” என்று பொருள்படுவதற் கிணங்க இந்துக்கள் கொடுத்திருக்கும் கரி புரி எனும் பெயரைப் பிரித்துப் பார்ப்போமானால் கரி = யானை, புரி = ஊர், என்று பொருள்படுவது செவ்வனே விளங்குகின்றது. குகைகளிருக்கும் இவ்விடத்திற்கு யானையை யொட்டிப் பெயர் கொடுக்கப் படுவானேன்? முதன் முதல் போர்த்துக்கேசியர் (Portuguese) இந்தியாவுக்கு வந்த போது மேற்சொல்லிய தீவின் தென்பாகத் துறையில் இறங்கினார்கள். அப்பழைய துறைக்குக் கொஞ்ச தூரத்துக் கப்பால் சிகமுகிக் கல்லில் செதுக்கப்பெற்றதோர் யானையுருவந் தென்பட அதனைப் பார்த்து அத்தீவுக்கு “ யானைத் தீவு ” என்று பொருள்படுமாறு எலிபெண்டா (Elephanta) என்று பெயரிட்டார்கள். அப்போதிருந்து அப்பெயராலே எவராலும் வழங்கப் பட்டு வருகிறது. பிறநாட்டார் அப்பெயர் கொடுத்ததைப் பின்னர் அறிந்த இந்துக்கள் தந் தாய்ப்பாஷையில் கரிபுரி என்று கூப்பிடலாயினர். அதே பெயரை இன்றும் பாரஸீகர், குஜராத்தியர், மராத்தியர், பட்டியர், காம்பெயர் முதலினோர் சொல்லிவருகிறார்கள். அப்போது தென்பட்ட யானையானது நீளத்தில் 13 அடியும், உயரத்தில் 7 அடி 4 அங்குலமுமுடையதாயிருந்தது. ஆனால், 1814-வது வருஷம் செப்டம்பர் மாதம் அச்சிலையின் தலையும் கழுத்தும் தெறித்துவிழுந்தன. பின்னர், அதன் மீதெவரும் கவனஞ் செலுத்தாராயினர். அத்தீவுக்குத் தமாஷாவாகவோ, காரியார்த்தமாகவோ போனவர்க ளனைவரும் கஜத்தின் கீழ் நிழலுக்காகத் தங்குவதும், அப்படித் தங்கும்போது சும்மாவிராமல் தம் கையிலிருக்கவல்ல கட்டையினாலாவது கல்லினாலாவது யானையின் காற்புறங்களையும் வாலையும் மற்றப் பாகத்தையும் வேடிக்கையாய் வருத்துவதும் வழக்கமா யிருந்ததன் காரணமாகத் தலையிழந்து நின்ற யானைச் சிலையானது உறுப்புக்களுள்ள பாகங்களில் சிதைவுபட்டு உருவம் மாறி ஒன்றுந்தோன்றாப் பெருங்கற்பாறையாய்ப் பூமியிற் பதிந்துவிட்டது. ஆயினும், முதன் முதல் காணப்பட்ட குறியினைக் குன்றவிடலாகாதென்று அப்போதிருந்த அதிகாரிகள் கருதி 1864-வது ௵ யானைச் சிலையாயிருந்து உருவமாறிக் கிடந்த கற்பாறையைப் பம்பாயின்கணுள்ள விக்டோரியாதோட்டங்களுக்குக் கொண்டுவந்தார்கள்.



### கரிபுரக் குகைகள்

கரிபுரியெனுங் காரணப்பெயர் கொண்டு நிற்கும் அத்தீவில் கற்பாறைகள் நிரம்பி அவையினுள் பெருங் கற்களா யிருப்பவைகளின் கீழ் இடைவெளி மிகுந்து மானிடர் உட்செல்லுதற் குகந்தவாறு வழியேற்பட்டிருப்பதால், அவைகளைப் பார்த்தோர் தரணியைத் தவிர்த்துத் தனியே சென்று தவம்புரிவதற் கேற்ற விடமெனக் கருதலாயினர். இரண்டு கற்களின் அடிப்புறத்தில் வீரிந்து மேற்புலத்தில் மூடிபோட்டது போல் ஒன்று சேர்ந்திருக்க விரிந்திருக்கும் வழியே சென்றால் எவ்விடங் கொண்டுபோய் விடுமோ வென்று சிலருக்குச் சாதாரணமாய் அபிலாஷை யிருக்கக் கூடும். அவ்வபிலாஷையைப் பூர்த்திசெய்து கொள்ள வேண்டிப் பலர் பலவிதங்களில் முயற்சி செய்திருந்த போதிலும் அவர்களது முயற்சி முழுதும் கைகூடுதற் கிடமில்லாமற் போய்விட்டது. ஏனெனில், கற்பாறைகளுக்குக் கீழாக அகன்று ஒரு பெரும் வாயிலுக்குள் போவது போல் விரிவாயுள்ள ஐந்து குகைகள் காணப்பட்ட போதிலும் ‘ பெரிய குகை ’ (Great Cave) எனப் பெயரிடப்பட்ட குகையைத் தவிர ஏனைய குகைகளுக்குள் எவரும் சென்றது கிடையாது. இக்குகைகள் ஆறாம் நூற்றாண்டில் கன்னடதேசத்தி லரசாண்ட பாணுசுர சக்கரவர்த்திக்காக அமைக்கப் பட்டனவெனப் பலர் சொல்லுகிறார்கள். இந்தப் பெரிய குகையானது சமுத்திர மட்டத்திற்கு 250 அடி உயரத்தில் கரிபுரியின்கண் வடவாமுகாக்கினியை நோக்கி நிற்கின்றது. பின்னும், ஒன்றன்மே லொன்றாய்ப் பதிந்து பலர் சேர்ந்து புரட்டினாலன்றி இரண்டொருவரால் சிறிதும் அசைக்க முடியாத ஆகிருதியுடன் அமைந்துள்ள கற்பாறைகளில் அக்குகைகள் செயற்கையினா லானவையோவென்று பார்த்தோர் சந்தேகித்தற்கு இடங் கொடுக்குமாறும் அவை புலப்படுகின்றனவாம்.

மேலே காட்டிய குகைகள் ஐந்தினுள் பெரிய குகையைத்தவிர மற்றக் குகைகளுக்குள் எவரும் போனதில்லையென்று தெளிவாகக் கூறினோம். அப்பெரிய குகையின் முன்வாயினின்று உட்சென்றால் சுமார் 130 அடி தூரம் வரை யாதொரு தடங்கலுங் கிடையாது. கிழக்குமேற்காய்ப் பார்த்தாலும் இதே நீளந்தான். குகையின் உயரம் 17-அடி. சாதாரணமாய்க் கோயிலுக்கு முன்பக்கத்திற் கட்டப்பட்டிருக்கும் கருங்கல்லினாலாய மண்டபங்களுக்குக் கீழாக ஒருவன் நின்று பார்க்குமளவில் அவனது கண்களுக்கு அப்பெருமண்டபத்துக் கற்றூண்கள் மேலிருக்கவல்ல கற்கூரையிற் பதிந்து அதனைத் தாங்கிநிற்பதும், அத்தூண்களில் விக்ரகங்கள் செதுக்கப்பட்டிருப்பதும் எவ்விதம் புலப்படுமோ, அவ்விதமே இக்கரிபுரப் பெரிய குகையின்கணுள்ள வொவ்வொன்றும் புலப்படு மென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. சமுசார பந்தத்தினின்றும் நீங்கி நெற்றியில் விபூதியிட்டு உச்சிமுதல் உள்ளங்கால்வரை காஷாய வஸ்திரமுடுத்திக் கையிற் கபாலமேந்தித் தண்டு கமண்டலதாரியாய்ப் புவியைத் துறந்த புண்ணியரோவெனப் பார்த்தோர் பக்திமேலீட்டால் பரவசராகும் வண்ணம் சர்வேசுரனின் திருநாமங்களையுச்சரித்து முத்திமார்க்கத்தில் முனைந்து முயற்சிக்கும் தவசிகட்கேற்ற விடமென்றும் அக்குகையினைக் கூறுதலியலும். என்னே அதன் மகிமை ! இக்கலியுகத்தில் தவசிகளைக் காண்பதரிதாயினும் சாமானிய மக்கள் பலர் பரம்பரையாய் இக்குகைக்கு வந்து தரிசித்துப் போவதை விரதமாகக்கொண் டிருக்கிறார்கள். இப்போதும் இந்துமத சாம்பிரதாயத்தை யனுசரித்துறும் உற்சவாதிகளில் இந்துக்களாயினோர் அக்குகையினைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

### குகையின் மகத்துவம்

சைவ சமயிகளானாலும் வைஷ்ணவர்களானாலும்பாரஸீகர்களானாலும் மராட்டியரானாலும் மற்றும் இந்துமதப் பற்றுடையோ ரெவரானாலும் இக்குகை ஸ்தம்பங்களிற் காணப்படும் உருவமைப்புக்களைப் பார்த்து மனம் பூரிப்பது பெரும் வழக்கமாயிருந்துவருகிறது

---

தேசத்து சித்திரக்காரர்களை அவமதிக் கிறார்களோ அவர்களே இந்தியா தேசத்துச் சித்திரத்தொழிலையும் தம்மையும் அவமதித்துக் கொண்டவராகிறார்கள். ஐரோப்பிய சித்திரத்தைப்பார்த்து எழுதுகிறதற்காக உள்நாட்டுச் சித்திரக்காரர்களுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடாது. மற்ற தேசத்தைப் பார்த்தும் மற்ற சித்திரங்களைப் பார்த்தும் எழுதுவது சித்திரமன்று. அருமையான ரஸம் உண்டுபண்ணி சிற்பத்தை எழுதுவதோ செய்வதோ தான், உண்மையான சிற்பசாஸ்திரமாகும்.

இந்தியன் வாழ்க்கை, இயற்கை, அழகு, நேசம், மரியாதை, மதம், தேசிய வாழ்க்கை முதலியவைகளைக் காட்டுவதற்கு வேதசாஸ்திரங்களை அறிந்து சிற்பங்களை எழுதினால் அவை அமையும் மாதிரி வேறாகவே யிருக்கும். எப்படிப்பட்ட புத்திசாலித்தனமான விழிப்பும் நம் பூர்வீக மகரிஷிகளிட மிருந்தே யுண்டானது. நமது வேதரிஷிகள் யோகிகள் சொன்னதுதான் நமது பிதுரார்ஜிதமாகும்.

இது அவர்கள் செய்த பூஜாபலனே அல்லது அக்குகையின் மகத்துவமோ யாம் கூறவல்லேமல்லேம். வைஷ்ணவத்தையே நாடியுள்ள தந்தை அக்குகையின்கணுள்ள உருவமைப்புக்களைப் பாராமல் தனக்கு அவைகளின்மீது பற்றில்லையென்று கூறினும், அவனது புத்திரன் இக்குகைக்கு வந்து நேரில் அவ்வுருவமைப்புக்களைப் பார்ப்பனேல் அவைகளின்மீது தனது பற்றுதலைக் காட்டாதிரான்.

பணிய ஜாதியைச்சேர்ந்தோரே பெரும்பாலும் அக்குகைக்கு வந்து விக்ரகங்களைத் தொழுதுபோவார்கள் பிப்ரவரி மாதத்து அமாவாசைக்கு முன்பாக வரும் மகாசிவராத்திரி தினத்தில் அக்குகைக்குமுன்பாக மதசம்பிரதாயச் சந்தையொன்று நடைபெறும். சிவராத்திரி மகோற்சவமானது சிவோற்சவங்களில் பிரசித்தியடைந்ததாதலாலும் கரிபுரியின்கண் இம்மகோற்சவம் வெகு மும்முரமாய்க் கொண்டாடப்படுவதாதலாலும் பண்டைக்காலத்தில் அது ஒரு சிவன்கோவிலா யிருந்திருக்க வேண்டுமென்றே நாம் தீர்மானிக்கவேண்டி வருகின்றது. தெய்வபக்தி யுள்ளோனொருவன் இக்குகையின்முன் நின்று பிரார்த்தனை புரிவதை மோக்ஷசாம்பிராஜ்ய சாசனங்கொடுத்து உஜ்ஜீவிக்குமாறு மன்றாடும் நானெனச் சிலர் கூறிப் பரிகசிப்பதுமுண்டு.

அதற்குகந்தபடியே அங்குவந்து பிரார்த்திப்போருட் பெரும்பாலார் தமக்கு மோக்ஷவீடளிக்கும்படி சிந்தியாது ஐஹிக (இவ்வுலகத்து) சுகங்களையே சாசுவதமாக வெண்ணி பரோபகாரி யென்ற பெயர் நீங்கப் பணம்வந்தாற் போதுமென்றும், வியாபாரத்துறையில் மற்றோரைக்காட்டிலும் தமக்குப் பெருத்த லாபம் கிடைத்தால் அதற்கீடாக ஏழைகள் சிலருக்கு அன்னம் போடுவதற்கும் சிறிதும் பின்வாங்குவதில்லையென்றும், எடுத்த காரியம் கைகூடினால் (அது எவ்வளவு துராகிருதமாயினும் சரி) அபிஷேக அர்ச்சனாதிகள் செய்துவைக்க ஏற்பாடு செய்துவைப்பதாகவும் துதிக்கின்றனர். இதனால் ஆமுஷ்மிக (பரலோக) வாசனை அவர்களிடமிருந்து அறுபட்டுப்போகின்றது. (உலகத்தில்) உயிருடனிருப்பது தம் பெயர் சிறப்பதற்கென்றே அவர்கள் கருதுகின்றனர். தாம் செய்யும் பிரார்த்தனைகளனைத்தும் தமக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கும்படி சர்வாந்தர்யாமியான பகவானுக்கு அர்ப்பிதஞ்செய்யும் லஞ்சமெனக் கூறுவோருமுளர்.

அக்குகைக்கு முன்னிலையில் இந்துக்களில் பல வருணத்தவர் வந்து பிரார்த்தனைகள் செய்தாலும் அவர்களனைவரும் ஒரே தெய்வத்தைக் கொண்டாடுவது கிடையாது. நம் ஆரிய மூதாதைகள், இயற்கையிலேயே உலகத்திற் காணப்படும் இடிமுழக்கம், மழை, வானம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் முதலான பஞ்சபூதங்களையும் மூலாதாரப்பொருளிற் சேர்க்கப்பட்டதும் மனுஷ்யர் கண்களுக்குப் புலப்படாததும், எங்கும் வியாபித்திருக்கக்கூடியதுமான பரம்பொருளொன் றிருப்பதாகவும் அப்பொருளினை இப்புவியின்கண் இயற்கையாய் நாம் பார்க்கும் மேற்குறித்தவைகட் கதிபதியாகப் பற்பல ரூபங்களில் இந்திரன், வருணன், அக்கினி, சூரியன், வசுக்கள், மாருதம், ருத்திரன் முதலான பற்பல பெயர்களை வைத்துத் தொழுதுவந்ததை இந்துக்கள் கைவிட்டவரல்லர். இந்துக்கள் தொழும் உருவமைப்புக்கள் இப்பெரிய குகையில் காணப்படுகின்றன.

புதிதாய்ச் செல்வோனுக்கு அச்சிலைகளின் சரிதத்தைப் புராணங்களினாலாவது அவைகளின் ஆதீபத்தியத்தை நன்குணர்ந்தோர் சொல்லக் கேட்டாவது தெரிவித்தாலன்றி அங்குள்ளவை நன்கு விளங்கா. மேலும், அச்சிலைகளனைத்தும் சிவபிரானையே குறிப்பிடுகின்றனவாதலான் அவைகள் அக்குகையினுள் நிறுத்தப்பட்டிருக்கும் ஒவ்வோர் அங்கத்தையும்பற்றி உணராது விடுவதிற் பயனில்லை. ஒவ்வொரு சிலையின் அடிப்புறத்திலாவது பக்கத்திலாவது சுவர்போன்று பின்னர்த் தடைபடும் கற்பாறையிலாவது பாதிதெரிந்ததும் பாதி தெரியாததுமாய்க் காணப்படும் லோகங்களைக்கொண்டு இன்னின்ன சிலை இன்னின்ன தெய்வத்தை யுணர்த்துவதென்றும் அதன் சரித மித்தன்மையதென்றும் குறிப்பிட்டு முன்னோருட் சிலர் அருளிச்செய்திருக்கிறார்கள். குகையானது அங்கமங்கமாய்ப் பிரிவுண்டிருப்பதனால் அவ்வவற்றிற் பொதிந்துள்ள சிலா விஷயாம்சங்களை ஒவ்வொன்றாய்த் தொடுத்தெழுதுமாறு பலங்கொடுக்கவேண்டுமெனத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்

ல. அனந்தய்யர்.

குறிப்பு.—கனவான்களே! நமது பூர்வீகசிற்பிகளின் புத்தி நுட்பங்களையும் சிற்பசாஸ்திரங்களில் அவர்களடைந்திருந்த தேர்ச்சியையும், கைவேலைப்பாடுகளையும், மேற்குறித்த கரிபுரக்குகைகளின் விருத்தாந்தம் தெளிவாய்த் தெரிவிக்கின்றன. நமது பத்திரிகையில் ஸ்ரீசத்தியவசனர் அதி விமரிசையாயும் தெளிவாயும் இது வரை கேட்டிராததுமான விதமாய்த் தந்தவேலைகளைப் பற்றியும் சிலா செதுக்குவேலைகளைப்பற்றியு மெழுதியுள்ளதை நண்பர்கள் கவனித்து நடப்பார்களானால் சிற்பவேலைகளினால் நம் முன்னோர்களடைந்திருந்த பெருமைகளையும் புகழ்களையும் பெற்று வாழலாம். இவ்விஷயங்களை ஆற்றிற்கரைத்த புளிபோலாக்கிவிடாது கவனத்தில்வைத்துக் கண்ணியம்பெறக் கடவுள் கருணைபுரிவாராக.

தன்னூர் T. தங்கவேல்.



# தொழிலபி விருத்தி

கனம் ஸர். இப்ராஹீம் ரஹீமுதுல்லா இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தியின் விஷயமாய் விசாரித்து தொழில்களை விருத்திசெய்ய என்ன செய்யவேண்டுமென்று ரிபோர்ட் செய்ய உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப் பற்றில்லாதவர்களுமாகச் சேர்ந்த ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் வைஸிராய் சட்டசபையில் கொண்டுவந்தபோது பேசியவார்த்தைகளின் ஸாராம்ஸம் :—

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இந்தியாவின் கைத்தொழிலபி விருத்தியைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவர நான் முயற்சித்தபோது ஏழைதேசமாகிய இந்தியா பணக்கார தேசமாயிருந்தால் பணக்கார தேசமாகிய இங்கிலாந்துக்கு விசேஷ உதவி செய்யக்கூடுமென்று சொல்லலாமென்று உத்தேசித்தேன். தற்போதைய யுத்தத்தினால், பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் பல பாகங்கள் பொருளாதாரமுள்ள நிலைமையிலிருப்பது, அந்த ராஜ்ஜியத்திற்கு விசேஷமான பலத்தைத் தருவதாகும் என்று நினைக்கும்படியாயிருக்கிறது. யுத்தமானது ஜயத்துடன் முடிவு பெறுவதற்குள்ள காரியங்களை இங்கிலாந்துக்கு இந்தியா தன்னால் கூடியவரையில் ஒழுங்காகச் செய்திருக்கிருக்கிறது.

என்றாலும் முன்னாலேயே இந்தியாவின் பொருளாதார நிலைமை விருத்தியடையச் செய்யப்பட்டிருப்பின், இப்போது இங்கிலாந்துக்கு இந்நாடு உதவியதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உதவிசெய்ய இடமிருந்திருக்கும். இந்தியாவின் பொருளாதார நிலை அவசியம் விருத்தியாக வேண்டுமென்று அநேகர் கருதி அந்நிலையைவிருத்தி செய்வதற்குற்ற மார்க்கம் இன்னதென்பதைப்பற்றி பலநிபுணர்கள் யோசனைசெய்துவந்தார்கள். பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவுக்குப் பலவிதத்திலும் நன்மைசெய்து இந்தியப்பொருளாதார நிலையின் விருத்திக்கு வேண்டியவற்றைத் தன்னால் கூடியவரையில் செய்தது. எந்த வழியிலும் விருத்தியாதற்குற்ற காரியங்கள் செய்யப்பட்டன. ஏராளமான ரயில் பாதைகள்போடப்பட்டன. கல்வி ஸ்தாபனங்கள் அநேகம்செய்யப்பட்டன. சுகாதாரத்துக்குற்ற வழிகள் ஏராளமாய் செய்யப்பட்டன. இப்படியெல்லாம் செய்யப்பட்டதிலிருந்து நமக்குத் தேவையான பொருள்கள் ஜாஸ்தியாகி, ஜீவனம் செய்வதற்குள்ள செலவு ஜாஸ்தியாயிற்று. ஒருகாலத்தில் எது அனாவசியமான பொருள் என்று ஒன்றை நினைத்திருந்தோமோ, அது இப்போது அவசியமாய் வேண்டிய பொருளாகி விட்டது. நமது தேசத்தில் இப்போது இன்னும் பல கல்வி ஸ்தாபனங்களும் ரெயில்வேக்களும் சாஸ்திரத்தை யொட்டின சுகாதார ஸ்தாபனங்களும் ஏராளமாய்ஏற்படவேண்டும்.

பணக்கார தேசமான இங்கிலாந்தே தன்னுடைய பொருளாதார நிலையை தன்னுடைய தேசப்பொருள்களைக் கொண்டும் தொழிற்சாலைப் பொருள்களைக் கொண்டும் விருத்தி செய்யவேண்டுமென்று விரும்புகிறது. அதே தினுஸாய் இந்தியாவும் விரும்புவதில் என்ன ஆட்சேபம் இருக்கலாம். ஆனால், இந்தியாவோ அப்படி விரும்புவதற்கேற்ப அதற்குத்தக்க சௌகர்யங்கள் அந்நாட்டிலே சௌகர்யமாய் அமைந்திருக்கின்றன வென்று நிபுணர்கள் சொல்லி யிருக்கிறார்கள். பக்குவப்படாத சாமான்கள், வேலையில் நிபுணரான கூலிகள், சாதாரண கூலிக்காரர்கள், மூலதனம், வியாபார ஸ்தலங்கள் முதலிய நான்கு விஷயங்களும், இந்தியாவில் நன்கமைந்திருக்கின்றன. ஏராளமான பக்குவப்படாத சாமான்கள் தொழிற்சாலைகளுக்கென்று இந்தியாவில் அதிகமிருக்கின்றன. தன் நாட்டில் உண்டாகாத சாமான்களை, தொழிற்சாலைகளி லுபயோகப்படுத்த இப்போது விலை கொடுத்து வாங்கப்போவதில்லை. திறமையான வேலைக்காரர்கள் இந்தியாவில் இல்லைதான். ஆனால் பயிற்சி பெறாத வேலைக்காரர் அதிகமிருக்கிறார்கள்.

அதற்காக தொழில் நிபுணர்களில் சிறந்த சிலரை மட்டும் தற்போதைக்காக வெளியிலிருந்து தருவித்து வைத்துக்கொண்டு மற்றவர்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும் ; மற்றும் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை ஏற்பாடுசெய்து அதில் பிள்ளைகளைச் சேர்த்து பயிற்சி செய்வித்தல் வேண்டும். ஆனால் இந்தியா

வில் தொழில்களுக்கு மூலதனம் சேருவது சிறிது சிரமசாத்தியமா யிருக்கும். இந்தியா மூலதனத்திற்கு ஸரியான வரும்படி கிடைப்பதில்லை யாதலால், இம் மூலதனம் சுலபத்தில் சேருவதில்லை. தற்போதைய கைத்தொழில் விருத்தி சாதனங்கள் தம் நிலையினின்றும் மாறுதலடைந்து, கைத்தொழில் வேலைகளுக்குப் பெருமை யுண்டாவதானால் இந்தியா மூலதனம் முன்னிருந்ததுபோல் மூலையிலிருந்து தூங்காமல் முன்னுக்கு வந்து உதவும்படியா யிருக்கும் என்று நான் துணிந்து நினைக்கும்படியா யிருக்கிறது.

இங்கிலீஷ்காரரே தொழிற்சாலைகளை இந்தியாவில் ஸ்தாபித்து வேலைசெய்வார்களானால் இந்தியக் கூலிகள் அத்தொழில்களில் பழக்கம் பெறுவதுடன் அப்பணம் நமது நாட்டிலேயே செலவழிந்து நமக்கே உபயோகமாகும். தொழில்களில் தினே தினே விருத்தியான வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு தனித்தொழிற்சாலைகளை நம் நாட்டில் நாமே ஏற்படுத்திக்கொள்ள சாதனமாகிறது. உதாரணமாக, வங்காளத்துச் சணல் யந்திர சாலையின் விஷயத்தை ஒப்புநோக்கலாம். ஏதோ அம்மாதிரித் தொழிற்சாலையிலிருந்து உண்டாகும் ஏராளமான லாபம் அச்சாலையை வைத்து நடத்தும் இங்கிலீஷ்காரருக்குப் போனதால் என்ன அந்த இங்கிலீஷ்காரர்கள் இந்திய இங்கிலீஷ்காரர்களாய் ஏன் ஆகக்கூடாது? இந்தியாவிலேயே இங்கிலீஷ்காரர்கள் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது என்று கூடியும் இந்தியாவுக்குச் சௌகரியம்தான். மற்றைய தேசங்களின் தொழிற்சாலைப் பொருள்கள் விற்பனையாகவேண்டிய இடமாக என்னாளும் இந்தியா இருக்கமுடியாது. இந்தியா தன் தேசத்தில் உண்டாகும் பொருள்களின் உதவியால் தொழிற்பொருள்களை உண்டாக்கும் பெரியதேசமாகப் பெரிதும் விரும்பிக்கொண்டிருக்கிறது.

இந்தியா பொருளாதார நிலையை விருத்திசெய்யவும், இந்தியா கைத்தொழில்களை விருத்திசெய்யவும், மற்றைய நாகரீக தேசங்களைப்போல் இந்தியா கவர்ன்மெண்டார் கஜானாவிலிருந்து பணத்தை எடுத்துச் செலவழிக்கும் வகையில் பூர்ணசுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். மற்றத் தேசங்களைப்போல இந்தியக் கைத் தொழில்களை விருத்திசெய்ய கவர்ன்மெண்ட் முன்னுக்கு வரவேண்டுமென்று இந்தியா விரும்புகிறது. கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் கொண்டிருக்கும் கூட்டுறவு முயற்சியால் ஜப்பான் தேசம் சென்ற 40 வருஷத்திற்குள்ளாக கைத்தொழிலில் விருத்தி முகத்திற்கு வந்திருக்கிறது; அதைக்காட்டிலும் உயர்ந்த ஸ்திதியை இந்தியா அடையாமற்போன போதிலும், ஏன் தன்னுடைய இயற்கைப்பொருள்களின் உதவியைக்கொண்டு அந்த ஸ்திதிக்காவது வரக்கூடாது? ஜப்பான் ஜெர்மனி முதலிய தேசங்கள் தங்களுடைய கைத்தொழில்களுக்காக வேண்டிய பக்குவப்படாத பொருள்களை வேற்று நாட்டிலிருந்து தருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி யிருந்தும், அத்தேசங்கள் கைத்தொழில் விருத்திமுகம் காட்டியிருக்க, இத்தேசத்திற்கு எல்லாமிருந்தும் கவர்ன்மெண்டாருதவிகொண்டு தொழில்களில் ஏன் முன்னுக்கு வாரா திருக்கவேண்டுமோ?

சமீபகாலத்திற் குள்ளாக இக்கைத்தொழில்களை விருத்திக்குக் கொண்டுவருவதற்காக இந்தியாவில் அநேக இடங்களில் அநேக கான்பரன்ஸ்கள் கூட்டப்பட்டதிலும், அநேக பத்திரிகைகளில் இவ் விஷயத்தைப் பற்றி சர்ச்சைகள் செய்யப்பட்டதிலும், கவர்ன்மெண்டார் பண உதவிதான் இதற்கு அவசியமென்று வாதிக்கப்பட்டது.

அவரவர்களுக்கும் தங்களுடைய தேசத்தின் சௌகர்யங்களுக்குத் தகுந்தாற்போல் கஜானாப் பணத்தைத் தாராளமாய்ச் செலவழிக்கச் சுதந்திரம் கொடுக்கப்படவேண்டும். 1868-ம் வருஷத்தில் சுமார் 47-வருஷத்திற்கு முந்தி ஜப்பானில் கவர்ன்மெண்டாரே ஒரு ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியை ஸ்தாபித்த நாள் முதலாக, கைத்தொழிலபி விருத்திக்குற்ற காரியங்களை முதன் முதலில் செய்வது அங்கு கவர்ன்மெண்டாரின் காரியமாய்ப் போய்விட்டது. கைத்தொழில் சம்பந்தமாக ரயில்வேக்கள் கப்பல்கள் சௌகர்யமா யில்லாது போனால் அவைகளைச் சரிசெய்துகொடுக்க ஜப்பான் கவர்ன்மெண்டார் தம் நாட்டுக் கைத்தொழில் விஷயமாய்ச் செய்த உதவிகள் அநேகம். சாயத் தொழிற்சாலை முதலிய பலவகைத் தொழிற்சாலைகளுக்கென்று இனம் இனமாகப் பிரித்து அவைக ளொவ்வொன்றிற்கும் திரவிய உதவி செய்து வந்ததுதான், கைத்தொழிலில் ஜப்பான் இவ்வளவு விருத்தி முகம் காட்டியிருப்பதற்குக் காரணமாகும். ஜனங்களும் கவர்ன்மெண்டும் ஒத்துழைத்தமையால் தான் ஜப்பானின் கைத்தொழில் இவ்வளவு உன்னத நிலைக்கு வந்திருக்கிறது. ஜப்பானியர் தம் கைத்தொழில்களில் தம் நாட்டில் செய்தது போலவே இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் ரெயில்வே ஸ்தாபனங்களின் விஷயத்திலும் தாராளமாய் திரவிய வுதவி செய்திருக்கிறார்களென்று சொல்ல வேண்டும். ரெயில்வே பாதைகள் பெருக்கமடைய வேண்டியதற்கே யன்று, அத்தொழிலில் இன்னும் பிரபலமடைய வேண்டிய விஷயமாய் கவர்ன்மெண்டார் நாளதுவரையில் ஊக்கங்கொடுத்து வருகிறார்கள். பண்டங்களை ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்கு வெகு சீக்கிரமாகக் கொண்டுபோவதற்குச் சாதனமமைந்திருப்பது வியாபாரத் தொழிலுக்கு மிகவும் அநுகூலமல்லவா? இப்படி ரெயில்வே விஷயத்தில் பூர்ண சுதந்திரம் கொடுத்து இந்தியா கவர்ன்மெண்டார் அவற்றை விருத்தி செய்ய முற்பட்டிருப்பதுபோல் இக் கைத்தொழில் விஷயத்தையும் விருத்தி முகத்திற்குக் கொண்டுவரச் சௌகர்யம் கொடுத்தால் ஏன் இக்கைத் தொழில் வேலையும் விருத்திமுகம் காட்டாது? தாராளமான வியாபாரத்தைப் பற்றியும் கேள்வி கேட்கவேணுமென்று ஒரு முறை நினைத்தேன். இங்கிலாந்து, தேசம் பெரும்பாலும் பக்குவப்படாத பொருள்களையும் ஆகாரப் பொருள்களையும் வெளிநாட்டிலிருந்து தன் நாட்டில் இறக்குமதியாக்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது. இந்தியாவில் வேண்டிய ஆகாரப் பொருள்கள் உண்டாகின்றன. அந்நாட்டில் பக்குவப்படாத பொருள்களும் ஏராளமா யிருக்கின்றன. இந்தியாவில் கைத்தொழிலை விருத்திசெய்ய மிகவும் சௌகரியமா யிருக்கும். இந்தியா பல தேசங்களுக்கும் பக்குவப்படாத பொருள்களையும், தன் தேசத்தில் விளைந்த ஆகாரப் பொருள்களையும் இதுவரையில் அனுப்பி வந்தது. இங்கிலாந்தில் மந்திரிமார்களிடம், இந்தியா இப்போது இருக்கும் மாதிரியான கீழ்ப்படிந்த பதவியிலேயே இருக்க முடியாதென்றும், பிரிடிஷ் ஏகாதிபத்யத்தில் மற்ற தேசங்களுக் கிருப்பதுபோல் சமபாதியதைபெற விரும்புகிறதென்றும் அவர்கள் மனதில் படும்படியாய்ச் சொல்லவேண்டும். இறக்குமதி வரிச் சங்கம் ஒன்றுகூடி அதில் இப்படித்தான் வரி விதிப்பதென்று ஏற்பாடு செய்து கொள்ளுகையில் அப்படிப் பட்ட கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதிகளுமிருக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.



## ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயரவர்கள்

## 1855—1916

ஸ்ரீ ஜி. சுப்பிரமண்ய ஐயர் 1855-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் தஞ்சாவூர் ஜில்லா திருவையாற்றில், அங்கு வக்கீலாக இருந்த ஸ்ரீ. கணபதி தீக்ஷிதருக்கு நான்காவது குமாரராகப் பிறந்தார். இவரோடு பிறந்தவர்கள் ஆறுபேராவர். இவர் தஞ்சை எஸ்.பி.ஜி. ஹைஸ்கூலில் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷை தேறினார். அப்போது இவருக்கு வயது 14-தான். அதற்குள் பிதா மரணமடைய தந்தைக்குப்பிறகு இவாது தமையனார் குடும்பத்தை மேற்பார்த்துவந்து பின் அதற்கு சக்தியில்லாதுபோக வெகு கஷ்டதசைக்கு இடமாய்விட்டது. இதனிடையே 1873-ம்ஞு இவர் எப். ஏ. பரீக்ஷை தேறி சென்னையில் நார்மல் ஸ்கூலுக்கு வந்தார். 1875-ம் வருஷத்தில் ஒரு மிஷன் பாடசாலையில்40-ரூபா சம்பளத்திற்கு உபாத்தியாயராக யிருந்து இரண்டு வருஷத்திற்குப் பிறகு சென்னை பச்சையபன் கலாசாலையில் போதகரானார். அச்சமயம் (காலஞ்சென்ற) ஸ்ரீ மு. வீரராகவாச்சாரியாரின் நட்பைப் பெறலாயினர். 1877-ல் ஒரு பிரைவேட் காண்டிடேட்டாய் பி. ஏ. பரீக்ஷைக்கு வாசித்து 1878-ல் வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். 1879-ல் தலைமை உபாத்தியாயர் பதவியை அடைந்தார்.

இந்த சமயத்தில் ஐயருக்கு ஒரு பத்திரிகையை நடத்தி உலகத்துக்கு நன்மை செய்யவேண்டுமென்ற கருத்துண்டாயிற்று அதற்கு அவரது நண்பர் மு. வீரராகவாசாரியாரும் துணையானார். உடனே 20-9-1878ல் "ஹிந்து" என்ற ஆங்கிலப் பத்திரிகையை வாராந்தரமாக ஆரம்பித்தார். முதல் சஞ்சிகையைத் தபாலில் போடக் கையில் பணமின்றி யாரிடத்திலோ ரூ.1-12-0 கடன் வாங்கினோம். ரூ. 1-12-0-க்கு வழியின்றிக் கடன் வாங்கிய நிலையிலிருந்து பெரும் பணக்காரரானாரென்றால் அவரது உழைப்பும் முயற்சியும் அளவிடக்கூடுமா? ஹிந்துப் பத்திரிகை வெகு நேர்த்தியாக நடந்துகொண்டிருக்கவும், அதனால் தமிழ் மக்களை எட்டுதல் சாத்தியமில்லை யென்று 1882-ம் வருஷத்தில் "சுதேசமித்திரன்" பத்திரிகையை 6-பக்கத்துடன் வாராந்தரமாக ஆரம்பித்தார். அதற்கு அப்போது வருஷசந்தா ரூ. 4. 1884-ம் வருஷத்தில் ஹிந்து பத்திரிகையை வாரம் மும்முறையாகவும், 1888-ம் வருஷம் தினசரியாகவும் மாற்றி விருத்தி செய்தார்,

ராஜப்பிரதிநிதியான லார்ட் ரிப்பனை வழியனுப்புதற்கு சென்னை ஜனங்களால் அனுப்பப்பட்டு நமது ஐயர் பம்பாய்க்குச் சென்றார். இந்துக்களைப்பற்றி லார்ட்ரிப்பன் ஏதாவது தெரிந்துகொள்ள விரும்பினால்—"ஹிந்துவை எடு: அது என்ன சொல்கிறதென்று பார்"—என்று கூறுவரென்றால் இவருடைய ராஜீய ஞானத்தை என்னென்போம்!

1886-ம் வருஷத்தில் பப்ளிக் சர்விஸ் கமிஷன் முன்பு சாக்ஷியம் கொடுத்தார். 1885-ல் முதன் முதல் பம்பாயில் கூடிய காங்கிரஸில் முதல் தீர்மானத்தை பிரேரணை செய்தவர். இவரே அவர் ஒரு காங்கிரஸிலாவது அக்கிராஸனாதிபத்யம் பெற்றிருக்கவேண்டியது கிரமம். ஆனால் அதற்கு வசதியில்லாமலே போய்விட்டது. மேலும் அவர் பெருவியாதியாலும் ஓயாத இருமலாலும் ஜீவகாலபரியந்தம் கஷ்டம் அநுபவித்து வந்தார்.

ஐயரவர்கள் உண்மையான ஆசாரத்திருத்தக்காரர். 12-வது வயதில் கைம்பெண்ணாகிவிட்ட தமது குமாரத்திக்கு பம்பாயில் இரண்டாவது விவாகத்தை நடத்தினார். பந்துக்களின் விரோதமும் புரோகிதர்களின் எதிர்ப்பும் சொல்லிமுடியாது.

இப்படி மறுவிவாகம் 31-12-1889-ல் நடந்தது. பிறகு ஐயர் தமது மற்றப் பெண்களை விவாகம்செய்து கொடுக்க யத்தனித்தபோது பந்துக்களுடைய எதிர்ப்பையும், புரோகிதர்களின் தூஷிப்பையும் மிகவும் அநுபவித்தார்.

1897-ம் வருஷத்தில் சென்னை மகாஜன ஸபையின் பிரதிநிதியாய் இந்தியாவுக்கு ஆகிற செலவு சம்பந்தமாக ஏற்பட்ட வெல்பி விசாரணைக் கமிஷனின் முன்பு சாக்ஷி சொல்ல இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்று யாவரும் பிரமிக்கும்படியாக அங்கு சாக்ஷியம் தந்தார். ஹிந்துப் பத்திரிகைக்கு 20-வருஷங்கள் போலப் பத்திராதிபராக இருந்தார். 'சுதேசமித்திர'னும் வாரப் பத்திரிகையிலிருந்து வாரம் மும்முறை யாயிற்று. 1898-ம் வருஷத்தில், "ஹிந்து" வின் 20-வது வயதில் 'ஹிந்து' வை விட்டு நீங்கி சுதேசமித்திரனைத் தாம் எடுத்துக்கொண்டு வேறாக வந்து 1899-ம் வருஷத்தில் அதைத் தினசரிப் பத்திரிகை யாக்கினார். 1902-ம் வருஷத்தில் சென்னையில் மதராஸ் ஸ்டாண்டர்டு பத்திரிகைக்குப் பத்திராதிபரானார். யுனைடெட் இந்தியா என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார். அது ஒரு வாரப் பத்திரிகையாகும். 1907-ம் வருஷம் சித்தூர் ஜில்லாக் கான்பரன்ஸில் அக்கிராஸனாதிபத்யம் வகித்து—ஸ்வாராஜ்யமே இந்தியாவுக்குத் தேவை—என்று வெகு அற்புதமாகப் பேசினார். இவர் தென்னிந்தியாவில் பல இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து சுதேசியப் பிரஸங்கம் செய்தார். சுதேச நிதியும் தொழிற்சங்கமும் இவராலேயே ஏற்பாடாயின.

பிறகு இவரை இராஜத் துவேஷக் குற்றத்துக்காகத் திருக்குற்றாலத்தில் அரஸ்ட் செய்தார்கள். எனினும், இவருடைய தேகஸ்திதி காரணமாக விடுதலை செய்தனர். வயோதிகத்தால் கண் மங்கலடைந்தும், செவியுணர்ச்சி குறைந்தும் போயிற்று. 1914-ம் ஞு 60-ம் ஆண்டு பூர்த்தியாக, ஷஷ்டி பூர்த்தி வெகு ஆரவாரமாய் நடந்தேறியது.

ஐயரவர்கள் தமது குமாரரான மிஸ்டர் T. S. விஸ்வநாத ஐயர் பி. ஏ. யிடம் சுதேசமித்திரனை ஒப்புவித்து நடத்தச் செய்தார். கடைசியில் சுதேசமித்திரனை மிஸ்டர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் பி. ஏ. பி எல். அவர்களுக்கு விலைக்கு விற்றுவிட்டார்.

---

புருஷர்கள் சற்றாகிலும் விவேகமின்றி கர்ப்பிணிகளான தமது பெண்களை ரயில்வே பிரயாணம் செய்வதற்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். இது பெருந்தவறு. சென்ற வருஷத்தில் 7-மாத கர்ப்பத்துடன் ஒரு பெண் நீலகிரியிலிருந்தும் வந்து கொண்டிருக்கையில் ரயில் ஆட்டத்தால் கர்ப்பம் கலைந்து அகாலப் பிரஸவ தொந்தரையுடன் வண்டியை விட்டு இறங்க முடியாமற்போக, வெகு கஷ்டத்துடன் ஸ்டேஷனுக்கு கொண்டுபோக அங்கு பிரஸவமாய்விட்டது. மற்றொரு பெண் 9-மாதகர்ப்பத்துடன் ஸ்ரீரங்கம் சித்திரை ரதோத்ஸவத்துக்கு வர ஜன நெருக்கத்தில் சிக்கி அதனால் உடனே பிரஸவ வேதனை நேரிட உடனே திருச்சிக்கும் வீட்டுக் கழைத்துப் போயினர். அன்றிரவே பிரஸவ வேதனை நேரிட உடனே திருச்சிக்கு வீட்டுக் கழைத்துப் போயினர். அன்றிரவே பிரஸவமாய்விட்டது. வித்யாபாநு பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது.—"சென்னையில் புறப்பட்டு இராமேஸ்வரம் செல்லும் ரெயிலில் சுமார் 30-வயதுடைய பிராமணஸ்திரீ பத்துமாதகர்ப்பத்துடன் பிரயாணம் செய்து வரும்போது ஆடுதுறைக்கும் திருவிடைமருதூருக்கும் மத்தியில் அழகான ஒரு ஆண்குழந்தையை ஈன்றதாய் நண்பர் ஒருவர் தெரிவிக்கிறார்.



## விஸ்வேஸ்வரபகவான் ஸ்தோத்திரக் கீர்த்தனை

(எந்தோ ப்ரம்ஹானந்தமோ ரெவ்வரு நீபஜனை என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.)

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்

பல்லவி

சம்போ விஸ்வப்ரம்ஹமே-மாதவர்பூஜித
சம்போ விஸ்வப்ரம்ஹமே

அநுபல்லவிக் கண்ணிகள்

1. உம்பர் துதிசெய் வேதகீத
ஓம் நமசிவாய போத
சம்ப்ரம மெய்ஞ்ஞான விநோத
சாக்ஷாத்கார சைதந்ய வநீத (சம்)

2. ஆதிபரா பரையினை விந்த
அகிலமனைத்தும் படைத்தன்று வந்த
ஜோதிஸ்வரூப சச்சிதானந்த
சுந்தரனே கடைக்கண்பார்த்தருள் தந்த (சம்)

3. சத்திமிகுந்த பிரபஞ்ச சில்பாச்
சாரியென்றுலகும் புகழ் படைத்த
முத்திமுதல்வனே யெனைக் காத்தருள்
மூலாதாரப் பொருளாகவந் துதித்த (சம்)

4. மாதவ ஜனகாதியர்க் கன்று
வந்ஹிரூபமாய்த் தரிசனந் தந்த
வேதமுப நிடதமுந் துதிசெய்
விமலஞானப் பரஞ்சுடராய் வந்த (சம்)

5. கற்பிதப் பிரக்ருதி மகதகங்
காரதன் மாத்திரா பூதசரீர
பொற்பிலகும் விராட்டு விஸ்வகர்ம
புண்ணிய மூர்த்தியாய்வந்த சாக்ஷாத்கார(சம்)

6. சத்யம்ப்ரம்ஹம் அனந்த மித்யாதி
சரீரகுண வெங்கணுந் தோற்றிய
சுத்தசுயம் ஜோதிப் பிரகாச
சுந்தரனென்றன்பர் சந்ததம் போற்றிய (சம்)

7. சருவ பரிபூர ணுத்தம
தத்துவ தாரக ஸ்வரூப
திருவளர் பஞ்சவேத முடிவினில்
தினமும் நடஞ்செய்மெய்ஞ் ஞானதீப (சம்)

8. தனுகரண புவன போகசா
தனங்கள்தந்து தமியேனைக் காக்கும்
மௌனகுரு ருத்திரமூர்த்திக் கவி
மனக்கவலைக ளனைத்தையுந் தீர்க்கும் (சம்)

ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி.

## விசேஷ வர்த்தமானம்

இங்கிலாந்தில் எலிகளால் நஷ்டம்.—இங்கிலாந்திலே வருஷந்தோறும் 150 பவுன் பெறுமானமுள்ள ஆகாராதிகள் எலிகளால் நாசமாகி விடுகின்றனவாம். தவிர, கதவுகள், கோணிகள் முதலியவற்றிற்கு எலிகளால் வருஷந்தோறும் 50 லட்சம் பவுன் சேதமுண்டாகிறதென்று மதிக்கப் படுகிறது. இவ்விதம் வருஷந்தோறும், 200 லட்சம் பவுன் நஷ்டமாவதைத் தடுப்பதற்காக, நல்ல ஜாதிப் பூனைகளை வாங்கி வளர்த்து, எலிகளை அடியோடு தொலைத்து விடுமாறு கவர்ன்மெண்டார் இப்பொழுதே ஏற்பாடுசெய்ய வேண்டுமென்றும், அந்த ஏற்பாட்டிலே (காயமடைந்த) ஸோல்ஜர்களை நியமிக்கலாமென்றும், எலிகளால் நேரும் நஷ்டத்தைப் போக்கிவிட்டால் தேசத்திற்கு எவ்வளவோ பணம் மிச்சமாகுமென்றும் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு நிருபர் சொல்லுகிறார்.

*
* *

ஒரு ஜாலவேடிக்கையின் முடிவு.—கும்பகோணத்திற்கு அருகே சாமிமலையில் ஒருவன் தான் ஜாலவித்தைகளைக் காட்டுவதாகக் கூறி ஆறுஅடி வரை பள்ளம் வெட்டச் செய்து அதில் தான் படுத்துக்கொண்டு மேலே மண்போடச் சொன்னான். சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் மூச்சுவிடுகையில் மேலேயுள்ள மண் வெடிக்குமென்றும் அப்பால் தான் வெளிவருவதாயும் கூறினான். அப்படியே அவனைப் பள்ளத்தில் வைத்து மண்ணை மேலே போட்டு மூடிவிட்டனர். சில நிமிஷத்திற்குப் பிறகு மண்வெடித்தது. அதுதான் அவன் சொன்ன அறிகுறி. உடனே மண்ணைத் தோண்டி எடுத்திருந்தால் நலமாயிருக்கும். அப்படியின்றி மறுபடியும் மண்போட்டு அந்த வெடிப்பை மூடிவிட்டனர். பிறகு மண்வெடிக்கவே யில்லை. அப்பால் தோண்டிப் பார்க்க அவன் இறந்துகிடந்தான். பாழும் வயிற்றுக் கொடுமைக்காக ஜால வேடிக்கை காட்டப்போக அது உயிரைப் பிரித்துவிட்டது.

*
* *

கோவனூர்.—பால்பெருகும் வேப்பமரம். வந்தவாசித்தாலூக்கா கொவனூர் கிராமத்தில் பாலக்கவுண்டர் வகையறாக்களுக்குச் சொந்தமான புலத்திலுள்ள சுமார் 30-வயதுள்ள ஒரு வேப்பமரத்திலிருந்து சுமார் ஒரு மாதகாலமாய் பால் பெருகிவருகின்றது. சாதாரணமாக வேப்பமரமே அம்மனுக்கு உகந்தமரம், என்று

மதிப்புடனும் பத்தியுடனும் கொண்டாடப்படுகிறது. பின்னும் பால்பெருகி வந்துகொண்டிருக்கும் வேப்ப மரம் என்றால் ஜனங்கள் முக்கியமாக பிணியாளர் அதிக பக்திபாராட்டி அந்தப் பாலைக்குடித்து மரத்தைச்சுற்றிக் கும்பிட்டு வருகிறார்கள் என்பது ஆச்சரியமல்ல. இப்போது இவ்வூரில் பால் பெருகி வந்து கொண்டிருக்கும் வேப்பமரத்தைப் பற்றிக் கேள்விப் பட்ட அனேக ஊரார் தூரத்தை கவனியாது தினந் தோறும் பார்வையிட்டு சுற்றி சுற்றிக் கும்பிட ஆவலுடனும் பக்தியுடனும் வருகின்றனர். குன்ம வியாதியால் வருந்திவந்த அனேகர் இம்மரத்தைச் சுற்றிச் சுற்றிக் கும்பிட்டு, அதினின்றும் பெருகிவரும் பாலைக் குடித்தால் அந்தக் குன்மவியாதி தீரும் என்று கேள்விப்பட்டு இங்கே வந்து அந்தப் பாலைக் குடித்து, தங்களை வருத்திய தேர்ந்த வைத்தியர்களாலேயே கைவிட்டு விடப்பட்ட (பிணியை) உடனே சொஸ்தப்படுத்திக்கொண்டனர் நாள்தோறும் பிணியோடு இங்கே வருகிறவர்கள் அந்த மரத்தைச் சுற்றிக் கும்பிட்டு அதன் பாலைக் குடித்து வீட்டுக்குப் போவதற்குள்ளேயே அனேகருக்குப் பிணி தொலைந்து ஆரோக்கியம் அடைந்திருக்கிறார்களென்று ஊரெல்லாம் முழக்கமாக இருக்கிறது. ஆகவே தினந்தோறும் புதுப்புது ஊர்களிலிருந்து அதிக ஜனங்கள் பிணியைத் தொலைத்து ஆரோக்கியத்தைக் கொடுக்கிற இவ் விந்தையான வேப்பமரத்தைப் பார்க்க வந்துகொண்டிருக்கின்றனர்.

திருமலை-கிருஷ்ணமாசாரி.

நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக்
கொல்ல நினைப்பதுவுங் குற்றமும் மற்றொழியச்
செல்வயற் கழனித் தென் திருவாரூர்புக்
கெல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே.

கொன்று செய்த கொடுமையால் பலசொல்லவே
நின்ற பாவவினைகள் தாம்பல நீங்கவே
சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் கழுக்குன்றமே—சுந்தரமூர்த்தி.

கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகும்
கொலையாதி அகன்றொழுகுந் தவங்கள்தாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்குறாவும்
கொலையாதி அகற்றிய நல்லறங்கள்தாமே
குவலயத்தில் ஒப்பரிய அறங்களாகும்
கொலையாதி அகன்றபெறுஞ் செல்வந்தானே
கூறிஓயிர்க் கிதமான வாழ்வதாமே.
—சிவஞானதீபம்.

வருணமென் ணிலவள வேத
மறையவர் உயர்ந்தோர் நீதி
அருளுமாச் சிரமந் தன்னில்
துறந்தவர் அதிகர் என்ப
பெருகிய அறத்திற் கொல்லாப்
பேரறம் பெரிது நன்கு
தருபவ ராகும் தக்க
தேசிகர் தலைவ ராவார்.—சிதம்பரபுராணம்.

ஆனை அடியில் அடங்கா. அடியில்லை
தானதுபோல் நிற்கின்ற தன்மைதான்—ஊனுயிரைக்
கொல்லா அறத்தின் கொழுநிழற்கே உள்ளடங்கும்
எல்லா அறமும் இசைந்து —இதிகாசம்.

173

THE REGISTRAR OF BOOKS
14 APR 1917
MADRAS

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
499, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 4] 1916ஸ்ரு அக்டோபர், நவம்பர்மீ [சஞ்சிகைகள் -1

## ஒளிவளர்விளக்கு

இம்மாதத்துடன் நமது பத்திரிகையின் நான்காவதாண்டு பிறக்கின்றது. இவ்வாண்டில், முன்னிலும் பலநலங்கள் பயக்குமாறு நமது விஷயதான கர்த்தர்களும், சந்தாதாரர்களும், சபை மெம்பர்களும் சகாயம்புரிவார்களென்று வேண்டுகிறோம்.

***

நமது சபை, தற்காலத்தில், சென்னை தங்கசாலைவீதியில் 499-வது எண்ணுள்ள ஸ்ரீ பால குருவாச்சாரியா ரவர்களுடைய கிருகத்தின் மேல் மாடியில் - அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஓர் அத்தியபன பாடசாலையும், வித்தியாசாலையும் நடைபெற்றுவருகின்றன.

***

கொழும்புநகரில் 40-லட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு பௌத்தாலயம் கட்ட, பௌத்த சீமான்கள் ஆலோசனைசெய்து வருகின்றனர்; இவ்வாலயவேலை கூடியசீக்கிரத்தில் ஆரம்பமாகுமென்று தெரிகின்றது. இதில் வேலைசெய்ய விஸ்வகர்ம சிற்பியர் எத்தனைபேர் கிடைக்கப்

பரோடாக் கவர்ன்மெண்டார் பால்ய விவாகத்தைத் தடுத்தற்கு ஒரு சட்ட மேற்படுத்த ஆலோசனை செய்து வருகின்றனர். இப்படியே பல விடங்களிலும் பால்யவிவாகந் தடுக்கப்பட்டு வரும் இக்காலத்தில் நம்மவர்களில் கைவிட்டிருந்தவர்களும் இக்கொடுமையைக் கையாளத் தொடங்குவது பரிதாபமன்றோ?

***

சென்னை மாகாணத்து ஜனங்கள் 41-லக்ஷம் பேர்களில் 8000 பேரே உயர்தரக் கல்வி கற்று வருகின்றனர். இந்தியா முழுவதுக்கும் கணக்குப் பார்த்தால், 4000-லட்சம் ஜனங்களுக்கு 36000-பேர் உயர்தரக் கல்வி கற்றுவருகின்றனர். உயர்தரக் கல்வியில் மிகக் குறைவுபட்டிருப்பவர் விஸ்வகர்மரே யெனலாம். இவர்கள் மற்ற மாகாணங்களில் சற்றே விருத்திபெற்றிருக்கிறார்களென்று கூறலாம்: சென்னை மாகாணத்திலேதான் இவர்களுடைய கல்வி நிலைமை மிகவுங் கேவலமாயிருக்கிறது.

***

அக்டோபர் மாதத்தில், சென்னை கிறிஸ்டி

ஸ்ரீயினுதாவில் நடைபெறும் பஞ்சம இலவச இராப் பள்ளிக்கூடத்து மாணவர்கட்கு விருந்தளித்தனர். அப்போது 100 பேர் போஜனஞ் செய்தனர். அக்கூட்டத்தில் பிராமணர், வேளாளர், நாயுடு முதலியாராயிருந்த் பெரும்பான்மையோர் பஞ்சமருடன் சமானமாக உட்கார்ந்து போஜனஞ் செய்தனர். ஒவ்வொரு பஞ்சமனும் உயர்வருணத்து மாணவர்கட்கிடையில் உட்கார வைக்கப்பட்டிருந்தான். சமபந்தி போஜன ஆசரணை நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருதல் நம்மவர்களால் கவனிக்கத்தக்கது.

***

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூர் அனுப்புப்பாளையம் ஸ்ரீ ப. ம. பழனியப்ப பத்தர் "ஷெ ஊரில் 300 வீட்டாராகிய 1000 பேர் நம் வம்ஸத்தவர்கள் வியாபார விஷயத்தைக்கொண்டு செட்டியென்னும் பட்டத்தை வழங்கிக்கொண்டு வருகிறார்கள்" என்றுகூறி வருந்துகிறார். இந்த 1000 பேர்களைத் திருத்திப் பட்டத்தை மாற்றச்செய்வது கஷ்டசாத்தியமான காரியமென்றே எண்ணுகிறோம். எனினும், இதில் நமது குலப் பிரமுகர்கள் ஈடுபடவே வேண்டும். கோயமுத்தூர் ஜில்லா வாசிகளுடைய கவனம் முக்கியமாய் இதிற் செல்லத்தக்கது. குலாபிமானப் பெருங்கொண்டலாகிய ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியாரவர்கள் இவ்விஷயமாய் வேண்டிய முயற்சி செய்வாரென்றெதிர்பார்க்கின்றோம்.

***

வழக்கப்படி, இவ்வருஷம் நவராத்திரி மஹா புண்ணியகாலத்தில் தேவி பூஜையும் காலக்ஷேபங்களாதியவையும் சபாமண்டபத்தில் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஜயஞ் செய்து தரிசன சிரவணாதிகளால் இன்புற்றனர். ஸ்ரீபெரும்புதூர் - ஸ்ரீ முருகப்ப ஆச்சாரியார், செறுகூர் - ஸ்ரீ கிருஷ்ண மாச்சாரியார், ஸ்ரீ P. சொக்கலிங்க ஆச்சாரியார், மதுரகவி புதுவை ஸ்ரீ நடராஜ ஆச்சாரியார், காயிரம்பேடு-ஸ்ரீ திருவேங்கட ஆச்சாரியார், உழலூர் ஸ்ரீ பரசுராம ஆச்சாரியார், ஸ்ரீ பாலகுருவாச்சாரியார் இவர்கள் முறையே பிரபுலிங்கலீலை, கண்ணப்ப நாயனார் சரித்திரம், தாயுமானவர் மகிமை, விஸ்வகர்மப் பிரபாவம், குங்கிலியக்கலய நாயனார் சரித்திரம், திருவிளையாடற்புராணம், தேவி மகாத்மியம் என்னும் விஷயங்களைப்பற்றிப் பிரசங்கித்தனர். இவர்களுக்கும், திரவிய சகாயஞ் செய்தருளிய ஸ்ரீ சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரியார், ஸ்ரீ T. பாக்ஷா ஆச்சாரியார், ஸ்ரீ செஞ்சி ஆண்டி சுந்தர ஆச்சாரியார், ஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியார், ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார், ஸ்ரீ P. சொக்கலிங்க ஆச்சாரியார், ஸ்ரீ தணிகாசல ஆச்சாரியார் இவர்களுக்கும் சபையார் மிகவும் வந்தனமுடையவர்களா யிருக்கிறார்கள்.

***

சென்னையிற் பிரசுரமாகும் 'ந்யூ இந்தியா' (New India) என்னும் ஆங்கிலத் தினசரிப்பத்திரிகையின் 7—11—16உ பதிப்பில் "L. M" என்று கையெழுத்திட்ட நிருபரொருவர் "ஓர் கௌரவமான உதாரணம்" என்னும் மகுடமிட்டெழுதிய வாக்கியங்களை அடியில் மொழிபெயர்த்தெழுதியிருக்கிறோம்:—

விஸ்வப் பிராம்மணர்களுக்குள், சமஸ்கார காலங்களில் ஆடுகளைவெட்டி, அம்மாமிசத்துடனும் மதபானத்துடனும் விருந்தளிக்கும் வழக்கமொன்றிருக்கிறது. இவ் விஸ்வப்பிராம்மணர்களி லொருவராகிய தக்ஷணத்து ஹைதராபாத் ராம்கோடியில் வசிக்கும் லக்ஷ்மையா என்பவரின் புத்திரர் சித்திப்பேட்டை வீரய்யா என்னும் 20 வயதுடைய வாலிபர், மாமூலான ஜீவபலியை இரண்டு சமயங்களில் நிவர்த்தி செய்து சமீபகாலத்தில் ஓர் நல்லுதாரணங் காட்டினார். மாமூலுக்கு எதிராகச் செல்லும் தைரியங்கொண்டதோடு, ஜாதியார் பலருடைய போதனைக்கு விரோதமாகவும் இவர் நடந்தார். இரண்டு காரியங்களையும் நடத்தி விருந்தினர்களுக்கு சுத்தமாகிய மரக்கறி யுணவு அளித்தார். இது, சரியான மார்க்கத்தில் மிகத் தைரியமானதும், புகழத்தக்கதுமாகிய செய்கையென்பதில் தடையில்லை. இம் மகத்தான உதாரணத்தை மற்ற ஜனங்கள் பின்பற்றினால், இந்தியா உண்மையாகவே அரியவர்த்தமாகும்.



## விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியார்

இத்தலைப் பெயர்கொண்டதொரு புத்தகம், சமஸ்கிருத பண்டிதராகிய மீஞ்சூபுரம் ஜோஸ்யர் பிரம்மஸ்ரீ அ. முத்து ஆச்சாரியாரவர்களால் எழுதப்பட்டு, சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் விலை பிரதியொன்றுக்கு ஆறு அணு.

இப்புத்தகத்திற்கு, சென்னை மாதர்கலாசாலை ஆந்திர பண்டிதராகிய ஆருஷேயப் பிராம்மண சிரேஷ்டர் பிரம்மஸ்ரீ அக்ஷிந்தல-நரஸிம்ஹம் பந்துலு அவர்கள் ஆந்திரபாஷையில் அருமை மிக்கதோர் முகவுரையெழுதி யிருக்கிறார்கள். எனவே, இந்நூலின் சிறப்பும் இதிற் கூறப்பட்ட வாக்கியங்களின் உண்மையும் சர்வாங்கீகாரமானவை யென்பது சாற்றாமலே பெறப்படும். "பிராம்மணர்களில் சிரேஷ்டஸ்தான உரிமை" நாம் கொண்டிருப்பதற்கொப்ப ஸ்ருதி ஸ்மிருதி புராணங்களும் பல ஆதாரங்கள் தந்துநிற்பதைக் கண்ணாரக் கண்டு ஆனந்திக்கும்படி, இம்முகவுரை ஆருஷேயர்களுக்குப் போதிக்கின்றது. "பிராம்மண வருணத்தில் ஒரு வர்க்கமா யேற்பட்டுள்ள விஸ்வகர்மப் பிராம்மணரின் மேன்மையைத் தெரிவிக்க " சுருதி ஸ்மிருதி புராணவசனங்கள் அவசியமன்றாம்" என்றுங் கூறுகின்றது. இந்துதேசத் துட்புகுந்த முதற் குழுவினராகிய ஆரியர்களின் வம்ஸத்தினர் தேவப்பிராம்மணர்களென்றும், இவர்களே இயற்கையாய்ப் பிராம்மணத்துவமுடையவர்களென்றும், இவர்களுடைய அநுக்கிரகத்தினாலும் தவத்தாலும் க்ஷத்தியமஹரிஷிகளாலும் அங்கீகாரத்தால் பிராம்மணத்வம் பெற்றவர்கள் கோ ப்ராம்மணர்களென்றும் இம்முகவுரையில் விளக்கப்பட்டிருக்கின்றது. "இந்த பேதங்களை அறிந்துகொள்ளும் பொருட்டே அவரவர்களுடைய பிரவரத்தில் 'தேவப்பிராம்மணேப்யஹ' என்றும் 'கோப்ராம்மணேப்யஹ' என்றும் தங்களுடைய பிராம்மணவர்க்கப் பெயர்கள் இன்றும் பாராட்டப்பட்டு வருதல் பிரசித்தமாயிருக்கிறது"—என ஓர் அத்தாக்ஷியுங் காட்டப்பட்டிருக்கிறது. இன்னும் "கோ" சப்தார்த்தமும் தெளிவாயுரைக்கப் பட்டிருக்கிறது. இவ்வளவு சூக்ஷ்மமாக விஷயங்களைக்காட்டி சர்வசாஸ்திர சாரமாய் விளங்குமொப்புயர்வற்ற முகவுரையை அன்போடு மெழுதியருளிச்செய்த பிரம்மஸ்ரீ பந்துலு அவர்களுக்கு விஸ்வகர்மப் பிராம்மணர்களெல்லோரும் நன்றியறிதலுடையவர்களா யிருக்கவேண்டுமென்பதை நாமுரைத்தலும் அவசியமோ? இவ்வாந்திர முகவுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நூலினுள், முதன்முதல், மூலபுருஷன் விஸ்வகர்மாவுக்கு ஆச்சார்யத்வம் வகிக்கிறதற்கான உத்கிருஷ்டம் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாய் கிருஷ்ண யஜுர் வேதத்தினின்றும் யஜுர் ஸம்ஹிதையினின்றும் சுலோகங்கள் (இலக்கங்களுடன்) காட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்லோகங்களெல்லாம் தமிழிலும் தெலுங்கிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஸ்லோகங்களின் கீழ் அவற்றின் கருத்து தமிழில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. இரண்டாவது, விஸ்வகர்மா வென்ற பெயர் உண்டானதற்கான காரணம், மஹா விஸ்வகர்மீயம் மனுசூத்திரம் என்னுஞ் சிற்பங்களின் ஆதாரவாக்கியங்களுடன் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது, விஸ்வகர்மா ஜகத் குருவென்றும் ஆச்சார்யரென்றும் விளக்கப்பட்டிருக்கிறது. இதற்காதாரமாய் விஸ்வபோதம், ஸ்காந்தம், மூலஸ்தம்பம் இவற்றின் வாக்கியாதாரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பிறகு, விஸ்வகர்மரே விஸ்வகர்மதத்வாம்ஸத்தினரென்றும், பிரபஞ்ச சிருஷ்டிகர்ம முடையவரென்றும், அதினால் உலக போஷகத்வமடையும்படி செய்விக்கிற கர்த்தரென்றும், குருவென்றும், ஆச்சார்யரென்றும் பிராம்மணரென்றும் நிரூபிக்கிற பிரமாணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பிரமாணங்கள் பலவாயிருக்கின்றன.

## வாழ்த்து

வாழிவிஸ்வகர்மன் வளமைசெறிந் தெந்நாளும்
வாழி யதைத்தந்த வன்சபையோர்—வாழி
மனமுருக வாசித்தோர் மல்லல்ஞாலத்து
தினம்பெருக வாழியிதன் சீர்.

க. சுந்தராச்சாரி.

குலஞ்செயுங் குற்றமெல்லாம் கோதறஎடுத்துக்காட்டி
நலம்பல நமக்குச்செய்வான் நம்பனதருளைநாடி
கலங்குறு உளத்தினோடுங் கனசபைநடத்துவோரும்
பலந்தரு விஸ்வகர்மப் பத்திரிகைதானும்வாழி.

சங்கர குமாரன்.

சாதிவாதனைகள்போற்றி தருமநூல் நெறிமறந்தே
வேதனைக் கிடமேயாகும் வெவ்வினையாளராகி
நீதியினில்லாதார்கள் நெறிப்பட வுழைத்தவர்கட்
காதரவனந்தஞ்செய்யு மணிவிஸ்வகர்மன் வாழி

விஸ்வக்ஞன்.

அப்பால், பூலோகத்தில் விஸ்வகர்மவம்ஸம் உண்டென்பதையும், அவ்வம்ஸத்தினர் தொழில் செய்கிறவர்களென்பதையும் பிராம்மணர்களென்பதையும் நிரூபிக்க வியாஸமகரிஷியினுல் சொல்லப்பட்ட வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. சாஸ்திரங்களில் விஸ்வகர்மரை ஆச்சார்யரென்றவழங்கியிருப்பதற்காதாரங்களிற் சில ஆறுவதாக எழுதப்பட்டிருக்கின்றன. ஏழாவது, ஆச்சாரியராகிய விஸ்வகர்மா ஸ்தபதிகளின் லக்ஷணங்கள், சிற்பசாஸ்திரங்களையும் இராமாயணம், ஸ்காந்தம், உபநிஷத்கள், விஸ்வகர்ம புராணம் முதலிய கிரந்தங்களையும் அநுசரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேல், பிரபஞ்ச சிருஷ்டிசெய்யும் ஆசாரத்தையுடையவர்கள் ஆச்சாரியர்களென்றுரைக்கும் வாக்கியங்கள் பல எடுத்துக் காட்டப்படடிருக்கின்றன. பத்தாவது, ஆச்சாரியஜாதியில் கிருதயுகமுதலாகவே மடாதிபத்திய குருஸ்தானங்களில் ஆச்சார்யரென்று சொல்லப்படும் குருஸ்வாமிகளின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அப்புறம், ஆச்சார்யரென்பவரின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து ஆச்சார்ய என்ற மூன்றக்ஷரங்களின் தாத்பரியம் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பின்பு, சிற்பிகளாகிய விஸ்வகர்மரை ஆச்சார்யரென்று கூறும் தமிழ் நிகண்டுகளின் வாக்கியங்களெழுதப்பட்டிருக்கின்றன. அவைகளின்பின், திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களில் விஸ்வகர்மர் ஆச்சார்யரென்றும் சிற்பபுரந்திரரென்றும் கூறப்பட்டிருப்பதுவும், விஸ்வகர்மர்களுக்கு ஷை சமஸ்தானத்தில் பிரசித்த மரியாதைகள் நடைபெறுவதும், அவர்கள் பெயர்களின் முடிவில் ச்சா வென்னும் அக்ஷரமே உபயோகப்படுவதும், முறையே விஸ்தரிக்கப்படுகின்றன.

பதினுருவது, இலங்கையில் வசித்த அரசர்களால் வெகுமானமாக அவ்விடமிருந்த விஸ்வகர்மர்களுக்கு அநேக விசேஷப் பெயர்களுடன் ஆச்சார்யரென்று சிங்களபாஷையில் எழுதிக்கொடுக்கப்பட்ட தாம்பிரசாஸனங்களின் விவரங்காட்டப்பட்டிருக்கிறது. பதினேழாவது, சோழதேச சிலாசாஸனமும்; பதினெட்டாவது, ஸ்ரீமத் சிருங்கேரி சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்திலிருந்து விஸ்வகர்ம மஹா ஜனங்களுக்குக் கிடைத்த சம்மதிப்பத்திரங்களும்; பத்தொன்பதாவது, வித்வத்ஜன சம்மதிப் பத்திரங்களும் விவரிக்கப்பட்டன. கடைசியாக, 100, 150 வருஷங்களாக அநேக கோர்ட்டு தீர்ப்புகளிலும், பிறஜாதிகள் விஸ்வகர்மரை வாதி ப்ரதிவாதிகளாக உட்படுத்திக்கொடுத்திருக்கிற சகல ரிகார்டுகளிலும் ஆச்சார்யரென்றே எழுதப்பட்டிருப்பதுவும், இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம், மஹாராஷ்டிரம், ஹிந்துஸ்தான், தமிழ் முதலிய பாஷைகளில் எழுதுபவர்கள் ஸா-வை நீக்கி சா-வென்னும் அக்ஷரத்தையே எல்லாவிடங்களிலும் உபயோகித்தெழுதிவருவதும் காட்டப்பட்டிருக்கின்றது.

நூலாசிரியருடைய ஜெகத் பிரசித்தமான பண்டித சக்தியும், சாஸ்திராராய்ச்சியும் இதில் நன்கு விளங்குகின்றன. இந்நூல் விஸ்வகர்மர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்பதையும், ஒவ்வொருவரும் கட்டாயமாக இதை வாங்கி முற்றிலும் வாசித்து மனனஞ்செய்வது அத்தியாவஸ்யமென்பதையும் நாம் எடுத்துரைக்கவேண்டியதே யில்லை. சுஜாதி சம்பந்தமாய்ச் சமீபகாலத்தில் பிரசுரிக்கப்பட்ட கிரந்தங்களிலெல்லாம் இது மிகச்சிலாக்கியமானதென்பதும் வெளிப்படை. இக்கிரந்தப் பிரசுரத்திஞல் நமது பெருங்குறையொன்று தீர்ந்ததென்றே கொள்ளலாம். இந்நூல் விஜாதிச் சகோதரர்களின் விழிகளைத் திறப்பித்து, விஸ்வகர்மருடைய உத்கிருஷ்டத்தை அவர்கள் கரதலாமலகம்போல் காணச்செய்யுமென்று நம்புகின்றோம். விஸ்வகர்மபண்டிதர்களால் எழுதத்தக்கன இத்தகைய நூல்களேயாகும். மற்ற பண்டிதர்களைப்போல் பொதுப்பட எழுதுவதிஞல் இவர்கள் பாராட்டப்படுதல் கூடாமை. இந்நூலாசிரியருடைய திருநாமமும், இவர் கிரந்தத்தின் மாக்ஷியும் குலத்தோரெல்லோராலும் நெடுங்காலமட்டும் கொண்டாடப்படும். இவருடைய மாதிரியைக் கைப்பற்றி மற்ற குலப்பண்டிதர்களும் பலநூல்கள் செய்தளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இவ்வாசிரியரும் இதுபோன்ற பலநூல்களருளிச்செய்வார்களென்றும் வேண்டுகிறோம்.

இந்நூலில் ஓரிலக்ஷம் பிரதிகள் செலவாகுமட்டும் நாம் திருப்தியடையமுடியாது. ஏனெனில், அப்போதுதான் நம்மவருக்குள் போதிய கிளர்ச்சி பிறக்கும். அப்போதுதான் நம்மவர்கள் ஒருவாறுகவாயினும் தங்கள் பாத்தியதைகளைப் பாராட்டவும், விரும்பவும், பெறவும் சாத்தியப்படும். அப்போதுதான் சுஜாதி சம்பந்தமான குறைகள் பல நீங்குவதற்கேற்ற உணர்ச்சியும் முயற்சியும் வெளிபபடும். ஓரிலக்ஷப் பிரதிகள் எவ்வளவு சீக்கிரஞ் செலவாகின்றனவோ அவ்வளவு சீக்கிரமாக குலோன்னதம் நிச்சயிக்கப்படும். நம்மவர்களுடைய மேம்பாட்டிற்கு இந்நூல் பெருந்துணைக் கருவியாயிருக்குமென்பதை அனைவருங் கண்ணாரக்காணவேண்டும். இந்நூலைப் பரப்புவதில் ஊக்கங்காட்டி உழைக்கவேண்டும். அப்படிச் செய்வோரெல்லாம் பெரும் புண்ணியமும் புகழுமடைதல் திண்ணம்.



# வேள்விகளும், பலிகளும்

## அவைகளின் சமயக் கிரியைகளைக் குறித்த தேவகற்பனைகளும்

ஸ்ரீ V. மௌனகுருநத்திமூர்த்தி ஆச்சாரியார்.

மாத்தியந்த மசாகத்திற்கு சம்பந்தமாகிய யஜுர் வேதத்தின் இரண்டாவது பாகம் சதப்திய பிராம்மணமென்று பேர்பெறும். இது தோத்திரத்திரட்டை விட மிகவும் விரிவாயிருக்கின்றது. இதில் பதினுலு காண்டங்கள் அடங்கியிருக்கின்றன. அக்காண்டங்கள் சமயில்லாத இரண்டு பாகங்களாகப் பாகிக்கப் பட்டிருக்கின்றன. முதல் பாகத்தில் பத்துக்காண்டங்களும், இரண்டாவது பாகத்தில் நாலு காண்டங்களும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு காண்டத்தில் அடங்கிய அத்தியாயங்களின் இலக்கம் பலவாயிருக்கின்றது. ஒவ்வொரு அத்யாயத்தி லடங்கிய ஒவ்வொரு பிராம்மணத்தின் அல்லது பிரத்தியேகமான விதிகளின் இலக்கமும் அப்பிரகாரமே வித்தியாசமாக இருக்கின்றது. புத்தகமுழுதும் பிரபாதகம் என்னும் அத்தியாயங்களாகச் செய்யப்பட்டிருக்கிறவேருருவிதமான பிரிவுமேற்கொண்டிருக்கின்றது. கந்திகங்கள் என்னும் சிறிய பிரிவுகளாகவும் உட்பிரிவுகளாகவும் செய்யப்பட்டிருக்கிற பிராம்மணங்களின் பிரிவில் மேற்சொல்லிய இரண்டுவிதமான பிரிவுகளும் உண்டாயிருக்கின்றன.

வேதத்தின் இந்தப் பாகம் அடங்கிய பதினுலு காண்டங்களில் அறுபத்தெட்டு அத்தியாயங்களுக்கு சம்பந்தப் பட்டிருக்கிற நூறு அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன. பிராம்மணம் என்னும் பிரத்தியேகப் பிரிவுகளின் முழு இலக்கம் நானூற்று நாற்பதாக இருக்கின்றது. கந்திகங்கள் என்னும் பிரிவுகளும், இலக்கம் வைக்கப்படுகின்றன. அவைகள் ஏழாயிரத்தறுநூற்றிருபத்து நாலாக இருக்கின்றன.

சமயக் கிரியைகளுக்கடுத்த தோத்திரங்களின் ஏற்பாட்டில் தொடர்ந்திருக்கப்பட்ட சமயக் கிரியையைக் குறித்த தேவகற்பனைகளின் இந்தத் திரட்டு மேற்சொல்லிய வரிசைக் கிரமமே அநுசரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவ திரண்டாவது காண்டங்கள் பௌர்ணமியிலும், அமாவாசையிலும், செய்யப்படும் சடங்குகளையும், ஓமாக்கினி முதலாகியவைகளின் சடங்குகளையும் விளக்குகின்றன. மூன்றுவது நாலாவது காண்டங்கள் சோமபானஞ் சித்தஞ் செய்யப்பட வேண்டிய விதத்திற்கும், அதைக் குறித்த ஜயாதி ஸ்தோமம் முதலாகியவைகளைக் குறித்த இதர சடங்குகளுக்கும் சம்பந்தமாயிருக்கின்றன. ஐந்தாவது காண்டத்தில் இராஜசூயம் இவைகள் மட்டும் அடங்கியிருக்கின்றன. அதற்கடுத்த நாலுகாண்டங்கள் எக்ஞிய ஓமாக்கினியின் பிரதிஷ்டைக் கிரியைகளைக் கற்பிக்கின்றன. அக்கினிரகசியம் என்னும் பத்தாவது காண்டம், இந்தச் சடங்குகளிஞல் உண்டாகும் பிரயோஜனங்களைக் காட்டுகின்றது. இரண்டாம் பாகத்தைச் சார்ந்த முதலில் சொல்லப்பட்ட மூன்று காண்டங்கள் சௌத்திராமணியாகத்தையும், அசுவமேதயாகத்தையும் குறித்தவைகளென வியாக்கினியரால் சொல்லப்பட்டிருக்கின்றன. கடைசியதா யிருக்கிற நாலாவது காண்டம் வேதாந்த விஷயத்தைச் சேர்ந்ததாக விருக்கின்றது. ஆரம்பத்தில் மூன்றுவது காண்டம் முக்கியமாய் அசுவமேதயாகமென்று குறிக்கப்பட்டதாக விருக்கின்றது. பதினாலாவது காண்டம் விரயத்து ஆரண்யகம் என்று சொல்லப்படுகின்றது.

இந்த வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிற விதமாகச் செய்யப்படும் அசுவமேதயாகத்திலும், புருஷமேத யாகத்திலும், வாஸ்தவமாக அசுவங்களும், மனிதர்களும், பலிகொடுக்கப் படுவ தல்லர்; அசுவமேதயாகச் சடங்கில் அநேக விதங்களாகச் சொல்லப்படும் அறுநூற்றொன்பது காட்டுமிருகங்கள், குடிமுறைக் கடுத்த மிருகங்கள், பட்சிகள், மச்சங்கள், புழுப்பூச்சிகள், இருபத்தொரு ஸ்தம்பங்களிற் கட்டப்படுகின்றன. சாதுவான மிருகங்களைக் கற்றூண்கள் மத்தியில் கட்டிச் சில தோத்திரங்கள் ஓதப்பட்ட பின்பு பலியாகிய யாதொரு துன்பமுமில்லாமல், அவை அவிழ்த்து விடப்படுகின்றன. மற்றொன்றில் பலவித குலங்களும், நடத்தைகளும், தொழில்களுமுடைய நூற்றெண்பத்தைந்து மனிதரைப் பதினொரு ஸ்தம்பங்களிற்கட்டி ஒட்டலங்காரமாகச் சொல்லப்படும் நாராயண பலியைக் குறித்துக் கீதங்கள் ஓதப்பட்டபின்னர் இந்த மானிட பலிகள் காயமில்லாமல் விட்டுவிடப் படுகின்றன. ஓமாக்கினியில் நெய் ஆகுதிசெய்யப்படுகிறது. அசுவமேதயாகங்களும், புருஷமேத யாகங்களும், இந்த வேதத்தில் பாவனையான சடங்குகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவே யொழிய யதார்த்தமான பலியைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கவில்லை. இந்த வியாக்கியானம் கிரியை முறைச் சாஸ்திரிகளாலும், சந்திதங்களைக் குறித்தும் பிராமணத்தைக் குறித்தும், பேசுகிற

வியாக்கியானிகளாலும் பூரணமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவர் ஒரு யாகத்தில் வாஸ்தவமாகப் பலியிடப் படுகிற பலிகளின் மாம்சம், அந்தப் பலியிடுகிற பேர்களால் தின்னப்படவேண்டுமென்று நியாயஞ் சொல்லியிருக்கிறார். ஆனால், மானுஷ மாம்சத்தைத் தின்னும்படி மனிதன் ஒப்புக்கொண்டிருக்கமாட்டான். மானுஷ பலிகள் வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கவில்லையென்று யூகிக்கப் படுகின்றது. ஆனாலவைகள் விலக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பதிலாக ஒப்புவமையான சடங்குகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அல்லது சில புராணங்களினுடைய தப்பிதமாகக் கிரகித்த உபமானங்கள் பேரிலும், ஆதாரப்பட்டிருக்கிற அநேக அநியாய வழக்கங்களை ஸ்தாபித்திருக்கிற தந்திர சாஸ்திரங்களுடைய அதிகாரத்தின் பேரிலும் சில காலத்தில் அவைகள் வழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கலாம்.

அசுவமேதமென்று சொல்லப்படுகிற சமயக் கிரியையின் விஷயமாயிருக்கிற அசுவம் விராட்டுவுக்கு அல்லது மூலகாரணமான சருவ விளக்கமான வஸ்துவுக்கு உறுதியான அடையாளமாக இருக்கின்றது. தைத்திரிய யஜுர்வேதத்தின் கடைசிப் பிரகரணத்தில் அசுவவுடலினது பலவித பாகங்கள் காலத்தின் பிரிவுகளைக் காட்டப்பட்டவைகளாக இருக்கின்றன. காலைப் பொழுது அதின் சிரசாகவும், சூரியன் அதன் கண்ணாகவும், வாயு அதன் மூச்சாகவும், சந்திரன் அதன் காதாகவும், இவ்விதமாக இருக்கின்றன. சதபத பிராம்மணத்தின் பதினோராவது காண்டத்தில் அநேகவித வாக்கியமொன்று அசுவமேதஞ் செய்யக்கூடாதென்று ஆலோசிக்கும்படி ஒட்டுவமையான அசுவத்தைக் குறித்து விரித்துக்காட்டுகின்றது. ஜீவதசையிலிருக்கிற மிருகங்களின் சேர்மானம் உண்மையான அசுவமேதத்தில் ஆகுவதுபோலப் பாவனைப் பலியாகி வேதசாஸ்திரங்களின்படி சமஸ்த பரிபூரண வஸ்துவைக் காட்டுகின்றது. ஆகிலும் வேதாதிகாரமில்லாமல் அசுவத்தை வாஸ்தவமாகப் பலியிடுகிற யாகத்திற்கு இந்தக் கிரியை அவசியமாகுமோ ஆகாதோவென்று நிச்சயப்பட்டிருக்கவில்லை.

சதபத பிராம்மணத்தின் பதினோராவது காண்டத்திற் சொல்லப்பட்டிருக்கிற பிரகதாரண்ணியம் வாஜஸனேயி அல்லது வெள்ளையஜுஸினுடைய முடிவாக இருக்கின்றது. அதிலே ஏழு அத்யாயங்கள் அல்லது எட்டு அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன. கடைசியில் சொல்லப்பட்ட ஐந்து அத்தியயனங்கள் ஒரு ஏற்பாட்டில் கடைசி ஆறு அத்தியயனங்களோடு ஒத்திருக்கின்றன. மற்றதில் விரயத்து உபநிஷதமென்று அல்லது வாஜஸனேயி பிராம்மண உபநிஷத்து என்று சொல்லப்படுகிற வேதாந்த கிரந்தமாகின்றது. ஆனால் இது சாதாரணமாய் விரயதாரண்ணியகமென்று வழங்கப்படுகின்றது. அதன் முழுப்பாகம் பிரசங்கமாக இருக்கின்றது. யாஞ்ஞவற்கியர் அதன் பிரதான பிரசங்கியாக இருக்கின்றார்.

இந்த உபநிஷத்தின் கருத்தையும் நடையையும் குறித்துச் சில அபிப்பிராயத்தை வெளிப்படுத்த மகா முக்கியமான வாக்கியங்களில் சிலவற்றை இவ்விடத்தில் சுருக்கமாக எடுத்துக்காட்டப்படும். முக்கியமாய் ஸ்ரீ வித்தியாரண்ணியரால் உரை செய்யப்பட்டிருக்கிற வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. சில வாக்கியங்கள் முன்னமே கூறப்பட்டிருக்கின்றன. இதற்கடியில் வருபவைகள் அறியத் தகுதியுடையவைகளாக இருக்கின்றன.

விரயத்து ஆரண்ணியகத்தின் ஆரம்பத்தில் அசுவமேதத்திற்காக நிவேதிக்கப்பட்ட அக்கினி மூலத்தைக் குறித்து ஒரு வாக்கியமிருக்கின்றது. அது இதற்கடியில் வருவதுபோல் விளக்குகின்றது. அதாவது இந்த உலகத்தில் மனதுண்டாவதற்கு முன் ஒன்றுமிருந்திருக்கவில்லை. இந்தப் பிரபஞ்சம் பட்சித்துவிட ஆசையுள்ள மரணத்தாற் சூழப்பட்டிருந்தது. ஏனென்றால் மரணமானது ஆவலாய்ப் பட்சிக்கிற பட்சணியாயிருக்கின்றான். அவன்தானே ஆத்துமாவையுடையவனாக வேண்டுமென்று இச்சைகொண்டு மனத்தையுண்டாக்கினான்.

இவ்விடத்தில் வியாக்கியான கர்த்தர் மரணம் சொர்ன அகிலாண்டத்திலிருந்து பிறந்தாரமனிதனாக இருக்கிறானென்று விளம்பினார். இருக்கு வேதத்திலிருந்து உதகரிக்கப்பட்ட வாக்கியத்தில் மரணம் முதலில் உண்டாயிருந்ததில்லையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. காலவளவின்படி உலகம் அழிந்து மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறதென்றும் கடைசியில் எல்லா வஸ்துக்களும் பெரியபொருளாகி விடுகின்றனவென்றும் அபிப்பிராயத்துக்கு இது எளிதில் ஒத்திருக்கின்றது என்றும், வெளிவந்திருக்கிற வேத வசனங்கள் முறையிடுகின்றன.



# நமது கவனக்குறைவு

ஸ்ரீ T. தங்கவேல்,
திருநெல்வேலி பாலம்.

மாந்தர் யாவரும் தற்போதுள்ள நிலைமையைவிட மேல்நிலையை அடைய விரும்புவது இயற்கையாகும். இதுகண்டும் கேட்டும் பழகினவிதங்களில் ஏற்படக் கூடியதே. உதாரணமாக, பிறர் நல்லுடை தரித்திருப்பதைக் கண்ணுற்ற நாமும் நல்லுடைதரிப்பதும், சங்கீதங் கற்றுக்கொள்ள ஆசைவைத்து அதற்கு வேண்டுவனவாய் சாதனங்களைத் தேடி அதைக் கற்றுக்கொள்ளுவதும், அவ்வாறே உயர்ந்த வேலைக்காரன் எனப் பெயர்வாங்குவதும் ஏனையவைகளும் விடா முயற்சியாலும் ஊக்கத்தினாலும் ஆசையினாலும் அடையப் பெறுவன வென்பதை ஒருவர் எடுத்துக் காட்ட வேண்டுமோ? "முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்ற முதுமொழிக்கிணங்க தாழ்ந்த நிலையிலுள்ள ஜாதியார் எவ்வெவ்வேற்பாட்டினால் எம்முயற்சியினால், எவ்வழிகளினால் உன்னதநிலையை அடைந்துள்ளார்களென்பதைக் கண்டும், கேட்டும், பார்த்தும், வாசித்துமுள்ள நாம் தற்போதுள்ள நிலையினும் உயர்ந்த ஸ்திதிக்கு வருவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்யவேண்டும் செய்யவேண்டும் என்று வாய்ப்பறை சாற்றி வருகின்றோமே ஒழிய, நமது தற்கால நிலை என்ன, இனி அடையவிரும்பும் நிலைஎன்ன, இவ்விரு நிலைகளுக்குமுள்ள பேதமென்ன, அப்பேதத்தை நீக்க நம்மிடத்தில் எது இல்லை, எதுவேண்டும், நாம் கைக்கொள்ள வேண்டியதென்ன, கைவிட வேண்டியதென்ன வென்ப தாதிய விடயங்களை, யோசிப்பது துல்லபமாயிருக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1. | அகற்றவேண்டியது | பொய் |
| 2. | கைகொள்ளவேண்டியது | சத்தியம் |
| 3. | கற்கவேண்டியது | கல்வி |
| 4. | புலப்படுத்தவேண்டியது | ஒற்றுமை |
| 5. | வ்ருத்திசெய்யவேண்டியது | தொழிற்கல்வி |
| 6. | நாட்டவேண்டியது | சபை |
| 7. | அடையவேண்டியது | கீர்த்தி |
| 8. | அனுசரிக்கவேண்டியது | சற்கருமம் |
| 9. | சேர்க்கவேண்டியது | வித்தியாநிதி |
| 10. | புரியவேண்டியது | தருமம் (கல்விக்கும் தொழிலுக்கும்.) |

இப்பத்து விடயங்களையும் நம்முன் பாவச்செய்ய வேண்டிய விடாமுயற்சி, ஆசை, ஊக்கம் இவைகளைக் கொண்டாரில்லை. வேலை கற்கவேண்டுமென்ற எண்ணமிருந்தாவதென்ன, குருவைநாடி நாளுந்தப்பாது வேலை கற்றுவந்தாலன்றி பயன்தராது. சர்க்கரை இனிக்கும் என்ற சொல்மாத்திரத்தினால் நாவிற்கு இனிமையான ருசி உண்டாகுமா? சர்க்கரையை எப்படிச் செய்வதெனக்கண்டு அதன்படி செய்து அதை அருந்தி ருசிபார்த்தாலன்றி நாவிற்கு ருசி உண்டாகாது. நமக்குள் கல்வி வேண்டும், ஒற்றுமைவேண்டும் பொருள்வேண்டும் என்று கூட்டங்கள் கூடி பன்னிப்பன்னி பேசுவதினால், வியாதியஸ்தன் ஒருவன் நற்பண்டிதனை நாடி மருந்துகளை அருந்தாமலும், அவ்விதமே உட்கொண்டுள்ள மருந்தின் குணத்திற்குத்தகுந்த பத்திய முறைகளை அனுசரிக்காமலும் நான் சுகமடையவேண்டும், நான் பஸ்பஞ் சாப்பிட வேண்டும், நான் டானிக் (Tonic) சாப்பிடவேண்டும் என்றும் வாயினால் பிதற்றிக்கொண்டிருந்தால், வியாதியில் கிடந்து எப்படி அழுந்தி அல்லலுறுவானோ அதைப்போல், நாமும் இந்நிலைமையிலிருந்து இன்னலுறவேண்டியதுதான்.

ஆகையினால், நாம் நமது முன்னேற்றத்திற் குரித்தான விடயங்களை, "விஸ்வகர்மன்" மூலமாயும் பிரசங்கவாயிலாகவும் படித்தும் கேட்டும் வருவது விழலுக்கிறைத்தநீர் போலாகாது, ஒவ்வொரு ஜில்லா, கிராமம் தாலுக்காவிலுள்ள நாட்டாண்மைக்காரர்கள் வேண்டிய பிரயத்தனங்களைச் செய்வது அவர்கள் தோளின்மேலிட்ட பாரமாகும், கல்வியினால் ஒற்றுமையும், ஒற்றுமையினால்-பலமும், பலத்தினால் பொருளும், பொருளினால் கைகூடாதகாரியமும் கைகூடுதல் நிச்சயம். கலிகாலத்தில் காரியங்கள் சித்திபெறுவது ஜனங்களின் கூட்டத்தைப் பொருந்தியுள்ளதென்பது வேதவாக்கியம். இதற்கு மூலகாரணமாகிய கல்வியை நம்மினத்தில் விருத்திசெய்யவேண்டும். விஸ்வ கர்ம வம்ஸத்தி லுதித்த ஒவ்வொருவரும், தூசிமுதலானதுகளினால் கண்கெட்டுப் போகாமல் கண்ணை இமைகாப்பதுபோல, கண்போன்ற நமது குழந்தைகளை தூசி போன்ற குலத்திற் கீனமான தீய ஒழுக்கங்கள் வந்தணுகாதபடி இமைபோன்ற கல்வியினால் காத்து கவலை நீங்கி கனம் பெறவேண்டும். இமைசக்தி யில்லாதபோது கைவந்துகாப்பதுபோல், தான் உற்றுப்பெற்ற

மைந்தனுக்குக் கல்வியை விருத்திசெய்யத் தந்தைக்கு சக்தியில்லாதபோது ஐவிரல்கள் சேர்ந்த கரம்போன்ற பொருளுடைய மகான்கள் பலர்கூடி விஸ்வகர்ம சிறுவர்களைக் கல்வியில் உயர்த்த "விஸ்வகர்ம வித்தியாநிதி"யின் கிளைகளை ஒவ்வொரு ஊர்களிலும் ஸ்தாபிக்க வேண்டும். இங்ஙனஞ்செய்ய முன்வாராதவர்கள் நான் "விஸ்வகர்மஜாதியன்" "விஸ்வகர்மன் பத்திரிகையை வாசிக்கின்றவன்" "குலோத்தாரணசிரத்தை உள்ளவன்" என்று சொல்லுவதற்கோ எண்ணுவதற்கோ சிறிதும் அருகாராகார் என்பதை யோசிக்கவும்.

"உடம்பினை எடுத்த பயனுவதெல்லாம்
தடப்பட குலத்தை ஈடேற்றவே" என்பதை

ஆலோசிக்கவேண்டும்.

தன்னுடைய நடை உடை குலம் முதலியதைச் சீர்திருத்தாமல் பிறர் மேன்மையைக் கண்டு பொறாமை கொண்டால் பயனடையப்போவதில்லை. ஆகையினால் இன்னின்ன ஊர்களில் இன்னின்ன நாட்டாண்மைக்காரர்—

1. "விஸ்வகர்ம வித்தியாநிதி விஷயமாய் எடுத்துக் கொள்ளப்பட்ட நடபடிக்கைகள்.

2. கல்வி அபிவ்ருத்தி விஷயமாய் சாதிக்கட்டு பிரகாரம் பெற்றோர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள்.

3. ஆசார சீர்திருத்த விஷயமாய் நாட்டாண்மைக்காரரும், வாத்தியாரும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அவைகளினலாய பயன்கள் முதலியவைகளை இப்பத்திரிகை மூலமாய் வெளியிட்டால் மற்ற ஜில்லா வாசிகளும் போட்டிபோட்டு இவ்விஷயத்தில் முன்வர ஏதுவாகும்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடும்பத்தைச் சீர்திருத்துவதாய்க் கருதிச் செய்யவேண்டும்; குடும்பந் திருந்தினால் கிராமம் சீர்திருந்தும், கிராமம் சீர்திருந்தினால் பட்டணம் சீர்திருந்தும், பட்டணம் சீர்திருந்தினால், ஜில்லா சீர்திருந்தும், ஜில்லா சீர்திருந்தினால், இராஜதானி சீர்திருந்தி சிறப்படைதலும், அதன் துவாரவாய் தேசமே சீர்திருந்தி சிறப்படைதலும் சித்தாந்தம்.

## கந்த ஷஷ்டியும் சுப்பிரமண்ய தத்துவமும்

கந்த ஷஷ்டி யென்பது ஸ்ரீ கந்த பிரானுக்குரிய ஷஷ்டி யென்னுந் திதியோடு கூடிய நாளெனப் பொருள் படும். இந்நாள் பிரதிவருடமும் ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாஸை கழிந்த ஆறாவது நாளாம்; அஃதாவது கார்த்திகை மாத சுக்ல பக்ஷ ஷஷ்டியாம். இந்நாளில் ஸ்ரீ சுப்பிரமண்ணியக் கடவுள், சூரன் என்னுங் கொடிய அசுரனைச் சம்ஹரித்துத் தேவர்களுக்கு அநுக்கிரகித்தாரென்பது புராணப் பிரசித்தமாம். கந்த ஷஷ்டியாகிய இத்தினத்தில் ஸ்ரீ சுப்பிரமண்ணியக் கடவுளுக்கு அபிஷேக உற்சவாதி விபவங்கள் நடப்பது தென்னிந்தியாவில் யாவரும் அறிந்த விஷயமேயாம். கந்த ஷஷ்டியைப்பற்றி ஆராய்வதற்கு முன் ஸ்ரீ சுப்பிரமண்ணிய மூர்த்தியின் தத்துவத்தை ஆராய்வது அவசியமாயிருப்பதால், அதை ஆராய்வோம்.

### ஸ்ரீ சுப்பிரமண்ணிய தத்துவம்

ஸ்ரீ சுப்பிரமணியர் பரமசிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து 6 நெருப்புப் பொறிகளின் வடிவமாய் வெளிப்பட்டாரென்றும், அப்பொறிகள் முறையே வாயு, அக்கினி, கங்கைகளால் சரவணப் பொய்கையில் சேர்க்கப்பட்டு ஆறு குழந்தைகளாக உருவடைந்தனவென்றும், அக்குழந்தைகள் கார்த்திகை மாதரால் வளர்க்கப்பட்டு வருங்கால் உமாதேவியால் அணைக்கப்பட்டு ஆறு குழந்தைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து ஆறு முகமும், பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு கைகளும், இரண்டு கால்களுமுடைய ஒரு குழந்தையாயின வென்றும், பிறகு அக்குழந்தை இந்திரன் முதலிய தேவர்களுக்கிடர் விளைவித்த தாரகன், பானுகோபன், சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று தேவர்களுக்கு அநுக்கிரகித்ததென்றும், கந்தபுராணங் கூறுவது மிகப் பிரசித்தமேயாம். இனி இதன் தத்துவத்தை ஆராயப்புகின், சுப்பிரமண்ணியக் கடவுள் பரமசிவன் அல்லது ஈச்வரனுடைய அவதாரமே யென்பது அவருடைய அவதார தத்துவம், சொரூப தத்துவம், திருநாமங்களின் தத்துவம் முதலியவைகளால் தெளிவாய்ப் புலப்படும். அவையாவன:—

### 1. அவதார தத்துவம்

இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் சொரூபத்தை மறந்து காமம் வெகுளி அஞ்ஞானமென்னும் அசுரரால் பீடிக்கப்பட்டு நிரதிசயானந்தமாகிய சொர்க்கத்தை யிழந்து துன்புறுங்கால் அவர்களின் தர்மா, தர்மங்கள் பலன் தரச் சம்முகமானதால், கல்லால நிழலில் சின்முத்திரையோடு நிர்விகற்ப சமாதியிலிருந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகிய நிர்க்குண பிரஹ்மத்திற்குச் சகளீகரிக்க நேர்ந்தது. உடனே சேதனும்சமானமாகிய ஆறு பொறிகள் வெளிப்பட்டன. இச்சேதனும்சமானபொறிகள் முறையே ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி முதலிய பஞ்சபூதங்களோடு சேர்ந்து சகளீகரித்தனவாம். இங்ஙனஞ் சகளீகரித்த சுப்பிரமணிய மூர்த்தி சகுணப் பிரஹ்மமாகிய ஈச்வரனே யென்று கூறுவதில் யாதும் ஆக்ஷேபமின்றாம். இனிச் சொரூப தத்துவத்தை ஆராய்வாம்.

### 1. சொரூப தத்துவம்

1. ஆறு முகம்.—இவை ஈசன் நான்கு திசைகளோடு மேல் கீழ் என்னும் திசைகளுஞ் சேர்ந்து ஆறு திசைகளுஞ் சேர்ந்து ஆறு திசைகளிலும் வியாபக மானவன் என்று தெரிவிக்கின்றனவாம்.

2. பன்னிரண்டு கைகள்.—பத்துக் கைகள் கர்மகாண்டத்தையும், ஒரு கை பக்தி காண்டத்தையும், ஒரு கை ஞானகாண்டத்தையும் காட்டுகின்றன. எங்ஙனமெனின், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களும், ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஆதிசக்தி, பராசக்தி என்னும் பஞ்ச சக்திகளும் பத்துக்கைகளாம். வரதஹஸ்தம் பக்தியையும் அபயஹஸ்தம் ஞானத்தையுங் காட்டுகின்றனவாம்.

3. பன்னிரண்டு கண்கள்.—துவாதச ஆதித்யர்களாம்.

4. இரண்டு பாதங்கள்.—பிரவிர்த்தி-நிவிர்த்திகளாம்.

5. வேல்.—அஞ்ஞான நிவர்த்தக சக்தியாம்.

இனி அம்மூர்த்தியின் திருநாமங்களின் தத்துவத்தை ஆராயலாம்.

### 3. நாமாவளி தத்துவம்

1. ஷண்முகன்-சர்வ வியாபகன்.

2. கந்தன்.—காமம், குரோதம் முதலிய உட்பகைவர்களை நாசஞ் செய்பவன்.

3. சுப்பிரமண்ணியன் — மேலானதாகிய பிரஹ்ம ஞான சொரூபன்.

4. "சரவணபவ"ன்.—ச-ர-வ-ண-ப-வ என்னும் ஆறெழுத்துக்களும் மூலாதாரம் முதலிய ஆறாதாரங்களைக் குறிக்குமெழுத்துக்களாகும். ஆதலால் சரவணபவன் என்பது ஆறாதாரங்களிலும் அநுகதமா யிருப்பவனெனப் பொருள்படும்.

5. குகன்.—ஹிருதயாகாசத்தில் வெளிப்படுபவன். அஃதாவது சரவணத்தில் உற்பூதமானவன்-சரவணமென்பது நால் நாவது ஆதாரமாகிய அநாகதம் அல்லது ஹிருதயமாம்.

6. குமாரன்.—(1) குவிதமாகிய துர்வாசனைகளை நாசஞ் செய்பவன்.

(2) உலகத்தில் மேலானதாகிய மோக்ஷத்தை யளிப்பவன்

7. சக்திதரன்.—மகாவாக்கிய உபதேசமாகிய அஞ்ஞான நிவர்த்தக சக்தியையுடையவன்.

8. சிகிவாஹனன்.—அஞ்ஞானத்தை யடக்கிக்கொண்டிருப்பவன். சிகி-மயில்.

இங்ஙனமே இவரது திருநாமங்களெல்லாவற்றிற்கும் அந்தரார்த்தங்களுள. அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

### 4. நான்முகப் பிரமனைச் சிறையிட்ட தத்துவம்

நான்முகப் பிரமன்.—அந்தக்கரணமாம்; மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் நான்கு பகுதிகளையுடையது. பிரணவத்தின் பொருள் அந்தக்கரணத்திற்கு அப்பாற்பட்டதாகையால் அந்தக் கரணமாகிய பிரமன் பிரணவத்திற்குப் பொருள் கூறமுடியாமல் சங்கோசம் அடைந்தான். இதுவே பிரமன் சிறைப்பட்ட தத்துவமாம்.

### 5. பிரணவத்தைப் பரமசிவனுக்கு உபதேசித்த தத்துவம்

பரமசிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஞானும்சமான பொறிகள் கிளம்பியபோது அடங்கியிருந்த சக்தியாகிய உமை பயப்பட்டு ஓடினளென்றும், அப்பொறிகள் வாயுதேவனால் கொண்டுபோகப்பட்ட பிறகு மறுபடியும் பரமசிவத்தை யடைந்தனவென்றும் புராணங் கூறுகின்றது. இதனால் உமை, மாயையென்றும், ஞானத்திற்கு மாயையாகிய அஞ்ஞானம் பயப்பட்டு ஓடுவது சகஜமே யென்றும், பரமசிவத்தினிடத்திருந்து ஞானும்சம் போய்விட்ட பிறகு மறுபடியும் அஞ்ஞானம் வந்து சேர்ந்ததென்றும் ஒருவாறு ஊகிக்கத்தகும். ஞானும்சம் போய்விட்டபடியால் பரமசிவன்

ஜீவனெனக் கூறத்தகும். ஜீவன் உபதேசம் பெறுவது சகஜமேயாகுமன்றோ?

## 6. சூரசம்ஹார தத்துவம்

காமக் குரோதாதிகளாகிய துர்வாஸனைகளே, சூரனாதிய அசுரர்களாம். இத்துர்வாசனைகளாகிய அசுரர்களால் தேவர்களாகிய ஜீவர்கள் வருந்தித் தங்கள் சொருபத்தை மறந்து நிரதிசயானந்தத்தைத் துறந்திருக்கையில், அவர்களின் புண்ணிய விசேஷத்தால் பரமேச்வரன் பரமகுருவாகிய ஸ்ரீ சுப்ரமணிய மூர்த்தியாய் அவதரித்துத் தேவர்களிடத்திலுள்ள துர்வாசனைகளைப் போக்கி நிரதிசயானந்தத்தை அநுக்கிரகித்தாரென்பதே சம்ஹார தத்துவமாம். அசுபவாஸனைகள் சுபவாஸனைகளால் நீங்குவது சாஸ்திர சம்மதமாதலால், சூரசம்ஹார காலத்தில் ஷண்முகக் கடவுளுக்கு உதவியாயிருந்த நவவீரர்கள் சுபவாஸனைகளென யூகிக்கத்தகும்.

சூரன்—அஞ்ஞானம்.
தாரகன்—காயம்.
பானுகோபன்—வெகுளி.
மற்றவர்—மற்றவைகளாவர்.

இனிக் கந்த ஷஷ்டியின் தத்துவத்தை ஆராய்வோம். இந்நாளில் தான் சூரனாகிய அஞ்ஞானம் தத்துவ ஞானமாகிய வேலாயுதத்தால் சம்ஹரிக்கப்பட்டது. பிரதமையிலிருந்து ஷஷ்டி வரையில் ஆறுநாள் யுத்தம் நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாதனம் தேவர்களாகிய ஜீவர்களுக்கு உபதேசிக்கப்பட்டது. அதனால் அவர்கள் அவர்களிடத்திலுள்ள மலின வாஸனைகள் நீங்கினமாம். அச்சாதனங்கள் முறையே (1) விவேகம், (2) வைராக்கியம், (3) யோகம் (ஏகாக்கிரம்), (4) நிரோதம், (5) சிரவண மனன நிதித்தியாஸனங்கள், (6) தத்துவஞானமாம்.

## 7. சூரன் மயிலும் கோழியுமான தத்துவம்

அஞ்ஞானத்திற்கு ஞானத்தைத் தவிர வேறு இருப்பு இல்லையென்பது நியமமாதலால், சூரனாகிய அஞ்ஞானம் பரம குருவாகிய முருகக் கடவுளின் உபதேசமாகிய வேலாயுதத்தால் இருகூறாகப் பிளக்கப்பட்டபோது ஒன்று மயிலாகவும், மற்றொன்று கோழியாகவும் ஞானஸ்வரூபியாகிய முருகக் கடவுளிடத்தே லயமடைந்தன. மயில்—அஞ்ஞானத்தின் ஆவரணாம்சமாம். கோழி—அஞ்ஞானத்தின் விசேஷாம்சமாம்.

மேற்கூறிய தத்துவங்களை ஆராயுங்கால், ஜீவர்களாகிய ஒவ்வொருவர் மனதிலும் இந்த யுத்தம் நடைபெறக் கூடுமென அநுமானிக்கத்தகும். அதலால், துர்வாஸனைகளால் மொத்துண்டு சொரூப நிலையைமறந்து பேரின்பத்தைத் துறந்திருக்கும் நாமொவ்வொருவரும் பரம கருணாநிதியாகிய சற்குருவாகிய ஸ்ரீ சுப்பிரமண்ணியக் கடவுளைத் திரிகரண சுத்தியோடு மிகவும் தூய்மையான கந்தஷஷ்டியன்று தியானித்து அவருடைய கருணைக்குப் பாத்திரர்களாய்த் துறந்த பேரின்பநிலையை மீண்டுமடைவது அத்தியாவசியமன்றோ? நாம் இந்நிலையையடைய ஸ்ரீ சுப்பிரமண்ணிய மூர்த்தி அருள் புரிவாராக.

ந. சுப்பிரமணிய அய்யர்,
(லோகோபகாரி)

## அஹிம்ஸா தர்மம்.

(நமது வாசகர்கள் இத் தர்மத்தைப் பலருக்கும் போதிக்கத் துணைபுரியும் பொருட்டாக இவ்வியாசத்தை ஈண்டு பிரசுரிக்கலாயிற்று. ப-ர்.)

பூர்வத்தில் பாப காரியங்களைச் செய்து ஜீவராசிகளுக்கெல்லாம் ஹிம்ஸை உண்டாக்கின நரகாசுரன் என்னும் துன்மார்க்கன் இறந்தநாள் தீபாவளி. அத் துன்மார்க்கனுடைய பாதைகள் தொலைந்து விட்டனவென்னும் சந்தோஷத்துடன் அவன் இறந்த நாளை ஞாபகம் வைத்து வருஷாவருஷம் ஆனந்தமடைகிறார்கள். துன்மார்க்கர்கள், சன்மார்க்கர்கள் ஆகிய இவர்களுடைய வருஷ தினங்களைக் கொண்டாடுவதில் என்ன பிரயோஜனம்? எந்த காரியங்களைச் செய்ததினால் ஒரு மனிதனுக்குத் துன்மார்க்கன் என்னும் பெயர் வந்ததோ, அவைகளை நாம் செய்யாமல் ஞாபகத்தில் வைப்பதற்கும், எக்காரியங்களைச் செய்ததினால் சத்புருஷர்கள் என்னும் பெயர் வந்ததோ அக் காரியங்களை நாம் செய்வதற்குப் பிரயத்தனப்பட்டு கௌரவம் அடையவும் வருஷ தினங்களைக் கொண்டாடுவது. ஆனால் இக்காலத்தில் வருஷ தினங்களுடைய அர்த்தத்தை மறந்துவிட்டோம். அத் தினங்களில் பலவித பலகாரங்களைச் செய்து சாப்பிடுவதே முக்கிய காரியமாக ஆய்விட்டது.

நரகாசுரனைப்போல் நாம் ஆகாமல் இருக்கவேண்டுமென்று ஒரு பொழுதாவது நினைக்கிறோமா? அவன் மனிதர்கள், மிருகங்கள் முதலிய பலவித ஜீவன்களையும் ஹிம்சித்து வந்ததினால் துஷ்டன் என்னும் பெயர் அடைந்தான். அக்காலத்தில் கொடிய மனிதர் அபு



ரூபமாயிருந்திருக்கலாம். ஆகையால், நல்லவர்களுக்கு அவன் இறந்தவுடனே சந்தோஷமுண்டாயிற்று. இப்பொழுதென்றாலோ தாய் தந்தைகளையே குழந்தைகள் மோசம் செய்கிறார்கள், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். அக்கம் பக்கத்தார் விருதா வியாஜ்ஜியங்களை வைத்துக்கொண்டு தரித்திரர்கள் ஆகிறார்கள். குருவென்று பெயர் வைத்துக்கொண்டிருப்பவர் போதிப்பது ஒன்று; அவருடைய நடவடிக்கைகளோ நேர்விரோதமாக இருக்கின்றன. புரோகிதர்கள் ஹிதம் செய்வதைவிட்டு அஹிதம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஜீவன் எல்லாம் ஒன்றே என்னும் சாதாரண உண்மையை மறந்து அவிவேகிகளைப்போலவே விவேகிகளும் ஜீவ ஹிம்சைக்குக் காரணமாயிருக்கிறார்கள். ஊனைத்தின்று ஊனைப் பெருக்கவேண்டாம் எனும் முதுமொழியை மறந்துவிட்டார்கள்.

ஜீவித்திருந்தபொழுது தமக்கு அநேக விதமாய் உபயோகப்பட்ட ஜந்துக்களின் சவங்களுக்கு ஆசைப்பட்டு எள்ளளவாவது தயை இல்லாமல் அவைகளைக் கொல்கிறார்கள்! ஐயோ! தயைக்கு இருப்பிடமாகிய இராமச்சந்திரர், கிருஷ்ணபகவான், புத்தர், ஆகிய இவர்களுடைய ஜன்மபூமியில் பிறந்து அவர்களின் நாமங்களை ஸ்மரணம் செய்பவர்களுக்கு எப்படி இவ்வளவு கடோரமான நெஞ்சு வந்தது? மாம்சாதுகள் புலி முதலிய துஷ்ட ஜந்துக்களுடைய ஆகாரமேயன்றி சாத்விக குணமுள்ள மனிதர்களுடைய ஆகாரமல்ல. ஆடுகளை வெட்டுமிடங்களுக்குப் போய்ப் பார்க்கில் திக்கில்லாத அந்த ஜந்துக்கள் எந்த புண்ணிய புருஷன் நம்மைக் காப்பாற்ற வருவான் என்று தலைதூக்கிப் பார்ப்பது காணலாம். வாயில்லாத ஜந்துக்களானபோதிலும் அவைகளின் கண்களை கவனித்தால் தயைகாட்டுங்கள் என்று சொல்வதுபோலிருக்கும். அவைகளின் கூக்குரலைக் கேட்க எவ்வளவோ பரிதாபகரமாகவிருக்கும். இதை எல்லாம் பார்த்தாலே மனம் உருகும். கசாப்புக்காரன் ஆடுகளின் கூக்குரலைக் கேளாமல் அவைகளைக் கீழேதள்ளி கூச்சமில்லாமல கழுத்தை அறுத்துவிட்டு பிராணன் கொஞ்சம் குறைவுமாக இருக்கும்பொழுதே வேறு மிருகங்களை வெட்ட ஆரம்பிக்கிறான். அவசரமாயிருந்தால் பிராணனிருக்கும்பொழுதே தோலை உரித்தெடுக்க ஆரம்பிக்கிறார்.

இந்து மாதர்களே! உங்களுக்கும் ஹிருதயம் கடினமாகிறதோ! இந்த கோரமான காரியங்களை நீங்கள் கேட்டும்பார்த்தும் இருக்கமாட்டீர்கள். கேவலம் வழக்கத்தின் மேல்பாரமே ஆனந்தத்துடன் புசித்துக்கொண்டு வருகிறீர்கள். சில நாடுகளில் மனிதர்களையே புசிக்கும் ஜனங்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு சமயத்தில் அவர்களுக்கு மனுஷ்ய மாமிசத்தைத் தின்ன வேண்டுமென்னு மாசையுண்டாகி யாரும் கிடைக்காத பொழுது தமக்கிருக்கும் இரண்டு மூன்று பெண் ஜாதிகளில் ஒருத்தியையாவது, அல்லது குழந்தைகளையாவது கொன்று தின்பார்களாம். அவர்களிடத்தில் நாமோ அல்லது நம்முடைய குழந்தைகளோ அகப்பட்டுக்கொண்டால் நமக்கு எவ்வளவு ஆனந்தமாகவிருக்கும்! பெண்களுக்கே மனம் மிருதுவானது. மாமிசாதிகளைத் தின்பதற்கு இனிமேலும் உங்களுக்கு மனம் வருமா? அடிமைகளையும் இதரர்களையும் இன்னும் போது கொளுத்திக் கொஞ்சம் பிராணனிருக்கும்பொழுதே தின்பார்களாம். ஆனால், நாம் காருண்யமுள்ளவர்களாகையால் அவ்வித குரூரக் கிருத்தியங்களைச் செய்யாமல் குழந்தை யவ்வளவு பிரீதியாய் வளர்ந்த மிருகங்களையும் மனைவியைப்போல் க்ஷேமத்திற்குப் பாடுபட்ட மிருகங்களையும் கொல்கிறோம்.

ஜந்துக்களுக்கெல்லாம் பிராணத்தின்மேல் உள்ள ஆசை ஒன்றுதானென்பதையும் நமக்கிருக்கும் பாதைகள் மிருகாதிகளுக்கும் உண்டென்பதையும் மறந்துவிட்டீர்களோ? ஹிந்துக்களே! நீங்கள் மிகவும் தெய்வபக்தியுள்ளவர்களல்லவா? இவ்வளவு கொடுமையான காரியங்களைச் செய்யும் உங்களுக்கு என்ன தண்டனை விதிக்க கடவுள் நினைத்திருக்கிறாரோ? ஹிந்துக்களாகிய நாம் செய்யும் பாவங்களுக்கு நாமே தண்டனையடைய வேண்டியதே யொழிய வேறு யாராவது அடையப் போகிறார்களா? விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள், மிருகங்களின் பிணங்கள் மனிதருக்கல்ல. எத்தனை விதங்களாகப் பதப்படுத்தினபின் மாமிசமானது உங்களுக்குப் புசிக்கக் கூடியதாகிறது. பச்சை மாமிசத்தைத் தொடவாவது பார்க்கவாவது சகிக்கிறீர்களா? பழங்களைப்பார்க்க உங்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. ஆனால், நாய் துர்நாற்ற எலும்பைக் கடிக்க எவ்வளவு சந்தோஷப்படுகிறது? இதனாலேயே எந்த வஸ்துக்கள் யாருக்கு ஆகாரமென்று உங்களுக்குத் தெரியாமல் போகவில்லை. பண்டிகை தினங்களில் தெய்வத்திற்கு ஏன் மாம்சத்தை வைப்பதில்லை?

சனிக்கிழமையிலும் இன்னும் சில தினங்களிலும் உங்கள் சுத்தி, பக்தி, மாம்சாதிகளிடத்தில் விரக்தி, உங்கள் கருணைகுணங்கள் ஆகிய இவைகளைச் சொல்லத் தரமில்லாமலிருக்குமே? ஒருநாள் சன்மார்க்கமாக விருந்து மற்ற நாளெல்லாம் துஷ்ட காரியங்களைச் செய்வதில் என்ன நலம்?

இன்னுமொரு முக்கிய விஷயம். ஹிந்துக்களாகிய நாம் புனர்ஜன்ம முண்டென்பதாக நம்புகிறோம். மனிதனாக இருப்பவன் துஷ்காரியங்களால் மிருகமாகவோ, பக்ஷி முதலாகிய பிராணியாகவோ பிறக்கவேண்டி வருமல்லவா? நம்முடைய மரணமடைந்த பந்துக்களோ சிநேகிதர்களோ மிகவும் பிரியமுள்ள இன்னும் எவரோ துஷ்காரியத்தால் ஜந்துவாகப் பிறந்திருக்கலாமல்லவா? எவ்வளவு சிரத்தையுடன் நாம் சிரார்த்தம் செய்கிறோம்? இவ்விஷயம் ஞாபகத்திற்கு வந்த நீங்கள் இனிமேல் எந்த ஜீவனையாவது கொல்லத் துணிவீர்களா? ஐயோ! ஒரு நரகாசுரனையே உலகம் பொறுக்காதபொழுது இப்போது எங்கே பார்த்தாலும் இருக்கும் நரகாசுரர்களை எப்படிப் பொறுக்கும்? இவர்களுக்கு எப்பொழுது தீபாவளி செய்வது என்று எத்தனைபேர் காத்துக்கொண் டிருக்கிறார்களோ? சகோதர சகோதரிகளே! கங்கணம் கட்டிக்கொள்ளுங்கள். ஜன்மபூமிக்கு கௌரவம் வரும்படி செய்யுங்கள். ஹிம்சையென்பதை அடியோடு விட்டுவிடுங்கள்.

அனேக ஐரோப்பிய அமெரிக்க சாஸ்திரிகள், டாக்டர்கள், மாமிஸ ஆகாரம் அநேக தீமைகளை உண்டாக்குகிறது என்று அதைத் தின்பதை விட்டுவிட்டு இதரர்களுக்கும் அப்படியே போதிக்கிறார்கள்.

பட்டு-விஜயரத்னம் பிள்ளை.

---

## நல்ல உதாரணம்

நமது சபைத்தலைவராகிய ஸ்ரீ சோமங்கலம்—கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்வதாகவும், அப்படிச் செல்லும்போதெல்லாம் தாம் செல்லும் ஊர்களில் உள்ளவர்களாகிய விஸ்வப்பிராம்மணர்களுக்கு, சபையைப்பற்றியும், ஜாதிவிஷயத்தைப் பற்றியும் போதனைசெய்து வருவதாகவும் அநேக தடவைகளில் பத்திரிகையில் வாசித்தேன். இவர் செய்து காட்டுவது நல்ல உதாரணமாகும். இந்த உதாரணத்தைப் பின்தொடர்ந்து இவர்போன்ற மற்ற கனவான்கள் செய்துவருவது கடமையாகக் கொள்ளுவார்களானால், ஜாதியாருக்குள்ளே பரஸ்பர சகவாஸமும் நன்மைகளும் பல படியாய் உண்டாகுமென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ந. முத்துச்சாமி.

## ஆயுர்வேதத்தின் வரன்முறையும் அதிகாரிகளும்

### வடமொழி தென்மொழி நூல்களும் தமிழ்நாட்டு வைத்தியமும்

தனு, கரண, புவன, போகம், என்னும் நான்கு சாதனங்களையும் பெற்றுள்ள, ஜீவன் முக்தர்களான, சித்புருடர்கள் மலைகளிலும், குகைகளிலும், வனங்களிலும் புடை சூழப் பெற்றிருந்த புண்யதேசமானது இவ் விந்தியா. இதிற் பண்டைக் காலமுதல் நோயற்று வாழ்வதற்கு வேண்டிய உபாயங்கள் பல விருந்ததாகவும், பல மகரிஷிகளுடைய பெருமுயற்சிகளால், அந்த உபாயங்கள் வெளிப்படையாகத் தேசமெங்கும் கையாளப்பட்டு வந்ததுடன் வைத்திய சம்பந்தமான அநேக கிரந்தங்கள் லோகோபகாரத்தை முன்னிட்டு அம்முனிவர்களால் இயற்றப்பட்டு, ஜனங்களுக்கு சுகாதாரமான ஆரோக்கியவழிகள் அநேகம் போதிக்கப்பட்டு வந்ததாகவும், மூர்நூல்களிலும் சிலசரித்திரங்களிலும், வெளியாகின்றன. இதனுடன் சம்ஸ்கிருதத்தில் மஹா பண்டிதராகிய, பிரம்ஹஸ்ரீ பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மாதந்தோறும் பிரசுரித்துக்கொண்டு வரப்படும் "வைத்திய கலாநிதி" என்னும் பத்திரிகையில் சாங்கோபாங்கமாக வரையறுத்துச் சொல்லப்பட்டும் வருகின்றன.

ஆதியில், ஔபதேநவர், நவதரணர், ஔரப்பர், பௌஷ்கலாவதர், கரவீரியர், கோபுரரக்ஷிதர், ஸுச்ருதர், முதலிய அநேகம் மகரிஷிகள், ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தைத் தாமே ஒரு நூலாக இயற்றாமல், "குருமுகத்தில்" கற்றறிந்து அநேக விதமாக விசாரஞ்செய்து உலகத்தில் அப்போதைக் கப்போதுண்டாகும் பற்பல வியாதிகளின் தத்துவங்களையும், அவற்றிற்கேற்ற சிகிச்சா முறைகளையும் சந்தேகமறத் தெரிந்துகொள்ள விரும்பி, ஹிமாலயம், பஞ்சாப் முதலான இடங்களிற் சபைகூடினார்கள். அக்காலத்தில் காசிராஜாவாகப் பிறந்திருந்த, "திவோதாசன்" என்னும் பெயரையுடைய "தன்வந்திரி"யை அத்தியக்ஷராக ஏற்படுத்திக்கொண்டு, அவரவர்க்குத் தெரிந்த அபிப்பிராயங்களை வெளியிட்டனர். இவர்கள் உபதேசித்த வைத்திய விஷயமான உபதேசங்கள் கருத்துடன் சிரவணஞ் செய்யப்பட்டு சரீரசாஸ்திரம்—ரோகநிதானம்—சிகித்ஸா தந்திரம்-திரவ்யகுணபாடம்-சத்திர சிகித்ஸை முதலிய அநேகவிதமான பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன.



சிகித்ஸை செய்யவேண்டிய விஷயத்தில் ரோகிகளின் சரீரநிலைமை, ரோகத்தின் ஸ்வரூபம், மூலிகை முதலியவற்றின் தன்மை, காலபேதம், தேசபேதம், அவனவனுக்கு இயல்பான வழக்கம் இவை முதலிய வற்றிற்குத் தகுந்தவாறு யுக்தியாகவும், சாஸ்திரீயமாகவும் வெகு எளிதில் உபயோகிக்கக்கூடிய உபாயங்களை உபதேசிப்பன வாகவும் நற்பயன் விளைவிக்கத்தகுந்தவையாகவும் இருக்கின்ற "சிநேகவிதி, ஸ்வேதவிதி, வமநம், விரேகம், நிரூஹவஸ்தி, அநுவாச நவஸ்தி உத்திரவஸ்தி, தூமபாநம், நஸ்யகர்மம், அஞ்ஜநம், கண்டூஷம், மூர்த்ததைலம்" முதலானவைகளும், வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நமது முன்னோர்களான மகரிஷிகளாற் கண்டுபிடித்திருக்கும் பிணிகளோ பல்லாயிரக் கணக்கானவையாம். இத்யாதி விஷயங்களையும் குருமுகத்தில் தொண்டுசெய்தும், வேண்டிய விசாரஞ் செய்தும், உபதேசம்பெற்ற பரம்பரையாம் ஆயுர்வேதத்தைக் கையாடி வருபவர்கள்மட்டும் "பண்டிதர்" என்னப்படுவார்கள்.

சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவரானவர் லக்ஷம் சுலோகங்களுடன் ஆயிரம் அத்தியாயங்களாகவும் (1) சல்யதந்த்ரம் (2) சாலாக்ய தந்த்ரம் (3) காயசிகித்ஸை (4) பூதவித்யை (5) கௌமாரப்ருத்யம் (6) அகத தந்த்ரம் அதாவது, விஷவைத்தியம் (7) ரஸாயன தந்த்ரம் (8) வாஜீகரண தந்த்ரம், என்னும் அஷ்ட பாகங்களாகவும், திருவாய்மலர்ந்தருளிய "ஆயுர்வேத"த்தைத் தன் புத்திரர்களி லொருவரான தக்ஷப்பிரஜாபதிக்குக் கற்றுக்கொடுத்ததாகவும், அவர்மூலமாக சாக்ஷாத் சூரியபகவான் புத்திரர்களும், விஸ்வகர்மாவின் தௌஹித்திரர்களுமான நாஸத்யன், தஸிரன் என்ற "அஸ்விநிதேவர்"கள் உபதேசம் பெற்றதாகவும், அவர்கள் தங்களை வந்தடுத்த இந்திரனைச் சீடனாக்கொண்டு உபதேசம் செய்ததாகவும் இந்திரன் உபதேசம் பெற்ற பின்னர் வைத்திய சாஸ்திரமானது வம்சபரம்பரையாய் வந்துகொண்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

### வடமொழி வைத்திய நூல் ஆசிரியர்கள்

பிரம்மா, தக்ஷப்பிரஜாபதி. அஸ்விநிதேவர்கள், இந்திரன், தன்வந்திரி, அகஸ்தியர், புலஸ்தியர், ஜநகர், அக்நிவேசர், பேளர், சௌமியர், மாண்டுகர்ணர், பராசர், அரீதர், ஆத்திரேயர், கௌதமர், காசிபர், கார்க்கியர், பாரத்வாஜர், ஸுச்ருதர், மநு, சுவாயம்புமநு, யாக்ஞியவற்கர், விஸ்வாமித்திரர், அத்திரி, காத்தியாயனர், வசிஷ்டர், வியாசர், பார்க்கவர், கண்ணுவர், போதாயனர், சங்கர், கபிலர், ஆபஸ்தம்பர், போஜர், காநாதர், சுகர், வாமதேவர், சதாதபர், ஆங்கிரஸர், சம்வர்த்தர், விஷ்ணு, கோகலர், சுமந்து, சூரியர், அருணர், தக்ஷர், நாராயணர், அரிச்சந்திரர், பத்திரவர்மர், சௌநகர், யோகாநந்தர், நவநாதர், ஆதிநாதர், வியாக்கிரமபாதர், சரகர், ஸ்ரீகண்டர், பாகடாசாரியர், க்ஷாரபாணி, ஜாதுகர்ணர், ஔபதேநவர், வைதரணர், கரவீர்யர் முதலியவர்கள்.

### தென்மொழி வைத்தியநூல் ஆசிரியர்கள்

அகஸ்தியர், புலஸ்தியர், திருமூலர், தருமசௌமியர், தேரையர், காலாங்கிநாதர், போகர், கொங்கணர், சட்டை முனிவர், ராமதேவர், மச்ச முனிவர், கமல முனிவர், ரோமரிஷி, கருரார், கோரக்கர், இடைக்காடர், சுந்தரானந்தர், பாம்பாட்டிச் சித்தர், அகப்பைச் சித்தர், மற்ற சித்தர் முதலியவர்கள்.

### வடமொழி நூல்கள்

ஆயுர்வேதம், உமாகலாஞானம், நந்தியம் ...யுர்வேத ...த்ரம், வைத்தோபதேசம், அஸ்வினி ஸம்ஹிதை, ...ணி, வைத்தியசாரம் திய சூடாமணி, வைத்திய சிந்தா... ...ர சங்கிரகம், வைத்திய வைத்தியாமிர்தம், வைத்தி... முத்தாவலி, திரவிய ரத்நாவலி, ரஸாயலம், வைத்தி... நிதானயோக ர...ாவலி, யோகரத்னவலி, நிதானமுத்தாவலி. ...ரோக்யசிந்தாமணி, திரிலோக்ய சிந்தாமணி சு...நதாமணி, சூத்திரஸ்தானம், சங்கல்பஸ்தானம், உத்தரஸ்தானம், சங்கியாநிதானம், ஆடகாங்கநிதானம், சாரகம், ஜீவரக்ஷாமிர்தம், குமாரதந்திர, சொஸ்தாரிஷ்ட..., யோகானந்தம், சசியானந்தம், காசியயம், சித்திசாரம், மதனகாம ரத்னகரம், ரத்ன ப்ரதீபிகை, யோகரத்ன சமுச்சயம், ரஸரத்ன சமுச்சயம், ரஸரத்ன சங்கியை, ரஸநிகண்டு, ரஸரத்னகரம், ரஸகௌமதி, ரஸஸாரசங்கிரகம், ரஸார்ணவம், ரஸவைசேஷிதம், ரஸப்ரதீபிகை, ரஸமூலகம், ரஸசூத்ரம், ரஸபேஷசல்பம், ரஸப்ரதிவிஷம், விஷப்ரதிவிஷம், கல்பேஷசம், கல்பபூ...ம். அக்கிர சங்கிரகணீயம், நித்யாநாதீயம், கோவிந்தபட்டீயம், ...ாசாரீயம், நவபாஷாண சித்திகை, சித்தநாகர்ச்சுனம், குசுமா... சல்லியதந்த்ரம், சிநொட்டியம் சாரீரம், திரவிய நிச்சய சாரசங்...கம், அனங்காங்கம், அஷ்டாங்க ...த்ஸா சாரசங்கிரகம் கந்தவாகம்,

கர்மாதிகாரம், ஞானபாஸ்கரம், ரோகநாடகம், காலஞானம், அபிதான ரத்னமாலை, மந்திரத்வம், சதகலோகி, பப்பதேவியம், சதகலோகி விசாரதம், பாகடசூத்திரம், மதனுரியோகம், திர்க்கஜீவந்தி, கல்பகத்தரு, சோகருநி நிகண்டு, அரீதமுனி அகதிரநிகண்டு, சகாலநிகண்டு தன்வந்திரிநிகண்டு, லாசங்கிரகநிகண்டு, பாலவிரோத்திரம், புலைப் பிரலிலாம், பத்தியாபத்தியம், நாடிச்சக்கரம், நாமதந்திராந்திரம், சாமுத்திரிகம், அய்காதிபாதம், சூபசாஸ்திரம், உற்பலபரிமளம், சிவதத்வாரத்நகம், பசவராஜீயம், தேவபாகம், சித்தபாகம், வீமபாகம், நளபாகம், விருக்ஷாயுர்வேதம். விஷகல்ப சாரசங்கிரகம், சாகேந்திர மணிதர்ப்பணம், கருடகல்பம், பிராணுவிர்தாரம், சதிரகசிய பரீக்ஷை, கொக்கோக சாஸ்திரசிகிச்சை, மேரிகர்ண விசிராந்தசாரம், சுசுருகம், மந்திர சாஸ்திரம், யந்திர சாஸ்திரம், லளிதம், அஷ்டாங்க ஹிருதயதந்த்ரம், பாஇதசங்கிரியை, சாருசரியம், விருக்ஷபீஜம், கஜசாஸ்திரம், அஸ்வசாஸ்திரம், கோசிகித்ஸை, மேஷசிகித்ஸை முதலியவைகள்.

## தென்மொழி நூல்கள்

அகஸ்திய பெருந்திரட்டு, ஆயுர்வேதபாஷியம், விரிநூன் மூவகைக்... டம், வைத்திய சிந்தாமணி, மணி நாலாயிரம், காவியம், ...ஜாலம், சத்திஜாலம் சண்முகஜாலம், வைத்தியக்கண்... வைத்தியரத்நகரம், வைத்தியம் (1500) வைத்தியம் (6..) கருமவிபாகம், கரிசல், சிந்தூரம் (300) பப்பமுறை (200) கண்டகம், பக்ஷணி, நாடி நூல், திருமூலர் திருமந்திரம், செ..திய சாகரம், ஆயுதவருக்கநூல், தேரையர்காப்பியம், சிகாமணி வெண்பா, அஷ்டசார நிகண்டு, சேகரப்பா, தரு, நாடகம், யமுகவந்தாதி, மஹாகுணபாடம், மிகாவண்ணம், நாண்மாலை யமுகவெண்பா, எதுகைபபா, பெருங்கரிசல், மருத்துப் பாரதம், தலைக்கிரபாலங்காரம். நீர்நிறக்குறி நெய்க்குறி, தைலவருக்கச் சுருக்கம், பிரதானகுணமூலித்தரு, வைத்தியப்பள்ளு நாடகம், சிகித்ஸைக்கிரமம், நோய்மருந்தளவை, காலாங்கிநாதர் பெருந்திரட்டு, குறுந்திரட்டு, போகர் ஏழாயிரக்காண்டம் ...பம் (700) உபசாரநிகண்டு, சிகித்ஸை வெண்பா, கொங்கணர் திரிகாண்டம், ச... மூனிவர் திரிகாண்டம், சரக்குவைப்பு ...வாத்னவைப்பு, ராமதேவர் பெருநூல், ம...முனிவர் எண்ணூறு, திராவகம் எண்ணூறு, கமலமுனி வைத்திய மூன்னூறு, ரோமரிஷி ஐந்நூற்றின் சூத்திரம், கருவூரார்திரட்டு, சந்தநாடகம், கோரக்கர் வைத்தியாங்கம், கல்பநிதானம், சுந்தரானந்தர் வைத்தியத்திரட்டு, இடைக்காடர் சாரீரம், அகப்பேய்சித்தர் வகார சூத்திரம், பாம்பாட்டிச் சித்தர் கருஞானம், சித்திராரூடம், எற்ற சித்தர் ஆருதாரசூத்திரம், பரிபாஷை நிகண்டு முதலியவைகள்.

இவைகளைக் குறித்துத் தொகை நூல்களில், அகஸ்தியர் செய்தருளிய வாதசாஸ்திரம் ஒரு லக்ஷம். வைத்திய சாஸ்திரம் இரண்டு லக்ஷம் மற்றவை சித்புருடர்கள் வைத்தியத்துடன் பல விஷயங்களையும் சேர்த்துச் சொல்லிய சாஸ்திரம் ஒரு லக்ஷம்—ஆகத் தமிழ் சாஸ்திரங்கள் நான்கு லக்ஷம் என்றும், சமஸ்கிருத வைத்திய சாஸ்திரக் கிரந்தங்கள் யாவும், எட்டு லக்ஷங்களாயிருந்தவைகளைச் சில பெரியோர்கள் நான்கு லக்ஷம் கிரந்தங்களாகச் சுருக்கி, அவைகளை யாக்கம், தாவரம், மிருகம், வைத்தியங்கம், முதலிய பன்முறையென்னும், நாற்பாலுக்கும் நான்கு பிரிவாக வகுத்திருக்கின்றனரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

## சமஸ்கிருத சாஸ்திரங்களின் நான்கு பிரிவுகளின் விபரம்

சக்ரநிதானம், சாமுத்திரிகம், தேகபேதம், அஷ்டபரீக்ஷை, நாடிலக்ஷணம், தோஷவேதம், சப்த தாதுக்களின் பேதம், அரிஷ்டாரிஷ்டம், முதலியவைகளைக் குறித்து இருபதினாயிரம், வாதாதிரோகம், தொந்த ரோகம், சத்தியோரோகம், கிரகரோகம், விரணரோகம், கிருந்திரம, விஷரோகம், தாவர விஷரோகம், சர்ப்ப விஷரோகம், கீட விஷரோகம் முதலியவைகளைக் குறித்து முப்பதினாயிரம், இவற்றின் சிகித்ஸைகளைக் குறித்து அறுபதினாயிரம், இலவருக்கம், நீர்வருக்கம், செடிவருக்கம், கொடிவருக்கம், புல் நெல் பயிர் முதலிய வருக்கங்களுக்கு உண்டாகின்ற ரோகங்களைக் குறித்து இருபதினாயிரமும் இவற்றின் சிகித்ஸைகளைக் குறித்து எழுபதினாயிரம் ஜலவருக்கம், அஸ்வவருக்கம், ரிஷபவர்க்கம, மேஷவர்க்கம், முதலிய வருக்கங்களுக்கு உண்டாகின்ற ரோகங்களைக் குறித்து முப்பதினாயிரம், இவற்றின் சிகித்ஸைகளைக் குறித்து ஐம்பதினாயிரம்: வைத்தியாங்கம், பாகசாலை, பாசனம், கலுவம், முதலிய துணைக்கருவி, கைபாகம், செய்பாகம், தீக்ஷை பாகம், சகுருடூட தூத லக்ஷணம், தீக்ஷாவிதி, பூஜாவிதி, மந்திரம், யந்திரம், அஷ்டகர்மம், அஞ்சனம், மறைப்பு, கரு, ஜாலம், கல்பம், காயசித்தி, யோகம், ஞானம், வாதம், குளிகை, முதலியவைகளைக் குறித்து லக்ஷத்திருபதினாயிரம்—ஆக நான்கு லக்ஷம் கிரந்தங்களாம்.



இவற்றுள், மனிதர்களின் ரோக நிதானங்களைக் கூறிய முப்பதினாயிரம் கிரந்தங்களை மாத்திரம் எடுத்துச் சுருக்கி பத்தாயிரம் கிரந்தமாக "சரக முனிவர்" தமது பெயரால் (சரகம்) என்னும் ஒரு சாஸ்திரம் செய்தருளினர்.

அந்நூல் வடமொழிப் பயிற்சியிற் சிறந்தவர்கட்கன்றி மற்றையோர்க்குப் பயன்படாதிருப்பது பற்றி இத்தமிழ் தேசத்தில் யாவரும் உணர்ந்துகொள்ளும் பொருட்டு சில சான்றோர்களுதவியைக்கொண்டு, அந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வசனமாக்கி, அதிற் சொல்லப்படும் பிணிகளின் பெயர்களுக்கும், சந்தார்த்தங்களுடன் வழக்க மொழிகளையுங் கலந்து, சந்தியும் பிரித்து அகஸ்தியர் முதலிய சித்த புருடர்கள் தமிழ்ச் செய்யுள்களிலுள்ள ரோக நிதானங்களின் விசேஷமானவைகளையும் வசனமாக்கி, தவசியம் சேர்க்கத்தக்க விடங்களில் (மதாந்தரம்) எனப் பெயரிட்டுச் சேர்த்தும் அந்தந்த ரோகங்களின் முடிவில், அவைகளுக்கேற்ற சிகித்ஸைகளையும் எடுத்துக்கூறி, முசனூலார் வகுத்த முறைமைப்படி (1) தோஷாதிபேத படலம் (2) சுரரோகபடலம் (3) ரத்த பித்த ரோகபடலம் (4) தாகரோகபடலம் (5) அஸ்மரிரோகபடலம் (6) அநாகரோக படலம், (7) விஸ்போட ரோகபடலம் (8) வாதரோகபடலம் (9) மகாவாதரோகபடலம் (10) அதிசூலரோக படலம் (11) உன்மாதரோகபடலம் (12) கர்ணரோக படலம் (13) விரணபேதபடலம் (14) விஷாதிபேத படலம் (15) கீடாதி பேதபடலம் எனப் பதினைந்து படலங்களும் அமைத்து ஆயுர்வேத பாஸ்கர ஸ்ரீமான் சுப்பிரமண்ய பண்டிதர் அவர்களால் லோகோபகாரார்த்தமாகத் தமிழில் ஜீவாக்ஷாமிர்தம் என்னும் அரிய நூல் செய்யப்பட்டிருக்கின்றது.

சென்னைச் சமஸ்தானப்பிரதேசத்தைச்சார்ந்த தமிழ் நாடுகளில் முக்கியமான இடங்கள்தோறும் ஓர் வைத்தியசங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, உலகத்தில் வைத்திய சம்பந்தமாக நடைபெறுகின்ற [வைத்திய போதினி— வைத்திய கலாநிதி— தன்வந்திரி] பிரசுரங்களிலும் மேற்கண்ட சமஸ்கிருத ஆயுர்வேத நூல்களிலும் யூனனிமுறைகளிலும் ஆங்கிலேய வைத்தியசாஸ்திரங்களிலும் உள்ள தத்துவங்கள் இன்னின்னவெண்பதை சுருக்கத்தில், சங்கைக விபரீதமற விசாரஞ்செய்தும், அபத்தசம் பெற்றும், ஔஷதங்கள் செய்யவேண்டிய பரிக்குவங்களையும் சுத்தமாய் செய்யவேண்டிய விதிமுறைகளையும், மிக்கதேர்ச்சியடைந்து வைத்தியமொன்றைத் தலையெடுக்க வேண்டியது அத்யாவசியமாகவிருக்க, நம் தமிழ்நாடுகளில் காலக்ஷேபஞ் செய்யவேண்டியதை முன்னிட்டு பாமரர்களான சிலர் கடைகளிலெங்கும் பார்த்தாலும் விற்பனைக்குத் தயாராகவிருக்கும் சாபநூல்களாகிய சில தமிழ் வைத்திய நூல்களை விலைகொடுத்துவாங்கி, அதிற் சொல்லியபடி பற்பசெந்தூரங்களை முடிக்கவகை தெரியாமல் பச்சை வெட்டு மருந்துகளைச் செய்து கையில் வைத்துக்கொண்டு யாத்திரைப் பையுடன் ஊர்நாடெங்கும் தலையிட்டுக்கொண்டு ஜனங்களுடைய பொருளைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்களென்பது லோகப்பிரசித்தம்.

இப்படிப்பட்ட தமிழ்நாட்டு வைத்தியர்கள் ஒவ்வொருவரும் வைத்திய கலாசாலைகளிற் கற்றுணர்ந்து பரிக்ஷைகொடுத்துப் பாஸ்பெற்ற பின்னர் தான் வைத்தியஞ் செய்யத் தலையிடவேண்டுமென்கிற ஓர் விதி யேற்படும்வரை தமிழ்நாட்டு வைத்தியர்களால் ஜனங்களுக்கிருக்கும் சஞ்சலம் நீங்கினதாக நினைக்க இடமேயில்லை. உண்மையுரைப்போன்.

---

## சமஸ்கிருத பாஷை

எல்லா ஜாதியார்களும் சமஸ்கிருத பாஷையில் தேர்ச்சியடையவேண்டுமென்று சுவாமி விவேகாநந்தர் போதித்ததாக பத்திரிகையில் எழுதியிருக்கிறீர்கள். இந்தப் பாஷையைப் படித்துக் கொடுப்பதற்குப் பாடசாலைகள் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறீர்கள். அதன் அருமையைத் தெரிந்து நடந்து கொள்ளுகிறவர்களைக் காணுமே! வீண் செலவுகளைச் செய்வதற்குத் தொடை தட்டுகிறவர்களைப் பார்க்கிறேனே யல்லாமல், நீங்கள் சொல்லும் சத்விஷயங்களுக்குக் கொடுக்கிறவர்களைப் பார்ப்பது அத்திப் பூவைப் பார்ப்பதுபோல இருக்கிறது. ஜாதி அபிமானம் உள்ளவர்களென்று விளங்கும்படி வேலை செய்கிறவர்கள்கூட நீங்கள் சொல்வதைவிட்டு வேறெதையோதான் செய்கிறார்கள். இதையெல்லாம் நெடுக யோசித்தால், உள்ள அபிமானமும் கெட்டுப் போய் ஆகிறது ஆகட்டுமென்று சும்மா இருக்கச் சொல்லுகிறது.

மா. சிந்தாமணி ஆச்சாரி.

## நமது வாசகர்கள்

### நமக்கெனவேண்டும்

நமக்கெனப் பல விஷயங்கள் வேண்டியிருக்கின்றன. அவை யில்லாமையினுல் நமக்கு அனேக கஷ்டங்கள் உண்டாகின்றன. அவை யிருந்தால் பல கஷ்டங்கள் தொலையும். நமக்கெனச் சத்திரங்கள் வேண்டும், பாடசாலைகள் வேண்டும், மடங்கள் வேண்டும், வித்தியா நிதிகள் வேண்டும், நமக்கெனப் புரோகிதர் வேண்டும், நமக்கெனப் பண்டிதர்கள் வேண்டும், பாகவதர்கள் வேண்டும், ஜில்லா உத்தியோகஸ்தர்கள் வேண்டும், இப்படிப் பலவும் வேண்டும். இவற்றினும் முக்கியமாய் நமக்கென வக்கீல்கள் வேண்டும், ஜில்லாவுக்கொருவக்கீ லிருந்தாலும் போதும். அப்படி யிருக்கும் பக்ஷத்திலும் நம்மவர்கள் பிற ஜாதியாரிடம் போய் தங்கள் கட்டுகளைக் கொடுத்துவிட்டு அவர்கள் நிர்த்தாக்ஷண்ணியமாய் ஆட்டும் ஆட்டங்களுக்கெல்லாம் அடங்கி அவஸ்தைப் படவேண்டி யிருக்கமாட்டாது. நமது ஜாதியார் விஷயத்தில் மற்றவர்கள் எல்லா விஷயத்திலும், விரோத மில்லாவிட்டாலும், அசட்டையா யிருக்கிறார்கள் என்பது சகஜம். நமக்கும் மற்றவர்களுக்கும் உண்டாகும் வியாச்சியங்களில் அந்த சுபாவத்தை இவர்கள் நம்மிடம் காட்டினுல் நமக்கு நேரிடக்கூடிய கஷ்டத்தையும் நஷ்டத்தையும் விவரிக்க முடியுமா? இதை யெல்லாம் பரிகாரஞ் செய்வதற்கு நமக்கென சொந்தஜாதியில் வக்கீல்கள் இருக்கவேண்டும். ஜாதிவிஷயமாய் ஏற்படும் வழக்குகளில் இவர்களுடைய அத்தியாவசியம் நன்ருகப் புலப்படுகின்றது. புலப்படுச் செய்யக்கூடிய தென்ன? பல சந்தர்ப்பங்களில் நாம் எந்த ஜாதி வக்கீலிடத்தில் கட்டைக் கொடுக்கிறோமோ அந்த ஜாதியைப் பற்றியே விரோதமாய்ச் [illegible] விரோதமாக வாதிக்கும்படி கேட்கவும் நேரிடுகின்றது. [illegible]பத்துகளில் நம்மவர்களுடைய பரிதாப நிலைமையை நினைக்க மிகவும் துக்கமுண்டாகிறது. பல ஜில்லாக்களிலிருந்தும் அப்பீல்கள் ஹைகோர்ட்டுக்குச் செல்லுகின்றன. இவ்விதமாய் அப்பீல் செய்பவர்கள் நமது ஜாதியில் இந்த ராஜதானியில் பலரிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட கேசுகள் அடிக்கடி ஹைகோர்ட்டில் விசாரணைக்கு வருகின்றன. அவற்றில் வகாலத்து வாங்கிக்கொள்வதற்கு நமது சொந்த ஜாதியாராய் ஒரு ஹைகோர்ட்டு வக்கீ லிருந்தால் நமது வம்சத்தார் எவ்வளவு சந்தோஷ மடைவார்களென் பதை எண்ணிப்பாருங்கள். இவ்விதமாக ஒரு வக்கீல் இருப்பாராஞல் அவருக்கு வெளியூர்களி லிருந்து அழைப்பு அடிக்கடி வந்துகொண்டே யிருக்கும். அதஞல் அவருக்கு நல்ல வருமானமும் பெருங் கியாதியும் கிடைக்கும். நமது வம்ஸத்தார் இந்த பதவிக்குத் தயாராகாதது வம்ஸத்துக்கே ஒரு பெரிய குறையென்று சொல்லவேண்டும். நம்மிலும் கல்வியிலும், நாகரீகத்திலும், செல்வத்திலும் தாழ்ந்தவராயுள்ள பலஜாதிகளிலும் வக்கீல்களிருக்க, நமது ஜாதிமட்டும் இப்படிக் கேவல ஸ்திதியில் இருப்பது மிகவும் பரிதாபம். ஆதலால், படிப்பிற்கு லாயக்கா யிருக்கிற ஆண் பிள்ளைகளையுடைய பெற்ரோர்கள் எல்லாம், தமது புத்திரரை ஹைகோர்ட்டு வக்கீலாகச்செய்வதற்கு ஆரம்பத்திலிருந்தே பிரயாசைப் படவேண்டும். அப்படி வக்கீல் பரீக்ஷைக்குப படிக்கப் பிரியமும் புத்தியும் உள்ளவர்களுக்கு வம்ஸத்தார் பொருளுதவி செய்து அவர்களை முன்னேற்றிவிடவேண்டும். இந்த பதவியை முதன்முத லடைகிறவருக்கு மிகுந்த சிரேயஸ் உண்டாகுமாதலால், இதற்குப் போட்டாபோட்டி செய்யவும் வேண்டும்.

கோவில்பட்டி.

### இப் பத்ரிகை

சிலகாலமாகக் கைக் கெட்டாதிருந்த இப்பத்ரிகை கிடைத்ததும் எனக்கும் என்போன்ற மற்ற பல சந்தாதாரர்களுக்கும் உண்டான குதூகுலம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. பத்திரிகையைப்போல் இக்காலத்தில் மனிதகோடிகளுக்குப் பயன் தருவது வேறொன்றும் இல்லை. அதைப்போல் அத்தியாவஸ்யமானதும் வேறில்லையென்றும் சிலரால் கொண்டாடப்படுகிறது. ஊண் உறக்கம் இல்லாமலும் காலங் கழிக்க முடியுமே யல்லாமல் பத்ரிகையைப் பாராமல் ஒருநாள் கழிக்கக் கூடவில்லை யென்று கனவான்கள் பலர் கூறக் கேட்[illegible] வ்வளவு அருமைக் கிடமானதாகிய தோர்பத்திரிகை நமது சபையாரால் ஆரம்பமாகி நடத்தப்பட்டுவருவதில் நமது குலத்தார் பலர் அடைந்திருக்கும் ஆனந்தத்திற்கு அளவே கிடையாதென்று சொல்லிவிடலாம். இனிமேல் நமது ஜாதிக்குக் குறையில்லையென்று இன்ப மடைந்தவர்களெத்தனையோபேரை நான் அறிவேன். இப்பத்திரிகையில் குலச் சீர்திருத்தத்திற்கு மிகவும் முக்கியமான விஷயங்கள் அநேகங்களமில்லாமலும் மறைவில்லாமலும் குல சிரேஷ்டர்கள் அநேகரால் அடிக்கடி எழுதப்பட்டு வருவதைக் கண்ட இதர ஜாதியார்கள்கூட உங்களுடைய முன்னேற்றம் இனி கைகூடுதல் மிகவும் சுலப சாத்தியமென்று சொல்லிவரலாயினர். இவ்வித விசேஷங்களினுல் இப்பத்திரிகையை வாசிப்போர் தொகை நாளுக்குநாள் அதிகமாகி வரலாயிற்று. புதிது புதிதாய்ப் பலபேர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டுமென்று ஆவல் கொள்ளலாயினர். இதனுல் அநேக சீர்திருத்தங்கள் நமது குலத்தார்க்குள் உண்டாகத் தலைப்பட்டன. குலத்தின் குறைகளின்னவையென்று குல ஜனங்கள் கண்திறந்து காணத் தொடங்கினர்கள். இக்குலத்தில் இத்தென்னுட்டில் நிகழக் கூடியவையென்று கனவிலும் நினைக்கப்படாதவையெல்லாம் நிகழ நேர்ந்தன. குலவாசனையென்பது சற்றேனும் பெற்றிராத பேர்களெல்லாம் பெருங்குலாபிமானிகளாக எண்ணி அருங் காரியங்களைச் செய்யவேண்டுமென ஆசைகொள்ளலாயினர். இப்படிப் பல மகத்தான காரியங்களைச் சாதித்துவரும் நமது பத்திரிகையின் பலன்களை இன்னும் பல்லாயிரம் பேர்கள் அடைந்தனுபவிக்க நேராதது பெருங் குறையல்லவா? இக்குறையை நீக்கவேண்டியது குலஜனக் கடமையல்லவா? இந்தக் கடமையை நிறைவேற்றினுல் இப்பத்திரிகை சுஜாதியை மேம்படுத்தும் கடமையை நிர்வகித்து படிப்படியாய் குலஜனங்களை அவர்களுடைய உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி சற்போதனை செய்து நம்மவர்களுக்கு நன்மைகள் பலவற்றையும் உண்டுபண்ணி வைக்குமல்லவா? இந்த ஞாபக மட்டும் இருந்தால் நமது பத்திரிகையை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் மாதம் குறைந்தது ஒரு புது சந்தாதாரரையாவது சேர்த்துக் கொடுக்க முடியுமல்லவா? இவ்விதமாகச் சந்தாதாரர்கள் சேருவார்களேயாஞல், எல்லோரும் ஊக்கங்கொண்டு உழைத்து முன்னுக்கு வரலாம். ஆதலால், குல ஜனங்களெல்லாம் ஒருமனதாய் இப்பத்திரிகை அதிகம் பரவுதற்கான முயற்சியை உற்சாகத்துடன் செய்து, ஜாதியாருடைய நன்மதிப்பையடைவார்களென்று விஸ்வேஸ்வர பகவானை மனமொழி மெய்களால் தொழுகின்றேன், சுபம்.

பத்திரிகைப் பித்தன்.



### குல சேவை

தேச சேவைக்காகவும், பாஷா சேவைக்காகவும், மத சேவைக்காகவும் அங்கங்கு சங்கங்கள் ஏற்பட்டு வருவதைப் பற்றி பத்திரிகைகளில் படிக்கிறோம். குல சேவைக்காகவும் சபைகள் ஏற்படுகின்றன. இவ்விதம் நமது குலத்திற்கேற்பட வேண்டுமென்று இப்பத்திரிகையில் ஒரு காலத்தி லெழுதப்பட்டது ஞாபகமிருக்கிறது. இதுபோல் செய்யத்தக்கனவாக எடுத்துக்காட்டப்பட்ட விஷயங்கள் அனந்தம். அவற்றில் கான்பரன்ஸ் அவஸ்யமும் ஒன்றென்பது இப்பத்திரிகையை முதலிலிருந்து வாசித்து வந்தவர்களுக்குத் தெரியும். ஒவ்வொன்ருக ஒப்பேறிவருதலைக் காண பத்திரிகை வாசிப்போர் சந்தோஷப்படுவார்களென்பது நிச்சயம். ஆனபோதிலும்; குலசேவா சங்க விஷயம் மற்றெல்லா விஷயங்களிலும் மிக முக்கியமானதென்பது சொல்லாமலே புலப்படும். இவ்விஷயம் கான்பரன்ஸில் முதன்மையாக ஆலோசிக்கப்படவேண்டிய அருமையும் பெருமையும் கொண்டதாயிருந்தபோதிலும், இதைப் பாராட்டிப்பேசி நிலைநாட்டினதாக எனக்குத் தோன்றவில்லை. இப்படி விடப்பட்ட விஷயங்கள் அனந்தமென்பதும் இப்பத்திரிகை வாசிப்போர்க்குத் தெரியவரும். போகட்டும். நடந்த கான்பரென்ஸ்களிலிருந்து அவ்வளவு எதிர்பார்ப்பது வீண். என்ருலும், என் அங்கங்கிருக்கும் குலத்தலைவர்கள் குல சேவா சங்கங்களைக் கூட்டிவைக்கலாகாது? சிறுவர்களைச்சேர்த்து அவர்களுக்குள் குலாபிமானம் புகுத்தி வழிகாட்டி விட்டுவிட்டாலே போதுமே! சிறுகச் சிறுக வாவது ஆரம்பஞ் செய்துவிட்டா லல்லவோ வேலை நடந்து கொண்டிருக்கும்?

– து. பஞ்சாக்ஷா ஆச்சாரி.

### வித்யாநிதி

இதுதான் நமக்குப் பிரதமத்தில் வேண்டியது. இதற்காக நமது சபையார் வருஷாவருஷம் தீபாவளிகாலத்தில் தண்டல்செய்து வந்ததை ஓரிரண்டு வருஷங்களாக நிறுத்திவிட்டது பெரும் பிசகென்றுசொல்ல[illegible] பலவிதங்களிலும் பொருளைத்திரட்ட[illegible] பிள்ளைகளுக்கு கல்விபோதனை [illegible] கடமையில் எவருக்கும் இம்[illegible]வாகலும் அசட்டை யிருக்கவே கூடாது. இருந்தால் ஜாதி அழிந்தேபோய்விடும். இது வித்யா காலம். வித்தைவேண்டும், வித்தை வேண்டுமென்று வெறிகொண்டனபோல் ஆணும்பெண்ணுமாக அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டுமா அசட்டையுண்டாகவேண்டும்? ஐயையோ! அசட்டை செய்தால் குடிகெட்டே போய்விடும். இந்த வருஷமாவது இவர்கள் தண்டல்செய்து பொருள்சேகரிப்பது

நல்லது. தீபாவளி போய்விட்டதே யென்று திகில்பட வேண்டாம். அதைவிட விசேஷமான காலமாகிய சங்கராந்தி சமீபத்தில் வருகிறது. அதில் மூன்றாவது நாளாகிய காண்பொங்கல்தினத்தில் தண்டல்செய்தால் நல்லபணஞ்சேரும். அதற்காக இப்போது முதற் கொண்டே பிரயத்தினஞ் செய்யவேண்டும். ஒவ்வோ ரூராரும் சபையாருக்கு சகாயமாயிருக்கவும் வேண்டும்.

திருநெல்வேலி.

## பஞ்சப்பிரம்ம யாகம்

காஞ்சீபுரத்தில் செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருந்த பஞ்சப்பிரம்ம யாகம் தவறிப்போன விஷயம் பத்திரிகை மூலமாய்த் தெரிந்தது. இந்த யாகத்திற்கு சாஸ்திராதார மில்லையென்று வித்வசிரேஷ்டராகிய ஜோஸ்யர் மூத்தாச்சாரியாரவர்கள் எழுதியிருந்தார்கள். இந்த யாகத்தை செய்வதற்கு அவ்வூராராவது மற்ற வூரார்களாவது பிறகு பிரயத்தினப் பட்டதுண்டா வென்றும், பிரயத்தினப் பட்டதுண்டானால் சீக்கிரம் எங்கேனும் நடைபெறுமாவென்றும், நடைபெறுமானால் எங்கு நடைபெறுமென்றும், எப்போது நடைபெறுமென்றும் தெரிந்தவர்கள் பத்திரிகை மூலமாக எழுதியறிவிக்க வேண்டுகின்றேன். ஏனென்றால், இந்த யாகத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் எனக்கு மிகவும் அதிகமாயிருக்கிறது.

அண்ணாமலையான்.

## மரணம்

கும்பகோணம் புதுப்பாளையத் தெருவில் வசித்தவரும், சதா தனது ஆயுள்பரியந்தரும் குலத்திற்கே பாடுபட்டிருந்தவரும், விசுவப்பிரம்ம மஹாஜன (லி-ட்) சபையின் மாஜி காரியதரிசியும், ஸ்ரீ த. கு. சுந்தரமாசாரியாரவர்கள் சென்ற 2-11-16உ யாகிய வியாழன் இரவு 8-மணிக்கு ஸ்ரீரங்கத்தில் காலவியோகமானார். வக்காலத்தில், குடந்தையிலுள்ள பந்துக்களும், திருச்சி ம...டையிலுள்ள முக்கியாதிகாரிகளும், சபையின் காரியதரிசி ஸ்ரீ டி. வ. முத்துகிருஷ்ணசாரியாரவர்களும் வந்திருந்தனர். ஸ்ரீ...கம் காரியஸ்தர்களில் ஒருவரும் ஷையார் குமாரருமான ஸ்ரீ த. கு. ...கப்புசாமி பத்தரவர்களால் சகல சடங்குகளும் நடத்தப்பட்டு அடக்கஞ் செய்யப்பட்டது. இவ்விஷயம் தமது சொந்த வூரிலுள்ள நாட்டாண்மை அதிகாரிகளுக்கும், சபையின் அதிகாரிகளுக்கும், தந்தி மூலமாய் அறிவிக்கப்பட்டது. இவர் குடந்தையில் இறந்திருப்பாரானால் ஜனங்களுக்குள்ள கிளர்ச்சி நன்றாய் புலப்படுமென்பதுதான் ஓர் வித குறை.

வி. சோமசுந்தர ஆச்சாரியார்.

## சோழ சக்கரவர்த்திகள்

வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரித்துறையும் மற்ற இருபாலும் இரு கடலே எல்லையாகவுடைய பழைய தமிழ்நாட்டிலே சேர சோழ பாண்டியர்கள் என்னும் மூன்று குலத்து அரசரும் தொன்று தொட்டு நெடுங்காலம் செங்கோல் செலுத்தி தமது புகழ் நீடுழி நிலைக்கச் செய்தார்கள். ஆயினும், அப்பெருந்தகை மன்னர் மரபின் வரலாறும் அரசாண்டகால வரையறையும் முழுவதும் தொடர்ச்சியாய் எங்ஙனமும் புலப்படவில்லை. தமிழ்ப் புலவர் தாம் இயற்றிய செய்யுட்களில் ஆங்காங்குச் சில மன்னர் பெயரும் அவரது வீரமும் தியாகமும் நாட்டின் வளமும் நகரச் சிறப்பும் பாக்கக்கூறினரேயன்றி அவ்வரசர் தந்தை தாய் முன்னோர் பின்னோர் இன்னார் என்றும், முடி சூடியதும் முடி நீங்கியதும் இன்ன சகாப்தத்தில் இன்ன ஆண்டு என்றும் பகாரது ஒழிந்தார்கள். பழைய கோயில்களின் மதிற்புறத்துள்ள கல்வெட்டுகளாலும் செப்பேட்டிலே பண்டு வரைந்துள்ளதான பத்திரங்களாலும் சில வேந்தர்காலத்து நடந்த அரிய செய்திகள் பலவற்றால் அறியலாகும். இவ்வகையான ஆதாரங்களைக்கொண்டு தமிழ்நாட்டு சரித்தை நுட்பமாக ஆராய்ந்து நோக்கிற் சோழ அரசரின் சிலர் தம்முடைய சோழமண்டலத்தோடு புறமண்டலங்களையும் கைப்பற்றி ராசராசர்கள் சக்ரவர்த்திகள் எனப் பெரும்பெயர் எய்தி மிக்க வல்லமையோடும் அரசாண்டதாகத் தெரியவருகின்றது.

எண்ணூறு வருஷத்திற்கு முன்னே திரிபுவனச் சக்ரவர்த்தி எனப் பட்டம் வகித்து வேங்கை நாடு, தொண்டை நாடு, சோழ நாடு, கொங்கு நாடு, பாண்டி நாடு என்னும் ஐந்து மண்டலங்களுக்கும் அரசனான குலோத்துங்க சோழன் பேரில் ஜயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியின் சோழபாரம் பரியம் சுருக்கமாகக் காணலாம். நாரதமுனிவன் இயம்பக் கரிகாற் சோழன் அப்பாரம் பரியத்தை மேருமலையின் புறத்தே எழுதினதாகப் புலவர் கற்பிதமாகப் புகன்றனர்.

கலிங்கத்துப் பரணி 8-வது இராஜவம்ச பாரம்பரியப் பாடல்களில் சூரியவம்சத்து அரசரில் சூரியன் முதலாகச் சிபிசூக்ச் சிலரைக் குறிப்பிட்டார். பின்னரச் சோழமண்டலம் ஆதியில் அமைத்தது சுராதிராஜன் என்னுஞ் சோழன் என்றார். அவ்வேந்தன் வழியிற்றோன்றிய அரசர் ஒருவர் ராஜகேசரி என்றும்



அடுத்தவர் பரகேசரி என்றும் மாறிமாறிப் பட்டம் தரித்து வந்ததாகவும் கூறினர். பின்னிட்ட சோழர் பெயரைச் சொல்லாது அவரது பராக்கிரமத் தொழிலை மாத்திரம் குறிப்பிட்டார். அம்மன்னர் வரன்முறை.

1. சுராதிராஜன்
2. காலனுக்கு இது வழக்கு என உரைத்தவன்
3. காவிரிப்புனல் கொணர்ந்தவன்
4. அகிலலோகமும் வென்றுகொண்டவன்
5. புலி எனத் தனது கொடியில் இந்திரனை வைத்தவன்
6. புணரி ஒன்றினிடை ஒன்று புகவிட்டவன்
7. தன் குருதியை வலிதினில் அளித்தவன்
8. வரதராசனைப் பணிகொண்டவன்
9. தூங்கு எயில் எறிந்தவன்
10. விமானம் வான்மிசை உயர்த்தவன்
11. பாரதப்போர் முடியும் வரையும் தருமனுக்கு உதவி செய்தவன்
12. நாகர் மகளைக்கொண்டவன்
13. களவழிக்கவிதை பொய்கையார் பாட உதிய மன்னவன் காலிற்றளையை வெட்டி அரசு இட்டவன்
14. காவிரிக் கரைகட்டி முகரியை அழித்துக் குருமியை வென்று பட்டினப்பாலை என்னும் பாடப்பெற்ற கரிகாலன்
15. உதியரோடும் மதுரை மன்னரோடும் இகல் விளைத்தவன்
16. வேதம் ஒன்று உகைத்து வென்றவன்
17. ஈழமும் கூடலும் சிதைத்தவன்
18. உதியர் மண்டலத்திலே உதகையை வென்றவன்
19. கங்கைக் கரையிலே மண்ணையும் கடாரமும் கொண்டவன்
20. கம்பிலியிலே ஜயத்தம்பம் நட்டுக் கல்யாணரைக் கட்டறுத்தவன்
21. கொப்பையில் வென்றவன்
22. அறங்களிக்க வளர்த்தவன்
23. குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்றவன்
24. கிரிவரையும் ஆணை செலுத்திய அபயன்

இப்பாரம் பரியத்தோடு கல் வெட்டிலும் செப்பேட்டிலும் சொல்லப்பட்ட சோழர் வரலாற்றை ஒத்து நோக்கின் பாரம் பரியத்தில் அநேக மன்னரை இடை இடையே விட்டு விட்டதாகத் தோன்றும். அல்லாமலும், ஜயங்கொண்டார் பெயர் கூறாதுவிட்ட அரசர் பெயரும் அறியலாகும். இலங்கை, மதுரை அரசரை வென்றவன். (17-வது) வீர நாராயண சோழன் உதகையை வென்றவன். (18-வது) ராஜராஜன் கங்கையும் கடாரமும் கொண்டவன். (19-வது) ராஜேந்திரன் கொப்பையில் வென்றவன். (21-வது) மற்றொரு ராஜேந்திரன் கூடற்சங்கமத்து வென்றவன். (23-வது) வீர ராஜேந்திரன் இவர்களுக்குள்ளே முதலாகிய வீர நாராயணசோழன் தந்தை ஆதித்த சோழன் என்றும் அவன் தந்தை விஜயாலயன் என்றும் கொங்குதேச அரசர்கள் கதையினாலும் வீர நாராயணன் காலத்து வரையப்பட்ட செப்பேட்டினாலும் விளக்கமாகும். இங்கு கூறிய விஜயாலயனுடைய சந்ததியாரே சக்கரவர்த்திகள் என்று பட்டம் தரித்தவர்களாகையால் விஜயாலயன் முதற்கொண்டு சோழ சிம்மாசனத்தில் வீற்றிருந்த வேந்தர் சரிதையை உரைப்பாம்.

### விஜயாலயன்

கி. பி. 830—850

சம்பந்த மூர்த்தி சுவாமிகள் காலத்திற்கு முன்னரே காஞ்சீபுரத்திலே அரசாட்சி செய்த பல்லவராஜன் அளவிறந்த படை யெடுத்துவந்து சோழ மன்னனோடு கடும்போர்புரிந்து காவிரிநாட்டைக் கவர்ந்துகொள்ள சோழன் தன் அரசிழந்து மதுரைக்கு ஒளித்தோடிப் பாண்டியன் இடத்தில் அடைக்கலம் புகுந்தான். அன்று தொட்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாள் வரையிலும் சோழநாடு பல்லவன் ஆணைக்கு உட்பட்டு இருந்தது. ஷை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிலே திருத்தொண்டத் தொகை பாடும்பொழுது,

கடல்சூழ்ந்த வுலகெல்லாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார் நம்பியிடங் கழிக்குத் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்

என்று ஓதியமையால் அவர் காலத்திலே கோச்சிங்கப் பல்லவன் சக்ரவர்த்தியாகவும் சோழன் மரபினராகிய இடங்கழியார் கொடும்பாளூரிலும் வேளாண் குலத்தவராகிய செருத்துணையார் தஞ்சாவூரிலும் அவனுக்குத் திறைகொடுக்கும் சிற்றரசராகவும் இருந்தார் என்பது தோன்றும். இடங்கழியார் பாண்டிநாட்டுக்கும், சோழ நாட்டுக்கும் இடையே உள்ள கோனாட்டிலே அரசனாயினர்.

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பலமுகடு
கொங்கிற் கனகமணிந்த வாதித்தன் குலமுதலோன்
றிங்கட் சடையர் தமரென்செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவனிருக்கு வேளூர்மன் னிடங்கழியே.

என்னும் திருத்தொண்டர் திருவந்தாதி 56 ம், பெரிய புராணத்தில் இடங்கழிநாயனார் புராணமும் பார்க்க.

மழையின் வளம் பெருது வெய்யில் வெப்பத்தினால் வறண்டுகிடக்குங் கான்ஆறும் கல் அதரும் செறிந்த காடுகளும் வழிபறி செய்தும் அயல் ஊர்களைச் சூறையிட்டும் வாழும் கொடுந் தொழில் எயினர் இருக்கை பலவும் உள்ள அந்தக் கோனாட்டின் நடுவிலே கொடும்பை என்னும் நெடிய ஏரியின் அருகே விளங்கிய ஊர் கொடும்பாளூர். அவ்வூரிலே அரசனாயிருந்த இடங்கழியார் வழியிலே தோன்றினன் விஜயாலயன். இவன் இளமையிலே சிற்றரசுசெலுத்திய காலத்திலே பல்லவராஜன் மாராட்டிர மன்னனுக்குத் தோற்றான் என்று கேள்வியுற்றுத் தஞ்சாவூருக்குச் சென்று தன் குலத்தாருக்குத் தாயமான சோழநாட்டைத் தனது கைவசப்படுத்தினான். இதற்கு முந்தியே காவிரியாற்றுக்குத் தெற்கே சோழநாட்டைச் சேர்ந்த சில ஊர்களைப் பாண்டியன் ஆண்டுவந்ததினால் அவ்வூர்களை மீட்டுக்கொள்வதற்கு விஜயாலயன் தனது படையைத் திரட்டிப் பாண்டியன் மேற் சென்றான். முரசுமுழங்கவும் பேரியம் ஆர்ப்பவும் புலிக்கொடி விளங்கவும் தனது முடியிலே ஆத்திமாலையை அணிந்து கடல்மேலுந் தானையை ஏவிப் பாண்டிநாட்டிற் படர்ந்துசெல்ல மீனக்கொடியை உடைய வரகுணபாண்டியன் வெகுண்டு எழுந்து தன் போர்வீரரை விரைவாய்ச் சேர்த்துச் சோழனை எதிர்த்தான். மூண்டபோரிலே சோழன் சேனை உடைந்து ஓடுவதைக் கண்டு வரகுணன் பின்பற்றித் தொடர்ந்து காவிரியின் தென்கரை அடைந்தான். அவ்விடத்திலே சிலகாலந் தங்கி திருவிடைமருதூரிலே உள்ள சிவாலயத்திலே மேற்குவாயிற் கோபுரம் அமைத்தான்.

இப்பொழுது மைசூர் என்று வழங்கும் தேசத்தில் கிழக்குப் பாகமாகிய கங்கபாடிக்கு அரசனான பிரிதிவிபதியோடு ஸ்ரீபுரம் என்னும் இடத்திலே வரகுணன் யுத்தஞ்செய்து அவனை கொன்றான். பின்பு தில்லைக்குச் சென்று அங்கு சிவபிரானை வணங்கித் திருப்பணி பலவுஞ்செய்து மதுரைக்குத் திரும்பினான். வரகுண பாண்டியனுக்குப் பிற்பாடு வேறு பகைஞரால் வருத்தம் அடையாது விஜயாலயன் தஞ்சாவூரிலே செங்கோல் செலுத்திப் பல ஆண்டு கழித்து இறந்தான்.

விஜயாலயன் காலத்திலே மாராட்டிர மன்னனாயிருந்தவன் ஸர்வன் அல்லது அமோகவர்ஷன் என்பான். அவ்வேந்தனுடைய அன்பு பெற்றிருந்த ஜினசேனன் என்னும் சமணமுனிவர் மஹா புராணத்தின் முதற் பாகமாகிய ஆதி புராணத்தை எழுதிமுடித்தார்.

சோழநாட்டிலே தில்லையும், திருவிடைமருதூரும், குடமூக்கு அல்லது கும்பகோணமும் புகழ்பெற்ற சிவஸ்தலங்களாய் இருந்தன. விஜயாலயன் சிற்றரசனாய் இருந்த காலத்திலே ஆதிசங்கராச்சாரியார் தில்லையும் திருவிடைமருதூரும் கும்பகோணமும் தரிசித்து இந்துதேசத்தில் வேறு பல ஸ்தலங்களுக்குஞ் சென்று சாரீரபாஷ்யம் முதலான வேதாந்த நூல்களை ஆரிய பாஷையில் எழுதி என்றும் அழியாக்கீர்த்தி பெற்றனர். விஜயாலயன் சோழநாட்டை அரசாண்டது சற்றேறக்குறைய கிறிஸ்திய ஆண்டு 830-850-க்கு உட்பட்டு இருக்குமென்று ஏற்படுகிறது.—செந்தமிழ். K.T.A.

## கால்நடை விருத்தி

### விவசாயகாலண்டர்

வேலைக்கான மாடுகள் எங்கும் கிடைப்பதரிதாயிருப்பதால் அவைகள் விலை உயர்ந்து விற்கும் இக்காலத்தில் சென்னை ராஜதானியில் மாடு பெருத்துக் கஷ்டமே தவிர மாட்டுப் பஞ்சம் இல்லையென்று சொன்னால் விபரீதமாய்த்தான் தோன்றும். எந்தக் கிராமத்தையோ அல்லது அதன் மதருக்களையோ போய்ப் பார்த்தால் இளைத்து சிறுத்து இனைஜாதி என்று சொல்லுவதற்கில்லாத அநேக கால்நடைகள் அநேகமாய்ப் புல்லே இல்லாத ஊர் மந்தைகளில் ஏதோ உயிர் பிழைத்துக்கொண்டிருக்கக் காணலாம். சொந்தக்காரனுக்கு உருப்படி ஒன்றுக்கு வருஷத்திற்கு ஒரு வண்டி அல்லது இரண்டுவண்டி எரு கிடைத்துக்கொண்டிருந்தாற் போதுமென்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே யொழிய மற்றப்படி அதெப்படிப்போனால் என்னவென்று கவனியாமல்தான் விட்டிருக்கிறார்கள்.

2. "நாடுதனு" (அதாவது நாட்டுமாடு) என்று சொல்லும் மாடுகளையும் "தொட்டதனு" என்று சொல்லும் பெரிய குடித்தனக்காரர்கள் வைத்திருக்கும் பெரிய மாடுகளையும் ஊர் மந்தைகளில் கலந்து மேயவிட்டிருப்பதால் உண்டாகும் பெரிய தீங்கென்னவென்றால் நல்ல வர்க்கம் விருத்தியாவதற்கில்லாமல் நல்லதும் கெட்டதும் கலந்த இருபிறவி மாடுகள் பெருத்துக்கொண்டு வருவதுதான்.

3. குடியானவர்களில் பெரும்பாலோருக்கிருக்கும் தப்பெண்ணத்தினால் வேலை பழகுகிற வயது வருமளவும் காளைக்கன்றுகளை 3-வது அல்லது 4-வது வருஷம் வரை காயடிக்காமல் வைத்திருக்கிறார்கள். இந்த வயது பற்றாத இளங்கன்றுகள் ஊர் மந்தைகளோடு மேய்ந்து வருகின்றன. அநேகமாய் ஊர் பசுக்களுக்கெல்லாம் காளைசேர்க்க இவைகளையே அடிக்கடி உபயோகப்படுத்துகிறார்கள். இதனாலே இளமாடுகள் நாளுக்கு நாள் கீழ்க்கே போய்க்கொண்டிருப்பதாச்சரியமல்ல. மாட்டை விருத்தி செய்யவேண்டிய முறைகளை குடியானவர்கள் நன்றாய் தெரிந்துகொண்டிருக்கும் காங்கயம், ஓங்கோல், மைசூரைச் சேர்ந்த சில தாலூகாக்கள் இவைகள் தவிர, பெரும்பாலும் மற்றெல்லா ஜில்லாக்களில் எல்லாப் பிராயத்து மாடெல்லாம் நாளுக்கு நாள் கீழ்க்குப்போய்விடுவது ஆச்சரியமல்ல.

4. ஊர்மாடுகளுக்காக கோயில்மாடென்று வழங்கும் நல்ல காளை ஒன்றை பெரிய குடித்தனக்காரர்கள் விடும் வழக்கம் சென்டிரல் டிவிஷனில் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் இக்குறையை நிவர்த்திக்க சர்க்காரிலும் விவசாய சங்கங்களிலும் பொலிமாடு வைக்க ஏற்பாடாயிருக்கிறது. நல்லதும் பொல்லாததும் பெரிதும் சிறிதுமான எல்லாவிதமான காளைக் கன்றுகளையும் செவ்வையாய் காயடியாத எருத்துமாடுகளை ஊர் மந்தைகளில் கலந்து மேயவிடும் கெட்ட வழக்கத்தால் பொலிச்சலுக்கென்று தனிக் காளைகள் வைத்திருப்பதில் பிரயோஜனமில்லாமல் போய்விடுகிறது.

5. சர்க்கார் தரப்பிலோ அல்லது ஏதோ ஒரு பொது பண்டிலோ செலவு செய்து வைத்திருக்கும் பொலிச் சற்காளையை யாரும் கவனித்துப் பாதுகாப்பதாய்த் தோன்றவில்லை.

6. மணிலாக் கொட்டைபோன்ற ஆதாயமுள்ள புதுப் பயிர்களை பயிர் செய்வதாலும் ஜனத்தொகை விர்த்தியாய்க் கொண்டுவருவதாலும் முன் ஊர்மாடுகள் மேய்ந்துகொண்டிருந்த தரிசெல்லாம் இப்போது மிகக் குறைந்துவிட்டன.

7. மாட்டிற்குப் பேர்போன ஜில்லாக்களில் தீவனத்



193

திற்காக ஒரு பயிரை புன்செய்ப் பயிராகவே இறைத்தே பயிரிடும் ஒரு நல்லவழக்கம் இருக்கிறது. இவ்வழக்கமில்லாத ஜில்லாக்களில் மாடுகள் நன்றாக இல்லை.

8. நல்ல வர்க்கமாயும் செவ்வையாயும் மாட்டைக் கவனித்துவரும் சில பாகங்களிலிருந்து இடைவிடாது எங்கும் வாங்கிக்கொண்டுபோய் வருவதை நிறுத்தவும் ஊர் மாடுகளை விர்த்தி செய்யவும் வேண்டுமானால் இப்போது இருக்கும் வழக்கத்தை மாற்றி சில முறைகளை அனுஷ்டிக்க பிரயத்தனம் செய்யவேண்டியது.

9. ஒரு பெரிய மந்தையை திடீரென்று திருத்திவிட முடியாது. ஆனால் ஒரு கிராமத்திலிருக்கும் நல்ல பசுக்களைப் பிரித்து அவைகளைத் தனியாய்க் கண்பார்வையில் மேய்த்து பொறுக்கியெடுத்த நல்ல பொலிச் சற்காளை ஒன்றை வாங்கி அதைப் பாதுகாத்து இவைகளுக்காக வைத்துக்கொண்டு இவ்விதமாய் மாடுகளை திருத்தத் தொடங்கிவிடலாம்.

10. சித்தூர் ஜில்லா புத்தூர் சப் டிவிஷன் கார்வேட்டி நகரில் இவ்வித ஏற்பாடு செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஐக்கிய நாணய சங்கத்தை அனுசரித்து மாடு அபிவிருத்தி செய்ய அவ்விடத்துக் குடிகள் சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்களுக்குள் சிலருக்கு கூடியமட்டும் தரத்து மாடுகளும் புஷ்டியானதாயும் உள்ள பசுக்களும் அநேக மிருக்கின்றன.

11. இக்கிராமத்தில் சுமார் ஆயிரம் கால் நடைகள் இருக்கின்றன. அவைகளில் அநேகமாய் எல்லாம் பசுக்கள். இந்த கிராமத்துக்கு சமீபமாய் இவைகள் மேய 1,000 ஏக்கருக்கு மேல் ரிசர்வாகாத காடு இருக்கிறது.

12. 24 மெம்பர்களுக்குச் சேர்ந்த 30 பசுக்களை வைத்துக்கொண்டு இச்சங்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். நல்ல தரத்துக்காளையாக ஒன்றை கார்வேட்டி நகர் ராணிசாகிபா ஒரு மெம்பராகி சொஸைட்டிக்கு கொடுத்திருக்கிறார்கள். அதை கிரமப்படி பாதுகாத்துக்கொண்டு ரிஜிஸ்டரான பசுக்களுக்கு மட்டும் உபயோகமாகும்படி வைத்துக்கொண்டிருப்பார்கள். சொஸைட்டியின் காரியங்களை விவசாய டிப்டிடைரெக்டருடன் கலந்துகொண்டு நடத்திவர செக்ரிடெரியைச் சேர்த்து ஏழு மெம்பர்கள் சேர்ந்த பஞ்சாயத்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னவிதமாய் நடந்து வருகிறதென்பதை அறிந்துகொண்டபின் அதை 1912-ம்

வருஷத்திய 2-வது ஆக்ட் பிரகாரம் ரிஜிஸ்டர் செய்ய உத்தேசம்.

13. முதல் முதல் சபை கூடியபோது மெம்பர்களுடைய காளைக்கன்றுகளில் 43 உருப்படிகளை விதையெடுப்பதற்காக வெட்டரினெரி அசிஸ்டெண்டு இடத்தில் ஒப்புவித்தார்கள். இது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. டிப்டி டைரெக்டர்கள் முன்பாகவே அவைகளுக்கெல்லாம் விதையெடுக்கப்பட்டது.

14. சொஸைட்டிக்குச் சேர்ந்த ரிஜிஸ்டரான எல்லாக் கால்நடைகளையும் நன்ருய் வேலியடைத்த மேய்ச்சற் காட்டில் ஒரு கட்டடத்தில் விட்டுவைக்க வேண்டும். சூணம்பட்டு ஜமீன்தார் போன்ற ஒருவருக்கே அநேக கால்நடைகள் இருக்குமானுல் இப்படிச் செய்வது அதிக சவுகரியமாயிருக்கும். இவர் விவசாய டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுடன் கலந்துகொண்டு விவசாய சீர்திருத்தம் செய்துகொண்டு வருகிருர். ஒரு மந்தையையே பொதுவில் நல்ல நிலைமைக்கே கொண்டுவர வேண்டுமானுல் வருஷா வருஷம் உதவாக்கடையான உருப்படிகளை கழித்துவர வேண்டிய வழக்கம் கட்டாயம் இருந்து வரவேண்டும்.

15. தனக்குப் பிறக்கும் கன்றுகளுக்கு தன்னுடைய முக்கிய லக்ஷணங்களைக் கொடுக்கக்கூடிய நல்ல நாட்டுக் காளை ஒன்றைப் பொறுக்கி எடுத்து நல்ல பசுக்களுக்கு இடைவிடாது சேர்த்து வந்தால் நாளா வட்டத்தில் நாட்டு மாடு திருந்திவிடும்.

16. நாளடைவில் இந்தக் கொஞ்சம் நல்ல காளைகள் மூலமாய் அநேக கிராமங்களுக்கு உபயோக மாகும் பொருட்டு நல்ல காளைகள் வாங்கிவிடவும் முடியும். வியாதி இன்னதென்றில்லாத உபயோகமற்ற வயதான காளைகளும் முற்ருத இளங்காளைகளும் காய் நன்ருய் அடியாத எருதுகளும் விதையெடுக்கப் பட்டுப் போகும்.

17. திறமான மாடுகளுக்கு தீவனத்திற்கு வேண்டிய தட்டு, வைக்கோல் முதலியவைகளை சேகரித்து வைக்க ஒன்றை பயிரிடவேண்டுவது அவசியமென்று குடிகளுக்குத் தெரியும்.

18. மேற்சொன்ன விதமாய் நன்ருய் யோசித்து தீர்மான மான வழிகளால் சீர்திருத்தங்களை சொற்பத்தில் ஆரம்பத்தில் நடத்தாது பூராவும் வெளி நாட்டு பசுக்களையும் காளைகளையும் வரவழைக்க நினைப்பதாலும் பணச்செலவாகும் கண்காக்ஷிகளாலும் கால்நடைகள் திருந்தி விருத்திக்கு வராது.

## தொழிற்றுறைகள்

### வாழைநார்

சில வருஷங்களாக நமது தேசத்தில் வாழைநார் சேலை நெய்வதற்கு உபயோகமாக்கப்பட்டு வருகின்றதென்று தெரிகின்றது. வாழையிலிருந்து தேனெடுக்கப் படுகின்றது; அது தேகாரோக்யத்திற்காக உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது. வாழைமரத்தின் இலை, பூ, காய், கனி, தண்டு, மட்டை ஆகிய இவையெல்லாம் மக்களுக்கு மிகுதியும் உபயோகமாகி வருகின்றன. இப்போது வாழை மட்டையிலிருந்து நாரெடுத்து அதனுல் பெரும் பிரயோஜன மடையலாமென்று சுலபமாக நாரெடுக்க ஒரு யந்திரம் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றது. அதன் விலை ரூபாய் 50-ஆம். அது வங்காளத்தில், மாதபூரில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் வாழைநார்த் தொழிற்சாலையின் மானேஜராயிருந்த பாபு T. N. பானர்ஜி என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த யந்திரம் பரோடா, மைசூர், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களிலுள்ள தொழிலாராய்ச்சி சாலைகளில் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த யந்திரத்தின் வாயிலாகப் பனம் பட்டை, தென்னைமட்டை, கற்ருழை மட்டை காசருக்கு முதலியவற்றிலிருந்தும் நாரெடுத்தல் கூடும். ஒரு ஏகர் நிலத்தில் பயிராகும் வாழையிலிருந்து ஒரு வருஷத்தில் ஒரு டன் எடை நார் கிடைக்குமென்றும், அந்த நாருக்கு அமெரிக்காவில் 30-பவுண்டு கிடைக்குமென்றும், பாபு பானர்ஜி அவர்கள் கூறுகின்ருர்; வாழை நாரிலிருந்து கயிறு திரித்தல் கூடுமென்றும், இந்தக் கயிறு சணல் கயிற்றினும் உறுதியாயிருக்கின்றதென்றும் கூறுகின்ருர். வாழைநார்த் தொழிலை ஒவ்வொரு வீட்டிலும் செய்தல் கூடும். முற்காலத்தில் இந்து ஸ்திரீகளும் தொழில் செய்து வியாபாரத்தை விர்த்தி செய்திருக்கின்றனர்; அவ்வாறே இக்காலத்திலும் செய்து பொருளாதார முடையவராதல் கூடும்.

### கண்ணுடிக் கைத்தொழில்

கொஞ்ச காலத்திற்குமுன் பானிபட் என்னுமிடத்தில் சிலர் ஓர் கண்ணுடிக் கைத்தொழிற்சாலையைஸ்தாபித்தார்கள். அது கொஞ்சநாள் வரைக்கும் நடந்து வந்தது. பிறகு வரவர க்ஷீணித்துப்போய்விட்டது. இதற்குக் காரணம் இங்கு வேலைசெய்பவர்களில் ஒருவருக்கொருவருக்கு இருந்த பொருமையும், தேசத்



தின் பேரில் கொஞ்சமும் அபிமான மில்லாமையுமேயாம். அங்கு கண்ணுடி உருக்கும் உலைமேடைகளில் வேலை செய்யவும் கண்ணுடிகள் ஊதவும் தெரிந்தவர்கள் மிகவும் சிலர். இது காரணம் பற்றி இவர்கள் அதிகமான கூலி கேட்க ஆரம்பித்தார்கள். இரண்டாவது, கண்ணுடி ஊதுபவன் ஒருவனிடமிருந்தே அநேகவிதமான சாமான்கள் செய்யப்படவேண்டி வந்தது. இந்த இரண்டு காரணம் பற்றி அவ்விடத்தில் இக் கைத்தொழில் விருத்திபெறவில்லை. அது அங்கு ஆரம்பம் செய்யப்படுவதற்குமுன் கண்ணுடி வளையல்கள் ஏராளமாக அன்னிய நாட்டினின்று இறக்குமதியாய்க் கொண்டிருந்தன. அவ்விதசாமான்கள் யாதொரு கஷ்டமுமின்றி அவ்விடத்திலேயே செய்யப்படுவதால் அந்த சாமான்கள் வெளிநாடுகளிலிருந்து இறங்குவது நிரம்பவும் குறைவுபட்டது. சந்துள்ள கண்ணுடிசாமான்கள் செய்யப்படுவதற்கு ஊதுகிறவர்கள் வேண்டியதாலும் அவர்கள் அதிகமான கூலி கேட்பதாலும், முதலாளிகள் வைத்த முதல்கூட எடுக்கமுடியாமற் கஷ்டப்பட்டு எடுத்த காரியத்தை முடிக்காமல் விட்டு விடுகிருர்கள்.

கொஞ்ச காலத்திற்கு முன் ராஜ்பூர் என்னுமிடத்தில் ஆஸ்டிரியா தேசத்தின் கண்ணுடி எஞ்சினீயர் ஒருவர் ஹிமாலயாகிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் என்று ஓர் கண்ணுடி கைத்தொழிற்சாலையை ஸ்தாபித்து நடத்திவந்தார். அதில் ஊது வேலை செய்வதற்கு தன் தேசத்திலிருந்து 3-பெயர்களை அழைத்துவந்து ஏற்படுத்தியிருந்தார். தங்கள் நாட்டைவிட்டு வேற்று நாட்டுக்கு வந்து வேலை செய்கிறபடியால் மாதம் 1-க்கு ரூபா 200-முதல் 300-வரையில் சம்பளம் கொடுக்க வேண்டி வந்தது. ஆனுல் இதே வேலைக்கு தங்கள் தேசத்திலோ மாதம் 1-க்கு ரூபா 35-முதல் 40-க்கு மேல்கிடைக்காது. அவ்வளவு பெரிய கைத்தொழிற்சாலைக்கு ஊதுபவர்கள் மிகவும் கொஞ்சம். ஆனது பற்றி இவர்களுக்கு உதவியாக வேலைசெய்ய மகம்மதிய வளையற்காரர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். இவர்களுக்கு கொஞ்சம் கண்ணுடித்தொழிலில் பழக்கம் இருப்பதினுல் இந்த வேலையைச் சீக்கிரம் கற்றுக்கொண்டார்கள். இவர்கள் மாதம் 1-க்கு ரூ 7-முதல் 15-வரையில் சம்பளம் வாங்கிக்கொண்டு வந்தார்கள். கண்ணுடி ஊதும் தொழிலில் கொஞ்சம் பழக்கம் ஏற்படவே ஐரோப்பியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தைப் போலவே தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். ஏதோ சொற்ப சம்பளம் வாங்கிக்கொண்டு அதில் கஷ்டமின்றி ஜீவனம் செய்து வந்தவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கவே, தங்களுடைய திறமைகளை தாங்களே மெச்சிக்கொண்டு கர்வப்பட்டு வேலைகளை ஜாக்கிரதையுடன் செய்யாமல் வீண்காலம் போக்கி வந்தார்கள்.

அப்படி கொஞ்சகால மானபிறகு இங்கு வேலை செய்து கொண்டிருந்த ஐரோப்பியர்கள் இச்சாலையை விட்டு நீங்கினுர்கள். அதுபற்றி கைத்தொழிற் சாலையில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் நம் இந்தியர்களே பார்க்கவேண்டிவந்தது. இவர்களுடைய இஷ்டத்துக்கு முதலாளிகள் விரோதமாக ஒன்றும் செய்வதற்கில்லை. அப்படி ஏதாவது அவர்களைக் கேட்கப் போனுல் அங்கு வேலை செய்பவர்கள் எல்லோரும் ஒரே கட்டாய்த் தங்கள் வேலைகளை விட்டு நீங்கி விடுவதாக முதலாளிகளைப் பயமுறுத்தினுர்கள். மேலும், அவர்கள் எப்போதும் நெருப்பில் வேலை செய்வதால், அதிக நேரம் கஷ்டப்பட்டு வேலை செய்ய முடியாது என்று சாக்குப்போக்கு சொன்னுர்கள். இவைகளை எல்லாம் பார்த்த முதலாளிகள் வேறு எந்த ஜாதியாரையாவது கொண்டுவந்து இந்த வேலைகளையெல்லாம் கற்றுக்கொடுத்து கைத்தொழிற்சாலையை ஒருவாறு சீர் செய்யலாம் என்று யோசித்து சில புதிய ஆசாமிகளை ஏற்படுத்தினுர்கள். முன்னிருந்த மகம்மதியர்களுக்குத் தங்கள் ஜாதியாரைவிட இச்சாலையில் வேறு எந்த ஜாதியாரும் வந்து வேலை செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு செய்துகொண்டு புதிதாக வருபவர்களை உபத்திரவம்செய்து அவர்களை நெருப்பினுல் சுடி இன்னும் அநேகவிதமான உபத்திரவங்கள் செய்து வந்த மூன்ரும்நாளே வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

ஐரோப்பியர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்துவந்தாலும் அவர்கள் செய்த வேலைகள் மிகவும் நன்ருகவேயிருந்தன. முதலாளிகளுக்கு ஏறக்குறைய நஷ்டமில்லாமலிருந்தது. ஆனுல் நம் இந்தியர்கள் செய்த வேலைகளோ ஒன்றுக்கும் பயன்படாது போயின.

முக்கியமாக நம் தேசத்தில் இச்சாலைகள் கைகூடி வாராமற் போனதற்குக் காரணம், ஒரே சாலையில் பல வித சாமான்கள் செய்யப்படுவதேயாம். அதாவது, ஊதுபவர்கள் கொஞ்சமாயிருக்க அவர்களிடமிருந்தே

## ஆசாரத் திருத்தமும் பிராமணரும்

(ஸ்ரீ மாதவய்யருடைய உபந்நியாசத்தினின்று எடுக்கப்பட்டது)

இந்தியா என்பது யாவருக்குமே பொதுவாயினும், இதுபோன்ற (ஆசாரத்திருத்த) சபைகளின் நடவடிக்கைகள், விசேஷமாய் பிராமணரையும், அவர்களைப் போன்றொழுகும் சாதியார் சிலரையும், அவர்களது ஆசார அநுஷ்டானங்களையுமே தழுவி நடக்கின்றன. இதற்கோர் காரணமுண்டு. இரண்டு மூவாயிரம் ஆண்டுகளாகப் பிராமணரே இந்நாடெல்லாம் மேலளாவி, முன்னிருந்தார், இடையே வந்தார், எல்லோருடைய நாகரீகங்களையும் தமது ஆட்சிக்குட்படுத்தி, மாற்றித் தாமே பூசுரர் என்றும் தமது சாதியே ஒப்புயர்வற்றதென்றும் மற்றெல்லோரும், தம்பொருட்டே வாழ்ந்து, தமக்காகவே உழைக்கவேண்டுமென்றும் நிலைநாட்டியதுமன்றிப், பிறரையும் ஒருவாறு அப்படியே நம்பி ஒழுகும்படிச் செய்திருக்கிறார்கள். "நன்றாங்கால் நல்லவாக் கொள்பவர், அன்றாங்கால் அல்லற் படுவதெவன்?" என்னும் நாயனார் வினாவின் நியாயப்படி, இந்நாட்டில் உள்ள புராதனமான நன்மைகளும் சிறப்புக்களும் தம்முடையனவே என்று பெருமைபேசும் பிராமணரன்றி, நமக்குள் வழங்கும் துராசாரங்களுக்கும், நாம் அநுபவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்களுக்கும், வேறு யார் பொறுப்பாளி?

1911-வருஷத்து ஜனசங்கை ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறபடி, 'தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொருவனுடைய பேராவலெல்லாம், தன்னை ஒரு பிராமணனாகப் பிறர் மதிக்கவேண்டும்' என்பதே. ஆகவே, நம்முடைய நாகரீகங்களுக்கெல்லாம் மூலஸ்தானமாகிய பிராமணரது ஆசார அநுஷ்டானங்களை வேண்டியவாறு சீர்திருத்துவதே முதற்கடமை. இங்கிலீஷ் படித்து, மேல்நாட்டு நாகரீகத்தை நேரில் தெரிந்து, பிராமணரது நாகரீகத்தின் மாயவலைக் குட்படாது, வெளியேறியிருக்கும் பிராமணரல்லாத நமது சகோதரர்களுக்கு இது அவ்வளவு அவசியமாகத் தோன்றாது. ஆனால், அப்படிக்குள்ளார் மிகச் சிலரே; இன்னும் பிராமணரையே மேலாக நினைத்து அவரதுபோன்ற ஒழுக்கத்தையே விரும்பும் ஜனங்களோ பலகோடி.

மற்றொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. தாங்கள் அரசர்களாக இல்லாமலிருந்தும் அரசரையும் குடிகள் யாவரையும் சில விஷயங்களில் தமக்குக்கீழாக்கி, அவர்கள் இவ்வாறொழுக வேண்டுமென்று தாங்களே அவர்களுக்கு விதித்து, 'உலகத்தில் வேறெங்கும் இதற்கிணை யெதிரில்லை' என்று சொல்லும்படி தாங்கள் (இந்த ராஜதானியில்) நூற்றில் மூன்றுபேருக்குமேயில்லாமலிருந்தும், எண்ணிறந்த தலைமுறைகளாக மற்றெல்லாரையும் தம்மிஷ்டம்போல் ஆட்டுவித்து வந்த அபூர்வமான புத்தி விசாலத்தையுடைய "பிராமணர்கள் எக்கேடு கெட்டாலும் சரி; தன் வினை தன்னைச் சுடுமன்றோ? துராசாரங்களால் நாளுக்கு நாள் கிலமடைந்து, அவர்கள் நசித்துப்போய் விட்டாலும் இந்நாட்டுக்கு ஒரு பாதகமுமில்லை," என்று உண்மையான தேசாபிமானிகள் யாருமே நினையார். அங்ஙனம் நேரவும் செய்யாது. தம்மால் நேர்ந்திருக்கும் தீங்குகளைப் பிராமணரே உணர்ந்து, தங்களையும் தங்களாற் கெட்ட பிறரையும் சீர்திருத்த முன்வந்திருக்கிறார்கள். இந்தச் சபையும் இதுபோன்ற மற்றெந்தச் சபையுமே அதற்குச் சாக்ஷியாகும். நாளாவர்த்தியில் இன்னும் பல்லாயிரம் பிராமணர் இவ்வாறே நமக்காகவும் பிறர்க்காகவும் உழைப்பார் என்பதிற் சந்தேகமில்லை.

பிறசாதிகளிற் பலர், தமது கீழான நிலைமைக்குப் பிராமணரே காரணமென்று, நியாயமாகவோ தவறாகவோ நம்பி, இப்பொழுது அவர்களை நிந்தித்துத் திட்டுகிறார்கள். இதை பிராமணர் தங்கள் பூர்வகர்ம பலனாக நினைந்து ஏற்றுக்கொள்ளக் கடவர். இதுவரையும்,

---

பலவித சாமான்கள் செய்யப்படுவதேயாம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களைப்போல ஒரு சாலையில் ஒரேவிதமான சாமான்கள் செய்யப்பட வேண்டும். அப்படி செய்வதால் அங்கு வேலை செய்பவர்கள் அத்தொழிலில் மிகவும் தேர்ச்சி யடைவதோடு கூட வஸ்துக்கள் சேதப்படாமல் எல்லாம் ஒழுங்காக நடக்கும். உதாரணமாக ஒரு கைத்தொழிற் சாலையில் புட்டிகள்மாத்திரம் செய்வதாயிருந்தால், அங்கு வேலைசெய்பவர்கள் தங்கள் பால்யம் முதல் அந்திகாலம் வரைக்கும் அத்தொழிலிலேயே பழகி அதில் பூர்ணஞானம் பெறுவார்கள். ஆனால், ராஜபூர் சாலையில் பல சாமான்கள் செய்யப்பட்டு வந்தமையால் அவர்களுக்கு ஒன்றிலும் பயிற்சி இல்லாமல், செய்யும் சாமான்கள் விற்பனைக்கும் லாயக்கில்லாமற் போய்விட்டன. இதனால் முதலாளிகளுக்கு ஏராளமான நஷ்டம் உண்டாயிற்று. இக்காரணங்கள் பற்றி மேற்படி சாலையில் வேலைகள் நிறுத்தப்பட்டன.



## ஆரோக்ய போதம்

### குடிதண்ணீர்

காப்டன் ரஸ்ஸல் சென்னை விக்டோரியா ஹாலில் செய்த உபந்நியாசம்:—அசுத்தமான ஜலத்தைப் பானஞ் செய்வதினால், இந்தியாவில், வருஷாவருஷம் 14-லக்ஷம் ஜனங்கள் இறந்துபோகிறார்கள். சென்னையில் ஏற்பட்டிருக்கும் புதிய ஜலமராமத்து வேலை ஸ்கீமின்படி, ஒரு ஆள் ஒன்றுக்கு 25 காலன் ஜலம் வேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வருஷத்தில் குறிப்பிட்ட சில மாதங்களில்மட்டும் மழை பெய்துவரும். இத்தேசத்தில் ஆள் ஒன்றுக்கு 12½ காலன் ஜலம் விநிதம் சப்ளை செய்வதற்குக்கூட சாத்தியப்படாது. பொதுக்குழாய்களை பலமணி நேரம் வரையிலும் திறந்து வைத்தபடி விட்டுவிட்டுப் போகிறார்கள். அதினால் நூற்றுக் கணக்கான காலன் ஜலம் அநியாயமாகச் செலவாகிறது. அனாவசியமாக ஜலத்தை சாக்கடைகளில் போகும்படியாக குழாய்களைத் திறந்துவைக்கும் இக்குற்றத்திற்கு உள்ளாகிறவர்கள் தண்டனைக்குள்ளாகவேண்டுமென்று சட்டத்தை ஏற்படுத்துவது நலமாகும். மழைஜலம் சுத்தமானது. ஆனால், அந்த ஜலம் வானத்திலிருந்து கீழே விழும்பொழுதே அதில் புகையும் தூசியும் கலந்துவிடுகின்றன.

சென்னை நகருக்கு சப்ளை செய்துவரும் புழல் ஏரி ஜலத்திலுங்கூட பல அசுத்தங்கள் இருக்கின்றன. இந்தியாவிலிருக்கும் பெரிய ஆறுகளின் இருகரையையும் ஜனங்கள் கக்கூஸுகளாக உபயோகித்து வருகிறார்கள். தவிர, ஆற்றங்கரைகளை மயான ஸ்தலமாகவும் உபயோகிக்கிறார்கள். ஆற்று ஜலத்தில் குளித்தும் வாய்க் கொப்புளித்தும் அழுக்குத் துணிகளைத் தோய்த்தும் வருகிறார்கள். அதே ஜலத்தை குடிக்கவுஞ் செய்கிறார்கள். ஆற்றங் கரைகளில் அசங்கியங்களை உண்டாக்கக் கூடாதென்றும், ஜலத்தில் யாதொரு அசங்கியமான காரியங்களைச் செய்யக்கூடாதென்றும் அழுக்குத் துணிகளை ஆற்று ஜலத்தில் துவைக்கக்கூடாதென்றும் மனு தர்மசாஸ்திரத்தில் மனு சொல்லியிருக்கிறார். குடிக்க உபயோகப்படும்படியான ஜலத்தில் அசங்கியம் செய்வதைவிட பெரிய பாவம் வேறொன்றுமில்லையென்று வால்மீகி சொல்லுகிறார். குடிக்கும் ஜலத்தை அசுத்தமாக்கும் குற்றத்திற்கு 100-பணம் அபராதம் கொடுக்க வேண்டுமென்றும், அக் குற்றத்தைச் செய்தவனே அவ்வித அசுத்தங்களை நீக்கிவிட வேண்டுமென்னும் விதியை மகாவிஷ்ணுவே விதித்திருக்கிறார். ஒரு ஊருக்கு குடி ஜலத்திற்கு உபயோகமான ஒரு பொதுக்கிணறோ, குளமோ இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அவ்வூரார் எல்லோரும் ஒரே சட்டமொன்றமாக இருந்து, குடி ஜலமாக உபயோகப்படுகிற ஜலத்தை அசுத்தஞ் செய்யக்கூடாதென்று ஒரு விதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். காலரா முதலிய தொத்து வியாதிகள் பரவியிருக்குங் காலங்களில், கிணற்றுஜலம் அசுத்தமாகாமலிருப்பதற்கு மருந்து உப்பு முதலியவைகளைச் சேர்க்கவேண்டும். கிணறுகளில் கொசு முதலியவைகள் அடையாமலிருப்பதற்கு கிணறுகளின்மேல் மூடிகள் ஏற்படவேண்டும்.

### ஊமத்தை

இது மிகவும் உபயோககரமான ஔஷதச் சரக்காயிருந்தாலும், இதைப் பிரயோகிப்பதில் அதிக ஜாக்கிரதையாயிலாவிட்டால் நஞ்சின் குறிகள் காணப்படும். ஊமத்தையில் வெள்ளை, கறுப்பு என்று இருவகையுண்டு; இவ்விரண்டையும் உபயோகித்துப் பார்த்ததில் வெள்ளை யினத்தைப் பார்க்கிலும் கறுப்பு இனமே சிறந்த குணந்தரக்கூடிய ஸாரமுள்ளதென்று அறியப்பட்டது.

அதன் உபயோகம்.—(1) காய்ந்த ஊமத்தையிலை

---

பிறவியினாலேயே தாங்கள் மேன்மக்கள் என்று நடித்து யாவரையும் அடக்கி யாண்டுவந்த பிராமணர், இப்பொழுது, மேன்மக்களுக்குரிய மெய்யான குணசீலங்களை வெளிப்படுத்தத் தங்கள் மேலான புத்திமையையும் அறிவையும் உபயோகப்படுத்தி, அன்பாடும், பொறுமையோடும் விடாமுயற்சியோடும், சுயநயங்கருதாத் தேசாபிமானத்தோடும், தம்மையும் பிறரையும் சீர்திருத்துமாறு உழைக்கக் கடவர். தங்கள் கர்வத்தை முற்றும் ஒழித்து ஜாதிக்கொழுப்பை நீக்கி, யாவரும் ஒரே தாய்வயிற்றிலுதித்த சகோதரர் என்று நம்பி ஜப்பான் தேசத்தில், நமது கண்காண 'ஸாமுராய்' என்றிருந்த மேன்மக்கள், தேசாபிவிருத்திக்காகத் தங்கள் பெருமையான சுதந்தரங்களை யெல்லாம் தாங்களாகவே விட்டுக்கொடுத்தது போலவே பிராமணரும் நடப்பாராயின், நம்முடைய தாய்நாடு, அதிசீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விடும்; இப்பொழுது, மனக்கொதிப்பினால், நம்மை அவதூறு செய்யும் ஜனங்களெல்லாப் மெய்யன்புடன் நம்மை நேசித்துக் கொண்டாடவும் செய்வார்கள்.

களைப் புகையிலைச் சுருட்டுபோல் செய்து, அதன் புகையை உறிஞ்சினால் உடனே சுவாஸகாசத்தினு லுண்டாகும் பெருமூச்சு முதலிய விகாரங்கள் சாந்தமாகும். தேவைக்குத் தகுந்தபடி தினம் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறை இப்புகையைக் குடிக்கலாம். ஆனால் தலைசுற்றல், வாய் குமட்டல் முதலிய துர்லக்ஷணங்கள் உண்டானால் உடனே நிறுத்திவிடவும். இதை அஜாக்கிரதையாக உபயோகித்ததில் பிராணபாயம் அல்லது மிகக் கொடிய வேதனைகள் உண்டானதாகத் தெரியவருவதால் இதைப் பிரயோகிப்பதில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். கபம் குறைந்து வரட்சியுடன் நெடுநாட்களாகப் பீடிக்கும் கடினமான இருமல்களுக்கும் மேற்சொல்லியபடி ஊமத்தையிலைச் சாற்றைக் குடித்தால் நற்குணமுண்டாகும். (2) வாதத்தினாலுண்டாகும் வீக்கங்கள், வலி அதிகரித்த கட்டிகள், சர்மத்தைப்பற்றிய வீக்கங்கள் இவை முக்கியமாய் மேகவியாதி ஸம்பந்தமாயிருந்தால், அவற்றிற்கு ஊமத்தை இலையை வலியிருக்குமிடத்தில் பொட்டலிகை யென்னும் போல்டீஸாகக் கட்டினால் உடனே குணமுண்டாகும். ஸாம்புச்சிலந்தி வியாதியில் அக்கிருமி கொப்புளம் வெடித்தபிறகு வெளியில் சிறிது நீண்டுவந்திருக்கையில் மேற்கூறிய பொட்டலிகையைக் கட்டினால் அக்கிருமி சீக்கிரத்தில் வெளிவந்துவிடும். (3) முகத்திலுண்டாகும் ரோம்பைப்பற்றிய அநேகம் வீக்கங்களில் ஒரு பங்கு காய்ந்த இலையை நான்குபங்கு பன்றிக்கொழுப்பிற்கலந்து வலியின்மேற் றடவினால் ஸௌக்கிய முண்டாகும்.

* [ஊமத்தையிலைப் பொட்டலிகை அல்லது போல்டீஸ்—இலைகளைப் பறித்தவுடனே நன்றாக அரைத்து அதற்கு ஸமபாகம் அரிசிமாவையும் சேர்த்து, சிறிது தண்ணீர் விட்டுக் குழைத்து ஒரு துண்டுச் சீலையில் விரல் கனத்துக்குத் தடவவும்; அல்லது கொஞ்சம் இலையைச் சாறுயத்தில் இட்டு வைத்து அப்பால் அதை யெடுத்து வலியுள்ள இடத்தில் வைத்துச் சீலையால் சுத்திக் கட்டவும். ஒருபலம் இலையை அரைப்படி கொதிக்கும் ஜலத்தில் சேர்த்து மூடிவைத்து சிறிது நேரத்திற்கெல்லாம் ஒற்றிடம் கொடுக்கலாம்.]

வைத்தியகலாநிதி.

## பாகசாஸ்திரம்

**தாமி (ஒருவித) ரொட்டி.**-இது மஹாராஷ்டிர தேசத்துப் பலகாரம். பம்பாய், பூனாமுதலிய இடங்களில் தசமிரொட்டியே ஏகாதசிவிரத முதலிய காலங்களிலும், ஊர்ப்பிரயாணஞ் செய்யும்போது சாப்பிடுவதற்கும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது. கால்படி கோதுமை ரவை அல்லது மாவை ஒருபலம் நெய்யுடன்கலந்து நன்றாகப்பிசைந்து, இறுகுவதற்குப் போதுமான பசும்பாலையும்விட்டு மத்தித்து, சிறு உருண்டைகளாக்கிக் கொண்டு, அப்பளக் குழவியினால் மெல்லிய பூரிகளைப் போல்செய்து தோசைக் கல்லின்மேல்போட்டு சுட்டெடுத்துக்கொள்ளவேண்டியது. விரதகாலங்கள் தவிர மற்றகாலத்தில் சாம்பார்களுடனும் பதார்த்தங்களுடனுஞ் சேர்த்துச் சாப்பிடலாம். தித்திப்பான பண்டங்களுடன் சேர்த்துச் சாப்பிடுவதும் உண்டு.

**பால் அவல்.**—கால்படி அவலை நொய்யாக்கிக் கொண்டு, கால்படி சுத்தஜலத்தை ஒரு பாத்திரத்தில் விட்டுக்காய்ச்சி அதில் ஐந்துபலம் வெல்லத்தைப் போட்டு, கரைந்தவுடன் ஷை அவல் நொய்யைக் கொட்டி மெதுவாய்க் கிளறி மூடிவைத்து, சற்றுநேரம் ஆனபிறகு, அரைக்கால்படி பாலை ஊற்றித்திரும்பவும் கிளறி கொஞ்சம் ஏலரிசிப்பொடியும் வறுத்த முந்திரிப்பருப்பும்போட்டு மீண்டும் கிளறிக்கொடுத்து, நெருப்புத் தணலின்மீது சற்றுநேரம் வைத்தெடுத்து சாப்பிடலாம். பாலில் குங்குமப்பூவை (அரைக்கால் ரூபாயெடை) கரைப்பதும், வெல்லத்திற்குப் பதிலாக சீனிசர்க்கரை உபயோகிப்பதும் உண்டு

**சோளக்கூழ்.**—அரைபடி சோளத்தைச் செவ்வையாய்க் குத்தித் தேய்த்துப் புடைத்து உமிமுதலானவைகளை நீக்கி உரலில்போட்டு கொஞ்சம் நல்ல ஜலத்தைத் தெளித்து நொய்யும் மாவுமாகும்படியாகக் குத்தியெடுத்துப் புடைத்து நேம்பி, நொய்யையும் மாவையும் பிரத்தியேகஞ்செய்து, முழுச்சோளத்தைத் திரும்பவும் உரலில் போட்டு ஜலந்தெளித்துக் குத்தியெடுத்து நொய்யையும் மாவையும் வேறுபடுத்தி, முழுச்சோளத்தைத் தனியாக்கி நொய்யையும் மாவையும் வெவ்வேறாக வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டுபடி ஜலம் கொள்ளத்தக்க பாத்திரமொன்றில் சுத்த ஜலம் ஒருபடி விட்டு அடுப்பின்பேரில் வைத்து ஜலங் கொதிக்கும் போது சோளநொய்யை மாத்திரம் கொட்டிக் கிளறி மூடி, இது முக்கால் பாகம் வெந்த சமயம்பார்த்துக்



கொண்டிருந்து சோளமாவைக்கொட்டி அடுத்தடுத்து கிளறிக்கொடுக்கவேண்டும். இங்ஙனம் செய்வது உருண்டை கட்டாமலிருக்கச் செய்வதற்காக சற்று நேரமானதும், அடுப்பின் எரியைப்பிடுங்கிவிட்டு களியைத் தணலின்மே லிருக்கச்செய்து, திரும்பவும் கிளறி இறக்கியெடுத்து உபயோகிக்கவும்.

**கமீர் (புளிப்பு).**—இது ரொட்டியை மிருதுவாக்குவதற்காக இந்துஸ்தான் பிரதேசங்களில் செய்யப்படுவது. இதற்கு இரண்டு புதுக்கலயங்கள் வேண்டும். ஒவ்வொன்றும் அரைப்படி ஜலம் கொள்ளும்படியானதாயிருக்கலாம். இவ்விரண்டையும் நன்றாய் அலம்பி வைத்துக்கொண்டு, ஒன்றின் மேல்புறத்தில் (அதாவது அடுப்பை நோக்கியுள்ள பக்கத்தில்) விளக்கெண்ணெயைத் தடவி, உள்புறத்தில் ஜலத்தைவிட்டு அடுப்பின் மேல்வைத்து தீயிட்டு ஜலங் கொதிக்கும்போது அந்த ஜலத்தைக் கொட்டிவிட்டுத் திரும்ப ஜலம் நிரப்பிக் காய்ச்சிக் கொதிக்குந் தருவாயில் கலயத்தை யிறக்கிச் சமசூடானதும் ஒருபிடி கடலைப்பருப்பை அதில்விட்டு மற்ற கலயத்தால் அதன்வாயைச் சந்தில்லாமல் மூடிச் சாம்பலில் புதைக்கவும். ஒருநாள் பொறுத்தெடுத்து ஜலம் நுரைதள்ளி புளித்த வாசனை வீசக்கண்டு அந்த ஜலத்தை அரைபடி கோதுமை மாவில் கலந்து, கடலைப்பருப்பை ஜலம்விட்டலம்பி ஜலத்துடன் ஷை மாவிற் கொட்டிப்பிசைந்து உருண்டைசெய்து சுமார் ஒரு மணிநேரம் வைத்திருந்தால் புளித்துப்போகும். இதுவே கமீர் எனப்படுவது. ரொட்டி செய்யும்போது, ரொட்டிமாவில் வீசைக் கொருபலமாக இந்த கமீர் சேர்க்கப்படும். கமீர் உருண்டையிலிருந்து ஒவ்வொரு முறையும் எவ்வளவு எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அவ்வளவு கோதுமை மா, உருண்டையுடன் சேர்த்துக் கலக்கப்படும். இப்படிச் செய்துகொண்டே பல நாட்களுக்குக் கமீரை வைத்திருப்பதுண்டு. இது ஈரமற்றுப்போகையில், மேலே கூறியபடி கடலைப்புளிப்பைத் தயார்செய்து கமீரில் ஊற்றிப் பிசைந்துகொள்வது வழக்கம். கலயத்திற் காய்ந்துள்ள ஜலத்தில் கடலைப்பருப்பைப் போடுகையில் சீனி சர்க்கரையைச் சேர்ப்பாரும் உளர்.

**தேங்காய்ப்பால் ஸொஜ்ஜி.**—ஓர் ஆழாக்குப் பயற்றம்பருப்பையும் மூன்றுழாக்கு அரிசியையும் கொஞ்சங் கொஞ்சமாக வாணலியிலிட்டுச் சற்று சிவக்கும்படி வறுத்தெடுத்து ஒன்றோடொன்று கலந்துகொள்ளவும். ஐந்துபலம் தேங்காய்த் துருவலை அம்மியிலிட்டு வெண்ணெய்போல் அரைத்து ஒருபடி சுத்த ஜலத்தில் கரைத்து வடிகட்டித் திப்பியைப்போக்கிவிட வேண்டியது. கால்பலம் உளுத்தம்பருப்பு, அரைக்கால்பலம் மிளகாய், அரைக்கால்பலம் கடுகு இவற்றை களிம்பேறாதாகிய மூன்றுபடிப் பாத்திரத்தில் இரண்டுபலம் நெய் விட்டுக் காய்ச்சிப் பக்குவமாய்த் தாளித்துக்கொண்டு கொஞ்சம் கருவேப்பிலைபோட்டு சளபள சப்தம் நின்றதும், ஷை தேங்காய்ப்பால் கொண்ட படி ஜலத்தை அதில் விட்டு ஒரு சிட்டிக்கை மஞ்சள் பொடி போட்டு, ஜலங் கொதிக்குஞ் சமயத்தில் மேற்கூடிய பயற்றம் பருப்பு கலந்த அரிசியை நன்றாய்க் களைந்து ஜலம் வடித்துவிட்டு கொட்டிக் கிளறி மூடவும். அரிசி முக்காற்பாகம் வெந்த பக்குவம் பார்த்து போதிய உப்பு போட்டுக் கிளறி நெருப்புத்தணலில் வைத்து மிளகு சீரகமிவற்றை நெய்யிற் பொரித்துக் கொட்டி ஐந்து நிமிஷமான பிறகு இறக்கி உபயோகிக்கலாம்.

**தாளித்த தயிர் அவல்.**—கால்படி அவலையும் அரைபல உப்பையும் மூன்றுழாக்கு புளித்தமோரில்கொட்டி அவை நன்றாய் ஊறிய பிறகு உளுத்தம்பருப்பு, மிளகாய், கடுகு, கருவேப்பிலை யிவற்றை ஒரு பெரிய வாணலியில் நெய்விட்டுத் தாளித்துக்கொண்டு, அந்த தாளிதத்தில் ஷை தயிர் அவலைக்கொட்டிக் கிளறி அவல் விடிவிடியாகும் பக்குவம் பார்த்திறக்கி உபயோகிக்கவும்.

---

**ஓராச்சரியமான புற்று.**—திருச்சிராப் பள்ளியில் வசிக்கும் வெகு காலமாகப் புத்திரப்பேறில்லாத ஒரு ஸ்திரீ தான் சொப்பனத்திற் கண்டபடி தஞ்சாவூர் வடவாற்றங் கரையிலுள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்று, கோயிலுட் பிராகாரத்தைச் சுற்றிவரும்போது தான் சொப்பனத்திற் கண்ட புற்றைக்காணாது மயங்கினாளாம்; அப்போது நதியில் ஸ்நானஞ் செய்திருந்த ஒரு ஸ்திரீயின் மீது ஆவேசம் வந்து விட்டதாம்; அந்த ஸ்திரீ வந்து அவளது கையைப் பிடித்திழுத்துச் சென்று புற்றுள்ள விடத்தை அவளுக்குக் காட்டி, 21-நாளி லிங்கோத்ஸவம் நடக்குமென்று கூறிப் படுத்துக்கொண்டனளாம். அந்தப் புற்று நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றதாம். வெகு ஜனங்கள் அந்தப் புற்றைப் போய்ப் பார்த்து வருகின்றனராம்.

## கதாபஞ்சரி

அரபிதேசத்து வர்த்தகன் ஒருவன் ஒருகால் தேசாந் திரயாத்திரைசெய்யக் கருதித் தன் வெள்ளி சாமான் முதலியவைகளை வேலைக்காரர்வசத்தில் ஒப்புவித்துப் போக மனமில்லாமல் மிகவும் பிராமாணிகனென்று தான் நெடுநாளாய் நம்பியிருந்த தோழனான ஒரு கோமுட்டி கையில் கொடுத்துவிட்டுப்போகத் தீர்மா னித்தான். அவ்வாறே அந்த வணிகன் தன் சாமான் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்று [illegible]

அதைக்கேட்டவே வணிகன் [illegible] [illegible] நியாயாதிகாரியண்டை போய்த் தனக்கு நேரிட்ட அநியாயத்தை முறையிட்டுக்கொண்டான். நியாயாதிகாரி அதைச் செவியுற்று, நீ நம்பிக்கையை முதன்மையாய்க்கொண்டு இக்காரியஞ் செய்திருக்கி றாய்; நான் எவ்விதமாய் உனக்கு உதவுகிறதோ தெரிய வில்லை. நீ சொல்லுவது உண்மையென்று நிரூபிக்கச் சாக்ஷிய மில்லையே! நல்லது ஒருயோசனை செய்து பார்ப்போம்; நீ நிராசை கொள்ளவேண்டாம்; நாளை இந்நேரத்துக்கு வா, வழிசொல்லுகிறேனென்றான்.

அப்படியே ஆகட்டுமென்று வர்த்தகன வீடுபோய்ச் சேர்ந்தான. அவன் புறப்பட்டுப்போனதும் நியாயாதி காரி தன்வீட்டுக்கு விருந்துண்ண வரும்படி அந்தக் கோமுட்டிக்குச் செய்திசொல்லி யனுப்பினான். அதைக் கேட்டு அவனும் சந்தோஷமாய் வந்துசேர்ந்தான். நியாயாதிகாரி அவனை மிகவும் பிரீதியாய் வரவழைத் துச் சிறிதுநேரம் லோகாபிராமமாய்ப் பேசிக்கொண் டிருந்து வார்த்தை மேல்வார்த்தையாய், அந்தக் கோமு ட்டி மிகவும் சற்குணமுள்ள தனவானென்றும் சிறிதும் பொய்புரளியில்லாத பரிசுத்தாத்மா வென்றும் யாரும் அவனைத் துதிசெய்யக் கேள்விப்பட்டிருப்பதாயும், அதனால்தான் அவனிடத்தில் பூரணமான நம்பிக்கை வைத்திருப்பதாயும் எடுத்துரைத்தான். இப்படிச் சிறிதுநேரம் பேசியபிறகு, கடைசியில் என் உயிர்த் தோழரே! இப்போது நான் உங்களையிவ்விடம் வரவ ழைத்தற்கு முக்கியகாரணம் ஒன்றுண்டு. யான் ஒரு காரியமாக வெளியே போகவேண்டி யிருக்கிறது; போனால் வரச் சிலமாதங்கள் செல்லும்; அதுவரையில் என் வீட்டுச் சாமான்களை யாரிடத்தில் வைத்துப்போ கிறதென்று [illegible] [illegible] பொருள் ஆதலால் வேலைக்காரரிடத்தில் நம்பிக் கொடுக்கப்போவது [illegible]; ஒருவரும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

கோமுட்டி அதைக்கேட்டு, [illegible] நியாயாதி காரி பூரணநம்பிக்கை வைத்திருக்கிறதை [illegible] சந்தோஷமடைந்து [illegible] [illegible] [illegible] [illegible] இப்போது எனக்கு [illegible] வேண்டுமா? [illegible] படியே தங்கள் பொருள்களையெல்லாம் என் சொந்தப் பொருள்போலவே காப்பாற்றுகிறேன். தங்கள் கட்ட ளைக்குக் கீழ்ப்படியாதிருப்பதுண்டாவென்றான். வர்த் தகன் சொத்தைக் கைப்பற்றினதுபோலவே இந்தப் பொருளையும் அவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொள் ளக் கருதினனென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை; அதனால் பின்னும் அவர்க்குத் தன்னிடத்தில் விசேஷ நம்பிக்கை தோன்றும்படி நெடுநேரம் பேசிவிட்டுக் கோமுட்டி வீடுபோய்ச் சேர்ந்தான்.

மறுநாள் வர்த்தகன், தன்னை வரும்படி நியாயாதி காரி நியமித்திருந்த தருணத்திற்கு வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து நியாயாதிகாரி நீ இப்போது நேரா ய்க் கோமுட்டி வீட்டுக்குப் போய் உன் பொருளைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்து கேள்; இல்லை யென்று சொல்வானாகில், உடனே நியாயஸ்தலத்திற் சென்று பிரியாது செய்வேன் என்று பயமுறுத்தும் படி சொல்லியனுப்பினான்; அவன் அவ்வாறே கோ முட்டி வீட்டிற்குப் போய்த் தன்பொருளைத் தரும்படி உரத்துக் கேட்க அவன் எது பொருள் பொருளென்று முன்போலவே ஓரே பிடியாய்ப் பிடிக்கவே வணிகன்



ஆனால் இனி எனக்கென்ன கதி? உடனே நியாயாதி காரியண்டை போய்ப் பிரியாது செய்யப்போகிறேன் என்றான்.

அதைக் கேட்கவே கோமுட்டி ஓகோ இதென்ன மோசமாயிருக்கிறதே! இந்தப் பிரியாதைக் கேட்டு நியாயாதிகாரி நான் மோசக்காரனென்று தெரிந்து கொண்டு தன் பொருள்களை அனுப்பாமல் நிறுத்திக் கொள்ளப்போகிறாரோ? இவனுடைய அற்ப பொரு ளுக்கு ஆசைகொண்டு [illegible] [illegible] படி யாகுமே! [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மாய் எடுத்துக்கொண்டு போகலாமென்றான். [illegible] [illegible] இவை யெல்லாம் உண்மையென்றே நம்பி அவ னிடத்தில் மிகவும் நன்றிபாராட்டித் தன் சொத்தைக் கைக்கொண்டு சந்தோஷமாய் நியாயாதிபதியண்டை வந்து பொருள் கிடைத்த சந்தோஷத்தை விண்ணப் பஞ் செய்தான். அதைக்கேட்டு நியாயாதிகாரி நகைத்து இனி நீ தாரதம்மியமறியாமல் ஒருவனை நம்பி இப்படிப் பட்ட செய்கை ஒருபோதுஞ் செய்யவேண்டாம்; சாக் கிரதையாயிருந்து பிழைக்கக்கடவை என்று கற்பித்து சொல்லி யனுப்பினான்.

அன்றையதினம் பொழுதுபட்டதும் படாததுமாய்க் கோமுட்டி தெருவில் வந்து உட்கார்ந்து தான் எதிர் பார்த்திருந்த அளவற்ற பொருள்கள் நியாயாதிபதியி னிடத்திலிருந்து வருமென்று இரவு முழுதும் கண் கொட்டாமல் அந்தத் திக்குநோக்கிப் பார்த்துக்கொண் டிருந்தான்; இவ்வங்காத்த கிளிக்கதையாய்விட்டது. அதனால் அவன் இதென்னவென்று சந்தேகமடைந்து மறுநாள் பொழுதுவிடிந்ததும் நியாயாதிகாரி வீட்டிற் குச் சென்று, நேற்றுராத்திரி சாமான்களை ஏன் அனு ப்பவில்லை என்றுகேட்க, நியாயாதிகாரி இதற்குக் கார ணந் தெரியாதோ! உன்னைப்போல் புரளிக்காரன் உலகத்தில் ஒருவனும் இல்லையென்று ஒரு வணிகன் சொல்லக் கேள்விப்பட்டேன். இனி இப்படிப்பட்ட பிரியாது ஏதாவதொன்று உன்மேல் வருமாயின், அதற்குத் தக்க தண்டனை உடனே நேரிடும்; இந்த வேளை மன்னித்துவிட்டேன்; என்முன் நில்லாமல் ஓடிப்போ வென்று வெருட்டித் துரத்தினான்.

## சண்டையைச் சார்ந்தவை

இரேட் பிரிட்டனில் இதுகாறும் யுத்தத்திற் சேர்ந் திருப்பவரொழிய, இன்னும் சேரக்கூடியவராக, தேக திடமும் வயதுமுள்ள 38-லட்சம்பேரிருக்கின்றனர்.

* *

பிரான்சு தேசத்தில் சுமார் 25,000-ஸ்திரீகள் ரயில் வேக்களில் ஸ்டேஷன் [illegible]களாகவும், கூலிக்கார ராகவும், தச்சவேலை செய்பவராகவும், பெருக்குபவ ராகவும், வண்டி சுத்திசெய்பவராகவு மிருக்கின்றனர்.

* *

[illegible] [illegible] வைதிகர்கள் 6-மாதத் [illegible] [illegible] இரண்டு வருஷங்களுக்கு மேற் [illegible] [illegible] [illegible] [illegible] கூலியாட்களாக [illegible] [illegible] [illegible] அழைத்துக்கொண்டு போகப் [illegible] தெரிகின்றது.

* *

இப்போது நடைபெறுவரும் யுத்தம் அடுத்த [illegible] மாசத்தில் முடிவு பெறுமாயின், பிரிட்டி [illegible] [illegible] 37-[illegible] [illegible] [illegible] வரையில் [illegible] ஏற்படுமென்று ஒரு நிபுணர் கணக் கெடுத்திருக்கின்றனர்.

* *

ஜெர்மனியிலுள்ள வாஸ்டர் பிட்ஸ் என்பவர் தூதி சமான மோட்டார் வண்டியைச் செய்து வருகின் றனராம். அதன்பெயர் ஸ்பீஸ்ட் என்பதாம்; அது நிலத்தில் மோட்டார் வண்டியாக ஓடுமாம்; நீரில் இழ்சீர்க்கப்பலாக ஓடுமாம்; விண்ணில் ஆகாயவிமான மாகச் செல்லுமாம்; அதனை எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாதாம்.

## விசேஷ வர்த்தமானம்

**புது இருப்புப்பாதை.**—சூரமங்கலத்திலிருந்து சேலம் வரைக்கும் 3½-மைல் தூரம் ரயில்பாதை போடப்பட்டு வருகின்றது.

*
* *

**ஆண் பெண்.**—இலங்கையில் பெண் தொகையிலும் ஆண் தொகை அதிகமாயிருக்கின்றது; அங்கு 113-புருஷருக்குப் பெண்கள் 100 பேர் வீதமாக விருக்கின்றனர்.

*
* *

**மாமிச நீக்கம்.**—இங்கிலாந்தில் ஆகாரவிலையேற்ற விசாரணைக் கமிட்டியார் வாரத்திலொருநாள் ஜனங்கள் மாமிசம் புசிப்பதை விடவேண்டு மென்று தெரிவிக்கின்றனர்.

*
* *

**சவுக்கார மெழுகுவர்த்திச் சாலை.**—மன்னார் குடியில் 1000-ரூபாய் மூலதனத்துடன் சவுக்காரமும் மெழுகுவர்த்தியும் செய்யும் சாலையொன்று ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

---

ஜெர்மனியைச் சேர்ந்த சால்ஸ்பரி என்னும் பிரதேசத்திலுள்ள மலைப்பாங்கான விடங்களில் ரயில் வண்டிகள் பெலூன் என்னும் புகைக் கூடுகட்டிச் செலுத்தப்படுகின்றனவாம். அந்தப் பெலூன்கள் ரயில் வண்டிகளை வாராவதி முதலிய விடமில்லாத விடங்களில் இலேசாகத் தூக்கிக்கொண்டு செல்லுகின்றனவாம். அந்த வண்டிகளில் 10-பேரேயேறவேண்டுமாம்.

*
* *

ஜெர்மானியர் மேற்காங்கத்திலுள்ள ஸெயிலி யென்னுமிடத்தில் தமது பகைவரினின்றும் தப்பித்துக் கொள்ள பூமிக்குக் கீழ்ச் சுரங்கப்பாதைகளைக் கட்டி வருகின்றனர். அச் சுரங்கங்களில் துருப்புக்கள் ஆயிரக்கணக்காகத் தங்கியிருக்க முடியுமாம். துருப்புக்கள் அப்பாதைகளின் மூலமாகக் குறித்த விடங்களுக்குப் போய்வரலாயாம்; அவற்றில் ரயில்பாதைகளும் போடப்பட்டு வருகின்றனவாம். அச்சுரங்கங்களி லிருந்து பூமிமட்டத்திற்கு வருவதற்கும், பூமியிலிருந்து அச்சுரங்கங்களி லிறங்குவதற்கும் மின்சார விசைத் தட்டுகளும் அவற்றில் வைக்கப்பட்டு வருகின்றனவாம். இதுகாறும் ஜெர்மானியார் இவ்வாறுய சுரங்கங்களைக் கட்டவில்லையாம்.

**திமிங்கலமீன்.**—நன்றாக வளர்ந்த திமிங்கல மீன் 10,000-மணங்கு பாரமுடையதாக விருக்குமாம்; அஃதாவது சுமார் 100 யானை பாரமுடையதாக விருக்குமாம்; அதற்கு வயது 400-ஆம்.

*
* *

**ஜனனம்.**—வருடவாரியில் 360 லட்சம் சிசுக்கள் உலகத்தில் பிறக்கின்றனவென்று ஒன்று கணக்கெடுத்திருக்கின்றனர். இந்தக் கணக்கின் பிரகாரம் ஒரு நிமிஷத்திற்கு 70 சிசுக்கள் ஜனனமாகின்றனவென்று கூறலாம்.

*
* *

**துர்க்கந்தம் மரணகாரணம்.**—பம்பாயில்வகுரோவ் என்னுமிடத்திலிருக்கும் சாக்கடைப் போக்கின் சந்தில் மூன்று கூலியாட்கள் வேலை செய்தபோது அவர்களில் ஒருவன் அதன் துர்க்கந்தத்தால் வியாதியடைந்திறந்து போனான்.

*
* *

**ஜப்பானில் பத்திரிகைகள்.**—ஜப்பான்தேச முற்றுமிப்போது சுமார் தினசரி பத்திரிகை வாரப்பத்திரிகை முதலியனவாக 2700 பத்திரிகைகள் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றன. அவை யனைத்தும் சுதேச பாஷையிலேயே பிரசுரமாகின்றன.

*
* *

**தந்தி விகித முயர்த்தப்பட்டது.**—சாதாரண தந்தியனுப்பவேண்டுமாயின், இப்போது 12-வார்த்தைகளுக்கு 6 அணா வீதம் வாங்கப்பட்டு வருகின்றது. டிசம்பர் மாதம் முதற்றேதி, 12-வார்த்தைகளுக்கு 8 அணா வீதம் வாங்கப்படும். 12-வார்த்தைகளுக்கு மேற்படும் வார்த்தை யொன்றுக்கு ½-அணா வீதம் வாங்கப்படும்.

*
* *

**கோபத்தால் கொலை.**—தென்மலையாளம், ஒட்டபாலத்தில் பத்து வயதுள்ள ஒரு பிராமணப் பெண் தன் தகப்பனார் உத்தரவை மீறித் தன் தாயாருடன் அண்டை யூருக்குச்செல்ல வீட்டை விட்டுப் போகும்போது, பிதா பெண்ணை மறித்துக் கத்தியால் வெட்டிக் கொன்றுவிட்டான். இவன் டிஸ்டிரிக்ட் முனிசீப்புக் கோர்ட்டில் ஸ்டாம்பு விற்கின்றவன்.

*
* *

**சதாயுஷ்.**—101-வயதுடைய மேரியா ரொசேரியோ பல்டாஞெ சென்றமாதம் 22-ந்தேதி இறந்துவிட்டனள். இவ்வம்மையாருக்கு 14-பிள்ளைகளிருந்தனர்; இந்தப் பிள்ளைகட்கு 37-பிள்ளைகள் பிறந்தன; இந்த 37-பிள்ளைகட்கும் 111-பிள்ளைகள் பிறந்தன. ஆக இவ்வம்மையாரின் குடும்பத்தில் 165-பேரிருந்தனர். இவ்வம்மையார் ரோமன் கதோலிக் கிறிஸ்தவர்.



*
* *

**செயற்கைப் பால்.**—ஜப்பானியர் ஸோயா என்னும் ஒருவிதக் கொடியின் விதையை நீரிலூறவைத்து, பின் அந்த நீரைச் சர்க்கரையையும் பொடாஷியம் பாஸ்பேட் என்னும் ரசாயனச் சரக்கையும் சேர்த்துக் காய்ச்சுகின்றனராம். அதனால் அந்த நீர் பாலைப் போலக் குணமுடையதாக விருக்கின்றதாம். இவ்வாறு செய்வதால், ஜப்பானில் பால் கஷ்டம் நீங்கிவிட்டதாம்.

*
* *

**பெங்களூரில் மழை விபத்து.**—அக்டோபர் மாதம் பெங்களூரில் பெருமழை பெய்தது; ஒரு கிழவி சாக்கடை வெள்ளத்தி லகப்பட்டுக்கொண்டு போய்விட்டாள்; ஒரு வாலிப ஸ்திரீயும் இறந்துபோனாள்; ஒரு பஞ்சம ஸ்திரீ குடிசை விழுந்தமையாலிறந்து போனாள். நாசப்பேட்டையில் 40-குடிசை வீடுகள் வெள்ளத்தில் முழுகிவிட்டன. இன்னும் பல நஷ்டங்கள் வெள்ளத்தா லுண்டாய்விட்டன.

*
* *

**நரபலி.**—செங்கற்பட்டு ஜில்லா சிறுனப்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் குப்புசாமி யென்னும் ஒரு மந்திரவாதி, சுப்பையனென்னும் ஒரு புரோகிதப் பிராமணனுடன் சேர்ந்து, ஒரு புதையலை யெடுப்பதற்காக, அய்யனூர்க் கிராமத்தில் வசிக்கும் நாராயணப்ப நாயுடு என்பவனையும், ஓராட்டையும் பலிகொடுத்து விட்டனன்.

*
* *

**மகம்மதிய காலேஜ்.**—ஹைதராபாத் நிஜாமரசர் வாணியம்பாடியிலுள்ள மகம்மதியக் கல்விச் சங்கத்தார்க்குத் தென்னிந்தியாவிற்கென்றே ஒரு மகம்மதியக் காலேஜி ஸ்தாபித்து நடத்த மாதந்தோறும் 1000 ரூபாய் தருகின்றோமென்றும், காலேஜி கட்டுவதற்காக 25,000-ரூபாய் கொடுக்கின்றோமென்றும் வாக்களித்திருக்கின்றார். அக்காலேஜி வாணியம்பாடியில் ஸ்தாபிக்கப்படுமென்று தெரிகின்றது. அலிகரிலும், லாகூரிலும், பெஷாவரிலும் மகம்மதியர்க்கென்று காலேஜிகளிருக்கின்றன.

*
* *

**ஜப்பான் வியாபாரம்.**—சைனாவில் 10 வருஷ காலத்திற்குள் ஜப்பானது பருத்தி நூல் துணி வியாபாரம் இருமடங்கு விர்த்தியா யிருக்கின்றதாம்; ஹாங்காங் நகரிலே 5 மடங்கு விர்த்தியா யிருக்கின்றதாம்; இந்தியாவிலே 20 மடங்கு விர்த்தியாயிருக்கின்றதாம். மான்செஸ்டரில் நெய்யும் நேர்த்தியான துணியும் ஜப்பானில் நெய்யும் நேர்த்தியான துணியும் சிறிதும் வித்தியாசமில்லாதிருக்கின்றனவாம். அங்ஙன மிருந்தும் ஜப்பானது துணி வியாபாரம் மான்செஸ்டர் நகரின் துணிவியாபாரத்திற்குக் குறைவாக விருக்கின்றதாம்.

*
* *

**இந்து விதவைகள்.**—ஐக்கிய மாகாணத்தின் தலைநகராகிய அலகாபாத்தில் நடைபெற்ற ஆசாரத்திருத்தக் கான்பரென்ஸில் மிஸ்டர்-ஆநந்த ஸ்வரூப் என்பவர் இந்து விதவைகளைப்பற்றிப் பேசியபோது 1911 வது வருஷத்து ஜன கணிதத்தின்படி ஐக்கிய மாகாணத்தில் 33, 83, 641 விதவைக ளிருந்தனவென்று கூறினார். இந்தியாவில் விதவைகளின் தொகை அதிகமாக விருப்பதற்குக் காரணம் பாலிய விவாகமேயாம்.

*
* *

**மதுபானத் தடுப்பு.**—சில தினங்கட்குமுன் லண்டனில் நடைபெற்ற ஒரு மீட்டிங்கில் ஒரு பிரபலமான டாக்டர் கூறியதாவது,—மதுபானஞ் செய்யும் தாய்மார்களது வயிற்றிலுள்ள கருப்பத்திற்குப் பெருந்தீங்குண்டாகின்றது. அத்தீங்கு ஒரு பிரசவத்திலிருந்து மற்றொரு பிரசவத்திற்கும் வியாபிக்கின்றது. கர்ப்ப ஸ்திரீகள் மதுபானஞ் செய்தல் கூடாது. அவர்கள் தமது நன்மையைக் கருதியே யல்லாமல் தமதுவயிற்றிலுள்ள கர்ப்பத்தின் நன்மையைக் கருதியும் மதுபானஞ் செய்யாதிருத்தல் வேண்டும். தாய்மார்கள் தாம் பிரஜாபிவிர்த்திக்குக் காரணமாயிருக்கின்றோமென்பதை நன்கறிந்து மதுபானஞ் செய்வதை யொழித்துவிடுவது மேன்மையைத் தருவதாகும்.

**சேலத்தில் வெள்ளத்தால் கஷ்டம்.**—சேலத்தில் பகலுமிரவுமோயாது பெருமழை பெய்ததனால் திருமணிமுத்தாற்றில் பெருவெள்ளம் வந்தது. வெள்ளம் ஊரில் விசேஷமாகப் பரவிவிட்டது. சுமார் 500 ஏழைகளுடைய வீடுகளிடிந்துபோயின; சுமார் 1000 குடும்பத்தினர் கஷ்டத்திற்காளாய்விட்டனர். பல ஆடு மாடுகளும் குதிரைகளும் வெள்ளத்திலகப்பட்டுப் போயின. மனித வுயிர்ச்சேதமில்லையென்று தெரிகின்றது. வெள்ளத்தால் சுமார் 50000 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நஷ்டமாயிருக்கலாமென்று மதிப்பிடப் படுகின்றது.

*
* *

**தபால் எழுதுவோர்க்கு எச்சரிக்கை.**—1915-16 வது வருஷத்து தபால் இலாகாவின் ரிபோர்ட்டால், 1915-வது வருஷத்தில் இந்தியாமுற்றும் 105-கோடியே 10-லட்சம் சாமான்கள் தபால் மூலமாக அனுப்பப்பட்டனவென்று தெரிகின்றது. இந்தியாவின் 3-ராஜதானிகளில் சராசரியாகத் தினந்தோறும் 132-சாமானகள் மேல்விலாச மெழுதாமல் தபாலில் போடப்பட்டனவாம். சாமான்களைத் தபால் மூலமாக அனுப்புகின்றவர்கள் அவற்றின்மீது மேல்விலாச மெழுத மறந்துவிட்டது ஆச்சரியமாகவே யிருக்கின்றது. இந்த ரிபோர்ட்டால் சுமார் கோடி கடிதங்கள் மேல்விலாசம் சரியாக வில்லாமையால் டெட்லெட்டர் ஆபீஸ்களுக்கு அனுப்பப்பட்டன வென்று தெரிகின்றது.

*
* *

**ஜெயில்களில் விதவைகள்.**—இந்தியாவி லுள்ள பெண்களுள் விதவைகளின் தொகை யதிகமாக விருக்கின்றதென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. வங்காள மாகாணத்து ஜெயில்களிலுள்ள 792 ஸ்திரீகளுள் 235 பேர் விவாகமான ஸ்திரீகள், 7-பேர் விவாகமாகாதவர், 273-பேர் விதவைகள், 187 பேர் கெட்ட நடத்தை யுடையராக விழிக்கின்றனரென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. பேகார் மாகாணத்து ஜெயில்களிலுள்ள 750 ஸ்திரீகளுள் 361 விதவைகள். ஐக்கிய மாகாணத்து ஜெயில்களிலுள்ள 963 ஸ்திரீகளுள் 420 பேர் விதவைகள். என்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. இக்கணக்கால் விதவைகள் தகாத காரியம் பல செய்து ஜெயிலுக்குப் போகின்றனரென்று தெரிகின்றது. விதவைகளுக்குச் சன்மார்க்க நெறியைப் போதிப்பவராங்காங் கிருப்பாராயின், அவர்கள் தகாத காரியங்களைச் செய்வதும் ஜெயிலுக்குப் போவதும் குறைந்து வரும்.

*
* *

**சென்னப்பட்டணம்**—R. K. S. என்பவர் லோகோப காரியில் பின்வருமாறு எழுதுகிறார்:—1565-வது வருஷம் சந்திரகிரி அரசராயிருந்த வெங்கடராயரைச் சாலவனென்னும் அவரது மந்திரி சிறை செய்து அரசைக் கைப்பற்றியிருந்த காலத்து வெங்கடராயரது இரண்டாவது புத்திரராகிய ஸ்ரீரங்கராயர் ஒரு வண்ணானால் ரக்ஷிக்கப்பட்டார். அவர் அப்போது 12-வயது பிராயமுடையவராக விருந்தார். அவர் காலக்கிரமத்தில் வயது முதிர்ந்தபோது செங்கற்பட்டுக்குத் தலைவராயினர்; அக்காலங்களில் சாலவனுக்குப் பயந்து வேஷமாற்றி "சென்னப்பன்" என்னும் பெயரை வைத்துக்கொண்டிருந்தனர். தெய்வ சகாயத்தால் இவர் தமது பழைய சந்திரகிரி நகர்க்கே அரசராயினர். அக்காலத்தில் இந்தியாவில் வியாபாரத்தின் பொருட்டு வந்திருந்த ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்காரருள் ஒருவராகிய "மிஸ்டர் டே" என்பவர் சென்னப்பனிடம் மயிலாப்பூருக்கு வடபாகமாக வியாபாரத்தின் பொருட்டுச் சிறிதிடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே சென்னப்பர் சிறிதிடத்தைக் கொடுத்தார். இவ்விடம் 1639-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல்தேதி கொடுக்கப்பட்டது. அவ்விடத்திற்றான் இப்போது போர்ட் செயின்ட் ஜார்ஜ் (Fort Saint George) என்னும் கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. காலக்கிரமத்தில் அதன் சுற்றுப்பக்கங்களில் ஜனங்கள் குடியேறத் தொடங்கினர்; அது வரவரப் பெரிய பட்டணமாய்விட்டது. இங்ஙனம் மேன்மையடைந்த அந்நகரத்திற்கு "ஸ்ரீரங்கராய பட்டணம்" என்னும் பெயரையளிக்க வேண்டுமென்று கம்பெனிக்காரர்கள் விரும்பியபோது, தாம் பின்னர் வைத்திருந்த பேர் சென்னப்பனுதலின் "சென்னப்ப பட்டணம்" என்பதே தகுமென்று ஸ்ரீரங்கராயர் கூறினர். அங்ஙனமே இப்பெயர் கூறப்பட்டது. அப்பெயர் காலத்தால் லோபித்து சென்னப்பட்டணமென்றாயிற்று.

---

205
CENTRAL LIBRARY 27 NOV 1918 MADRAS.

உ
ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 4] 1917ளு நவம்பர்மீ [சஞ்சிகை 4

## ஒளிவளர் விளக்கு

இந்தளூர் சுப்ரமண்யம் என்னுமொரு நிருபர் சென்ற ஜுலைமீ 6உ வெளியான சென்னை திராவிடன் பத்திரிகையில் எழுதியுள்ள 'சம்பாஷணை' யொன்றில், வியாசர் "ஐந்து வேதங்களை நான்கு வேதங்களாகவும், பஞ்சமுகப் பிரம்மாவை நான்முகப் பிரம்மாவாகவும் * * எழுதினர்" என்று குறிப்பிட்டுள்ள வாக்கியம் கவனிக்கத் தக்கதென்று நமது நண்பரொருவர் குறிப்பிட்டனுப்புகிறார். இவ்வபிப்பிராயமுடையோர் பலரிருக்கின்றன ரென்பதில் சந்தேகம் சற்றுமில்லை.

*
* *

மதுரை திருமலைநாயகருடைய காலத்திற்கு முன், திருவாவினன்குடியென்னும் பழநி க்ஷேத்திரத்தில் ஓதுவார் என்னுங் கூட்டத்தாரே சுப்ரமண்யப் பெருமானுக்கு அபிஷேகம் அருச்சனை, ஆராதனை, நைவேத்திய முதலியவற்றையெல்லாம் நடத்திவந்தனரென்றும், ஷை அரசர்காலத்தில் அவரிடம் மந்திரியாயிருந்த கிருஷ்ணையர் என்பார் சுவாமி தரிசனார்த்தம் அங்கு சென்றபோது ஓதுவார்கள் அவருக்கு விபூதிப்பிரசாதமளிக்க, அதை அவர் பெற்று தரித்துக்கொள்ள மனமில்லாது சென்று தமதரசரிடம்தெரிவித்து, ஓதுவார்கள் அருச்சகர்களா யிருப்பதினால் தமது வருணத்தார் பழநியாண்டவரைச் சேவித்தற்கு இடைஞ்சலா யிருப்பதுபற்றி அவர்களை நீக்கித் தமது வருணத்தாரை அருச்சகராக்கினரென்றும், அதுமுதல் ஓதுவார் அருச்சகஸ்தானத்தினின்றும் அகற்றப் பட்டார்களென்றும், இப்போதும் பழநி ஸ்தலத்துப் பண்டாரங்கள் கூறக் கேட்கின்றோம். இதனுண்மையை விளக்கக் கூடிய ஆதாரங்களை அறிவார் அவற்றைவெளிப்படுத்தல்நன்றென்று ஒருநிருபர் விரும்புகின்றார்.

*
* *

ஜப்பான் தேசத்தில் 6-சிற்பவேலை கற்பிக்கும் பாடசாலைகளும், 4400-கைத்தொழிற் பாடசாலைகளும், 119 வர்த்தகப் பாடசாலைகளு மிருக்கின்றன. இப்பாடசாலைகளில் 2-லட்சம் மாணவர்கள் வாசித்து வருகின்றார்கள்; ஆதலால் ஜப்பானியரில் பெரும்பாலார் தொழில் வல்லபம் மிக்கவர்களா யிருக்கின்றனர். இவ்விதப்பாடசாலைகளை இந்தியாவிலும் ஏற்படுத்த வேண்டுமென்னும் முழக்கம் மிகுத்துவருகிறது. அங்ஙனஞ் செய்யச் செய்யப் பலஜாதியாரும் ஏராளமாய்த் தொழில்களைக் கற்றுக் கொள்ளுவார்கள், நாமோ ஐந்து தொழிலாளிகளா யிருந்தும் அவற்றை ஏற்கனவே அன்னியர்கைக் கொடுத்துவிட்டு ஏங்கி நிற்கின்றோம். தொழிற்கல்வி பரவப்பரவ நமது நிலையே இன்னும் கேவலமாகும். நம்மவர் பிழைப்புக்குப் பேராபத்து நேரிடும். இதை யுணர்ந்து நம்மனோர் நவநாகரீகத்திற் கேற்றபடி ஜனங்கள் விரும்புவனவும் அவர்களுக்கு அவசியமா யிருப்பனவும், பிறநாடுகளிலிருந்து இறக்குமதி யாவனவுமாகிய பொருள்களைச் செய்தளிக்க முயலவேண்டும். இதற்கான ஆலோசனைகள் செய்துழைக்க ஆங்காங்கு கைத்தொழிற் கழகங்கள் சீக்கிரமே ஏற்படவேண்டும்.

*
* *

கோயில்பட்டிக் கருகே சிப்பிப்பாறை யென்னுமொருகிராம மிருக்கின்றது. அந்தக் கிராமத்தில் அந்நிய கிராமத்திலிருப்பவர் செருப்புப் போட்டுக்கொண்டு போதல் கூடாதாம். குடை பிடித்துக்கொண்டும் போதல் கூடாதாம்; அந்நிய கிராமத்தார் அக்கட்டுக்கடங்காது போனால்

பெரிய கலகம் ஏற்பட்டு விடுமாம். இவ்வநாகரிக வழக்கத்தை அதிகாரிகள் ஒழிக்காதிருப்பது ஆச்சரியமாக விருக்கின்றது. சர்வசமத்துவம்; சர்வ சுதந்தரத்துவம், சர்வ சகோதரத்துவம் வேண்டுமென்னு மிக்காலத்திலுமா இத்துர் வழக்கமிருத்தல் வேண்டும்? சில கிராமங்களில் கிராமத்தாருள் சிலர் திண்ணைவைத்து வீடுகட்டல் கூடாதாம். கலியாணகாலத்தில் வாழை மரத்தை ஒருமுழந் தூக்கிக் கட்டவேண்டுமாம். பிரிட்டிஷ் ராஜாங்கம் இந்நாட்டில் நிலைபெற்று நூறுவருஷங்களுக் கதிகமாகியும் இன்னும் இவ்விதத் துன்பங்கள் இங்கு நடைபெறுகின்றன வென்றால், இந்தியாவுக்குச் சுயஆட்சி கிடைக்கும்பக்ஷத்தில் என்னென்ன துன்பங்கள் ஏற்படமாட்டா? ஆதலினாலேதான், இந்திய க்ஷேமத்தைக்கோரும் ஜனத்தலைவர்கள் ஹோம்ரூல் என்னும் சுயஆட்சி தற்போது பாரத தேசத்திற்குக் கொடுக்கப்படலாகாதென்று அரசாங்கத்தாருக்கு விளக்கி வரலாயினர்.

* * *

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் வாக்கியத்தின் உண்மையை நிதரிசனப்படுத்துவதற்கு இதுவரையிலும் எத்தனையோ சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. ஆயினும், எல்லோர் மனத்திலும் இப்போது நன்றாய்ப் பதிந்திருப்பது ஸ்ரீமதி அன்ன வசந்தையம்மாள், மிஸ்டர் வாடியா, மிஸ்டர் அரண்டேல் இவர்களின்விடுதலையே. இவர்கள் அராஜகச்செயல்களிலீடுபட்டிருப்பதாக சென்ற ஜூன்மீ 16உயில் இவர்களைத்தனிவைத்த அரசாங்கத்தார், இவர்களை விடுவிக்கவேண்டுமென்று இந்தியவாசிகள் மும்முரமாகவும், பிடிவாதமாகவும் மன்றாடியதால், செப்டம்பர்மீ 17உயன்றிரவு விடுவித்து விட்டனர். இவ்விஷயத்தைப்பற்றி யாம் எழுதவந்தோமில்லை. முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடு மென்பதையே காட்டவந்தோம். ஆச்சாரிப்பட்ட சம்பந்தமாய் நம்மவர்கள் கொண்டிருக்கும் முயற்சியையெண்ணும்போது நகைப்பும் துக்கமும் திகைப்பும் சினமுமுண்டாகின்றன. என்னே நம்மவர் முயற்சி! என்னே இவர்களுடைய அவமான உணர்ச்சி! அந்தோ! அந்தோ! கூரையேறிக் கோழிபிடிக்க மாட்டாதார் வானங்கீறி வைகுந்தங் காண்பரோ?

* * *

செங்கற்பட்டில் ஸ்வர்ணவேலையில் மிகத் தேர்ச்சிபெற்றவராக ஸ்ரீ அப்பாய் பத்தரென்பவரொருவரிருக்கின்றார். இவர் அற்புத வேலைப்பாடுள்ள வஸ்துக்கள் பல செய்து இந்திய ஆங்கிலேய கனவான்களுடைய நன்மதிப்பை அடைந்திருக்கின்றார். சமீபத்தில் லால்குடியில் நடைபெற்ற பொருட்காக்ஷிக்கு இவர் இரண்டுஅரிசிகளில் தம்மால் செதுக்கப்பட்ட சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி உருவங்களை யனுப்பிப் பரிசுபெற்றாரென்றறிந்து மிக மகிழ்கின்றோம். இத்தகைய விசித்திரவேலை மிகவும் கொண்டாடற் குரியதேயாயினும், தினசரி உபயோகத்திற்கு வேண்டியிருப்பனவும் தற்காலம் உள் நாட்டில் செய்யப்படாதனவாய் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவனவுமாகிய பல உலோக சாமான்களைச் செய்வதில் நம்மவர்களுடைய கவனம் அதிகமாய்ச் செலுத்தப்படவேண்டியதா யிருக்கிற தென்பது எமது அபிப்பிராயம். கட்டடவேலை, மரவேலைகளாதியவற்றிற்கும், குடும்ப உபயோகத்திற்கும் மற்றைக் காரியங்களுக்கும் வேண்டியனவான பல இரும்பு சாமான்கள், பித்தளை சாமான்கள் முதலியவற்றை நம்மவர்கள் செய்யப்பழகுவார்களானால் நல்ல வருமானம் பெறுவார்கள் என்பது நிச்சயம். மநு, மய, த்வஷ்டி, சில்பி வகுப்பினர்கள் தங்கள் தங்கள் தொழில்களை அபிவிர்த்தி செய்யத்தக்க மார்க்கங்கள் அனந்தமிருக்கின்றன. இவர்கள் நாளுக்குநாள் தங்கள் வகுப்புத் தொழில்களைக் கைவிட்டு விஸ்வக்ஞவகுப்புத் தொழிலை மேற்கொண்டு வருவது நமதுஜாதிக்கு மிக அபாயகரமான இயக்கமென்றே நினைக்கிறோம்.

* * *

சோழநாட்டில் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி தாலூக்கா தில்லைவிளாகம் பாண்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள இடும்பாவனத்திற்குக் கீழேயுள்ள துளசா பட்டணத்திற்குச் சமீபத்தில் குன்னலூர் என்னும் பெரிய கிராமத்தின் மத்தியில் கொல்லன்திடல் என்னுமொரு குக்கிராமமிருக்கின்றது. ஔவைப்பிராட்டியார் பசியால் வருந்திப் பல விடங்களில் ஆகாரங்கேட்டும் கிடைக்காமல் இத்திடலிலுள்ள மனுவாச்சாரியொருவர் வீட்டிற்குவந்து பிச்சைகேட்க, அவர் மனமிரங்கி ஔவையாரைத் தமது உலைக்கூடத்தில் குளிர்காய்வித்து அன்னமளித்து ஆயாசந் தீர்த்தனர். ஔவையார் அங்கேயே சிலநாள் தங்கி மனுவாச்சாரி வீட்டு விவாகமொன்றுக்குச் சேர சோழபாண்டியர்களை விருந்தாக வரவழைத்ததாகவும், இவ்வரசர்களுக்கு விருந்துண்ண "பங்குக்கொரு பழந்தருவாய்" என்று கூறிப் பனம்பழம் வருவித்துப் படைத்து விருந்து செய்தனுப்பியதாகவும் தெரிகிறது. இம் மனு வாச்சாரி தவிர மற்றையோர் தம்மீதிரங்காமையால்,



வள்ளையும் கொள்ளையாகி
வளவனும் போராகி
கொல்லன்திடல் தவிர
கொள்ளாய் பெருங்கடலே.

என்று ஔவையார் கூறியதால் நாளதுவரையிலும் எவ்வளவோ புயல்காற்று மழை நேரிட்டாலும் இத்திடலானது சமதரையாக நன்செய் நிலங்களிடையே யிருந்தாலும், ஔவையார் தங்கிய மேடையிலும் அதைச் சுற்றிலும் தண்ணீர் கொள்வதில்லை. இங்கு ஔவையார் கோவிலை ஏற்படுத்திப் பூசித்து வருகின்றனர். இத்திடலுக்குக் "கோரப்பன் திடல்" என்றதொரு பெயருமிருப்பதா யறிகிறோம்.

* * *

ஸ்ரீமத் மாணிக்க யோகீந்திரர் சென்ற 1917-வருஷம் ஜூலைமீ 11உ யன்று விதேகமுத்தியடைந்தாரென்பதறிய நமது வம்ஸத்தினரெல்லோரும் மிகவருத்த மடைவார்களென்பதிற் சந்தேகமில்லை. இவர் தஞ்சை ஜில்லாவிலிருந்து சற்றேறக்குறைய 35 வருஷங்களுக்கு முன் சென்னைக்கு விஜயமாகிச் சந்நியாசம் பூண்டிருந்தனர். இவருக்குத் தமிழ் ஆந்திரம் சமஸ்கிருதமாகிய மூன்று பாஷா பாண்டித்தியமுண்டு. இப்பாஷைகளில் சிலநூல்க ளியற்றி யிருப்பதாகவுமறிகிறோம். இவற்றுள் முக்கியமானவை நாகரகாண்ட உரை, பஞ்சப் பிரம்மான்வய தீபிகை, கோத்திரகாண்டம், விஸ்வகர்ம சஹஸ்ரநாமம். இவையின்னும் அச்சேறவில்லை. இன்னொரு துக்ககரமான மரணமும் சமீபகாலத்தில் நேரிட்டது. இராயவேலூருக்குச் சமீபமாயுள்ள கணியம்பாடி வாசியாயிருந்த ஸ்ரீ அத்தியாபகலிங்காச்சாரியாரை நமது வாசகர்கள் அனைவரும் நன்கறிவர். ஸ்ரீ பண்டித-மார்க்க சகாய ஆச்சாரியார் பந்துவும், தமிழ் வித்துவானும், பெருங்குலாபிமானியும், குலசாஸ்திரங்கள் பலவற்றை நன்காராய்ந்தவருமாகிய இம்மகா புருஷர் சென்ற ஆனிமீ 4உயன்று பரலோக வாழ்வடைந்தனர். இவரும் முற்கூறிய சுவாமிகளும் குலப்பற்று பெரிது முடையவரேனும் சாஸ்வதமான நன்மையேதும் தமது ஜாதியாருக்குச் செய்துவையாது போயினது மிகவும் அதிருப்தியே. இவர்கள் ஜாதியிடேற்றத்தில் அம்மாலான உதவிசெய்து வந்தனரென்பதையும், இவர்களுற்பவத்தாலும் பாண்டித்தியத்தாலும் போதனைகளாலும் நமது வம்ஸாபிவிருத்திக்குத் துணையேற்பட்டிருந்ததென்பதையும் யாம் மறுப்போமில்லை. எனினும், இன்னும் பன்மடங்கதிகமாய் இவர்கள் துணைபுரிந்து தமது கீர்த்தியை நிலைநாட்டி யிருக்கவேண்டுமென்பது எமதபிப்பிராயம். மற்றுள்ள அபிமானிகளாயினும் அங்ஙனஞ் செய்வார்களென் றெதிர் பார்க்கிறோம்.

* * *

சென்னை அகவுண்டண்ட் ஜெனரல் ஆபீஸ் சூபரின்டென்டென்டா யிருந்து பென்ஷன் பெற்றவரும், நமது ஜாதியாருக்குள் மிகச் சிறந்த பதவிபெற்று விளங்குபவரும், பிறஜாதிப் பிரமுகர்களுடைய நன்மதிப்பு மிகவு மடைந்தொளிர்பவரும், நங்குல நாயகமெனச் சொல்லத்தக்கவருமாகிய ஸ்ரீ எதுமலை T. கேசவ ஆச்சாரியாரவர்கள் சென்னை நகரத்து ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டுகளிலொருவராகக் கவர்ன்மென்டாரால் நியமனமுற்றாரென்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவிக்கலானோம். இந்நியமனம் தென்னிந்தியாவிலுள்ள நமது குல மக்களுக்கெல்லாம் குதூகலமுண்டாக்குமென்பதில் சற்றுஞ் சந்தேகமில்லை. அரசாங்க அதிகாரிகளுடைய மனத்தில் இவர் எவ்வளவு உன்னத ஸ்தானத்தை அடைந்திருக்கிறாரென்பதை இந்நியமனம் நன்கு சூஸிப்பிக்கின்றது. பல வருஷங்களுக்குமுன் சென்னை கோமளேஸ்வரன்பேட்டையில் ஸ்தாபிக்கப்பட்ட விஸ்வகர்ம குலாபிமான சங்கத்திற்குச் சிலகாலம் இவர் தலைவராயிருந்தார். சுஜாதி முன்னேற்ற சாதகமான பல நல்லபிப்பிராயங்கள் இவர் கொண்டிருக்கிறாரென்பது நிச்சயமேயெனினும், அவை நன்கு வெளிப்படாமை நங்குலத்தினர்க்கோர் குறையென்றே கொண்டிருக்கின்றோம். சுஜாதிக் கான்பரன்ஸின் தலைமை வகிக்க இவரினும் மேம்பட்டார் நம்முளில்லையெனினும், அந்த ஸ்தானத்திற் கிவரைப் பெறும் கௌரவத்தையும், அவ்வழி இவரது சற்போதனை கொள்ளும் பாக்கியமும் நம்மவரின்னும் அடையாதிருப்பது வியப்பேயாம். எல்லாம்வல்ல இறைவர்இவருக்கு தீர்க்காயுளும் திடகாத்திரமுமளித்து இவரைச் சுஜாதியருக்கு மிகப் பயன்படுத்தி யருள்வாராக.

* * *

மதுரையில் சௌராஷ்டிர பாடசாலையைச் சார்ந்து கட்டப்படும் விடுதிக்கு அஸ்திவாரக் கல்லிடும்போது, சென்னை மாகாணத்து இரண்

டாவது கவர்னரெனச் சொல்லப்படத் தக்க பதவி வகித்திருக்கும் ஸர் அலெக்ஸாண்டர் கார்ட்யூ துரையவர்கள் சௌராஷ்ட்ர ஜாதியாரைப் பிராமணரல்லாத ஜாதியாருளொருவராகக் கொண்டதற்காக, அந்த ஜாதியார் மனஸ்தாபமுற்றுத் தாம் பிராமண ஜாதியாரென்பதை மகஜர்களினாலும், பொதுக்கூட்டத் தீர்மானங்களினாலும், தந்திகளினாலும் அவருக்கறிவித்தனர். இவ்வறிவிப்புப்பெற்றவுடன் ஷை துரையவர்கள் தாம் கூறிய வார்த்தைக்கு வருந்துவதாகத் தெரிவித்ததுடன், சௌராஷ்டிரர் பிராம்மணரேயாயின் அவர்கள் தற்காலம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுபோல் கல்வி விஷயத்தில் பிற்பட்ட வகுப்பாரெனக் கொள்ளப்படுதற்கு நியாயமில்லையென்றும், அரசாங்கத்தாரிடமிருந்து பிற்பட்ட வகுப்பினருக்குரிய சௌகரியங்களை எதிர்பார்ப்பது தகாதென்றும் பொருள்படும்படி யெழுதியிருக்கிறார். பிராம்மணரெனச் சொல்லிக்கொள்வோரெல்லாம், கூரியபுத்திமான்களாகவும், சுயபலமிக்கவர்களாகவும், கல்வியில் தேர்ந்தவர்களாகவும் இன்னோரன்ன சிலாக்யகுணங்கள் மிக்கவர்களாகவுமிருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தாருடைய கருத்தா யிருக்கின்றதென்பது இதனால் வெளிப்படுகின்றது. இந்த அளவு கொண்டு அளந்து பார்ப்பதென்றால், விஸ்வப்பிராம்மணரெனும் நாம் பிராம்மணரெனப் படுதற்கு எவ்வளவு அருகரா யிருக்கிறோமென்பதை நமது குலப்பிரமுகர்கள் ஆழ்ந்து நோக்க வேண்டும். பிற்பட்ட வகுப்பாராய் நமது ஜாதியாரை அங்கீகரித்து, வித்தியாசாலைகளில் அரைச் சம்பளத்திற்கு நமது சிறுவர்களுக்குக் கல்விபோதிக்கவேண்டுமென்று இதுவரையிலும் தென்னாட்டிலிருந்தும் ஆந்திர தேசத்திலிருந்தும் நமது ஜாதியார் செய்துகொண்ட விண்ணப்பங்களையெல்லாம் வேறு காரணங்கள் கூறி மறுத்து விட்டனர். இப்போது புதிதாகிய காரணமொன்றுஞ் சேர்ந்துவிட்டது. இந்நிலையில், நமது வித்தியார்த்திகளுடைய கல்வியபிவிருத்திக்கு விசேஷ சௌகரியங்கள் தரவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள விஸ்வகர்ம மகாஜன கான்பரன்ஸ் தோறும் செய்யப்படும் தீர்மானங்கள் எவ்வளவு பயன் தருமோ அறிகிலோம். தன் சக்தியைப் பெருக்கவும் அதைக் கையாளவும் முயலாது பிற சக்தியையே யெதிர்பார்த்துக் காலம் போக்குதல் சிறந்தகுணமாகத் தோன்றவில்லை.

*

நமது சிறுவர்களை மிக இளம்பிராயத்திலேயே தொழில்களில் நுழைப்பதினால் அவர்களுக்கும் அவர்களா லாக்கப்பட்டிருப்பதாகிய நமது ஜாதிக்கும் பெருநஷ்டமும் கெடுதியும் உண்டாகின்றன. இளம்பிராயத்திலேயே தொழில்களில் புகுத்தப்படுவோர் கல்வி நலத்தை ஒரு சிறிதும் பெறுதொழிகின்றனர். எனவே, கல்வியால் கிடைக்கலாகும் பல நன்மைகளும் இவர்களுக்கு மறுக்கப்பட்டொழிகின்றன. மேல் நோக்கம், குணவன்மை, சொல்லுறுதி, புத்தி தீக்ஷண்யம் முதலியவற்றை இவர் பெறாகின்றனர். ஆகவே, இவர்கள் தாம் கைக்கொள்ளும் தொழில்களில் மிக்க தேர்ச்சியும் திறமையும் பெறுதலும் அவைகளை நாணயமாய் முடித்துக் கௌரவம் பெறுதலும் கூடாமையாகின்றது. ஆதலால், கௌரவக் குறைவும் வருமானக் குறைவுமேற்பட்டுத் தாழ்வும் ஏழ்மையுமே பிராப்தியாகின்றன. இதனாலேதான் நமது ஜாதி கூலிக்காரர்களது கூட்டமாயிருக்கின்றது. இம்மட்டேயோ? இளமையிலேயே தொழிற் பயிற்சி பெறுவதால் சிறுவயதிலேயே சில்லரைப்பணம் சிக்குகிறது. பண உபயோக மறியாதகாலத்தில் பணங்கைப்பட்டால் அது துர்விநியோகமடைதல் ஆச்சரியமா? ஆதலால், சிறுவயது முதலே நம்மவர்கள் துர்ப்பழக்கங்கள்பலவும் பெறுகிறார்கள். வீண்செலவுசெய்யத் தலைப்படுகிறார்கள். இவை மிஞ்சும் அளவுக்கேற்றபடி அதிகப்பணம், கைச்செலவுக்குத் தேவையாகிறது. தொழில் திறமையினால் அதிக சம்பாத்தியம் பெறுதல் கூடாமையென்று மேலே சொன்னோமாதலால், யோக்கியமற்றவழிகளால் பணந்தேடவேண்டிய அவஸியமுண்டாகிறது. இளமையிற் கொண்டபழக்கம் இலேசில் விடுபடுமா? தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும் தொடருமன்றோ? சிறு பிராயத்தேற்பட்ட வீண்செலவுக் கேற்பப் பிற்காலத்துச் செய்தற்கேலாதாராய் நம்மவர்கள் பல துன்பங்களடைவதோடு நாணயக் குறைவான மார்க்கங்களை யநுசரிக்கவும் தூண்டப்பட்டுத் தமக்கும் தமது ஜாதிக்கும் ஏழ்மையையும் தாழ்மையையும் வருவித்துக் கொள்ளுகிறார்கள். நமது சிறுவர்களை இளம் பிராயத்தில் தொழில்களிற் புகுத்துவதால் இத்தனை விபரீதங்களுண்டாகின்றன. ஆதலால், நமது ஜாதியின் நன்மையைக் கருதுபவர்களாய், நமது ஜாதியார்கள் தொழில்களில் மிகத் தேர்ச்சிபெற்று நாணயமிக்கவர்களாய்ப் பெருஞ்



னிலையில் நல்ல அந்தஸ்துபெற்று வாழ வேண்டுமென்று உண்மையில் எண்ணங்கொண்டவர்களாய், அதற்கான வழிபற்ற விரும்புவோராயுள்ளவர்களெல்லாம், குறைந்தபக்ஷம் 15-வயது வரையிலாகிலும் தமது சிறுவருக்குக் கல்வி கற்பிக்கட்டும். இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் ஜாதிக்கும் சுகமுண்டாகும். 15-வயதுக்குமேல் வித்தையில் விருப்பங்காட்டா மக்களுக்குத் தொழில் போதனைசெய்யலாம். வித்தையில் விருப்பங்காட்டுவோருக்கு உயர்தரக் கல்வி போதிக்கலாம். இக் கல்வி தொழில்களுக் கனுகூலமான கல்வியாயமைத்தல் மிகச் சிலாக்கியமாகும்.

* * *

கூட்டுறவுச் சங்கங்கள் நமக்குள் ஏற்பட்டால் இரும்பு, தாரு, பித்தளை, வெண்கலம், சிலை முதலியன சம்பந்தமான தொழில்களை விருத்தி செய்யலாம் என்னும் அபிப்பிராயங் கொண்டவர்களாய்ப் பலர் நம்முளிருக்கிறார்களென் றறிகிறோம். இது நல்லபிப்பிராயமென்றே தோன்றுகிறது, தனித்து முதல்வைத்துத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து நடத்தக்கூடிய கனவான்கள் நம்முள் காணப்படவில்லை. ஆதலால், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலதனத்தைக் கூட்டுறவினால் சேகரிப்பதே முறைமையாகும். சிறுதொகைகொண்ட பங்குகள் ஏற்படுத்தினால், பலரும் பங்கெடுத்துப் பொருளுதவிசெய்யவும் பெரும்பொருள் சேரவும் ஹேதுவுண்டாகும். இதை நமது குலத்தலைவரெனப்படுவோர் முக்கியமாய்க் கவனித்துழைக்க வேண்டுகின்றோம். சென்னையிலும் மற்றைப் பட்டணங்களிலும் பல ஜாதியார் Foundry என்னும் வார்ப்புப் பட்டரை முதலியவைகளை வைத்துக்கொண்டு மிகச்செழிப்பாய் வாழ்ந்துவருவது காண்கின்றோம். இவர்களிடம் கூலிவேலை செய்பவர்கள் முக்கியமாய் நம்மவர்களாகவே யிருக்கிறார்கள். கஷ்டமான அடிபிடிவேலைகளெல்லாம் நம்மவர்கள் செய்ய, மற்றையோர் மேல்பார்வை செலுத்துகிறார்கள். அவர்கள் பெறும் சம்பளம் நம்மவர்களுடைய கூலியைவிடப் பன்மடங் கதிகமாயிருக்கும். அந்த ஸ்தானத்திற்கு உரிமை நம்மவர்களுக் கேற்படாதது நம்மவர்களுக்குக் கல்வியில்லாமை யினாலேயே யென்பதை யாவரும் நன்றாய் அறிந்திருக்கின்றனர். அஃதொருபுறமிருக்க, முதலில் ஒருபத்தாயிரம் ரூபாய் சேகரித்து சென்னைபோன்ற பெருநகரில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்துக் கிரமமாய் நடத்தினால் சிலகாலத்திலேயே ஜனங்களுக்குள் நம்பிக்கை ஊன்றிவிடும். அப்போது ஏராளமாய்ப் பங்குகளெடுத்துக் கொள்ளப் பலர் முன் வருவார்கள். தலைச்சாலையின் மூலதனத்தைப்பெருக்கி நவநவமான மெஷீன்களைவாங்கித் தொழில்களை லகுவாய்ச்செய்து அதிகலாபம் சம்பாதிக்கலாம். அன்றியும், முக்கிய ஸ்தானங்களில் கிளைச் சாலைகளை ஸ்தாபிக்கலாம். செய்யப்படக்கூடிய வஸ்துக்கள் அனந்தமிருப்பதினால், வேலைக்கு ஒருகாலத்திலேயும் குறைவிருக்கமாட்டாது. எனவே, நஷ்டமுண்டாகக் கூடுமென்ற பயம் எக்காலத்தும் இல்லை. முனிஸிபாலிடிகள், ஜில்லா, தாலுக்கா போர்டுகள், யூனியன்கள் முதலிய சங்கங்களுடைய வேலைகள் சதா நடைபெறச் செய்யலாகும். அதிகாரிகளுடைய அநுசரணை யேற்படத் தடையிராது. ஆதலால், தொழிற் ஜாதியாராய்த் தொன்றுதொட்டு நிலைபெற்றிருக்கும் நாம் முக்கியமாய்ச் செய்யத் தக்க காரியமிதுவேயாகும். சென்னைச் சித்திரவேலை வித்தியாசாலையின் உபதலைவரும், சிற்பவித்தியா வல்லபரும், நங்குலமணியுமான ஸ்ரீ M. வேலாயுதஆச்சாரியார் முதலிய மேதாவிகளும் இக்கருத்துடையவராகவே யுளர். அவர்களுடைய உபதேசங் கைக்கொண்டு நமது தலைவர்கள் காலஹரணமின்றி இக்காரியப் பிரவேசம் செய்வார்களானால், மற்றெருவிதத்தால் செய்யக்கூடாத பெருநன்மையை நமது குலத்திற்குச் செய்தவர்களாவரென்பது திண்ணம்.

* * *

சென்ற ஜூன் மாதத்தில் திருச்சிராப்பள்ளியில் யாழ்ப்பாணம் ஸ்ரீ N. சிவக்கொழுந்து ஆச்சாரியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற மூன்றாவது விஸ்வகர்ம மகாஜன கான்பரன்ஸ் உபசரணைக்கமிட்டித் தலைவர் உறையூர் ஸ்ரீ R. விஸ்வநாத ஆச்சாரியாரவர்கள் கூறியபடி, அவ்வூரில் பிரைமரிக் கல்விபயிலும் நம் சிறுவர் சிறுமிகளின் தொகை சுமார் 150; சகெண்டரி வகுப்புகளிலுள்ளோர் தொகை 13; உயர்தரக் கல்வி பயில்வோர் ஒருவரே. சென்னையில் இவ்வருஷத்தில், நாமறிந்தமட்டில், பீ. ஏ-க்குப் பின்னுள்ள இண்டர்மீடியேட் வகுப்புகளில் ஐவர் வாசிக்கின்றனர். சகண்டரி வகுப்புகளில் வாசிப்போர் சுமார் ஐம்பதுபேர் இருக்கலாம். படிக்கக்கூடிய சிறுவர் பலர் செலவுக்குவேண்டிய பணமில்லாமைபற்றி படியாது நின்றுவிடுவதாகத் தெரிகிறது. இவர்களுக்கு வேண்டியவாறு சகாயஞ் செய்ய வித்தியாநிதி

யொன்றை யேற்படுத்த வேண்டுமென்று யாம் பல தடவைகளிற் கூறியிருக்கிறோம். நமது சபைப் பொக்கிஷத்தினின்று இயன்றபோதெல்லாம் இவ்வித சகாயஞ் செய்யப்பட்டது. சபைத் தலைவரும் மற்றவர்களும் தனித்தனி பல சிறுவர்களுக்குச் சம்பளத்திற்கென்றும், சாப்பாட்டிற்கென்றும், புஸ்தகங்கள் முதலானவற்றிற்கென்றும் மாதவாரியில் கூடிய வரையில் பணங்கொடுத்துதவுகின்றார்கள். எனினும், தற்போது கிடைக்கும் இவ்வித சகாயம் விஸ்வகர்ம வித்தியார்த்திகளுக்குப் போதுமானதாயில்லை. எனவே, உள்ளபடியே படிப்பில் சிரத்தையுள்ளவர்களாகவும், படித்தற்கவசியமான புத்தியுள்ளவர்களாகவுமிருக்கும் மாணவர் பலர் பாடசாலைகளிற் சேர்ந்து படித்தற்கியலாது தவிக்கலாயினர். இது நமது ஜாதியாரெல்லோருக்குமே வருத்தமுண்டாக்கத் தக்க விஷயமென்பதில் தடையில்லை. ஆதலால், விஸ்வகர்ம வித்தியா நிதியென்பதொன்றைத் தனியாய்ச் சென்னையில் ஸ்தாபித்து அதற்கு எவ்வள வதிகமாய்ப் பொருள்வருவாய் உண்டுபண்ணக்கூடுமோ அவ்வளவையும் உடனே உண்டுபண்ணுவது நமது முக்கியப் பெருங் கடமையாயிருக்கிறது. பி. ஏ. வகுப்புகளுக்கு வருஷச்சம்பளம் ரூ 112; இண்டர்மீடியேட்டு வகுப்புகளுக்கு ரூ. 88; ஹைஸ்கூல் வகுப்புகளுக்கு ரூ 42. மேலே செல்லச்செல்ல சம்பளம் அதிகமாகின்றபடியால் அதற்குப் பயந்து நம்மவர் பின்னிடைய வேண்டியவர்களாகின்றனர். ஆனபடியால், உயர் வகுப்புகளுக்குத்தான் முக்கியமாய்ச் சகாயஞ் செய்ய வேண்டும். சம்பளத்திற்கும் சாப்பாட்டுச் செலவுக்கும்கூட சகாயங்கிடைத்தாலொழியப் படிக்க மாட்டாதவர்களும் பலர் ஏற்படுவார்கள். இவர்களுக்கெல்லாம் ஒருவாறு சகாயமளித்து விஸ்வகர்ம வம்ஸம் உயர்தரக்கல்வியிற் சிறந்து விளங்கச் செய்ய வேண்டுமாயின், ஆரம்பத்தில் வருஷவாரியில் குறைந்தபக்ஷம் ஓராயிர ரூபாய் அல்லது மாதவாரியில் ரூ 85-வருமானம் வேண்டும். கோமுட்டி ஜாதியாருடைய வித்தியா நிதிக்கு மாதவாரி வருமானம் ரூ 1500-ஏற்பட்டிருக்கிறது. இத்தொகையிற் சற்றுகுறையவேனும் வன்னியர், வேளாளர், சௌராஷ்டிரர் முதலியோருடைய வித்தியா நிதிகளுக்கெல்லாம் வருமானம் கிடைத்துவருகிறது. ஆதலால், அந்தச் சாதியா ரெல்லாம் மிகவிரைவாகக் கல்வியிற் சிறந்து வருகிறார்கள்; அவர்களில் படித்தவர்களுடைய தொகை அதிசீக்கிரமாய் அதிகப்பட்டுவருகிறது. அவர்களுக்குச் சமமாகவோ அதிகமாகவோ சேகரித்துதவ நம்மால் எக்காலத்திலும் ஏலாதென்றே சொல்லிவிடலாம். எனினும், அவர்களில் பதினெட்டில் ஒரு பங்கா யிருக்கவாகிலும் நாம் முயற்சிசெய்ய வேண்டாமா? பௌருஷேய மகாஜனங்களே! தலைக்கட்டொன்றுக்கு வருஷவாரியில் ஒருரூபா கொடுக்க முன்வந்தால், அவர்களினும் அதிகமாகப் பணந்திரட்டிவிடலாம். இதுவோ நடைபெறுதகாரியமென்று நம்பிக்கைகுலையவேண்டியதாயிருக்கிறது. முக்கியஸ்தர்களா யுள்ளவர்களாயினும் முதலிற்கொடுக்கத் தொடங்கினால் பிறகு பையப்பைய மற்றவர்களிடமிருந்தும் வசூலிக்கப் பிரயத்தனப்படலாம். கல்வியினருமையையும், அவஸியத்தையும், பலன்களையும் நன்கறிந்த கனவான்கள் தங்களால் எவ்வளவதிகமாய்க் கொடுக்க இயலுமோ அவ்வளவுஞ் சில காலங் கொடுத்து மற்றவர்களுக்கு உதாரணங் காட்டவேண்டும். இப்படித்தென்னாடு முழுவதுங் கிடைக்கும்பணத்தை வசூல் செய்து ஒருபெரு நிதியாக்க வேண்டும். தென்னாட்டில் எந்த ஊரில் வாசிக்கிறவர்களா யிருந்த போதிலும் பொருட்சகாயம் வேண்டியவர்களா யிருக்கும் பக்ஷத்தில் அதற்குத் தக்க அத்தாக்ஷிகளுடன் ஷை நிதியார்க்கு மனுசெய்துகொள்ளவேண்டும். அவ்வித மனுக்களெல்லாம் வருஷந்தோறும் மே மாதத்தில் கவனிக்கப்பட்டு, முன்வருஷவருமானத்திலிருந்து அதன் அளவுக்கேற்பத் தக்க மாணவர்களுக்குப் பொருளுதவி செய்யப்பட வேண்டும். இப்படிச்செய்தாக்கால், வருஷப் பிரதிவருஷம் இத்தனை பேர்களை முன்னேற்றினோம் என்ற திருப்தியும் ஆனந்தமும் பெருமையும் நமக்கெல்லாம் ஏற்படும். சில வருஷங்களிலேயே பலபட்டதாரிகளைப் பெறலாம். குலத்தொழில்களுக் கேற்ற வித்தைகளில் பலரைப் பயிற்றுவித்து தொழிற் சீர்திருத்தஞ் செய்வித்து குலச்செல்வத்தை விருத்திபண்ணலாம். நமதுஜாதியில் ரசாயனசாஸ்திரிகளும், விஞ்ஞான பண்டிதர்களும், சிற்பகலா (இஞ்சினீரிங்) வல்லபர்களும் உண்டாகுங்கால் உலோகங்கள், தாரு, சிலை யிவற்றோடு செய்யுந்தொழில்கள் எவ்வளவு விருத்தி பெறுமென்பதை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? ஆதலால், குலமணிகாள்! கொள்ளுமின்சிந்தை. வித்தியாதானத்தினும் விசேஷித்ததானம் இத்தாரணியில் எதுவுமேயில்லை. இதில் விநியோகிக்கப்படும் திரவியம் ஒன்றுக்கொன்பதாய்ப் பலன்தரும், நலன் தரும், பலவுந்தரும். அசட்டையாயிருந்து அருங்காலங் கழித்து அழிவுக்கே வழிதேடி அனாதரவாய் நிற்கின்றோம். ஆபத்துகள் பலவும் அடைந் தநுபவிக்கின்றோம். இன்னுஞ் சும்மாயிருந்தால் பின்னேயே தள்ளப்பட்டுப் பிள்ளைகளும் நாமுமாய்ப் பள்ளத்தில் அழுந்திப் பாழாவோம். ஆதலால், ஒரு நாளும் வீணாகப் போகாவண்ணம் உழைத்து விஸ்வகர்ம வித்தியா நிதியைச் சேகரஞ் செய்வோமாக.



# இந்திய ராஜீயக் கிளர்ச்சியும் விஸ்வகர்ம ஜாதியாரும்.

ஹோம்ரூல் என்னும் சுயஆக்ஷி இந்தியருக்கு அளித்துவிட வேண்டுமென்று இந்தியரில் ஒரு சாரார் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை வெகு மும்முரமாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி, சென்ற டிஸம்பர் மாதத்தில் வடஇந்தியாவிலுள்ள லக்நவ் என்னும் லக்ஷ்மணபுரியில் கூடிய இந்தியன் நாஷனல் காங்கிரஸ் சபையாரும், சர்வ இந்திய முஸ்லீம் கூட்டத்தாரும் சில விபரங்கள் குறிப்பிட்டு ராஜீய சீர்திருத்த திட்டயோசனைகளை வெளிப்படுத்தினார்கள். அவற்றை யநுசரித்து, வைஸிராய் சட்டசபையின் ஜனப்பிரதிநிதி மெம்பர்களென்று சொல்லப்படும் 27-பேர்களில் 19-பேர் கையெழுத்திட்டு ராஜீயச் சீர்திருத்த பிரேரபணைகளடங்கிய கடிதமொன்று, இங்கிலாந்திலுள்ள இந்திய மந்திரிக்கு அனுப்பினார்கள். இவ்விரண்டு திட்டங்களே ஹோம்ரூல் கக்ஷியாருடைய வேண்டுகோளாகும். இவற்றைத்தவிர்த்து ஹோம்ரூல் பிரேரபணைகளென வேறிருப்பதாக யாமறியோம்.

மேற்படியார்களுடைய விண்ணப்பங்கள் வெளியானபிறகே இந்தியாவில் ராஜீயக் கிளர்ச்சி அதிகப்பட்டது. இப்போது நமது நாட்டில் மூன்று ராஜீயக்கக்ஷியார்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். மூவரும் சுயஆக்ஷி இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்னும் கொள்கையினரேயாவர். இவர்களில் முதற்கக்ஷியார், சுயஆக்ஷி உடனே கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடுகிறவர்கள்; இரண்டாவது கக்ஷியார் இந்தியர் சுயஆக்ஷி உடனே பெறுவதற்கேற்ற ஸ்திதியில் தற்போதிருக்கவில்லையாதலால், இந்தியருக்குக் கல்வியும், ராஜீய சுதந்திர உணர்ச்சியும் அதைப் பரிபாலிக்கும் சக்தியும் ராஜாங்க காரியநிர்வாகத் திறமையும் பொதுப்பட எல்லா வகுப்பினருக்கும் ஏற்படுவதற்கேற்ப படிப்படியாய் சுயஆக்ஷி கொடுக்கப்பட வேண்டுமென்னுங் கொள்கையைப் பிரதிபாதிப்பவர்கள்; மூன்றாவது கக்ஷியாரோவெனில், ஜாதிப் பிரதிநிதிகள் சம்பந்தம் கொண்ட சுயஆக்ஷி உடனே இந்தியருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்கின்றவர்கள். இம்மூன்று கக்ஷிகளில் இரண்டாவது கக்ஷியில் பிராம்மணர்களெவரும் சேரவில்லையென்றே சொல்லலாம். இதிற் சேர்ந்திருப்போர் மற்ற மூன்று இந்துவகுப்பினர், பஞ்சமர், மகம்மதியர், கிறிஸ்துவர், ஆங்கிலேயர் இவராவர். இவர்களிற் சிற்சிலரும் பிராம்மண ஜாதியாரும் மற்ற இருகக்ஷிகளிற் சேர்ந்திருக்கின்றனர்.

மேற்கூறிய மூன்றாவது கக்ஷியைச் சேர்ந்த சென்னை வாசிகளிற் சிலர், பின்மூ வருணத்தார்கள், சென்ற செப்டம்பர்மீ 20உயில் சென்னை கோகலே ஹாலில் அம்மூவருணத்தாருடைய கூட்டமொன்று சேர்த்து, அக்கூட்டத்தில் தங்கள் கக்ஷி சார்பான தீர்மானங்கள் செய்து, சென்னை மாகாணசங்கம் (Madras Presidency Association) என்னுமொரு சபையை ஸ்தாபித்தார்கள். இந்தக்கூட்டத்தில் ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார், ஸ்ரீ N. துரைவேலு ஆச்சாரியார் இவர்களிருவரும் பிரசன்னமாயிருந்ததாலும், விஸ்வகர்ம வம்ஸத்தினர் சம்பந்தங் கூறிப் பேசியதாலும் யாம் இந்தப் பிரஸ்தாபம் இங்கு செய்ய நேரிட்டது. இவர்களிருவரில் முதல்வர், விஸ்வகர்ம கான்பரன்ஸ் ஸெண்ட்ரல் கமிட்டியின் பிரஸிடெண்ட் என்றும், இரண்டாமவர் ஷை கமிட்டியின் வைஸ்பிரஸிடெண்ட் என்றும் தெரிகிறது. இவர்கள் இந்த ஹோதாவையெடுத்துக் காட்டித் தாங்கள் விஸ்வகர்ம மகாஜனப் பிரதிநிதிகளென அக்கூட்டத்திற் பேசியதாயறிகிறோம். ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் தாம் தென்னிந்தியாவிலுள்ள 15-லக்ஷம் விஸ்வகர்மாக்களுடைய பிரதிநிதியாய் அவர்களபிப்பிராயத்தையே வெளியிடுவதாய்ச்சொன்னதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் இங்ஙனஞ் செய்தது எவ்வளவு பொருத்தமுடைத்தென்று ஆராய்வோம்.

ஷை கூட்டம் பிராம்மணரொழிந்த மற்ற வருணத்தார்களாலும் வகுப்பினர்களாலுமே அழைக்கப் பட்டதென்பதும், அதில் அவர்களுக்கு மட்டுமே இடங்கொடுக்கப்பட்டதென்பதும் எல்லோருக்கும் வெளிப்படை. இக்கூட்ட சம்பந்தப் பட்டவர்கள் தங்களைச் "சரியான பிராம்மணரல்லாதவர் Real Non-Brah-

mins" என்று சொல்லிக்கொள்வதும், இவர்களைச்சார்ந்த பத்திரிகைகளும் இவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கு மிடங்களிலெல்லாம் இக்கூட்டத்தாருக்கு ஷை பெயரிட்டே எழுதுவதும் யாவரும் அறிந்த உண்மையேயாகும். இப்படிப் பிராம்மண ஜாதியாரை விலக்கி நடத்தப்பட்ட கூட்டத்திற்சேர்ந்து அதின் நடவடிக்கைகளில் விஸ்வகர்மஜனப் பிரதிநிதிகளெனப் படுவோர் கலந்து கொண்டார்களெனில், விஸ்வகர்ம ஜாதியார்—இந்துக்களாயிருக்கிறபடியால்-பிராம்மணரல்லா வருணத்தாராய் இந்திய மகாஜனங்களாற் கொள்ளப்படுவது வியப்பாமோ? இவ்விருவர் தாம் விஸ்வகர்ம ஜனப் பிரதிநிதிகளெனத் தாமாகச் சொல்லிக்கொள்ளாவிட்டாலும், தங்களுடைய ஜாதிக்கமிட்டியில் தாங்கள் பெற்றிருக்கும் உத்தியோக ஸ்தானங்களைத் தெரிவித்த மாத்திரத்திலேயே பொதுஜனங்களுக்கு ஷை அபிப்பிராயம் உண்டாவது மிகச்சகஜமேயன்றோ? ஆதலால், விஸ்வகர்ம ஜாதியார் இப்போது பலஜாதியினராலும், பத்திரிகைகளாலும் பகிரங்கமாய் பிராம்மணரல்லாத வருணத்தாராகப் பேசப்பட்டுவருகின்றனர். ஸ்ரீ N. துரைவேலு ஆச்சாரியாரைப் பொக்கிஷதாரர்களிலொருவராகக் கொண்ட ஷை சென்னை மாகாண சபையின் உப அக்கிராசனாதிபதிகளிலொருவரும், ஷை ஆச்சாரியாருடைய அத்தியந்த நண்பரும், அவருடைய ஜாதீயக்கொள்கைகளை நன்கறிந்திருக்க வேண்டியவருமாகிய திவான் பகதூர் C. கருணாகர மேனன் அவர்கள் தமது 'இந்தியன் பேட்ரியட்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் மிகத்திட்டமாக "விஸ்வகர்ம ஜாதியார் பிராம்மணரல்லாத ஜாதியார்களில் பெரும் பகுதியினர்" என்று தமது நண்பர்மனமகிழ எழுதியிருக்கிறார். பல்லாண்டுகளாக நம்மனோர் உழைத்த உழைப்புக்கும், கொண்டிருந்த மனோரதத்திற்கும் இவ்விருவர் செயலால் நேரிட்ட பங்கம் இத்துணைத்தென்று அளவிட்டுரைத்தலும் ஆகுமா? இவர்கள் ஜாதிச்சார்புகாட்டாது தனித்து எது செய்யினும் அதை மறுக்கும் சுதந்திரம் எவர்க்கும் ஏற்படாது. அங்ஙனமின்றி, விஸ்வகர்ம கமிட்டி பிரஸிடென்ட், வைஸ்பிரஸிடென்ட் ஸ்தானங்களைக் குறிப்பிட்டு இவர்களொழுகியபடியால், இவர்கள் செயல்களையும் வார்த்தைகளையும் கண்டிக்கும்பொருட்டு பொதுக்கூட்டங்கள் சேர்க்க வேண்டுமென்றும் பொதுப் பத்திரிகைகளுக்கெழுதவேண்டுமென்றும் பலர் முற்படுவாராயினர். மற்றை ஜனங்களறிய நம்மவர் ஒருவரையொருவர் கண்டித்துப் பேசுவதும் எழுதுவதும் கூடாதென்று வற்புறுத்தி வந்தோமாயினும், சில நிருபங்கள் சென்னைப் பத்திரிகைகளில் வெளி வந்தது கண்டு வருந்தலாயினோம்.

இம்மட்டோ? ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார், ஹோம்ரூல் கக்ஷிப் பத்திரிகையாகிய சுதேசமித்திரனில் 'இராஜீய சுதந்திரக் கிளர்ச்சியும், தென்னிந்தியரின் முயற்சியும்' என நீண்டதொரு வியாசமெழுதியிருக்கின்றனர். இது ஷை பத்திரிகையின் அநுபந்தமாக சென்ற அக்டோபர் மீ 20உயில் வெளியாயிற்று. இவ்வியாசத்தில் நாம் மேலே விளக்கிய ராஜீயக் கக்ஷிகளில் மூன்றாவது கக்ஷியின் கொள்கைகளையே பிரஸ்தாபித்திருக்கிறார். வியாசத்தினிறுதியில் "தி. மு. முக்கண்ணாச்சாரி, பிரஸிடென்டு, வி. க. கான்பரன்ஸ் சென்ட்ரல் கமிட்டி, தென்னிந்தியா" என்று கையெழுத்திடப்பட்டிருக்கிறது. இவ்வியாசத்திற் கண்டிருக்கும் அபிப்பிராயங்களனைத்தும் இவருடைய சொந்த அபிப்பிராயங்களாயிருக்கவேண்டுமேயொழிய வி. க. கான்பரன்ஸ் அபிப்பிராயமென்றாவது, வி. க. கான்பரன்ஸ் கமிட்டியாரின் அபிப்பிராயமென்றாவது ஒப்புக்கொள்வதற்கு அணுவளவேனும் ஆதாரங்கிடையாது. இக்கான்பரன்ஸ் இதுவரையிலும், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி என்னும் மூன்றிடங்களிற் கூடியதாகத்தெரிகிறது. இம் மூன்று கான்பரன்ஸ்களில் ஒன்றிலேனும் ஷை வியாசத்தில் காணும் அபிப்பிராயங்கள் வெளிப்பட்டதாகவேனும் அவை சார்பான தீர்மானங்கள் செய்யப்பட்டதாகவேனும் அறிகிலோம். ஹோம் ரூலைப் பிரதிபாதிக்கும் காங்கிரஸ் முஸ்லீம் லீக் தீர்மானம் சென்ற டிஸம்பர் மாதத்திற் செய்யப்பட்டது. அதற்கு ஐந்து மாதங்களுக்கப்பால் மூன்றாவது விஸ்வகர்ம கான்பரன்ஸ், திருச்சிராப்பள்ளியில் கூடிற்று. கான்பரன்ஸ் கமிட்டியின் பிரஸிடென்டேனும், வைஸ் பிரஸிடென்டேனும், ஷை மூன்றாவது கான்பரன்ஸில் இராஜீய சுதந்திரங்களைப்பற்றித் தாங்கள் கொண்ட அபிப்பிராயங்களை பிரஸ்தாபித்து, ஹோம்ரூல் சார்பான தீர்மானத்தைக் கான்பரன்ஸில் செய்திருக்கும்பக்ஷத்தில் இவர்களிவ்வாறு ஷை கூட்டத்தில் அவ்வபிப்பிராயங்களை வெளியிடத்தக்கவராயிருப்பர். அங்ஙனம் யாதொரு முயற்சியும் இவர்கள் செய்யாமலிருந்ததே, இவர்களுடைய கொள்கைகள் கான்பரன்



ஸின் அங்கீகாரம் பெறமாட்டா என்னும் உண்மையுணர்ச்சி இவர்கள் கொண்டிருக்கவேண்டுமென்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. அப்போது மௌனஞ் சாதித்திருந்தவர்கள் இப்போது கான்பரன்ஸ் பெயர்கூறித் தங்கள் சொந்த அபிப்பிராயங்களை பிறஜாதியார் கூட்டத்தில் பிரஸ்தாபிப்பது எங்ஙனம் பொருந்தும்? சுஜாதிக்கூட்டத்திலன்றோ இவர்கள் பிரஸ்தாபித்திருக்கவேண்டும்? அங்ஙனஞ் செய்யாதுபோயினும், வி. க. கான்பரன்ஸ் கமிட்டியைக்கூட்டி அக்கூட்டத்திலாவது பிரஸ்தாபித்து, அக்கமிட்டியாரின் அங்கீகாரமேனும் பெற்றார்களோவென்று விசாரிப் போமாயின், அதையும் பெற்றார்களில்லையென்பது தெற்றென விளங்குகின்றது. அக்கமிட்டியார்களில் ஒருவராகிய கொளத்தூர் ஸ்ரீ கன்னியப்ப ஆச்சாரியார் அவ்விருவருடைய முயற்சிகளைக் கண்டித்து வெளிப்படுத்தியுள்ள அச்சுவிளம்பரமொன்றை மற்றொருபக்கத்திற் பதிப்பித்திருக்கின்றோம். அதை வாசிக்குமிடத்து, அவ்விருவர்களுடைய அபிப்பிராயங்களும் கான்பரன்ஸ் கமிட்டியாரைச் சற்றும் சார்ந்திருக்கவில்லையென்பது நன்குபுலப்படும்.

விஸ்வகர்ம கான்பரன்ஸ் ஆதரவும், அக்கான்பரன்ஸ் கமிட்டி அநுசரணையும் இவர்களுக்கேற்பட்டிருந்த போதிலுமே, இவர்கள் தென்னிந்திய விஸ்வகர்மர்களெல்லோருக்கும் பிரதிநிதிகளாகநின்று பேசுதலொல்லாதென்பதையும் எடுத்துக்காட்டவிரும்புகிறோம். "வி. க. கான்பரன்ஸ் சென்ட்ரல்கமிட்டி, தென்னிந்தியா" என்றெழுதப்பட்டிருப்பது கண்டு பலர் நகைப்பாராயினர். ஸ்தலத்தைக்குறிப்பிடாது "தென்னிந்தியா" எனக்குறிப்பிட்டவாற்றால், தென்னிந்திய வாசிகளாயுள்ள விஸ்வகர்மர்களெல்லோரையுந்தழுவி இக்கான்பரன்ஸ் நடத்தப்படுவதாகவும், எல்லோருடைய நோக்கங்களுக்கு மிணங்கச் சென்ட்ரல் கமிட்டியில் பிரதிநிதிகளேற்பட்டிருப்பார்களெனவும் பொதுஜனங்களபிப்பிராயங்கொள்ளச் செய்யவேண்டுமென்பதே ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாருடைய நோக்கமாயிருக்கவேண்டும். இக்கான்பான்ஸ் இயக்கமானது நம்மாகாண முழுவதையுமோ அன்றித் தென்னிந்தியாவையோ சார்ந்து நடப்பதாகக் கூறுதற்கு இடமேகிடையாது. ஷை கமிட்டி பிரஸிடென்ட் வைஸ்பிரஸிடென்ட் உள்ளிட்ட ஒரு சிலர் கூட்டமென்றே சொல்லல் தக்கது. இவ்வுண்மையை மற்றொரு பக்கத்திற் பிரசுரிக் ஆச்சாரியாருடைய நிருபத்தினால் உள்ளங்கை நெல்லிக்கனியெனக் கண்டுகொள்ளலாம். நம்மவரில் முக்கியஸ்தர் பெரும்பான்மையோர் இவர் வெளியிட்ட அபிப்பிராயங் கொண்டவர்களாகவே இருக்கின்றார்களென்பது நிதரிசனமாயிருக்கின்றது.

இத்தகைய கான்பரன்சுக்குத் 'தென்னிந்தியா' அடைமொழி சேர்த்தெழுதுவது மொட்டைத்தலையனைச் சவரிராஜன் என்பதற்கிணையாகவே யிருக்கிறது. தென்னிந்திய விஸ்வகர்மர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பல பாஷைகள் பேசுபவராயிருக்கின்றனர். தமிழ் பேசும் விஸ்வகர்மாக்களில் ஒரு சிறு பகுதியினரைக் கொண்டதே ஷை கான்பரன்ஸ். அதின் நடவடிக்கைகளெல்லாம் தமிழிலேயே நடைபெறுவதாயறிகின்றோம். அதன் நிலைமை இங்ஙனமிருக்க, 'தென்னிந்தியா' என்னும் அடைமொழி அதற்கிடுதல் எங்ஙனம் பொருந்தும்? தமிழர்களிலும், ஆங்கிலங்கற்று உத்தியோக பதவிகள் பெற்றவர்களாகவும், பல்லாண்டுகளாக தமது ஜாதியாருக்காக உழைத்து அவர்களுடைய முன்னேற்ற சாதனங்களைப் பற்றித் திட்டமான அபிப்பிராயங்களைக்கொண்டிருப்பவர்களாகவு முள்ளாரிற் பெரும்பாலார் மேற்படி கான்பரன்ஸினின்று விலகியேயிருக்கின்றனரென்பது பொதுஜனங்களுக்குத் தெரியாதிருக்கலாமேனும், விஸ்வகர்ம ஜாதியாருக்கெல்லாம் விளக்கமாகத் தெரிந்திருக்கிறது. முதற்கான்பரன்ஸில் விஜயமாயிருந்தவர்களிற் பலர் மற்றை யிரண்டு கான்பரன்ஸ்களுக்கு ஆஜராகாமையும் அனைவரும் அறிவர். மூன்றாவது கான்பரன்ஸ் தலைமைவகிப்பதற்கு "தென்னிந்தியா" விற்கு அப்பாலுள்ள சிலோனின் ஒரு பாகமாகிய யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவரைக் கொண்டுவருவது அவசியமாயிற்றென்றால், இக்கான்பரன்ஸிற்கு "தென்னிந்தியா"வில் எவ்வளவு செல்வாக்கும் ஆதரவுமிருக்கிறதென்பது யாருக்குத்தான் புலப்படாமற்போகாது? சுஜாதியரிடம் இக்கான்பரன்சுக்கு ஏற்பட்ட ஆதரவுக்கேற்பவே, சென்னைக் கவர்ன்மென்டாருக்கு இதனிடம் மதிப்பேற்பட்டிருக்கிறது. சென்ட்ரல் கமிட்டிப் பிரஸிடென்டு அவர்களே தலைவராயிருந்து நடத்திய கான்பரன்ஸின் தீர்மானங்களையும், முறையீடுகளையுங் குறிப்பிட்டு ஷை பிரஸிடென்டு அவர்களே கையெழுத்திட்டனுப்பிய மகஜருக்கு சென்னைக் கவர்ன்மென்டார்

றதாகவேணும் ஒருவரி எழுதவில்லை. ஆதலால், இவ்வளவு பெருமை பொருந்திய கான்பரன்ஸ் ஆதாரங்கொண்டு அவர்களிருவரும் நடந்துகொண்டாலுங்கூட, அவர்கள் தென்னிந்திய விஸ்வகர்ம ஜனப்பிரதிநிதிகளாகக் கொள்ளப்படமாட்டார்களென்பது இனிது விளங்கும்.

ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் சுதேசமித்திரன் அநுபந்தமாக வெளியிட்ட வியாசத்தில் காணும்—"தென்னிந்திய வாசிகளில் ஒரு சாராரிற் சிலர் மனப்பிளவுபட்டு, தேசப் பொது க்ஷேமத்தைக்கருதி இப்பொழுது செய்யவேண்டிய காரியங்களைவிட்டு, மனம்போனபடி பல காரியங்களை நடத்திவருவது தமிழ் நாட்டாரின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதாயும் அபக்கியாதியை விளைப்பதாயுமிருக்கிறது" என்னும் வாக்கியத்தில், "தென்னிந்திய வாசிகளில்," "தேச," "தமிழ் நாட்டாரின்" என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக, முறையே "விஸ்வகர்ம ஜாதியார்களில்," "ஜாதி," "விஸ்வகர்ம ஜாதியாரின்" என்னும் பதங்களை யமைத்து வாசிப்போமாயின், மேற்படி இருவருடைய செயலுக்குப் பொருத்தமாயிருக்கும். சகல ஜாதி சமயங்களுக்கும் பொதுவாயுள்ளவர்கள் விஸ்வகர்ம சந்ததியாரென்றும், இவ்விதக் கட்சியில் சௌராஷ்டிரர்போன்ற சில ஜாதியார்கள் கலவாமல் தனித்திருக்கிறார்களென்றும் குறிப்பிட்ட இவரே பொதுநோக்கு வழுவி ஹோம்ரூல் கட்சியில் சேர்ந்துகொண்டது சிறப்பேயோ? இம்மட்டோடு நின்றாரா? "முன்னேற்றமடையவேண்டுமென்கிற ஆதாரங் கொண்டுள்ள விஸ்வகர்ம வகுப்பினரைப் போலவே மற்ற வகுப்பினரும் சங்கங்களையும் சபைகளையும் கான்பரென்ஸ்களையும் காலதேசப் போக்கிற்கேற்றவாறு ஏற்படுத்திக்கொண்டு தலைவர்களை மதித்தல், அவர்கள் போதனையைக் கைக்கொள்ளல், அவர்கள் முயற்சிகளை எள்ளாதிருத்தல், ஒற்றுழைத்தலாதிய சிறந்த குணங்களைக் கைக்கொண்டு நடப்பார்களாயின், அச்சங்கங்களின் தலைவர்கள் கொண்டகொள்கையே அவர்கள் சமூகத்தார் கொண்டகொள்கைகளாகும்" என்கின்றார். இதனால், இவர் விஸ்வகர்ம சமூகத்தலைவரென்றும், இவர்கொண்ட ஹோம்ரூல் கொள்கையே விஸ்வகர்மஜாதிக் கொள்கையென்றும், சுதேசமித்திரன்வாசிகள் கொள்ளவேண்டுமென்பது இவருடைய அபிப்பிராய மென்பது கண்கூடாக்காணப்படுகிறது. இந்நியாயங்கொண்டே அதன்பிறகு அங்கும் மற்ற இடங்களிலும் கூடும் கூட்டங்களிலும் விஸ்வகர்மஜன ராஜீய சுதந்திரக்கொள்கை யிதுவெனப் பேசியிருக்கவேண்டும். தமது தலைமையையும் தாங்கொண்ட ஷை நியாயத்தையும் தென்னிந்திய விஸ்வகர்ம மகாஜனங்கள் எவ்வளவு அங்கீகரித்திருக்கிறார்களென்பது அறியாமலோ, அன்றித் தமது தலைமையும் ஜாதியாரின் நிலைமையும் தமது நியாயவன்மையும் பற்றிய மயக்கவுணர்ச்சியாலோ இவர் வியாசங்களெழுதிச் சுதேசமித்திரனில் வெளியிடுவதும், ஹோம்ரூல் கட்சிக்காரரோடு சேர்ந்துகொண்டு அவர்கள் கொள்கைகளை ஜாதிச்சார்புகாட்டி ஆதரித்துப் பேசிவருவதும், விஸ்வகர்ம ஜாதியாருக்கு பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருடைய விரோதமும், ராஜீய மிதவாதிகள் அநாதரவும் சித்திக்கச்செய்து நாளடைவில் பெருந்துன்பம் பயக்குமென்று விவேகிகள்யாவரும் அஞ்சுகின்றனர்.

"படிப்படியே ராஜ்யநிர்வாக சுதந்திரங்களை அடையவேண்டிய காலம் கிட்டிவிட்ட" தென்று எழுதும் இவர் நேரே சுயஆக்ஷிவேண்டுமென்னுங் கக்ஷியாரோடு சேர்ந்தொழுகுதல் பிசகன்றோ? படிப்படியே ராஜ்ய நிர்வாக சுதந்திரம் இந்தியருக்குக் கொடுபடவேண்டுமென்னுங் கொள்கையினரே நம்முள்பெரும்பாலார். நமது தற்காலக் கல்வி நிலைமையும் லௌகிக வாழ்வும், தொழில் ஸ்திதியும் எண்ணிப் பார்க்குமிடத்து, வேறுகொள்கை ஏற்படுதற்கு இடமேவாராது. பிரிட்டிஷ் அதிகாரத்தைக் குறைத்து சுதேச ஜனாதிகாரத்தை அதிகப்படுத்தும் எந்தமுயற்சியும் நமக்குத் தீங்கே விளைக்குமென்பது நம்மவருக்கு நெடுங்கால அநுபவமாயிருக்கிறது. சுதேச ஜனாதிகாரம் அதிகப்படுவதெனின் எந்தஜாதி யதிகாரம் அதிகப்படுமென்று நாம் எடுத்துக்காட்டுவது அனாவசியமேயாம். பிரிட்டிஷ் அதிகாரிகளிடமன்றி மற்றையோர்பால் நாம் சித்தூர்த் தீர்ப்பும், சேலம்தீர்ப்பும், பந்தர்தீர்ப்பும் பெற்றிருக்க முடியுமாவென்று சற்றே யோசித்துப் பாருங்கள். இப்போதும், பிரிட்டிஷ் அதிகார நெருக்கமற்று சுதேசஜனாதிகாரப் பெருக்கமுற்றிருக்கும் கிராமாந்தரங்களிலும் சிறு பட்டணங்களிலும் நமது ஜாதியார் ஊர்கோலம் கொள்ளலாகாதென்றும், குடைபிடித்தும், பாதரக்ஷை பூண்டும் நடக்கலாகாதென்றும், குறிப்பிட்ட தெருக்களில் வசிக்கலாகாதென்



நடக்கவில்லையா? அவைகளைப்பற்றிய வியாச்சியங்கள் அங்கங்கு நடந்துவரவில்லையா? அவ்வியாச்சியங்களை விசாரிக்க வாய்க்கும் நியாயாதிகாரிகள் ஒரு ஜாதியாராயிருக்கும் பக்ஷத்தில் அந்தக் கோர்ட்டுகளைவிட்டு இங்கிலீஷ் நியாயாதிகாரிகள் கொண்ட கோர்ட்டுகளுக்கு மாற்றுவதற்கு மனுக்கள் செய்துகொள்ளப் படுவதும் சகஜமாயிருக்கவில்லையா? இவைகளையெல்லாம் ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரும், ஸ்ரீ N. துரைவேலாச்சாரியாரும் அறியார்களா? அறிந்தும், பிரிட்டிஷ் அதிகாரத்தைக் குறைக்கும் முயற்சிகளில் இவர்கள் ஏன் ஈடுபடவேண்டும்?

பிரிட்டிஷ் ஆக்ஷியிலேயே இவர்களுடைய "ஆச்சார்ய" பட்ட சுதந்திரம் அழிந்துபோயிற்றென்றால், சுய ஆக்ஷியில் அது நிலைபடுமென்று இவர்கள் நம்புகிறார்களா? யாருடைய முயற்சியால் இப் பட்டஇழப்பு நேரிட்டதென்பது இவர்களுக்குத்தெரியாமலா போயிற்று? பிரிட்டிஷ் அதிகாரிகளா நமது பட்டத்தை மாற்றினார்கள்? அதிகாரிகளுக்குக் கீழ் அடங்கியிருக்கும் நிலைமையிலேயே ஆபத்துகள் பல விளைக்கக் கூடியவர்கள் தங்கள் சுயஆக்ஷியிலா தயவுகாட்டித் தழுவப்போகிறார்கள்? இவ்வுண்மை ஏன் கமிட்டி பிரஸிடெண்டுக்கும் வைஸ்பிரஸிடெண்டுக்கும் விளங்கவில்லை? தனித்தொழிற் பாடசாலைகள் நமது ஜாதியார்க்கென்று ஏற்படுத்தலாகாதென்றும், நம்மவர்களுக்கெனப் பிரத்தியேகமாய் ஸ்காலர்ஷிப் பென்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படலாகாதென்றும், நமது வித்தியார்த்திகளுக்கு அரைச்சம்பளத்தில் கல்வி கற்பிக்கலாகாதென்றும், வெளியூர் சென்று தொழில் கற்று வருவோர்க்குரிய கல்வி நிபந்தனைகளை நம்பால் குறைக்கலாகாதென்றும், கீழுத்தியோகங்களி லிருக்கும்போதே ஆக்ஷேபிப்பவர்கள் முழு அதிகாரம் பெற்றபோது கொடுப்பார்களா? முதல் கான்பரன்ஸ் தீர்மானங்களைக்கண்டித்து விஸ்வகர்ம ஜாதியாருடைய கல்வி யபிவிருத்திக்காகவோ தொழிலபிவிருத்திக்காகவோ அரசாங்கத்தார் தனித்த சகாயங்கள் செய்யமாட்டார்களென்றும் செய்யலாகாதென்றும் சுதேசமித்திரன் பத்திரிகை எழுதியதை இவர்கள் இதற்குள் எப்படி மறந்திருக்கக்கூடும்? இந்தச் சுதேசமித்திரனா, நாளை இந்தியாவுக்கு சுய ஆக்ஷி கிடைக்குமானால் விஸ்வகர்ம ஜாதியாருக்குப் பிரத்தியேகமாய் நன்மைசெய்ய வேண்டுமென்று வாதாடப் போகிறது? மூன்றுவருஷத்திய சம்பவம் மறந்து போனபோதிலும், 20-9-17 உக் கூட்ட நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும்போது, இவர்களாதரவு பெற்ற கக்ஷியைச் சார்ந்த பத்திரிகைகளே இவ்விருவர் பெயர்களையும் 'ஆஸாரி' அடைமொழியோடு எழுதியதைக்கண்டேனும், அக்கக்ஷியார்கள் வழங்கு முச்சரிப்பைக் கவனித்தேனும் இவர்கள் நல்லுணர்ச்சி பெற்றிருந்தலாகாதா?

காங்கிரஸ் முஸ்லீம் லீக் சபைகளும், ராஜப்பிரதிநிதி சபை 19 இந்திய மெம்பர்களும் கோரும் ராஜ்யபார சீர்திருத்தங்களை "சுவற்ப"மென்றும், அவைகள் "அதிகமில்லை' யென்றும், அவைகளைப்பெறுதலே ராஜ்ய சுதந்திரங்களைச் "சிறுகச்சிறுக"ப் பெறுதலென்றும் ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் கொண்டிருப்பதும் வெளியிடுவதும் தவறு.

அவர்கள் கோரும் திருத்தங்களிற் சில வருமாறு:—சட்டசபை மெம்பர்கள் பெரிய மாகாணங்களுக்கு 125க்குக் குறையாமலும், சிறு மாகாணங்களுக்கு 50 முதல் 75 வரையிலும், ராஜப்பிரதிநிதியின் சபைக்கு 150 பேர்களும் இருக்கவேண்டும். மாகாண சட்டசபைகளின் மெம்பர்களிலே ஐந்தில் நாலுபங்குபேர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், ஐந்தில் ஒரு பங்குபேர் கவர்ன்மெண்டால் நியமனம் செய்யப்படுபவர்களாகவு மிருக்கவேண்டும்.

மாகாணக் கவர்ன்மெண்டின் கவர்னராகவோ, நிர்வாகத் தலைவராகவோ உள்ளவர் சட்டசபையின் பிரஸிடெண்ட் அதாவது அக்கிராஸனாதிபதியாக இருக்கக்கூடாது. ஆனால், சட்டசபை மெம்பர்களே தங்கள் சபையின் தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமை பெற்றவர்களாயிருக்கவேண்டும்.

ஏற்றுமதி, இறக்குமதி, தபால், தந்தி, நாணயம், உப்பு, அபின், ரயில்வே, சேனை, கடற்படை, இந்திய சமஸ்தானங்களால் கட்டப்படும் கப்பம் ஆகிய இனங்களின் வருமானத்தைத் தவிர மற்ற எல்லா இனங்களின் மூலமாய் ஸர்க்காருக்கு சேரும் வருமானங்கள் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குச் சொந்தமாகச் செய்துவிடவேண்டும்.

உள்நாட்டு நிர்வாக சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மாகாண சட்டசபைக்கு முழு அதிகாரமும் இருக்கவேண்டும். கடன் வாங்குதல், வரிவிதித்தல், வரியை மாற்றிஅமைத்தல், வரவுசெலவு மதிப்புத் திட்டத்தை அங்கீகரித்தல்

ஆகிய விஷயங்களிலும் முழு அதிகாரம் இருக்க
வேண்டும்.

செல்வுக்குரிய எல்லா அம்சங்களும், அவசிய
மாயுள்ள வரி வருமானத்தைப் பெறுவதற்கான
வழிகளடங்கிய எல்லா யோசனைகளும், சட்ட
மசோதா ரூபமாக சபையின் முன் ஆலோச
னைக்கு வரவேண்டும். அம்மசோதாக்களோ
மாகாண சட்டசபைகளின் அங்கீகாரத்துக்கு
உட்பட்டிருக்கவேண்டும்.

மாகாண கவர்ன்மெண்டுகளுக் குட்பட்ட
எல்லா விஷயங்களையும் தீர்மானிக்கக்கூடிய பிரே
ரேபணைகள் மூலமாய் சட்ட சபைகளில் விவாதிப்
பதற்கு பாத்தியம் இருக்கவேண்டும். தீர்மானங்
களை விவாதிப்பதில் இன்னின்ன முறைகள்
அனுஷ்டிக்க வேண்டுமென்பதைப்பற்றிய விதி
கள் சட்டசபைகளே நிர்த்தாரணம் செய்ய
வேண்டும்.

சட்ட சபையினரால் அங்கீகாரமான ஒரு
தீர்மானமானது நிர்வாக் சபையுடன் கூடிய கவர்
னரால் நிராகரிக்கப்பட்டுப் போனலொழிய,
அத்தீர்மானத்தின்படி நடக்க நிர்வாக கவர்ன்
மெண்டார் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்
டும். சட்ட சபையினரால் அங்கீகாரமானபின்
நிர்வாக சபையுடன் கூடிய கவர்னரால் நிராகரிக்
கப்பட்டுப்போன ஒரு தீர்மானமானது ஒரு வரு
ஷகாலத்திற்குக் குறையாத காலத்திற்குப்
பிறகு மறுபடியும் சட்ட சபையின் முன்னிலை
யில் ஆலோசனைக்கு வந்து அங்கீகாரமாகுமா
யின், அத்தீர்மானம் அவரால் நிறைவேற்றி
வைக்கப்படவேண்டும்.

வரி, வரவு செலவு, முதலிய பணப் பொறுப்
பில்லாத எவ்வித மசோதாவும் சட்ட சபையின்
விதிகளை அனுசரித்து சபையின்முன் ஆலோச
னைக்குக் கொண்டுவரப்படலாம். அம்மசோ
தாவை ஆலோசனைக்குக் கொண்டுவருவதற்கு
கவர்ன்மெண்டின் சம்மதிவேண்டுமென்ற நிபந்
தனை கூடாது.

மாகாண கவர்ன்மெண்ட் நிர்வாக சபைகளி
லுள்ள மெம்பர்களிலே குறைந்தது சரி பாதிப்
பேராவது இந்தியராக இருக்கவேண்டும்.

அந்த இந்தியர் மாகாண சட்ட சபைகளின்
ஜனப்பிரதிநிதிகளால் (அதாவது தேர்ந்தெடுக்
கப்பட்டவர்களால்) தேர்ந்தெடுக்கப்படவேண்
டும்.

ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை மெம்பர்க
ளில் ஐந்தில் நாலு பங்கு பேர் தேர்ந்தெடுக்கப்
படுபவர்களாக இருக்கவேண்டும்.

சட்ட சபையின் பிரஸிடெண்ட் அதாவது
அக்கிராசனாதிபதி சபையினரால் தேர்ந்தெடுக்
கப்பட வேண்டும்.

வருமானம், செலவு, கடன் முதலிய திரவிய
விஷயமான எல்லாத் தீர்மானங்களும் மசோதா
ரூபமாக சபையின் முன் கொண்டு வரப்பட
வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மசோ
தாவும், வரவு செலவு மதிப்புத் திட்டமும்,
ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினுடைய
அங்கீகாரத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும்.

கீழே காணப்படும் ராஜங்க விஷயங்கள்
யாவும் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையி
னுடைய அதிகாரத்துக்கே உட்பட்டிருக்க
வேண்டும் :—

இந்தியா முழுவதற்கும் ஒரே ரீதியான சட்
டங்கள் ஏற்பட்டிருக்கவேண்டிய பொது விஷ
யங்கள்.

ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்
திற்கும் சுங்கம், தீர்வை முதலிய வியாபாரப்
போக்கு வரத்தைப் பொருத்த சட்ட விஷ
யங்கள்.

இந்தியா சமஸ்தானங்களால் கட்டப்படும்
கப்பத்தைத் தவிர இந்தியா கவர்ன்மெண்டுக்குச்
சொந்தமான வருமான இனங்களைப்பற்றிய
பிரஸ்னைகள்.

இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாகத்திற்கு
மட்டில் உட்பட்ட செலவினங்களைப் பற்றிய
பிரசினைகள்.

ஆனல், தேசத்தின் பாதுகாப்புக்கான
ராணுவ அம்சச் செலவுகளைப்பற்றி ராஜப்பிரதி
யின் சட்ட சபையில் தீர்மானம் செய்யப்படின்,
அதை நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்
ஜெனரல் கட்டுப்பட்டு நிறைவேற்றக் கடமைப்
பட்டவரல்ல.

இந்தியாவின் வியாபார வரிகள், ஏற்றுமதி,
இறக்குமதிவரிகள் ஆகிய இவைகளைத் திருத்தி
யமைக்கும் உரிமை ;

எந்த வரியையேனும் ஸெஸ் எனப்படும் தீர்
வையையேனும் விதிக்கவோ, மாற்றவோ,
எடுத்துவிடவோ உள்ள உரிமை ;

தற்சமயமுள்ள செலாவணி நாணயங்கள்,
லேவாதேவி, ஆகிய இவைகளின் முறைமை
களைத் திருத்தியமைக்கும் உரிமை ;

தேசத்தின் எந்த விதமான பூர்வீகத் தொழி
லுக்காயினும், வேறு எவ்விதமான தொழிலுக்
காயினும், அல்லது தகுந்த எல்லாத்தொழில்
களுக்குமாயினும், ஏதேனும் பணவகவி செய்



யும் உரிமை ; இவைகள் சம்பந்தமான பிரஸ்
னைகள்.

பொதுவாக தேச நிர்வாகத்தைப் பற்றிய
எல்லா விஷயங்களையுங்குறித்த தீர்மானங்கள்.

சட்ட சபையினல் அங்கீகாரமான ஒரு தீர்
மானமானது நிர்வாக சபையுடன் கூடிய கவர்
னர் ஜெனரலால் நிராகரிக்கப்பட்டுப் போன
லொழிய நிர்வாக கவர்ன்மெண்டானது அத்தீர்
மானத்தின்படி நடக்கக் கட்டுப்பட்டிருக்கவேண்
டும். ஆனல், சுமார் ஒருவருஷ காலத்திற்குக்
குறையாத ஒரு காலத்தில் பின் மறுபடியும்
அத்தீர்மானத்தை சட்ட சபையினர் அங்கீகரிப்
பார்களாயின், அங்கீகாரத்தின் வண்ணம் நட
வடிக்கைகள் நடத்தப்படவேண்டும்.

இதர விஷயங்களின் விவாதத்தை நிறுத்திக்
கொண்டு பொது நல முக்கியத்தையொட்டி அவ
சரமான விஷயமொன்றை ஆலோசனைக்குக்
கொண்டுவர வேண்டுமென்று சட்ட சபையின்
மெம்பர்களிலே எட்டில் ஒரு பங்கு பேர் எப்
பொழுதேனும் விரும்புவார்களாயின், அவ்வி
தம் அது பிரேரேபணைக்கு கொண்டுவரப்பட
வேண்டும்

மாகாண சட்ட சபையினராலோ, ராஜப்பிரதி
நிதியின் சட்டசபையினாலோ அங்கீகாரமான
மசோதாவொன்றை அவ்விதம் அங்கீகாரமான
காலத்திலிருந்து ஒரு வருஷகாலத்திற்குள் சக்
கிரவர்த்தி நிராகரித்து விடலாம். அவ்விதம்
மசோதா நிராகரிக்கப்பட்டு விட்டதென்று சட்ட
சபைக்குத் தெரிந்த தேதியிலிருந்து தான் அம்
மசோதாவானது அனுஷ்டானத்திலிருந்து ரத்
தாகும்.

யுத்தம் தொடங்குதல், சமாதானம் செய்து
கொள்ளல், உடன்படிக்கை செய்துகொள்ளல்,
முதலிய விஷயங்களிலும், இந்தியாகவர்ன்மெண்
டாரின் ராணுவ காரியங்களிலும், ராஜாங்க
விஷயமாய் அன்னிய தேசங்களோடு பரஸ்பரம்
நடத்தப்படும் காரியங்களிலும் ராஜப்பிரதிநிதி
யின் சட்ட சபையினருக்குப் பிரவேசிக்க அதி
காரம் இருக்கக்கூடாது.

இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையின்
மெம்பர்களிலே சரிபாதிபேர் இந்தியராக இருக்
கவேண்டும்.

அந்த இந்திய மெம்பர்கள் ராஜப்பிரதிநிதி
யின் சட்ட சபையிலுள்ள பிரதிநிதிகளால்,
அதாவது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மெம்பர்
களால், தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

மாகாணங்களின் உள்நாட்டுக் காரியங்களிலே
சாதாரணமாக இந்தியா கவர்ன்மெண்டார் தலை
யிடக்கூடாது. பிரத்தியேகமாக மாகாண கவர்
ன்மெண்டுகளுக்கு அளிக்கப்பட்டவையென்று
திட்டமாக்கப்படாத அதிகாரங்களெல்லாம் இந்
தியா கவர்ன்மெண்டிடமே மிகுந்தவையாக விரு
க்கவேண்டும். பொதுவாக மேற்பார்வை பார்ப்
பதும், மேல் விசாரணை செய்வதுமே இந்தியா
கவர்ன்மெண்டுக்கு மாகாண கவர்ன்மெண்டுக
ளின் பேரில் சாதாரணமாய்ச் செலுத்தக்கூடிய
அதிகாரமாகவிருக்கவேண்டும்.

சட்டங்களை இயற்றுவதிலும், நிர்வாகத்தை
நடத்துவதிலும் இந்த திட்ட ஏற்பாட்டின்படி
அமைக்கப்படும் இந்தியா கவர்ன்மெண்டானது
கூடுமானவரையில் இந்தியா மந்திரிக்கு உட்பட்
டிராத சுவாதீனம் பெற்றிருக்கவேண்டும்.

இந்தியா மந்திரியின் சபையை எடுத்துவிட
வேண்டும்.

இந்தியா மந்திரியின் சம்பளமானது பிரிட்
டிஷ் நாட்டின் கவர்ன்மெண்டிலிருந்து கொடுக்
கப்பட வேண்டும்.

குடியேற்ற நாடுகளுக்கும் குடியேற்ற நாட்டு
மந்திரிக்கும் எவ்விதமான சம்பந்த முள்ளதோ
அதேவிதமான சம்பந்தந்தான் கூடுமானவரை
யில் இந்தியா கவர்ன்மெண்டின் விஷயமாய் இந்
தியாவிற்கும் இந்தியா மந்திரிக்கும் இருக்க
வேண்டும்.

இந்தியா மந்திரிக்கு உதவியாக சாசுவதமாய்
இரண்டு உதவி மந்திரிகள் இருக்கவேண்டும்.
அந்த இருவரில் ஒருவர் எப்பொழுதும் இந்திய
ராகவே இருக்கவேண்டும்.

இச்சீர்திருத்தங்களே "சுவற்ப" மெனப் படு
வன. (1) பொக்கிஷ ஆளுகை (2) அரசாங்க
நிர்வாக அதிகாரிகளை ஆளுதல் (3) மாகாணத்
தற் சுதந்திரம் (4) வருமானத் தற்சுதந்திரம்
(5) ராஜாங்க காரிய பரிபாலனத்தில் ஐரோப்
பியருக்குப் பதிலாக இந்தியரை அமர்த்துதல்.
(6) நியாய விசாரணைப் பொறுப்பேற்றவர்களிட
மிருந்து நிர்வாகப் பொறுப்பைப் பிரித்தல்,
இன்னோன்ன ராஜீய சுதந்திரங்களே ஹோம்
ரூல் கக்ஷியாரின் குறைக்கப்படாத சின்னஞ்
சிற்றளவுச் சுதந்திரங்களெனப் படுகின்றன.
இராணுவ நிர்வாகப் பொறுப்பைமட்டும் இங்கி
லீஷ்காரரே ஏற்றுக்கொள்ள வேண்டுமாம். இந்
தியப் பாதுகாப்பு இங்கிலீஷ்காரர் பொறுப்பி
லும், அதன் பரிபாலனமும் பொக்கிஷமும்
இவர்கள் பொறுப்பிலுமிருக்கவேண்டுமென்னும்

கோரிக்கை "உண்பான் உடுப்பான் சிவப்பிராம்மணன் மல்லுக்கு நிற்பான் வீரமூஷ்டி" என்னும் பழமொழியையே ஞாபகப்படுத்துகிறது. நமது நாடு தற்காலமுள்ள ஸ்திதியில், இச்சீர்த்திருத்தங்கள் பிரிட்டிஷ் கவர்ன்மென்டாரால் இந்தியருக்குக் கொடுக்கப்பட்டால், கல்வி நலமும், ஐஸ்வர்யமும், உத்தியோக ஹோதாவும், செல்வாக்கும் பெரிதும் பெற்றுள்ள ஒருசிறு பகுதியினர் கையில் தேச ஆளுகை சிக்கி விடுமென்றும், அந்நலங்கள் வாய்க்கப்பெறாத மற்ற வகுப்பின ரெல்லாம் ஏங்கித் தயருழக்க வேண்டிவருமென்றும், ஆங்கிலேயரை எதிர்பார்த்து நியாயம் பெறும் மகோன்னத சௌகரியம் தொலைந்து போகுமென்றும் எவரே காண்கிலார்! காங்கிரஸ் முஸ்லீம்லீக் சபைகள் அமிதவாதிகளால் பிடிப்பட்டவாற்றால், இச் சீர்திருத்தங்கள் கேட்கப்பட்டனவேயல்லாமல், அச்சபைகள் முன்போல் மிதவாதிகள் சார்பிலிருந்தால், இவ்விதத் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கவேமாட்டா. காங்கிரசுக்கு நெடுங்காலமாக உழைத்தவர்களாகிய பம்பாய் மாகாணத்து ஸர் பெரோஜிஷா மேதாவும், ஸ்ரீ கோபால கிருஷ்ணகோகலேயும் உயிரோடிருந்தால், மேற்கண்ட விதமான தீர்மானங்கள் செய்தற்கு அவர்கள் இடங்கொடுத்திருக்க மாட்டார்கள். இதற்கு அத்தாக்ஷியாக, ஸ்ரீ கோகலே அவர்கள் இறக்குமுன் எழுதியதும் அவர்க ளிறந்த பிறகு வெளியானதுமானதொரு பத்திரத்தைக் கூறலாம். ஐரோப்பியயுத்தம் முடிந்தபிறகு இந்தியாவுக்குக் கொடுக்கப் படவேண்டியன வென அவர்குறிப்பிட்டிருக்கும் சுதந்திரங்கள் காங்கிரஸ்.முஸ்லீம்லீக் சபைகளின் தீர்மானங்களிற் குறிப்பிடப்பட்டிருப்பவை களினும் மிகக்குறைந்தனவாகவே யிருக்கின்றன. அன்றியும், ஷை 19 மெம்பர்களில் ஒருவரும், ராஜீய சுதந்திரக் கோரிக்கைகளைத் தயார்செய்த முக்கியஸ்தர்களிலொருவருமாகிய பாபு பூபேந்திரநாத் போஸ் அவர்கள் தங்கள் விண்ணப்பம் வெகு அவசரமாய்த் தயாரிக்கப்பட்டதென்றும், அதிற் குறிப்பிட்ட விஷயங்கள் ஆழ்ந்த ஆலோசனையின்பேரில் தீர்மானிக்கப்பட்டவைகளல்லவென்றும், அவற்றில் பல மாறுபாடுகள் செய்யப்பட்டாலொழிய நடவடிக்கைக்குக் கொண்டுவருதல் சாத்தியமாகாதென்றும் பகிரங்கமாகக் கூறிவிட்டார். இந்த 19 பேர்களுடைய கோரிக்கைகளைத் தான் "பற்றுக் கோடாக மனதிலிருத்த வேண்டிய தவசியம்" என போதிக்கின்றார் வி. க. கமிட்டி பிரஸிடென்ட். இவற்றோடு ஜாதிப் பிரதிநிதித்துவமும் கேட்கலா மென்கிறார். ஹோம் ரூல் கக்ஷிக்காரர் ஜாதிப்பிரதிநிதித்வக் கொள்கைக்கு முகங்கொடுக்கவே யில்லையென்பதும், இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருதல் சாத்தியப்படாதெனக் கூறுவதும் யாவரும் கவனித்தற்குரிய விசேஷங்களாகும். முனிஸிபல், ஜில்லா, தாலுக்கா போர்டுகளிலும் சட்டசபைகளிலும் ஸ்தானம்பெறலாயக்கும், கல்வியும், தேஸீய உணர்ச்சியுமுள்ளவர்கள் நம்மவர்களில் தற்போதிருக்கிறார்களென் றெண்ணுவதும், சென்னைமாகாண சட்டசபையில் 8 மெம்பர்களைப் பெறுதற்கு நாம் உரியராகிறோம் எனக் கணக்கிடுவதும், ஆறு பிரதிகளைக்கொடுத்தாற் போதுமெனக் கேட்க விழைவதும் மனப்பால் குடித்தலேயாகும். 100 க்கு 98 பேர்களைக் கல்லாராய்க்கொண்டிருக்கும் நமது ஜாதி சமூகத்தார் ராஜீய சுதந்திரங்களை அறிந்து, அவற்றைச் சரிவரக் கையாளுவது கூடாமையென்பதும் ஞாபகத்திற்கொள்ள வேண்டுகிறோம்.

"நீந்தக் கற்றுக்கொள்ள விரும்புமொருவன் நீந்துமுறையும் நீச்சுநிலையு மறிந்து ஜலத்தில் இறங்கவேண்டுமாயினும், ஜலத்தில் இறங்கி இரண்டுவாய் ஜலங்குடித்தேனும் பழகாத வகையில் நீந்தக்கற்றுக்கொள்வதே யின்றாம். இராஜீய வன்மையை ஒருவர் பெறுவதற்கும் இவ்வுதாரணம் பொருந்தும்" என்கின்றார் இவர். ஜலத்தில் இறங்குவதென்றதினாலேயே, நடுச்சமுத்திரத்தி லிறங்கலாகாதென்பதும், ஜலத்தில் அமிழ்த்தினாலுங்கூட வயதேறாத சிறு குழந்தைகளையும், பலஹீனஸ்தர்களையும், பிணியாளிகளையும் நீந்தக் கற்றுக்கொள்ளச் செய்வதியலாதென்பதும், அங்ஙனஞ்செய்தல் பிராண ஹானிக்கே இடமாகுமென்பதும், ஜலத்தில் அமிழ்வதொன்றினால் மட்டுமே நீந்தக் கற்றுக்கொள்ள முடியாதென்பதும், அதற்கு வேறு சாதகங்களும் வேண்டுமென்பதும், நீந்த அறியார்க்கும் அறிந்தார்க்கும் பரிசு ஒன்றாய் நியமிப்பது நியாயமாகாதென்பதும் இவர் ஊன்றி உணர்ந்தாரில்லை யென்பதற்கு மிகவும் விசனிக்கின்றோம்.

எந்தப் பந்தலில் ஹோம் ரூல் தீர்மானம் செய்யப்பட்டதோ அதே பந்தலில் வர்ணாஸ்ரம பரிபாலன சங்கத் தீர்மானங்களும் செய்யப்பட்டன. ஹோம் ரூல் கக்ஷிக்காரரே வர்ணாஸ்ரம தர்மக்கட்டுப்பாடுகளை ஊர்ஜ்ஜிதப்படுத்தவேண்டுமென்று பெருமுயற்சி செய்துவருபவர். ஹோம் ரூல் கிடைக்குமுன்னரே இம்முயற்சி



சேய்வோர், ஹோம் ரூல் கிடைத்தபின்னர் பூர்வம் இந்தியாவிலிருந்த விதமாகவும் மநு முதலிய ஸ்மிருதி கர்த்தாக்கள் வரையறுத்த மாதிரியாகவும் வர்ணாஸ்ரம தர்மத்தை அமுலுக்குக் கொண்டுவர எம்முயற்சி செய்யார்? அப்போது கமிட்டி பிரஸிடெண்டும், வைஸ் பிரஸிடெண்டும் எங்கு வைக்கப்படுவரென்பதை இவர்கள் ஏன் எண்ணிப்பார்க்கலாகாது? கமிட்டி பிரஸிடென்டின் வியாசத்திற் காணப்படும் அக்ஷேபகரமான விஷயங்களையெல்லாம் விஸ்தரிக்க இடங்கிடைக்காமைபற்றி அங்ஙனஞ் செய்தல் இப்போதியலாதாயிற்று. சமயம் வந்துழி அக்காரியம் மேற்கொள்ளப்படும்.

காங்கிரஸ் முஸ்லீம் லீக் தீர்மானங்களிலாவது, 19 மெம்பர்களுடைய கோரிக்கைகளிலாவது நாம் சார்பு காட்டவே கூடாதென்பதே நம்முள் விவேகிகள் பலருடைய அபிப்பிராயமாயிருக்கிறது. இத் தீர்மானத்தையும் கோரிக்கைகளையும் அவலம்பித்திருப்பவரே ஹோம் ரூல் கக்ஷியாரென்று யாவராலும் அழைக்கப்படுவோர். அக்கக்ஷியாரே இப்பொழுது அச்சுப் பாரங்களில் பலருடைய கையெழுத்தும் பெற முயன்று வருகிறார்கள். அந்தப்பாரங்களில் விஸ்வகர்ம ஜாதியார் எவரும் கையெழுத்திட

## கான்பரென்ஸ்—சுய ஆட்சி

(திருச்சி விஸ்வகர்ம) கான்பரன்ஸில் இன்னின்னார் இன்னின்னவைகளைப் பற்றி பேசப் போகிறார்களென்பது முன்னதாக அறிந்துகொள்ள முடியவில்லை. அதைப்பற்றி யாதொரு பிரசுரமும் கிடையாது. உபசரணைக் கமிட்டியின் காரிய நிர்வாகத்தில் என்னையும் ஒரு முக்கியஸ்தனாக இருக்கும்படி கோரினார்கள். நான் அதை ஏற்றுக்கொண்டேன். ஆனால், அதில் நடந்த நடவடிக்கைகள் ஒன்றும் எனக்குத் தெரியாது. விபரம் தெரிந்துகொள்ள எண்ணி மிஸ்டர் முத்து கிருஷ்ண ஆச்சாரியாரையேனும் அல்லது மிஸ்டர் முக்கண்ணாச்சாரியாரையேனும் கேட்டால், சரியான பதில் கிடைக்கிறதில்லை. இவைகள் இப்படி யிருந்தபோதிலும், விஸ்வகர்மஜனம் சீர்பெறுவதற்குரிய தீர்மானங்கள் வெளிவருகிறதாவென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்தேன். விஸ்வகர்ம ஜனங்களின் நிலைமையை உள்ளபடி உணர்ந்து அவர்கள் கல்வியில் முன்னேறும் சாதனங்களமைந்த திருத்த தீர்மானங்கள் கற்றறிந்தவர்கள் அங்கீகரிக்கக் கூடியதாய் ஒன்று வெளிவரவில்லை. ஆனால், கான்பரன்ஸ் கூட்டம் ஒருதமாஷ் கூட்டமாகவும் பாமர ஜனங்கள் குதூகலிக்கும் ஒரு கொண்டாட்டக் கூட்டமாகவே யிருந்தது. அது விஷயத்தில் திருப்தி அடைய வேண்டியதுதான். இவைகளுக்குக் காரணம் ஜாதியார் நிலைமை எவ்விதமாயினும், விஸ்வகர்மஜன அபிவிருத்திக்கு கான்பரன்ஸ் கூட்டமுயன்றவரும், அதைக் கூட்டியவரும், அதற்குத் தலைவரும் நான்தானென்று கவுரவித்து தனக்குத்தானே பெருமைப் படுத்திக்கொள்ள சமயம் இதுதானென்று ஒன்றுமறியாத சாதாரண ஜனங்களை மயங்கச்செய்வித்துச் குலாபிமானத் தலைவரென்று படாடோபம் காட்டித்திரியும் மிஸ்டர் முக்கண்ணாச்சாரியார் பொறுப்பில் கூடிய கூட்டமானது போலிக்கூட்டம் என்று சொல்வது வீணாகாது.

சுயஆட்சியே நமது லட்சியமாகும். ஆனால், ஜாதிவித்தியாசம் விட்டு ஒழிகிறவரையில் ஒவ்வொருவரும் தம்தம் ஜாதி சகோதர முன்னேற்றத்தில் கவனம் வைக்கக்கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். நாமும் அதைப்போல் நமது குலஜனங்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியவர்களாகிறோம். தற்போது நமது குலஜனங்களிருக்கும் நிலையை உத்தேசிப்போமாகில், சுய ஆட்சிக்கு லாயக்கு ஆகும்படி நமது ஜாதியாருக்குள் ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்வதை நமது நோக்கமாகக்கொள்ளவேண்டும். இது விஷயத்தில் அரசாங்கத்தாரை நாம் கேட்டுக்கொள்ளவேண்டுவதில் முக்கியாம்ஸம். கல்வியில் விசேஷ உரிமையும் மகம்மதியரைப்போல் அரைசம்பளமாகவும் நமது வகுப்பு பிரதிநிதிஸ்தானம் கூடுமானவரையில் முக்கியமாய் எல்லா சபைகளிலும் அமரவும் கல்வியில் தேறிய மாணவர்களுக்கு போட்டியன்னியில் உடனே அவர்களின் திறமைக்கேற்ற உத்தியோகங்கள் கொடுக்கவும் வேண்டிக்கொள்வதே தற்காலத்திற்குரிய நமது கோரிக்கையாகும். இதைத்தவிர வேறெவ்விதமான திருத்தமும் நமது குலஜனங்களின் முன்னேற்றத்திற்கு அநுகூலம் தரக்கூடிய தல்லவென்பது எமது துணிவு. ஆனாலும், நமது குறைகளை நிவர்த்தி செய்துகொள்வதில் ஆங்கிலேயரின் நேர்முகமா யிருக்கவேண்டுமேயொழிய, இந்தியரை எதிர்பார்ப்பது கடைசியாய் ஏமாற்றத்தையே தரும். இந்திய ஆட்சிக்குரிய நிர்வாகப்பொறுப்பை ஜாதி அபிமானத்தில் வித்தியாசமான சிந்தையையுடைய பிராமண

ஜாதியாரிடத்தில் விட்டிருப்போமாகில் அது பின்னால் மற்றவர்களுக்கு அழிவையேதரும். ஆகையால் இப்போது நாம் சுய ஆட்சிக்கு அருகரல்லோம் என்பது உண்மையே.

கே. ப. கோவிந்தசாமி ஆச்சாரி, திருச்சி.

## சுய ஆக்ஷி கேட்கும் விஸ்வகர்மாக்களுக்கு ஓர் விண்ணப்பம்

இப்பொழுது ஓம்ரூல் கக்ஷியில் விஸ்வகர்மாக்களுக்கு பிரதிநிதி என்பதாக பேசிய பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியார், B. A. இவர்கள் தென்னிந்திய விஸ்வகர்ம மஹாஜன சமூகத்திற்கு பிரதிநிதிகள் ஆகமாட்டார்களென்பதற்கு சில திருஷ்டாந்தரங்கள் இங்கு எடுத்துச்சொல்ல முன்வருகிறோம்.

ஷை ஸ்ரீ முக்கண்ணாச்சாரியார் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் கும்பகோணம் சென்ட்ரல் கமிட்டிக்கு பிரசிடெண்டு; ஷை ஸ்ரீ துரைவேலாச்சாரியார் ஷை கான்பரன்சு சென்னை கமிட்டிக்கு வைஸ்பிரசிடெண்டு. இவ்விருவர்களும் இவர்களிஷ்டப்படி மற்ற மஹாஜன சமூகத்திற்காக பேசிவிடலாமா? கையொப்பங்கள் கொடுத்துவிடலாமா? ஷை கான்பரன்சு கமிட்டிகளுக்கு மெம்பர்களும், மற்ற பொதுஜனங்களும் இல்லையா? எந்தக் கமிட்டியைக்கூட்டி என்ன தீர்மானங்கள் ஆயிருக்கின்றது? இவர்களுக்கு ஓம்ரூல் வேண்டுமென்று இவர்களுக்குள் தீர்மானங்கள் செய்துகொண்டாலும், மற்ற வெளிஜில்லா விஸ்வகர்மாக்கள் அவரவர்கள் அபிப்பிராயங்களை என்ன தெரிவித்தார்கள்? அப்படி யொன்றுமில்லையே!

இவர்களுக்கு கான்பரன்சு விஷயமாக செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யவும் கான்பரன்சில் தீர்மானித்த தீர்மானங்களை அச்சிட்டு கவர்ன்மெண்டுக்கு அனுப்பும்படியாகவும், அதிகாரங்கள் கொடுத்தார்களே தவிர மற்றைப்படி நம் ஜாதியார்கள் தலையிடாத ஓம்ரூல் கக்ஷிக்காரர்களுடன் சேர்ந்து பிரசங்கங்கள் செய்யவும், கையெழுத்துகள் போடவும், மற்றவர்களுக்கெல்லாம் பிரதிநிதியாக முன்வரவும், யார் எந்த காலத்தில் எந்த சட்டத்தில் எழுதி கொடுத்தார்கள்? அப்படி யொன்றும் இதுபரியந்தம் யாரும் எழுதிக்கொடுத்ததாகத் தெரியவில்லை.

திராவிடன் பத்திரிகையில் பொதுவாக எழுதி விஸ்வகர்ம குலாபிமானி என்பதாக கையொப்பமிட்டு எழுதிய கண்டனத்திற்கும் அஞ்சாமல் மேலுமேலும் வேலைசெய்வது ஞாயமாகாதென்று நேரில் தெரிவித்திருந்தும், பொது வார்த்தையைக் கேளாமல் யாரோ பேர்வூரில்லாமல் எழுதினார்களென்றும், திராவிடன் பத்திரிகையில் ஏன் எழுதவேண்டுமென்றும், சுதேசமித்திரனில் ஏன் எழுதக்கூடாதென்றும் பலவிதமாக அவரும் அவர் கக்ஷிக்காரரும் பேசுகிறார்கள். ஆனால், நான் சில ஆதாரங்களைக்கொண்டு இப்பொழுது இவர்கள் ஓம்ரூல் அதாவது சுயஆக்ஷி கேட்பது பிசகு என்பதாக உறுதியாக கூற முன்வந்திருக்கிறேன்.

அதாவது அநேக இடங்களிலிருந்து நமக்கு வந்திருக்கும் கடிதங்களில் எழுதியுள்ளவைகளாவன, நம்மை ஓம்ரூல் கக்ஷிக்காரர்கள் கையொப்பம்போடும்படி தொந்தரவு கொடுக்கிறார்கள். அதற்கு நாங்கள் போடமாட்டோமென்பதாக சொல்லுகிறோம். சென்னையிலுள்ள நம் விஸ்வகர்ம சபையில் எப்படித் தீர்மானம் செய்தீர்கள். அதை எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று எழுதி அதில் கையொப்பங்கள் வைத்து அனுப்பியிருக்கிறார்கள். ஓம்ரூல் என்றால் இன்னதென்று தெரியாத வெளியூர் வாசிகளுக்கு இவர்கள் பிரதிநிதி என்றுசொல்வது ஞாயமாகுமா? அவர்களுக்கெல்லாம் ஓர் பொதுக்கூட்டம் கூட்டி இது இன்னது என்பதாக ஒவ்வொன்றையும் விபரமாய் விளக்கிக்காட்டி அவரவர்கள் சம்மதித்த பிறகல்லவா அவர்களுக்காக முன்னின்று பேச முயலவேண்டும்?

வெளிஜில்லா வாசிகளானாலும் சரி, சென்னை வாசிகளானாலும் சரி, எந்த விஸ்வகர்மாக்களாயிருந்தாலும் இதுபரியந்தம் தெரியாமல் ஓம்ரூலுக்கு கையொப்பமிட்டிருப்பதையெல்லாம் ஓம்ரூல் கக்ஷியார்கள் எடுத்துவிடவேண்டியது. இதுவரையில் அவர்கள் நம்பியிருப்பது விஸ்வகர்ம கான்பரன்சில் பேசியதைத்தான் கேட்கிறார்களென்று நம்பியிருக்கிறார்கள். சுயஆக்ஷி கேட்கப்பட்டதென்றால் எந்த விஸ்வகர்மாக்களும் கையெழுத்திட ஒப்பமாட்டார்கள். இது உண்மை.

இவ்விண்ணப்பத்தை சுதேசமித்திரன், திராவிடன், இந்துநேசன் முதலிய பல பத்திரிகைகளுக்கும் அனுப்பியுள்ளேன்.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

301, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 4] 1917௵ டிசம்பர்௴ [சஞ்சிகை 5

## ஒளிவளர் விளக்கு.

சென்னையில் விஸ்வகர்ம மகாநாடு ஒன்று நடத்துவதற்கான பிரயத்தினங்களை நம்முள் கர்மகாரர்களாயிருப்பவர்கள் செய்து வருகிறார்களென்பது தறிய மிக மகிழ்கின்றோம். எவரேயாயினும் தங்கள் குறைகளையும் அசௌகரியங்களாதியவற்றையும் கண்கூடாக்கண்டு அவற்றை நிவர்த்திக்கும் மார்க்கங்களைத் தாமாகத் தேடிக்கொள்வார்களாயின் அதினும் சிலாக்கியமானதொரு முன்னேற்ற சாதன மில்லையென்பது யாவருக்கும் வெளிப்படை. ஆதலால், கர்மகாரர்களின் நன்மைக்காகவென்று உத்தேசிக்கப்பட்டு பிறரால் இயக்கமுற்றிருப்பதினும் இம்முயற்சி மிகவும் உத்கிருஷ்டமானதாயிருக்கிறது. அன்றியும், இம்மகா நாட்டின் ஆலோசனைக்கென முக்கியமாய்க் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் யாவும் நம்மனோருடைய துரித மேம்பாட்டிற்கு அத்தியாவஸ்யமாய்க் கவனிக்கப்படவேண்டிய அருமைவாய்ந்தனவாயிருக்கின்றன. அவ்விஷயங்கள் கீழ்க்குறிக்கப்பட்டவையே யென்பது, சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியாரவர்களால் வெளியிடப்பட்டதொரு விளம்பரத்தினின்று புலப்படுகின்றது:—

1. விஸ்வகர்மசந்ததிச் சிறுவர்களுக்குப் பாடசாலைச் சம்பளங் கொடுத்தும், புஸ்தகங்கள் கொடுத்தும், போஜனம், வஸ்திரம் இல்லாத பிள்ளைகளுக்கு அவற்றை ஈந்தும், மற்ற சவரக்ஷணைகள் செய்தும், வித்தியாபிவிருத்தி செய்துவர ஓர் நிதி ஏற்படுத்தல்.

2. விஸ்வகர்ம கைத்தொழிற்சாலைகளேற்படுத்தி, அவைகளில் விஸ்வகர்மசந்ததிச் சிறுவர்களுக்குத் தொழில்கற்பித்துக் கொடுத்தும், வெளி ஆர்டர்களை வாங்கித் தொழிலகப்படாதுலாவும் விஸ்வகர்ம வம்ஸ வேலையாளரைக் கொண்டு குறித்த காலத்தில் தீர்த்துக்கொடுத்தும், விற்பனைக்கான சாமான்களை முன்பணம் வைத்துந் தொழிற்செய்தற்குத் தக்க ஏற்பாடு செய்து, அதனால் வரும் இலாபத்தில் ஒரு பங்கு ஷை தர்மபண்டிற் சேர்த்து விருத்தி செய்தல்.

3. விஸ்வகர்மாக்கள் செய்யக்கூடிய சாமான்களைக் கமிஷனுக்கு விற்பனைசெய்யவும், ஷை தொழிற்சாலையில் தீரும் சாமான்களையும் இன்னும் வெளியூர்களினின்றும் வருகிற சாமான்களையும் விக்கிரயஞ் செய்யவும், வெளியார் சாமான்களுக்கு கமிஷன் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு மிச்சப்பணத்தை அனுப்பவும், இவற்றினால்வரும் இலாபத்தில் ஒருபங்கு ஷை தர்ம விருத்திப்பண்டிக்குச் சேர்த்துவிடவும் விஸ்வகர்ம வியாபாரச்சாலை யொன்று ஸ்தாபனஞ் செய்தல்.

4. விஸ்வகர்ம "பாங்க்" ஒன்று ஏற்படுத்திச் சொத்தின்பேரிற் கடன் கொடுக்கவும் வாங்கவும் தகுதியான ஏற்பாடுகள் செய்தும், விஸ்வகர்மாக்களுக்கு உதவிபுரிந்தும், அதனால் அடையும் லாபத்தின் ஓர் பாகத்தை தர்மபண்டில் வைத்து விருத்திசெய்தல்.

5. இவ்வித காரியங்கட்கெல்லாம் பொருள் நிரம்ப வேண்டியிருப்பதால், விஸ்வகர்மாக்கள்

பலரையும் பங்குக்காரர்களாகச் சேர்த்து பங்கு ஒன்றுக்கு ரூபா பத்து (10) விதம் அவரவர்கள் சக்திக்கேற்றபடி எத்தனை பங்குகள் சேர்ந்தாலும் சேர்த்துக்கொண்டு வேலைகளை நடத்தி, அதனால் வரும் இலாபத்தின் பாதியைத் தர்ம பண்டிற்கும், மற்ற பாதியைப் பங்கினர்களுக்கும் கொடுத்து விருத்திசெய்தல்.

6. இவ்விஷயங்கள் நடத்துவதற்குத் தகுதியாயும் காலியாயுமுள்ளதோர் இடத்தைச் சென்னையிற்றேடி அந்த இடத்தை இவ்விதத் தர்ம விஷயத்திற்குக் கொடுக்கும்படி நமது கவர்ன்மென்டாரைக் கேட்டு வாங்கி ஆங்கு இவ்விதப் பொதுக்காரியங்கள் நடத்துதல்.

7. இவ்விதப் பெருந் தர்ம விஷயங்களுக்கு விஸ்வகர்ம மஹா ஜனங்கள், தங்கள் தங்க ளிஷ்டப்படி நன்கொடை யளிக்கும்படியும், மாதசந்தா கொடுக்கும்படியும் கேட்டு வாங்குதல்.

இம்முயற்சி சீக்கிரமே முடிவுபெற்று சாஸ்வதமாகிய நற்பயனை நமது குலத்திற்கு விளைவிக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

***

விஸ்வகர்ம கான்பரன்ஸ்கள் முக்கியமாக கிராமங்களில் நடைபெற வேண்டியனவாயிருக்கின்றன. கிராமவாசிகளே பலவித இடர்களுற்று வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் உரிமைகள் இவையென்றும், அவைகளைப் பாராட்டுவதின்னவிதமென்றும், தங்கள் ஒழுக்கவிதானமிதுவென்றும், ஜனசமூகத்தில் தங்கள் ஸ்தானமிதுவென்றும் பெரும்பாலும் அறியாதிருக்கின்றனர். நமது ஜாதியார் மேம்படுதற்கான மார்க்கமெதுவென்பதையும் அதை எங்ஙனங் கைப்பற்றுவதென்பதையும் அறியாதிருக்கின்றனர். நாகரிகக் கொள்கைகள் அங்கு பரவாமலிருக்கின்றன. அவர்கள் வெளியேறி தேச சஞ்சாரஞ்செய்து பிறஜாதிப் பிரமுகர்களுடன் கலந்து அவர்கள் முயக்கங்களைக் கவனித்துத் தெளிவடைதற்கு ஹேதுவில்லாதிருக்கிறது. அவர்கள் பிறரால் விடுமுன்றிருக்கும் நிலைமையை மாற்றி, பிறர் மதிப்பில் அவர்களையும் அவ்வழி நமது குலத்தையும் உயர்த்துதற்கு கிராமக் கான்பரன்ஸ்கள் வேண்டப்படுகின்றன. பத்து கிராமங்களுக்கொரு கான்பரன்ஸாக நடத்தினால் ஜாதியக்கிளர்ச்சி எங்கும் பரவிவிடும். இவ்விதக் கான்பரன்ஸ்களே சுலபமாய் நடைபெறுவித்தற்கியன்றனவாயும் பெரும்பயன்களை உண்டுபண்ணத் தக்கவையாகவு முள்ளவை. மற்றவை ஆடம்பரத்திற்கும் பணச்செலவிற்கும் ஏற்ற பலன்களைத்தாராவென் றஞ்சுகிறோம். நம்மவர்கள் முன்னேற்றத்திற்குப் பிறசகாயந் தேட முயல்வதினும், ஸ்வயசகாயந் தேடுவதே சிரேஷ்டமெனத் தோன்றுகிறது. அதாவது, சுஜாதியார்க்குள் கிளர்ச்சி யுண்டுபண்ணி அவர்கள் கண்களை ஜாதிக்குறைகளுக்குத் திறப்பித்து, அவற்றை நீக்குவதில் உற்சாகமூட்டி விடுவோமானால், மற்றவிதங்களால் அடையக்கூடிய பலனிலும் பதின்மடங்கதிகமான பலனை சீக்கிர காலத்தில் அடையலாமென்பது திண்ணம். முயக்கமும் சீர்திருத்தமும் உள்ளிருந்து வெளிப்பட வேண்டும். ஆதலால், குலத்தலைவர்கள் இவ்வழியி லுழைக்கவேண்டுகிறோம். இங்ஙனே ஜில்லாக்கான்பரன்ஸ்களும், தாலூக்கா கான்பரன்ஸ்களும் நடைபெறவேண்டும். ஒவ்வொரு கான்பரன்சும் ஒவ்வொரு எல்லைக்குட்பட்டதாகவும், அவ்வெல்லைக் குட்பட்டாருடைய நிலைமையை யநுசரித்த விஷயங்களை ஆலோசித்துத் தீர்மானிப்பதாகவு மிருக்கவேண்டும். இச்சிற்றெல்லைக் கான்பரன்ஸ்களால் குலாபிமானமும், தன்னலமறுப்பும், பொதுநலவேட்கையும், கார்ய நிர்வாகத் திறமையும் பிறநற்குணங்களும் நம்மவர் பலரிடம் உதித்துப் பெருகி ஓங்குவதற்கு ஹேதுவுண்டாகும். பிறகு, பெரிய எல்லைகளைப் பற்றிய விஷயங்களைத் தக்கபடி கவனித்தற்குச் சௌகரியமேற்படும்.

***

திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்க சபையார் "விஸ்வகர்ம சகோதரர்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்ற மகுடமிட்டு வெளிப்படுத்தியுள்ளதோர் விளம்பரத்தில், நமது சபையைப்பற்றியும் பத்திரிகையைப்பற்றியும் அன்பான மொழிகளெழுதி, இவை தளருறாது நடைபெற்று விருத்திபெறும் பொருட்டு சுஜாதிகனவான்கள் சகாயஞ் செய்யவேண்டுமென்று தூண்டியிருக்கிறார்கள். இவர்களுடைய குலாபிமானம் மிகவும் கொண்டாடப்படத்தக்கதா யிருக்கிறது. இனம் இச்சபையார் அச்சுவிண்ணப்பத்தை தமிழ்நாட்டு விஸ்வகர்ம சகோதரர்கள் பலருக்கும் அனுப்பிய வாற்றால், இவர்கள் நமக்குச் செய்ய எண்ணிய அநுகூலத்தில ஒரு பகுதியேனும் யாம் அடைவேமேல் மிகத்திருப்தியடைதல் நிச்சயம். இவர்கள்பால் யாம் என்றும் நன்றி பாராட்டக்கடவோமாயுளோம்.



## தமிழ் எழுத்துகளின் ரகசியம்.

எக்ஸிக்யூடிவ் இஞ்சினிர் மிஸ்டர் மாணிக்க நாயகர் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்:— அரிசுவடியின் ஆரம்பத்தில் அறிவறி ரகசியம் அறிந்து கூறவே என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரிசுவடியென்று சகர ஒற்றில்லாமலும் அரிச்சுவடி யென்று சகர ஒற்றுடனும், அறச்சுவடி யென்றும் ஹரிச்சுவடியென்று வடமொழிப் பெயராக்கியும் இந்நூலைப் பலவாறு கூறுகின்றனர். 'எழுத்தெனப்படுவது அகர முதல், னகர இறுவாய்' என்று தொல்காப்பியச் சூத்திரத்துக்கு உரை எழுதின நச்சினார்க்கினியர், எழுத்துகளின் வடிவும் தன்மையும் ஆசிரியர் சொல்லவில்லை யென்று எழுதியிருக்கிறார். ஆகையால், எழுத்துகளின் தன்மை இலக்கணம் ஒன்றுண்டென்று புலப்படுகிறது. எல்லா ஹிந்து மதத்தினரும் பிரணவத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிரணவத்துக்கு அறிகுறியாயுள்ளது, ஓ என்ற எழுத்து. பிரணவம் ஓரெழுத்தென்று சொல்லப்பட்டிருப்பதால் ஓ என்ற எழுத்துமாத்திரம் பிரணவத்தைச் சுட்டாதென்றும், ஓம் என்ற சொல் வடமொழி வந்தபிறகே தமிழில் சேர்த்துக்கொள்ளப்பட்டதென்றும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்முன் பேசியபொழுது அச்சங்கத்தினரில் ஒருவர் ஆட்சேபம்செய்தனர். நாயனார் அருளிய குறளோ "அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி" என்று சொல்லுகிறது. பிரணவம் உலகிற்கு முதலானால், அகரத்தை அவர் ஏன் சொன்னார்? சிவஞான சித்தியாரிலும் "அக்கரங்கள்தோறும் செல்லும் அகரம்" என்று சொல்லியிருக்கிறது. பிறநூல்களும் அப்படியே கூறுகின்றன. அகரமும் ஓகரமும் ஒன்றாயிருந்தாலொழிய 'அகரம் முதல் எழுத்தெல்லாம் ஆதி' என்பதும், பிரணவம் உலகிற்கு முதல என்பதும் ஒன்றோடொன்று முரணும். பிரணவமாகிய ஓம் என்ற ஓசையைப் பிரித்தால் அ, உ, ம், என்று அது பிரிகிறது. அகரத்தில் இம்மூன்று எழுத்துகளும் அடங்கியிருக்கின்றன. (அ என்ற எழுத்தின் தலைச்சுழியும் வலது புறத்துக் கோடும் உ ஆகிறதையும், அவ்வெழுத்தின் அடிப்பாகம் தலைகீழாயுள்ள ம் ஆகிறதையும் பலகையில் எழுதிக் காண்பித்தார். ஓ என்ற எழுத்தின் ஒரு பாகத்தைத் திருப்பி வைத்து அது அ ஆனதைக் காண்பித்தார். அவைத்து அது அ ஆனதைக் காண்பித்தார். அ என்ற எழுத்தைத் திருப்பிவைத்து அது ஓ ஆகிறதுடன் தலைப் புள்ளியுடனிருப்பதையும் காண்பித்தார். பண்டைக்காலத்தில் ஓ தலைப் புள்ளியுடன்தான் இருந்ததென்றும், சிறிது காலத்திற்குமுன்தான் புள்ளியைநீக்கி நெடிலுக்கு ஒரு சுழியேற்பட்டதென்றும் சொன்னார். சித்தநூல்கள் அகரத்தையே ஓங்காரமாகச்சொல்லி யிருப்பதற்கேற்ப, அகரம் ஓங்கார வடிவெடுப்பதை பிரத்தியட்சமாய்க் காட்டினார்) ஓங்காரத்தைப் பெருமையாகச் சொல்லியிருப்பதற்கேற்ப, உலகில் எதுவும் ஓ போன்ற உருவுடையவைகளா யிருக்கின்றன. மனிதன் முதலிய ஜீவராசிகளின் மூளை, நுரையீரல், குடல், காது, முதலிய அவயவங்கள் ஓ போலிருக்கின்றன. கருப்பையிலிருக்கும் சிசுவும் ஓ போன்றிருக்கிறது. இடமில்லாமல் அது வளைந்திருக்கிறதென்று சொல்லலாம். ஆனால் கோழி முட்டைக்குள் இருக்கும் ஜீவனைப்பார்த்தால் அந்த வாதம் தப்பென்று தோன்றுமென்று சொல்லி, கோழிமுட்டைக்குள் குஞ்சு எப்படி இருக்கிறதென்பதை பூதக்கண்ணாடி மூலம் காட்டினார். குஞ்சுக்கு அப்பாலும் இப்பாலும் இடம தாராளமா யிருந்தும் அது வளைந்துதா னிருக்கிறது. ஓங்கார வடிவத்திலிருந்து கருப்பையிலிருந்து வெளிப்படும் மனிதர் முழுப்பிராயமுமிருந்தால், மறுபடியும் அவ்வடிவத்தை அடைவர் என்று காட்ட ஒரு கிழவியின உருவத்தைப் படத்தில் காட்டினார். இவ்விதப் பெருமையுள்ள ஓங்கார வடிவாகிய ஓ வானது அ என்ற எழுத்தின் உருவப்பேதமே என்பது மேற்கூறியவாற்றால் தெளியப்படுகிறது. ஆகையால முதற்குறளின்படி அகரம் எழுத்துகளுக்கு முதலாவதாயிருப்பதல்லாமல், அகரமே மற்ற எழுத்துக்

களும் ஆகிறது. முக்கியமந்திரங்கள் எப்படி அகர எழுத்திலேயே அமைந்திருக்கின்றன வென்று காட்டுகிறேன் என்று, மிஸ்டர் நாயகர் சொல்லி காகிதத்தில் கத்தரிக்கப்பட்ட ஐந்து அகரங்களை எடுத்துக்கொண்டு அவை பஞ்சாட்சரமாகிறதைக் காட்டினார். பஞ்சாட்சரமென்றால் 5-எழுத்தென்று பொருள். ஆனால் "ஓம் நமசிவய" என்ற பஞ்சாட்சரம் 6-எழுத்துடையதாயிருக்கிறது. ஆயினும் அது ஐந்தெழுத்தென்று சொல்வது எப்படி என்று அவர் கேட்டு அவர் எடுத்துக்கொண்ட 5-அகரங்களில் ஒன்றை வைத்துவிட்டு பாக்கி அகரங்களைப் பலவிதமாய்க் கத்தரித்து அத்துண்டுகளை ஒட்டி நமசிவய என்ற எழுத்துகளைச் செய்துகாட்டினார். பாக்கியுள்ள ஒரு அ-வானது புள்ளியிட்ட ஒ-வாகச் செய்துகாட்டப்பட்டது. ஆகையால் ஓம் நமசிவய என்ற பஞ்சாட்சரமானது 5-அகரங்களால் அமைவதால் அது ஐந்தெழுத்தென்று சொல்லப்பட்டு வருகிறது. ஓம் நமசிவய என்று செய்ய ஐந்து அகரங்களையும் 10-துண்டுகளாகச் செய்யவேண்டியிருப்பதால், அவை சிவபெருமானுடைய 5-முகங்களையும் 10-கைகளையும் குறிப்பிடுவதாக வைத்துக்கொள்ளலாம். இப்படியே 6-அகரங்களை எடுத்துக்கொண்டு 12-துண்டாக்கி ஓம் சரவணபவ என்று செய்துகாட்டினார். 6-எழுத்துக்களும் 12-துண்டுகளும் 6-முகங்களையும் 12-கைகளையும் குறிப்பிடுகின்றன என்று சொல்லி, 10-அகரங்களை எடுத்துக்கொண்டு, ஓம்நமோ நாராயணாய என்று செய்து காட்டினார். அப்படிச் செய்ய அவ்வெழுத்துக்களை 34 துண்டுகளாக்க வேண்டியிருந்தது. 10-எழுத்துக்களும் திருமாலின் 10-அவதாரங்களைக் குறிப்பிடுகின்றன. 34 துண்டுகள் தசாவதாரங்களின் 34-கைகளைக் குறிக்கின்றன. 34 கைகள் எப்படியென்றால், தசாவதாரத்தில் 5-அவதாரங்கள் தேவாவதாரங்கள். ஆகையால் அவைகளுக்கு ஐந்நான்கு 20-கைகள். பாக்கி 5-மனுஷ்யாவதாரங்களில் கண்ணன் தோன்றியவுடன் பஞ்சாயுதங்களுடனிருந்ததாக பாகவதம் கூறுகிறது. ஆகையால், அவனுக்கு 4 கைகள். வாமனாவதாரத்தில் திருமால் முதலில் இரு கரங்களுடன் சென்றாராயினும், பிறகு 4-கரங்களில் பஞ்சாயுதங்களுடன் பிறங்கினார் என்று பாகவதம் கூறுகிறது. மற்றமூன்று மனுஷ்ய அவதாரங்களுக்கும் 6 கைகள் ஆக 34 கைகளாகின்றன.

## கல்வி பெருக்குவது

ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரி, ... லி.

நமக்கு அவசியமான கா... செய்து கொள்ளவேண்டும். ... வினை நாம் முற்றிலும் நமது ... கோரும்வரை நமது நினைவு நில... மவர்களிற் சிலர் கல்வியின் சிற... வர்களாகவே யிருக்கின்றனர். ப... னென்ன? உத்தியோகஞ் ... படிப்பு வேண்டும்?—என்று கரு... க்கின்றனர். நம்மவர்கள் என் ... என்று நாம் உள்ளபடி ஆராயவே... களை எந்தவிதத்திற் படிக்கச் செ... பலருங்கூடி ஆலோசிக்கவேண்டு... பெரும்பாலார் தொழிலாளிகளா... தமது மக்கள் தமக்குதவியாகக்க... மடைந்ததும் 7, 8 வயதிலேயே... வேலையில் விட்டுவிடுகிறார்கள். அ... பாதித்து வரவேண்டுமென்ற ஆசைய... தில் ரூ 4-சம்பாதிக்கிற வழியைவிட... செலவிடுவதா என்று வாதாடுகிறார்கள். ...கள் செலவுகளோ அதிகம்; செட்டாய் ... தெரியாது. தாய்தந்தையர்களுக்கு கல்வி ந... லாததால், படிக்கும்பிள்ளைகளை நடத்தும் வ... யுந் தெரிவதில்லை. இவர்களுக்குச் சிநேகிதர்களும் நங்குலநேயத் தொழிலாளிகளே. இதனிடையில் நம்பிரயத்தினஞ் சீர்குலைகின்றது.

தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கக்கூடிய நிலையிற் சிலரிருக்கின்றனர். ஆனால் இவர்கள் படிப்பிக்கிறதில்லை. பொருளுள்ளவர்களுங் கவனிப்பதில்லை. முனிசிபல் போர்டுகளும் லோக்கல்போர்டுகளும் இவர்களுக்குச் சகாயஞ்செய்வதில்லை. ஜில்லா முனிஸிபாலிடி ஆக்ட் 118, 124-வது செக்ஷன் பிரகாரம் வரிகள் கொடுக்கும் தொழிலினத்தார்களின் கல்வி அவசியங்களைப் பூர்த்தி செய்ய ஷை போர்டார் கடமைப்பட்டுள்ளதை நமது கான்பரன்ஸ் ஒன்றில் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். அப்படி ஏற்படும் பள்ளிக்கூடங்களுக்கு எத்தனைப் பிள்ளைகள்போய் வாசிக்கக் கூடும்? 100-பிள்ளைகள் படிக்கிறதாயிருந்தால் ஒருக்கால் நம் வகுப்பார்க் கெனத் தனித்தொரு பள்ளிக்கூட மேற்படுத்துவதற்குத்தரவு கொடுக்கக்கூடும். நம்மவர்கள் கவுன்ஸிலர்களாக நியமிக்கப்பட்டிருந்தால் நாற்காலி கிடைத்ததே



போதுமென் றெண்ணக்கூடியவர்களே யன்றி தம்முடைய கடமை இன்னதென் றுணர்ந்துழைக்கிறவர்களில்லை. அப்படியே யிருந்தாலும் மேற்கூறிய பள்ளிக்கூடம் நடை பெறுவதற்குண்டான அத்தனைப்பிள்ளைகள் நமது வம்ஸத்திலிருந்தாலல்லாமல் கவுன்ஸிலர்கள் அதைப்பற்றிப்பேசவும் சங்கத்தார்கள் அதைக் கவனிக்கவும் ஹேதுவிராது.

டிஸ்ட்ரிக்ட் போர்டார் கிராமாந்திரங்களிற் பள்ளிக்கூடங்க ளேற்படுத்துகிறார்கள். பஞ்சமர்களுக்கும், மகமதியர்களுக்குந் தனித்தனிப் பள்ளிக் கூடங்களேற்படுத்தப் பட்டிருக்கின்றன. நாம் மற்ற ஜாதியார்களுடன் கலந்து வாசிக்கக் கூடியவர்களாதலால், நமக்குப்பிரத்தியேகமாகக் கலாசாலைகள் அனாவசியமென்று கருதுவார்கள்.

ஆரம்பக்கல்வியின்றி நாம் நமது தொழிலை விர்த்தி செய்யவாவது தொழிலின் நுட்பங்களை எளிதினிற்கண்டு விரைவினிற் செய்யவாவது ஏதுவில்லை. பதார்த்தத்திற்கு உப்பு எப்படி இன்றி யமையாததோ அப்படியே கல்வி நம் தொழிலுக் கின்றியமையாத தென்பதைக்கருதுவதில்லை. உப்பில்லாத பதார்த்தத்தை வெறுத்தல் போல, கல்வியில்லாத் தொழிலை யாவரும் வெறுப்பர். அப் பதார்த்தத்தைச் செய்தவனை வெறுத்தல் போலக் கல்வியில்லாத தொழிலாளியையும் வெறுப்பர். தந்தையறிவு மகனறிவு; குலத்தொழில் கற்றுபாதி கற்காதுபாதி வந்துவிடும். நமது முன்னேற்றத்திற்குரிய கல்வியில் பணஞ்செலவிடுதல் பெரியதர்மமாகும். தனவந்தர்கள் இந்தத்தர்மத்தில் முயற்சிக்கவேண்டும். ...த்துவிஷயமாய் கக்ஷிப் பிரதிகக்ஷிகளுண்...க் கோர்ட்டாருக்குக் கொட்டிக்கொடுக்கும் ...ணமும், போட்டாபோட்டியா யிரு கக்ஷிக்காரர்கள் ஓர் கோயிலுக்கு நடத்தும் 2-திருவிழாக்களிற் செலவிடும் பொருளும், சந்ததியின்றி சஞ்சலப்படும் சம்பத்துக்காரர்களுடைய செல்வமும் சாஸ்வதமாய் நிலைநாட்டக்கூடிய கல்வி அபிவிர்த்தியி லுபயோகிக்கப்படலாகாதா?

ஆருஷேயர்கள் எவ்வளவு ஏழைகளாயினும், எப்பாடுபட்டாயினும் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்; அவர்களுக்குத் தனவந்தர்களா யுள்ளவர்கள் புத்தகமும், சாப்பாடு ஆடைகளுங்கொடுத்துதவுகிறார்கள். அவ்வாறே நாமும் ஊர்கள் தோறும் சபைகளேற்படுத்திப் பணம்வசூல் செய்து நங்குலச்சிறுவர்களுக்குக் கல்வி அபிவிர்த்தி

## குலாபிமானக் கொத்து

### திருநெல்வேலி

### விஸ்வகர்மப் பிராம்மணர்களின் கூட்டம்.

1917ஆ டிசம்பர்மீ 2உ திருநெல்வேலியில் பிரம்மஸ்ரீ மு. தம்பானுச்சாரியவர்கள் அக்ராசனத்தின் கீழ்நடை பெற்ற கூட்டத்தில் நமது குலாபிவிர்த்திக்குரிய சாதனங்களைப்பற்றி திண்டுக்கல் N. முத்துசாமி வாத்தியார், ஸ்ரீசங்கராச்சாரி முதலானவர்களால் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன

அடியிற்கண்ட தீர்மானங்களை சென்னைச் சர்க்கார்க்குத் தெரிவித்து அவைகளை கனம் இந்தியா மந்திரியவர்களுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

1. விஸ்வ பிராமணஜாதியார் கல்வியில் அதிக குறைவாயிருப்பதால் அவர்களை செகண்டரி பாடசாலைகளிலும் காலேஜ்களிலும் அரைச் சம்பளத்திற்கு சேர்த்துக்கொள்ளக் கூடிய வழிகளைத் தேடித்தரவேண்டும்.

---

விஷயத்தில் வேண்டுவனவாய உதவிகளைச்செய்யவேண்டும். இதுவே விஸ்வகர்ம சந்ததிக்கேற்ற உயர்ந்த ஊழியம்; குலத்திற்கு அநுகூலமுண்டாக்கக்கூடிய குவலயம் விரும்பும் ஊழியம் இதுவேயாகும். ஆதலால் ஊர்கடோறும் சபைகளேற்படுத்தப்படவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படி நிர்ப்பந்திக்கவேண்டும். சபைக்குத்தக்க விதமாய் உதவிசெய்யவேண்டும். எல்லாரிடத்திலிருந்தும் பொருள்வசூலித்து அதைச்சிறுவர்களின் சம்பளம், உடை, உண்டிக்குபயோகிக்கவேண்டும். தனித்தனிப் பள்ளிக்கூடம் வேண்டியதில்லை. அங்கங்கிருக்கும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றுபடித்தாற்போதும். இதற்கு வசதிக ளேற்படுத்துவதில் நம்மவர்கள் கவனஞ்செலுத்தவேண்டும். தனவந்தர்கள் ஏழையாயுள்ள பிள்ளைகளுக்குப்பணமும், சாப்பாடும், புத்தகமுங் கொடுத்துதவுதல்வேண்டும். ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச்சம்பளம் பெறுவதற்கான வழியைத்தேடவேண்டும். நாமே நமது சிறுவர்களைத்தழுவி ஆதரிக்கவேண்டும். தேசிறுவர்களைத் தெருவழியே விடுவதாற் பிரஜோஜனமில்லை. ... கருணைக்கிழங்காகவும் வாய்வாழைப்பழமாயு மிருப்பதிற் சுகமில்லை.

2. ஒவ்வொரு குடும்பத்தி லுள்ளவர்களும் தங்கள் குழந்தைகளைப் படிப்பிக்கச் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம், (கட்டாயக் கல்வி) கவர்ன்மெண்டார் அல்லது முனிசிபாலிடி மூலமாய் ஏற்படுத்தி அதற்குச் சட்டமும் ஏற்படுத்தி அவ்விதம் செய்யாதவர்களுக்கு அபராதமும் ஏழைகளுக்கு முனிசிபல் பண்டிலிருந்து அல்லது கவர்ன்மெண்ட் பண்டிலிருந்து பண உதவி செய்யவேண்டுமென்றும் அவைகளை முனிசிபல் கவுன்ஸிலர்கள் விசாரித்துவரவேண்டியதென்றும் உத்திரவு பிறப்பிக்கவேண்டும்.

3. மேல் நாடுகளுக்குப்போய் நூதன தொழில்களைக் கற்றுவருவதற்குக் கவர்ன்மெண்டார் ஸ்காலர்ஷிப்கள் ஏற்படுத்துகையில் தொழிலில் தேர்ச்சியுள்ள இந்த ஜாதிச் சிறுவர்களுக்கே அந்த ஸ்காலர்ஷிப்களைக் கொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

4. கவர்ன்மெண்ட் உத்யோகங்களில் மஹம்மதியர்களுக்குள்ள சுதந்தரம்போல் ஏற்படுத்தி இந்த வகுப்பார்களில் படித்தவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தொழிற் சாலைகளிலும் இந்த வகுப்பார்களை அதிகமாய்ச் சேர்த்து வேலைகள் நடத்தும்படியாயும், இவர்கள் ஆங்கில பாஷையைக் கட்டாயம் கற்கச்செய்வதில் கவர்ன்மெண்டார் முக்கியமாய்க் கவனம் வைக்கவேண்டுமென்றும், மெடிகல் காலேஜிலும் இஞ்சினீரிங் காலேஜிலும் யூனிவர்ஸிடி பரீக்ஷையில் தேராத மஹம்மதியர் கிறிஸ்தவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதுபோல் இந்த வகுப்புச் சிறுவர்களையும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

5. விஸ்வகர்ம ஜாதியார் ஏற்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்யவேண்டும்.

6. ஜில்லா, தாலுகா, போர்டு, முனிசிபல், தேவஸ்தானம், முதலியவைகளில் விஸ்வகர்மப் பிராமணரைப் பிரதிநிதிகளாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும்.

7. தொன்றுதொட்டு இந்த ஜாதியார் வழங்கி வந்த "ஆச்சாரி" யென்ற பட்டப்பெயரை சென்னைக்கவர்ண்மெண்டார் காரணமின்றி மாற்றியதை ரத்துசெய்து பழையபடி இருக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

8. சென்னை மாகாண சட்டசபை திருத்தி அமைக்கப்பட்டால் விஸ்வகர்ம வகுப்புக்குத் தக்கவிதமாய் விஸ்வகர்ம மஹாஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

9. விஸ்வகர்ம மகாஜன முன்னேற்றத்திற்கு பிரிட்டிஷ் ஆட்சியே அவசியமாதலால் எவ்விதத்திலும் சுய ஆட்சி கொடுக்கக்கூடாது.

மு. தம்பாணுச்சாரி, பிரசிடெண்ட்.

## நம்மக்களின் கதி

அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை என்பது நன்குணர்ந்த நண்பர்காள்! பணமே எம்முயற்சிக்கும் ஆதாரமும் உயிர்நிலையுமா யிருக்கின்றதை அறியீர்களா? சென்னை, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, மாயவரம், கோயமுத்தூர், ஈரோடு, சீர்காழி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி முதலிய இடங்களிலுள்ள விஸ்வகர்ம குலாபிமானிகள், பலமுறையும் பொருளுதவிவேண்டும் . பொருளுதவிவேண்டுமென்று பத்திரிகை மூலமாய் வெள்ளைத்தாளைக் கரியாக்கி வருகின்றனரேயன்றி, அதற்குவேண்டிய சாதனங்களைக் கைக்கொள்ள முயன்று ஏகோபித்து முன் நடத்துபவர்களைக் காண்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதுடன் விடாமல் குலாபிமான விஷயமாக உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் தத்தம்செய்வது நமது கடமையன்றோ? அந்தோ! அந்தோ! இவ்விஷயமாக நம் குலாபிமானிகளில் சிலர் வெளியேறி ஒவ்வொரு ஊருக்கும் விஜயம் செய்து ஆங்காங்குள்ள குலாபிமானிகளைக் கண்டு, நம்மக்களின் எதிர்கால நிலைமையைப் பற்றியும், அவர்களின் முன்னேற்றம் நிறைவேறும் பொருட்டும் சம்பாஷித்துப் பண்டு சேர்க்கவேண்டியதும் நம்து முக்கியகடமை. ஒருவன் பசியாயிருக்கும் காலத்தில் அவனுக்கு வாயால் பாயசமளித்தால் போதுமா? அவனுக்குக் கையால் சமைத்து அமுதளித்தால் மாத்திரம் அவன் பசி ஆறுமே அல்லாது வேறுவழி உண்டோ? அதுபோலவே நம்குலமக்களுக்குப் பொருள் உதவிசெய்யவேண்டும். நம்மக்கள் விருத்தி யடைவதற்கு நாமே ஆதாரமாயிருக்கின்றோம் என்பதையும், நம்பிள்ளைகளின் கதியையும் அறிந்தும் நமதுகுலகனவான்கள் கண்மூடிமௌனியாய் இருப்பது நன்றல்ல. மேற்சொல்லிய நகரவாசிகள் தமது கஷ்டத்தைப் பாராட்டாது, வெளியூர்களுக்குப் பிரயாணப்பட்டு பொருள் சம்பாதிப்பார்களென நம்புகிறேன். நாளை நாளை என்பது நமனுக்கிரையோ, நமக்கிரையோ என்பதை முற்று முணர்ந்த நண்பர்கள் நமக்கெதிரேயுள்ள இப்பெருங்கடமையைச் செய்யக் கச்சைகட்டி நிற்பாராக. பொருளிருந்தால் கல்வியையும் தொழிலையும் அபிவிருத்திசெய்யலாம். நமது தற்கால நிலைமையையோசிக்குங்கால், நாம் சுயராஜ்யத்தைப் பெறத்தக்க நிலைமையுடையவர்களல்ல. நமது குறைகளைச்சீர்திருத்த காருண்ய துரைத்தனத் தாரிடம் வேண்டிக்கொண்டால் அவர்கள் வேண்டிய உதவிபுரிவார்களென்று நான்முற்றும் நம்புகிறேன் நமக்குப் பலவிதத் துன்பங்கள் நேரிடுவது நமது மேல் உத்தியோகஸ்தர்களாகிய இந்தியர்களால் அல்லது ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களால் அல்ல; இதுயாவரும் அறிந்த விஷயமே. நம் நண்பர்களும் நன்குகற்றறிந்தால் நாமும் நல்லபதவிகளை அடைந்து நம் தாய்நாடாகிய இந்துதேசத்தின் பொதுநிலைமைக்காக உழைக்கலாம்.

இதைக் கண்ணுற்ற தனவான்கள் யாவரும் முன்வந்து பண்டு சேர்க்கவேண்டியது அவசியம். ஒவ்வொருவடைய வரியையும் (Subscription) அடுத்த மாதப்பத்திரிகையில் காண்பித்தால் எனக்குரிய வரியையும் அனுப்பத் தயாராயிருக்கிறேன். ஒவ்வொருவரும் தங்கள் வரியை அனுப்பி பேபரில் பிரசுரம் செய்தால், காரியம் கூடிய சீக்கிரத்தில் நடைபெறுமென நம்புகிறேன்.

தூ. சு. கதிரேசன் ஆச்சாரி,
பாம்பேகம்பெனி, கடம்பூர்.



## நமது கவனக்குறைவு

கல்வியில் நம்மினத்தினர் 100-க்கு 3-பேர்கள்கூட இல்லை என்பதை நோக்க நான் கொண்ட வியாகூலத்திற்கு அளவில்லை. நமது முன்னேற்றத்திற்கு என்று ஏற்பட்ட கான்பரன்சுக்குத் தலைவர்களாய் வந்தவர்கள் பிராமணரல்லாத கூட்டத்தில்கூடிப் பேசினது எவர்களாலும் அருவருக்கத் தக்கதே. இவர்கள் இனி நடத்தும் கான்பரன்சுகளின் தீர்மானங்கள் எவ்வளவு பயன்பெறுமோ? பழங்களை அவர்களுக்கும் இவர்களுக்கும் வினியோகி என்று பேரிரைச்சல் இட்டுக்கொண்டிருந்து கடைசியில் கத்தினது லாபம் என்று வெறுங்கையாய்ப் போனவன் மாதிரிதான் இவர்கள் தலையிட்ட காரியத்தின் நிலை. "சென்னை மாகாண சங்கத்தில்" சேர்ந்து பேசுவதற்காளுமே என்று எண்ணினர்களேயன்றி, சுயஜாதியின் விருத்திக்குரிய வழிகளும், இவர்கள் அடைந்திருந்த பாத்தியதைகளும் கெட்டு இவர்கள் மேல்நோக்கத்திற்கு நாளதுவரை இடையூறாயிருந்துவந்த விஷயங்களையும் கவனியாது கூக்குரலிட்டது யாவருக்கும் நகைப்பையும், விசனத்தையும் கொடுத்தது.

அஷ்டபந்தனஞ் செய்யும் பாத்தியதையையும் கைநழுவ விடும்வகையில் நம்மவர்கள் நிற்கின்றார்கள். இப்போது மதுரையில் மீனாட்சிஅம்மன் கோவிலில் அஷ்டபந்தன விஷயமாய் தாவாக்கள் ஏற்பட்டு நம்மினத்தவர்கள் மங்கைபாக ஸ்தபதி காலத்தில் நடந்தது தெரியவாதோ என்று கூறுகிறார்கள். அதாவது, பாண்டியன் அரசாட்சிகாலத்தில் விஸ்வகர்மாக்கள் விக்கிரகஞ் செய்துகொடுத்து மருந்துமாத்திரம் சாத்திவிட்டு வெளியில் போய்விடவேண்டுமென்று பிராமணர்கள் சொன்னதற்கு, மங்கைபாக ஸ்தபதி ஒத்துக்கொள்ளாது, நானே எல்லா காரியங்களையும் நடத்துவேன் என்றதின்மேல், இருகக்ஷிக்காரர்களும் இரண்டு

கும்பங்களைவைத்து பூஜைசெய்யவேண்டுமென்றும் அவைகளில் எது யானையைக் கட்டி இழுத்தாலும் நிலைபெயராதிருக்கின்றதோ அக்கலசி யார்தான் ஷை வேலையில் பிரவேசிக்கவேண்டுமென்றும் திட்டஞ் செய்ததில், மங்கைபாக ஸ்தபதியினால் நிறுத்தப்பட்ட கலசம் 5 யானையால் இழுக்கப்பட்டும் அசையாது இருந்ததால், மங்கைபாக ஸ்தபதியே அஷ்டபந்தனமும் கும்பாபிஷேகமும் நடத்தி அர்ச்சக வேலையையும் செய்துகொண்டுவரும்படி அரசன் உத்திரவிட அங்ஙனே நடந்து வந்ததாம். மதுரை ஜில்லாவாசிகள் இவ் விஷயத்தில் ஜாக்கிரதையா யிருப்பார்களாகவும்.

நமது கைத்தொழிலைப் பற்றி எண்ணுங்கால், நம்மினத்தவர்களின் வறுமைக்கு எல்லோரும் பொன்வேலையை கையாடநேர்ந்ததே காரணமாகும். இரும்புத்தொழிலிலும், மரத்தொழிலிலுந்தான் ஏராளமான திரவியத்தைக் காணலாம். கூட்டு பட்டரைகள் வைத்து முதலிட்டு நடத்தினால் ஒவ்வொரு ஜில்லாவாசிகளின் ஸ்திதி நன்னிலை அடையும். அங்கங்குள்ள முனிசிபல் போர்ட் லோக்கல் போர்ட் முதலிய விடங்களிலுள்ள வேலைகளைச் செய்து கொடுக்கலாம். தொழில்முறையில் இறங்கும் பிறஜாதிய ரெல்லாம் அயவேலையிலும், மரவேலையிலும் பிரவேசிக்கின்றார்கள். சென்னைப் பொருள் காட்சிக்கு அனுப்பப்படும் சாமான்களில் நம்மவர்கள் பெயரில்லை. சில பித்தளைசாமான்கள் அனுப்பப்பட்ட ஜாபிதாவில் சாமான்களின் பெயர், விலை, செய்தவர் பெயர் இவைகளில், செய்தவர் (Name of maker) என்ற வார்த்தைக்கு நேரில் நம்மினத்தவர்களின் பெயரில்லை இவைகளைக் கவனிக்கையில், கல்வியின்றி தொழிலைச் செய்வதினால் எவ்வளவு தீமை விளைகின்றதென்பது நன்கு புலப்படும்.

நமக்குள் தொழிற் சாலைகளும் கல்விச் சாலைகளுமிருத்தல் அவசியம். சிலர் சிலவிடங்களில் வீடுகளில் பட்டரை வைத்திருப்பதினாலேயே நமது குழந்தைகளின் தீக்ஷண்ய புத்திக்குக் குறை ஏற்பட்டிருக்கிறது. கர்ப்பமாயிருக்கும் ஸ்திரீ தனது கணவன் தொழில் நடையுடைகளில் புத்தியைச் செலுத்துவதால் குழந்தைக்கும் அவ்வித குணமுண்டாகின்றது. தவழுங் குழந்தைகளும் சுத்தியலை எடுத்துப்பட்டரையி லடிப்பதை இன்றுங் காணலாம். கர்ப்பவதியின் குணம் எண்ணமுதலியவற்றிற்குத் தக்கவாறேதான் குழந்தையின் குணங்கள் அமையும் என்பது சாஸ்திரவாதிகளின் துணிவு. இதற்கு லீலாவதி தேவி கர்ப்பவதியாயிருக்கையில் நாரதர் உபதேசித்த உபதேசத்தை குழந்தையானது கர்ப்பத்தில் கேட்டுக்கொண்டிருந்ததால் பிறந்தவுடன் நாராயணநம வென்று கூறிற்று என்பதே சாக்ஷி. இவைகளை புராணங்களில் காணலாம்.

நமக்குள் கூலிக்கட்டுப்பாடுகள் வேண்டும். பரிபாஷைகள் மாற்றப்படவேண்டும். அங்கங்கே பொதுவிடங்களில் 10,20 பேர் இருந்து வேலை செய்தால் ஒவ்வொருவர் வேலையின் நுட்பத்தில் புத்தியைச் செலுத்துவதில் ஒத்துப் போகலாய்; காலப்பிரகாரம் போகவும்வரவும் ஏதுவாகும்; காலத்தின் நிலை நன்கு விளங்கும்; வீடுகளில் பட்டரைவைப்பதால் பட்டரை வைக்குங்காலமும் எடுக்குங்காலமும் நிலையில்லை; ஸ்திரீகள் தன் கணவர்கள் பார்வையிலிருப்பதால் அவர்களுக்கு இவருடைய குணங்களின் முடிவு நன்று விளங்கி விடுகின்றது. அங்கங்கு ஒரு கூட்டுறவுச் சங்கமிருக்கவேண்டும். இச்சங்கம் தொழில் முறைகளைக் கவனிக்கவேண்டும்.

நமது குலவிருத்தியைப் போதிக்கும் "விஸ்வகர்மன்" பத்திரிகையில் வெளிவரும் வழிகளைப் பின்பற்றினால் நாம் நல மடைவோம். தொழில் பத்திரிகையிலும் தொழில் முறைகள் வருகின்றன. அவைகளும் நமது கவனத்திற்குரியன.

விருத்தியை நாடுவோர், திருநெல்வேலி.



## மூவருணத்தார் முயற்சி

பிராமணரல்லாத இதர இந்துக்களுக்கு உள்ள குறைகளை அவ்வப்போது எடுத்துக்காட்டிவரப் பத்திரிகைகள் பிரசுரிக்கவும், இவர்களுக்குரிய செல்வாக்கைக் காப்பாற்றவும் விருத்திசெய்யவும், முறையே "சவுத் இந்தியன் பீபில்ஸ் அசோஸியேஷன்" என்னும் பேரால் ஒரு ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனியும், ராஜாங்க காரியங்களைக் கவனிப்பதற்காக "சவுத் இந்தியன் லிபரல் பெடரேஷன்" என்னும் பேரால் சபையொன்றும் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஷை கம்பெனியாரால் ஜஸ்டிஸ், திராவிடன், ஆந்திரப் பிரகாசிகா என்னும் தினசரிப் பத்திரிகைகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் நடத்தப்பட்டுவருகின்றன. இவர்கள் முதன் முதல் வெளியிட்ட விஞ்ஞாபனத்தினின்று கீழ்க்கண்ட வாக்கியங்கள் பெயர்த்தச்சிடப்பட்டன.—

இந்த ராஜதானியின் குடித்தொகையாகிய நாலுகோடி பதினைந்து லக்ஷத்தில் சுமார் நாலு கோடிப் பேர் பிராம்மண ரல்லாத பல சார்பிற் சேர்ந்தவர்கள். இவர்களே பெரும்பாகமான வரி செலுத்துகிறார்கள். இவர்களுட் பெரும்பான்மையோர் ஜமீன்தார்கள், பெரும் பூஸ்திதியாளர்கள், பயிரிடும் குடிகள், மற்றையர்கள் கலந்திருக்கின்றனர். சென்னையில் நடைபெறும் ராஜாங்கப்பேச்சில் இவர்கள் யாவரும் கலந்தவர்களல்லர். தேசகாரியம் ஓங்குவதற்காக இவர்கள் தங்கள் செல்வாக்கைப் பொதுஜன சமூகத்திற் சிறிதளவேனும் செலுத்தவில்லை. இதனால் எண்ணிற்குறைந்துள்ள, அதாவது பதினைந்து லக்ஷம் ஜனத்தொகையுள்ள பிராமணர்களடைந்துள்ள செல்வாக்கின்முன் இவர்கள் இராஜாங்கச் செல்வாக்கு முட்டுப்பட்டிருக்கின்றது.

உத்தியோகஸ்தர் சங்கியை முதலியன.

சென்ற 1913ம் ௵த்தில் விசாரணையான பப்ளிக் செர்விஸ் கமிஷனில் தற்காலம் சென்னைக் கவர்னர் மந்திராலோசனைச் சபையிலொருவராயிருக்கும் சர் அலக்சாந்தர் கார்டியு துரையவர்கள், போட்டிப் பரிக்ஷை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நடத்தவேண்டுமென்று கொண்டுவந்த பிரேரபணையைப்பற்றி சாக்ஷியங் கூறுங்கால், இந்த ராஜதானியில் பிராமணர்கள் நிலையைப்பற்றியும், இவர்களல்லாத பிற ஜன சமூகத்தைப்பற்றியும் விளக்கிக் கூறியிருக்கின்றார். அதில், இவர்கள் "கூட்டுறவற்ற தனிச் சிறுஜாதியார்" என்னப்பட்டாலும் அரசாங்கத்தில் பெரும்பதவி யுத்தியோகங்களைக் கவர்ந்து கொள்வார்கள் என்று கூறியிருக்கிறார். இவர்களுடைய சாக்ஷியத்தில் வேறு பல குறிப்புக்களையும் காட்டி யிருக்கின்றார்கள். அவற்றுட் சில வருமாறு:—1892-ம் ௵ முதல் 1904-ம் ௵ வரையில் நடந்த புரோவின்ஷியல் போட்டிப் பரீக்ஷையில் தேறிய 16-பேரில் 15-பேர் பிராமணர்களாம். இதல்லாமல், கடந்த இருபது வருடகாலமாய் மைசூர்ராஜ்யத்தில் பெரும் பதவிக்காக நடத்தப்படும் பரீக்ஷையில் 100-க்கு 85-வரையில் பிராமணர்களே தேறிவந்திருக்கிறார்களாம். சென்னையில் சென்ற இருபது வருடகாலமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட அஸிஸ்டெண்ட் இஞ்சினீயர்கள் 21-ல் பிராமணர் 17, மற்றைய நால்வரே பிராமணரல்லாத வகுப்பார்கள். அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டிலும் இந்த விதமே தேற்றமேற்படுகின்றது. மேற்கண்ட காலத்தில் இந்த ராஜதானியில் டெபுடி கலெக்டர் உத்தியோகத்திலிருந்த 140 பேர்களில் பிராமணர் தொகை 77, பிராமணரல்லாத வகுப்பார் தொகை 30-தான்; மற்றும் 33-ஸ்தானம் கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள், ஐரோப்பியர்கள் வகித்திருந்தார்கள்.

போட்டிப் பரீக்ஷையில் தேர்ந்தெடுக்கும்படியான ஸ்தானங்கள் தன்மைதான் இதுவாயிற்று. தகுதிகண்டு தெரிந்து எடுக்கப்படும் ஸ்தானமாகிய முன்சீப் முதலிய ஸ்தானங்களிலும் இவ்வொரு சார்பேற்றம் காணப்படுவது விந்தையாகப் புலப்படாது போகவில்லை. ராஜதானியின் ஜில்லாமுன்சீபுகளின் தொகையாகிய 128-ல் 1913 ௵ல் 93-பிராமணர் இத்தப் பதவியை யடைந்திருக்க, இதர இந்துக்கள் 25-ஸ்தானமும், மிகுதியை கிறிஸ்தவர், மகம்மதியர் அடைந்திருந்தார்கள். ஆதலால், போட்டிப் பரீக்ஷை இங்கிலாந்தில் நடப்பதுபோலவே ஏககாலத்தில் இந்தியாவிலும் நடந்தால் பிராமணரல்லாத இந்துக்கள் பிரவேசிப்பதற்கே முடியாத வகையில் பிராமணர்களே எல்லா ஸ்தானத்தையும் கவர்ந்து கொள்வார்கள் என்று கூறியிருக்கின்றார்.

இவர் சுதேச மன்னர் அரசில் காணப்படும் எண்ணிக்கையைப் பற்றி அங்கு எடுத்துக் காட்டவில்லையாயினும் அவ்விடத்திலும் இதேமாதிரிதான் அன்றும் இன்றும்

காணப்பட்டு வருகின்றது. தலைகாட்டி இஷ்டம்போல் தெரிந்தெடுக்கப்படும் உயர்பதவி ஸ்தானங்களை யடைந்திருப்பவர்களின் எண்ணிக்கையை இவர் எடுத்துக்காட்டாது போயினும் உண்மையில் இதிலும் பிராமணர் தொகையேற்றம் தெற்றெனப் புலப்படும்.

இதர கவர்ன்மெண்டு உத்தியோகங்களைப் பற்றிய கணக்கை நாம் ஆராயவேண்டியதில்லை. ஆயினும், இந்தியர் அடையக்கூடிய உயர்ந்த பதவிகளைப்பற்றியும், அவைகளை யடைவதில் அனுஷ்டிக்கப்படும் முறைகளைப் பற்றியும் சற்றுக் கவனிக்காதுபோகக் கூடவில்லை. கவர்னர் சபையில் ஒரு இந்தியர் இடம்பெற வேண்டுமென்று ஏற்பாடானதுமுதல் மூன்று பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களுள் இருவர் பிராமண வக்கீல்கள். ஐகோர்ட்டிலிருக்கும் ஐந்து இந்திய ஜட்ஜ்களில் நால்வர் பிராமணர்களே. 1914-ம் ௵த்தில் கவர்ன்மெண்டில் புதிதாக ஒரு செக்ரிடெரி ஸ்தானம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கும் உடனே ஒரு பிராமணர் அமர்த்தப்பட்டார். போர்டாபிஸிலிருக்கும் இந்திய செக்ரிடெரியும் பிராமணரே. மாகாணச் சிவில் செர்விஸ் பாகமாகக் கொடுக்கப்பட்டுவரும் இரண்டு ஜில்லாக் கலெக்டர் ஸ்தானத்தில் மகம்மதியருக்காக வகுக்கப்பட்ட பாகம்போக மிகுதி பிராமண உத்தியோகஸ்தர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

### ஜனப்பிரதிநிதி ஸ்தாபனங்கள்.

கவர்ன்மெண்டு டிபார்ட்டுமெண்டுகளில் தான் இவ்வாறிருக்கிற தென்று நினைக்கலாகாது. முனிஸிபாலிட்டி, லோகல் போர்டுகளிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. சர்வகலா சங்கத்தினரின் அங்கத்தினராய் சட்டசபைக்கு இந்தியக்கல்விமான்களால் அனுப்பப்படும் பிரதிநிதி, எந்தக்காலத்திலும், பிராமணரல்லாத வேறு இந்து வகுப்பார் எவ்வளவு சீருஞ் சிறப்பும், கல்வியும் அடைந்திருந்தாலும் தெரிந்தெடுக்கப்பட்டதே கிடையாது. ஒருகால் அப்படிவந்தால் அது ஐரோப்பியர் சகாயத்தினால்தான் கிடைக்கப்பட்டிருக்கும். 1914௵ நவம்பர்மீத்தில் நடைபெற்ற கவர்னர் சட்டசபையில் காலஞ்சென்ற மிஸ்டர் குன்னிராமன் நாயனர் கேட்டிருந்த கேள்விக்குக் கிடைத்த பதிலின்படி, 650 பட்டதாரிப் படிப்பாளிகள் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்களென்றும் இவர்களுள் பிராமணர் தொகை 452 என்றும், 124 இதர இந்துக்களென்றும், 74 பேர் இதர வகுப்பு இந்தியர் என்றும், இதுகாறும் இவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட 12 பேர்களில் ஒருவர் நீங்கலாக மற்றைப் பதினொருபேரும் பிராமணர்களே என்றும் ஏற்பட்டது. இதனாலும், வேறு மார்க்கங்களாலும் பிராமணரல்லாத இந்துக்கள் சர்வகலாசங்கத்துப் பட்டதாரிப் படிப்பாளிகள் மூலமாகச் சட்டசபைக்குப் போவதே முடியாதாகிறது. எப்போதாயினும் பொது நோக்குடைய அதிகாரி எந்த அரசகாரிய நிர்வாக சபையில் பிராமணர் எண்ணிக்கை யதிகமிருந்து செல்வாக்கற்றிருக்கும் சார்பாரின் பிரதிநிதியாக இந்துக்களிலொருவரைப் பிரதிநிதியாயமைத்தால் உடனே இந்தப் பிராமணர் தங்கள் பத்திரிகைகளில் தூற்ற வாரம்பிக்கின்றனர். நமது கவர்னர் பெண்ட்லண்ட் பிரபு அவர்களே இம்மாதிரியான நியமகமொன்று செய்ததற்காக எப்படித் தூற்றப்பட்டாரென்று சமீபகாலத்தில் நடந்த திருஷ்டாந்தத்தை யெடுத்துக்காட்டுவோம். சென்னை நகரில் கவர்ன்மெண்டாரின் நேர்பார்வையிலில்லாமல் சார்புபற்றியிருக்கும் சபைகளிலும், வெளி ஜில்லாக்களிலிருக்கும் சபைகளிலும் நடத்தப்படும் எலக்ஷன்களில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் கணக்கைச் சீர்தூக்கிப் பார்க்கின் இதே கதையைத்தான் காண்போம். திருஷ்டாந்தமாய், இந்தியப்பொது காங்கிரஸ் மகா கமிட்டிக்கு சென்னை ராஜதானியின் பிரதிநிதிகளா யமைக்கப்பட்டவர்கள் 15 பேரில் ஒருவரே பிராமணரல்லாத இந்து கலந்திருக்கிறார். இருப்பினும், யுத்த முடிவான பின்பு தேச சீர்திருத்தத்திற்காகப் பிரேரேபிக்கப்படும் யோசனைகளில் இப்படிப்பட்ட கமிட்டியார் செய்யப்பட்ட திருத்தங்களே நாலு கோடி ஜனங்களின் முழுச் சம்மதமென்று உலகினர் பிரமிக்கும்படி எடுத்துக்காட்டப்படுகின்றன. இவ்வகையில் இந்தச் சார்பாருக்கு மேலுமேலும் கொடுக்கப்பட்டுவரும் செல்வாக்கு அதிகப்படுத்துவதற்கேற்ப இவர்கள் பிறரை யப்புறப்படுத்தி யாக்கிரமித்து வருவதும் அதிகப்பட்டே வருகின்றதென்பது எங்கள் அனுபவம்.

### படிப்படியாய் அரசாட்சியில் செல்வாக்கு வேண்டும்.

இப்போது ராஜாங்கத்தி லனுபவிக்கும் செல்வாக்கில் திருப்தியடையாமல், இந்த இராஜ



தானி இராஜாங்க காரிய துரந்தரர் மேலுமேலும் செல்வாக்கடையப் போராடுகின்றனர். இச்சமயத்தில் இதர இந்துக்கள் தங்கள் அசம்மதத்தை யறிவிக்காதுபோனால் இவர்களும் கலந்தே கேட்கின்றார்களென்று எண்ணுவதற்கு இடமுண்டாகும். இவர்கள் எந்தச் செல்வாக்கைக்கேட்டாலும் பிரிடிஷ் அரசு இந்தியாவில் க்ஷீணமடைவதற்காகச் செய்யப்படும் முயற்சி எதிலும் சம்பந்தப்படமாட்டோம். இங்கு காணப்படும் ஜாதிப்பிரிவினை, மதப்பிரிவினை போன்ற உள்குழப்பங்களிருந்து அவரவர்கள் தனித்தனியே தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருக்கும் வரையில் அதிகாரம் எந்த ஒரு சார்பாரிடத்தும் தங்கலாகாது. பிரிட்டிஷாரோடு கலந்தேயிருக்கவேண்டும். இதனால் நாம் முற்கூறியவர்கள் கொள்கையிலிருந்து சிறிது மாறுபட்டாலும் இராஜாங்க காரிய நிர்வாகத்தை வகிக்க ஜனங்கள் தகுதியும், அக்கறையும்காட்டி வருவதற்கேற்ப நம்பகம்வைத்து தாராளமாய்ச் செல்வாக்கைக் கொடுத்து வரவேண்டுமென்பதில் நாம் உடன்படுகிறோம். காங்கிரஸ் தோன்றியகாலத்தில் அதிமேதாவிகளும், நிதானஸ்தர்களும் யோசனைசாலிகளுமா யிருந்த மிஸ்டர் ஹியூம், போனர்ஜி, பத்ருதீன் தையப்ஜி, சேலம் இராமசாமி முதலியார், ரங்கையநாயுடு, ராவ்பகதூர் சபாபதி முதலியார், சர் சங்கரன் நாயர் முதலிய பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருந்த காலத்தில் தென் இந்திய இந்துக்கள் முழுமனதோடும் ஒத்துழைத்து வந்தார்கள். இந்த சபை மகாஜன சபை என்று சொல்வதற்கேற்ப அங்க அமைப்பு முழுவது மில்லாதுபோயினும் உணர்ச்சியிலும் நடக்கையிலும் பொதுஜன மகாசபையாகவே யிருந்தது. முக்கியநோக்கங்களுட் பல இன்னும் அச்சபையில் காண்கின்றோம். ஆனால், அது தற்காலங் கொண்டிருக்கும் நோக்கமும், நடத்தப்படும் முறையும், நடத்துகிறவர்களும், மற்றும் விளம்பரங்களும், கண்ணியமும், மதிப்பும் உள்ளத்திற்கொண்டவர்களாய் இந்த ராஜதானியிலிருக்கும் சில இந்துக்களுக்கு உடன்பாடென்று நாம் சொல்வதற்கில்லை.

### இந்தச் சார்பார் உடனேசெய்து முடிக்கவேண்டிய காரியம்.

இனி, நமது இந்து ஜனங்கள் ஜாக்கிரதையாகித் தங்கள் காரியத்தைக் கவனிக்க முன்வரவேண்டுமென்று வேண்டுகிறோம். இவர்கள் உயர்வடைய மார்க்கம் இவர்கள் கையிலேயேயிருக்கின்றது. முக்கியமான காரியங்கள் விரைவில் யோசித்துத் துணியவேண்டிச் சம்பவித்திருக்கின்றன. இப்போதுள்ளதைப்பார்க்கிலும் தங்கள் பெண்களையும் பிள்ளைகளையும் மிகுதியும் படிப்பில் சிரத்தையோடு பயிற்றவேண்டியதவசியம். ஆங்காங்கு வெகுஜனங்களும் ஒன்றுபட்டுத் தக்க தலைவரின்கீழ் சபைகளை ஸ்தாபித்து கல்வி பரவவேண்டிய சாதனங்களை யதிகப்படுத்தி எல்லா இந்துக்களையும் அதிற் பிரவேசிக்கச் செய்யவேண்டும். படிப்புக்காகச் செலவிடச்சக்தியற்ற ஏழைப்பிள்ளைகளில் புத்திகூர்மையும், சுறுசுறுப்பும் இருக்கக்கண்டால் அவர்கள் முன்னுக்குவருமாறு தக்க உதவிசெய்யப் பொருளாதாரங்களை யுண்டுபண்ணி அதை வளர்த்துவரவேண்டும்.

முதலில், இவர்கள் தொடர்ச்சியாய்த் தங்கள் வாழ்க்கையிலும் ராஜாங்க காரியங்களிலும், வருவாயிலும், திருந்திய நிலையடைந்து வருவார்களானால், பிற்பாடு இப்போதுள்ளதைப் பார்க்கிலும் மேலான நிலையிலிருப்பதாய்க் காண்பார்கள். தேசக்கட்டு அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதன்படி செய்வதெளிதல்ல, பெருமுயற்சியா லாக வேண்டியது. படிப்படியாகத் தக்ககாலத்தில் ஒவ்வொரு ஜாதியாரும், கூட்டத்தாரும் தங்களுக்குத் தாங்கள் செய்துகொள்ளவேண்டிய கடமையைச் செய்து முடிப்பதால்தான் உண்டாகக்கூடும். இந்தியாவில் எப்படியும் சில காலத்திற்கு ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் சொந்தக் காரியங்களை முதலில் சரிப்படுத்திக்கொள்வதற்குக் கொஞ்சகாலம் தாழுமென்று நமக்கு நம்பகம் உண்டு. இப்படியாக முயன்று செய்துகொண்ட பின்பு, அதிக திருத்தம் அடைந்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களுக்குச் சமமாக எல்லாக்காரியங்களிலும் ஈடுபட்டு, அவர்களுக்குத் தாழாதவர்களாய்த் தங்கள் கண்ணியத்தை இழக்காமலும், தலையாட்டிகளா யில்லாமலும் இருந்து முழு மனதோடும் எல்லாக்காரியங்களுக்கும் உடந்தையாயிருப்பார்களானால் தேசப் பொதுக் காரியம் சிறப்பாய் நடக்க இடங்கொடுக்கும்.

## சூக்ஷ்ம சரீரம்

இந்திய ராணுவத்தில் ஜெனரலாயிருந்த ஐரோப்பியரொருவர் மலைநாட்டில் தாம் வசிக்கும்படியாக ஒரு வீடு பார்க்கச்சென்றிருந்த பொழுது அஸ்தமித்துவிட்டமையின், அவ்வீட்டிலேயே படுத்துக்கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சுதேசஸ்திரீயின் உருவம் தனது படுக்கைக்குச் சமீபமாய் ஸ்நான அறைக்குச் செல்லும் கதவண்டை நிற்பதைக் கண்டு திடீரென்று விழித்தார். உடனே படுக்கையை விட்டுக் குதித்து நீயாரென்று வினவினார். அவ்வுருவம் ஸ்நான அறைக்குள் பிரவேசித்தது; ஜெனரலும் பின்தொடர்ந்தார். அது மறைந்துவிட்டது. காலக்கிரமத்தில் அந்த ஜெனரல் தமது குடும்பத்துடன் அவ்வீட்டிலேயே வசிக்கவந்தார். இவ்வுருவந்தோன்றிய அறையை ஜெனரலின்மனைவி தான் உடுத்திக்கொள்ளும் அறையாக ஏற்படுத்திக் கொண்டாள்; முதல்நாளிரவு ஏழுமணிக்கு அவள் ஒரு விருந்துக்குப் போகும் பொருட்டு உடுத்திக்கொண்டு தன் அலமாரியினின்றும் ஒரு அழகிய அங்கியையெடுக்கச் செல்லுகையில் ஸ்நான அறையில் ஒரு சுதேசஸ்திரீ நின்றுகொண்டிருக்கக்கண்டாள். அவள் தனது ஆயாவென்று கருதி என்னவேண்டுமென்று கேட்டாள். ஆனால் அவ்வுருவம் ஒரு பூட்டியகதவின் வழியாக மறைந்துவிட்டது. ஜெனரலின் மனைவி மனோதிடம் வாய்ந்தவளாதலாலும், இந்தியாவில் இத்தகைய விஷயங்கள் நடப்பதுண்டென்று கேட்டிருந்தவளானதாலும், கலக்கமுறாமல் ஏதோ விசேஷமிருக்கிறதென்றுணர்ந்து இவ்விஷயத்தைத் தன் கணவனிடம் தெரிவித்தாள். ஜெனரலும் தமது முன்னநுபவத்தை மனைவியிடம் தெரிவித்தார். சில நாழிகைகளுக்கெல்லாம் அவ்வறையில் நித்திரைசெய்து கொண்டிருந்த ஜெனரலின் 8-வயதுள்ள சிறு குமாரன் திடுக்கிட்டு விழித்துப் பயந்தகுரலுடன் இந்துஸ்தானியில் "ஆயா! உனக்கென்னவேண்டும்" என்று கேட்டான். இந்தப்பையன் தனது சுதேசி ஆயா தான் அங்கு வந்திருப்பதாக நினைத்தானாம். பின்னர் அக்கம்பக்கத்தில் விசாரித்தபோது மிகவும் அழகிய காஷ்மீரதேசத்து ஸ்திரீ யொருத்தி அவ்விட்டையடுத்த குடிசையொன்றில் கொலைசெய்யப்பட்டாளென்றும் அவளது சூக்ஷ்ம சரீரமே உலாவுகிறதென்றும் தெரியவந்தது.

## தொழிற்றுறைகள்

பிரிட்டிஷ் குடிகள் ஒரு தினத்திற்கு 200-லட்சம் குண்டூசிகள் உபயோகித்து வருகின்றனர். இவை ஏராளமாய் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. என்றால், குண்டூசி செய்யும்தொழில் லாபமான தொன்றாயிருப்பது ஆச்சரியமாகுமா? சிறு வஸ்துவாயினும் இதைப் பெருங்கணக்கிற்செய்வதில் குறைந்த விலையில் முடிவதும் மிகுந்தலாபம் கிடைப்பதும் சாத்தியமாயிருக்கிறது. இப்படியே வஸ்துக்களைத் தனித்துப் பெருந்தொகையாய்ச்செய்யும் தொழிற்சாலைகள் இந்நாட்டிலும் ஏற்படவேண்டும்.

* *

ஜெர்மன் தேசத்தில் 120-கோடி ரூபாய் முதலுடன் சாயத்தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது; அதனால் ஜெர்மனி யுத்தாரம்பமாவதற்கு முன் நல்ல லாபமடைந்து வந்தது. இங்கிலாந்தில் இப்போது பிரிட்டிஷ் டைஸ் லிமிடெட் என்னும் பெயருடன் ஒரு சாயத்தொழிற் சாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு 2¾ கோடி ரூபாய் மூலதனமாயிருக்கின்றது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் 1½-கோடி ரூபாய்க்கு அதிகம் கொடுத்தாதரித்து வருகின்றனர். இந்தியாவிலும் இப்படிப்பட்ட சாயத்தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது.

* *

சைதாப்பேட்டை மிராசுதாரான மிஸ்டர் பார்த்தசாரதி நாயுடுவின் முன்னோர்கள் சென்னை பெரம்பூருக்கு அடுத்தாற்போல் ஓரிடத்தில் காகிதத் தொழிற்சாலை யொன்றை நடத்திவந்தனர். அது சுமார் 70-வருஷகாலம் உயிரோடிருந்தது. அச்சாலையில் தயாராகும் காகிதம் முதலில் கவர்ன்மெண்டுக்கே விலை கூறப்பட்டு வந்தது. அவ்விதம் சாலையின் காகிதத்தை கவர்ன்மெண்டார் வாங்கி ஆதரவளித்து வந்ததினால், அச்சாலை உயிருடன் இருந்தது. அப்பால், கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள காகிதத் தொழிற்சாலையால் மேற்படி சென்னைச் சாலைக்குப்போட்டியுண்டாயிற்று. தவிர, கவர்ன்மெண்டாரும் அதன் காகிதத்தை வாங்கி ஆதரவளிக்கவில்லை. முடிவில், சாலையானது மூடப்பட்டுப் போய்விட்டது. காகிதத்திற்கான கூழைத்தயாரிக்க இங்கே பற்பல முயற்சிகளும்



## நமது வாசகர்கள்

### யாருக்கு உண்டு?

உலகநன்மைகளெல்லாம் யாருக்கு உண்டு? பொருள் உள்ளவர்களுக்கு உண்டு; பொருள் இல்லாதவர்களுக்கு இல்லை. இதனாலேயே, "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற வாக்கியம் உண்டாயிருக்கிறது. எந்தக் காரியம் செய்வதென்றாலும், உலகில் முதலாவது பொருள் வேண்டியதாயிருக்கிறது. அப்படியே நமக்கும் பொருள் வேண்டியதாயிருக்கிறது. பொருள் உண்டானால், படிக்கக்கூடிய ஏழைச் சிறுவர்களுக்குச் சம்பளங் கொடுக்கலாம், அன்னம் போடலாம், வஸ்திரம் தரலாம், புஸ்தகங்கள் அளிக்கலாம். நமது ஜாதியாருக்கென்று சத்திரங்கள் முக்கியமான ஸ்தலங்களிலெல்லாம் கட்டலாம். சமஸ்கிருதம் கற்றுக் கொடுக்க உபாத்தியாயர்களை ஏற்படுத்தலாம். சுற்றுப் பிரயாணஞ்செய்து வருவோராய் ஜாதி ஒழுங்குகளைப் போதித்துவரத் தக்கவர்களை நியமிக்கலாம். அறிந்தவர்களைக்கொண்டு பல புத்தகங்களை எழுதுவித்து அச்சிட்டு நமது ஜனங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யலாம். நம்மவர்களில் படித்தவர்களோ மிகக்கொஞ்சம். அவர்களும் விலைகொடுத்து புஸ்தகம் வாங்கிப்படிப்பது வெகு துர்லபமாயிருக்கிறது. ஆதலால், பத்திரிகைகளையும், புத்தகங்களையும் பணச் செலவிட்டு அச்சடித்து பணங்கேட்காமல் மேலும் மேலும் அனுப்பிக்கொண்டேயிருந்தால், ஒன்றைவாசிக்காமல் பொட்டலம் கட்டினாலும் மற்றொன்றையாவது வாசித்துக் கொஞ்சங் கொஞ்சமாகவாகிலும் சீர்திருந்துவார்கள். இதுபோல் பணத்தால் ஆகக்கூடிய நன்மைகள் அனந்தம் இருக்கின்றன. அவையெல்லாம் யாருக்கு உண்டு? பணங்கொண்டுள்ளவர்களுக்கு உண்டு. நமக்கும் உண்டாகவேண்டுமானால, பணத்தைத் தேடவேண்டும். அதற்காக உழைக்கவேண்டும். இது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

சீ. வடிவேலு.

---

பேச்சும் இருந்தும், காரியத்தில் ஒன்றும்நடக்கவில்லையென்றும், ஜப்பானிலே அத்துறையில் நடவடிக்கை ஏற்பட்டிருக்கிறதென்றும், அதனால் இந்தியாவுக்கு இழிவுண்டென்றும், "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை சொல்லுகிறது.

### ஜோஸ்யர்-முத்தாச்சாரியார்.

இம்மகா புருஷனுடைய பெயர் இப்பொழுது முன்னிலும்மதிகமாக நமது ஜாதியார்களெல்லோராலும் கொண்டாடப்படுவதற்கு, இவரியற்றிக் கொடுக்க, சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபையார் அச்சிட்ட 'விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியார்' என்னும் புஸ்தகமே காரணமாகும். இவருடைய திருநாமம் தென்னிந்தியா முழுவதும் வீடுதோறும் குடும்ப மொழியாக இனி வழங்கப்படும். சித்தூர்த் தீர்ப்பைப் பெற்றமார்க்கசகாய ஆச்சாரியாரைப்பற்றி அறியாதவர்கள் நமது ஜாதியில் எப்படி இல்லையோ, அப்படியே ஜோஸ்யர் முத்தாச்சாரியாரைப் பற்றி அறியாதவர்களும் இல்லை யென்னும்படி இப் புஸ்தகத்தினால் இவருடைய கீர்த்தி மேன்மேலும் பரவி வளரப்போகிறது. இவரல்லவோ பிறந்த குலத்திற்குப் பெருமை தந்து தாமும் பெருமையடைந்த பெரியவர்! இவ்விதப் பெருமை படைக்க வல்லவா பிள்ளைகள் பிறக்க வேண்டும்? இதற்கல்லவா பண்டிதர்கள் உழைக்கவேண்டும்!

தி. சாமிநாத ஆச்சாரி.

### அஹிம்ஸா தர்மம்

இதைப் பற்றிய போதனையை உலகோர்க்குச் செய்வதை நம்மவர்கள் தமது முக்கிய கடமைகளில் ஒன்றாகப்பாவித்து நடக்கவேண்டுமென்று பத்திரிகையில் அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகிறது. இது நியாயமேயென்றாலும், நாம் முதலாவது நமக்குள்ளேயே இந்தத்தரும ஆசரணை முழுவதும் நன்றாய்ப் பரவச்செய்து, அதற்குப் பிறகுதான் பிறருக்குப்போதிக்கத் தலைப்படலாகும். அங்ஙனஞ்செய்யாத பக்ஷத்தில், மற்றவர்கள் நமதுஜாதியாருடைய நிலைமை எடுத்துக்காட்டி இடித்தால், நாம்தலைகவிழ்ந்து கொள்ள வேண்டியவர்களாவோம். ஆதலால், அஹிம்ஸா தர்மத்தை நாம்முதலாவது நம்மவர்களுக்குப் போதிக்கவேண்டும். இந்தபோதனையை நமது பத்திரிகை நன்குசெய்துவருகிறது. அதை வாசகர்கள் கவனித்து, வேண்டியவாறு தமது ஒழுக்கத்தை எவ்வளவு சீக்கிரமாகச் சீர்திருத்திக் கொள்ளமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சீர்திருத்திக்கொண்டால் பிறகு மற்றவர்களுக்கு அஹிம்ஸாதர்ம போதனைசெய்யப் பிரயத்தனப்படலாம்.

காங்கேயன்.

185035
சென்னை-600 008
நூலகம்
7/592 m 211, N14
N14

தலைவர் உதாரணம்.

நமது சபைத்தலைவருடைய நல்லுதாரணத்தைப்பற்றிப் புகழ்ந்து ஒருவர் முன்னொரு சஞ்சிகையில் எழுதியிருந்தார். இவர் எடுத்துக்காட்டியது மிகவும் நல்லதென்று சொல்லவேண்டும். ஏனென்றால், நமது சபைத்தலைவர் செய்வது போல் அவருடைய உதாரணத்தைக்கைப்பிடித்து, ஒவ்வொரு புருஷனும் தான் செல்லும் இடங்களிலெல்லாம் ஜாதியாரைப்பற்றிய விசாரணையும், அவர்களுக்கு வேண்டிய ஹிதோபதேசமும் செய்து வந்தால், பரஸ்பர அபிமானம் உண்டாவதும், அதனால் ஒற்றுணர்ச்சி தோன்றக் கூடியுழைத்தலென்னும் சுகுணம் ஏற்படுவதும், தோஷங்களை நிவர்த்தி செய்து கொண்டு அன்னியர் குறைசொல்லாதபடிப் பத்திரமாய் நடந்துகொள்ளவேண்டுமென்னும் அக்கரைபிடிப்பதும் மிகவும் சகஜம். இவ்வளவு நன்மைகளும் ஷை உதாரணத்தைக் கைக்கொள்ளுவதனால் சுலபமாய்ச் சித்திக்கும். கைக்கொள்ளுகிறவர்களுக்கு வேறு சௌகரியங்களும் தானாக அமையும்; அவர்களுடைய பெயரும் அந்தந்த இடங்களில் நிலைபெறும். மிகப் பெரும் பணச்செலவால் சம்பாதிக்கக் கூடியதாகிய நன்மை இவ்வாறு இலேசாய்க் கைகூடும். ஆனபடியால், இதைப்பற்றிப் பிரத்தியேகமாய் எடுத்துக்காட்டிய நண்பருக்கு வந்தனஞ் செலுத்தி அவர் உபதேசத்தைக் கைப்பிடிப்போமாக.

தே. மாணிக்காச்சாரி.

## சமஸ்கிருதம்

இந்தப்பாஷை தேவபாஷை. நாம் தேவப் பிராமணர்கள். தேவப் பிராம்மணர்களுடைய பாஷை தேவபாஷை. இது நம்முடைய பாஷையா யிருப்பதினாலேதான் இந்தபாஷைக்குத் தேவபாஷையென்ற பெயர்வந்தது. இந்தப் பாஷை நாளுக்குநாள் நம்மிடத்திலிருந்து நழுவிப் போய்விட்டது. இதை நாளுக்குநாள் நாம் திரும்பவும் கைப்பிடித்துக் கொள்ளவேண்டும். இதை நமது பத்திரிகை எடுத்தெடுத்துக் காட்டுவது நமது பூர்வபுண்ணிய பலனேயென்று கொண்டாடவேண்டும். இப்படி நமக்கு யார் எடுத்துக் காட்டுவார்கள்? நம்முடைய குறைகளை அறிந்து, அவற்றை எடுத்துவிவரிக்கக் கூடிய பத்திரிகையொன்று இருப்பதினாலேதான், இதுபோன்ற நாம் கவனிக்கத் தகுந்த பற்பல விஷயங்களையும் அப்போதைக்கப்போது நம்முடைய வம்ஸஜனங்களுக்குக் காட்டிவரவும் நாம் கவனிக்கவும் கிடைத்திருக்கிறது. ஆதலினால், இப்பத்திரிகைக்காக நாம் எவ்வளவு பாடுபட்டாலும், எவ்வளவு சந்தாகொடுத்தாலும் போதாது. இதை அறிந்து எனதுசகோதரர்கள் சகாயஞ் செய்வார்களென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சிற்பி.

## குலசேவா சங்கம்

குலசேவையைப்பற்றிப் பத்திரிகையில் எழுதப் பட்டுவருகிறதல்லவா! குலசேவை செய்யத்தக்க ஆட்கள் நமது ஜாதியில் இல்லாது போகவில்லை. சென்ற மூன்று கான்பரன்ஸ்களிலும் வாலண்டியர்கள் என்பவர்களும் மற்றவர்களும் செய்திருக்கும் சேவை மிகவும்விசேஷமுடையதென்று சொல்லவேண்டும். அப்படிச் சேவை செய்தவர்கள் வருஷத்திற் கொருமுறை சில நாட்கள் சேவைசெய்வதே போதுமென்று விட்டுவிடக்கூடாது. அந்தச் சேவையைத் தொடர்ச்சியாக்கிக் கொள்ளவேண்டும். ஜாதியின் முன்னேற்றத்திற் குரியகாரியம் எதுவாயினும், அதைத்தமது காரியம் என்று பிடித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் சேவைசெய்பவர்களுக்குத் தக்க தலைவர்கள் ஏற்பட்டு, அவர்கள் சேவை செய்யவேண்டிய வழிகள் இன்னின்னவை என்று காட்டிக்கொடுக்கவேண்டும். இதற்கேற்றவர் கோயமுத்தூர் C, R. சுப்பராய ஆச்சாரியார் ஒருவர். அவர் இவ்விஷயமாக முன்னொருகால் பத்திரிகையிலெழுதியதாக ஞாபகம் இருக்கிறது. பல வருஷங்களாக குலவிஷயங்களைக் கவனித்து வருகிறவரானபடியால், சேவை செய்ய முன்வருகிறவர்கள் அநுசரிக்க வேண்டிய நடவடிக்கைகள் இன்னவையென்று அவர் சுலபமாய்க் காட்டுவார்.

நலசேவகன்.